உ

சிவமயம்.

இஃது

சேக்கிழார் அருளிச்செய்த

பெரியபுராணம்.

இரண்டாம்புத்தகம்.

மூலமும்,

இதற்குக், கனம்பொருந்தியகம்பேனியாரால்
நியமிக்கப்பட்ட யூநிவர்சிட்டியென்னுஞ் சகலசாஸ்
திரசாலைத்தமிழ்த்தலைமைப்புலமை-

மழவை,

மகாலிங்கைய
ரவர்களால்

நூதனமாகச்செய்யப்பட்ட வுரையும்

சதுரங்கபட்டணம்,
சாமிமுதலியார்குமாரராகிய
அண்ணாமலைமுதலியா
ரவர்களாற்றமது
சரஸ்வதிவிலாச
அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டன.

1907

கலியுகாப்தம்- ௪௲௯௱௬௰௮.
சாலிவாகனசகம்- ௧௲௭௱௮௰௯- நிகழாநின்ற
பிலவங்கவரு-தைமீ.

சாற்றுகவிகள்.

மதுரைச்சங்கத்திலும், புதுவைச்சங்கத்திலும், சென்னையிற் த
மஹாசங்கத்திலும், தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய,
களத்தூர்

வேதகிரிமுதலியாரவர்களாற்பாடிய பாடல்கள்,

இந்நூ
ற்குரைசெ
ய்தபுலவர்
சிறப்பு.அறுசீ
ர்க்கழிநெடி
லடியாசிரிய
விருத்தம்.

மிக்கபலகலைபயின்றுசூரியன்போல்விளங்குமகாலிங்கமேலோ
ன், இக்கனைத்தும் புகழ்பெரிய புராணமதற் குரைவகுத்த
திறங்கண்டேங்கித், தக்ககலை மகளொளித்தாள் சே
யொளித்தான் முனியொளித்தான் றமிழ்நன்
கோர்ந்த, தொக்கவுலகிற்புலவரொளிக்க
விடம்பார்த்துமிகத்துடிக்கின்றாரோ*

(நிரனிறைப்பொருள்கோள்.)

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

இந்திரனைப்புவிமகளையியக்கர்கோனை
யெழிற்றருவைக்குறுமுனியை யியல்குணாரிச்,
சந்திரனைவில்வேளை வேற்செவ்வேளைச் சாற்றரிய
போகத்தாற் பொறையாற் பொன்னாற், றந்திடுநற்
கொடையான்முத்தமிழாற்றூய சத்தியத்தால்வடிவாற்
செப்சமரால்வென்ற, சுந்தரஞ்சேர்மழைவைமகா லிங்கசி
ங்கதுங்கவுரைதங்கமென்றேசொல்லலாமே.... ....*

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

வெள்ளியங்கிரியின்மேவியசிவனேவிளங்கியமகாலிங்கப்பெயர்
கொண்,டொள்ளியமழைவைதனின்மறையவனா வுதித்தன னுண்
மைமதென்றால், உள்ளியபதவி யன்பினுலுற்ற வுயர்திருத்தொ
ண்டர்மெய்ந்நூற்குத்,தெள்ளியவுரைதான்மகாலிங்கசிங்கஞ்செ
ய்ததுமொருவியப்பாமோ..........................*

இந்நூற்குரைசெய்வித்த
(பிரபுவின்சிறப்பு.)

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

அருட்கடலைப்புடையசிவனடியார்க்கன்ப................................*
னனிசதுரை வளருமண்ணாமலையாம்வள்ளல்..... ....*
மருட்கடலையுலகிலுள்ளோரடையாவண்ணம்...............*
வண்பெரியபுராணமதற்குரைசெய்யென்ன......... ....*
இருட்கடலைமுறுக்கிப்பகற்றிரவிபோலு ....*
மெழிலுருவங்காட்டுமொளிவட்டம்போலுந்.............*
தெருட்கடலையடைந்தமகாலிங்கதுங்க.. ....*
சிரோமணியார்தெளிவுரைதான்செய்தார்மன்றே.............*

(இரட்டையாசிரியவிருத்தம்.)


சதுரையம்பதியினன்றனதனிகர்நிதியினன் றதியினன்குசைசமதியினன், தமனியத்தேரினன் றகைமைபெறுபேரினன்றூரினன்பலசீரினன், மதனனிகர்நோக்கினன்றேக்கினனெங்குஞ்செல்வாக்கினன்கிள்ளாக்கினன், வரையனையதோளினன் மரையனையதாளினன் வாளினன்மிகுகேளினன், கதிர்மணிகொண்முடியினன் மெழியங்கொடியினன்கரியினன்வாம்பரியினன், கங்காகுலத்தினன்மங்காநலத்தினன்கலையினனனிலையினன், அதுலனண்ணாமலையண்ணல்சிவனடியர் நூற் கன்பொடுரை செய்திடென்ன, அட்டதிக்குங்கீர்த்தியெட்டவாழ்மகாலிங்கரணிகொளுரை செய்தரன்றே... ....*

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

போற்றரியவுலகமெங்கும்பொலிந்துதோன்றும்... ....*
பொருவிலாவிண்மணிபோற்புகழ்பெற்றோங்கிச்... ....*
சாற்றரியமகுடமன்னர்மிகக்கொண்டாடச்........ ....*
சதுரையில்வாழ்கங்கைகுலசாமிவள்ளல்... .. ..*
ஆற்றலுடனளித்தவண்ணாமலையாம்வேந்தன்.......... .... *
அரும்பெரியபுராணமதற்குரைசெய்வித்தே........ ....*
நாற்றிசையும்புகழ்ந்திடவேவுலவாக்கீர்த்தி......... .. .. *
நாட்டினனவையறவேதிட்டினனே...... .. ..*

உ

இஃது-வீரணந்தோட்டம்,
கோவிந்தநாயகரால் அச்சடுக்கிப்
பிரசுரஞ்செய்யலாயிற்று.



திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது - மும்மையா லுலகாண்டசருக்கம்.

இரண்டாவது புத்தகம்.

மூர்த்திநாயனார் புராணம்.

சீர்மன்னுசெல்வக்குடிமல்குசிறப்பினோங்குங் .. .. .. *
கார்மன்னுசென்னிக்கதிர்மாமணிமாடவைப்பு ..... *
நார்மன்னுசிந்தைப்பலநற்றுறைமாந்தர்போற்றும் .. *
பார்மன்னுதொன்மைப்புகழ்பூண்டதுபாண்டிநாடு .. *

(இதன்பொருள்)

நிலைமையாகிய சீரினையுடைய ஐசுவரியமுள்ளகுடிகள் நிறைந்திருத்தலால் சிறந்தோங்கி மேகங்கள்தங்கிய சிகரத்தை யுடையனவாய்க் கிரணங்களைவீசுகின்ற உயர்வாகிய மணிகள் இழைத்த வீடுகளில் வாசஞ்செய்து அன்புள்ள மனதைஉடையவர்களாய் நன்மைபொருந்திய பலவழிகளில் ஜீவனஞ்செய்கின்ற மனிதர்களுக் கிடமாகி உலகத்தில் நாட்பட்டுவந்த புகழினையுடையதா யிருக்கின்றது பாண்டிநாடு (என்றவாறு.) (௧)

சாயுந்தளிர்வல்லிமருங்குவென்றேந்தடங்கண் .. .. *
வேயும்படுதோளியர்பண்படுமின்சொற்செய்ய ... . *
வாயும்படுதீங்கனிமண்பொருந்தண்பொருநம் ... . *
பாயுங்கடலும்படுநீர்மைபனித்தமுத்தம் .. .. *

(இதன்பொருள்)

துளிரைப்பெற்றிருக்கின்றதனால் மிகவும்வளைந்திருக்கும் கொடிபோன்ற இடையையும், நெடுமையும் அகலமுமாகிய கண்களையும், மூங்கில்போன்ற கையிணையுமுடைய மாதர்களது இசைபொருந்திய இனியசொல்லினையுடையசிவந்தவாயினுள், நீண்டவலையோடு பூமியை அறுத்துக்கொண்டுசெல்லும் குளிர்ச்சிபொருந்திய தாமிரபர்ணி பாய்கின்றகடலிலும், நிறமுள்ள முத்துக்களுண்டாயிருக்கும்—(எ-று) வாயில்படுமுத்தமாவது, பற்களாம். பொருநை, தாமிரபர்ணி - நீர்மைபனித்த முத்தம், நீருள்ளமுத்து. (உ)

மொய்வைத்தவண்டின்செறிகுழன் மூரன்றசந்தின் .. .. .. *
மைவைத்தசோலைமலயந்தரவந்தமந்த .... *
மெய்வைத்தகாலுந்தருஞாலமளந்தமேன்மைத் .. .. .. *
தெய்வத்தமிழுந்தருஞ்செவ்விமணஞ்செயீரம். .... *

(இதன்பொருள்.)

வண்டுக்கூட்டமானது நெருங்கி-ஒலிக்கின்றமேகங்கள் தவழ்கின்ற சந்தனச்சோலையையுடைய பொதியமலையில் உண்டாய் வந்த தென்றற்காற்றும், உலகமுழுதும்பரவியமேன்மைபொருந்திய தெய்விகமாகிய தமிழும் கொடுக்கும், மிகுந்தவாசனையும் ஈரமும் பொருந்தியிருக்கும் அந்தநாட்டில்.—(எ-று) தெய்வத்தமிழ்-மணத்தையும் ஈரத்தையும் கொடுத்தலாவது, யாவரும் அத்தேயத்தில் தமிழ்படித்திருத்தலும், அன்புண்டாயிருத்தலுமாம். மந்தத்தைத்தேகத்தில்வைத்தகாற்று எனவே இளந்தென்றலென்பதுபெற்றாம். (ங)

சூழுமிதழ்ப்பங்கயமாகவத்தோட்டின்மேலாள் .. ..*
தாழ்வின்றியென்றுந்தனிவாழ்வதுதத்தையலைப்பார் ... . *
யாழும்மொழியிற்குழலின்னிசையுஞ்சுரும்பும் .. ..*
வாழுநகரமதுராபுரியென்பதாகும். ....*

(இதன்பொருள்)

மதுராபுரியென்பது இதழ்சூழ்ந்த தாமரைப்பூவாக எண்ணி அந்தமலரினிதழில் வீற்றிருக்கும் இலக்குமியானவள் குறைவின்றியென்றும் ஒப்பற்ற தன்மையுடன் வாழத்தக்கது-பின்னும் அத்திருமகள்போன்ற ஸ்த்ரீகளுடைய வார்த்தையில் வீணையினிசையும், கூந்தலில்வண்டுகளும், அவைகளின்பாட்டும், தங்கியிருப்பதற்கு இடமாகிய நகரமுமாம்.—(எ-று) (ச)

சால்பாயமும்மைத்தமிழ்தங்கியவங்கண்மூதூர் .... *
நூல்பாயிடத்தும்முளநோன்றலைமேதிபாயப் .... *
பால்பாய்முலைதோய்மதுப்பங்கயம்பாயவெங்குஞ் ...... *
சேல்பாய்தடத்தும்முளசெய்யுண்மிக்கேறுசங்கம்... .. .. *

(இதன்பொருள்.)

பெருமைபொருந்திய இயலிசைநாடகமென்னு மூன்றுதமிழுந்தங்கிய அழகாகிய இடத்தையுடைய அவ்வூரில் நூல்களைப்பயிற்சிசெய்யுமிடத்திலும்-பெருந்தலையையுடைய எருமைகள் பாய்ந்து அவைகளின்முலையிலிருந்து ஒழுகுகின்ற பாலானது தேனையுடைய தாமரைமலர்களில்பாய-எங்கும் மீன்பாய்கின்ற குளங்களிலும், வயல்களிலிருந்து தவழ்கின்ற சங்குகளிருக்கின்றன.—(எ-று)(சிலேஷைபால்) மிகுந்த கல்வியையுடையபுலவர்களும் இருக்கின்றார்கள் - கல்விப்பயிற்சிசெய்யுமிடம்-புலவர்களுக்கும்-குளங்கள்-சங்குகளுக்கும் இடமாயினவென்றுபொருள்கொள்க. (௫)

மந்தானிலம்வந்தசைபந்தரின்மாடமுன்றிற் .... *
பந்தாடியமங்கையர்பங்கயச்செங்கைதாங்குஞ் .... *
சந்தார்முலைமேலனதாழ்குழைவாண்முகப்பொற் .... .. *
செந்தாமரைமேலனநித்திலஞ்சேர்ந்தமாலை .... *

(இதன்பொருள்)

தென்றலானதுவந்து வீசுதலால்-அசைகின்ற பந்தலையுடைய மேல்வீடுகளின்முற்றங்களில் பந்தடித்துவிளையாடுகின்ற ஸ்த்ரீகளுடைய தாமரைமலர்போன்ற கைகளால்தாங்கிய சந்தனமணிந்த ஸ்தனங்களின்மேல் நீண்டகூந்தல்தாழ்கின்றன - பிரகாசமுள்ள பொற்றாமரைப்பூவை யொத்த முகங்களின்மேல் முத்துமாலைகள்பிரகாசிக்கின்றன.—(எ-று) முகத்தில் முத்துமாலையாவது, நெடுநேரம்பந்தடித்தலால் முகத்தில் துளிதுளியாக எழும்பிய வேர்வையாம். (௬)

மும்மைப்புவனங்களின்மிக்கதன்றேயம்மூதூர் .... *
மெய்ம்மைப்பொருளாந்தமிழ்நூலின்விளங்குவாய்மைச் .. *
செம்மைப்பொருளுந்தருவார்திருவாலவாயி ....*
லெம்மைப்பவந்தீர்ப்பவர்சங்கமிருந்ததென்றால்..........*

(இதன்பொருள்.)

மதுரைமாநகரத்தில் உண்மைப்பொருள் விளங்குதற்குக் கரு

வியாகிய தமிழ்நூல்களில் அவைகளின் பொருளைக்குறித்துச சந்தேகப்பட்ட புலவர்களுக்கு விளங்கும்படி உண்மையான அந்த அர்த்தத்தை அருள்செய்கின்றவராய் எம்போல்வாரைப் பிறப்பில்நின்று நீக்குகிறவராகிய பரமசிவன் முதற்புலவராயிருந்து ஏற்படுத்திய சங்கமே யிருந்ததென்றால் பழமையாகிய அந்தப்பதியானது மூவுலகங்களினு முயர்ந்ததல்லவோ. (எ-று) விளங்குவாய்மைச் செம்மைப்பொருளுந் தருவாரென்பதற்கு அகப்பொருளிறந்துபோய்ச் சங்கத்தாரெல்லாம் வருந்தும்போது அறுபதுருத்திரத்தாற்றிருவாய்மலர்ந்து கொடுத்தருளினுரென்பதும் பொருந்தும். (௭)

அப்பொற்பதிவாழ்வணிகக்குலத்தான்றதொன்மைச் .... *
செப்பத்தகுசீர்க்குடிசெய்தவஞ்செய்யவந்தா .. .. *
ரொப்பற்றினையுமறுத்தேறுகைத்தேறுவார்தாள் .... *
மெய்ப்பற்றெனப்பற்றிவிடாதவிருப்பின்மிக்கார் .. .... *

(இதன்பொருள்)

அந்த அழகியநகரத்தில் வாழ்கின்ற வணிகருடைய குலத்தில் பரம்பரையாய்ச்செல்வம்பொருந்தி எல்லாராலும் புகழத்தக்க சிறப்பினையுடைய ஒருகுடும்பம் செய்த தவத்தால்வந்துபிறந்தவர் எல்லா ஆசைகளையும் ஒழித்துரிஷபவாகனத்திலெழுந்தருளி நடத்துகின்ற பரமசிவனுடையபாதங்களை உண்மையான ஆதாரமென்று அனுசரித்து அந்த அன்பில்நின்றும் குறையாத ஆசையையுடையவர்.—(எ-று) (௮)

நாளும்பெருங்காதனயப்புறும்வேட்கையாலே .... *
கேளுந்துணையுமுதற்கேடில்பதங்களெல்லா .... *
மாளும்பெருமானடித்தாமரையல்லதில்லார் .... *
மூளும்பெருகன்பெனுமூர்த்தியார்மூர்த்தியார்தாம் .... *

(இதன்பொருள்)

நாள்தோறும் வளர்கின்றபெரிய ஆசையோடுகூடிய அன்பினுலே பந்துக்களும் துணையும்முதலாகிய குறைவற்றபேறுகளெல்லாம் ஆட்கொண்டபரமசிவனதுபாததாமரையாயல்லாமல் வேறொன்றையும்நாடாதவர் அன்பே உருவமாகக்கொண்டவர் மூர்த்திநாயனார்.—(எ-று) (௯)

அந்திப்பிறைசெஞ்சடைமேலணியாலவாயி .. .. *
லெந்தைக்கணிசந்தனக்காப்பிடையென்றுமுட்டா .... .. *

வந்தச்செயலினிலைநின்றடியாருவப்பச் .. .. *
சிந்தைக்கினிதாயதிருப்பணிசெய்யுநாளில் .. .. *

(இதன்பொருள்.)

மாலைக்காலத்தில் உதிக்கின்ற மூன்றாம்பிறையைச் சேர்ந்த சடையின்மேல்தரித்த மதுரையில் எழுந்தருளியிருக்கும் எம்முடைய ஆண்டவர்க்கு அணியுஞ்சந்தனக் காப்பானது இடையில் எவ்வாறைத்தும்முட்டுப்பாடுவராமல் அழகாய்நடக்கும்செய்கையில்நின்று அடியவர்கள் சந்தோஷத்தைஅடையச்சுவாமியின் திருவுள்ளத்துக்கேற்றதாகிய திருப்பணிசெய்துகொண்டுவரும்நாளில்.—(எ-று) (ய)

கானக்கடிசூழ்வடுகக்கருநாடர்காவன் ....*
மானப்படைமன்னன்வலிந்துநிலங்கொள்வானாய் ... .*
யானைக்குதிரைக்கருவிப்படைவீரர்திண்டேர் .. .. .. *
சேனைக்கடலுங்கொடுதென்றிசைநோக்கிவந்தான். .. .. *

(இதன்பொருள்.)

ஆரணியத்தையேகாவலாகப்பெற்ற வடுகசாதியானாகக் கருநாடதேசத்தாரை யாளுகின்ற வலிபொருந்திய ஆயுதத்தையுடைய ஒரு அரசன் வலியவே அன்னியதேசத்தைப்பிடித்துக்கொள்ளவிரும்பி-யானை-குதிரை-சத்துருக்களைக் கொல்லுவதற்குக்காரணமாயிருக்கும் ஆயுதங்களைத்தரித்த வீரர்கள்-எறும் உறுதியாகியதேர்- சமுத்திரம்போன்றசேனை- இவைகளைக்கொண்டு தென்றிசையை நோக்கிவந்தான்.—(எ-று) (யக)

வந்துற்றபெரும்படைமண்புதையப்பரப்பிச் . .. . *
சந்தப்பொதியிற்றமிழ்நாடுடைமன்னன்வீரஞ் .. .. *
சிந்தச்செருவென்றுதன்னாணைசெலுத்துமாற்றாற் .. ....*
கந்தப்பொழில்சூழ்மதுராபுரிகாவல்கொண்டான்... ..... *

(இதன்பொருள்.)

வடுகக்கருநாடக அரசன் தன்னோடுவந்த மிகுதியாகிய படையை அந்தநாட்டில் இடமில்லாமலிருக்கும்படி பரவச்செய்து சந்தனவிருட்சங்கள்நிறைந்த பொதியமலையிற்பிறந்த தமிழ்வழங்கும் பாண்டியநாட்டுவேந்தனுடைய வீரியமானது அடங்கயுத்தஞ்செய்து வென்று தனது கட்டளையை அந்தநாட்டிற்செலுத்தும்படி மணமுள்ளசோலைசூழ்ந்த மதுரைக்கு அரசனாகினான்.—(எ-று) (யஉ)

வல்லாண்மையின்வண்டமிழ்நாடுவளம்படுத்து.... .. ...*
நில்லாநிலையொன்றியவின்மையினீண்டமேரு.............*
வில்லானடிமைத்திறமேவியநீற்றின்சார்பு. ... .*
செல்லாதருகந்தர்திறத்தினிற்சிந்தைதாழ்ந்தான்.........*

(இதன்பொருள்.)

வலிய ஆண்மையால் உயர்ந்த பாண்டிநாட்டின் வளங்களெல்லாம் தன்வசஞ்செய்து நிலையில்லாதபதார்த்தங்கள்- மோட்சம் அடைதற்குச்சம்பந்தப்பட்டவைகளல்லாதபடியால் நீண்ட மகாமேருவை வில்லாகவுடைய பரமசிவனுக்கு அடிமைத்திறஞ்செய்தற்குக் குறியாகிய திருநீறுதரித்தல்முதலாகிய தொழிலைச் செய்யாமல் சைனர்களுடைய போதனைக்கு உட்பட எண்ணங்கொண்டான்.—(எ-று) (௰௩)

தாழுஞ்சமண்கையர்தவத்தைமெய்யென்றுசார்ந்து......*
வீழுங்கொடியோன்றுவன்றியும்வெய்யமுன்னைச் .... ..*
சூழும்வினையாலரவஞ்சுடர்த்திங்களோடும் ....*
வாழுஞ்சடையானடியாரையும்வன்மைசெய்வான். .... ..*

(இதன்பொருள்.)

வஞ்சனைபொருந்திய தாழ்வுள்ள சமணர்களுடைய தவத்தை மெய்யென்று நம்பி அந்தமதத்தில் பிரவேசித்த கொடியோனாகிய புதியவரசன் - அதுவுமல்லாமல் முற்பிறப்பிற்செய்த கொடியபாவத்தால் பாம்பு சந்திரனோடுவாழ்கின்றசடையினையுடைய பரமசிவனது அடியார்களையும் வருத்தப்படுத்துவான்.—(எ-று) (௰௪)

அந்தம்மிலவாமிறைசெய்யவுமன்பனார்தாம்.... ......*
முந்தைம்முறைமைப்பணிமுட்டலர்செய்துவந்தார் ......*
தந்தம்பெருமைக்களவாகியசார்பினிற்கு ....*
மெந்தம்பெருமக்களையாவர்தடுக்கவல்லார். ....*

(இதன்பொருள்)

அளவில்லாத துன்பங்களை அடியார்களுக்குச்செய்யவும்- மூர்த்திநாயனார் தமக்குச்செய்யுங் கடமையாக முன்செய்துவந்த திருப்பணிக்கு ஒருமுட்டுப்பாடும்வராமல் செய்துகொண்டுவந்தார்-தங்கள்பெருமை எவ்வளவையுடையதோ அவ்வளவிற்குக்குறையாத நற்செய்கையையுடைய எமதுபெரியோர்களை யாவர்தடுக்க வல்லவர்கள்.—(எ-று) எந்தம்பெருமக்களென்

றது-உரிமைப்பதிச்சொன்னதாம். மூத்தைப்பணியாவது-சந்தனம் அரைத்துச்சுவாமிக்கு அபிஷேகம்பண்ணும்படிசெய்தல்.

செக்கர்ச்சடையார்விடையார்திருவாலவாயுண் .... *
மூக்கட்பரனார்திருத்தொண்டரைமூர்த்தியாரை .... *
மைக்கட்புலநெஞ்சுடையவஞ்சகன்வெஞ்சமண்பே ...... *
ராக்கர்க்குடனாகவிகழ்ந்தனசெய்யவெண்ணி .... *

(இதன்பொருள்.)

செவ்வானம்போன்ற நிறம்பொருந்திய சடையையும் ரிஷபத்தையும் மூன்று கண்களையுமுடைய மதுரையில் வீற்றிருக்கும் பரமசிவனது அடியவராகிய மூர்த்திநாயனாரைக் களங்கமாகிய குற்றமுள்ளமனதையுடையவஞ்சகனாகிய அரசன்வெவ்வியசமணர்களுடைய கூட்டத்துக்கு உட்படுத்தும்பொருட்டு அவர்க்கு இகழத்தக்ககொடுஞ்செயல்களைச்செய்ய எண்ணி.
(எ-று) (௰௬)

எள்ளுஞ்செயல்வன்மைமெல்லையில்லாதசெய்யத் ...... *
தள்ளுஞ்செயலில்லவர்சந்தனக்காப்புத்தேடிக் .... *
கொள்ளுந்துறையுமடைத்தான்கொடுங்கோன்மைசெய்வான்.
தெள்ளும்புனல்வேணியர்க்கன்பருஞ்சிந்தைநொந்து. ..... *

(இதன்பொருள்.)

சைனமதத்திற்புகுந்த கொடுங்கோல் அரசன்-எல்லாராலும் நிந்திக்கத்தக்ககொடியசெய்கைகளை மூர்த்திநாயனார்க்கு அளவில்லாதனவாகச்செய்ய அதனால் தம்முடைய திருப்பணியிற்குறையாதவராய்ச் சுவாமியபிஷேகத்துக்கு வேண்டியசந்தனத்துக்குச்சந்தனக்கட்டை வாங்குமிடங்களிலெல்லாம் இவர்க்குக்கொடுக்கவொட்டாமல் தடுத்துவிட்டான் ஆனபடியால் தெளிந்தநீருள்ள சடையையுடைய சுவாமிக்குஅன்பராகிய மூர்த்திநாயனாரும் மனம்நொந்து.—(எ-று) (௰௭)

புன்மைச்செயல்வல்லமண்குண்டரிற்போதபோக்கும் .... *
வன்மைக்கொடும்பாதகன்மாய்ந்திடவாய்மைவேத ...... *
நன்மைத்திருநீற்றுயர்நன்னெறிதாங்குமேன்மைத் ...... *
தன்மைப்புவிமன்னரைச்சார்வதென்றென்றுசார்வார் .... *

(இதன்பொருள்)

இழிந்தசெய்கையில் வலியோராகிய கொடியசமணர்கள் கூட்டத்திற்சேர்ந்து காலத்தைவீணாக்குகின்ற மிகுந்த பாதகனாகி

ய அரசன் இறந்து உண்மையான வேதத்திற் சொல்லியபடி நீ
லத்தைக்கொடுக்கின்ற திருநீற்றைத்தரிக்கும் நம்மார்க்கத்தை
யனுசரிக்குங்குணத்தையடையும் இராசர்களெப்போது இந்
தநாடு அடையும் என்றுவிசனப்படுவார்.—(எ-று) (௰அ)

காய்வுற்றசெற்றங்கொடுகண்டகன்காப்பவுஞ்சென் ......*
றாய்வுற்றகொட்பிற்பகலெல்லடையங்கநாடி ....*
யேய்வுற்றநற்சந்தனமெங்கும்பெறாதுசிந்தை ....*
சாய்வுற்றிடவந்தனர்தம்பிரான்கோயிறன்னில்....*

(இதன்பொருள்.)

கோபத்தோடு அநுயையும் மேற்கொண்டு துஷ்டனாகிய அவ்
வரசன் சந்தனத்துண்டு அகப்படாமலிருக்கத் தடைசெய்ய
வும், மூர்த்திநாயனார்-பகற்காலமுழுதும் அலைந்துதேடித்தகு
தியுள்ள நல்லசந்தனம் எவ்விடத்திலும்பெறாமல் மனதுதளர்
ச்சியை அடையச்சுவாமிவீற்றிருக்கும் ஆலயத்திற்கு வந்தார்.
(எ-று). (௰கூ)

நட்டம்புரிவாரணிதற்குரிமெய்ப்பூச்சின்று......*
முட்டும்பரிசாயினுந்தேய்க்குங்கைமுட்டாதென்று......*
வட்டந்திகழ்பாறையின்வைத்துமுழங்கைதேய்த்தார் ....*
கட்டும்புறந்தோனரம்பென்புகரைந்துதேய ....*

(இதன்பொருள்)

நடனஞ்செய்தருளுகின்ற பரமசிவனது திருமேனியில்தரிக்க
த்தக்க சந்தனம் இன்றைக்குக் கிடையாமற்போயினும் சந்த
னக்கட்டைக்குப் பதிலாகக் கையைக்கொண்டு தேய்க்கிறதற்
கு ஒருமுட்டுப்பாடும் இல்லையென்று வட்டமாகிய ஒரு சந்த
னக்கல்லில் முழங்கையைவைத்துத்தேய்த்தார் - தேகத்துக்கு
உறுதியாயிருக்கின்ற புறத்திலுள்ளதோலும், நரம்பும், எலும்
பும் தேய்ந்துகுறைய.—(எ-று) (உ௰)

கல்லின்புறந்தேய்ந்தமுழங்கைகலுழ்ந்துசோரி.. ....*
செல்லும்பரப்பெங்கணுமென்புதிறந்துமூளை ....*
புல்லும்படிகண்டுபொறாதவர்தம்பிரானார்....*
அல்லின்கணெழுந்ததுவந்தருள்செய்தவாக்கு....*

(இதன்பொருள்.)

கல்லிலிடத்தில் முழங்கை தேய்வுண்டதனால் உதிரம்ஒழுகி நா
ற்புறத்திலும்பெருகி எலும்பினுள்ளே யிருக்கும் துவாரத்திற்

ந்து மூழையானது வெளியில்வரப் பார்த்துச்சுவாமி சகிக்காத வ்ராகுர்-ஆனபடியால் அடியவரைக் காப்பாற்றும்பொருட் டுக் கிருபைபொருந்திய ஒரு திருவாக்கானது இராத்திரியில் அசரீரியாக உண்டாயிற்று.—(எ-று) (உக)

அன்பினூலிவாலிதுசெய்திடலையவுன்பால் ....*
வன்புன்கண்விளைத்தவன்கொண்டமண்ணெல்லாங்கொண்டு*
முன்பின்னல்புகுந்தன்முற்றவுநீத்துக்காத்துப் ... .*
பின்புன்பணிசெய்துநம்பேருலகெய்துகென்ன ... .*

(இதன்பொருள்)
அன்பனே பத்தியினது உறுதிப்பாட்டினல் இப்படிப்பட்ட செய்கையைச் செய்யாதே-உனக்கு வலிய துன்பத்தைச்செய் த கொடுங்கோலரசன் பெற்றிருக்கும் இந்த நாடுமுழுதும் நீ யேகைக்கொண்டு இதற்குமுன் இவ்விடத்தில் அவனால் உண் டாகிய கொடுமைகள்யாவும் நீக்கி மனிதனைக்காத்து உனது பணிவிடையை நடப்பித்துப் பின்பு நமது சிவலோகத்துக்கு வாவென்று.—(எ-று) (உஉ)

இவ்வண்ணமெழுந்ததுகேட்டெழுந்தஞ்சிமுன்பு ... .*
செய்வண்ணமொழிந்திடத்தேய்ந்தபுண்ணூறுதீர்ந்து ....*
கைவண்ணநிரம்பின்வாசமெல்லாங்கலந்து .. ..*
மொய்வண்ணவிளங்கொளியெய்தினர்மூர்த்தியார்தாம் .. .*

(இதன்பொருள்.)
இந்தப்பிரகாரம் எழுந்த திருவாக்கினைக்கேட்டு அஞ்சியெழு ந்து முன்புசெய்யும் அரைக்குந்தொழில் ஒழியக் கையானது தேய்ந்ததனால் உண்டாகிய காயம் ஒழிந்து முன்போலவே த ன்னுடைய நிறத்தை அடைந்து ரத்தநாற்றம்போய் நல் வாசனையுண்டாகி மிகுந்த அழகைக்கொடுக்குங் காந்தியைத் தேகத்தில் அடைந்தார் மூர்த்திநாயனார்.—(எ-று) (உ௩)

அந்நாளிரவின்கணமண்புகல்சார்ந்துவாழு .... *
மன்னுகியபோர்வடுகக்கருநாடர்மன்னன் ... .*
றன்னாளுமுடிந்ததுசங்கரன்சார்பிலோர்க்கு ....*
மின்னாமென்நீடியமெய்ந்நிலையாமைவெல்ல ....*

(இதன்பொருள்)
அன்று இராத்திரியில் சைனமதத்தில் பிரவேசித்து அரசாட்சி செய்து வாழ்கின்ற வடுகக்கருநாடராஜனுடைய வாழ்நாள்

முடிந்தது-பரமசிவனுடைய அனுக்கிரகமில்லாதவர்களுக்குமி
ன்னல்போலஉண்டாயிருக்கும்நிலையாமையைச்சிவபதத்தியாகி
ய மெய்மையானது வெல்லவேண்டியபடியால். எ-று) (உச)

இவ்வாறுலகத்தினிறப்பவுயர்ந்தநல்லோர் ....*
மெய்வாழுலகத்துவிரைந்தணைந்தார்களேபோ ....*
லவ்வாறரனாரடியாரையலைத்ததீயோன் ....*
வெவ்வாய்நிரயத்திடைவீழவிரைந்துவீழ்ந்தான் ....*

(இதன்பொருள்.)

மேற்சொல்லிய தன்மையை உடைய இந்தவுலகத்தில் மேன்
மையுற்ற நல்லோர்கள் தேகவியோகம் அடைந்தால் எப்படி
உண்மையாகிய மோட்சலோகத்தில் விரைவாய்ச் சேர்வார்க
ளோ அங்ஙனம் சிவனது அடியார்களை வருத்தின வடுகக்கரு
நாட அரசன் வெவ்விதாகிய இடத்தையுடைய நரகத்தில்விழு
ம்படி சடிதியில் இறந்தான்.—(எ-று) (உ௫)

முழுதும்பழுதேபுரிமூர்க்கனுலந்தபோதி ....*
னெழுதுங்கொடிபோல்பவருட்படவெங்குஞ்சுற்ற .... ..*
முழுதும்புலர்வுற்றதுமற்றவனன்னமாலைப் ....*
பொழுதும்புலர்வுற்றதுசெங்கதிர்மீதுபோத ....*

(இதன்பொருள்)

சிவனடியார்களுக்கு முழுதும் துன்பமேயியற்றுகின்ற மூர்க்
கனாகிய அரசன் இறந்தபோதில் சித்திரப்பாவைபோன்ற அ
வன்மனைவிகள் உள்ளங்கலங்க அந்தநகரத்தில் எங்குமுள்ளஎ
ல்லாச்சுற்றத்தாரும் விதனமுற்றார்கள் - அவ்வரசனது நிறத்
தையொத்த இராக்காலமும் விடிந்தது-சிவப்பாகியகிரணங்க
ளையுடைய சூரியன் உதயமாக.—(எ-று) (உ௬)

அவ்வேலையிலங்கணமைச்சர்கள்கூடித்தங்கள் ....*
கைவேறுகொளீமவருக்கடன் காலைமுற்றி ....*
வைவேலவன்றன்குலமைந்தருமின்மையாலே .... *
செய்வேறுவினைத்திறஞ்சிந்தனைசெய்துதேர்வார் ....*

(இதன்பொருள்.)

அப்பொழுது அந்தப்பட்டணத்திலுள்ள மந்திரிகள்கூடி வே
று வகையாகச்செய்கின்ற தகனமுதலாகிய கடன்களைக்கா
லைப்பொழுதேமுடித்துக்கூர்மைபொருந்தியவேலையுடைய த
ங்கள் அரசனுக்குக்குலத்திற்பிறந்தபுத்திரர்களும் இல்லாதபடி

யால் வேறொருவனை அரசுசெய்ய நியமிக்கும் உபாயத்தைச் சிந்தித்துத் தெளிவாராயினார்.—(எ-று) (உஎ)

தாழுஞ்செயலின்றொருமன்னவன்றாங்கவேண்டுங் .... *
கூழுங்குடியுமுதலாயினகொள்கைதேனுஞ். .... *
சூழும்படைமன்னவன்றோளிணைகாவலின்றி. .... *
வாழுந்தகைத்தன்றிந்தவையகமென்றுசொன்னார். .... ..*

(இதன்பொருள்.)

ஒருயிர்க்குங் குறைவில்லாததாக ஒரு அரசன் உலகத்தையாளவேண்டும் பொருள் குடிகள் முதலானவைகள் நிறைவுள்ளதாயிருந்தாலும் ஆயுதத்தைத்தாங்கிய அரசனது இரண்டுபுயங்களாலுங் காக்குங்காவலில்லாமல் வாழ்ந்தகுதியையுடையதன்று இந்தவுலகமென்றுசொன்னார்கள்.—(எ-று) முதலாயினவென்பதனால்-சேனை-மந்திரி- கோட்டை- மற்றோரரசனுடைய துணையென்றாயிற்று. (உஅ)

(வேறு.)

பன்முறையுயிர்களெல்லாம்பாலித்துஞாலங்காப்பான் ....*
றன்னெடுங்குடைக்கீழ்த்தத்தநெறிகளிற்சரித்துவாழ .. ..*
மன்னவனின்றிவைகுமன்னுலகென்னுங்காலை .. .... *
யின்னுயிரின்றிவாழும்யாக்கையையொக்குமென்பார் ....*

(இதன்பொருள்.)

பலவகைப்பட்ட உயிர்களெல்லாவற்றையும் காத்து உலகத்தையாளும்படி தனது நெடியகுடையின்கீழ் நான்கு வருணத்தாரும் அவரவருக்குச்சொல்லிய மார்க்கத்தில் தவறாமல்நடக்கும்படியிபத்தும் அரசர்களில்லாமல் தங்கியபூலோகமானது ஆலோசிக்கும்போது இனிய உயிரில்லாமல் வாழ்கின்ற தேகத்தையொக்குமென்று பெரியோர்சொல்லுவார்கள்.—(எ-று)

இவ்வகைபலவுமெண்ணியிங்கினியரசரில்லைச் .. .. *
செய்வகையிதுவேயென்றுதெளிபவர்சிறப்பின்மிக்க ....*
மைவரையனையவேழங்கண்கட்டிவிட்டான்மற்றக் *
கைவரைகைக்கொண்டான்மன்காவல்கைக்கொள்வானென்று*

(இதன்பொருள்)

இந்தப்படிபலவகையையும் நினைத்து இனி இந்தத்தேசத்திற்கு அரசரில்லை செய்யவேண்டியது இதுவேயென்று தேறினவர்களாய் அலங்காரம்பண்ணப்பட்டகரியமலைபோன்றயானை

யைக் கண்கட்டிவிட்டால் அந்தயானை எவரை எடுத்துக்கொள்கின்றதோ அவரே இந்தராச்சியத்துக்கு இராசாவாகுவார் என்று.—(எ-று) (௩௰)

(வேறு.)

செம்மாண்வினையர்ச்சனைநான்முறைசெய்துதோளா.... *
விம்மாநிலமேற்றொருவோர்ந்தலையேற்றுமென்று.... .... *
பெய்ம்மாமுகில்போன்மதம்பாய்பெருங்கோடைநேர்நிக் . *
கைம்மாவைநறுந்துகில்கொண்டுகண்கட்டிவிட்டார்.. ... *

(இதன்பொருள்)

ஒழுங்காய்மாட்சிமைபெற்ற அர்ச்சனை முதலானசெய்கைகளைச்சாஸ்திரப்படி யானைக்குச்செய்து தோளினால் இந்தப்பெரியவுலகத்தைத் தாங்கும்படி ஒருவரை நீயெடுத்துக் கொடுப்பாயாக என்று பெய்யாநின்ற பெரியமேகம்போல் மதஞ்சொரிந்து பெருகுகின்ற பட்டத்தைத்தரித்த நெற்றியையுடைய யானையை நல்ல வஸ்திரங்கொண்டு கண்ணைக் கட்டிவிட்டார்கள். (எ-று) (௩௧)

கண்கட்டிவிடுங்களியானையக்காவன்மூதூர்.... .... .. *
மண்கொட்புறவீதிமருங்குதிரிந்துபோகித்............. *
திண்பொற்றடமாமதில்சூழ்திருவாலவாயின்.. .... *
விண்பிற்படவோங்கியகோபுரமுன்புமேவி........... *

(இதன்பொருள்.)

கண்கட்டிவிடப்பட்ட செருக்குள்ள யானையானது காவலைக்கொண்ட பழமையாகிய அந்தப்பட்டணத்தில் தூசுகிளம்பிச் சுழலவீதிகளிலதிரிந்துகொண்டுபோய்ப் பொன்னிறமாய்வலிமையும் அகலமுமுள்ள பெரியமதில்சூழ்ந்த ஆலயத்தில் தேவலோகமும் கீழாக ஓங்கிய கோபுரத்துக்குமுன்னே போய். (எ-று) (௩௨)

நீங்கும்மிகவிஃகணிகழ்ந்ததுகண்டதொண்ட.... ...... *
ரீங்கெம்பெருமானருளாமெனிவிந்நலையர்.. .. .. .. *
தாங்குஞ்செயல்பூண்பனென்றுள்ளந்தளர்வுநீங்கிப்... ... *
பூங்கொன்றைமிலைந்தவர்கோயிற்புறத்திறைஞ்ச.. .. .. *

(இதன்பொருள்.)

நீங்குகின்ற இராக்காலத்தில் தமக்காக அசரீரிவாக்கு உண்டானதையறிந்திருந்த மூர்த்திநாயனார் எமது ஆண்டவருடைய திருவுளமானது இப்படியிருந்ததென்றால் இந்தவுலகத்தையா

னதற்கு உடன்படுவேனென்று மனதிலுள்ள துயரம் ஒழிந்து கொன்றைமலரைத்தரித்த பரமசிவனது கோயிலினது புறத்தே நீங்க.—(எ-று) (௫௩)

வேழத்தாசங்கண்விரைந்துநடந்துசென்று.... .. ..*
வாழ்வுற்றுலகஞ்செய்தவத்தினின்வள்ளலாரைச்.... ... ...*
சூழ்பொற்சுடர்மாமணிமாநிலந்தோயமுன்பு.. .. .. ..*
தாழ்வுற்றெடுத்துப்பிடர்மீதுதரித்ததன்றே...... .. ..*

(இதன்பொருள்)

பட்டத்துயானையானது அவ்விடத்துக்குச்சீக்கிரமாக நடந்து போய் வாழ்வையடையும்படி உலகத்தார்செய்த தபோபலத்தினால்மூர்த்திநாயனாரைக் கிரணம்பொருந்தியபொன்மயமாகிய மணிகள் பூமியில்படும்படி முன்பாகத்தாழ்ந்து எடுத்துப் பிடரியின்மேல்வைத்துக்கொண்டது.—(எ-று) (௫௪)

மாதங்கமெருத்தினில்வைத்தவர்தம்மைக்காணு.... .. ...*
வேதங்கெடவெண்ணியதிண்மையமைசசரெல்லாம் .. ..*
பாதங்களின்மீதுபணிந்தெழுந்தார்களப்போ.........*
ீதாதங்கிளர்வேலையையொத்தொலிமிக்கதவ்வூர்........*

(இதன்பொருள்)

யானையானது தன்முதுகில் வைக்கப்பெற்றவராகிய மூர்த்திநாயனாரைக்கண்டுகுற்றங்கெடநினைத்தசாமர்த்தியத்தையுடைய மந்திரிகளெல்லாம் அவருடைய பாதங்களில்வணங்கியெழுந்தார்கள்-அந்தக்காலத்திலவெள்ளமாகப்பிரகாசிக்கின்றசமுத்திரத்தையொத்து அவ்வூரில் சந்தோஷ ஒலி உண்டாயிற்று. (எ-று) (௫௫)

சங்கங்கண்முரன்றனதாரைகள்பேரியோடு ....*
மெங்கெங்குமியம்பினபல்லியமெல்லையில்ல.... ......*
லங்கங்குமலிந்தனவாழ்த்தொலியம்பொற்கொம்பின் ....*
பங்கன்னருளாலுலகாள்பவர்பாங்கொங்கும்.... ....*

(இதன்பொருள்.)

சங்கவாத்தியங்கள் ஒலித்தன-எவ்விடத்தும்-தாரை-பேரிகள் முழங்கின-அளவில்லாத பலவாத்தியங்களு மிகவுஞ் சப்தித்தன-அவ்வவ்விடத்தில்வாழ்த்துதலால்உண்டாகியமுழக்கமும்நிறைந்தன-அழகியகொம்புபோன்ற பார்வதியாரைப் பாகத்தி

லிவைத்தருளிய பரமசிவனது கிருபையால் உலகாளப்புகுந்த
மூர்த்திநாயனருடைய நாற்புறத்திலும்.—(எ-று) (௩௬)

வெங்கட்களிற்றின்மிசைநின்றுமிழிச்சிவேரித் ....*
தொங்கற்சுடர்மாலைகள்சூழ்முடிசூடுசோலை .. ..*
யங்கட்கொடுபுக்கரியாசனத்தேற்றியொற்றைத்... .. ....*
திங்கட்குடைக்கீழுரிமைச்செயல்சூழ்ந்துசெல்வார் .. ....*

(இதன்பொருள்)

கோபக்கண்ணையுடைய யானையின்முதுகில்நின்றும் மூர்த்தி
நாயனாரை இறக்கி-பூமாலையும் அரதனமாலையும் சூழ்ந்திருக்
கும் கிரீடத்தைத்தரிக்க-ஒருசோலையினிடத்திற்கொண்டுபோ
ய்ச்சிங்காதனத்தில் ஏற்றிச்சந்திரனொத்த ஒப்பற்றவெள்ளைக்
குடைக்கீழிருந்து ஆளுகிறதற்குப் பட்டாபிஷேகத்திற்குரிய ப
ணியைஆலோசித்துச்செய்யத்தொடங்கினார்கள்.(எ-று)(௩௭)

மன்னுந்திசைவேதியின்மங்கலவாகுதிக்கட் ....*
துன்னுஞ்சுடர்வன்னிவளர்த்துத்துறைநந்தநூல்சூழ்.. .. ..*
பொன்னின்கலசங்கள்குடங்கள்பூரித்ததூநீ ....*
முன்னுஞ்செயன்மந்திரயோகினிறுத்தினார்கள் .. ..*

(இதன்பொருள்.)

வேண்டியதிசைகளில் உண்டாக்கப்பட்டுச்சுபமானஆகுதிகள்
பண்ணுகின்ற ஓமகுண்டத்தில் பிரகாசம்பொருந்திய அக்கினி
யைவளர்த்துப் பரிசுத்தமாகியஜலத்தைநிறையவார்த்து நூலை
நெருங்கச்சுற்றிய பொற்கலசங்களையும், குடங்களையும், நியா
யத்தோடுசெய்யு மந்திரவிதிப்படி நிறுத்தினார்கள்.—(எ-று)

வந்துற்றெழுமங்கலமாந்தர்கடம்மைநோக்கிச் .... *
சிந்தைச்சிவமேதெளியுந்திருமூர்த்தியர்தா ....*
முந்தைச்செயலாமமண்போய்முதற்சைவமோங்கி.. ....*
இந்தப்புவிதாங்கியிங்கின்னரசாள்வனென்றார் ....*

(இதன்பொருள்.)

வந்து மங்களமானசெயல்களைச் செய்கின்ற மனிதர்களைப்பா
ர்த்துச் சித்தத்தில்பரமசிவமேஉயர்ந்தபொருளென்று தெளி
கின்ற மூர்த்திநாயனார்-முற்காலத்தில் கொடியசெய்கையில்
இருந்த சமணமதம்போய் முதன்மையாகிய சைவமதம் விரு
த்தியாயின் இந்தநகரத்தில் இருந்து இந்த விராச்சியத்தைத்

தாங்கும்படி இனிய பட்டத்தைக் கைக்கொள்ளுவேனென்றார்.—(எ-று) (௩௯)

அவ்வாறுமொழிந்ததுகேட்டவமைச்சரோடு .... *
மெய்வாழ்தருநூலறிவின்மிகுமாந்தர்தாமு .... *
மெவ்வாறருள்செய்தனைமற்றவையன்றியாவர் .. ..*
செய்வார்பெரியோயெனச்சேவடிதாழ்ந்துசெப்ப .. .. *

(இதன்பொருள்.)

அந்தப்பிரகாரமூர்த்திநாயனார் சொல்லியதைக்கேட்ட மந்திரிகளோடு உண்மையான வேதாகமமுதலியவற்றைக்கற்று அறிவுமிகுந்தபெரியோர்களும் நீர் எப்படிக் கட்டளையிடுகின்றீரோ அப்படிச்செய்வதேயல்லாமல் வேறொருவகையை யார் செய்வார்கள்-அன்பில் உயர்ந்தவரேயென்று அவருடையசெவ்விய பாதத்தில் வணங்கிச்சொல்ல.—(எ-று) (௪௰)

வையம்முறைசெய்குவனாகில்வயங்குநீறே .... *
செய்யுமபிடேகமுமாகச்செழுங்கலன்க ....*
ளையன்னடையாளமுமாகவணிந்துதாங்கு .. ..*
மொய்புன்சடைமாமுடியேமுடியாவதென்றார் .. ..*

(இதன்பொருள்)

உலகத்தையாளுகிறதற்குச் சம்மதித்தேனாகில் பிரகாசம்பொருந்திய விபூதிதானே செய்யப்பட்ட அபிஷேகதிரவியமாகவும், சுவாமியின் அடியவனென்று தெரிந்துகொள்ளுவதற்குக் குறியாகிய ருத்திராட்சமுதலியவைகளே செழுமைபொருந்திய ஆபரணமாகவுந்தரித்து நெருங்கிய சிறிய சடைமுடியே என்தலையில் கிரீடமாகவேண்டியதென்றார்.—(எ-று)

என்றிவ்வுரைகேட்டதுமெல்லையில்கல்வியோரும் .. .. .. *
வன்றிண்மதிநூல்வளர்வாய்மையமைச்சர்தாமும் .. .. .. *
நன்றிங்கருடானெனநற்றவவேந்தன்சிந்தை .... *
யொன்றுமரசாளுரிமைச்செயலான்வுய்த்தார்...... ......*

(இதன்பொருள்.)

என்றுசொல்லிய வார்த்தையைக்கேட்டவுடனே நிறைந்தகல்வியினையுடைய பெரியோர்களும் நீதிநூல் அறிந்து நுட்பமாகிய புத்தியை உடைய மந்திரிகளும், தேவரீர்சொல்லிய அருள் பொருந்திய மொழியானது நன்றாயிருக்கிறதென்று இ

லைசந்து நல்லதவத்தினையுடைய மூர்த்திநாயனார் - தம்முடைய மனதிற்குப் பொருந்தியபடி ராசசியபாரஞ்செய்ய முடிசூடுவதற்குவேண்டிய செய்கைகளைச்செய்தார்கள்.—(எ-று)(௪௨)

மாடெங்குநெருங்கியமங்கலவோசைமல்கச் .... *
சூடுஞ்சடைமௌலியணிந்தவர்தொல்லையேனந் .... *
தேடுங்கழலார்திருவாலவாய்சென்றுதாழ்ந்து .... *
நீடுங்களிற்றின்மிசைநீண்மறுகூடுபோந்தார் .... *

(இதன் பொருள்)

மங்களமாகியகோஷம்பக்கங்களிலெங்கும் நெருங்கிநிறையப் பொருந்திய சடையே முடியாகக்கொண்டவர்-முற்காலத்தில் விஷ்ணுபன்றியாகித் தேடியறியாத பாதத்தை யுடையவர் திருஆலயத்திற்குப்போய் வந்தனஞ்செய்து பெரிய யானையின் மேலேறி நீண்டவீதியின் வழியாகப்போனார்.—(எ-று)(௪௩)

மின்னும்மணிமாளிகைவாயின்மேவமீது .... *
தன்னின்றுமிழிந்துதயங்கொளிமண்டபத்திற் .... *
பொன்னின்னரிமேலணைச்சாமரைக்காமர்பூங்கான் .... *
மன்னுங்குடைநீழலிருந்தனர்வையந்தாங்கி .... *

(இதன் பொருள்)

பிரகாசிக்கின்ற மணிகளிழைத்த அரண்மனைவாசலிற் சென்றவுடனே யானையிலிருந்து இறங்கி விளங்குங்காந்தியையுடையஒரு மண்டபத்தில் பொன்னாற்செய்யப்பட்ட மேன்மையுற்ற சிங்காதனத்தில்சாமரம்வீசச்சித்திரமாகப் புஷ்பங்களெழுதிய அழகுள்ள காலையுடைய குடையின்நீழலில் இருந்தார் உலகத்தைத்தாங்கி.—(எ-று) (௪௪)

குலவுந்துறைநீதியமைச்சர்குறிப்பின்வைக்க .... *
கலகஞ்செயமண்செயலாயினகட்டுநீங்கி .... *
நிலவுந்திருநீற்றுநெறித்துறைநீடுவாழ .... *
உலகெங்குநிரம்பியசைவமுயர்ந்துமன்ன. .... *

(இதன் பொருள்)

நல்ல துறையிற்செல்லுகின்ற நீதியையுடைய மந்திரிகள் தம்முடைய குறிப்பின்படிநடக்க இதற்குமுன் கலகஞ்செய்து கொண்டிருந்த சமணர்களுடைய கட்டுப்பாடாகிய மதச்செய்கைகள்நீங்கிப் பிரகாசமுள்ள திருநீற்றைத்தரிக்கும் நன்மார்க்கத்தில் நாட்டப்பட்டுவாழ உலகமுழுது நிரம்பிய சைவசமையமானது உயர்ந்துநிலைபெற.—(எ-று) (௪௫)

நுதலின்கண்விழித்தவர்வாய்மைநான்குநூலின் .... .. *
பதமெங்குநிறைந்துவிளங்கப்பவங்கண்மாற்றி ... . *
யுதவுந்திருநீறுயர்கண்டிகைகொண்டவேணி .... *
முதன்மும்மையினாலுலகாண்டனர்மூர்த்தியார்தாம் .. ... *

(இதன்பொருள்.)

நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனால் அருளிச்செய்யப்பட்ட உண்மையோடு நுட்பமாயநியத்தக்க வேதாகமங்களின் மார்க்கமானது எவ்விடத்திலும் பரவிவிளங்கப் பிறப்பினைநீக்கி வீட்டைத்தருகின்ற-விபூதி-ருத்திராட்சம்-சடைஎன்கிறபெருமைபொருந்திய இம்மூன்றினையும் அடையாளமாகக்கொண்டு மூர்த்திநாயனார் உலகத்தையாண்டார்.—(எ-று) (௪௫)

ஏலங்கமழ்கோதையர்தந்திறமென்றுநீங்குஞ் .. .. *
சீலங்கொடுவெம்புலன்றெவ்வுடன்வென்றுநீக்கி .... *
ஞாலந்தனிநேமிநடாத்திநலங்கொளூழி .. .. *
காலம்முயிர்கட்கிடரான்கடிந்துகாத்தும் .. .. *

(இதன்பொருள்)

ஏலச்சாந்து மணக்கின்ற கூந்தலையுடையஸ்திரீகளால் உண்டாகும் ஆசையையெப்போதும் ஒழிந்திருக்கிறதற் கேதுவாகிய ஒழுக்கத்தைக்கொண்டு சத்துருவைப்போல் துன்பஞ்செய்கின்ற கொடியனவாகியஐம்புலன்களையும் ஜயித்து ஒப்பற்ற ஆஞ்ஞாசக்கிரத்தை உலகத்தில்நடத்தி நன்மைபெறும்படி வெகுகாலம் ஜீவராசிகளுக்குண்டாகிய துன்பங்களை ஒழித்துக்காப்பாற்றி.(எ-று)ஏலச்சாந்து-ஒருவகைப்பரிமளதிரவியம்.(௪௬)

பாதம்பரமன்னவர்சூழ்ந்துபணிந்துபோற்ற .... *
வேதம்பணியார்வகையிவ்வுலகாண்டுதொண்டின் .. .. *
பேதம்புரியாவருட்பேரரசாளப்பெற்று .. .. *
நாதன்கழற்சேவடிநண்ணினரண்ணலாரே .... *

(இதன்பொருள்.)

பிறதேசத்து அரசர்கள் சூழ்ந்துகொண்டு தமதுபாதத்தை வணங்க ஒருகுற்றமுமில்லாமல் இந்த உலகத்தை ஆண்டு சிவனுக்குச்செய்யும் பணிவிடைகளில் யாதொருவித்தியாசமும் வரவொட்டாமற் கருத்துக்கொண்டிருக்கும் பெருமைபொருந்திய அரசாண்டு சுவாமியின் செவ்வியபாதத்தை அடைந்தார்மூர்த்திநாயனார்.—(எ-று) (௪௭)

அகல்பாறையின்வைத்துமுழங்கையையன்றுதேய்த்த .. ..*
விகலார்களிற்றன்பனையேதிருமுருகனூரா .. ..*
முகில்சூழ்நறுஞ்சோலையின்மொய்யொளிமாடவீதிப். .. *
புகலூர்வருமந்தணர்தந்திறம்போற்றலுற்றாம் .. ..*

(இதன்பொருள்.)

சந்தனக்கட்டை கிடைக்காதகாலத்தில் அகன்றிருக்குங்கல்லில் முழங்கையைவைத்துத் தேய்த்த பகைகொண்ட யானைபோன்ற மூர்த்திநாயனாரை ஸ்தோத்திரஞ்செய்து மேகங்களால்மறைக்கப்பட்ட வாசனையுள்ள சோலையை உடைத்தாய்- மிகுந்த காந்தியைப்பெற்ற வீடுகளுள்ள வீதியினையுடைய திருப்புகலூரில் அவதாரஞ்செய்த முருகநாயனாரென்று சொல்லப்பட்ட வேதியர்செய்த அடிமைத்திறத்தலைச் சொல்லத்தொடங்குவோம்.—(எ-று) (௪௯)

மூர்த்திநாயனார்புராணம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௬௨௰௧.

முருகநாயனார்புராணம்.

தாதுசூழுங்குழன்மலையாடளிர்க்கைசூழ்ந்ததிருமேனி ...*
மீதுசூழும்புனற்கற்றைவேணிநம்பர்விரும்புபதி .. ..*
சோதிசூழுமணிமௌலிச்சோழர்பொன்னித்திருநாட்டுப்.*
போதுசூழுந்தடஞ்சோலைப்பொய்கைசூழும்பூம்புகலூர்.. .*

(இதன்பொருள்.)

பூந்தாதுக்கள்சூழ்ந்த கூந்தலையுடைய பார்வதியாரது தளிர்போன்ற கைகளினால் கட்டிக்கொள்ளப்பட்ட திருமேனியையும், மேற்புறத்தில் கங்கைவாசஞ்செய்யுஞ் சடையையும்உடைய ஆண்டவர் எழுந்தருளியிருந்ததற்கு விருப்பங்கொண்ட ஸ்தலம் யாதெனின்-பிரகாசமுள்ள மணிகளிழைத்த கிரீடத்தைத் தாங்கிய சோழர்கள் ஆளுகின்ற காவேரிநாட்டில் புஷ்பங்கள் நிறைந்த சோலையும், தடாகங்களும், நாற்புறத்திலும் சூழ்ந்திருக்கும் பூம்புகலூராகும்.—(எ-று) (௧)

தாமழுதூர்மற்றதனுணல்லோர்மனம்போலரவணிந்தார் *
சேமநலவுதிருநீற்றின் சிறந்தவெண்மைத்திருத்தொளியால்- *
யாமவிருளும்வெளியாக்குமிரவேயல்லவிளாமலர்மேற் .. *
காமர்மதுவுண்சிறைவண்டுங்களங்கமின்றிவிளங்குமால் .... *

(இதன்பொருள்)

வெகுநாளாகப் பேர்போயிருக்கின்ற அந்தஸ்தலத்தில் பெரியோர்களுடைய மனதுபோல்-பாம்பினைந்தரித்த சுவாமியினால் அங்கீகரிக்கப்பட்டு யாவர்க்கும் சுகத்தைக் கொடுக்கும்பொருட்டு விளங்குகின்ற விபூதியினது சிறப்பாகிய வெண்மைபொருந்திய ஒளியினால் இருளும் வெளிச்சமாக்கப்படும் இரவேயல்லாமல்- வாசனைபொருந்தியமலர்களின்மேல் தித்திப்புள்ள தேனையுண்ணும் வண்டுகளும், கறுப்புநிறம்போய் வெண்மையை உடையனவாய்ப்பிரகாசிக்கும்.—(எ-று) வெளிச்சம்-கிராமியவழக்கு. (௨)

நண்ணுமிசைதேர்மதுகரங்கணனைமென்சினையின்மருங்கலைய.
வண்ணமதுரத்தேன்பொழிவாசமலர்வாயேயல்ல .... *
தண்ணெண்சோலையெம்மருங்குஞ்சாருமடமென்சாரிகையின்,
பண்ணின்கிளவிமணிவாயும்பதிகச்செழுந்தேன்பொழியுமால்

(இதன்பொருள்.)

இசைபாடுகின்றவண்டுகள் மெல்லிய அரும்புகளையுடைய கொம்புகளின்புறத்தில் அலைதலாலே வாசம்பொருந்திய புஷ்பங்களின் வாய்மாத்திரம் திறத்தையும் இனிப்பையுமுடைய தேனைப்பொழிவனவல்ல- குளிர்ச்சியாகிய சோலையின் எப்புறத்திலும்வாசஞ்செய்யும் இளமைபொருந்தியநாகணவாய்ப்புள்ளின்-தித்திப்பாகப்பேசுகின்ற வார்த்தையையுடைய அழகியவாயும் சுவாமியைக்குறித்துப்பாடியிருக்கும் ஸ்தோத்திரமாகிய தேனைப்பொழியும்.—(எ-று) பதிகமென்பதை-தேவாரப்பதிகம் என்றுபொருள்கொண்டால் சம்பந்தசுவாமிகள் பாடல் என்க. (௩)

வண்டுபாடப்புனற்றடத்துமலர்ந்துகண்ணீரரும்புவன .. *
கொண்டவாசமுகையவிழ்ந்தகுளிர்பங்கயங்களேயல்ல [குந்
வண்டர்பெருமான்றிருப்பாட்டினமுதம்பெருகச் செவிமடுக்
தொண்டர்வதனபங்கயமுந்துளித்தகண்ணீரரும்புமால் .. *

(இதன்பொருள்)

வண்டுகள்பாட நீரையுடையதடாகத்தில்விகசித்துக்கண்ணீரரு

ட்புகின்றன வாசனைபொருந்தி முறுக்குவிட்டு விரிந்த குளிர்ச்சியாகிய தாமரை மலர்கள்மாத்திரமேயல்ல தேவர்களுக்கு நாயகராகிய சுவாமியைப்புகழ்கின்ற திருப்பாட்டாகிய அமிர்தமானது பெருகக் காதலால் உண்கின்ற அடியார்களுடைய முகங்களாகிய தாமரைமலர்களும் தனியாகக்கண்ணீர் அரும்பும்.—(எ-று) தாமரைகள் கண்ணீரரும்புவன வென்றது-கள்ளாகிய நீரை ஒழுகவிட்டது என்பதாம். (௧)

ஆனபெருமைவளஞ்சிறந்தவந்தண்புகலூரதன்கண்ணின் .. ❊
மானமறையோர்குலமரபின்வந்தார்முந்தைமறைநூலவர் ❊
ஞானவரம்பின்றலைநின்றார்நாகம்புனைவார்சேவடிக்கீ ழ் . .. ❊
ழூனமின்றிநிறையன்பாலுருகுமனத்தார்முருகனார் .. .. ❊

(இதன்பொருள்)

இப்படிப்பட்டவளமோங்கிய திருப்புகலூரில் பெருமைபொருந்திய பிராமணர்குலத்தில் அவதரித்தவர் பழமையாகிய வேதங்களையுணர்ந்த தலைவரானவர் ஞானநெறியில் நின்றவர் சர்ப்பத்தை அணிந்தபரமசிவனது செவ்வியபாதங்களுக்குக் குறைவில்லாமல் நிறைந்த அன்பினால் உருகியமனதையுடையவர் அவர்யாரெனின் முருகநாயனார்.—(எ-று) (௨)

அடைமேலலவன்றுயிலுணரவலர்செங்கமலவயற்கயல்கள் ❊
மடைமேலுகளுந்திருப்புகலூர்மன்னிவாழுந்தன்மையராய். ❊
விடைமேல்வருவாரங்காளாம்மெய்மைத்தவத்தாலவர்கற்றைச்
சடைமேலணியத்திருப்பள்ளித்தாமம்பறித்துச்சாத்துவார் ❊

(இதன்பொருள்.)

நண்டுகள் தாமரையிலையில் நித்திரைசெய்ய மலர்கின்ற அப்புஷ்பங்களையுடைய வயல்களிலுள்ள மீன்கள்-மடைமேல்தாவுகின்ற திருப்புகலூரில் நிலைபெற்றுவாழுந் தகுதியுடையவராய் ரிஷபவாகனத்தில் எழுந்தருளிவராநின்ற பரமசிவனுக்கு அடிமைத்திறம்பூண்ட மெய்மைபொருந்திய தபோபலத்தால் அந்தச்சுவாமியின் திரளாகிய சடையின்மேல் தரிக்கும்படி மலர்களைப்பறித்துச் சாத்துவார்.—(எ-று) (௩)

புலரும்பொழுதின்முன்னெழுந்துபுனிதநீரின்மூழ்கிப்போய் ❊
மலருஞ்செவ்வித்தம்பெருமான்முடிமேல்வானீராறுமதி... ❊
யுலவுமருங்குமுருகுயிர்க்கநகைக்கும்பதத்திலுடன்பறித்த. ❊
லலகின்மலர்கள்வெவ்வேறுதிருப்பூங்கூடைகளிலமைப்பார். ❊

(இதன்பொருள்.)

சூரியன் உதயமாவதற்குமுன்னே யெழுந்து பரிசுத்தமாகிய நீரில்முழுகி விடிந்தவுடனே தமக்குநாதராகிய பரமசிவனது சிரசின்மேல் கங்கையும் சந்திரனும் உலாவுகின்ற இடத்தில் தரிக்க வாசனைவெளிப்படமலரும் பக்குவத்தில்பறித்த அனேக மலர்களை இனம் இனமாகச்சேர்த்து வேறுவேறு புஷ்பக் குடலைகளிற் சேர்ப்பார்.—(எ-று) (எ)

கோட்டுமலருநிலமலருங்குளிர் நீர்மலருங்கொழுங் கொடியின்
றோட்டியலருமருமலருஞ்சுருதிமலருந்திருவாயிற் .. .. *
காட்டுமுழுவலிலவலரக்கனையலறாயிற்பன்னகநாண் ...... *
பூட்டுமொருவர்திருமுடிமேற்புனையலாகுமலர்தெரிந்து .. *

(இதன்பொருள்)

கொம்பிலிருக்கும்பூவும், நிலத்திலுள்ளபூவும், குளிர்ச்சியாகிய நீரிலுள்ளபூவும், செழுமைபொருந்திய கொடியிற்பூத்த இதழ்களையுடைய பூவும், மற்றைவகையாகிய வாசனைபொருந்திய மலர்களும், வேதத்தை அருள்செய்த திருவாயிலிருக்கும்பற்கள் நகைகொள்ள மகாமேருகிரியில் ஆதிசேஷனாகிய நாணியைப்பூட்டிய கைலாசபதியின் திருமுடிமேல் தரிக்கத்தக்கமலரொன்று அறிந்துபறித்து.—(எ-று) (அ)

கொண்டுவந்துதனியிடத்திலிருந்துகோக்குங்கோவைகளும் .*
மிண்டைச்சுருக்குந்தாமமுடனிசைக்கும்வாசமாலைகளுந் .. *
தண்டிற்கட்டுங்கண்ணிகளுந்தாளிற்பிணைக்கும்பிணையல்களுந் *
றண்டர்திறைக்குந்தொங்கல்களுஞ்சமைத்துநடங்குநூன்மா
ர்பர் .... *

(இதன்பொருள்)

எடுத்துக்கொண்டு தனியான இடத்தில் இருந்து கோக்கப்பட்ட கோவைமாலைகளும் கோத்துச்சுருக்கப்பட்ட கொண்டைமாலைகளும்-மலரையொன்றோடொன்றாக வைத்துக்கட்டப்பட்ட வாசனைபொருந்தியமாலைகளும், தண்டுபோல் பரியதாகக்கட்டப்பட்ட கண்ணிமாலைகளும், புஷ்பங்களின் காம்போடு காம்பினைச்சேர்த்துக்கட்டியபிணையல்மாலைகளும், நுட்பமாகிய மகரந்தப்பொடிகளை இறைக்கும் தொங்கல்மாலைகளும்; அட்டிப்புரள்கின்ற பூணூலைத்தரித்த மார்பினையுடைய முருகநாயனார்.—(எ-று) (௯)

ஆங்கப்பணிகளானவற்றுக்கமைத்தகாலங்களினமைத்துத். .*
தாஙகிக்கொடுசென்றன்பினொடுஞ்சாத்திவாய்ந்தவர்ச்சனைகள்
பாங்கிற்புரிந்துபரிந்துள்ளார்பரமநிகப்பற்றுன ....*
வோங்கிச்சிறந்தவஞ்செழுத்துமோவாநாவினுணர்வினர் ..*

(இதன்பொருள்.)

மாலைகளைத்தரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட காலங்களிலேயே மாலைகளை அமைத்துக்கோயிலுக்குக்கொண்டுபோய்அப்போ துசாத்துச் செய்யவேண்டிய அர்ச்சனைகளைத்தகுதியாகச் செய்து உருகியமனத்தையுடையவராய்ச்சுவாமியின்பாதத்தை அடைவதற்கு மிகுந்த உறுதியாய்ச் சிறந்த ஐந்தெழுத்தையும் இடைவிடாமல் நாவினால் உச்சரிக்கும் உணர்வினையுடையவராயிருந்தார் —(எ-று) (௰)

அன்னவடிவுமேனமுமாயறிவானிருவரறியாமன். . .. ... *
மன்னும்புகலூருறைவாரைவர்த்தமானவீச்சரத்து .. .. *
நன்னர்மகிழ்ச்சிமனங்கொள்ளநாளும் பூசைவழுவாமே ..[ர்
பன்னும்பெருமையஞ்செழுத்தும்பயின்றேபணிந்துபரவினு

(இதன்பொருள்.)

முடியும் அடியும் அறியும்படியாகப்-பிர்மாவும்-விஷ்ணுவும் அன்னமும் பன்றியுமாக உருக்கொண்டு தேடியும் அறியப்படாமல் நிலைபெற்ற திருப்புகலூரில் வாசஞ்செய்கின்ற சுவாமியை அவர்வீற்றிருக்கும் வர்த்தமானவீச்சரம் என்னுங் கோயிலில் மனது அதிசந்தோஷத்தை அடைய எந்நாளும் பூசைதவறாமல்செய்து எல்லாராலும் புகழப்பட்ட பெருமையையுடைய ஐந்தெழுத்தையும் செபித்து வணங்கிக்கொண்டு வந்தார்.— (எ-று) (௰௧)

தன்னுமுறைமையொழிந்திடவித்தகுதியொழுகுமறையவர்கா
தென்றேமறைகண்முதலானஞானஞ்செம்பொன்வள்ளத்தி [ற்
லன்பினகிலமீன்றளித்தவம்மைமுலைப்பாலுடனுண்ட ... ..*
பிள்ளையார்க்குநண்பருமாம்பெருமையுடையாராயினர் .. *

(இதன்பொருள்.)

வேதாகமங்களில் விலக்கியிருக்கின்றனவற்றை யாவரும்நீங்க-அவர்களுக்குக்காட்டும்பொருட்டு இப்படிப்பட்டதகுதியில்-தாம் நடக்கின்ற முருகநாயனர்-தெளிவாகிய வேதமுதலான வைகளை ஒருங்கே யறியத்தக்க ஞானத்தை சிவந்தபொன்னுற்

செய்யப்பட்ட தின்னைத்திலிருந்து அள்ளி உலகமெல்லாம் படைத்துக் காத்தருளிய பார்வதியாரது முலைப்பாலோடு உண்ட சம்பந்தசுவாமிகளுக்குச் சிநேகிதராகிய பெருமையையும் அடைந்தார்.—(எ-று) (௰௨)

அங்கணமருந்திருமுருகராமுகார்புகலிப்பிள்ளையார் .... ..*
பொங்குமணத்தின்முன்செய்தபூசையதனாற்புக்கருளிச் ...*
செங்கண்டலேறுயர்த்தவர்தாஞ்சிறந்தவருளின் பொருளிக்
தங்கள்பெருமானடிநீழற்றலையாந்தலைமைசார்வுற்றார் ....[கத்

(இதன்பொருள்)

அவ்வாறு இருக்கும் முருகநாயனார்-அழகுபெற்ற சீர்காழியில் அவதரித்த சம்பந்தமூர்த்திசுவாமிகளது சிறப்பாகிய திருக்கலியாணத்தின் முன்செய்த பூசாபலத்தினால் அவ்விடத்திற்குச்சென்று சிவந்தகண்களையும் வல்லமையும் உடைய ரிஷபத்தை வாகனமாகக்கொண்ட பரமசிவன்-மேன்மைபொருந்திய கிருபையாகிய பொருளை அனுக்கிரகம்பண்ணினதினாலே தமக்கிறைவராகிய ஆண்டவரது திருப்பாதநிழலில் வாசஞ்செய்யுந்தலைமையாகிய நிலைமையை அடைந்தார்.—(எ-று) (௰௩)

அரவமணிந்தவரையாரையர்ச்சித்தவர்தங்கழனிழற்கீழ் .....*
விரவுபுகலூர்முருகனார்மெய்மைத்தொண்டின்றிறம்போற்றிக்
காவிலவர்பால்வருவாரைக்கருத்திலுருத்திரங்கொண்டு.... *
பாவுமன்பர்பசுபதியார்பணித்தபெருமைபரவுற்றேன் ....*

(இதன்பொருள்.)

பாம்பினைத்தரித்த இடையை உடைய கைலாசபதியை ...சனைசெய்து அவரது திருப்பாதநிழலின்கீழ் அடைந் ...கின்ற திருப்புகலூர் முருகநாயனார்செய்த மெய்ம... திருத்தொண்டின் பெருமையைப்புகழ்ந்து மனதி... கமில்லாதவரிடத்தில் வந்தருள்செய்கின்ற சுவாமிக... னோடு உருத்திரத்தைக்கொண்டு ஸ்தோத்திரஞ்செய் ...பசுபதிநாயனார்-பரவுகின்ற பத்தியின் பெருமையைக்குறித்துச் சொல்லத்தொடங்கினேன்.—(எ-று) உருத்திரமாவது-யசுர்வேதத்தில்நாலாங்காண்டத்தில் பரமசிவனை ஸ்தோத்திரம்செய்யும் ஒருபாகம்.

முருகநாயனார்புராணம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௱௰௫.

——

உருத்திரபசுபதிநாயனார்புராணம்.

நிலத்திலோங்கியநிவத்தெழும்பெருநதிநீத்த. .... *
மலர்ந்தடம்பணைவயல்புகுபொன்னிநன்னாட்டுக் .... *
குலத்திலோங்கியகுறைவிலாநிறைகுடிதழைத்த .... *
தலத்தின்மேம்படுநலத்தது பெருந்திருத்தலையூர் .... *

(இதன்பொருள்)

பூமியில் உயர்வுபெற்று அதிகமாகவருகின்ற காவேரி நதியின் வெள்ளம் புஷ்பங்களையுடைய தடாகங்களிலும் வயல்களிலும் புகுந்து செல்கின்றநன்மையுற்ற சோளதேசத்தில் குலத்திற்சிறந்து யாதொன்றிலும் குறைவில்லாமல் நிறைவடைந்த பிராமணர்களுடைய குடிகள்நெருங்கி எல்லாவிடங்களிலும்மேம்பட்டதலத்தை உடையது பெருமைபொருந்திய திருத்தலையூரென்னுங்கிராமமாம்.—(எ-று) (க)

வானளிப்பனமறையவர்வேள்வியின்வளர்தீ ....*
தேனளிப்பனநறுமலர்ச்செறிசெழுஞ்சோலை ....*
யானளிப்பனவஞ்சுகந்தாடுவார்க்கவ்வூர் ....*
தானளிப்பனதருமமும்கேள்வியுஞ்சால்பும் .. ..*

(இதன்பொருள்)

பிராமணர்கள்செய்யும் யாகத்தில் ஆகுதியால்வளர்கின்ற அக்கினியானது மழைபெய்யும்படிசெய்கின்றது- வாசனைபொருந்திய புஷ்பங்கள் நெருங்கிய செழிப்பாகிய சோலையானது தேனைப்பொழிகின்றன- பசுவானது பஞ்சகௌவியத்தை விரும்பி யாடுகின்றசுவாமிக்கு அதைக்கொடுக்கின்றது- அவ்வூரிலுள்ளவர்கள் தர்மத்தையுங் கொடையும் பெருமையுங் கொடுக்கின்றார்கள் —(எ-று) தருமம்-தானஞ்செய்தல் முதலானவைகளாம். கொடை-வித்துவான்கள் முதலியவர்களுக்குக்கொடுத்தலாம். பெருமையைக்கொடுத்தலாவது - யாவர்க்குந் தெரிவிக்கின்றாரென்பது. (உ)

அங்கண்மாநகர்தனிலருமறைவாய்மைத் ....*
தங்கவேதியர்குலத்தினிற்றோன்றியதூயோர் .. ..*
செங்கண்மால்விடையார்செழும்பொன்மலைவல்லி ......*
பங்கர்தாளடிமைத்திறம்புரிபசுபதியார் ....*

(இதன்பொருள்)

அழகிய இடத்தையுடைய அந்தநகரத்தில் அரிதாகிய வேதங்களை ஓதுதலால் சிறந்தபிராமணர்குலத்தில் அவதரித்தபரிசுத்தரானவர் சிவந்தகண்களையுடைய விஷ்ணுவாகிய ரிஷபத்தைவாகனமாகக்கொண்டவரும் செழுமைபொருந்திய பொன்னையுடைய இமாசலராசன் புத்திரியாராகியபார்வதியாரைப் பாகத்தில் உடையவருமாகிய பரமசிவனுக்கு அடிமைத்திறத்தைச் செய்கின்ற பசுபதியாரென்று ஒருவரிருந்தார்.—(எ-று) (௩)

ஆய்வந்தணருமறையுருத்திரங்கொண்டு ....*
மாயனாரறியாமலர்ச்சேவடிவழுத்துந் ....*
தூயவன்பொடுதொடர்பினிலிடையறாச்சுருதி ....*
நேயநெஞ்சினராகியதொழிறலைநின்றார் .. ..*

(இதன்பொருள்)

அப்படிப்பட்ட உருத்திரபசுபதிநாயனார் அரிதாகியவேதசம்பந்தமாகிய உருத்திரமந்திரத்தைக்கொண்டு விஷ்ணுவால் அறியப்படாத தாமரைமலர்போன்ற திருவடிகளை ஸ்துதிக்கின்ற பரிசுத்தமாகிய அன்புடனே தொடர்ச்சியாக இடைவிடாமல் ஓதி இளகினமனதினையுடையவராகிய தொழிலில் சிறந்தவரானார்.—(எ-று) (௪)

கரையில்கம்பலைபுள்ளொலிகறங்கிடமருங்கு ....*
பிரசமென்சுரும்பறைந்திடக்கருவரால்பிறழு .. .. *
திரைநெடுங்கயநீரிடைநெருப்பெழுந்தனைய ....*
விரைநெகிழ்ந்தசெங்கமலமென்பொய்கையின்மேவி....*

(இதன்பொருள்.)

கரையில் பட்சிகள் முழக்கத்தை உண்டாக்கப் பக்கத்தில் தேனையுண்ணவந்த வண்டுகள்முழங்கப் பெரியவரால்மீன் துள்ளுகின்ற அலைகளையுடைய நீண்டகுளத்திலுள்ள ஜலத்தில் நெருப்பின்சுவாலையெழும்பினதுபோன்ற வாசனைவிரிந்த செந்தாமரைமலர்களையுடைய தடாகத்துக்குப் போய்.—(எ-று)

தெள்ளுதண்புனல்கழுத்தளவாயிடைச்செறிய... .. ..*
வுள்ளுறப்புக்குநின்றுகையுச்சிமேற்குவித்துந் ....*
தள்ளுவெண்டிரைக்கங்கைநீர்ததும்பியசடையார்.......*
கொள்ளுமன்பினிலுருத்திரங்குறிப்பொடுபயின்றார்......*

(இதன்பொருள்)

தெளிவும் குளிர்ச்சியும்பொருந்திய நீரினுள்ளேபோய்க்கழுத்தளவாகநின்று இரண்டுகைகளையும் உச்சியின்மேல்வைத்துக்குவித்துக்கொண்டுபாய்கின்ற வெண்மைபொருந்திய அலைகளையுடைய கங்காதீர்த்தமானது ததும்புகின்ற சடையையுடைய பரமசிவன் விரும்பத்தக்க அன்போடுஉருத்திரமந்திரத்தை மனதை விஷயங்களில் அடக்கியகுறிப்புடனேஓதினார்.(எ-று)

அருமறைப்பயனாகியவுருத்திரமதனை .... *
வருமுறைப்பெரும்பகலுமெல்லியும்வழுவாமே .... *
திருமலர்ப்பொகுட்டிருந்தவனனையவர்சிலநா .. .. *
ளொருமையுய்த்திடவுமையிடமகிழ்ந்தவருவந்தார் ...... *

(இதன்பொருள்.)

அரிதாகிய வேதத்தின் சாரமாயிருக்கிற உருத்திரமந்திரத்தைக்கிரமமாக பகற்காலத்திலும் இராக்காலத்திலும் தவறாமல் தாமரைப்பூவின் கர்ணிகையில் வாசஞ்செய்த நான்முகனையொத்த உருத்திரபசுபதியார்-சிலநாள்வரைக்கும் மனது வேறொன்றிலுஞ் செல்லாமல் ஒன்றுபட்டு ஸ்தோத்திரம்பண்ண-பார்வதியை இடப்பாகத்தில் உடையவர் சந்தோஷித்தை அடைந்தார்.—(எ-று) (எ)

காதலன்பருமருந்தவப்பெருமையுங்கலந்த .. .. *
வேதமந்திரநியதியில்மிகுதியும்விரும்பி .... *
யாதிநாயகரமர்ந்தருள்செய்யமற்றவர்தாந் .. .. *
தீதிலாநிலைச்சிவபுரியெல்லையிற்சென்றார் .. .. *

(இதன்பொருள்.)

ஆசையுள்ள அடியவரும்-அரிதாகிய தவத்தினது பெருமையும்-கூடச்சேர்ந்த வேதமந்திரத்தினியதியினால் மிகவும் விருப்பங்கொண்டு முதற்கடவுளாகிய பரமசிவன் கிருபைசெய்ய-அவர் குற்றமற்ற நிலைமையை உடைய சிவலோகத்தின் இடத்தைச்சேர்ந்தார்.—(எ-று) அருந்தவப்பெருமையாவது-உருத்திரஞ்செவிக்கும்போது நீரில்நின்றுகொண்டு தம்முடலத்திற்கு உண்டாகுந் துன்பத்தைப் பொறுத்தலாம். (அ)

நீடுமன்பினிலுருத்திரமோதியநிலையா .. .. *
லாடுசேவடியருகுறவணைந்தனரவர்க்குப் .... *

பாடுபெற்றசீ ருருத்திரபசுபதியாரான் .. ..*
கூடுநாமமுநிகழ்ந்தது குவலயம்போற்ற .. .. *

(இதன்பொருள்.)

மிகுந்த அன்போடு உருத்திரத்தை ஓதியதன்மையினால் நர்த்தனஞ்செய்தருளுகின்ற சுவாமியின் திருவடிகளின் அருகில் அடைந்தார்-ஆதலால்அந்த அடியார்க்குப்பெருமைபொருந்திய சிறப்பை உடைய பசுபதியாரொன்கிற நாமமும் உலகத்தார் புகழும்படியாக உண்டாயிற்று.—(எ-று) (கூ)

அயில்கொண்முக்குடுமிப்படையார்மருங்கருளாற் .... .*
பயிலுருத்திரபசுபதியார்திறம்பரசி ....*
ஒயிலுடைத்தில்லை யெல்லையிலுளைப்போவாராஞ் .. ..*
செயலுடைப்புறத்திருத்தொண்டர்திறத்தினைமொழிவாம் .. *

(இதன்பொருள்.)

கூர்மையைப்பெற்ற மூன்றுகவராயிருக்கும் சூலாயுதத்தை உடையவர் பால் அன்புசெய்கின்ற உருத்திரபசுபதிநாயனருடைய அடிமைத்திறத்தை ஸ்தோத்திரம்பண்ணி மதில்சூழ்ந்த தில்லைமாநகரத்தி னெல்லையில் நாளைப்போவார்என்கிற புறத்திலிருந்து வணங்குகின்ற அடியவருடைய பத்தியின் முதிர்ச்சியைச்சொல்வாம்.—(எ-று), (ம)

உருத்திரபசுபதிநாயனார்புராணம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௲௪௰௫.

திருநாளைப்போவார் நாயனார்புராணம்.

பகர்ந்துலகுசீர்போற்றும்பழையவளம்பதியாகும் .... .. *
திகழ்ந்தபுனற்கொள்ளிடம்பொன்செழுமணிகடிணாக்கரத்தா
முகந்துதரவிருமருங்குமுளரிமலர்க்கையேற்கும் . ... [ன்
அகன்பண்ணைநீர்நன்னாட்டுமேற்காநாட்டாதனூர் .. .. *

(இதன்பொருள்)

உலகத்தார் விரித்துச்சொல்கின்ற சிறப்பினையுடையதாய்ப் புராதனமாகிய நகரமாயிருக்கின்றது-பிரகாசிக்கின்றநீலாயுடை

ய கொள்ளிடநதியானது பொன்னையும் காந்தியுள்ளமணிகளையும் அலையாகிய கையினால்வாரிக்கொடுக்க-இருபுறத்திலும் தாமரை தனதுபுஷ்பமாகிய கையினால் ஏற்றுக்கொள்கின்றவிசாலமாகிய வயல்களையுடைய சோழநாட்டில் மேற்காநாட்டில் ஆச் ஊரானது.—(எ-று) (க)

நீற்றலர்பேரொளிநெருங்குமப்பதியினிறைகரும்பின் .. *
சாற்றலைவன்குலைவயலிற்றகட்டுவராலெழப்பகட்டே .. .. *
ராற்றலவன்கொழுக்கிழித்தசால்வழிபோயசைந்தேறிச் .. *
சேற்றலவன்கருவுயிர்க்கமுருகுயிர்க்குஞ்செழுங்கமலம் ... *

(இதன்பொருள்.)

திருநீறுதரித்தலால்-விரிந்த பெரிய ஒளியானது நெருங்கிய அந்நகரத்தில் முற்றியகரும்பின்சாற்றினால் அலைகின்ற வலிய நெற்குலைகளையுடைய வயலில்-தகட்டுவடிவையுடையவரால் மீனானது எழும்ப எருமைக்கடாக்கள்பூட்டிய ஏர்ப்பற்ற கலப்பையினுனியிலிருக்கும் கொழுவினாற்பிளக்கப்பட்ட சால்வழியாகப்போய் அசைந்து ஏறிச்சேற்றில்நண்டுகள் கருவையீன-செழுமைபொருந்திய தாமரைப்பூ தேனைச் சொரியும்.—(எ-று) (உ)

நனைமருவுஞ்சினைபொதுளிநறுவிரைசூழ்செறிதளிரிற் ....*
றினகரன்மண்டலம்வருடுஞ்செழுந்தருவின்குலம்பெருகிக் *
கனமருவியலைந்தசையக்களிவண்டுபுடைசூழப் ....*
புனன்மழையோமதுமழையோபொழிவொழியாபூஞ்சோலை

(இதன்பொருள்)

அரும்புகளையுடைய கிளைகளில் நெருங்கி நல்ல வாசனையுற்று மேல்பாகத்தில் இருக்கும் தளிர்களால் சூரியனுடைய வட்டமாகியவடிவத்தைத்தடவுகின்ற செழிச்சியாகியவிருட்சக்கூட்டங்கள் நிறைந்து மேற்புறத்தில் மேகக்கூட்டங்கள் அலைந்து சஞ்சரித்தலாலும் வண்டுகள்சுற்றிமொய்த்தலாலும், பூஞ்சோலைகள் பொழிதல் ஒழிவில்லை அப்படிப்பொழியப் படுவது நீர்மாரியோதேன்மாரியோ அறியோம்.—(எ-று)புனன்மழையோ மதுமழையோ வென்றது- தூரத்திலிருந்து அச்சோலையைப்பார்த்தோர்சொல்லியதாம் - ஒகாரங்களைநீக்கி- ஐகாரவுருபை விரித்துரைசொல்வதுமுண்டு. (ங)

பாளைவிரிமணங்கமழும்பைங்காய்வன்குலைத்தெங்கின் ....*
றாளதிரமிசைமுட்டித்தடங்கிடங்கினெழப்பாய்ந்த ....*

வாளைபுதையச்சொரிந்தபழமிதப்பவண்பலவி .... ✱
னீள்முதிர்கனிகிழிந்தேனீத்தத்திலெழுந்துகளும் .... ✱

(இதன்பொருள்.)

பாளைகள்விரிந்து மணக்கின்ற பசுமையாகியகாய்கள்நிறைந்த குலைகளையுடைய தென்னமரங்களின் அடிப்புறமானது அதிரும்படி முட்டி-அகலமாகிய குளங்களிலிருந்து எழும்பிப்பாய்ந்த வாளைமீனானது புதைந்துபோகும்படி அத்தென்னமரங்கள் சொரிந்த நெற்றுக்கள்மிதக்கப்பின்பு பலாமரத்தினது நீண்டு முதிர்ந்த பழங்கள் வெடித்துச்சொரிந்த தேன்பிரவாகத்திலுல் மேலே யெழும்பிக் குதித்து விளையாடும்.— (எ-று) (௩)

வயல்வளமுஞ்செயல்படுபைந்தடலைவயிடைவருவளமும் .. ✱
வியலிடமெங்கணுநிறையமிக்கபெருந்திருவினவாம் .... ✱
புயலடையுமாடங்கள்பொலிவெய்தமலிவுடைத்தா ..... ✱
யயலிடைவேறடிநெருங்கக்குடிநெருங்கியுளதவ்வூர் .... ✱

(இதன்பொருள்)

வயல்களால் உண்டானவளங்களும் வைத்துவளர்க்கப்பட்ட பசுமைபொருந்திய சோலைகளால் உண்டாகியவளங்களும் அகன்ற இடமெங்குந்நிறைய அதனால்மிகுந்தபாக்கியத்தையுடைய மேகங்கள்தவழும்மேல்வீடுகள் சிறப்படையச்சந்தோஷமுடையதாய்ப்பக்கத்தில் அடிக்கொருகுடியாக நெருங்கியுள்ளது அந்தவூர்.—(எ-று) அடிநெருங்கக்குடிநெருங்குதலாவது- நடுவில் நடுவில் இடம்விடாமல் நெருங்கக்கட்டியிருப்பது.

மற்றவ்வூர்ப்புறம்பணையின்வயன்மருங்குபெருங்குலையிற் .. ✱
சுற்றம்விரும்பியகிழமைத்தொழிலுழவர்கிளைதுவன்றிப் .. ✱
பற்றியபைங்கொடிச்சுரைமேற்படர்ந்தபழங்கூரையுடைப். ✱
புற்குரம்பைச்சிற்றில்பலநிறைந்துளதோர்புலைப்பாடி .... ✱

(இதன்பொருள்.)

மேற்சொல்லிய வளங்களையுடைய அந்தவூரின் வயல்களின்புறத்தில் ஒப்பற்றகுலையாகச் சுற்றத்தாரால் விரும்பப்பட்டுத்தமக்கு உரிமைத்தொழிலாகிய உழுதுநாற்று நடுதல்முதலானவற்றை உடைய உழவர்களதுகூட்டம்நெருங்கிப் பசுமைபொருந்திய சுரைக்கொடியானது மேலே படர்ந்திருக்கின்ற விழலால்மேயப்பட்ட பழங்கூரையையுடைய சிறுகுடிசைகள் அநேகம்நிறைந்திருக்கின்றது ஒரு தீண்டாதார்சேரி.—(எ-று)

கூருகிர்மெல்லடியளகின்குறும்பார்ப்புக்குழூச்சுழலும் ...*
வார்பயின்முன்றினின்றவள்ளுகிர்நாய்த்துள்ளுபறழ் ..*
காரிரும்பின்சரிசெறிகைக்கருஞ்சிறார்கவர்ந்தோட ....*
வார்சிறுமென்குரைப்படக்குமரைக்கசைத்தவிருப்புமணி.*

(இதன்பொருள்)

கூர்மையாய் மென்மைபொருந்திய அடியையுடையகோழிப் பேடுகளின்சிறிய குஞ்சுகளின் கூட்டங்கள் சுழன்றுகொண்டி ருக்கும்வார்தொங்குகின்ற முற்றத்தில்நிற்கும் கூரிய நகத்தை யுடையநாய்களின் துள்ளுகுட்டிகள் கரியஇரும்பினாற் செய்ய ப்பட்டகாப்பினைக்கையிலதரித்த தீண்டாதார்பிள்ளைகள் பிடி த்துக்கொண்டோட- அவர்களிடுப்பிற்கட்டிய இருப்புமணியி னோசையானது அந்தச்சிறுநாய்களின் குரைக்கின்ற ஓசையை அடக்கும்.—(எ-று) (எ)

வன்சிறுதோன்மிசையுழத்திமகவுறக்குநிழன்மருதந் ....*
தன்சினைமென்பெடையொடுங்குந் தடங்குழிசிப் புதைநீழன்
மென்சினையவஞ்சிகளும்விசிப்பறைதூங்கினமாவும் ... [கும்
புன்றலைநாய்ப்புனிற்றுமுழைப்புடைத்தெங்கு முடைத்தெங்

(இதன்பொருள்.)

உறுதியான சிறியதோலின்மேல் உழத்தியர்கள் பிள்ளைகளைத் தூங்கும்படி செய்தற்கிடமாகிய நிழலையுடைய மருதமரமும்- குலாகிய மெல்லியபேடைகள் ஒடுங்குகின்ற- அகலமாகியபா னையைப்புதைத்திருக்கும் நிழலையுடைய கிளைகள்பொருந்திய வஞ்சிமரங்களும், வாரினாற்கட்டப்பட்ட பறையானது தொ ங்குகின்ற கூடமாகிய மாமரங்களும், சிறியதலையை உடைய நாய்க்குட்டிகளுக்கு இருப்பிடமாகிய பள்ளத்தைப் பக்கத்தி ல் உடைய தென்னமரங்களும், எங்குமுடைத்தாயிருக்கின்ற து.—(எ-று) உழத்தியர்-தீண்டாதாருடையபெண்கள். (அ)

செறிவலித்திண்கடைஞர்வினைச்செயல்புரிவைகறையாமக் ..*
குறியளக்கவழைக்குஞ்செங்குடுமிவாரணச்சேக்கை ....*
வெறிமலர்த்திண்சினைக்காஞ்சிவிரிநீழன்மருங்கெல்லா ....*
நெறிகுழற்புன்புலைமகளிர்நெற்குறுபாட்டொலிபரக்கும் .*

(இதன்பொருள்.)

மிகுந்தபலத்தையுடைய கடையர்கள் தங்களுடைய வேலையை ச்செய்வதற்குப் புறப்பட விடியற்காலமாயிற்றென்று தெரி விக்கக்கூவுகின்ற சிவந்த உச்சிக்கொண்டையையுடைய கோழி,

களுக்குப் படுக்கையிடமாகிய வாசனைபொருந்திய மலர்களையு
டைய கிளைகளுள்ள காஞ்சிமரத்தினது அகன்ற நிழலின் இட
மெல்லாம் நெறித்தெழுந்த தலைமயிரினையுடைய பெண்கள்
நெல்லுக்குத்தும்போது பாடுகின்ற பாட்டுமுழங்கும்.—
(எ-று) வாரணம்-கோழி. (௯)

புள்ளுந்தண்புனற்கலிக்கும்பொய்கையுடைப் புடையெங்குந்
தள்ளுந்தாளடையசையத்தளையவிழ்பூங்குவளைமது. .... *
விள்ளும்பைங்குழற்கதிர்நெல்மிலைச்சியபுன்புலச்சியர்கள். .*
கள்ளுண்டுகளிதூங்கக்கறங்குபறையுங்கலிக்கும் .... *

(இதன்பொருள்)

பட்சிகள் முழங்குகின்ற நீரையுடைய குளங்களின் இடமெல்
லாம் அப்பறவைகளின்கால்கள்படுதலால் இதழ்களின் கட்டுவி
ட்ட நீலோற்பலமலர்களிலிருந்து தேன்சிந்தும்கரியகூந்தலி
ல் நெற்கதிரை அலங்காரமாகத்தரித்த சிறிய உழத்தியர்கள்-
கள்ளைக்குடித்து மயக்கங்கொள்ளப் பறையென்னும்வாத்திய
மும் முழங்கும்.—(எ-று) (௰)

இப்படித்தாகியகடைஞரிருப்பின்வரைப்பினில்வாழ்வார் . *
மெய்ப்பரிவுசிவன்கழற்கேவிளைத்தவுணர்வொடும்வந்தா .. *
ர்ப்பதியிலூர்ப்புலைமையான்றதொழிற்றாயத்தா .... *
ரொப்பிலவர்நந்தனாரெனவொருவருளரானார் .... *

(இதன்பொருள்)

இத்தன்மையையுடைய தீண்டார்குலத்தில் அவதரித்து அவர்
களுடைய இருப்பிடத்தில் வாழ்கின்றவர்-பரமசிவனுடைய பா
தத்துக்கே உண்மையான அன்பைச்செலுத்துகின்ற அறிவை
யுடையவர்- அவ்வூரின் வெட்டிமைத்தனமாகிய காணியாட்சி
யையுடையவர் ஒருவரும் ஒப்பில்லாதவர் இப்படிப்பட்ட நந்
தனாரென்று ஒருவரிருந்தார்:—(எ-று) (௰௧)

பிறந்துணர்வுதொடங்கியபின்பிறைக்கண்ணிப்பெருந்தகைபா
சிறந்தபெருங்காதலினாற்செம்மைபுரிசிந்தையராய் .... [த்
மறந்துமயனினைவின்றிவருபிறப்பின்வழிவந்த .... *
வறம்புரிகொள்கையராயேயடித்தொண்டினெறிநின்றார் .. *

(இதன்பொருள்)

பிறந்து விவேகம்வந்தபின்பு சந்திரனைத்தரித்த பரமசிவனிட
த்திலவைத்த மிகுந்த அன்பினால் நல்ல வழியில் நடக்கு மன

தினையுடையவராய் மறந்தும் வேறுநினைப்பு இல்லாமல் சுவாமியையே தியானஞ்செய்துகொண்டு தமது குலாசாரத்துக்கு ஏற்றபடிசெய்யவேண்டிய தர்மத்தைச்செய்யுந் தன்மையை உடையவராய் ஆண்டவருடைய பாதத்துக்கு விரும்பும் தொண்டுசெய்வதில் சிறந்தவராஞர்.—(எ-று) (௰௨)

ஊரில்விடும்பறைத்துடவையுணவுரிமையாக்கொண்டு .... *
சார்பில்வருந்தொழில்செய்வார்தலைநின்றார்தொண்டினாற் .. *
கூரிலையமுச்சூலப்படையண்ணல்கோயிறொறும் .... .. *
பேரிகையேமுதலாயமுகக்கருவிபிறவினுக்கும் .. .. *

(இதன்பொருள்.)

ஊரில் வெட்டிமைக்காக விட்டிருக்கும் மானியமாகிய நிலத்தில் விளையுந் தானியத்தைத் தமக்கு உரிய உணவாகப்பெற்றுக்கொண்டு அவர்சார்பிற்குச்செய்யவேண்டியவேலையைநடத்தித் தொண்டிற்சிறந்தவராய்க்கூர்மைபொருந்திய மூன்றுகவராயிருக்கும் சூலாயுதத்தைத்தாங்கிய பரமசிவன் வீற்றிருக்குங் கோயில்களிலெல்லாம்பேரிவாத்தியமுதலாகிய * ஒருமுகக்கருவிக்கும்- மற்றைமத்தளமுதலாகியவிரண்டுமுகக்கருவிகளுக்கும்.—(எ-று) (௰௩)

போர்வைத்தோல்விசிவாரென்றினையனவும்புகலுமிசை .... *
நேர்வைத்தவீணைக்குமியாழுக்குநிலைவகையிற் .... *
சேர்வுற்றதந்திரியுந்தேவர்பிரானர்ச்சனைகட் .... *
கார்வத்தினுடன்கோரோசனையுமிவையளித்துள்ளார் .... *

(இதன்பொருள்)

போர்வையாயிருக்கிறதோலும்- கட்டுகிறதற் காகவேண்டிய வாருமாகிய இப்படிப்பட்டவைகளும்- இசையைக்காட்டுகின்ற நல்லவீணைக்கும் யாழ்வாத்தியதுக்கும்.அதற்கு ஏற்றவகையாகிய வேண்டிய நரம்புகளும்-தேவர்களுக்கு நாதராகிய பரமசிவனது அர்ச்சனைக்குக் கோரோசனையும் - ஆசையோடு கொடுக்கின்றவராஞர்.—(எ-று) (௰௪)

இவ்வகையர்நிறைந்தொழிலினியன்றவெலாமெவ்விடத்துஞ் .. *
செய்வனவுக்கோயில்களிற்றிருவாசற்புறநின்று .... *
மெய்விரவுபேரன்புமிகுதியினாலாடுதலும் .... *
மவ்வியல்பிற்பாடுதலுமாய்நிகழ்வாரந்நாளில் .... *

* ஒருமுகக்கருவி- ஒருபக்கத்தில் முழக்கப்படுவது.

(இதன்பொருள்)

இந்தப்பிரகாரம் தம்முடைய தொழிலால் நடந்தேறிய எல்லாவற்றையும் எல்லாக்கோயில்களுக்கும் கொடுத்தலும்- கோயில்களின் திருவாசலின்புறத்தில நின்றுகொண்டு உண்மையாக அடைந்த உயர்ந்த அன்பின்மிகுதியால் ஆனந்தக்கூத்தாடுவதும்-அத்தன்மையாகவே சுவாமியைப்பாடுதலுமாகிய குணங்களைப்பொருந்தி வாழ்ந்துகொண்டிருந்தார் அந்தநாளில் ஒருநாள்.—(எ-று) (௰௫)

திருப்புன்கூர்ச்சிவலோகன்சேவடிகண்மிகநினைந்து......*
விருப்பினொடுந்தம்பணிகள்வேண்டுவனசெய்வதற்கே....*
யருத்தியினாலொருப்பட்டங்காதனூர்தனினின்றும். ......*
வருத்தமுறுங்காதலினால்வந்தவ்வூர்மருங்கணைந்தார்......*

(இதன்பொருள்)

திருப்புன்கூரில் எழுந்தருளியிருக்கும் கைலாசபதியின் பாதங்களை மிகவும்நினைத்து அன்புடனே தாம் செய்யவேண்டிய திருப்பணிவிடைகளைச் செய்வதற்காக ஆசையோடு பிடிப்பாய் அந்த ஆதனூரிலிருந்து எப்போதுபோவேனென்னும் எண்ணம்வருத்த அந்ததிருப்புன்கூருக்குவந்துசேர்ந்தார்(எ-று)

சீரேறுமிசைபாடித்திருத்தொண்டர்திருவாயி.... ......*
னேரேகும்பிடவேண்டுமெனநினைந்தார்க்கதுநேர்வார்..*
காரேறுமெயிற்புன்கூர்க்கண்ணுதலார்திருமுன்பு ....*
பேரேற்றைவிலங்கவருள்புரிந்தருளிப்புலப்படுத்தார்....*

(இதன்பொருள்)

திருநாளைப்போவார்-சுவாமியின் சிறப்புற்ற கீர்த்தியைப்பாடித் திருவாசலில் நின்றுகொண்டு சுவாமியைநேராகவே தரிசித்துக் கும்பிடவேண்டுமென்று நினைத்தார்- அவர்க்கு அப்படியே அருள்செய்யவிரும்பி- மேகங்கள் தவழ்கின்ற மதிலையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருக்கும் சுவாமி தமது சந்நிதிக்குமுன்னேயிருக்கின்ற வலிமைபொருந்திய நந்திகேசுரனை விலகும்படிசெய்து காட்சிகொடுத்தருளினார்.—(எ-று)

சிவலோகமுடையவர்தந்திருவாயின்முன்னின்று.... .....*
பவலோகங்கடப்பவர்தம்பணிவிட்டுப்பணிந்தெழுந்து ...*
சுவலோடுவாரலையப்போவார்பின்பொருசூழ.... ... .*
லவலோடுமடுத்ததுகண்டாதரித்துக்குளந்தொட்டார்....*

(இதன்பொருள்)

சிவலோகத்தையுடைய பரமசிவனது ஆலயத்தின் திருவாசல் முன்னே நின்ற பாவம்நிறைந்த இந்தலோகத்தினின்றும் நீங்கப்போகின்ற திருநாளைப்போவார்-தம்முடைய பணிவிடையைவிட்டு வணங்கியெழுந்திருந்து முதுகின்புறத்தில் வாரானது அலையும்படி போய்க்கொண்டிருப்பார்-பின்பு ஓரிடத்தில் ஒருபள்ளமிருப்பதைக்கண்டு ஆசையோடு குளமாகவெட்டினார்.—(எ-று) (௰அ)

வடங்கொண்டபொன்னிதழிமணிமுடியார்திருவருளாற் .. .*
றடங்கொண்டகுளத்தளவுசமைத்ததற்பின்றம்பெருமா ....*
னிடங்கொண்டகோயில்புறம்வலங்கொண்டுபணிந்தெழுந்து*
நடங்கொண்டுவிடைகொண்டுதம்பதியினண்ணினார் .... ..*

(இதன்பொருள்.)

பொன்போலுந்திறமுள்ளகொன்றைப்புஷ்பங்களாற்கட்டப்பட்ட மாலையைத்தரித்த அழகியமுடியை உடைய பரமசிவன் அனுக்கிரகத்தினால் தாம்கண்டபள்ளத்தை விசாலமாகிய குளத்தினளவாகவெட்டி யேற்படுத்தினபின்பு தமக்குப் பிராணாகிய சுவாமியினது இடமகன்ற கோயிலைப்புறத்தில் வலங்கொண்டு வணங்கி யெழுந்து ஆனந்தத்தால் கூத்தினைச்செய்து உத்தரவுபெற்றுக்கொண்டு தம்முடைய ஊருக்குவந்தார். (எ-று) (௰௯)

இத்தன்மையீசர்மகிழ்பதிபலவுஞ்சென்றிறைஞ்சி .. .. ..*
மெய்த்ததிருத்தொண்டுசெய்துவிரவுவார்மிக்கெழுந்த ....*
சித்தமொடுந்திருத்தில்லைத்திருமன்றுள்சென்றிறைஞ்சி ....*
யுய்த்தபெருங்காதலுணர்வொழியாதுவந்துதிப்ப .... ..*

(இதன்பொருள்.)

இவ்வாறாகப்பரமசிவன் களிப்புற்றிருக்கும் பலஸ்தலங்களுக்கும்போய் வணங்கி-உண்மையான திருப்பணிவிடைகளை அங்கங்குசெய்து இனிச்சுவாமியை அடையப்போகிற திருநாளைப்போவார்-விரைவாயெழுந்த மனதோடு சிதம்பரத்தில் நடனசபைக்குப்போய் வணங்கும்படி தூண்டுகின்ற பெருமை பொருந்திய ஆசையோடுகூடிய விவேகமானது அடிக்கடி தோன்றிக்கொண்டிருப்ப.—(எ-று) (௨௰)

அன்றிரவுகண்டுயிலார்புலர்ந்ததற்பினங்கெய்த ....*
வொன்றியவோர்தருதன்மையுறுகுலத்தோடிசைவில்லை .. ..*

யென்றிரவுமெம்பெருமானைவலைப்போக்கொழிவார் •*
நன்றுமெழுஞ்சாதன்மிகநாளைப்போவேனென்பார் • ....*

(இதன்பொருள்.)

அன்று இராத்திரியில் நித்திரைகொள்ளாதவராய்ப் பொழுது விடிந்தபின்பு சிதம்பரத்துக்குப் போனால் கோயிலுக்குப் போகும்படியான யோக்கியதை நம்முடையசாதிக்குப்பொருந்த இல்லையேயென்று விதனமுற்று இப்படிப்போகக்கூடாமையும்-எமது ஆண்டவருடைய திருவுள்ளத்தாலேயே என்று போகாமல்நின்றார்-பின்பு நன்றாயுண்டாகிய ஆசையானது தூண்ட - நாளைக்குப்போவேனென்று சொன்னு.—(எ-று)

நாளைப்போவேனென்றுநாள்கள்செலத்தரியாது ....*
பூளைப்பூவாம்பிறவிப்பிணிப்பொழியப்போவாராய்ப் ....*
பாளைப்பூங்கமுகுடுத்தப்பழம்பதியினின்றுபோய் ....*
வாளைப்புரந்தெழும்பழனஞ்சூழ்தில்லைமருங்கணைந்தார் ..*

(இதன்பொருள்)

நாளைக்குப்போவேனென்றுசொல்லி அனேகநாள் ஒழியச்சபாநாதனைத் தரிசனம்பண்ணவேண்டுமென்னும் ஆசையை அடக்கக் கூடாதவராய்ப்பூளைப்பூவையொத்தநிலையாமையை உடைய பிறப்புகளால் உண்டாகிய சம்பந்தம் நீங்கும்பொருட்டுப் போகின்றவராய்ப் பாளையை உடைய பொலிவாகிய கமுகமரங்கள் சூழ்ந்திருக்கும் பழமையுற்ற தம்முடைய ஊரில் நின்றும்புறப்பட்டு ஆண் வாளைமீனானது எழும்பிவிளையாடும்வயல்களையுடைய சிதம்பரத்தின் எல்லையை அடைந்தார்.(எ-று)

செல்கின்றபோழ்தந்தத்திருவெல்லைபணிந்தெழுந்து. .....*
பல்குஞ்செந்தீவளர்த்தபயில்வெள்வியெழும்புகையு. .... *
மல்குபெருங்கிடையோதுமடங்கணெருங்கினவுங்கண் ....*
டல்குந்தங்குலநினைந்தேயஞ்சியணைந்திலர்நின்றார்.. ......*

(இதன்பொருள்)

திருநாளைப்போவார்- சிதம்பரத்துக்குப்போனபொழுது அதன் எல்லையைக்கண்டு நமஸ்கரித்து எழுந்து விருத்தியாகச் சிவந்த அக்கினியையவளர்த்து ஆகுதிசெய்கின்ற யாகத்தால்உண்டாகிய புகையும்-மிகுந்த பிராமணப்பிள்ளைகளின்கூட்டம்வேதமோதுகின்ற அடிக்கடி நெருங்கியிருக்கு மடங்களையுங்கண்டு குறைவாகிய தம்முடைய குலத்தை நினைந்து பயந்து உள்ளேபோவதற்குப் பயந்துபோகாமல் நின்றுவிட்டார்.(எ-று)

நின்றவர்க்கெய்தரியபெருமையினைநினைப்பார்முன்.... *
சென்றெல்லையுங்கடந்தார்சூழெயிற்றிருவாயிலைப்புக்கார்.... *
குன்றனையமாளிகைகடொறுங்குலவும்வேதிகைக.......... *
ளொன்றியமூவாயிரமங்குளவென்பாராகுதிகள் .... *

(இதன்பொருள்)

எல்லையில் நின்றுகொண்டிருந்த திருநாளைப்போவார்-தாமுள்ளே அடையக்கூடாத அக்கோயிலின் பெருமையை நினைப்பாராகி முதலில் அந்த எல்லையயுங்கடந்து ஊரைச்சுற்றியிருக்கு மதிலின் திருவாசலை அடைந்தார்- அங்கே திண்ணைகள் பொருந்திய மலைகள்போலுயர்ந்த மூவாயிரம் வீடுகள்தோறும் ஓமங்கள் செய்யப்படுகின்றனவென்று சொல்லிக்கொள்வார்.—(எ-று) சுவாமியைப்பூசிக்கின்றதில்லைமூவாயிரவருடைய வீடுகளை மாளிகைகள் மூவாயிரமென்றார். வேதவிதிப்படியாகுதிசெய்யும் பிராமணர்களுடைய வீதியில் தாம்போகக்கூடாதபடியால் அதைநினைந்து தடைபட்டவர்-அங்கு-ஆகுதிகளுளவென்றார். (உச)

இப்பரிசாயிருக்கவெனக்கெய்தலரிதென்றஞ்சி .... *
யப்பதியின்மதிற்புறத்திராதபெருங்காத .... *
லொப்பரிதாய்வளர்ந்தோங்கவுள்ளுருகிக்கைதொழுதே .. *
செப்பரியதிருவெல்லைவலங்கொண்டுசெல்கின்றார் .. .... *

(இதன்பொருள்.)

இந்தப்பிராமணர்களுடைய வீடுகள் இத்தன்மையாயிருக்க-எனக்கு அவ்விடத்திற்குப்போகுத லரிதென்று பயந்து அந்த ஸ்தலத்தின் மதிலின்புறத்தில் அளவற்ற பேரன்பு சமானமில்லாமல் வளர-மனமுருகிக் கும்பிட்டுக்கொண்டு சொல்லுதற்கரிய எல்லையை வலஞ்செய்துகொண்டு போவார்.—(எ-று)

இவ்வண்ணமிரவுபகல்வலஞ்செய்தங்கெய்தரிய .... *
வவ்வண்ணநினைந்தழிந்தவடித்தொண்டரயர்வெய்தி .. .... *
மைவண்ணத்திருமிடற்றார்மன்றினடங்கும்பிடுவ .... *
தெவ்வண்ணமெனவெழுந்தேயேசறவினொடுந்துயில்வார்.. *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் இராப்பகலாக வலம்வந்துகொண்டு உள்ளே போகக்கூடாத தன்மையைநினைத்து வருத்தப்பட்ட உயர்வு பொருந்திய அடியவர் வேசாறி-கரியநிறமுள்ள கழுத்தினையுடைய சுவாமி-கனகசபையில் ஆடுகின்ற கூத்தை எப்படித்தரிசிக்கலாமென்று விசனத்தோடும் நித்திரைசெய்வார்.(எ-று)

இன்னறருமிழிபிறவியிது தடையென்றே துயில்வா .... ..*
ரந்நிலைமையம்பலத்துளாடுவாரறிந்தருளி .... *
மன்னுதிருத்தொண்டரவர்வருத்தமெலாந்தீர்ப்பதற்கு ....*
முன்னணைந்துகனவின்கண்முறுவலொடுமருள்செய்வார் .. *

(இதன்பொருள்.)

துன்பத்துக்கு ஏதுவாகிய இந்த இழிந்த பிறப்பானது தடையாயிருக்கின்றதென்று நித்திரைசெய்தார்- அப்போது அவருடையமனதில் தோன்றியதோற்றத்தை யம்பலத்தில் நடனஞ்செய்கின்ற சபாநாதர் அறிந்து அந்த அடியவருடையவருத்தமெல்லாந்தீர்க்கும்படி சொப்பனத்தில் அவர்க்குமுன்னேவந்து புன்சிரிப்புடனேயருள் செய்கின்றார்.—(எ-று) (௨௭)

இப்பிறவிபோய்நீங்கவெரியினிடைநீமூழ்கி ....*
முப்புரிநூன்மார்பருடன்முன்னணைவாயெனமொழிந்த .. *
வப்பரிசேதில்லைவாழந்தணர்க்குமெரியமைக்க ....*
மெய்ப்பொருளானாரருளியம்பலத்தேமேவினார்..... .. *

(இதன்பொருள்.)

மெய்ப்பொருளாயிருக்கின்ற கடவுள் இந்தப்பிறப்பு ஒழியும்படி நீ நெருப்பில்மூழ்கி யெழுந்து மூன்றுபுரியாகிய பூணூலந்தரித்த மார்பினையுடைய பிராமணர்களோடு நம்முடைய சபைக்குமுன்னேவந்து சேரென்று அருள்செய்து அந்தப்பிரகாரமே கனவில் தில்லையில்வாழும் பிராமணர்களுக்கும் நெருப்பினைவளர்க்க- கட்டளையிட்டு அம்பலத்தில்எழுந்தருளினார். (எ-று) (௨௮)

தம்பெருமான்பணிகேட்டதவமறையோரெல்லாரு .... ..*
மம்பலவர்திருவாயின்முன்பச்சமுடனீண்டி..... ....*
யெம்பெருமானருள்செய்தபணிசெய்வோமென்றேத்தி .. *
தம்பரிவுபெருகவருந்திருத்தொண்டர்பாற்சார்ந்தார் .... *

(இதன்பொருள்.)

நமது பிரானாகிய சபாநாதரிட்ட கட்டளையைக்கேட்ட தவம்பொருந்திய பிராமணர்களெல்லாரும் அம்பலவாணரது கோயிற்றிருவாசலின் முன்பு கூடிப்பயத்தோடு நம்முடைய ஆண்டவரருள்செய்த ஊழியத்தைச்செய்வோமென்று வணங்கி அன்புமேற்பட்டு இருக்கும் திருநாளைப்போவாரிடத்தில் அடைந்தார்கள்.—(எ-று) (௨௯)

ஐயரேயம்பலவரருளாலிப்பொழுதணைந்தோம் ....*
வெய்யவழலமைத்துமக்குத்தரவேண்டியெனவிளம்ப ....*
நையுமனத்திருத்தொண்டர்நாளுய்ந்தேனெனத்தொழுதார்*
தெய்வமறைமுனிவர்களுந்தீயமைத்தபடிமொழிந்தார் ....*

(இதன்பொருள்.)

ஐயரே நடேசருடைய கட்டளையால் இப்போது வெவ்விதாகிய அக்கினியைமூட்டி உமக்கு அதில் முழுகும்படி கொடுக்கவந்தோமென்றுசொல்ல-இளகியமனதையுடைய திருநாளைப்போவார் அடியேன் கடைத்தேறினேன் என்று அவர்களைத் தொழுதார்-தெய்விகமாகிய வேதத்தையுணர்ந்த பிராமணர்களும் தீவளர்த்தோமென்றுசொன்னார்கள்.—(எ-று) (௫௰)

மறையவர்கண்மொழிந்ததற்பின்றென்றிசையின்மதிற்புறத்து
பிறையுரிஞ்சுந்திருவாயின்முன்னாகப்பிஞ்ஞகர்த. .... ..[ப்
நிறையருளான்மறையவர்கணெருப்பமைத்தகுழியெய்தி ..*
இறையவர்தாண்மனங்கொண்டேயெரிசூழவலங்கொண்டார்.

(இதன்பொருள்.)

அப்படிப் பிராமணர்கள்சொல்லினபின்புதென்றிசையிலுள்ள மதிலின்புறத்திலே சந்திரனைத் தவழ்ந்துபோகும்படி உயர்ந்திருக்குந் திருக்கோபுரவாசலுக்குமுன்னே சுவாமியின் நிறைந்தகிருபையோடுகூடியகட்டளையால் வளர்த்திருக்கின்றநெருப்பின்குழியை அடைந்து நடேசருடைய திருப்பாதத்தை மனதில்தியானித்து அக்கினியைச்சுற்றி வலமாகவந்தார்.(எ-று)

கைதொழுதுநடமாடுங்கழலுன்னியழல்புக்கார் ... .*
எய்தியவப்பொழுதின்கணெரியின்கணிம்மாயப் ....*
பொய்தகையுமுருவொழித்துப்புண்ணியமாமுனிவடிவாய்.*
மெய்திகழ்முந்நூல்விளங்கவேணிமுடிகொண்டெழுந்தார்.*

(இதன்பொருள்)

கையினாற்கும்பிட்டு நடனஞ்செய்கின்ற நடேசரது திருப்பாதங்களை மனதில் உறுதியாகநினைத்து அக்கினியில்புகுந்தார்-அப்படிச்செய்தபோது அந்தநெருப்பில் இந்த உலகசம்பந்தமாகிய நிலையில்லாதஉடலத்தையொழித்துப்புண்ணியஞ்செய்கின்ற பெருமைபொருந்திய பிராமணமுனியின்வடிவமாய்த் தேகத்தில் பூணூல்விளங்கச் சடைமுடியோடு எழுந்தார்.—(எ-று) (௫௨)

செந்தீமேலெழும்பொழுதுசெம்மலர்மேல்வந்தெழுந்த *
வந்தணன்போற்றோன்றினா ரந்தரதுந்துபிநாதம் *
வந்தெழுந்ததிருவிசும்பில்வானவர்கண்மகிழ்ந்தார்த்துப் *
பைந்துணர்மந்தாரத்தின்பனிமலர்மாரிகள்பொழிந்தார் *

(இதன்பொருள்.)

சிவந்த நெருப்பில்நின்று எழுந்தபொழுது செந்தாமரைப்புஷ்பத்தின்மேல் உதயமாயெழுந்த பிரமாபோல் பிரகாசித்தார்-பெருமைபொருந்திய ஆகாயத்தில் அந்தரதுந்துமியின் கோஷமானது உண்டாயிற்று-தேவர்கள் சந்தோஷமாய் ஆரவாரித்து அழகாயிருக்கின்ற கற்பகவிருட்சத்தின் குளிர்ச்சி பொருந்திய மலர்களை வருஷமாகச்சொரிந்தார்கள் — எ-று) பிரமனுக்கு இடம் பொற்றாமரையாயிருந்தாலும் சான்றோர் செய்யுள்களில் செந்தாமரையென்று சொல்லப்பட் டிருப்பது பொன்னிறத்துக்குச் சிவப்புநிறம் வழங்குகின்றபடியாலென்க. செம்பொன் என-மாற்றுயர்விலும்வரும். (௫௫)

திருவுடையதில்லைவாழந்தணர்கள்கைதொழுதார் *
பரவரியதொண்டர்களும்பணிந்துமனங்களிபயின்றார் *
அருமறைசூழ்திருமன்றிலாடுகின்றகழல்வணங்க *
வருகின்றார்திருநாளைப்போவாராமறைமுனிவர் *

(இதன்பொருள்)

ஞானசம்பத்தையுடைய தில்லைவாழும் பிராமணர்கள் கைகூப்பினார்கள்-பரவுதற்கரிய மற்றைச் சிவபத்தர்களும் தொழுது மனதில்களிப்படைந்தார்கள்-வேதங்கள்முழங்குகின்றகனகசபையில் ஆடுகின்றபாதத்தைவணங்கும்பொருட்டுத் திருநாளைப்போவாராகிய ஒருவேதமுனிவர் வருகின்றார்.(எ-று) (௫௬)

தில்லைவாழந்தணருடன்செல்லச்சென்றெய்தித் *
கொல்லைமான்மறிக்கரத்தார்கோபுரத்தைத்தொழுதிறைஞ்சி *
யொல்லைபோயுட்புக்காருலகுய்யநடமாடு *
மெல்லையினைத்தலைப்பட்டார்யாவர்களுங்கண்டிலரால் *

(இதன்பொருள்)

திருநாளைப்போவார்-தம்முடனேகூடச் சிதம்பரத்தில்வாழ்கின்றபிராமணர்களும்வரப்போய்முல்லைநிலத்தில் இருக்கும்ஆண்மானைத்தரித்த கரத்தையுடைய சுவாமியினதுகோபுரத்தைப்பணிந்து விரைவாகப்போய் உள்ளேபுகுந்தார்-உலகத்தார் ஈடேறும்பொருட்டு நர்த்தனம்பண்ணுகின்ற சபையை அடை

ந்தார்-பின்பு அவரையாவரும் காணாதவர்களானார்கள் (எ-று) சுவாமியின் கையிலிருக்கு மான் தாருகாவனத்து ரிஷிகள் சுவாமியை வெல்லும்பொருட்டு அபிசார ஓமஞ்செய்து பிறப்பித்து அனுப்பப்பட்டதா யிருந்தாலும் அதன்சாதிக்கிடமாகிய இடத்தை விசேஷணமாக்கிச் சொல்லுமான் மறிக்கரத்தாரென்றார். (௩௫)

அந்தணர்களதிசயித்தாரருமுனிவர் துதிசெய்தார் ...... *
வந்தணைந்ததிருத்தொண்டர் தம்மைவினைமாசறுத்து .... *
சுந்தரத்தாமரைபுரையுந் துணையடிகடொழுதிருக்க ...... *
வந்தமில்லானந்தப்பெருங்கூத்தரருள்புரிந்தார் .... *

(இதன்பொருள்)

மறையோர்கள் ஆச்சரியப்பட்டார்கள் - ஆரியமுனிவர்கள் ஸ்தோத்திரஞ்செய்தார்கள் - முடிவில்லாத ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சபாநாதர் - தமதுசட்டளையால்வந்தடைந்த திருநாளைப்போவார்க்குத் தீவினையாகிய களங்கத்தைநீக்கி - அழகாகிய தாமரைமலரையொத்த இரண்டுபாதங்களையுந் தொழுதிருக்கும்படி அருள்செய்தார்.—(எ-று) (௩௬)

மாசுடம்புவிடத்தீயின்மஞ்சனஞ்செய்தருளியெழுந் ...... *
தாசின்மறைமுனியாகியம்பலவர்தாளடைந்தார் .... *
தேசுடையகழல்வாழ்த்தித்திருக்குறிப்புத்தொண்டர்வினைப் *
பாசமறமுயன்றவர்செய்திருத்தொண்டில்பரிசுரைப்பாம் .. *

(இதன்பொருள்)

தமக்கு முன்னிருந்த உடலமாகிய மாசுதீரும்பொருட்டு அக்கினியாகிய திருமஞ்சனமாடியெழுந்து குற்றமற்ற பிராமணமுனிவராகி நடேசருடைய திருவடியையடைந்தவராகியதிருநாளைப்போவாருடைய பதத்தைப்புகழ்ந்து தீவினையாகிய கயிறு அறும்படி முயன்றதிருக்குறிப்புத்தொண்டநாயனார் திருத்தொண்டின் தன்மையைச் சொல்வோம்—(எ-று) (௩௭)

திருநாளைப்போவார்நாயனார்புராணம்-
முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩அ௰௨.

திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம்.

எய்யுமாறுபல்லுயிர்களுக்கெல்லையில்கருணைத் ....*
தாயனுடனியாயின்தலைவனைத்தழுவப் ... .*
பாயுற்றான்மறைபோற்றநின்றருந்தவம்புரியத் .... *
தூயமாதவஞ்செய்ததுதொண்டைநன்னாடு ....*

(இதன்பொருள்)

அனேகம் உயிர்களுக்கு ஒப்பற்றகிருபை உண்டாகஉலகமாதாவாகியபார்வதியார்பிரிந்திருந்ததமது நாயகராகியபரமசிவனை அடையும்பொருட்டுப்பொருள் நுட்பமாயிருக்கும்படிஆழ்ந்திருக்கும் நான்குவேதங்களும்புகழ அருமையாகிய தவசுசெய்யப்பரிசுத்தமாகிய தவஞ்செய்திருப்பது தொண்டைநாடாம்.—(எ-று) (க)

நன்மைதீதெனநடுநிலையொழுக்கத்துநயந்த ....*
தன்மைமேவியதலைமைசால்பெருங்குடிதழைப்ப. ....*
வன்மையோங்கெயில்வளம்பதியின்றதுவரம்பின் .... ..*
றொன்மைமேன்மையினிகழ்பெருந்தொண்டைநன்னாடு ..*

(இதன்பொருள்.)

தன்மைமிகுந்த நடுவுநிலைமையாய் ஒருகாரியத்தை நடத்துவதில் விருப்பத்தைக்கொண்ட தலைமையாகிய பெரியகுடிகள் விருத்தியடையவலிமைபொருந்தியமதிற்காவலையுடையவளமுள்ள நகரங்களுக்கு இடமாயிருக்கின்றது-நெறியோடு பழமையும் மேன்மையுமாகிய இவைகளால்விளங்கும் தொண்டைநாடு.—(எ-று) (உ)

நற்றிறம்புரிபழையனூர்ச்சிறுத்தொண்டர்நவைவந் ....*
துற்றபோதுதம்முயிரையும்வணிகனுக்கொருகாற் .... .. *
சொற்றமெய்ம்மையுந்தூக்கியச்சொலையேகாக்கப் .. .... *
பெற்றமேன்மையினிகழ்ந்ததுபெருந்தொண்டைநாடு .. *

(இதன்பொருள்.)

நற்செய்கைகளைச்செய்யும் பழையனூரில் வாசஞ்செய்துசுவாமிக்குக்குற்றேவல்செய்கின்ற அடியவராகிய வேளாளர்கள்-ஒருஅபாயம்நேரிட்டபோதுதங்கள்சீவனையும் ஒருவர்த்தகனுக்

கு ஒருதரந்தாங்கள்சொல்லியசத்தியவார்த்தையையுமாலோ
சித்து உயிரை உயர்வாகநினையாமல் அந்தச்சொல்லையேகாப்
பாற்றும்படி பழிக்குப்பழிகொடுத்த மேன்மையிற் சிறப்புள்
ளதாயிருக்கின்றது தொண்டைநாடு.—(எ-று) வணிகனுக்கு
ச் சொல்லியவார்த்தையின்பொருட்டு உயிரைக்கொடுத்ததாவ
து-ஒருவன்நாள்தோறும் பிறமங்கையரிடஞ்சென்றுநட்புற்றி
ருப்பதை அவன்மனைவி அறிந்து தடுத்துத் தன் வசமாகும்ப
டி வேண்டிய உபாயங்கள்சொல்லியுங் கேளாமலிருந்ததுமன்
றித் தன் எண்ணத்திற்கு இவள் ஓரிடையூறா யிருக்கின்றாளென்
று கொல்லவும் நினைத்து-ஒருநாள் அடுத்த ஊரில் நடக்கும் ஒ
ருசிறப்பைத் தன்மனைவிக்குக்காட்ட விருப்பமுள்ளவன்போ
ன்று கவடுசெய்து அழைத்துக்கொண்டுபோய் நடுக்காட்டிற்
கொன்றுவிட்டான்-மறுபிறப்பில் அவள் ஒருபிசாசானாள்-புரு
ஷன்செட்டியாகப்பிறந்தான். அவனிடத்திற்குச்சோதிடநூலு
ணர்ந்த ஒருவன்வந்து சாதகம்பார்த்து நீ வடதிசைநோக்கிச்
சென்றால் ஒருபேயால் இறப்பாய்-அதுதவறாது ஆயினும் நா
ன் மந்திர உருவேற்றியிருக்கும் இந்தவாளைக் கொடுக்கின்றே
ன் இது உன்னிடத்திலிருக்கிறவரைக்கும் அந்தப்பேய் உன்னை
அணுகாது என்று கொடுத்துவிட்டுப்போயினான். - சிலநாட்
பொறுத்து அந்தச்செட்டி தன்னூரிலிருந்து பழையனூரிலி
ருக்கும் வேளாளரிடத்துக்குத் தனவர்த்தகத்தைக் குறித்துப்
போகும்போது நீலியென்னும் அந்தப்பேய் முற்பிறப்பில்
செய்த பழிக்குப் பழிவாங்கும்பொருட்டு அவன்மனைவிபோ
ல் வேஷங்கொண்டு பின்தொடர வர்த்தகன்சிலகுறிகளால்பே
யென்றறிந்து கையிலிருக்குமந்திரவாளின் வலிமையினால் பய
ப்படாமல் அந்த ஊரிலுள்ள காராளர் கூட்டத்திற்சேர்ந்தனு
ம்-நீலி-அவர்களைநோக்கி என்னாயகராகிய இவர்வெகுநாளாக
என்னோடுபேச்சும்இன்றி விரோதப்பட்டிருக்கின்றார்-நானெ
வ்வளவுகீழ்ப்படிந்து வேண்டிக்கொண்டாலும் எள்ளளவும் இ
ரக்கமற்றுவெறுப்புற்றார்-ஐயோ என்னபாவஞ்செய்தேன் நீ
திமான்களாகிய நீங்கள் அவருக்குள்ள கோபத்தைநீக்கி இம்
மண்டபத்தி னுள்விட்டில் அவரையும் என்னையும் போகவிடு
வீர்களாயின் சிலவார்த்தை யவரோடுபேசி நான் போகிறே
னென்றுசொன்னவுடனே செட்டி- இவளை யென்மனைவியாக
நினைக்கவேண்டாம்-ஒருவலியபேய் என்னைக்கொல்லவந்திருக்
கிறது என்றான் - அதற்கு நீலி - ஐயா- இவர் எங் கணவரோ

ன்பதை யுங்களுக்குத் தெரிவிக்கிறேனென்று தன் இடுப்பிலிருந்த மாயக்குழந்தையைக் கீழேவிட்டது - அது-யாவரிடத்துஞ்செல்லாமலசெட்டியினிடத்துக்குப்போய்மேல்விழுந்து விளையாடிற்று அப்போது வேளாளர்கள் செட்டியாரே நீர் என் பொய்சொல்லுகிறீர்-உம்முடைய தாயகி இவ்வளவு துன்பமுறுகின்றபடியால் இவ்வுள்ளேபுகுந்து ஒரு வார்த்தைசொல்லி வாருமென்றுவலியுறுத்த அவன்கையில்வாளைப்பிடித்துக்கொண்டுசென்றானாக-நீலி-ஐயா-கத்தியை நீங்கள் வாங்கிவைத்துக் கொள்ளாவிட்டால் நான் இறந்துபோவேனென்று கூவிற்று-அவர்கள் அம்மொழியை நிசமாகவெண்ணிக் கத்தியை வாங்கிக்கொண்டவுடனே வணிகன் பயந்து இந்த ஆயுதமிருக்கிறபடியாற்றான் நான் இதுவரைக்கும்பிழைத்திருக்கிறேன்- இல்லாவிட்டால் இந்த யமன்வாயிற்போட்டுக்கொள்ளுமேஎன-வேளாளர்கள்-நீர் ஒருவரிந்தவகையில் இறந்தால் நாங்கள் எழுபதின்மரும் உமக்காக உயிர்விடுகிறோமென்று தேற்றி உள்ளேஅனுப்புவித்தார்கள்-அங்ஙனம்புகுந்தகணப்பொழுதிலேயேஅந்தப்பேய்வணிகனைக்கொன்றுவிட்டு அவன் தாய்போல் வேஷங்கொண்டுவேளாளரைநோக்கி உங்களிடத்துக்குவந்த என்மகனை என்னசெய்தீர்களென்று அழுதுஅலறிக்கேட்க - அவர்கள் செட்டிவருவானென்று வெகுநேரம் காத்திருந்தும்பயன் அடையாமையால் கிழவியின் துன்பத்தைப்பார்த்துப்பொறுக்கக்கூடாமல் கதவைத்திறந்து பார்க்கும்போது அவனுடலம் இரண்டாகக்கிழிக்கப்பட்டிறந்து கிடப்பக்கண்டு இந்த எழுபதுவேளாளரும் தாங்கள் சொல்லிய பேச்சுத்தவறாமல் தீயிற்குதித்து உயிரைக்கொடுத்தார்கள்-என்பதாம். நீலியென்னும்பேய் வாசஞ்செய்த ஒருமரத்தை வெட்டும்படி கட்டளையிட்ட எழுபதின்மரு மறுபிறப்பில் எழுபது வேளாளராகவும், வெட்டினவன் ஒருசெட்டியாகவும் பிறந்தபடியால் இவர்களை அது பழிவாங்கிற்றென்றுஞ் சிலர்சொல்கின்றார்கள். (௩)

மாறுகொடுபழையனூர் நீலிசெய்த வஞ்சனையால்வணிக
னுயிரிழப்பத்தாங்கள் .... *
கூறியசொற்பிழையாது துணிந்துசெந்தீக்குழியி லெழு
பதின்மர்களு முழுகிக்கங்கை .... *
யாறணிசெஞ்சடைத் திருவாலங்காட்டப்ப னண்டமுறநி
மிர்ந்தாடுமடியில்கீழ்மெய்ப் .... *

பேறுபெறும் வேளாளர் பெருமையெம்மாத்திரித்தள விட்டிவளவெனப் பேசலாமோ. என்பதனாலுமுணர்க.)

துஞ்சவருவாருந்தொழுவிப்பாரும்வழுவிப்போய் ....*
நெஞ்சம்புகுந்தென்னை நினைவிப்பாருமுனைநட்பாய். ...*
வஞ்சப்படுத்தொருத்திவாணாள் கொள்ளும்வகைகேட்... ..*
டஞ்சும்பழையனூராலங் காட்டெம்மடிகளே. (என்றுந் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தாலும்.)

இன்னும்புகழ்நிற்கவோர்பழிக்காமற்றெழுபதின்மர்...*
துன்னுந்தழல்புக்கொளித்ததெல்லாஞ்சுருதிப்பொருளாய...*
புன்னும்புரிசைத்திருவாலங்காட்டினுமைப்பதிக ....*
மன்னுந்தமிழில்வகுத்ததன்றோ தொண்டமண்டலமே. (என்பதனாலுமுணர்க.)

ஆனையாமடிநீறுகண்டடிச்சேரனென்னுஞ் ....*
சேனுலாவுசீர்ச்சேரனார்திருமலைநாட்டு.... .... *
வானிலாவுபூண்வயவர்கள்மைத்துனக்கேண்மை ... ... *
பேணநீடியமுறையதுபெருந்தொண்டைநாடு.. .. .... *

(இதன் பொருள்.)

ஆடையைவெளுப்பதற்கு உவமண் மூட்டைகொண்டுபோகும் ஒருவண்ணானுடம்பில் அம்மண்கசிவுற்று வெண்மைநிறம் உண்டாகக்கண்டு அதைச் சுவாமிகட்டளையிட்டிருக்குந்தலைமையான திருநீறு தரித்திருக்கிறதாகப் பாவனைகொண்டு அடியேன்சேரனென்று அந்தரஜகனைவணங்கினவராகியதேசமெங்கும் பரவினகீர்த்தியையுடையசேரமான்பெருமாள்நாயனார் அரசுசெய்துகொண்டிருந்தமலைநாட்டில் ஒளிவீசும் ஆபரணங்களையுடைய வணிகர்கள் மைத்துனராயிருக்கும் உறவைவிரும்புமுறைபாராட்டியது பெருமைபொருந்திய தொண்டைநாடு.— (எ-று) மலைநாட்டிலுள்ளவணிகர் தொண்டைநாட்டாவாமைத்துனமுறைகொண்டதாவது-ஒருகாலத்தில் சேரநாட்டிலிருந்த வணிகஜாதியார் ஒருகலகநிமித்தம் தங்களிருப்பிடத்தில் நின்றும் வேறுதேயத்திற்குக் குடிவாங்கினார்கள் - அப்போதவர்கள்மரபில் ஒருபெண் தெறிபட்டுத் தொண்டமண்டலத்திலிருக்கும் வேளாளர்களிடத்தில்வந்து வளர்ந்துகொண்டிருந்தது பின்பு அந்தவணிகர் கலகம் ஒழிந்து தங்கள் ஊர்களுக்குவந்தவுடனே சிதறிப்போயிருந்த தங்கள்மரபினர் யாவரும்வந்தடைந்தார்களோவென்று கணக்கிட்டு நோக்கும்போது ஒரு

பெண் குறைந்திருக்கக்கண்டு- தேடிக் கண்டுபிடிக்கத் தேய மெங்குந்திரிந்து-காஞ்சிமண்டலத்தில்வந்து அந்தப்பெண்ணைக்கண்டு அதை யழைத்துக்கொண்டுபோகும்படி வளர்த்தவர்களைக்கேட்க அவர்கள்-தாங்கள் பெண்போல் வளர்த்து யாதொருபழுதுமின்றிக்காத்தோம்-ஆதலில்-நீங்கள் குறைவாகநினையாமல் உங்கள்சாதியிற்சிறந்த ஒருபிள்ளைக்கேமணஞ்செய்துகொடுக்கவொப்புவீர்களாயின் அனுப்புவோமென்றார்கள்- அதற்கு அவர்கள் சம்மதித்து அந்தப்படியேசெய்து தொண்டைநாட்டாரைச் சம்பந்திமுறைகொண்டாடினார்கள் என்பதாம். (௪)

கொத்தலர்கோதை வியன்சேர மண்டலக் கொம்பைத்தம்
வைத்திருந்தாங்கவடன்கெளிர்நேடிவரவவர்க்கே ..... [பால்
யய்த்திருவோர்க்கும்வரிசையுமாற்றியுடனுஞ்சென்று .... *
மைத்துனக்கேண்மை படைத்ததன்றோ தொண்ட மண்டலமே. (என்பதனாலறிக.)

கறைவிளங்கியகண்டர்பாற்காதல்செய்முறைமை .... .. *
நிறைபுரிந்திடநேரிழையறம்புரிந்ததனாற் . .. .*
பிறையுரிஞ்செயிற்பதிபயில்பெருந்தொண்டைநாடு. ..... *
முறைமையாமெனவுலகினிற்றிகழ்மொழியுடைத்தால் .. ..*

(இதன்பொருள்)

விஷத்தின்கறையானது விளங்குகின்ற கழுத்தையுடைய பரமசிவனிடத்தில் நிறைவாக ஆசையுற்ற பார்வதிதேவியார் முறைமையோடு முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்தபடியால் சந்திரன் உராய்ந்துகொண்டுபோகின்ற மதிலையுடைய காஞ்சீபுரம்விளங்குதற்கிடமாகிய தொண்டைநாடு எல்லாநாடுகளைப் பார்க்கிலும் முறைமையை உடையதாமென்று உலகத்தில் சிறந்த ஒருவார்த்தையை உடைத்தாயிருக்கின்றது.—(எ-று) (௫)

தாவில்செம்மணியருவியாறிழிவனசாரல் .... *
பூவில்வண்டினம்புகுநறவருந்துவபுறவம் ....*
வாவிநீர்கயல்வரம்பிறவுகைப்பனமருதம் ....*
நீவிநித்திலம்பரத்தியருணக்குவநெய்தல்..... ....*

(இதன்பொருள்)

தொண்டைநாட்டிலுள்ள மலைகளின்சாரலிலிருந்து குற்றமற்றமாணிக்கமணிகளோடு அருவியாறுகள் இறங்குகின்றன - முல்லைநிலத்தில் முல்லைமுதலாகிய மலர்களில் வண்டுக்கூட்டங்க

ள் புறியதேனை உண்பன-மருதநிலத்தில் தடாகங்களி லிருக்கும் நீண்டகயல்மீன்கள் கரையிலுள்ளமரங்கள்ஒடியத்தாவுகின்றன-நெய்தல்நிலத்தில் பரத்தியர்களால் முத்துக்கள் பரப்பிக் காயப்போடப்படுகின்றன.—(எ-று) (௬)

குறவர்பன்மணியரித்திநைவிதைப்பனகுறிஞ்சி .... *
கறவையாவினமானுடன்பயில்வனகானம் .... *
பறவைதாமரையிருந்திறவருந்துவபழனஞ் .... *
சுறவமுண்மருப்பணங்கயர்வனகழிசூழல் .... *

(இதன்பொருள்.)

குறிஞ்சிநிலத்தில் புனங்களானவை பலரத்னங்களையும் அரித்தெடுத்துத்தினைமுதலியவிளைப்பதற்கிடமாயிருக்கின்றன-.முல்லைநிலத்தில் கறக்கின்றபசுக்களும் மற்றமாடுகளும் மான்களோடுசஞ்சரிக்கின்றன-மருதநிலத்தில் பட்சிகள் தாமரையிலையிலிருந்து இறால்மீனைத்தின்கின்றன-கழியையுடைய நெய்தல்நிலத்தில் சுறமீனினுடைய முட்கள் தெய்வத்தின் அறிகுறியாகவைக்கப்பட்டு உச்சவஞ்செய்யப்படுகின்றன.(எ-று)(௭)

கொண்டல்வானத்தின்மணிசொரிவனகுலவரைப்பாற் .... *
தண்டுணர்க்கொன்றைபொன்சொரிவனதளவயற்பால் .... *
வண்டல்முத்தநீர்மண்டுகால்சொரிவனவயற்பால் .... .. *
கண்டன்முன்றுறைக்கரிசொரிவனகலங்கடற்பால் .... *

(இதன்பொருள்.)

மேகங்கள் ஆகாயத்திலிருந்து உயர்வாகிய மலைகளின்மேல் முத்துக்களைச்சொரிகின்றன-முல்லைநிலத்தின்பக்கங்களில் குளிர்ச்சியாகிய பூங்கொத்தினையுடைய கொன்றைகள் தமதுமலராகிய பொன்னைச்சொரிகின்றன-மருதநிலத்தில் நீர்விசையாகச்செல்கின்ற வாய்க்கால்கள் அந்தநிலத்துச் சிறுபெண்கள் விளையாடி இறைத்துவிட்ட முத்துக்களைத் தள்ளிக் கரையில் ஒதுக்குகின்றன-கடலினிடத்தில்தாழஞ்செடிகளையுடைய துறையினிடத்தில் கப்பல்கள்யானைமுதலாகியபொருள்களைக் கொண்டுவருகின்றன.—(எ-று) (௮)

தேனிறைந்தசெந்தினையிடிதருமலைச்சீறூர் .... *
பானிறைந்தபுற்பதத்தனமுல்லைநீள்பாடி .. .. *
தூநெல்லன்னநெய்கன்னலின்கனியகன்றுறையூர் .... *
மீனிறைந்தபெருணவினவேலைவைப்பிடங்கள் .... *

(இதன்பொருள்)

மலையின்சார்பாகிய குறிஞ்சிநிலத்திலிருக்கும் சிறிய வூரிலுள்ளோர்கள் தேன்வார்த்துப் பிசைந்த சிவப்பாகிய தினை அரிசிமாவை வந்தவர்கட்குக்கொடுப்பார்கள் - முல்லைநிலத்திலிருக்கும் நீண்ட இடையர்பாடிகள் பால்வார்த்துச்சமைத்தபுல்லரிசிச்சோற்றை யுடையனவாயிருக்கின்றன-குளிர்ச்சி பாருந்திய நீர்த்துறைகளையுடைய மருதநிலத்தூர்கள் பரிசுத்தமாகிய நெல்லரிசிச்சோறு-நெய்-கருப்பஞ்சாறு-பழங்களிவைகளையுடையனவாயிருக்கின்றன-சமுத்திரத்தினருகிலிருக்கின்ற நெய்தல்நிலத்தூர்கள்மிகுதியும்மீன்களையே யுணவாகவுடையன. (எ-று) (௯)

குழல்செய்வண்டினங்குறிஞ்சியாழ்முரல்வனகுறிஞ்சி .. ...*
முழவுகார்கொளமுல்லைகண்முகைப்பனமுல்லை .... *
மழலைமென்கிளிமருதமர்சேக்கையமருத .. ..*
நிழல்செய்கைதைசூழ்நெய்தலங்கழியனநெய்தல் ...... *

(இதன்பொருள்)

குறிஞ்சிநிலத்தில் குறத்தியர்களுடையகூந்தலிலிருக்கும் வண்டுகள் குறிஞ்சியாழி னிசைபோல் தொனிசெய்கின்றன- முல்லைநிலத்தில் மேகங்கள்முழங்க முல்லைச்செடிக ளரும்புவிடுகின்றன-மருநிலத்தில் மழலைச்சொற்களையுடைய கிளிகள் மருதமரங்களைத் தமக்கு இடமாகவுடையன- நெய்தல்நிலங்கள் நிழல் கொடுக்கும்படி உயர்ந்ததாழைகள்சூழ்ந்தநெய்தல்மலர்கள்பூத்திருக்கும் கழியினையுடையன.—(எ-று) (௰)

மல்குமப்பெருநிலங்களில்வரைபுணர்குறிஞ்சி.... ......*
யெல்லையெங்கணுமிறவுளோனன்முனைவிளைக்கும் .... .. *
பல்பெரும்புனம்பயில்வனபடர்சிறைத்தோகை.. .. ..*
சொல்லுமப்புனங்காப்பவுஞ்சுரிகுழற்றோகை ....*

(இதன்பொருள்.)

செறிப்பாகிய முன்சொல்லிய நால்வகைநிலங்களில் மலையைச்சார்ந்த குறிஞ்சிநிலத்திலுடைய இடங்களிலெல்லாம் குறவர்கள் தினைப்பயிரிடுகின்ற பல புனங்களிருக்கின்றன-அவைகளில்தழைந்த சிறிய தோகையையுடைய மயில்கள் சஞ்சரித்துக்கொண்டிருப்பன-சொல்லப்பட்ட அந்தத்தினைப் புனத்தைக் காக்கின்றவர்களும் சுருண்டிருக்கும் கூந்தலையுடைய மயில் போன்ற சாயலைப்பெற்ற குறமாதர்களாம்.—(எ-று) (௰௧)

அங்கண்வான்மிசையரம்பையர்கருங்குழற்சுரும்பு .. ..*
பொங்குபூண்முலைக்கொடிச்சியர்குழல்சூழ்ந்துபோகாச் ..*
செங்கண்மால்விடையார்திருக்காளத்தியென்னு ....*
மங்குல்சூழ்வரைதிலவியவாழ்விருன்மல்கும்.... ....*

(இதன்பொருள்)

அழகிய இடமகன்ற தெய்வலோகத்தில் வாழ்ந்திருக்கும் அரம்பைமுதலிய மாதர்களினுடைய கூந்தலிலுள்ள வண்டுகள்பிரகாசத்தைத் தருகின்ற ஆபரணத்தைத்தரித்த ஸ்தனங்களையுடைய குறத்திகளது கூந்தலில்விழுந்து வாசனைமிகுதியால் அவைகளை விட்டுப்போகாமலிருக்கும் சிவந்தகண்களையுடையவிஷ்ணுவாகிய ரிஷபத்தையுடைய பரமசிவன்வீற்றிருக்கும் திருக்காளஹஸ்தியென்கிற மேகங்கள்மொய்க்கின்ற மலையானது நிறைந்த பலவளங்களால் பெருமையை யடையும்.—(எ-று)

வேறுவேறுசூழிமையவரரம்பையர்பிறந்து ; ....*
மாநில்வேடருமாதருமாகவேவணங்கு.. .. ..*
மாறுசூழ்சடையண்ணலார்திருவிடைச்சுரமுங்........*
கூறுமேன்மையின்மிக்கதந்நாட்டுவண்குறிஞ்சி ....*

(இதன்பொருள்)

வெவ்வேறுவகையாக எண்ணப்பட்டிருக்கின்ற தேவர்களும், தேவமாதர்களும், மாறுபாடில்லாத வேடர்களும் வேட்டுவச்சிகளுமாகப்பிறந்து வணங்குகின்ற கங்கைதங்கிய சடையை உடைய சுவாமிவீற்றிருக்குந் திருவிடைச்சுரமென்னும் ஸ்தலமும் பிரசித்தமாகச்சொல்லப்படும் மேன்மையிற் சிறந்திருக்கின்றது-அந்தத்தொண்டைநாட்டிலுள்ள வளம்பொருந்திய குறிஞ்சிநிலத்தில்.—(எ-று) (௰௬)

அம்பொன்வார்குழற்கொடிச்சியருடனரமகளிர் ....*
வம்புலாமலர்ச்சுனைபடிந்தாடுநீள்வரைப்பி........ ....*
னும்பர்நாயகர்திருக்கழுக்குன்றமுமுடைத்தால் ....*
கொம்பர்வண்டுசூழ்குறிஞ்சிசெய்தவக்குறையுளதோ ....*

(இதன்பொருள்)

அழகாகிய பொன்னிறமுள்ள அசோகுமுதலிய புஷ்பங்களைத் தரித்த நீண்டகூந்தலினையுடைய குறத்திகளோடு தேவஸ்திரீகள் வாசனைபொருந்திய மலர்களிருக்கும் சுனையிற்படிந்து மூழ்குகின்ற நீண்ட இடங்களையுடைய தேவர்களுக்கு நாயகரா

கிய சுவாமி யெழுந்தருளியிருக்கும் திருக்கழுக்குன்றத்தையும் பூங்கொம்புகளில் வண்டுகள்மொய்க்கின்ற குறிஞ்சிநிலம் உடைத்தாயிருக்கின்றது-ஆதலால் அதுசெய்த தவக்குறையுள்ளதென்று சொல்லலாமோ.—(எ-று) (௰௪)

கோலமுல்லையுங்குறிஞ்சியுமடுத்தசில்லிடங்க..... ....*
ணீலவாட்படைநீலிகோட்டங்களுநிரந்து..... ....*
காலவேனிலிற்கடும்பகற்பொழுதினைப்பற்றி..... ..... *
பாலையுஞ்சொலலாவனவுளபரன்முரம்பு..... .... *

(இதன்பொருள்.)

அழகாகியமுல்லைநிலமும்-குறிஞ்சிநிலமும்- நீலநிறமுள்ள வாளாயுதத்தைக்கொண்ட காளியினது பல கோயில்களுண்டாய்ப் பருக்கைக்கற்களையுடைய மேடுகள் அடுத்த சில இடங்களையுடையனவாயிருத்தலால் வேனிற்காலத்தில் பகற்பொழுதமிகுந்த உஷ்ணமாயிருப்பதைப்பற்றிப்பாலைநிலமென்றுஞ்சொல்லப்படுகின்றன.—(எ-று) நீலிகோட்டம்-காளிகோயில்-முரம்பு-மேடு. (௰௫)

சொல்லுமெல்லையிற்புறத்தனதுணர்ச்சுரும்பலைக்கும் ... *
பல்பெரும்புனற்கானியாறிடையிடைபரந்து..... ..*
கொல்லைமெல்லிணர்க்குருந்தின்மேற்படர்ந்தபூம்பந்தர் ..*
முல்லைமென்புதன்முயலுகைத்தடங்குநீண்முல்லை .. ....*

(இதன்பொருள்.)

வண்டுகள்முழங்கும் பூங்கொத்துக்களை அலைத்துக்கொண்டுவரும் வெள்ளமாகிய நீரையுடைய எல்லையின்புறத்தில் ஓடுகின்றனவாகிய பலகாட்டாறுகள் கரைபுரண்டு ஊரினடுவில்நடுவில்பரவுதலால் மேடாயிருக்குங் கொல்லைகளில் மிருதுவாகிய பூங்கொத்தினையுடைய குருந்தமரத்தின் மேற் பரந்தப் போர்படர்ந்திருக்கு முல்லைக்கொடிகளின் சிறியபுதரிலிருக்கும்முயல்கள் அந்தநீருக்குப்பயந்து எழும்பித் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத்தக்க இடத்திற்சேரும் நீண்ட முல்லைநிலத்தில்.
(எ-று) (௰௬)

பிளவுகொண்டதண்மதிநுதற்பேதையரெயிற்றைக்..... ..*
களவுகொண்டதுதளவெனக்கள்வலர்நாற்று..... ..*
மளவுகண்டவர்குழனிறங்கவியுமக்களவைத்..... ..*
தளவுகண்டெதிர்சிரிப்பனதமக்குமுன்டென்று..... ..*

(இதன்பொருள்)

குளிர்ச்சிபொருந்திய மூன்றாம்பிறையை யொத்த நெற்றியையுடைய இடைச்சிகளின் பற்களினழகை முல்லையரும்புகள் திருடிக்கொண்டனவென்று களாச்செடிகள் அலர்தூற்றுகின்றன- அத்தன்மையை முல்லைச்செடிகள் அறிந்துமேற்சொன்னஸ்திரீகளின் கூந்தலினிறம்போல் கருமைகொண்ட களாவின்பழங்களைநோக்கிச் சிரிக்கின்றன- அவைகளுக்கும் தமக்குச்சொல்லியதுபோல் திருட்டுத்தனம் உண்டென்று.—(எ-று) அலர்தூற்றல்-பழித்தலும், மலர்தலுமாம். சிரித்தல்-நகைத்தலும் புஷ்பித்தலுமாம் தமக்குமுண்டென்றது- களம்பழம் கூந்தலின் கருமையைத்திருடினதாகச்சொல்லுதல். தளவு என்பது- செடிக்கும், அரும்பிற்கும், களவுசெடிக்கும், பழத்திற்கும் முதல்சினையொற்றுமைநயம்பற்றி-அபேதமாகக்கூறினர். (௰எ)

மங்கையர்க்குவாள்விழியிணைதோற்றமான்குலங்க .... ..*
ளெங்குமற்றவரிடைக்கிடைமலர்க்கொடியெங்கு ....*
மங்கண்முல்லையின்றெய்வமென்றருந்தமிழுரைக்குஞ் .. ..*
செங்கண்மாலொடுஞ்சிவன்மகிழ்திருமுல்லைவாயில் .. ....*

(இதன்பொருள்)

மாதர்களுக்கு ஒளிபொருந்திய கண்விஷயத்தில் தோற்ற மான் கூட்டங்கள் எவ்விடத்திலும் தங்கவும் அவர்களுடைய இடைகளுக்குத்தோற்ற பூங்கொடிகள் எங்கும் படர்ந்திருக்கவும்- அழகியஇடத்தையுடைய முல்லைநிலத்துக்குத்தெய்வமென்று அருமையாகியதமிழிற்சொல்லப்பட்டிருக்குஞ் சிவந்தகண்களையுடைய விஷ்ணுதொழும் பரமசிவன் வீற்றிருப்பதற் கிடமாகிய திருமுல்லைவாயிலும்-இருக்கின்றது.—(எ-று) தங்கவும்-படர்ந்திருக்கவும்-இருக்கின்றன என்னுஞ்சொற்கள் வருவிக்கப்பட்டன. (௰அ)

நீறுசேர்திருமேனியர்நிலாத்திகழ்முடிமேன் ....*
மாறில்கங்கைதான்வாக்குமஞ்சனத்தரவணைந்தே .... ..*
யூறுநீர்தருமொளிமலர்க்கலிகைமாநகரா ....*
வேறுதன்பெருமைப்பெயர்விளங்குமாமுல்லை .. ..*

(இதன்பொருள்)

திருநீற்றைத்தரித்த திருமேனியையுடைய கயிலாசபதியினதுசந்திரன்பிரகாசிக்கின்ற முடியின்மேல் குற்றமற்ற கங்கையான

து வார்க்கின்ற மஞ்சன நீரைக் கொடுக்கப்பெற்றுக்கொண்டு எப்பொழுது நீரூறுகின்ற பிரகாசமாகிய திருவூறலென்னும் ஸ்தலத்தை ஒப்பற்ற தனது இடமாகப்பெற்று முல்லைநிலம் விளங்குகின்றது.—(எ-று) (௧௯)

வாசமென்மலர்மலிகிய முல்லைசூழ்மருதம் .. .. *
வீசுதெண்டிரைநதிபலம்க்குயர்ந்தோடிப் .. .. *
பாசடைத்தடந்தாமரைப்பழனங்கண்மருங்கும் .... *
பூசல்வன்கரைக்குளங்களுமேரியும்புகுவ .. .. *

(இதன்பொருள்.)

வாசனைபொருந்திய மிருதுவாகிய மலர்கள் நிறைந்த முல்லைநிலத்தையடுத்த மருதநிலத்தில் மோதுகின்ற தெளிவாகிய அலைகளையுடைய அந்நதிகள் வெள்ளம்புரண்டோடிப் பசுமையாகிய இலைசூழ்ந்த அகன்றதாமரையையுடைய தடாகங்களினிடத்திலும் - சப்திக்கின்ற வலியகரைகளையுடைய குளங்களிலும் - ஏரிகளிலும் - புகுகின்றன.—(எ-று) (௨௰)

துங்கமாதவன்சுரபியின்றிருமுலைசொரிபால் .... *
பொங்குதீர்த்தமாய்நந்திமால்வரைமிசைப்போந்தே .. ... *
யங்கணித்திலஞ்சந்தனமகிலொடுமணிகள் .... *
பங்கயத்தடநிறைப்பவந்திழிவதுபாலி .... *

(இதன்பொருள்.)

உயர்வாகியதவத்தையுடைய அகஸ்தியரது காமதேனுவின் முலையினின்றும்சொரிகின்ற பாலானது - பெருமைபொருந்திய பாலாறென்னுந்தீர்த்தமாய்நந்திபர்வதத்தை இடமாகக்கொண்டு அவ்விடத்திலிருக்கின்றமுத்துக்களையும் சந்தனக்கட்டைகளையும், அகிற்கட்டைகளோடு ரத்தினங்களையுந் தாமரைத்தடாகங்களில் கொண்டுவந்து நிறைக்கும்படி இறங்கிவருகின்றது. (எ-று) (௨௧)

பிள்ளைதவழப்பெருகுபால்சொரிமுலைத்தாய்போல் .... *
மள்ளர்வேனிலின்மணற்றிடர்பிசைந்தணைவருட .... *
வெள்ளநீர்திருமருங்குகால்வழிமிதந்தேறிப் ... . *
பள்ளநீர்வயற்பருமடையுடைப்பதுபாலி .. .. *

(இதன்பொருள்.)

குழந்தையானது தடவ மிகுந்தபாலைச்சொரிகின்ற முலையையுடைய தாய்போல உழவர்கள் வேனிற்காலத்தில் மணல்மேடுக

லைக்கையினால் தோண்டிவார ஊறியவெள்ளநீரானது இரண்டுபக்கங்களிலுமுள்ள வாய்க்கால்களிலும் நிறைந்து எறிப்பள்ளமாகிய வயல்களின் நீர்மடையையுடைப்பதற்குக் காரணமாயிருக்கின்றது பாலாறு.—(எ-று) (௨௨)

அலையவாகியநதிபரந்தகன்பணைமருங்கிந் .... *
கலைநெடும்புனனிறைந்துதிண்கரைப்பெருங்குளங்கள் ....*
புலையிருங்குடிமதகுவாய்திறந்திடப்புறம்போய் .... ..*
விளைஞரார்ப்பொலியெழிப்பநீர்வழங்குவவியன்கால் ....*

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட பாலாறானது பரவுதலால் விசாலமாகியவயல்களின் பக்கத்திலிருக்கும் வலியகலாகளையுடைய குளங்களில் ஒலியையுடையமிகுந்த நீர்நிறைந்து பெருமைபொருந்திய குடிகள் அவைகளுக்குக்கட்டப்பட்ட மதகுகளின் வாயைத்திறக்கப் புறத்திற்போய் உழுகிறவர்கள் கூச்சலிடப்பெரியகால்கள்நீர் ஓடும்படியிருக்கின்றன.—(எ-று) (௨௩)

மாறில்வன்பகட்டேர்பல்நெருங்கிடவயல்கள் ....*
சேறுசெய்பவர்செந்நெலின்வெண்முளைசிதறி ....*
நாறுவார்ப்பவர்பறிப்பவர்நடுபவரான ....*
வேறுபல்வினையுடைப்பெருங்கம்பலைமிகுமால் ....*

(இதன்பொருள்.)

மாறுபாடில்லாத வளம்பொருந்திய எருமைக்கடாக்கள்பூட்டிய பல ஏர்களைக்கொண்டு நெருக்க வயல்களைச்சேறுசெய்கிறவர்களும், சம்பாநெல்லின் வெண்மையாயிருக்கிறமுளைகளைவிதைத்து நாறாக வளர்ப்பவர்களும், அந்தநாற்றைப் பறிப்பவர்களும், நடுகிறவர்களுமாகிய இவர்களுடைய பலவகையான தொழில்களினால்ஒருபெரியமுழக்கமுண்டாயிருக்கும்.-(எ-று)

வரும்புனற்பெருங்கால்களைமறித்திடவாளை ....*
பெருங்குலைப்படவிலங்குவபிறங்குநீர்ப்பழன ....*
நெருங்குசேற்குலமுயர்த்துவநீள்கரைப்படுத்துச் .... ..*
கருங்கைநீர்வழக்கரும்பனைபருவராற்குருகு... ....*

(இதன்பொருள்)

நீர்வருகின்ற பெரியகால்வாய்களைக் குறுக்காக வாளைமீன்கள் அணைபோய் மறிக்க - அந்தநீர் ஓரத்திலிருக்கும் பெரிய க

ரை உடைபட்டுப்போகும்படிவிலங்கிப்போகின்றன-பிரகாச
முள்ள ஜலத்தையுடைய புறத்திலுள்ள வயல்களிலிருக்கும்நெ
ருங்கிய மீன்கூட்டங்கள் அவ்வுடைபட்ட கரைவழியாய்நீர்வ
ராமல் ஒன்றின்மேலொன்றாகப்படுத்து அடைக்கின்றன-அத
ன்பின் பரிய வரால்மீன்களின்கூட்டம் மதகிலிருந்து நீர்வய
லொட்டாமல் அடைக்கின்றன.—(எ-று) கருங்கை- தொளை.

தளைத்தடம்பணையெழுந்தசெந்தாமரைத்தவிசி .... .. *
லிளைத்தசூல்வளைகண்படுப்பனவிடையெங்கும் ... . *
விளைத்தபாசொளிவிளங்குநீள்விசும்பிடையூர்கோள் .. .. *
வளைத்தமாமதிபோன்றுளமருதநீர்வைப்பு.... .. .. *

(இதன்பொருள்)

எவ்விடத்திலும்தளைகளாயிருக்கின்ற அகலமாகிய வயல்களில்
முளைத்த செழுமைபொருந்திய தாமரைமலராகிய ஆசனத்தி
ல்-சூற்கொண்டிருப்பதனால் இளைப்பை அடைந்தசங்கங்கள்நி
த்திரைசெய்துகொண்டிருப்பன- அவை நீலநிறமுடைத்தாய்
விளங்கும் ஆகாயத்தில் பரிவேஷத்தால் வளைக்கப்பட்ட பூர
ணசந்திரன்போலிருக்கின்றன-விசாலமாகிய மருதநிலத்தில்.
(எ-று) இப்பாட்டில் பாசொளியென்றது நீலநிறத்தை.(௨௬)

ஓங்குசெந்நெலின்புடையனவுயர்கழைக்கரும்பு... .. .. *
பூங்கரும்பயன்மிடைவனபூகமப்பூகப் .... *
பாங்குநீள்குலைத்தெங்குடங்கநவிவன்பலவுந் .... *
தூங்குதீங்கனிச்சூதநீள்வேலியசோலை .... *

(இதன்பொருள்)

வளர்கின்ற செந்நெற்பயிர்களின் பக்கத்திற் கரும்புகளிருக்கி
ன்றன-கரும்புகளின்புறத்தில் கமுகமரங்கள் நெருங்கியிருக்கி
ன்றன-அக்கரும்புகளின் பக்கத்தில் நீண்ட குலையினையுடைய
தென்னமரங்களிருக்கின்றன-பசுமைபொருந்தியவாழைகளும்
வளமாகியபலாமரங்களும்-தித்திப்பாகிய பழங்கள் தொங்கு
கின்ற மாமரங்களும்-ஆகிய இவைகளின்சோலைவேலியாயிருக்
கின்றன.—(எ-று) கழைக்கரும்பு-மிமிலைச. (௨௭)

நீடுதண்பணையுடுத்தநீண்மருங்கினநெல்லின் .... *
கூடுகுன்றியபவிருக்கையவிருந்தெதிர்கொள்ளும்.. .. .. *
பீடுதங்கியபெருங்குடிமனையறம்பிறங்கு .... *
மாடமோங்கியமறுகணிமல்லன்மூதூர்கள் .... *

(இதன்பொருள்)

வந்த விருந்தாளிகளை யெதிர்கொண்டு உண்பதற்கு அழைக்கின்றபெருமைபொருந்திய இல்லறமானது விளங்கும் பெரிய குடிகளையுடையனவாய் மாளிகைகள்நிறைந்த வீதிகளையுடைய வளம்பொருந்திய புராதனமாகிய ஊர்கள் - குளிர்ச்சியாகிய தீண்டவயல்களை நாற்புறத்தை யுடையனவாகியும் நெற்களஞ்சியங்களுள்ள இருக்கையை உடையனவாகியும் இருக்கின்றன.— (எ-று) (உஅ)

தொல்லைநான்மறைமுதற்பெருங்கலையொலிதுவன்றி .. .. *
யில்லறம்புரிந்தாகுதிவேள்வியிலெழுந்த . .. . *
மல்குதண்புகைமழைதருமுகிற்குலம்பாக்குஞ் ....*
செல்வமோங்கியதிருமறையவர்செழும்பதிகள் .. ..*

(இதன்பொருள்)

பழமையாகிய நான்குவேதங்கள் முதலாகிய பெருமைபொருந்திய மற்றைநூல்களையோதுதலால் உண்டாகிய ஒலிநிறைந்து இல்லறத்தைநடத்தி யாகத்தில்செய்யும் ஆகுதிகளால் உண்டாகிய மிகுந்தபுகையானது மழையைப்பெய்கின்றமேகக்கூட்டம்போல்பரவும்படி பாக்கியந்தழைத்திருக்கும் பிராமணர்களின் செழுமைபொருந்திய ஊர்களிருக்கின்றன.—(எ-று)

தீதுநீங்கிடத்தீக்காலியாமவுணர்க்கு . .. . *
நாதர்நாமருள்புரிந்ததுநல்வினைப்பயன்செய் .. .. *
மாதர்மேதாங்கியமரபுடைமறையவர்வல்லம் .. .. *
பூதிசாதனம்போற்றியபொற்பினால்விளங்கும் .... *

(இதன்பொருள்.)

தீமைபொருந்திய காலியென்கிற அசுரனுக்கு உண்டாயிருந்த தீமைநீங்கப் பரமசிவன் அனுக்கிரகஞ்செய்வதற்கிடமாகிய நல்வினையே தமக்குப்பிரயோசனமாகச்செய்கின்ற கற்புள்ளமனைவிகளை உடையவர்களாகிய நற்குலத்திற்பிறந்த பிராமணர்கள் வாழ்கின்ற திருவல்லமென்னும் ஸ்தலமானது விபூதியையுஞ்சிவபதவியை அடைகிறதற்குக்காரணமாகிய மற்றைக்கிரியைகளையும் அனுஷ்டித்துக்கொண்டுவரும் அழகினால் விளங்கும் (எ-று)

அருவிதந்தசெம்மணிகளும்புறவிலாய்மலரும்... ... .*
பருவியோடைகணிறைத்திழிபாலியின்கரையின் .. ..*
மருவுசங்கைவாழ்சடையவர்மகிழ்ந்தமாற்பேறும் ....*
பொருவில்கோயிலுஞ்சூழ்ந்ததப்புறம்பணைமருதம்.. ...*

(இதன்பொருள்.)

மலையருவிகளால்வாரிவரப்பெற்றஒளிபொருந்தியமணிகளும் காட்டிலிருந்து அரிக்கப்பட்டமலர்களும்-பெரியதாமரைமலர்களையுடையஓடைகளில் நிறைந்து ஓடுகின்றபாலாற்றின்கரையில் இருக்கும் கங்கைதங்கிய சடையை உடையபரமசிவன் மகிழ்ச்சியை அடைந்து எழுந்தருளி யிருக்கின்ற திருமாற்பேறென்னும் ஒப்பற்றகோயிலும் இருக்கின்றது வயல்களைப்புறத்திலுள்ள மருதநிலத்தில்.—(எ-று)வி-மலர்-குறுகிநின்றது.

விரும்புமெய்ம்மையென்பகர்வதுவிரிதிரைநதிக .... *
ளருங்கரைப்பயில்சிவாலயமனேகமுமணைந்து .. .. *
பருங்கையானையையுரித்தவரிருந்தவப்பாசூர் .... *
மருங்குசூழ்தவட்புரிந்ததன்றேமற்றமருதம் ... . *

(இதன்பொருள்.)

விரிந்த அலைகளையுடைய நதிகளின் அருமையாகிய கரையிலிருக்கும் அநேகம் ஸ்தலங்களையும் தன்னிடத்திலுடைத்தாய்ப் பரியயானையை உரித்த பரமசிவன் எழுந்தருளியிருக்கும் திருப்பாசூர் என்னும் ஸ்தலமும் தன்னிடத்திலிருக்க மருதநிலந்தவஞ்செய்திருக்கிறபடியால் இதைப்பார்க்கிலும் விசேஷமாகச்சொல்லவேண்டிய பெருமை என்ன இருக்கின்றது.(எ-று)

பூமரும்புனல்வயற்களம்பாடியபொருநர் .... *
தாமருங்கிளையுடன்றடமென்மலர்மலைந்து .... *
மாமருங்குதண்ணிழலின்மருதயாழ்முரலுங் .... *
காமர்தண்பணைப்புறத்ததுகருங்கழிநெய்தல் .... *

(இதன்பொருள்.)

மலர்கள்மருவியிருக்கும் நீரையுடைய மருதநிலத்தின் போர்க்களத்தைக்குறித்துப் பாடிய உழவர்கள் நெருங்கிய சுற்றத்தாரோடு குளங்களிலிருக்கும் மெல்லிய மலர்களைத் தரித்துக்கொண்டு மாமரத்தினது குளிர்ச்சியாகிய நிழலிலிருந்துமருதயாழ்வாசிக்கின்ற அழகாகிய கழனிகளின் புறத்திலிருக்கின்றது-கருமையாகிய நெய்தற்பூவையுடைய கழி.—(எ-று)

தூயவெண்டுறைப்பரதவர்தொடுப்பனவலைகள் .. .. *
சேயநீள்விழிப்பரத்தியர்தொடுப்பனசெருந்தி .... *
பாயபோரளத்தளவர்களளப்பனவுப்புச் .... *
சாயன்மென்னடையளத்தியரளப்பனதரளம் ... . *

(இதன்பொருள்)

நெய்தல்நிலத்தில் பரிசுத்தமாகிய மணற்றுறையில் செம்படவரால் வலைகள் பின்னப்படுகின்றன-செவ்வரிபரந்த நீண்ட கண்களையுடைய நெய்தல்நிலப்பெண்கள் செருந்தியென்னும் மலர்களை மாலையாகத்தொடுப்பார்கள்-பெரிய அளங்களில் அளவர்கள் உப்பளக்கின்றார்கள்-மயில்போன்ற சாயலையும் மிருதுவாகிய நடையையும் உடைய அளத்தியர்கள் முத்துக்களை அளக்கின்றார்கள்.—(எ-று) (௩௪)

கொடுவினைத்தொழிலுளையர்கள்கொடுப்பனகொழுமீன் .. *
படுமணற்கரைநுளைச்சியர்கொடுப்பனபவளந் .... *
தொடுகடற்சங்குதுறையவர்குளிப்பனவவர்தம் .. .. *
வடிவகிர்க்கண்மங்கையர்குளிப்பனமணற்கேணி .. .. *

(இதன்பொருள்)

கொடியவினைகளைச்செய்கின்ற நுளையர்கள் கொழுமையாகிய மீன்களை விற்கின்றார்கள்-மணற்கரைகளிலிருந்து நுளைச்சியர்கள் பவளத்தை விற்கின்றார்கள்-அக்கடலின் துறையில் வாசஞ்செய்கின்றவர்கள் சகரரால்தோண்டப்பட்ட சமுத்திரத்தில்முழுகிச் சங்குகளையெடுக்கின்றார்கள்-அவர்களுடைய மாவடுவைப்பிளந்தாலொத்த கண்களையுடைய மனைவிகள் மணற்கேணியிற்குளிக்கின்றார்கள்.—(எ-று) (௩௫)

கழிப்புனற்கடலோதமுன்சூழ்ந்துகொண்டணிய. .. .. .. *
வழிக்கரைப்பொதிபொன்னவிழ்ப்பனமலர்ப்புன்னை .. . *
செழிக்குநெய்தலின்விரைமலர்க்கட்சுரும்புண்ணக் .. .... *
கழிக்கரைப்பொதிசோறவிழ்ப்பனமடற்கைதை .. .... *

(இதன்பொருள்)

கழியையுடைய நீர்நிறைந்த கடல்வெள்ளமானது சூழ்ந்து திரைதுக்கொள்ள - அக்கடற்கரையிலிருக்கும் புன்னைமரங்கள் பொன்னிறமாகிய புஷ்பங்களை மலர்கின்றன-தேன்போல்தோன்றுகின்ற வாசனையுற்றநெய்தற்பூவிலுள்ள வண்டுகள் உண்ணும்படி கழிக்கரையிலிருக்கும் மடலையுடைய தாழையானது தமது மலர்களிலிருந்து சோறுகளைச் சொரிகின்றன.—(எ-று) சோறுவது-தாழம்பூவில்பொடிகளையடக்கிக்கொண்டிருக்கும் ஒருவகைக்குலை. (௩௬)

காயல்வண்கரைப்புரைநெறியடைப்பனகவிழ்மட் .. .. ..*
டேயதண்ணறுஞ்செழுமுகைசெறியமுண்டகங்க .. .... *
ளாயநுண்மணல்வெண்மையைமறைப்பனவன்னந் .. ....*
தாயமுன்றுறைச்சூழல்சூழ்ஞாழலின்றாது .. ..*

(இதன்பொருள்)

கழிகளின் வளமாகிய கரையின் சிறுவழியை மட்கள் நிறைந்த சிவந்த குளிர்ச்சியும் வாசனையுமுள்ள முதிருத பூங்குலைகளையுடைய தாழஞ்செடிகள் அடைக்கின்றன- அன்னந் தாவிவிளையாடும் துறையையுடைய நெய்தல்நிலத்திலிருக்குஞ் ஞாழற்பூக்களின்தாதுக்கள் கடற்கரையின் சிறியமணல்களின் வெண்மையைமறைக்கின்றன.—(எ-று) (ருஎ)

வாம்பெருந்திரைவளாகமுன்குடிபயில்வலைப்பிற் .... ..*
ரும்பரப்பியகயல்களின்விழிக்கயல்தவிர .. ..*
காம்பினேர்வருந்தோளியர்கழிக்கயல்விலைசெய் ....*
தேம்பொதிந்தசின்மழலைமென்மொழியசெவ்வழியாழ் .. *

(இதன்பொருள்.)

தாவிவீசுகின்ற பெரிய அலைகளையுடைய கடலின் அருகிடத்தி லுள்ள நெய்தல்நிலத்தில் செம்படவர் குடியிருக்கும் இடங்களில் அவர்களால்பரப்பிக்காயப்போடப்பட்டிருக்கும் கெண்டைமீன்களால்-மூங்கிலையொத்த தோள்களையுடைய நுளைச்சியர்கள் தங்கள்கண்களுக்கு உண்டாகிய குறைவுநீங்கும்படி அந்தக்கழிக்கயல்களை விலைகூறுகின்ற தேன்போல இனிப்பாகிய சிலமழலைச்சொற்களினிசைக்குஒப்பச்செவ்வழியாழ்வாசிக்கப்படுகின்றன.—(எ-று) (ருஅ)

மருட்கொடுந்தொழின்மன்னவனிறக்கியவரியை .... .. *
நெருக்கிமுன்றிருவொற்றியூர்நீங்கலென்றெழுது .... .. *
மொருத்தர்தம்பெருங்கோயிலினொருபுறஞ்சூழ்ந்த .... *
திருப்பரப்பையுமுடையதத்திரைக்கடலவைப்பு ....- .. *

(இதன்பொருள்.)

மயக்கமும் கொடுமையுமாகிய தொழிலையுடைய ஒரு அரசன் எல்லாக்கோயில்களுக்கும் படித்திட்டத்தைக்குறைப்ப அதை ஆக்ஷேபித்து-திருவொற்றியூர் நீங்கலாகவென்று எழுதிய ஒப்பற்றபரமசிவன் வீற்றிருக்குங் கோயிலுக்கு ஒருபக்கத்திற் சூழ்ந்திருக்கும் பரிசுத்தமாகிய இடத்தையுமுடையது - மேற்

சொல்லிய அலைகளையுடைய கடலின் அருகிடமாகிய நெய்தனிலம்.—(எ-று) (௩௯)

மெய்தரும்புகழ்த்திருமயிலாபுரிவிளாகும் .... *
மொய்தயங்குதண்பொழிற்றிருவான்மியூர்முதலாப் .... *
பைதரும்பணியணிந்தவர்பதிபலவால் ....*
நெய்தலெய்தமுன்செய்தவர்நிறைதவஞ்சிறிதோ . .. .. *

(இதன்பொருள்)

மெய்ம்மையாகிய புகழையுடைய திருமயிலையும்-வாசனைபொருந்திய நெருக்கிய குளிர்ச்சிபொருந்திய சோலையையுடைய திருவான்மியூருமுதலாகப்பட்டதையுடையபாம்பினைத்தரித்தபரமசிவனார்வீற்றிருக்கும் மற்றைத்திருப்பதிகள் அனேகமிருக்கின்றன-நெய்தனிலமானது அவைகளைத் தன்னிடத்திலுடைத்தாயிருக்கமுன்செய்ததவம் குறைவானதோ.—(எ-று) மயிலாபுரி-மரூஉமுடிபு. (௪௰)

கோடுகொண்டெழுந்திரைக்கடற்பவளமென்கொழுந்து ...*
மாடுமொய்வளர்சந்தனச்சினைமிசைவளரு ....*
நீடுநெய்தலுங்குறிஞ்சியும்புணர்நிலம்பலவா .... *
லாடுநீள்கொடியாடமாமல்லையேயனைய ....*

(இதன்பொருள்)

அலைகளையுடைய சமுத்திரத்தில் கொம்புகொம்பாய் எழும்பியுள்ளதிருதுவாகிய பவளத்தினது கொழுந்துகள் பக்கத்தில் நெருக்கமுற்றமலைகளிலிருக்கும் சந்தனமரங்களின் கொம்புகளில் வளரும்படி நீண்ட நெய்தல்நிலமும்-குறிஞ்சிநிலமும்-திணைமயக்கமாகப்புணர்ந்த நிலங்கள்பலவாம், அவை நீண்டகொடிகளாடுகின்ற மேல்வீடுகளையுடைய மல்லைநகரத்திற்கு ஒத்திருக்கின்றன.—(எ-று) மல்லை-மாவலிபுரம்-அது மலையை உடைத்தாய்க்கடற்கரையிலிருக்கின்றமையால்- மல்லையேயனையவென்றார். (௪௧)

மலைவிழிப்பனவெனவயற்சேல்வரைப்பாறைத் ....*
தலையுகைப்பயந்தகைச்செறுவிடைநெடுங்கருமான் .... .,*
கலைகுதிப்பனகரும்பகட்டேர்திகழ்ப்பவுமா ....*
மலைபுனற்பணைகுறிஞ்சியோடணைவனவனேகம் ....*

(இதன்பொருள்.)

மருதநிலத்திலிருக்கின்ற சேல்கள் மலைகள் விழித்துக்கொண்டிருப்பதுபோல்தோன்ற-மலையின்பாறைகளில் தாவிவிழவும்

தனைகளாகநடந்திருக்கும் வயல்களையுடையமருதநிலத்திற்க ரிய ஆண்மான்கூட்டங்கள் குதிப்பது அந்நிலத்திலுள்ள எரித் கட்டும் கரிய எருமைக்கடாக்களையொப்பவுமாகிநீர் உலவுகின் ற வயல்களையுடைய மருதநிலம் குறிஞ்சிநிலத்தோடு மயங்கியி ருக்கின்றது- இப்படியமைவிடங்களில்.(எ-று முல்லைநிலத்து க்கருப்பொருளாகிய மானைக் குறிஞ்சிநிலத்ததாகச்சொல்லி யிருக்கின்றது; கருமாவென்பதைப் பன்றியென்பாருமுளர்.

புணர்ந்தவாவிலாட்புறவிடைக்குறுமுயல்பொருப்பி ....*
னணைந்தவான்மதிமுயலினையினமெனவணைந்து .... *
மணங்கொள்கொல்லையில்வாகுபோர்மஞ்சனவரைக்கா .. *
மிணைந்துமுல்லையுங்குறிஞ்சியுங்கலப்பனவெங்கும் .... ..*

(இதன்பொருள்)

மாட்டுமந்தைகள் நெருங்கியிருக்கும் முல்லைநிலத்தில் தங்கிய சிறியமுயலானது குதித்துமலையில் உராய்ந்துபோகின்ற பெருமைபொருந்திய சந்திரனிடத்திலுள்ள முயலைத்தன்சாதியெ ன்றுசேர்ந்தும் வாசனைபொருந்தியமுல்லைநிலத்தில் இருக்கும் வாகுபோர்கள்கரியநிறத்தையுடைய மேகங்கள்தவழும் மலைக ளையொத்தும் முல்லைநிலமும் குறிஞ்சிநிலமுங்கலந்திருப்பன எவ் விடத்தும் — (எ-று) (௪௫)

கவருமீன்குவைகழிபவர்கானவர்க்களித்துச் ....*
சிவலுஞ்சேவலுமாறியுஞ்சிறுகழிச்சியர்க .... *
ளவலாம்பலுக்கெயித்தியர்ப்பவளமுத்தளந்து ....*
முவரிநெய்தலுங்கானமுங்கலந்துளவொழுக்கம் ....*

(இதன்பொருள்.)

நெய்தல்நிலத்திலுள்ளவர்கள் தாங்கள்பிடித்தமீன்குவியலைமு ல்லைநிலத்திடையர்களுக்குக்கொடுத்துக்கவுதாரியையுஞ்சே வல்களையும்பெற்றுக்கொண்டும் சிறியநெய்தல்நிலப்பெண்கள் அவலைவிலைக்கும்-தினைக்கும்-இடைச்சிகளுக்குப் பவளத்தை யுமுத்தையும் அளந்தும்கடற்சார்பாகியநெய்தலும் முல்லைநில மும்திணைமயக்கமாகியஒழுக்கத்தால் நெருங்கியுள்ளன (எ-று) இச்செய்யுளில்-கானவரைக்குறிஞ்சிநிலத்தாரென்றும்- எயித் தியரை வேடச்சிகளென்றும் உரைகூறின்-அகப்பொருளுக்கு மாறுபடுதலால்-இடையரிடைச்சிகளென்றாம். (௪௬)

அயனரும்புறவினிலிடைச்சியரணிநடையுங் .... *
வியனெடும்பணையுழத்தியர்சாயலும்விரும்பி .. .. *

யியலுமன்னமுந்தோகையுமெதிரெதிர்பயில .... *
வயலுமுல்லையுமியைவனபலவுளமருங்கு .... *

(இதன்பொருள்)

சமீபத்திலிருக்கும் வாசனைவீசு முல்லைநிலத்து இடைச்சியர்களுடைய அழகுற்றநடையையும் அகலமாய்நீண்டுள்ள வயல்சூழ்ந்த மருதநிலத்துமாதர்களுடைய உடலின்சாயலையும் இச்சித்து அழகுள்ள அன்னமும் மயிலும் எதிரெதிராகச் சஞ்சரிக்க மருதநிலமும் முல்லைநிலமும் அடுத்திருக்கும் இடங்கள்பலவுண்டு தொண்டைநாட்டில் — எ-று) (௪௫)

மீளுமோதமங்கொழித்தவெண்டரளமுங்கமுகின் .. .. *
பாளையுக்கவும்விரவலிற்பரத்தியர்பனைமென் .... *
றோளுழத்தியர்மகளிர்மாறுதமுன்றொதுக்கு .. .. *
நீளுநெய்தலுமருதமுங்கலந்துளநிலங்கள் .... *

(இதன்பொருள்)

போய்த்திரும்பி வரும் அலைகள் கொழித்த வெண்மையாகிய முத்துக்களும்-கமுகம்பாளைகளினரும்புகளும்- ஒன்றாகக்கலந்து கிடக்கின்றபடியால் பரத்தியர்களும் மூங்கில்போன்ற மெல்லியதோள்களையுடைய பள்ளச்சிகளும் இவைகள் தம்முத்துக்கள்என்றும்பாளைகள்என்றும்தெரியாமல் கலகமிட்டுப் பிரித்துச்சேர்த்துக்கொள்ளுகின்ற நீண்டநெய்தல்நிலமும் மருதநிலமும்கலந்துள்ள நிலங்கள் இருக்கின்றன.—(எ-று) அம்-சாரியை. அங்கு ஒழித்தவெனினும்பொருந்தும். (௪௬)

ஆயநானிலத்தமைதியிற்றத்தமக்கடுத்த .. .. *
மேயசெய்தொழில்வேறுபல்குலங்களின்விளங்கித் ...... *
தீயவென்பனகனவிலுநினைவிலாச்சிந்தைத்... .... *
தூயமாந்தர்வாழ்தொண்டைநாட்டியல்புசொல்வாந்தோ *

(இதன்பொருள்.)

இப்படிப்பட்ட குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்கின்ற நால்வகைப் பட்டமைவு பொருந்திய நிலங்களில் வாசஞ்செய்து வெவ்வேறுதொழில்களைச்செய்கின்ற அனேகசாதிகளால் விளக்கமுற்றுத் தீமையாகிய காரியங்களைச்செய்யச் சொப்பனத்திலும் நினையாதமனதையுடைய பரிசுத்தமுள்ள மனிதர்களுக்கு இருப்பிடமாகிய தொண்டைநாட்டினுடைய சிறப்பைச்சொல்வதற்கு ஓர் அளவுள்ளதோ—(எ-று) (௪௭)

இவ்வளந்தருபெருந்திருநாட்டிடையென்று .... *
மெய்வளந்தருசிறப்பினுலகெலாம்வியப்ப .... *
வெவ்வுகங்களுமுள்ளதென்றியாவருமேத்துங் .. .. *
கைவிளங்கியநிலையதுகாஞ்சிமாநகரம் .... *

(இதன்பொருள்)

இப்படிப்பட்ட வளங்களையுடைய பெருமைபொருந்தியதொண்டைநாட்டில்எப்பொழுதுங்குற்றமற்ற சிறப்புண்டாயிருத்தலால்- உலகத்தாரெல்லாரும் சந்தோஷிப்பட எந்தயுகங்களிலும் உள்ளதென்றுயாவருமெச்சுகின்ற ஒழுக்கத்தால் விளங்குந்தன்மையை உடையதுகாஞ்சிநகரம்.—(எ-று) (௪௮)

ஆனதொன்னகரம்பிகைதம்பெருமானை .... *
மானவர்ச்சனையாலொருகாலத்துவழிபட் .... *
டூனமில்லறமனைத்துமுலகுய்யவைத்த ... . *
மேன்மைபூண்டவப்பெருமையையறிந்தவாவிளம்பில் .... *

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட பழமையாகிய காஞ்சீபுரமானது பார்வதியார் தமதுபிராணனாகிய பரமசிவனைப் பெருமைபொருந்திய அருச்சனையினால் முன்னொருகாலத்தில் வழிபாடுசெய்து குற்றமற்ற அனேகதருமங்களை உலகத்தார் பிழைக்கும்பொருட்டு வளர்த்த சிறப்பை உடைய அதன்பெருமையை அறிந்தபிரகாரம் சொல்லப்புகுந்தால்.—(எ-று) (௪௯)

வெள்ளிமால்வரைக்கயிலையில்வீற்றிருந்தருளித் .... *
துள்ளுவார்புனல்வேணியாரருள்செயத்தொழுது .. .... *
தெள்ளுவாய்மையினாகமத்திறனெலாந்தெரிய ... . *
வுள்ளவாறுகேட்டருளினாளுலகையாளுடையாள் .. .. .. *

(இதன்பொருள்.)

பெருமைபொருந்திய வெள்ளியங்கிரியில் வீற்றிருந்து ததும்பி ஒழுகுந்தன்மையையுடைய கங்கையைத்தரித்த சடையினராகியசுவாமி-கிருபைசெய்யவணங்கித்தெளிந்துநடைத்தேறுவதற்குககாரணமாயிருக்கும் வாக்கியங்கள் அடங்கியுள்ளவலிமையை உடைய ஆகமங்களெல்லாம் தெரியும்படி உள்ளபடி கேட்டறிந்துகொண்டார் உலகத்தையாளுகின்ற பார்வதியார்.—(எ-று) (௫௦)

எண்ணிலாகமமியம்பியவிறைவர்தாம்விரும்பு .... *
முண்மையாவதுபூசனையெனவுளாத்தருள ... . *
வண்ணலார்தமையர்ச்சனைபுரியவாதரித்தாள் .... *
பெண்ணினல்லவளாயினபெருந்தவக்கொழுந்து .. .. .. *

(இதன்பொருள்)

அளவில்லாத ஆகமங்களைத்திருவாய்மலர்ந்தருளியபரமசிவன் தாம் உண்மையாகப் பூசையையேவிரும்புவோமென்று சொல்லக்கேட்டுத் தெய்வத்தன்மையை உடையமாதர்களில் உயர்ந்தவளாகிய பெருமைபொருந்திய தவத்துக்குக் கொழுந்து போன்றுள்ள பார்வதியார் பரமசிவனையர்ச்சனைசெய்யவிரும்பினார்.—(எ-று) (௬௧)

நங்கையுண்ணிறைகாதலைநோக்கிநாயகன்றிருவுள்ளத்து மகிழ்ந்
த்தே, யங்கணெய்தியமுறைமையினாற்றோன்றவைத்ததென்கொலி
ம்பாலென்றருளவ, விங்குநாதநீமொழிந்தவாகமத்தினியல்
பினாலுனையர்ச்சனைபுரியப், பொங்குகின்றதென்னாசையென்
றிறைஞ்சிப்போகமார்த்தபூண்முலையினள்போற்ற . . ... *

(இதன்பொருள்.)

பரமசிவன்தமதுதேவியார்தம்மனதில்-பூசைபண்ணமிகுந்தஆசைகொண்டிருக்கிறதை அறிந்து திருவுள்ளத்தில்விருப்பமுண்டாய் அழகுபொருந்துற நகையுண்டாகி உனக்கென்னவேண்டியதென்றுகேட்க இப்போது நாதனே நீர்கட்டளையிட்டவாகமத்தின்விதிப்படி உம்மை அர்ச்சனைசெய்ய எனக்கு ஆசைமேன்மேலும் விர்த்தியாகின்றதென்று வணங்கிப் பார்வதியார் ஸ்தோத்திரஞ்செய்ய.—(எ-று) போகமார்த்தபூண்முலையினள்-மேன்மையானபோகத்தைஅடைந்த-அணிகளையுடைய ஸ்தனங்களையுடையவளாம். (௬௨)

தேவதேவனுமதுதிருவுள்ளஞ்செய்துதென்றிசை மிக்கசெய்த
வத்தால்; யாவருந்தனையடைவதுமண்மேலென்றுமுள்ளதுகா
ஞ்சியங்கதனில், மாவமர்ந்தநம்மிருக்கையிலணைந்துமன்னுபூ
சனைமகிழ்ந்துசெய்வாயென், றேவவெம்பெருமாட்டியும் பிரி
யாவிடைகொண்டெழுந்தருளுதற்கிசைந்தாள். . .. .. *

(இதன்பொருள்.)

தேவர்களுக்கெல்லாம்நாயகராகிய பரமசிவனும் அம்மொழியைத் திருவுள்ளங்கொண்டு மற்றுந்தென்றிசையானது செய்த மிகுந்ததவபலத்தால் எப்படிப்பட்டவர்களுந் தன்னை

யடையும்படி பெருமையுள்ளதும் பூலோகத்தில் எல்லாம் அழியாமலிருப்பதுமாயுள்ளதுகாஞ்சிபுரமாம் அதில் மாமரத்தின் கீழிருக்கும் நம்மிடத்திற்கு வந்து நிலைமையான ஆராதனத்தைச் செய்யென்று கட்டளையிட எமது பிராட்டியார் பார்வதியாரும் பிரியக்கூடாமையினால் வருத்தங்கொண்டு பின்பு எழுந்து போவதற்குச் சம்மதித்தார்.— எ-று) (௫௩)

ஏதமில்பல்யோனியெண்பத்துநான்குநூறாயிரந்தனுள்வைத்த பேதமும்புரந்தருளுமக்கருணைப்பிரான்மொழிந்த வாகமவழி பேணிப், போதுநீர்மையிற்றொழுதனள்போதப் பொருப்பின்வேந்தனும்விருப்பின்வந்தெய்தி, மாதவம்புரிந்தருளுதற்கமைந்தவளத்தொடும்பரிசனங்களைவிடுத்தான் .. .. *

(இதன்பொருள்.)

பார்வதிதேவி குற்றமற்ற எண்பத்துநான்குநூறாயிர யோனிபேதங்களையுங்காப்பாற்றுகின்ற கருணையையுடைய பரமசிவன் அருளிச்செய்த ஆகமமார்க்கத்தின்படி நடக்க விரும்பிப்போகவேண்டுமென்னுமனதோடு தொழுதுபுறப்பட இமவத்பர்வதராசனும் விருப்பத்தோடு வந்தடைந்து மகத்தாகியதவஞ் செய்கிறதற்கு அமைந்தவளத்துடனே பரிசனங்களை அனுப்புவித்தான்.—(எ-று) (௫௪)

துன்னுபல்லுயிர்வானவர்முதலாச் சூழ்ந்துடன்செலக் காஞ்சியிலணைபத், தன்னைநேர்வரும்பதுமமாநாகந் தம்பிராட்டிதாடலைமிசைவைத்தே, யன்னையாயுலகனைத்தையுமீன்ற வடியனேனுறைபிலமதனிடையே, மன்னுகோயில்கொண்டருளுவாயென மலைமடந்தைமற்றதற்கருள்புரிந்து .... *

(இதன்பொருள்)

பார்வதிதேவியார்-தேவர்கள் முதலாகச்சொல்லப்பட்ட பல வகைப்பட்ட ஜீவராசிகளும், நாற்புறமுஞ் சூழ்ந்துவரக் காஞ்சிபுரத்துக்குவந்தவுடனே தனக்குத்தானே ஒப்பாயிருக்கின்ற அஷ்டமாநாகத்தில் ஒன்றாகிய பதுமனென்னும் பாம்பு அம்மையின்திருவடிகளை சிரசில் வைத்துக்கொண்டு தாயாகி எல்லாவுலகத்தையு மீன்ற தலைவியே அடியேன் வாசஞ்செய்கின்ற பிலத்தினிடத்திலேயே ஸ்தானமாகவீற்றிருக்கவேண்டுமென்று பிரார்த்திக்க-அதற்குச் சம்மதித்தருள்செய்து.(எ-று) பிலம்-பூமியிலுள்ளமுழை. (௫௫)

அங்குமன்னுலகத்துயிர்தழைப்பவளவிலின்பத்தினருட்கருவிருத்தித், திங்கடங்கியபுரிசடையார்க்குத்திருந்துபூசனைவிரும்பி

ளர்செய்ய, வெங்குநாடவுந் திருவிளையாட்டா லேகமாமுக
லெதிர்படாதொழியப், பொங்குமாதவஞ்செய்து காண்பதற்
கேபுரிவுசெய்தனள்பொன்மலைவல்லி . .. . *

(இதன்பொருள்)

அக்காஞ்சீபுரத்தில்-நிலைபெற்ற உலகத்தில்உள்ள உயிர்களெல் லாம் விரு ம்பியடையும்பொருட்டு அளவற்ற இன்பங்களைக்கொ டுக்கும் கிருபைக்குஇடமாயிருந்து-சந்திரனைத்தரித்த முறுக் காகிய சடையையுடையபரமசிவனுக்குத்திருத்தமாகிய பூசை யைவிருப்பத்தோடு செய்ய-எவ்விடத்துந்தேட ஒப்பற்றகட வுளாகியபரமசிவன்தமது திருவிளையாட்டினால் தரிசனங்கொ டுக்காமல் மறைய-சிறந்த தவசுபண்ணிக் காண்பதற்காக வி ரும்பினர்- இமாசலராசன்துபுத்திரியாராகிய பார்வதியார்.—
(எ-று) (௫௭)

நெஞ்சமீசனைக்காண்பதேவிரும்பிநிரந்தரந் திருவாக்கினி னி
கழ்வ, தஞ்செழுத்துமேயாகவாளுடைய வம்மைசெம்மலர்க்
கைகுவித்தருளித், தஞ்சமாகியவருந்தவம்புரியத்தரிப்பரோய
வடனிப்பெருங்கணவர், வஞ்சநீக்கியமாவின் மூலத்தில்வந்து
தோன்றினார்மலைமகள்காண .... *

(இதன்பொருள்)

எம்போல்வாரை ஆட்கொண்டவராகியபார்வதிதேவி சுவாமி யைக்காண்பதேமுக்கியமாக மனதுவிரும்பவும்எப்பொழுது ந் திருவாயில் ஐந்தெழுத்துமாத்திரமே உச்சரிக்கப்படவும் சி வந்தபூவையொத்த கையைக்கூப்பித்தொழுது அன்பிற்கேது வாகிய அருமையான்தவத்தைச்செய்யவும் ஒப்பற்ற பரமசிவ ன் தரியாதவராகிக் குற்றமற்றமாமரத்தினடியில் இமவத்பர்வ தராசகுமாரியாகிய அவ்வுமாதேவி இனிக்காணும்பொருட்டு வந்து தோற்றமுற்றார்.—(எ-று) (௫௮)

கண்டபோதிலப்பெருந்தவப்பயனுங்கம்பமேவிய தம்பெரு
மானை, வண்டுலாங்குழற்கற்றைமுன்றாழ்வணங்கிவந்தெழுமா
வைசமுன்பொங்கக், கொண்டகாதலின்விருப்பளவின்றிக்குறித்
த பூசனைகொள்கைமேற்கொண்டு, தொண்டையங்கனிவாயுமை
நங்கைதாய்வர்ச்சனைதொடங்குதல்புரிவாள் .. .. *

(இதன்பொருள்.)

தாஞ்செய்ததவத்திற்கு ஒப்பற்றபயனாகி ஏகம்பத்தை அடை ந்த பெருமானாகிய கைலாசபதியைப்பார்த்தபோது வண்டுகள்

உலாவுகின்ற கற்றையாயுள்ள கூந்தலையுடைய பார்வதியார்தாமும்படி வணங்கிக்-காணவேண்டுமென்று முன்உண்டாயிருக்கும் ஆசை அதிகமாகத் தாங்குறித்திருந்த பூசையைச்செய்யவேண்டுமென்றுள்ள ஆசைக்கு ஒரு அளவில்லாமல் கொவ்வைப்பழம்போன்றவாயுள்ள அம்மை பரிசுத்தமாகிய அர்ச்சனைசெய்ய விரும்புவார்.—(எ-று) (௫௮)

உம்பர்நாயகர்பூசனைக்கவர்தாமுரைத்தவாகமத் தன்மையே தலைநின், றெம்பிராட்டியர்ச்சனைபுரிவதனுக்கியல்பில் வாழ்திருச்சேடியரான, கொம்பனார்கள்பூம்பிடகைகொண்டணைக்குலவுமென்றளிரடியிணையொதுங்கி; யம்பிகாவனமாந்திருவனத்திலான தூநறும்பூமலர்கொய்தாள்.. .. .. *

(இதன்பொருள்)

தேவர்களுக்குநாயகராகிய பரமசிவனைப் பூசைசெய்வதற்காக அவரருளிச்செய்த ஆகமத்திலிருக்கும் உண்மையாகியவிதிகளையே தலைமையாகஎண்ணி எமக்குத்தாயாராகியபார்வதி அர்ச்சனைபண்ணுதற்குத்தொண்டுசெய்யுந் தன்மையை உடைய கொம்புபோன்றபாங்கிமார்கள் புஷ்பக்குடலையை எடுத்துக்கொண்டுவரப் பிரகாசிக்கின்ற மேன்மையாகிய தளிர்போன்ற பாதங்களால், சிறுகத்களுக்கு ஒதுங்கிநடந்து அம்பிகாவனமெங்கிற அழகாகியவனத்தில் மலர்ந்திருக்கும்பரிசுத்தமாகிய மலர்களைக்கொய்தாள்.—(எ-று) (௫௯)

கொய்தபன்மலர்கம்பைமாநதியிற் குல்வுமஞ்சனநிலவுமெய்ப்பூச்சு, நெய்தருங்கொழுந்தூபதீபங்கணிறைந்தசித்தையினீடியவன்பின்; மெய்தரும்படி வேண்டினவெல்லாம் வேண்டுபோதினிலுதவமெய்ப்பூசை, யெய்தவாகமவிதியெலாஞ் செய்தாளுயிர்கள்யாவையுமீன்றவெம்பிராட்டி ....*

(இதன்பொருள்.)

பலமலர்களைப்பறித்துத் திருமஞ்சனமாகக் கம்பையாற்றினீரையும்திருமேனியில்தரிக்கும் பிரகாசமுள்ளசந்தனத்தையும், நெய்வார்த்தேற்றும்தீபங்களையும்; நெருங்கியபரிமளப்புகையை உடையதூபங்களையும், களிப்பினால்நிறைந்தமனதில் நிலைபெற்றஅன்போடுமற்றும்உண்மையாகவேண்டியபூசாதிரவியங்களையெல்லாம் வேண்டுங்காலங்களில்பரிசனங்கள்உதவஆகமவிதிப்படி மெய்மையான வழிபாடாகச்செய்யவேண்டியஎல்

லாஞ்செய்தார்- எல்லாவுயிர்களையுமீன்ற எமது தாயாராகிய பார்வதிதேவி.—(எ-று) (கூ0)

கரந்தரும்பயனிதுவெனவுணர்ந்துகர்பமேவியவும்பர்நாயக ர்பா, லிரந்தகாதல்செயுள்ளத்தளாகிநீடுதன்மைகளியாவையு ம்பெருக, வரந்தரும்பொருளாமலைவல்லி மாறிலாவகைமலர் ந்தபேரன்பாற், சிரம்பணிந்தெழுபூசைநாடோறுந் திருவுளங் கொளப்பெருகியதன்றே .... *

(இதன்பொருள்)

இப்படிப்பூசைசெய்வது கைபெற்ற பேறென்று அறிந்து ஏக ம்பத்தில்வீற்றிருக்கும் தேவாதிதேவராகிய பரமசிவனிடத்தி ல் ஆசைகொண்டமனதையுடையவராய்ச்சிறந்தநன்மைகள்யா வுமுண்டாக யாவர்க்கும் வரத்தைக்கொடுக்கும் மலையரையன் மகளாராகிய பார்வதியார் மாறுபாடில்லாமல்விளங்கிய பெரு மைபொருந்திய அன்பினால் தலையினாலே வணங்கிச்செய்கின்ற பூசை எந்நாளும் செய்யும்படி விருத்தியாயிற்று.(எ-று)(கூக)

நாதரும்பெருவிருப்பொடுநயந்து நங்கையர்ச்சனைசெய்யும ப்பொழுதிற், காதல்மிக்கவோர்திருவிளையாட்டினாற்கனங்குழை க்கருள் புரிந்திடவேண்டி, யோதமார்கடலேழுமொன்றாகி யோங்கிவானமுமுட்படப்பரந்து, மீதுசெல்வது போல்வரக் கம்பைவெள்ளமாந்திருவுள்ளமுஞ்செய்தார் ....*

(இதன்பொருள்)

சுவாமியும் மிகுந்த ஆசையோடுநயந்து-பார்வதியார் தம்மை ப்பூசைசெய்யும்பொழுதில் அவர்க்கு அருள்செய்யவிரும்பி இஷ்டங்கொண்டருளிய ஓர்திருவிளையாட்டாக வெள்ளம்நிறை ந்த எழுசமுத்திரமும் ஒன்றாகித் தேவலோகமுங் கீழாகும்ப டி எழும்பிப்பார்த்து மேலேவருவதுபோலக் கம்பையாற்றில் வெள்ளம்வரும்படி நினைந்தருளினார்.—(எ-று) (கூஉ)

அண்ணலாரருள்வெள்ளத்தைநோக்கியங்கயற்கண்ணி தம்பெ ருமான்மேல், விண்ணெலாங்கொளவரும் பெருவெள்ளமீது வந்துறுமெனவெருக்கொண்டே, யுண்ணிலாவிய பதைப்புறு மாதலுடன்இருக்கையாற்றடுக்கிலாமை, தண்ணிலாமலர்வே ணியினாரைத்தழுவிக்கொண்டனடன்னையேயொப்பாள் .. *

(இதன்பொருள்)

கைலாசபதியின் கட்டளையால்வருகின்ற வெள்ளத்தை அழகிய

மீன்போன்ற கண்களையுடைய ஒப்பற்ற பார்வதியார்பார்த்து ஆகாயமுழுதும் கொள்ளும்படிவரும் இந்தப் பெரியபிரவாகமானது தம்முடைய ஆண்டவன்மேலும் வருமென்றுபயந்து மனதில்நின்றும் பலதத்தெழும்புகின்ற ஆசையோடு திருக்கைகளால் வரவொட்டாமல் மறிக்க- அதுநில்லாமையைக்கண்டு குளிர்ச்சிபொருந்திய சந்திரன்விளங்கும் சடையை உடைய சுவாமியை தழுவிக்கொண்டார்.—(எ-று) (சுங)

மலைக்குலக்கொடிபரிவுறுபயத்தான்மாவின்மேவியதேவர்நாயகனை,முலைக்குவட்டொடுவளைக்கையாலெருக்கிமுறுகுகாதலாலிறுகிடத்தழுவச், சிலைத்தனித்திருநுதற்றிருமுலைக்குஞ்செந்தளிர்கரங்களுக்குமெத்தெனவே, கொலைக்களிற்றுரிபுனைந்த தம்மேனிகுழைத்துகாட்டினார்விழைந்தகொள்கையினார் .. *

(இதன்பொருள்)

பார்வதிதேவி சுவாமியின்திருமேனிக்கு அபாயம்வருமென்கிற துன்பத்தோடு பயமும் உண்டாகி ஆண்டவனைச்சிகரம்போன்ற ஸ்தனங்களாலும், வளையலையணிந்த கைகளாலும் நெருக்கி அதிகவாசையால் இறுகத்தழுவும்போது தேவியினுடைய அழகிய கொங்கைகளுக்கும் சிவந்த தளிர்போன்றகைகளுக்கு மெத்தென்று-கொலைசெய்யும்வன்மையை உடைய ஆனையின் தோலைப்போர்த்த தம்முடைய திருமேனியைக் குழையும்படி செய்தார் விருப்பங்கொண்டசுவாமி.—(எ-று) (சுச)

கம்பர்காதலிதழுவமெய்குழையக்கண்டுநிற்பவுஞ் சரிப்பவுமான, வும்பரோமுதல் யோனிகளெல்லாமுயிருமியாக்கையுமுருகியொன்றாகி, யெம்பிராட்டிக்குமெல்லியராணமென்று மேகம் பரொன்றெடுத்தேத்த, வம்புலாமலர்நிறையவிண்பொழியக் கம்பையாறுமுன்வணங்கியதன்றே .. ..*

(இதன்பொருள்.)

ஏகம்பர் தமதுமனைவியார் தழுவுதலால் திருமேனிகுழையப் பார்த்துச் சரமும்அசரமுமாகிய தேவர்கள்முதல் எழுவகைப் பட்டஜீவராசிகளும்-உடலமும் உயிரும் உருகிஒருதன்மைப் பட்டுச் சுவாமிஎமது தாயாரகியபார்வதிதேவியார்க்குமென்மையானதேகத்தை உடையவராணமென்றுஸ்தோத்திரஞ்செய்யவும்- வாசனைபொருந்திய மலர்கள் ஆகாயத்திலிருந்து நிறையும்படிபொழியவும்-கம்பையின்வெள்ளமானதுசுவாமியின்திருவடி அளவும்வந்துவணங்கி அடங்கிவிட்டது.—(எ-று)

பூதியாகிய புனிதநீறுடிப் பொங்குகங்கைதோய்முடிச் சடைபுனைந்து, காதில்வெண்குழைகண்டிகைதாழக்கலந்தயோகத்தின் மருவியகருத்தர், லாதிதேவனாராயுமாதவஞ்செ டவ்வாங்கொலோவகிலமீன்றளித்த, மாதுமெய்ப்பயன்கொடுப்பவேகொண்டுவளைத்தழும்புடன்முலைச்சுவடணிந்தார் .. .. *

(இதன்பொருள்.)

மேன்மைபொருந்திய கடவுளாயிருந்தும் பரிசுத்தமாகியவிபூதியை உத்தூளனமாகத்தரித்துப்பொங்குகின்ற கங்கை தங்கும்படியானமுடியில் சடைகளைப் புனைந்துகொண்டு திருச்செவிகளில் வெண்மைபொருந்திய குழைகளும் - கண்டிகையும் தாழும்படியிருந்து யோகம்பொருந்திய கருத்தராகொண்டு செய்த தவத்தின்பயனுலேதானோ - உலகத்தையெல்லாம்பெற்று இரட்சித்தபார்வதிதேவிதேகஸ்பரிசமுண்டாகப்பெற்றுவளையின்தழும்போடு ஸ்தனங்கள்பதிந்த குறியையுங் கொண்டருளினார் —(எ - று) (௬௬)

கோதிலாவமுதனையவண்முலைக்குக்குழைந்ததம் மணவாளநற்கோல, மாதுவாழவே காட்டிமுன்னின்று வரங்கள்வேண்டுவ கொள்கவென்றருள, வேதகாரணராயவேகம்பர் விரைமலர்ச் செய்யதாமரைக்கழற்கீ, ழேதநீங்கியபூசனைமுடிந்ததின்மை தானறிவிப்பதற்கிறைஞ்சி. .. .. *

(இதன்பொருள்)

குற்றமற்ற அமிர்தத்தையொத்ததேவியின தஸ்தனங்களுக்குக் குழைவுற்ற தமது தன்மைபொருந்திய தம்மணவாளக்கோலத்தை - பார்வதியார்தரிசனஞ்செய்யக் காண்பித்து முன்னே நின்று நீ வேண்டியவரங்களைக் கேட்டுக்கொள்ளென்று அருளிச்செய்ய அம்மை வேதங்களுக்குக்காரணராயிருக்கின்ற ஏகாம்பரநாதரது வாசனைபொருந்திய சிவந்ததாமரை மலர்போன்ற பாதத்துக்குக்கீழ் குற்றமறச்செய்யும் பூசையானது முடியாமலிருப்பதை அறிவிக்கும்படியாகவணங்கி.(எ - று) (௬௭)

அண்டர்நாயகரெதிர்நின்றுகூறுமளவிலஞ்சலியஞ்சலி கூப்பிக், கொண்டவிற்றையின்பூசனையின்றாக்குறைநிரம்பிடக் கொள்கவென்றருள, வண்டுவார்குழன் மலைமகள்கமலவதனநோக்கியமலர்க்கணெற்றியின்மேன், முண்டநிற்றர்நின் பூசனையென்றுமுடிவதில்லைநம்பாலெனமொழிய. .. .. *

(இதன்பொருள்)

தேவர்களுக்கு நாயகராகிய கைலாசபதி எதிரேநின்று கட்டளையிட்ட அளவில் வண்டுகள்சூழ்ந்த நீண்ட கூந்தலையுடைய பார்வதியார் பயத்தோடு அஞ்சலிகூப்பி அடியேன்செய்ய நினைத்த பூசையின்குறையை நிறைவடையும்படி யருள்செய்யவேண்டுமென்று சொல்லத் தேவியார்முகத்தைப்பார்த்தருளி-கண்விளங்கும் நெற்றியின்மேல்விபூதியின் உத்தூளனத்தையுடைய சுவாமி-நம்மிடத்திற்செய்யும் உன்னுடையபூசை முடிகிறதில்லையென்று சொல்ல—(எ-று) (௬௮)

மாறிலாதவிப் பூசனையென்று மன்னவெம்பிரான் மகிழ்ந்து கொண்டருளி, யீறிலாதவிப்பதியினுள்ளவா றறமும் யான் செயவருள்செயவேண்டும்; வேறுசெய்வினை திருவடிப்பிழைத்தலொழியவிங்குளார்வேண்டினசெயினும், பேறுமாதவப் பயன் கொடுத்தருளப் பெறவும்வேண்டுமென் றனள்பிறப் பொழிப்பாள் .. ..*

(இதன்பொருள்)

மாறிப்போகாமல் இந்தப் பூசையையென்றுஞ் செய்யும்படி எமதுபிரானே திருவுள்ளங்கொண்டருளி நாசமில்லாத இந்த ஸ்தலத்தில்எல்லாத்தருமங்களையும்அடியேன்செய்யக்கிருபை செய்யவேண்டும். தேவரீர் திருவடிகளுக்குச்செய்யுங் குற்றம் நீங்கலாக இந்நகரத்திலுள்ளோர்கள் தங்கள் மனதின்படி வேண்டிய தீவினைகளைச்செய்தாலும் மகத்தாகியதவஞ்செய்தலால்-பெறவேண்டியபயனை அவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்றார் பிறப்பொழித்த பார்வதிதேவி. (எ-று)

விடையின்மேலவர்மலைமகள்வேண்டவிரும்புபூசனை மேவிவீற்றிருந்தே, யிடையறுவறமாக்கும்வித்தாகவிக பரத்திருநாழி றெல்லளித்துக், கடையராயுமுயர்ந்தவராயுங்காஞ்சிவாழ்பவர்தாஞ்செய்தீவினையுந், தடைபடாறமெய்நெறியடை வதற் காந்தவங்களாகவுமுவந்தருள்செய்தார் ....*

(இதன்பொருள்.)

ரிஷபவாகனத்தின்மேற்கொண்ட பரமசிவன் - பார்வதியார் வேண்டிக்கொண்டு பூசைசெய்ய விரும்பினபடியால் அங்கே நித்து ஏகம்பத்தில்வீற்றிருந்து இடைவிடாமல் இவ்வுலகத்துக்கும்பரலோகத்திற்கும்பயனாகத்தருமத்தைவளர்க்கும்பொ

ருட்டு இருநாழிநெல் அருளிச்செய்து-கீழ்சாதியாராகியும். உயர்ந்தசாதியாராகியும், காஞ்சிநகரத்தில் வாழ்கின்றவர்கள் செய்தபாவங்களும்-தடையில்லாமல் மெய்மையாகிய மோட்சத்தையடைவதற்குக் கருவியாகிய தவங்களாகவும் விரும்பிஅருளிச்செய்தார்.—(எ-று) (௭௰)

எண்ணரும்பெருவரங்கண்முன்பெற்றங்கெம்பிராட்டிதம்பிரான்மகிழ்ந்தருள, மண்ணின்மேல்வழிபாடுசெய்தருளிமனையறம்பெருகுங்கருணையினால், நண்ணுமன்னுயிர்யாவையும்பல்கநாடொறாதலினீடியவாழ்க்கைப், புண்ணியத்திரு காமக்கோட்டத்துப்பொலியமுப்பதோடிரண்டறம்புரக்கும் .... *

(இதன்பொருள்.)

எமது தாயாராகிய உமாதேவியார் பெருமைபொருந்திய அனேகவரங்களைமுதலில்பெற்றுக்கொண்டு சுவாமி மகிழ்ச்சியடையப் பூசைசெய்து உலகத்தில் இல்லறத்தைநடத்தவேண்டுமென்று உண்டாகிய கிருபையோடு நிலைபெற்றனவாயிருக்கும் எல்லாவுயிர்களும் நாளுக்குநாள் பெருக-ஆசையோடுநெடுநாள்வாழ்க்கையாகப் புண்ணியஸ்வரூபமான திருக்காமக்கோட்டத்தில் வீற்றிருந்து முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்தார்.—(எ-று) காமக்கோட்டம்-காமாட்சிதேவிவீற்றிருக்குங்கோயில். (௭௧)

அலகினீடவத்தறப்பெருஞ்செல்வியண்டமாந்திருமனைக்கிடுந்தீப, முலகில்வந்துறுபயன்றிவிக்கவோங்குநான்மலர்மூன்றுடனொன்று, நிலவவாண்டினுக்கொருமுறைசெய்யநீடு தொன்மையானிறைந்தபேருலக, மலர்பெருந்திருக் காமக்கோட்டத்துலவத்தறல்லறமன்னவேமன்னும் .... *

(இதன்பொருள்.)

இப்படிப்பட்டதென்று அளவிடக்கூடாத நெடியதவத்தையும், தருமத்தையும் உடைய பார்வதியார் தமது அண்டமாகிய பெரியவீட்டிற்கு இடுகின்ற சூரியனாகிய விளக்குப்போல் உலகத்தில் பிறக்கும்பயனை அறிவிக்கத் தெய்விகத்தால் உயர்ந்த அழகுற்ற நான்குபுஷ்பங்கள் வருஷத்திற்கு ஒருதரம்-மலரச்செய்து நாட்பட்டுவரும் தெய்வத்தன்மையோடு திருக்காமக்கோட்டத்தில் பெருமைபொருந்திய உலகத்தில் நிறைந்து வாழ்பவரெல்லாரும் சுகத்தையடையத் தருமங்கள்வளர்க்கப்படும்.—(எ-று) (௭௨)

நீங்குதீர்க்குநற்றீர்த்தங்கள்போற்றுஞ்சிறப்பினுற்றிருக்காமக்கோட்டத்தின், பாங்கின்மூன்றுலகத்தினுள்ளோரும்பரவுதீர்த்தமாம்பைம்புனற்கேணி, வாங்குநெண்டிரைமேலை மேகலைசூழ்வையகந்தனக்கெய்தியபடியா, யோங்குதன்வடிவாய் நிறைந்தென்றுமுள்ளதொன்றுலகாணியென்றுளதால் ....*

(இதன்பொருள்)

முழுகினவர்களுடைய பாவங்களைத்தீர்க்கும் மேன்மைபொருந்திய தீர்த்தங்களுக்கெல்லா மேலாகிய சிறப்போடுதிருக்காமக்கோட்டத்தில் நற்குணத்தையுடைய மூன்றுலகத்திலுள்ளவர்களும் வந்து ஸ்நானஞ்செய்யுந் தீர்த்தமாகிய பிரகாசமுள்ளநீரையுடைய ஒருகிணறுண்டு வளைந்து தெளிந்த நீருருவமாகிய அலைகளையுடைய சமுத்திரமாகிய ஆடைசூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்கு மோட்சத்திற்கு ஏறக்கிடைத்தபடியாகி உயர்ந்தநீர்வடிவாகவேயிருந்து உலகாணியென்றபேர்பெற்றுச் சாசுவதமாயுள்ளது.—(எ-று) (எரு)

அந்தமின்றிநல்லறம்புரிந்தளிக்குமம்மைதன்றிருக்காமக்கோட்டத்தில், வந்துசந்திரசூரியர்மீதுவழிக்கொள்ளாத தன்மருங்குபோதலினுற், சந்தமாநிரமயங்கியெம்மருங்குஞ்சாயைமாறியதன்றிசைமயக்க, மிந்தமாநிலத்தவரெலாங்காணவென்றுமுள்ளதொன்றின்றுமங்குளதால் ....*

(இதன்பொருள்)

கெடுதலில்லாமல் தருமங்களைச்செய்து உயிர்களைக்காப்பாற்றும் அம்பிகைவீற்றிருக்கும் காமக்கோட்டமென்னும் கோயிலில் சந்திரசூரியர்வந்து அக்கோயிலின்மேலேபோகாமல் பக்கத்திற்போகின்றபடியால் புலப்படுகின்ற திக்குகள்தெரியாமல்மயங்கி-எப்புறத்திலும் நிழல்போகாமல் மாறியிருக்கின்ற அவ்விடத்தின் திசைமயக்கமானது பெருமையுற்ற இவ்வுலகத்திலுள்ளோர் யாவருங்காணும்படி ஒப்பற்றதாகவென்றுமுள்ளது இக்காலத்திலும் அங்கு அவ்வண்ணமேயிருக்கின்றது.
(எ-று) (எசு)

கன்னிதன்னெடுங்காப்புடைவளாப்பிற்காஞ்சியாற்றிருநதிக்கரைமருங்கு, சென்னியிற்பிறையணிந்தவர்விரும்பு திருப்பெரும்பெயரிருக்கையிற் றிகழ்ந்து, மன்னுவெங்கதிர் மீதெழும்போதுமத்தமேல்கடற்றலைவிழும்போதுந், தன்னிழற்பிரியாதவன்காஞ்சித்தானமேவியமேன்மையுமுடைத்தால் ... *

(இதன்பொருள்.)

பார்வதியார்-வெகுநாளாக நன்குகாத்திருக்கின்ற காஞ்சிபுரத்தில் கஞ்சியென்றுபேர்பெற்ற நதியினுடைய கரையினிடத்தில் சிரசில் இளம்பிறையைதரித்த பரமசிவன் விரும்பிவீற்றிருக்கும்பேர்பெற்ற ஒருஇடத்திலிருந்து விளங்கி-வெப்பமாகியகிரணங்களைப்பொருந்திய சூரியதேவன் உதயகிரியில்நின்று எழும்பும்போதும்உறக்கத்தையடைந்துமேல்கடலில் அஸ்தமிக்கும்போதும்நிழலானது தன்னிடத்திலிருந்து புறத்திற்செல்லாத வரம்பொருந்திய காஞ்சியென்னும் விருக்ஷமிருக்கின்ற பெருமையையும் உடைத்தாயிருக்கின்றது அந்நகரம்.
(எ-று) (௭௫)

மறைகளாற்றுதித்தருந்தவம்புரிந்துமாறிலாநியமந்தலைநின்று முறைமையாலவரும்பூசனைசெய்யமுனிவர்வானவர் முதலுயிரெல்லா, நிறையுமன்பினாலர்ச்சனைசெய்யநீடுகாமங்களவரவர்க்கருளி, யிறைவர்தாமகிழ்ந்தருளியபதிகளெண்ணிறந்தவத்திருநகரெல்லை ... .*

(இதன்பொருள்.)

முனிவர்கள் வேதங்களால்துதிபண்ணி அருமையாகிய தவங்களைச்செய்து மாறுதநியமத்தை ஸ்திரமாகக்கொண்டு முறையோடுகூடிய பூசையைச்செய்தலாலும் தேவர்கள்முதலான உயிர்களெல்லாம் நிறைந்தபத்தியுடனே மலர்கள் முதலியவற்றால் அருச்சனைசெய்தலாலும் அவரவர்களுக்குமிகவும் விரும்பினவைகளைக்கொடுத்தருளிப் பரமசிவன்விரும்பிவீற்றிருக்கும் ஸ்தலங்கள் அளவில்லாதனவாம்-அந்நகரத்தின் எல்லையில்—(எ-று) (௭௬)

மன்னுகின்றவத்திருநகர்வரைப்பின்மண்ணின்மிக்கதோர் நன்மையினாலே, தன்னுழையானையைத்தூற்றில்வாழ்முயல்முன்றரக்கவெய்தியதொலைவிலாக்கத்தால், தன்னில்நின்றகற்றுதல்செய்யுந்தானமன்றியுந்தனுவெழுந்தரணி, யெந்நிலத்தினுங்காண்பருமிறவாத்தானமென்றிவையியல்பினிலுடைத்தால்.

(இதன்பொருள்.)

நிலைபெற்ற அந்தக்காஞ்சிபுரத்தின் எல்லையில் பூர்வகாலத்தார் செய்த தவப்பேற்றினால் பலங்கொண்ட ஒருயானையைத் துரத்தியிடத்திலிருந்த ஓர்முயலானது அழிவில்லாத சத்தியோடு எதிர்த்துத் தன்னிடத்தில்நின்றும் போகும்படி செய்யும்ஸ்தானம் இருப்பதல்லாமலும் உயிர்பிறந்திடுகின்றஉடலானது

மறுபடிச் சேனையடையும் இடமும் - எந்தத்தேசங்களிலு ம் காண்பதற்கு அரிதாய் மனிதர் எப்பொழுதும் இறவாத இடமுமாகிய இவைகள் இயல்பாகவுள்ளன.— எ-று தனுவெ ழுந்தரணி-உயிரில்லாத உடலைக்கொண்டுவந்து போட்டவுட னே உயிருண்டாக்கும்பூமி. இறவாத்தரணம்-மனிதர்கள் சா ங்காலம் ஒருவகையாக அறிந்துபோய் அவ்விடத்திலேயே வாசஞ்செய்தால் அவர்கள் எப்பொழுதும் இறவார்களென்ப தாம், இந்த இடங்களெல்லாம் மகாத்துமாக்கள்தவிர-மற்றை யாவர்க்கும்புலப்படாமலிருக்கும். (எஎ)

ஈண்டுதீவினையாவையுநீக்கியின்பமேதரும்புண்ணியதீர்த்தம்; வேண்டினார்தமக்கிட்டசித்தியதாய்விளங்குதீர்த்தநன் மங்கல தீர்த்த, நீண்டகாட்புடைத்தீர்த்தமூன்றுலகினிசழ்ந்த சாருவ தீர்த்தமுமுதலா, மாண்டுநீடியதீர்த்தமெண்ணிலவும மரநா ட்டவராடுதலொழியார் ....*

(இதன்பொருள்)

இவ்வுலகத்தில் தீவினைகளெல்லாம் போக்கி யின்பத்தையே கொடுத்தலால் பேர்பெற்ற புண்ணியதீர்த்தமும் வேண்டினவ ர்களுக்கு விரும்பியபொருளைக் கொடுப்பதாகிப் பிரகாசித்த லாற் பேர்கொண்ட இஷ்டசித்திதீர்த்தமும் நல்ல சுபத்தைக் கொடுக்கின்றமங்கலதீர்த்தமும்என்றும்-மனிதர்களைரட்சித்த லால் பேர்கொண்டகாப்புடைத்தீர்த்தமும்- மூன்றுலகத்திலு ள்ள தீர்த்தங்களெல்லாம் ஒன்றாகச்சேர்ந்திருந்த சர்வதீர்த்த மு முதலாக மாட்சிமைப்பட்டு நிலைபெற்ற எண்ணிறந்த தீ ர்த்தங்களில் தேவர்கள் ஸ்நானஞ்செய்தலையொழியார்கள்.— (எ-று)சர்வதீர்த்தம்-முதல்நீண்டு ரகரத்தில் உகரம் எழுந்து ப்பேறாகவந்தது. (எஅ)

தாளதொல்பினின்மூன்றுபூம்மலருந் தமனியச்செழுந்தாமரை த்தடமு, நீளவார்புனல்குடதிசையோடிநீர்காக்குமாநதியுடனீ டு, நாளலர்ந்தசெங்குவளைபைங்கமலநன்பகற்றிருட்பாடலம ன்றிக், காளமேகமொப்பாருறைவனாப்பிற்கண்படாதகாயா ப்புளியுளதால் ....*

(இதன்பொருள்)

ஒருநாளில் மூன்றுபுஷ்பங்கள் மலர்கின்றபொற்றாமரையைஉ டைய குளமும்-நீரும்படியோடுகின்ற நீராணது கிழக்கிலிருந் து மேலைத்திசைக்கு ஓடிமறைந்துபோகின்ற ஒரு ஆறுட னே மத்தியானவேளையில் பருவம்பிறந்து செங்குவளைமலர்

ளையும் அழகுபொருந்திய தாமரைப்பூவையும்-மலர்கின்றஒரு பாதிரிமர மிருக்கிறதுமன்றிக்கரியமேகம்போன்ற நிறத்தையு டைய அம்பிகைவீற்றிருக்கும் அந்தநகரத்தில்மனிதர்கண்ணு க்குத் தோன்ருத காயாப்புளியமரமும் ஒன்றுஇருக்கின்றது. (எ-று) (எகூ)

சாயைமுன் பிணிக்குங்கிணறென்றுதஞ்சமுண்ணினஞ்சாந் தட மொன்று, மாயையின்றிவந்துள்ளடைந்தார்கள்வானரத் துரு வரம்பிலமொன்று, மேயவவ்வுருநீங்கிடக்குளிக்கும் விளங்கு பொய்கையுமொன்றுவிண்ணவரோ, டாயவின்பமுய்க்கும் பி லமொன்ருேடனையவாகியவதிசயம்பலவால் .. ..*

(இதன்பொருள்.)

நிழலைப் புறத்திற்போகவொட்டாமல் தன்னிடத்திலேயே பி டித்துக்கொள்ளுகிற கிணறு ஒன்றும்-எளிதாகக்குடித்தால் வி ஷமாய்க்கொல்கின்ற நீரையுடையதடாகம் ஒன்றும்- தன்மை யறியும் சத்தியில்லாமல் வந்து சேர்ந்தவர்கள் வானரத்தின் உ ருவத்தை அடைகின்ற பிலம் ஒன்றும்-அப்படியடைந்த குர ங்கினுருவம் நீங்கும்படி குளிக்கின்ற காந்தியுள்ள பொய்கை யொன்றும் - தேவர்களோடு இன்பத்தை அநுபவிக்கும்படி சொர்க்கலோகத்துக்குக்கொண்டுபோய் விடுகின்ற பிலம்ஒன் றுமாகிய இவைகளுடனே இப்படிப்பட்டபல அதிசயப்பொ ருள்களும்இருக்கின்றன.—(எ-று) (அ0)

அஞ்சுவான்கரத்தாறிழிமதத்தோரானைநிற்கவுமனையிருட்டிரியு மஞ்சுநீள்வது போலுமாமேனி மலர்ப்பதங்களில் வன்சிலம் பொலிப்ப, நஞ்சுமிழ்கெயிற்றரவசெற்றரையிலுமழுன்றிலைப் படையுடைப்பிள்ளை, யெஞ்சலின்றிமுன்றிரியவுங் குன்றமெறி ந்தவேலவன்காக்கவுமிசையும் .. ..*

(இதன்பொருள்.)

பெரிய ஐந்துகைகளையும் ஆறுபோற்பாய்கின்ற மதத்தையும் உடைய விக்கினேசுரர்காவலாக நிற்கவும் - புஷ்பம்போன்ற பாதங்களில் வளமான சிலம்புகள்கிடந்துஒலியுண்டாக்க அர்த் தராத்திரியில் திரிகின்ற நீண்ட மேகம்போல நிறத்தையும் நஞ்சு ஒழுகுகின்ற பற்களையுடைய பாம்புகளைமாத்திரம் அ ணிந்து மற்றொன்றையுந்தரிக்காத இடையினையும் உடைய மூ ன்றுகவராயிருந்து பயத்தை உண்டாக்குகின்ற சூலாயுதமே ந்திய வயிரவர் இடைவிடாமல் திரிந்துகொண்டுகாக்கவும்- கி

ரவுஞ்சமலையை வேலால் தகர்த்த குமாரசுவாமி ஒருபுறங்காக்கவும்-அந்தநகரம் ஒரிடையூறு மடையாமலிருக்கின்றது.—(எ-று) (௮௧)

சத்திதற்பரசித்தயோகிகளுஞ்சாதகத்தனித்தலைவருமுதலா, தித்தமெய்ப்ரிய வாயுஞ்சமெய்த்தவர்கணீடிவாழ்திருப் பாடியுமனேகஞ், சித்தர்விஞ்சையரியக்கர்கந்தருவர் திசழ்ந்துமன்னுவார்செண்டுகையேந்தி, வித்தகக்கரிமேல்கொளுங்காரிமேவுசெண்டணைவெளியுமொன்றுளதால் ....*

(இதன்பொருள்.)

அனேகசத்திகளும், மேலாகிய சித்தர்களும், யோகிகளும், மோக்ஷத்தை யடைவதற்குவேண்டிய ஸாதகத்தைச்செய்யும் ஒப்பற்ற ஞானிகளும், எக்காலத்தும் இருக்கும்படி ஆயுள் விருத்தியைப் அடை வதற்கு மெய்ம்மைபொருந்திய தவஞ்செய்தவர்களுமாகிய இவர்கள்முதலாக உள்ள மற்றையோரும் வாழ்கின்ற இடங்களும் பலவாயிருக்கின்றன-சித்தர்-வித்யாதரர்-யக்ஷர்-கந்தருவர் முதலானவர்களும் அந்தநகரத்தில் வாசஞ்செய்வார்கள்-செண்டாயுதத்தைக்கையிற்பிடித்துச்சிறந்த யானையை வாகனமாகக்கொண்ட ஐயனார் உலாவிவருகின்ற ஒருவெளியுமிருக்கின்றது.—(எ-று) (௮௨)

வந்தணைந்தவர்தம்முருமாயமற்றுளாரைத்தாங்காண் பிடமுளது, சிந்தையோகத்துமுனிவர்யோகினிகள்சேரும்யோகபீடமுமுளதென்று, மந்தமில்லறம்புரப்பவள்கோயிலான்போகபீடமுமுளதாகு, மெந்தையார்மகிழ்காஞ்சிநீடெல்லையெல்லையில்லனவுள்ளவாரறிவார் .... *

(இதன்பொருள்.)

வந்துசேர்ந்தவர்களுடலம் ஒருவருக்குந்தோன்றாமல் மறைய அவர்கள்மாத்திரம் மற்றவர்களைக்காணுகிற இடமொன்றிருக்கின்றது-யோகஞ்செய்கின்ற நற்சிந்தையை உடைய முனிவர்களும், யோகினிகளும், சேருகின்ற யோகபீடமும் ஒன்றிருக்கின்றது-கெடுதலில்லாமல்தர்மத்தைவளர்க்கின்ற காமாட்சிதேவி வீற்றிருக்குங்கோவிலில் ஒப்பற்ற யோகபீடம் என்றுபேர்பெற்றதொன்றிருக்கிறது - எமது ஆண்டவர்வீற்றிருக்கும் காஞ்சிபுரத்தினது நீண்ட எல்லைக்குள் அளவற்ற அதிசயங்கள் உண்டு அவைகளையாரறிவார்கள்.—(எ-று) (௮௩)

தூண்டுசோதியொன்றெழுந்திருடோக்குஞ் சுரர்கள்வந்துசூழு
ருத்திரசோலை, வேண்டினோர்கடம்பிறப்பினை யொழிக்குமெய்
நெறிக்கணின்றோர்கடாம்விரும்பித், தீண்டில்யாவையுஞ் செம்
பொனாக்குவதோர்சிலையுமுண்டுரைசெய்வதற்கரிதா, லாண்ட
நாயகிசமயங்களாறுமகிலயோனியுமளிக்குமந்நகரம். . . . *

(இதன்பொருள்)

தூண்டினதுபோற்பிரகாசிக்கும் ஒருசோதியுண்டாகி இருளை
ப்போக்கித்தேவர்கள்வந்து சூழ்ந்துகொள்வதற்கிடமாகிய உ
ருத்திரசோலையென்று பேர்பெற்ற ஒருபூங்காவனமும்-பிறப்
பினையொழிக்கும்பொருட்டு மெய்ம்மையாகிய சைவசமயமா
ர்க்கத்தில் விரும்பி அநுசரித்து நின்றவர்கள் விருப்பங்கொ
ண்டு எவைகளையாவது கொண்டுபோய்த் தீண்டும்படிசெய்
தால் அவற்றைப்பொன்னாக்குகின்ற ஒருகல்லும் உண்டு - அத
ன்பெருமைசொல்வதற்கு அரிதாகும் - ஆட்கொண்ட நாயகி
யாகிய பார்வதிதேவி அறுவகைப்பட்ட சமயங்களையும் எல்
லாவுயிர்களையும் காப்பாற்றுகின்ற அந்தநகரத்தில்.—(எ-று)
தீண்டில் என்பது-பிறவினைப்பொருளில்வந்தது. (௮௪)

என்றுமுள்ளவிந்நகர்கலியுகத்திலிலங்குவேற்கரிகாற் பெருவ
ளத்தோன், வன்றிறற்புலியிமையமால்வரைமேல்வைக்கவேகு
வோன்றனக்கிதன்வளமை, சென்றுவேடன்முன் கண்டுரைசெ
ய்யத்திருந்துநான்குட்படவகுத்துக், குன்றுபோலுமாமதி
தில்புடைபோக்கிக்குடியிருத்தினகொள்கையின்விளங்கும். *

(இதன்பொருள்.)

எக்காலத்திலுமுள்ள இக்காஞ்சீபுரமானது கலியுகத்தினுதியில்
விளங்குகின்ற வேலைத்தரித்த கரிகாற்சோழராஜனவர் வெற்றியி
ன்பொருட்டு வலியுள்ள தமது புலிக்கொடியைப் பெருமை
பொருந்திய இமயமலையினுச்சியில் நாட்டும்படி போகும்
போது அவரிடத்துக்கு ஒருவேடன்போய்க்கண்டு இந்த ஸ்த
லத்தின் பெருமையைச்சொல்லச் சுற்றளவில் நான்குகாததூ
ரம் உட்பட்டிருக்கும்படி ஒருபட்டணமாக நிருமித்து மலை
போல் உயரமாகிய மதிலொன்று நாற்புறத்திலும் சூழ்ந்திருக்
க உண்டாக்கி அநேகங்குடிகளை அவ்விடத்தில் வாசம்பண்ணு
ம்படி செய்த பெருமையோடுவிளங்கும்.—(எ-று) (௮௫)

(வேறு.)

தண்காஞ்சிமென்சினைப்பூங்கொம்பராடல்சார்ந்தசையவதன்
மருங்குசுரும்புதாழ்ந்து, பண்காஞ்சியிசைபாடும் பழனவே

மிப்பனைமருதம்புடையுடைத்தாய்ப்பாரில்நீடு, தண்காஞ்சிநக ர்நொச்சியின்சூழ்ந்தசெழுங்கிடங்குதிருமறைகளொலிக்குந் தெய்வ,வண்காஞ்சியல்குல் மலைவல்லிகாக்க வளர்கருணைக்கட லுலகஞ்சூழ்ந்தாலு மானும். .. ..✽

(இதன்பொருள்.)

குளிர்ச்சிபொருந்திய காஞ்சிமரத்தினது மெல்லிய பூங்கொத் துக்களையுடைய கொம்புகளசைந்தாட அலைகளிடத்து வண்டு கள் விழுந்து காஞ்சியென்னும் இராகத்தைப் பாடுவதற்கிட மாய்க்கிளைகளுள்ளமருதமரங்கள் வேலியாகச்சூழ்ந்தவயல்க ளைச் சுற்றிலுமுடைத்தாகி உலகத்திற்சிறந்த காஞ்சிபுரத்தின் வன்மையாகிய நொச்சியையுடைய மதில்சூழ்ந்த செழுமை பொருந்திய அகழியானது தெய்விகமாகி ஒலிக்கின்ற வேத சுரூபமாகிய காஞ்சியென்னும் ஆபரணத்தைத்தரித்த இடை யையுடையபார்வதியார்காப்பதனால் அவருடையகிருபையாகி ய கடலானது அந்தகாரத்தைவளைந்திருப்பதுபோலும்(எ-று) நொச்சியென்பது-உலகவழக்கில்கொத்தளம் (௮௫)

கொந்தலர் பூஞ்சோலைமைப்பக்கொம்புக்கம்பர்கொள்ளும் பூசனை குறித்ததானங்காக்க, மந்திரமாமதில்கழியவாதுமந்தந்த வாய் மையாகமவிந்நியிக்வருப்புப்போலு, மந்தமிழ்ச்சீர்க்காஞ்சிலய வந்தடைந்தார்க்கல்லிபடைகளங்கமறுப்பரிதென்றறிந்துசூழு, வந்தனைந்துதங் கருப்புமுவர்ப்புநீக்குமாகடலும் போலுமல ர்க்கிடங்குமாதோ. .... ✽

(இதன்பொருள்)

கொத்துக்களாய் மலர்ந்த புஷ்பங்களைத்தரித்த கூந்தலையுடை ய பார்வதியார் ஏகம்பரைப் பூசைசெய்யும்படி ஏற்படுத்திக் கொண்ட இடத்தைக் காப்பாற்றும்பொருட்டுச்சுவாமியினால் அருளிச்செய்யப்பட்ட மந்திரங்களே மதிலாகவும், உண்மை யான ஆகமங்களே அகழியாகவும் விதித்த ஏற்பாடுபோல் அந்தகாரத்தைச்சூழ்ந்திருக்கிற மதிலும் அகழியும் தோன்றுகி ன்றன-மலர்களையுடைய அந்த அகழி பின்னும் எப்படியிருக் கின்றதெனின், கெடாதசிறப்பினையுடைய காஞ்சிநகரத்தை அ டைந்தவர்களுக்கல்லாமல் தாங்கள் அடைந்திருக்கிற களங்கத் தைப்போக்கிக்கொள்ளுகிறது அரிதென்று அறிந்து எல்லாபி றப்புறமுஞ்சூழ்ந்து தன்னிடத்திலுள்ள கறுப்பினையும் உவ ரையும் நீக்கிக்கொண்ட பெரியகடல்போலும் இருக்கின்றது. (எ-று) (௮௭)

ஆங்குவளரொயிலினுடன் விளங்கும்வாயிலப்பதியில் வாழ்பெரி
யோருள்ளம்போல, வோங்குநிலைத்தன்மையவாயகிலமுய்ய
வுமைபாகரருள்செய்த வொழுக்கமல்லாற், நீங்குநெறியடை
யாததடையுமாகிச்செந்நெறிக்கணிகழ்வாய்மைதிருந்துமார்க்
கற், றாங்குலவநிலவிவளரொளியாலெல்லாற்றட நெடுவானள
ப்பனவாந்தகைமையவாகும் .... *

(இதன்பொருள்)

மதிலினிடத்தில் விளங்குகின்ற கோபுரவாசல்கள் அந்தநகர
த்தில் வாசஞ்செய்கின்ற பெரியவர்கள்மனதுபோல் உயர்ந்த
தன்மையை உடையனவாய் உலகத்திலுள்ளோர் நற்கதியை அ
டையும்படி பரமசிவன்அருள்செய்த ஆகமத்தில் விதித்த நல்
ல நடக்கையல்லாமல் தீமையாகிய நடத்தைசேர்வதற்கு ஓர்
தடையாகியும், நேராகவழியில் நடக்கும்படிசெய்கின்ற மெ
ய்மைபொருந்தி விளங்குகின்ற சோதியோடு தாம் நிலைபெ
றவணங்கி அகன்று நெடிதாயிருக்கும் ஆகாயத்தை அளப்பத
ற்கு எழுந்த தன்மையை உடையனவாயிருக்கும்.—(எ-று) உ
மைபாகரருள்செய்த செந்நெறிக்கணிகழ்வாய்மை திருந்து
மார்க்கவொழுக்கம் என்றும்- வளரொளியால்தாங்குலவநில
வியென்றும் இயைபுசெய்துகொள்க. செந்நெறிக்கணிகழ்வா
ய்மை-ஆகமமென்றுகொள்க. (அஅ)

மாறுபெறலருங்கனகமாடநீடுமணிமறுகுநெடுந்தெருவும் வள
த்தில்வந்த; வாறுபயிலாவணவீதிகளு மற்றுமமைந்த நகரணி
வரைகளைடுவுபோகக், கூறுபடுநவகண்டமல்திமல்கக்கொண்
டவனேகங்கண்டமாகியன்ன, வேறொருமண்ணுலகு தனிலுள
தாலெனவிலங்கியுமாலோகநிலைமயிற்றன்றே ......*

(இதன்பொருள்)

களங்கமற்ற பொன்மயமாகிய மேல்வீடுகளின் அழகிய வரி
சைகளும், நீண்டதெருக்களும், வளமாகிய பண்டங்கள் எளி
தாவவிலைபிற்கிடைக்கும் கடைவீதிகளும், பின்னுமுள்ளவைவு
ம்பொருந்திய அந்தநகரமானது-தொடர்ச்சியாகியமலைகளை
நடுவில் ஒழுங்காக ஏற்படுத்தி- வேறுவேறாகப் பிரிக்கப்பட்டி
ருக்கும் நவகண்டங்கள்போலல்லாமல் அனேககண்டங்களாக
வகுக்கப்பட்டு அத்தன்மையைஉடையமற்றொரு பூவுலகத்தை
ப்போல்பிரகாசிக்கின்றது - அதுவல்லாமலும் மகாலோகமெ
ன்றுசொல்லுந்தன்மையையும் அடைந்தது.(எ-று) காஞ்சிபுர

த்திலிருக்கும் ஒவ்வொருவீதியும் ஒவ்வொரு கண்டம்போலவும், மேல்வீடுகளின்வரிசை கண்டங்களுக்குநடுவிலுள்ளமலைவரிசைபோலவும், விளங்கினவென்க. (௮௯)

பாகமருங்கிருபுடையுமுயர்ந்து நீண்டபடவொளிமாளிகைநிரைகள்பயின் மென்கூந்தற், றோகையர் தங்குழாமலையத் தூக்குமுத்தின் சுடர்க்கோவைக்குளிர் நீர்மைத்துகைநந்தவீதி, மாகமிடையொளிதழைப்பமன்னி நீடு மருங்குதாரகையலைய வரம்பில்வண்ண, மேகமிடைகிழித்தொழுகுந்தெய்வக்கங்கை மேனதிகள்பலமண்மேலவிளங்கியொக்கும் .... ..-.... .. ....*

(இதன்பொருள்)

ஓரமாகிய இருபுறத்திலும் உயர்ந்தும் நீண்டும் பரவுகின்றகாந்தியையுடைய மேல்வீடுகளின் வரிசைகளில்வாசஞ்செய்கின்ற மெல்லியகூந்தலையுடைய மாதர்கூட்டங்கள் அவ்வுப்பரிகைகளில் அலையும்படி தொங்கவிட்டிருக்கும் முத்துமாலைகளின் குளிர்ச்சியையுடைய காற்றுவீசிய வீதியானது ஆகாயத்தில் விளங்க நிலைபெற்றுள்ள நட்சத்திரங்கள் அலைந்துகொண்டிருக்க-ஒப்பில்லாத கரியநிறத்தையுடைய மேகங்களின் தலைநடுவிற்கிழித்துக்கொண்டிறங்கும் ஆகாயகங்கையின் பலபிரிவுகள் பூமியின்மேல் விளங்குவன்போன்றிருக்கும்.— எ-று) தொங்கியமுத்துமாலைகளே-ஆகாயகங்கையின் வீழ்ச்சிகள்போலாகவும், அவைகளினொளி-வெள்ளம்போலவும், அதற்கிடமாகிய வீதி-அந்தப்பிரவாகத்தை அடக்கிக்கொண்டிருக்கிற ஆறுகள் போலவும் தோன்றினவென்க-மேகமிடைகிழித் தொழுகுங்கங்கை-அபூதத்தில்வந்தது. (௯௰)

கிளரொளிச்செங்கனகமயந்தானாய்மாடுயேழ் நிலையோர் நீலச் சோபானம்பூணக்,வொளவமைத்துமீதொருபாற்கன்னசாலை குலவயிரத்தாலமைந்தகொள்கையர்மேல,யளவில்சுடர்ப்பிழம் பானார்தம்மைந்தேடியசந்தேனபாலூறுமன்னமாகி, வளர் விசும்பிலெழுந்தாலும்போலநீடு மாளிகைகளுளமற்றுமறுகு தோறும். .... --*

(இதன்பொருள்)

வீதிகள்தோறும் இருக்கின்ற சில உப்பரிகைகள் மிகுந்த ஒளியையுடைய மாற்றுயர்ந்த பொன்மயமாகச் செய்யப்பட்டு ஏழ்நிலையில் நீலமணிகளிழைத்த வரிசையாகிய படியை உடை

யவாகி மேலே சிரேஷ்டமாகிய வச்சிரங்களைப்பதித்து அமைந்த சாளரத்தையுங் கொண்டிருப்பதனால் பரமசிவனுடைய அடியையும்முடியையுங்காணும்பொருட்டுப்பன்றியின் உருவங்கொண்டு தோண்டிய விஷ்ணுவும், அன்னப்பறவையாய் மேலேயெழும்பிய பிரம்மதேவனும், இவர்கள்கலகத்தையொழித்துத் திரட்சியுள்ள சோதியாயெழுந்த பரமசிவனும்போலிருக்கின்றன.—(எ-று) இச்செய்யுள் - வழுவமைதி. கொண்டுகூட்டுப் பொருள்கோள். (௬௧)

மின்பொலிபன்மணிமிடைந்தவெள்மாட மிசைப்பயில்சந்திர
காந்தம்விசும்பின்மீது, பொலம்புனையுஞ்செக்கர்நிறப் பொழு
துதோன்றும்புனிற்று மதிகண்டுருகிப்பொழிந்தநீரால், வன்பு
லியினுரியாடைத்திருவேகம்பர்வளர்சடையு மிளம்பிறையுங் க
ண்டுருகிட், டன்புருகிமெய்பொழியக்கண்ணீர்வாரு மடிய
வருமனையவுளவல்கிலாத .... *

(இதன்பொருள்)

மின்னல்போலொளிவிடுகின்ற பலமணிகளிழைத்த வெண்மைபொருந்திய மேல்வீடுகள் - தமது வெளிப்புறத்தில் பதித்திருக்கும் சந்திரகாந்தச்சிலைகள் ஆகாயத்தில் பொன்போலுஞ் செய்ய நிறம்பரந்த மாலைப்பொழுதில் உதயமாகிய அர்த்தசந்திரனைக்கண்டு இளகிச்சொரிந்த நீரினால் வலிமையுள்ள புலித்தோலையாடையாகவுடைய ஏகாம்பரேசரது வளர்ச்சியாகிய சடையையும், இளமையுற்ற பிறையையுந்தரிசித்துக் கைகூப்பி அன்பினாலே உருகி உடல்முழுதும் நிறையும்படி கண்ணீர் சொரிகின்ற அடியவரையும் ஒத்திருந்தன - இப்படி அளவற்ற மேல்வீடுகளிருந்தன.—(எ-று) (௬௨)

முகிலுரிஞ்சுங் கொடிதொடுத்தமுடியவாகு முழுப்பளிங்கின்
மாளிகைகண்முற்றுஞ்சுற்று, நிகரில்சராசரங்களெல்லா நிழலி
னாலேநிறைதலினிறைதவஞ்செயிமையப்பாவை, நகிலுழுத
கவடும்வளைத்தழும்புமுண்டநாயகனார் நாண்முகற்குப்படை
க்குநல்கு, மலிவீயானிமவெல்லா மமைத்துவைத்தவரும்பெ
ரும்பண்டாரநிலையனையவாகும் .... *

(இதன்பொருள்)

மேகங்கள் உராய்ந்துசெல்கின்ற கொடிகளைநாட்டிய சிகரங்களையுடைய பளிங்குக்கற்களினாலேயே கட்டப்பட்ட பெரிய வீடுகளின் உட்புறமுழுவதும் புறத்திற்செல்கின்ற ஒப்பற்ற

சரமும், அசரமுமாகிய எல்லாவுயிர்களும் அவைகளின் சாயையிலும்மேல நிறைந்திருப்பதுபோலத்தோன்றுதலால்-நிறைவாகிய தவத்தைச்செய்த பார்வதியாரது ஸ்தனங்கள் அழுத்திய தழும்பும், வளையலழுந்திய தழும்பும், அணியாகத் தாங்குக்கொண்ட பரமசிவன் பிரமதேவனுக்கு உலகத்தைப்படைக்கும்பொருட்டுப் படிவங்காட்டுவதற்குச் சகலசீவராசிகளையும் எற்படுத்திவைத்திருக்கும் அரிதாகிய பண்டாரத்தை யொத்திருக்கும். (எ-று) படிவம்-கிராமியவழக்கில்-மாதிரி. (௯௩)

பொற்களபமாளிகைமேன்முன்றினின்று பூங்கழங்குமணிப்பந்தும்போற்றியாடும், விற்புருவகொடிமடவார்கலன்கள்சிந்திவிழுவனவுங்கெழுவுதுணைமேவுமாதர், அன்புமுதிர்கலவியினிற்பரிந்துசிந்துமணிமணிச்சேடியர்தொகுக்குமவையுமாகி, நற்கனகமழையன்றிக் காஞ்சியெல்லை நவமணிமாரியும்பொழியுநாளுநாளும் .. .. *

(இதன்பொருள்.)

பொற்பொடியாற் செய்யப்பட்டகுழம்பு தீற்றியமேல்வீடுகளின் வெளியிடத்தில் நின்று மெல்லியகழங்குகளையும் அழகிய பந்துகளையும் விரும்பி யாடுகின்ற விற்போன்ற புருவத்தையுடைய கொடிபோன்ற மாதர்கள் விளையாட்டுக்குத் தடையாயிருப்பதுபற்றி எறிந்துவிடவிழுந்தநகைகளும்- புருஷரைச்சேர்ந்தமாதர்கள் அன்புமுதிர்ந்தபுணர்ச்சிவேளையில் உண்டாகிய பிணக்கினால் கழற்றியெறிந்த ஆபரணங்களும் பாங்கிகள் ஒதுக்கிக்குவிக்கு முத்துமுதலாகியமணிகளுமாய்ச் சேர்ந்துவிழுதலால் காஞ்சீபுரத்தெல்லையில் இயல்பாகப் பொழியும் பொன்மாரியே யல்லாமல் நவரத்னவருஷமும்பெய்வதாகத் தோன்றுகின்றன.—(எ-று) மணிகள்-பெண்கள் சிந்தியிழைத்திறைத்துவிட்டமணிகளும் ஆபரணங்களிலிருந்து சிதறியமணிகளுமாம்- (௯௪)

பூமகளுக்குறையுளென்னுந்தகையவான்பொன்மாடத் தரமியங்கள்பொலியநின்று, மாமகரக்குழைமகளிர்மைந்தரங்கைவந்தேறுமுன்னறுநீர்வண்டலாடத், தூமணிப்பொன்புனைநாளத்துருத்திவீசுஞ்சுடர்விடுசெங்குங்குமநீர்த் துவலைதோய்ந்த, காமர்மணி நாசிகையின்மருங்குதங்குங்கருமுகில்கள்செம்முகில்களாகிக்காட்டும் .. .. *

(இதன்பொருள்.)

திருமகளுக்கு இருப்பிடமென்றுசொல்லத்தக்க குணத்தையு
டைய பொன்மயமாகிய மேல்வீடுகளின் வெளியிடங்களில் அ
ழகுறநின்று மகரமீன்வாய்போற் செய்தகுண்டலத்தைத்தரித்
தமங்கையர்கள்தங்கள்கணவர்கள்கீழிருந்துவறிவரும்போதே
வாசநீரிறைக்கும் விளையாட்டைச்செய்ய விரும்பிக்குற்றமற்ற
பொன்னாற்செய்து மணிகளிழைத்த தொளைகளையுடைய சிவி
றிகளால் இறைத்த சிவந்தகுங்குமங்கலந்த நீரின் துளிகள்தோ
ய்ந்திருக்கும் அழகியபுடைநாசிகளின் பக்கத்தில்தங்கிய கரிய
மேகங்கள்செம்மையாகியமேகங்களாய்த்தோன்றும்.(எ-று)
நாசிகை என்பது-படிகளினிருபுறத்திலும் உள்ள சுவர்களின்
மேல் வைத்த கலசங்களின்சந்துகள். (௯௫)

இமமலியவெடுத்தநெடுவேலைகள்போல விலங்குசுதைத்த வள
மாளிகைநீள்கோட்டுச், சிமையடையுஞ்சோபானநிரையும் வி
ண்ணுந்தெரிவரியதூய்மையினாலவற்றுட்சேர்ந்து, தமர்களு
டனிழிந்தேறுமைந்தர்மாதர்தங்களையும் விசும்பிடைநின்றிழி
யாநிற்கும், மரரையுமரமகளிர்தமையும்வெவ்வேறறிவரிதாந்த
கைமையனவனேகமங்கன் ....*

(இதன்பொருள்)

பனிமூடும்படிஉயர்ந்தநெடியமலைகள்போன்று ஒளிர்கின்றசு
ண்ணச்சாந்து பூசுதலால் வெண்மையாகிய மேல்வீடுகளின் நீ
ண்ட உச்சியை அடையும்படி எற்படுத்தியிருக்கும் படிகளின்
வரிசையும், ஆகாயமும் வேறாகத் தெரிந்துகொள்ளக்கூடாத
தன்மையினால் அவைகளைச் சேர்ந்து உறவினரோடு இறங்கி
யேறுகின்ற ஆடவரையும், மங்கையர்களையும், ஆகாயத்தில்
நின் றிறங்கிவருகின்ற தேவர்களையும், தேவமாதரையும், வெ
வ்வேறாக அறிவதற்கருமையான குணத்தை யுடையனவாயி
ருக்கின்றன-அனேகவீடுகள் அந்நகரத்தில்.(எ-று) (௯௬)

அரவநெடுந்தேர்வீதியருகுமாடத் தணிமணிக்கோ புரத்தய
லேவியல்வாய்நீண்ட, விரவுமரகதசோதிவேதித்திண்ணை விளி
ம்பினொளிதுளும்பு முறைபடிமீதேறுங், குரவலருங்குழன்ம
டவாரடியினூட்டுங்குழம்படுத்தசெம்பஞ்சின் சுவட்டுக்கோல
ம், பரவைநெடுந்தரங்கமிசைவிளங்கித்தோன்றும் பவளநறுந்
தளிரனையபலவும்பாங்கர் .. .. *

(இதன்பொருள்)

ஒலியையுடைய நெடிய தேரோடும் வீதிகளிருபுறத்துமிருக்கும் உபரிகைகளின் மேலடுக்கின்புறத்தில் விசாலமாய் நீண்டுள்ள மரகதமணிகளிழைத் தொளிபொருந்திய திண்ணைகளின் விளிம்புகளுடைய பிரகாசம்வீசிப் பரந்த படிவரிசைகளின் மேலேயேறுகின்ற குரவம்பூ விளங்குங் கூந்தலையுடைய மாதர்களின் பாதங்களில்பூசிய செம்பஞ்சுக்குழம்பின் வைப்புகளினடையாளங்கள் நீண்ட அலைகளையுடையகருங்கடலின்மேல் விளங்கித் தோன்றுகின்ற நிறம்பொருந்திய பவளத்தளிர்களையொத்திருக்கின்றன-இப்படி அனேகம்.—(எ-று) (௰௭)

வெம்புசினக்களிற்றதிர்வு மாவினார்ப்பும்வியனெடுந்தேர்க்கா
லிசைப்பும்விழாவறாத, வம்பொன்மணிவீதிகளிலரங்கிலாடும
ரிவையர்நூபுரவொலியோ டமையுமிம்ப, ரும்பரினித்திரன்க
ளிற்றின்முழக்குந்தெய்வவுயரிரவிமாக்கலிப்புமயனூர்தித்தே
ர்,பம்பிசையும்விமானத்துளாடுந்தெய்வப்பாவையர்நூபுரவர
வத்துடனேபல்கும்.. .. ..*

(இதன்பொருள்)

காஞ்சீபுரத்தின் கீழிடத்தில் முறுகுகின்ற கோபத்தையுடைய யானைகளின் முழக்கமும், குதிரைகளின்முழக்கமும், அகன்றுயர்ந்த தேர்ச்சக்கரங்களின் ஒலியும் என்றும்திருவிழாவோயாத அழகிய பொன்மணிமயங்களா யிருக்கும் வீதிகளில் சபைகளிலாடுகின்ற கன்னிகையர் காலில்தரித்த சிலம்புகளினொலியும் பொருந்தியிருக்கின்றன-மேலிடத்திலோவென்றால், தேவேந்திரனுடைய யானை வீரிடுகிறசத்தமும்,தெய்வத்தன்மையை உடைய சூரியன் தேரிற்கட்டிய குதிரையின்முழக்கமும், பிரமதேவன்வாகனமாகிய அன்னத்தினது இசைவாகிய சத்தமும்-விமானத்தில்விளையாடிக்கொண்டிருக்கும் தேவமாதர்களின் காலில்தரித்த சிலம்பினோசையும் நிறைந்திருக்கும்.—(எ-று.) (௰௮)

அருமறையந்தணர்மன்னுமிருக்கையானவாகுதியின் புகையடு
த்தவம்பொன்மாடப், பெருமறுகு தொறும்வேள்விச் சாலை
யெங்கும்பெறுமவிர்ப்பாகங்கொடுக்கும் பெற்றிமேலோர்,
வருமுறைமையழைத்துவிடுமந்திர மெம்மருங்கும் வானவர்
நாயகர்திருவேகம்பர்முன்றிற்,றிருமலிகோபுரத்துநெ
ருங்கு மெல்லாத்தேவரையு மணர்த்தாகக்கொண்டுசெல்லும்.

(இதன் பொருள்.)

அரிய வேதங்களையுணர்ந்த பிராமணர்கள் வாழ்ந்திருக்கும் இடங்களாகிய மாளிகைகளின் வீதிகள்தோறும் ஆகுதிசெய்ய் தாற் புலகமிருந்த யாகசாலைகளிலெல்லாம் தேவர்களுக்கு அவிர்ப்பாகங்கொடுக்கின்ற பெருமையை உடைய மேலோர்கள் முறைமையாக அழைப்பதற்குக் கருவியாயிருக்கின்ற மந்திரங்கள்-தரிசனத்துக்காக ஏகாம்பரநாதருடைய வாசற்கோபுரத்தின் முற்புறமும் நெருங்கியுள்ள எல்லாத்தேவர்களையும் எளிமையாக அவ்விடத்திலிருந்தே யழைத்துக்கொண்டுபோகும்.— (எ-று) அவிர்ப்பாகம்-தேவர்களுக்குத் திர்ப்தியாக நெருப்பிலிடும்பொருள்-இச்செய்யுள்முதல வேண்டாதவிடத்தில அடைசொற்களுக்கு உரைசெய்யாமல் விடப்படும்- இதுவலவாக் கும்வராத சொற்களாயிருந்தால் உரைபெறும். (கூகூ)

அரசர்குலப்பெருந்தெருவும்தெற்றிமுற்றத் தாயுதங்கள் பயி
ற்றும்வியலிடமுமங்கண், புரசைமதக்கரிகளொடுபுரவியேறும்
பொற்புடைய வீதிகளும்பொலியவெங்கும், விரைசெய்நறுந்
தொடையலங்கற்குமரர்செய்யும்வியப்புறுசெய்தொழில்கண்
டிஞ்சைவிண்ணோர், நிரைசெறியும்விமானவூர்திகளின் மே
லுநிலமிசையும்பலமுறையுநிரந்துநீங்கார் ....*

(இதன் பொருள்)

அரசருடையமரபினர் வாழ்ந்திருக்கும் பெரியதெருவிலும் ஆயுதப்பயிற்சிசெய்கின்ற முற்றத்தையுடைய சாலைகளிலும் கழுத்துக்கயிற்றையுடைய மதங்கொண்டயானைகளிலும்-குதிரைகளிலும் ஏறிச்செலுத்துகின்ற வீதிகளிலும் அழகுற வாசனை பொருந்திய மாலைகளைத்தரித்த பாலர்கள்செய்கின்ற வியக்கத்தக்க பலவகைத்தொழில்களைக்கண்டு வித்தியாதரர் முதலாகிய தேவர்கள் நிரைநிரையாகநெருங்கிய விமானங்களின்மேலும்பூமிகளிலும்பலதரம்தங்கிநெருக்குற்றுப்போகாமல் இருப்பார்கள்.(எ-று)குமரர்செய்யும்வியப்புறுதொழில்-அருமையான இலக்குவைத்து அம்புகொண்டும் உண்டைகொண்டும் அடித்தல்-குதிரைகளைப்பலவகையான கதிகளிலவிடல் சிலம்பம் பழகுதலால்கத்தியின்வீச்சினையும் ஈட்டியின்குத்தினையும் மேலேபடாமல்நடத்தல், இலாகவங்கொண்டு மேலெழும்பிக்குதித்தல்-ஆட்டுக்கடா- கோழி-காடை-கவுதாரி முதலியவற்றைச் சண்டைக்குவிடுதல் முதலியனவாம். (ா)

வெயிலுமிழும்பன்மணிப்பூண் வணிகமாக்கள் விரவுநிதிவளம்
பெருக்கும்வெறுக்கைமிக்க, வயிலிலவுமணிக்கடைமா நகர்க
ளெல்லாம்வனப்புடையபொருட்குலங்கள்மலிதலாலே, மயில்
மலையார்க்கச்சியாலயங்கள்கம்பமும்மேவிய தன்மைகண்டுபோ
ற்றப், பயிலுமுருப்பலகொண்டுநிதிக்கோன்றங்கப்பயிலளகா
புரிவகுத்தபரிசுகாட்டும்... .. .. ❋

(இதன்பொருள்)

ஒளிபரப்பும்பல அரதனங்களிழைத்த அணிகளைத்தாங்கிய வ
ணிகர்கள் வியாபாரஞ்செய்தலால் பெற்றசெல்வமிகுந்த காசு
க்கடைகளையுடைய வீதிகளிலெல்லாம் பலதிறங்களைப்பெற்றி
ருப்பதுபற்றி அழகினையுடைய பொன்மணிமுதலிய பொருட்
குப்பைகள் நிறைந்திருப்பதனால் பரமசிவனார் திருவேகம்பத்
தையுங் கச்சியிலுள்ள மற்றைக் கோயில்களையும் இடமாகக்
கொண்டிருக்கும் தன்மையை அறிந்துவணங்கும்படி குபேர
ன் இந்நகரத்திலேயே வாசஞ்செய்ய அளகாபுரியானது அ
நேகம் உருவங்கொள்ள வகுக்கப்பட்டதுபோலத் தோன்று
கின்றன.—(எ-று) நிதிவளம்பெருக்கல்- வாணிகஞ்செய்தல்.

விழவின்மலிதிருக்காஞ்சிவரைப்பின்வேளாண்விழுக்குடிமைப்
பெருஞ்செல்வர்விளங்கும்வேணி, மழவிளவெண்டிங்கள்புனை
கம்பர்செம்பொன் மலைவல்லிக் களித்தவருணவின்மூலந்,
தொழவுலகுபெறுமவடானருளப்பெற்றுத்தொன்னிலத்து ம
ன்னுயிர்வேதவாய்மை, யுழவுதொழிலாற்பெருக்கி யுயிர்க
ளெல்லா மோங்கவருந்தருமவினைக்குரியராலென்றும்.. .. ❋

(இதன்பொருள்)

திருவிழாக்களால் சிறப்படைந்திருக்கும் காஞ்சிநகரத்தின் எ
ல்லையில் சிறந்தவேளாளர் குடியிற்பிறந்தசெல்வர்கள் ஒளிவி
டும்சடையில் இளமைபொருந்திய சந்திரனைத்தரித்த ஏகாம்ப
ரநாதர்-பார்வதியார்க்குக் கொடுத்தருளிய உணவிற்குக் கா
ரணமான இருநாழி நெல்லையும், அந்தத்தாயார் கொடுக்கத்தொ
ழுது பெற்றுப் பழமையாகிய இவ்வுலகத்தில் உழவுத்தொழி
லால் பயிரிடுதலை விருத்தியாக்கி வேதவாக்கியத்தின்படி எல்
லாவுயிர்களும் ஓங்கும்படி நினைந்துச்செய்யுந் தருமச்செய்
கையில் குறையாதவர்களாயிருந்தார்கள்.—(எ-று) (௨)

ஒங்கியநாற்குலத்தொவ்வாப்புணர்வின்றம்மி லுயர்ந்தனவு மி
ழிந்தனவுமானசாதி, தாங்குழுமிப்பிறந்தகுலபேதமெல்லாந்

தந்தமைக்கேற்றதனியிடங்கண்மேவி, யாங்குநிறைகிளை பயின்றமாபினுற்றவடுத்தவினைத்தொழின்முறைமை வழாமைநீடு, பாங்குவளரிருக்கைநிலைபலவுமெல்லாம்பண்புநீடியவுரிமைப்பாலவன்றே .. .. *

(இதன்பொருள்.)

உயர்வாகிய பிரம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரனென்கிற நான்கு சாதிகளில் உயர்ந்தசாதியாண் தாழ்ந்தசாதிப்பெண்ணையும்-தாழ்ந்தசாதியாண் உயர்ந்தசாதிப்பெண்ணையும்புணர்ந்ததனுற்பிறந்த அனுலோமர் பிரதிலோமரென்கிற உயர்வு இழிவாகியசாதிகளும், இவ்விரண்டுசாதிகளில் ஒருஜாதியாணும்பெண்ணும் மற்றொருசாதிப்பெண்ணையும் ஆணையும்சேர்ந்து பிறந்த குலமுமாகியபலவகைச் சங்கரசாதியாரும் அவரவர்கள்யோக்கியதைக்குத்தகுந்தபடியேதப்படுத்தியிருக்குந் தனிமையாகிய இடங்களையடைந்து அங்கங்குநிறைந்த சுற்றத்தோடுதங்கித்தங்கள் மரபிற்கேற்ற தொழின்முறைமை தவறாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் இருப்பிடங்களெல்லாம் உரிமையுஞ்சற்குணங்களும்பொருந்திய தன்மையை உடையனவாயிருக்கின்றன. (எ-று) பிராமணன்-க்ஷத்திரிய வைசிய சூத்திர மாதர்களைப்புணர்ந்து பிறந்த மூன்றுசாதியாரும் அரசன் வணிகஜாதிப்பெண்ணையுஞ் சூத்திரமாதையும்புணர்ந்து பிறந்த இரண்டுசாதியாரும் வணிகன்சூத்திரமாதைச்சேர்ந்து பிறந்த ஒரு சாதியானும் அனுலோமர் - இவர்களுயர்ந்தசாதியாம். பிராமணஸ்திரீயினிடத்தில்-க்ஷத்திரியன்-வைசியன் - சூத்திரன் - இம்மூவருஞ்சேர்ந்து பிறந்த மூன்றுசாதியாரும், க்ஷத்திரியஸ்திரீயினிடத்தில்-வைசியன்-சூத்திரன் - இவ்விருவருங்கூடிப்பிறந்த இரண்டுசாதியாரும், வைசியமாதினிடத்திற் சூத்திரன்கூடிப்பிறந்த ஒருசாதியானும், பிரதிலோமர்- இவர்களிழிந்தசாதி. (அனுலோமர்வகை) பிராமணனுக்கு - க்ஷத்திரியப்பெண்ணினிடத்திற் பிறந்தவன்- சவர்ணன். வைசியமாதினிடத்திற்பிறந்தவன் நிஷாதன்-சூத்திரஸ்திரீயினிடத்திற்பிறந்தவன்-பாரசவன். (க்ஷத்திரியனுக்கு) வைசியஸ்திரீயினிடத்திற்பிறந்தவன்-மாஹிஷின் - சூத்திரஸ்திரீயினிடத்திற் பிறந்தவன் - தௌஷிண்யன். (வைசியனுக்கு) சூத்திரஸ்திரீயினிடத்திற்பிறந்தவன் உக்கிரன், (பிரதிலோமர்வகை) பிராமணஸ்திரீயினிடத்தில்- க்ஷத்திரியனுக்குப்பிறந்தவன்-சூதன். வைசியனுக்குப்பிறந்தவன்-வைதேகன். சூத்திரனுக்குப்பிறந்தவன்-சண்டாளன். (க்ஷத்திரியஸ்தி

ரீயினிடத்தில்) வைசியனுக்குப் பிறந்தவன்-மாகதன்- சூத்திரனுக்குப்பிறந்தவன்-சூத்தா. (வைசியஸ்த்ரீயினிடத்தில்) சூத்திரனுக்குப்பிறந்தவன்-ரதகாரகன். இங்ஙனம், ஆகமங்களிலும் ஆகமங்களின் சாரமாகிய சைவபரிபாஷையிலும், யாவருமொத்துக்கொண்ட நிகண்டாகிய அமரகோசத்திலும் எடுத்துச் சொல்லப்பட்டது. மற்றைச்சாதிகளெல்லாம் தொழிலால் வேறுபேர்பெற்ற சாதிகளாம். இப்படியிருக்கத் தொழிலால்பேர்பெற்ற அனேகசாதிகளைக் குரோதத்தால் இன்னசாதிப்பெண்ணுக்கும் இன்னசாதியானுக்கும்பிறந்த சங்கரசாதிகளென்று தமிழில் யாவனோ ஒரு சாதாரணமனிதனுற் செய்யப்பட்ட சாதிநூலும், வடமொழியில் பிரமாணமில்லாமல் எவனாலேயோசெய்யப்பட்ட சிலசுலோகங்களும் பொய்யென்று நீக்கிவிடுக. பிராமணனுக்கு-வைசிய ஸ்த்ரீயினிடத்திற் பிறந்தவனே-அம்பஷ்டனென்பாருமுளர்- (௱௫)

(வேறு.)

ஆதிமூதெயிலந்நகர்மன்னிய . . . . . *
சோதிநீள்மணித் தூபமுந்தீபமுங் . . *
கோதில்பல்லியமுங்கொடியும்பயில் . *
வீதிநாளுமொழியாவிழவணி . . . . . . *

(இதன்பொருள்.)

புராதனமாகிய மதில்சூழ்ந்த அந்த நகரத்தின்வீதிகள் ஒளிவீசும், மணிகளிழைத்த நீண்ட தூபபாத்திரங்களில் இடுகின்ற தூபமும், தீபங்களும், குற்றமற்ற பலவாத்தியங்களும், கொடிகளும் உடையனவாகித்திருவிழாக்களின்சிறப்புகளை யொழியாமலிருக்கின்றன.—(எ-று) (௱௬)

வாயிலெங்கணுந்தோரணமாமதின் - *
ஞாயிலெங்கணுஞ்சூழ்முகிலுண்மதி.[ழ்
தோயிலெங்கணுமங்கலந்தொண்டர்சூ
கோயிலெங்கணுமும்பர்குலக்குழாம் *

(இதன்பொருள்.)

ன்ந்தவாசல்களிலுந் தோரணங்கள் கட்டியிருக்கின்றன-பெரிய மதிலுறுப்புகளிலெல்லாம் மேகங்கள் தவழ்கின்றன-விளங்குகின்ற சந்திரன் தவழ்கின்ற மேல்வீடுகளிலெல்லாம் மங்கலமான காரியங்கள் நடக்கின்றன-அடியார்கள் சூழ்ந்திருக்குங் கோயில்களிலெல்லாம் தேவருடையகூட்டங்கள் இருக்கின்றன.—(எ-று) (௱௭)

வேதவேதியர்வேள்வியேதீயன .... *
மாதரோதிமலரேபிணியன .. ....*
காதல்வீதிவிலக்கேகவலைய .. ....*
சூதமாதவியேபுறஞ்சூழ்வன .. .. *

(இதன்பொருள்)

வேதங்களையுணர்ந்த பிராமணர்கள்செய்கின்ற யாகங்களே தீயனவாயிருக்கின்றன-ஸ்திரீகளுடைய கூந்தலிலிருக்கும் புஷ்பங்களே பிணியனவென்று சொல்லப்படுகின்றன-விருப்பத்தைக்கொடுக்கின்ற வீதிகளுக்கு விலக்காகிய வழிகளே கவலையவாயிருக்கின்றன-மாமரங்களும் குருக்கத்தியரங்களுமே புறத்திற் சூழ்ந்திருப்பன.—(எ-று) தீயன வென்பதற்கு- நெருப்பை உடையனவென்றும்; பிணியன் - கட்டுப்பட்டிருக்கின்றனவென்றும்; கவலையவென்பதற்குச்-சிறுவழியை உடையனவென்றும் அருத்தமாம். சிலேடைவகையால் இங்ஙனஞ் சொல்லவே அந்தத்தலத்தில் தீமையான செய்கைகளும் வியாதியுடைய சீவன்களும், துன்பமுறுகின்றவைகளும் புறத்திலிருப்போர்களுமிலையென்பதுபெறும். (௩௬)

சாயலார்நுசுப்பேதளர்வன .... *
தூயமாடக்கொடியேயசைவன .. *
சேயவோடைக்களிறேதிகைப்பன. *
பாய்சோலைத்தருவேபயத்தன .. ..*

(இதன்பொருள்.)

மயில்போன்ற சாயலையுடைய மாதர்களது இடைகளே தளர்கின்றன-நன்றாகக்கட்டியிருக்கின்ற உப்பரிகைகளின் கொடிகளேயசைகின்றன-செய்ய பொன்மயமாகிய நெற்றிப்பட்டத்தையுடைய யானைகளே திகைக்கின்றன-அடர்ந்தசோலைகளே பயத்தை உடையனவா யிருக்கின்றன.—(எ-று) பயத்தனவென்பது-காய்கனிமுதலிய பலனை உடையன வென்பதாம் அந்நகரத்தில் யாவர்க்கும் தளர்வும் அசைவும் திகைப்பும் பயமும் இல்லையென்பது இப்பாட்டால் விளங்கிற்று. (௩௭)

அன்னமென்பாலபெறாளூர்த்தன. *
தன்னரூஞ்செருந்தாதெருகள்வன. *
உன்னநீண்மணிமாலையெதாழ்வன. *
வெள்ளிக்குன்றுபச்சேர்ந்திருக்கின *

(இதன்பொருள்.)

பரமசிவனுடைய அடியார்களின் அன்பே வன்மையாகக் கட்டப்பட்டன - குளிர்ச்சியும் வாசனையுமுள்ள புஷ்பதாதுக்களை உதிர்கின்றன - நிறமும் அழகும்பொருந்திய நீண்டமாலைகளை தாழ்கின்றன - மிகுந்தகுங்குமக்குழம்பே இழுக்கையுடையன. (எ-று இழுக்கினவென்பதற்கு- சுறுக்குகின்றனவென்றுமாம் சிலேடையில் குறைவுள்ளனவென்றுங்கொள்க. (௰௮)

வென்றிவானவர்தாம்விளையாடலு......... *
மென்றுமுள்ளவர்வாழியற்கையு..... .. *
நன்றுமுள்ளத்துநண்ணினர்வேட்கையு .. *
மொன்றுமங்கொழியாவகையுய்ப்பது ... *

(இதன்பொருள்)

வெற்றிபொருந்தியதேவர்கள் விளையாடல்செய்தலும், என்றுமுள்ளவர்கள்வாழ்கின்ற இயல்பும், நன்றாமனதில் சுவாமியை நினைத்தவர்களுடையபலவகை அன்புகளுள் - எதுவும்அவ்விடத்தில் ஒழியாமலிருக்கும்படி செலுத்துவதுகாஞ்சீபுரம் (எ-று)

புரங்கடந்தவர்காஞ்சிபுரம்புகழ் .... *
பரம்புநீள்புவனம்பதினான்கினும் .... .. *
வரம்பில்போகவளப்பின்வளமெலாம் .. .*
நிரம்புகொள்கலமென்னநிறைந்ததால் .. *

(இதன்பொருள்)

திரிபுரத்தையெரித்த சுவாமி வீற்றிருக்கும் காஞ்சீபுரமானது இசைபரவிய நீட்சியுற்ற பதினான்கு உலகங்களிலும் உண்டாகிய அளவற்ற போகங்களின் அழகிய வளப்பங்களெல்லாம் நிறைந்த ஒரு பாண்டம்போலிருந்தது.—(எ-று) (௰௯)

(வேறு.)

அவ்வகைத்திருநகரமதன்கணொருமருங்குறைவா ... . *
ரிவ்வுலகிற்பிறப்பினாலேகாலிககுலத்துள்ளார் .... *
செவ்வியவன்புடைமனத்தார்சீலத்தினெறிநின்றார் ... ... *
மைவிரவுகண்டர்டிவழித்தொண்டருளரானார் .. ..*

(இதன்பொருள்.)

அத்தன்மையாகிய காஞ்சீபுரத்தினெல்லையினோரிடத்தில் வாசஞ்செய்வார் - இவ்வுலகத்தில் அவர் பிறப்பைக்குறித்து விசாரிக்கும்போது ஏகாலிக்குலத்திற்பிறந்தவர் - நேராகிய அன்பினையுடையமனத்தினர் - ஆகமத்திற்சொல்லிய ஒழுக்கத்தின்ப

டி நடந்தவர்-விஷம்பொருந்திய கழுத்தினையுடைய பரமசிவனது திருவடிகளுக்குத் தொண்டுசெய்கின்ற அடியவர் இப்படிப்பட்டவர் ஒருவரிருந்தார்.—(எ-று) (௱௰௧)

மண்ணின்மிசைவந்ததற்பின்மனமுதலாயினமூன்று .. .. *
மன்னலார்சேவடியின்சார்வாகவணைவிப்பார் .... *
புண்ணியமெய்த்தொண்டர்திருக்குறிப்பறிந்துபோற்றுநிலைத்
திண்மையினாற்றிருக்குறிப்புத்தொண்டரெனுஞ்சிறப்பினார்.. *

(இதன்பொருள்)

பூவுலகத்தில் அவதரித்த உடனே-மனம்-காயம்-வாக்கு என்கிற மூன்றும் பரமசிவனுடைய செவ்விய திருவடிகளினிடத்தே பொருந்தும்படி செய்விப்பார்-சிவபுண்ணிய மேலிட்ட உண்மையான அடியார்களுடைய உள்ளத்தின் குறிப்பை அறிந்து அவர்களுக்கு விரும்பினவற்றைச்செய்கின்ற நிலைமையான வுறுதியினால் திருக்குறிப்புத்தொண்டரென்று பேர்பெற்ற சிறப்பினையுடையவர்.—(எ-று) (௱௰௨)

தேரொலிக்கமாவொலிக்கத்திசையொலிக்கும்புகழ்க்காஞ்சி *
ஊரொலிக்கும்பெருவண்ணாரெனவொன்றுவண்மையினார். *
நீரொலிக்கவராவிரைக்கநிலாமுகிழ்க்குந்திருமுடியார் .... *
பேரொலிக்கவுருகுமவர்க்கொலிப்பர்பெருவிருப்பினொடும் *

(இதன்பொருள்.)

தேர்களும் குதிரைகளும் ஒலித்தலால், திக்குகளெல்லாம்-முழங்குகின்ற புகழினையுடைய காஞ்சிபுரத்திலூரிலுள்ள ஆடைகளை வெண்மைசெய்கின்ற வண்ணாரிற்சேர்ந்தவரொன்று சொல்லக்கூடாத பெருமையை உடையவர்-கங்கையினீர் முழங்கவும், பாம்புகள் இரைக்கவும், மூன்றாம்பிறை விளங்குகின்ற சடைமுடியை உடைய பரமசிவன் திருநாமங்களை யுச்சரித்த பொழுதே மனமுருகுகின்ற அடியவர்களுக்கு வஸ்திரங்களை மிகுந்த விருப்பத்துடனே ஒலித்துக்கொடுப்பர்.—(எ-று) ஒலித்தல்-வெளுத்தல்-திசையொலிக்குமென்பதற்கு; திக்குகளிலுள்ளவர்களென்றும் பொருள்கூறலாகும். (௱௰௩)

நேசமுடையமலர்க்கமலச்சேவடியாரடியார்தந் .. .. *
தூசுடையதுகண்மாசுகழிப்பார்போற்றொல்லைவினை .... *
யாசுடையமலமூன்றுமணையவரும்பெரும்பிறவி .. ..*
மாசுதனைவிடக்கழித்துவருநாளிலங்கொருநாள் .. .. *

(இதன்பொருள்.)
பிரகாசமுள்ள தாமரைமலர்போன்ற திருவடியினையுடைய பரமசிவனது அடியார்களுடைய ஆடைகளிலுள்ள அழுக்கினை நீக்குவார்போன்றுருத்திறம்பொருந்திய மூன்றுமலங்களும்பொருந்தும்படி நெடுங்காலமாகத் தொடர்ந்துவருகின்ற இந்தப் பிறப்பாகிய அழுக்குப் போகும்படிசெய்து வருகின்றநாளிலொருநாள்.—(எ-று) (௱௰௪)

பொன்னிமையப்பொருப்பரையன் பயந்தருளும்பூங்கொடிதன்
னின்னிலைமையன்றளக்கவெழுந்தருளுநம்பெருமான் .... *
றன்னுடையவடியவர்தந்தனித்தொண்டர்தம்முடைய.... .. *
வந்நிலைமைகண்டன்பர்க்கருள்புரிவான்வந்தணைவார் .. .. *

பொன்மயமாகிய இமாசலராசன் பெற்றபுஷ்பக்கொடிபோன்ற பார்வதியாருடைய பத்தியினிலைமையைச் சோதிக்கமுன்னுளில் எழுந்தருளிய ஏகம்பர்-தம்முடைய அடியவர்களுக்கு அடியவராயிருக்கும் ஒப்பற்ற திருக்குறிப்புத்தொண்டநாயனார் பத்தியினுறுதியை அறிந்து அவர்க்குக் கிருபைசெய்யும்படி வந்தருளினார்.—(எ-று) (௱௰௫)

சீதமலிகாலத்துத்திருக்குறிப்புத்தொண்டர்பா.... .... *
லாதுலராய்மெலிந்தழிகவழுக்கடைந்தகந்தையுடன் .... *
மாதவவேடந்தாங்கிமாலறியாமலரடிகள்............ *
யோதனடையாமனத்தவர்முன்குறுநடைகள்கொளக்குறுகி .. *

(இதன்பொருள்.)
சீதளமிகுந்த குளிர்காலத்தில் திருக்குறிப்புத்தொண்டநாயனாரிடத்தில் ஏழைபோலத்தேகம் இளைத்து அழுக்காகிய கந்தையுடனேமகத்தாகிய சிவபத்தர்வேடங்கொண்டு விஷ்ணுவால் அறியப்படாத மலர்போன்றபாதங்கள் குற்றம்சேராத மனத்தையுடைய திருக்குறிப்புத்தொண்ட நாயனாருக்குமுன் சிறியநடைகளைக் கொள்ளும்படியாக அடைந்து.—(எ-று) (௱௰௬)

திருமேனிவெண்ணீறுதிகழ்ந்தொளிருங்கோலத்துக் .... *
கருமேகமெனவழுக்குக்கந்தையுடனெழுந்தருளி .. .. .. *
வருமேனியருந்தவரைக்கண்டுமனமகிழ்ந்தெதிர்கொண் .. *
டுருமேவுமயிர்ப்புளகமுளவாகப்பணிந்தெழுந்தார்........ *

(இதன்பொருள்.)
திருமேனியில் வெண்மையாகிய திருநீறு பிரகாசிக்குங் கோல

த்துடனே கருமையாகிய மேகம்போல் அழுக்குப்பிடித்த கந்தையையுடையவரா யெழுந்தருளிவரும் அரியதவத்தைச்செய்த பெரியவரைப் பார்த்துச் சந்தோஷமுண்டாகி யெதிர்கொண்டழைத்துத் தேகத்தில் மயிர்சிலிர்க்க வணங்கியெழுந்தார்.—(எ-று) கருமேகமென்றதனால்-கந்தையைப் போர்த்துக்கொண்டிருந்தாரென்றும், அது மிகவு மழுக்கேறி யிருந்ததென்றும் பொருள்பெற்றும். (௱௰௪)

எப்புமவர் குறிப்பறிந்தேயினியமொழிபலமொழிந்து .. *
செய்தவத்தீர் திருமேனியிலிருந்ததென்னென்று .... *
மெய்தொழுதுகந்தையினைத்தந்தருளுங்கழுவவென ....*
மைதிகழ்கண்டங்கரந்தமாதவத்தோரருள்செய்வார் .....*

(இதன்பொருள்)

இங்ஙனம்வந்த சுவாமியின் திருவுள்ளக்குறிப்பை யறிந்துகொண்டு அவர்க்கு இனிமையான உபசாரவார்த்தைகள் பலசொல்லித்தவவேடங்கொண்ட பெரியோரே தேவரீரது திருமேனியிலிருப்பதற்குக்காரணமென்னவென்றுகேட்டுக்கைகூப்பிக் கும்பிட்டுச் சிதலமாயிருக்கின்ற ஆடையை வெண்மைசெய்வதற்குக் கொடுத்தருளுமென்று சொல்ல விஷக்கறையைக் கழுத்தில் நின்றும் ஒளித்துத் தபசியாகவந்த பரமசிவன் அருளிச்செய்வார்.— எ-று) குறிப்பறிதலாவது-சிவபத்தர் அழுக்காகிய கந்தையை வெளுப்பாக்கவந்தாரென் றுணர்தலாம்-

இக்கந்தையழுக்கேறி யெடுக்கவொணாதெனினும்யான், மெய்க்கொண்டகுளிர்க்குடைந்துவிடமாட்டேன்மேல்கடற்பால்* லக்குன்றம்வெங்கதிரோனணைவதன்முன்தருவீரேல் .. .. *
கைக்கொண்டுபோயொலித்துக்கொடுவாருங்கடிதென்றார் *

(இதன்பொருள்)

நான்தரித்திருக்கும் இக்கந்தையான துணி அழுக்கதிகமாக வெடுத்தரிப்பதற்குத்தகுதியில்லாததாயிருந்தாலும் உடம்பில் மோதியவீசுங்குளிர்காற்றிற்குப் பொறுக்காமல் வருத்தமுறுகின்றபடியால்விடாமல் வைத்துக்கொண்டிருக்கின்றேன் மேற்கடலிலுள்ள அஸ்தமயகிரியில் சூரியன் சேர்வதற்குமுன்னே கொடுப்பீராயின் இதனையெடுத்துக்கொண்டுபோய் வெளுத்து விரைவிற்கொண்டுவாரும் என்றார்.—(எ-று) தேகம் இளைத்தலால்- அழுக்கேறியகந்தை தூக்கக்கூடாததா யிருக்கின்ற

தெனினும்பொருந்தும். விடமாட்டேன் - என்பதற்குக் கொடுக்கமாட்டேனென்றலும் ஒருவழக்கு. (௱௰௯)

நந்தருளுமிக்கந்தைதாழாதேயொலித்துடக்கின் . . . . *
றந்திபடுவதன்முன்னந்தருகின்றேனெனவவரும் . . . . *
கந்தையிதுவொலித்துணக்கிக்கடிதின்றேதாரீரேல் . . . . *
லிந்தவுடற்கிடர்செய்தீரென்றுகொடுத்தேகினார் . . . . *

(இதன்பொருள்)

திருக்குறிப்புத்தொண்டநாயனார் - இவ்வாறு திருவாய்மலர்ந்தருளின சுவாமியை நோக்கி இந்தக்கந்தையைக் கொடுத்தால் பொழுதுபோக்காமல் வெளுத்து அந்திவேளை யாகிறதற்கு முன்னே தானே தேவரீருக்குத்தருகிறேனென்றுசொல்ல ஆண்டவரும் சிதிலமாய்ப்போன இத்துணியை வெண்மையாக்கி உலர்த்தி விரைவிற் கொடுக்காமற்போனீராயின் - இந்தவுயிருக்கு நீரே துன்பஞ்செய்தவ ராவீரென்று கொடுத்துவிட்டுப் போயினார்.—(எ-று) உடல்-ஆகுபெயர். (௱௨௰)

குறித்தபொழுதேயொலித்துக்கொடுப்பதற்குக்கொடுபோந்து, வெறித்தடநீர்த்துறையின்கண்மாசெறிந்தமிக்கபுழுக்கிப் பிறித்தொலிக்கப்புகுமளவிற் பெரும்பகல்போய்ப் பின்பகலாய், மறிக்காத்தார்திருவருளான்மழையெழுந்து பொழிந்திடுமால் . . . . *

(இதன்பொருள்.)

சுவாமி குறித்தகாலத்திலேயே வெண்மையாக்கிக் கொடுப்பதற்குக் கந்தையை எடுத்துக்கொண்டு சுத்தமாயிருக்கும் ஒரு குளத்தினீர்த் துறையிற்போய் முதலில் கொஞ்சம் அழுக்கும் போக்கிப்பின்பு வெள்ளாவியில்வைத்துமாசுபோகும்படி ஒலிக்கப்போனபோது சூரியன் நன்றாக எறிக்கும் உச்சிப்பகலானது ஒழிந்து இருண்ட அந்திவேளைபோலத்தோன்ற மானைத்தரித்த கையினையுடைய சுவாமியின் கிருபையால் மேகங்கள் பரவி மழைபொழிந்தன.—(எ-று). (௱௨௧)

திசைமயங்கவெளியடைத்தசெறிமுகிலின்குழாமடைந்து . . . *
மிசைசொரியும்புனற்றாரைவிழிநாலமாயவகைமிடைய . . . . . *
வசைவுடையமனத்தன்பரறிவுமறந்தருந்தவர்பா . . . . *
லிசைவுதினைந்தழிந்தினியானென்செய்கேனெனநின்றார் . . *

(இதன்பொருள்)

திக்குகள்தெரியாமல் ஆகாசவெளியெல்லா மறைத்து மேக

க்கூட்டங்களெல்லாம் ஒன்றாகச்சேர்ந்து மேலிட்டிருந்து சொரிகின்ற நீர்த்தாரைகள் துளிகளுக்கும் துளிகளுக்கும் இடையிலுள்ள சந்துகள்பார்வைக்கு அகப்படாமலிருக்கும்படி நெருங்கிவிழுந்துகொண்டிருக்க முதலிலேயே இஃதெப்படியாமோவென்று கலக்கமுற்றிருந்த மனத்தையுடைய திருக்குறிப்புத்தொண்டநாயனார் மூர்ச்சைபோய் எழுந்து அரியதவவேடங்கொண்ட சுவாமிக்குத்தாம் வாக்குத்தத்தஞ்செய்ததைநினைந்து இறந்தவர்போன்று இனி நானென்னசெய்வேனென்று விதனமுற்றுநின்றார்.—(எ-று) (௬௨௨)

ஓவாதேபொழியுமழையொருகால்விட்டொழியுமெனக் .. *
காவாலிதிருத்தொண்டர்தனிநின்றார்விடக்காலூர் .... .. *
மேவார்போற்கங்குல்வரமெய்குளிரும்விழுந்தவர்பா .... *
லாவாவென்குற்றேவலழிந்ததாவெனவிழுந்தார் .... .. *

(இதன்பொருள்)

பரமசிவனுக்கு அடியாராகிய திருக்குறிப்புத் தொண்டநாயனார் இடைவிடாமல் சொரிகின்ற மழையானது ஒருதரம்விடுமென்றெண்ணித்து அவ்விடத்திற்றனே ஏகாகியாகநின்று காத்துக்கொண்டிருந்தார்-மழைவிடாததைக்கண்டு பகைவர்போல் இராக்காலம்வந்தால் குளிரினால்திருமேனி நடுங்குகின்றமெய்மைபொருந்திய தவத்தையுடைய அப்பெரியவரிடத்திலெ யயவிரும்பிய அடியேனுடைய சிறிய பணிவிடையானது-ஐயோ தவறிப்போயிற்றேயென்று கீழேவிழுந்தார்.—(எ-று.) கபாலி-காவாலியெனத்திரிந்தது. (௬௨௩)

விழுந்தமழையொழியாதுமெய்த்தவர்சொல்லியவெல்லை. *
கழிந்ததுமுன்பொலிந்துமனைக்காற்றேற்கவறிந்திலேன் ...*
செழுந்தவர்தந்திருமேனிகுளிர்காணுந்தீங்கிழைத்த. .... *
தொழும்பனேற்கினியிதுவேசெயலென்றுதுணிந்தெழுவார்*

(இதன்பொருள்.)

சொரிந்துகொண்டிருக்கு மழையானது ஒழியாததாயிருக்கின்றது மெய்ம்மைபொருந்திய தவவேடத்தோராகியசுவாமி ஆடையைவெளுத்துக்கொடுக்கச்சொல்லி ஏற்படுத்தியகாலமோ நீங்கிற்று இனி ஆடையைத்தப்பி வீட்டினுள்ளே காற்றுக்கெதிராகக்கட்டினாலும் உலர்கிறதற்குவழியில்லை,சிறப்புற்றதவத்தையுடைய அடியார்திருமேனியானது குளிரால் வருந்தும்படி தீ

ளுசெய்த அடியேனுக்குமேற்செய்யவேண்டியசெய்கையிது
வேயாகுமென்று ஒன்றைநினைத்துத் துணிவுகொண்டு எழுந்
தார்.—(எ-று) (௱உச)

கந்தைபுடைத்திடவெற்றுங்கற்பாறைமிசைத்தலையைச் .... *
சிந்தவெறித்தெற்றுவனென்றணைந்துசெழும்பாறைமிசைத் *
தந்தலையைப்புடைத்தெற்றவப்பாறைதன்மருங்கு .. .... *
வந்தெழுந்துபிடித்ததணிவளைத்தழும்பர்மலர்ச்செங்கை .. *

(இதன்பொருள்.)

துணிகளை உரக்கப்புடைப்பதற்குக்கருவியாயிருந்த கற்பாறை
யின்மேல் என்னுடையதலையைப் பொடியாகும்படி எற்றிக்
கொள்வேனென்று போய்ப் பாறையாகிய கல்லின்மேல் தம்
முடையசிரசினை உறுதியாக இடித்துக்கொள்ள அப்போது அப்
பாறையினிடத்திருந்து அழகிய வளைத்தழும்புபெற்ற ஏகாம்ப
ரநாதரது தாமலாமலர்போன்ற சிவந்தகையானது தோன்றி அ
வரைப் பிடித்துக்கொண்டது.—(எ-று) (௱உரு)

வானிறைந்தபுன்மழைபோய்மலர்மழையாயிடமருங்கு .. *
தேனிறைந்தமலரிதழித்திருமுடியார்பொருவிடையின் .. [ர்
மேனிறைந்த துணைவியொடும்வெளிநின்றார் மெய்த்தொண்ட
தானிறைந்தவன்புருகக்கைதொழுதுதனிநின்றார் .... *

(இதன்பொருள்)

ஆகாயத்திலிருந்து நிறைவாய்விழுகின்றநீர்மழைபோய்ப்புஷ்
பமழையாய்ச்சொரிய-தேன்ததும்பிய கொன்றைப்பூமாலை
யைத்தரித்த முடியையுடைய பரமசிவன் ரிஷபவாகனத்தின்
மேல் பிரகாசமாகப் பார்வதியோடும் எழுந்தருளிக் காட்சி
கொடுத்தார் - உண்மைபொருந்திய திருக்குறிப்புத்தொண்ட
நாயனார் தமக்குமிகுதியாயுண்டாயிருந்த அன்பினால் கைகூப்
பிக்கும்பிட்டுத்தனியேநின்றார்.—(எ-று) (௱உ௬)

முன்னவரைநேர்நோக்கிமுக்கண்ணர்மூவுலகு .... *
நின்னிலைமையறிவித்தோநீயுமினிநீடியநம் .... *
மன்னுலகுபிரியாதுவைகுவாயெனவருளி .... *
யந்நிலையேயெழுந்தருளியணியேகாம்பரமணைந்தார் .... *

(இதன்பொருள்.)

மூன்றுகண்களையுடைய பரமசிவன் தமக்குமுன்னாகநிற்கின்ற
திருக்குறிப்புத்தொண்டநாயனாரைநோக்கி-உன்னுடையஅன்
பின் உறுதிப்பாட்டை உலகத்தார்க்குத்தெரிவித்தோம் நீயும்

இனி என்றும் அழியாத நமது உலகத்தில்வந்து எம்மைப்பிரியாமல் இருவென்று கிருபைசெய்து அப்பொழுதே எழுந்தருளுதல்கொண்டு ஏகாம்பரத்தை அடைந்தார்.—(எ-று) ஏகாம்பரமென்றது-ஏகாம்பரேசுரர்எழுந்தருளியிருக்குங்கோயில். (௱௨௭)

சீர்நிலவுதிருக்குறிப்புத்தொண்டர்திருத்தொழில்போற்றி.. *
பார்குலவத்தந்தைதாளறவெறிந்தார்பரிசுரைக்கேன் .... *
பேரருளின்மெய்த்தொண்டர்பித்தனெனப்பிதற்றுநலா.. *
லாருலகிலிதனுண்மையறிந்துரைக்கவிசைந்தெழுவார் .... *

(இதன்பொருள்)

சீர்த்திபொருந்திய திருக்குறிப்புத்தொண்டநாயனாருடையஒப்பற்றசிவநேசச்செய்கையைத்துதித்து-உலகத்தாரறியத்தகப்பனாருடையபாதந் துண்டாகவெட்டின சண்டேசுரநாயனார் தன்மையை உரைக்கப்புகுந்தேன்-மிகுந்த கிருபையையுடைய மெய்ம்மைபொருந்திய அடியாராகிய சுந்தரமூர்த்திசுவாமியே திருத்தொண்டர்களுடைய பெருமையைக்குறித்துப் புகழ்வதற்குத் தமக்கு வலியில்லையென்றுசொல்லியபடியால் யாவர்தாம் இதனுடைய மெய்ம்மையை அறிந்துசொல்லச்சம்மதித்து எழுவார்கள்.—(எ-று) இங்கு-பித்தனென்றது, அறியாமையை உடையவனென்பதாம் - அது இன்னவா றின்னபண்பென்றேத்தகேனதற்கு- யானார் என்பதனாலறிக. பிதற்றுதல்-சொல்லுதல். (௱௨௮)

திருக்குறிப்புத்தொண்டநாயனார்புராண-முற்றும்.

௩-திருவிருத்தம்-௧௨௱௰.

சண்டேசுர நாயனார்புராணம்.

பூந்தண்பொன்னியெந்நாளும் பொய்யாதளிக்கும் புனனாட்டு
வாய்ந்தமண்ணித் தென்கரையின் மன்னுமூதூர் வரைகிழிய
வேற்றுமயில்வேனிலைகாட்டியிமையோரிடர்வெம்பகைகடக்குஞ்
சேந்தனளித்ததிருமறையோர்மூதூர்செல்வச்சேய்ஞலூர் [ஞ்]

(இதன்பொருள்)

பொலிவினையுங்குளிர்ச்சியையுமுடைய காவேரியானது எக்காலத்திலும் மாறுதல்நீங்காத்தருகின்ற சோளதேசத்தில் மண்ணியாற்றின் தென்கரையில் நிலைபெறும்படி ஆதிகாலத்தில் க்ரௌஞ்சகிரியானது இருகூறுகப்பிளவுபடத்தரித்த கூர்மைபொருந்திய வேலினது வலிமையைக்காண்பித்தது தேவர்களுடைய பெரும்பகைவரான சூரன்முதலான அசுரர்களைக்கொன்ற சுப்பிரமணியமூர்த்தி உண்டாக்கிய பழமையாகிய; செல்வமானது யாதெனின்-நெறியுற்ற பிராமணர்கள் வாழ்ந்திருக்கும் செழிப்புள்ள சேய்ஞலூராம்.—(எ-று); சேய்ஞலூர் என்பதில் ஞகரப்போலிவந்தது. சேய்-முருகக்கடவுள். (க)

செம்மைவெண்ணீற்றொருமையினு ரிரண்டுபிறப்பின் சிறப்பினார், மும்மைத்தழலோம்பியநெறியார் நான்குவேத முறைபயின்றார், தம்மையைந்து புலனும்பின் செல்லுந்தகையா ரறுதொழிலின், மெய்ம்மையொழுக்க மேழுலகும் போற்றுமறையோர்விளங்குவது .... *

(இதன்பொருள்)

செம்மையாகிய வெண்ணீறுதரிக்கும் ஒப்பற்ற தன்மையை உடையவர்கள் சன்மத்தினாலும் கர்மத்தினாலும் இரண்டுபிறப்பை அடைந்தவர்கள் மூவகையான அக்கினியைவளர்க்கும் வேதநெறியை உடையவர்கள் நான்குவேதங்களையும் கிரமமாக ஓதியுணர்ந்தவர்கள் ஐம்பொறிகளும் அவைகள்போம் வழியிற் போகாமல் தங்கள்கருத்தின்படிசெலுத்துந்தகுதியையுடையவர்கள் மெய்ம்மையாகிய அறுவகை ஒழுக்கமுற்றிருப்பதனால் ஏழுலகத்தாரும் புகழ்கின்றமறையோர்களாகிய இத்தன்மையுடையோர்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் பதியாகும் திருச்சேய்ஞலூர்.—(எ-று) (உ)

கோதின்மான்றோற்புரிமுந்நூல்குலவுமார்பிற்குடுமி*
யோர்தருபுடைசூழ்சிறுவர்களுமோதவும்பெருமையாசானும்..*

போதின்விளங்குந்தாரகையுமதியும்போலப்புனைமடங்கள் *
மீதுமுழங்குமுகிலொதுங்கவேதவொலிசென்முழங்குவன... *

(இதன்பொருள்.)

குற்றமற்ற மான்றோலைப்பிணித்தமுப்புரியாகிய பூணூலைமார்பிற்பிரகாசிக்கத் தரித்து மயிர்திரண்டுள்ள குடுமியினையுடையவர்களாய்ப் பக்கத்திற்சூழ்ந்து ஓதுகின்ற பாலர்களும், ஓதுவிக்கும் பெருமையை உடையஆசாரியனும்;இராக்காலத்திலுதிரும் நக்ஷத்திரங்களும் சந்திரனும்போல இருப்பதற்கிடமாகிய பலமடங்களின் மேலிடத்தில் மேகங்கள் முழங்கி யொதுங்குதற்கிடத்தில் வேதகோஷங்கள்முழங்குகின்றன.—(எ-று)

யாகநிலவுஞ்சாலைதொறுமறையோரீந்தவவியுணவின் .... *
பாகநுகரவருமாலுமயனுமூரும்படர்சிறைப்புள் .. .... *
மாகமிகந்தவந்திருக்குஞ்சேக்கையெனவுவானவர்கோ.. *
னாகமணையுங்கந்தெனவுநாட்டுந்தூபமுள .... *

(இதன்பொருள்)

விளங்குகின்றயாகசாலைகளிலெல்லாம்பிராமணர்கள்கொடுத்த அவிர்ப்பாகவுணவின் பங்கை உண்பதற்குவருகின்ற விஷ்ணுவினுதும் பிரமனுதும் நடத்தப்படுகின்றபாரந்தசிறகினையுடைய கருடனும், அன்னமும்;ஆகாயத்திலிருந்துவந்துதங்கிய இடம்போலவும், தேவேந்திரனுடைய வெள்ளையானையைக் கட்டுந் தறிபோலவும் நாட்டியவேள்விக்கம்பங்களுமுண்டு.(எ-று)

தீம்பாலொழுகப்பொழுதுதொறுமோமதேனுச்செல்வனவுந் *
தாம்பாடியசாமங்கணிப்போர்சமிதையிடக்கொண் டணைவன *
வும், பூம்பாசடைநீர்த்தடமூழ்கிமறையோர்மகளிர்புகுவனவு, *
மாம்பான்மையினில்விளங்குவனவணிநீண்மறுகுபலவுமுள .*

(இதன்பொருள்.)

தித்திப்பாகிய பால்ஒழுகும்படி காலங்கள்தோறும் ஓமத்திற்குப்பயன்படுகின்ற பசுக்கள்போவனவும், பார்ப்பார் சாமவேதத்தை யோதிக்கொண்டு சமித்துக்கள் கொண்டுவருகின்றனவும்,மலர்களையும் பசுமையாகிய இலைகளையுமுடைய நீர் நிறைந்த தடாகங்களில் முழுகிப் பிராமணஸ்திரீகள் புகுவனவுமாகிய இத்தன்மையோடுவிளங்கும் அழகுபொருந்திய நீண்ட வீதிகள் பலவுமுளவாயிருக்கின்றன அந்த ஊரில்.—(எ-று)

செல்வன-அணைவன-புகுவன-பன்மைத்தொழிற்பெயராய் நின்றன.

(௫)

வாழ்பொற்பதிமற்றதன்மருங்குமண்ணித்திரைகள்வயல் வரம்
பின், தாழ்வித்தரளஞ்சொரிகுலைப்பாற் சமைத்தயாகத் தடஞ்
சாலை, சூழ்வைப்பிடங்கணெருங்கியுள தொடங்குசடங்கு முடி
த்தேறும், வேள்வித்தலைவர்பெருந்தேர்கள் விண்ணோரேறும்
விமானங்கள் ....*

(இதன்பொருள்)

இப்படிப்பட்ட வாழ்வுபொருந்திய அழகாகிய அந்நகரத்தின்கண் வயல்களினுடைய வரப்பின் தாழ்விடத்தில் முத்துக்களை வீசுகின்ற அலைகளையுடைய மண்ணியாற்றின்கரையில் ஏற்படுத்தியவிசாலமாகியயாகசாலைகளைச்சூழ்ந்த இடங்களில் ஆரம்பித்தசடங்குகளைமுடிக்கின்றயாகத்தலைவர்களுடைய பெரிய தேர்களும், தேவர்களேறுகின்றவிமானங்களும் நெருங்கியிருக்கின்றன.—(எ-று) குலையென்பது-கரை. (௬)

மடையிற்கழுநீர்செழுநீர்சூழ்வயலிற்சாலிக்கதிர்க்கற்றை .. *
புடையிற்கரும்புமிடைகமுகுபுனலிற்பாம்புபூம்பாளை .... *
அடையிற்பயிலுந்தாமரைநீளலரிற்றுயிலுங்கயல்கள்வழி [ஞ்சி
நடையிற்படர்மென்கொடிமௌவனையிற்றிகழுஞ்சினைக்கா

(இதன்பொருள்.)

நீர் ஓடுகின்றமடைகளில் செங்கழுநீரும், அழகியநீர்சூழ்ந்தவயல்களில் நெற்கதிர்களின் கூட்டமும்; பக்கங்களில் வண்டுகள் வாசனையைப்பற்றி மொய்க்கும்கமுகமரங்களும், நீரில்அலைகின்ற பொலிவாகியபாளைகளும், இலைகள்மிகுந்த தாமரையின் உயர்ந்தமலர்களில் நித்திரைசெய்யுமீன்களும், மனிதர்கள்நடக்கும்வழியில்படர்ந்தமெல்லியகொடிகளையுடையமுல்லைகளும் அரும்புகளால் விளங்குங்காஞ்சிமரங்களும்விளங்கிக்கொண்டிருக்கும்.— (எ-று) (௭)

சென்னியபயன்குலோத்துங்கச்சோழன் றில்லைத்திருவெல்லை,
பொன்னின்மயமாக்கியவளவர்போரேறென்றும்புவிகாக்கு *
மன்னர்பெருமானனபாயனவருந்தொல்மரபின்முடிசூட்டுந்
தன்மைநிலவுபதியைந்தினொன்றாய்விளங்குந்தகைத்தவ்வூர் *

(இதன்பொருள்.)

சென்னி-அபயன் - என்கிற பொதுப்பெயர்களைப்பெற்ற குலோத்துங்கச்சோழன்- தில்லையின் அம்பலத்திற்குப் பொன்வேய்ந்தசோழன்-தம்முடையகாலமுழுதும்உலகத்தைக்காக்கும் அரசர்பெருமானாகிய அனபாயச்சோழர்முதலாகி

யவர்கள்பிறந்த சோழமரபில்முடிசூட்டியாளுதற்கிருப்பிடமா ய்ப் பெருமைபெற்ற ஐந்துநகரங்களில் ஒன்றாகவிளங்குந் த ன்மையை உடையதாஅந்தத்திருச்சேய்ஞலூர்.—(எ-று) சோ ழர்கள் வீற்றிருக்கும் ஐந்திடங்களாவன-கருவூர்-உறையூர்-தி ருவாரூர்-திருச்சேய்ஞலூர்-காவிரிப்பூம்பட்டினமாய், சோ ழபுரமும்,கங்கைகொண்டசோழபுரமும்பின்உண்டாயின.(அ)

பண்ணின்பயனாநல்லிசையும்பாலின்பயனாமின்சுவையுங், கண்
ணின்பயனாம்பெருகொளியுங்கருத்தின்பயனாமெழுத்தஞ்சும்
விண்ணின்பயனாம்பொழிமழையும்வேதப்பயனாஞ் சைவமும்போ
ல், மண்ணின்பயனாமப்பதியின்வளந்தன்பெருமைவரம்
புடைத்தோ .... *

(இதன் பொருள்.)

இராகங்களின் பயனாகிய நல்ல இசையும், பாலின்பயனாகிய இ னியமதுரியமும், கண்களின் பயனாகிய அதிகமாகிய ஒளியும், நினைப்பதற்குப்பயனாகிய பஞ்சாட்சரியும், ஆகாயத்திலிருந் து உண்டாகிறபயனாகிப் பொழிகின்ற மழையும், வேதத்தில் சாரமாகிய சைவமும்போல பூலோகத்தில்பயனாய்ச் சிறந்த தாயிருக்கின்ற அந்நகரத்தின்வளமானது ஒரு அளவையுடை யதோ.—(எ-று) இந்தச்செய்யுளில்- இசையென்றது, ரக்தி மை-இனிமையென்னுமொழிக்கும். இரக்திமையில்லாத இராக ம் கேட்போர்க்கு இன்பங்கொடாது-அது உண்டாயின்-இவ் புராணம் அதுபற்றிப் பண்ணிற்கு இசைபயனாயிற்று. (கூ)

பெருமைபிறக்குமப்பதியின் மறையோர்தம்முட் பெருமனை
தருமதிலவுகாசிபகோத்திரத்துத்தலைமைசார்மரபி-.. [வாழ்
வொருமைமணியுமளித்ததுவேநஞ்சுமளிக்குமரவுபோ .... *
யிருமைவினைக்குமொருவடிவாமெச்சதத்தனுளனானன் .. *

(இதன் பொருள்)

பெருமையோடுவிளங்கிய அந்தநகரத்தில் வாழ்ந்திருக்கும் பிரா மணர்களுக்குள் ஒப்பற்ற இல்வாழ்க்கைக்குவேண்டிய தரும ங்களை வழுவாமற்செய்துகொண்டுவரும் காசிபகோத்திரத்தா ரில் தலைமையாகிய குடியில்-கிடைத்தற்கரிய மாணிக்கத்தையு ந் தன்னிடத்திலிருந்து பிறர்க்குக்கொடுத்துவிஷத்தையுங்கொ டுக்கும் பாம்புபோல் நல்வினைதீவினை யிரண்டினையுஞ் செய் வதற்கு ஒரேவடிவுகொண்ட எச்சதத்தனென்பவன் தோன்றியி ருந்தான்.—(எ-று) எச்சதத்தனுக்குச் சண்டேசுரநாயனார் பி ள்ளையாகவுடைமையும் சுவாமியின் பூசைக்கு விக்கினஞ்செய்

ந கெடுதலுடைமையும்பத்தி-மணியும் விஷமுமுள்ள பாம்பை உவமானமாக்கினர். (௰)

மற்றைமறையொன்றிருமனைவிவாய்ந்தமரபின்வந்துதித்தாள்,
சுற்றம்விரும்புமில்வாழ்க்கைத்தொழிலாளுலகிற் றனைப்புதல்
வற்-பெற்றுவிளங்குந்தவஞ்செய்தாள்பெறும்பேறெல்லைப் ப
யன்பெறுவாள், பற்றையெறியும்பற்றுவரச்சார்பாயுள்ள பவி
த்திரையாள். .... *

(இதன்பொருள்.)

மேற்சொல்லிய தன்மையைப்பெற்ற எச்சதத்தனுடையமனைவியானவள் நல்ல மரபிற்பிறந்தவள்-சுற்றத்தார் விரும்பத்தக்க இல்வாழ்க்கையை நடத்துகின்ற நற்செய்கையை உடையவள்-இவ்வுலகில் ஒப்பற்ற சண்டேசுரநாயனாரைப் பிள்ளையாகப் பெறுதற்குத் தவஞ்செய்திருந்தவள் - பெறத்தக்க பேற்றினுடைய முத்தியப்பயனைப் பெறுபவள்-தீவினையை நீக்குங்கருவியாகிய அன்புமுதலியவைகள் உண்டாகச் சார்ந்துள்ள பவித்திரையென்பவளிருந்தாள்.—(எ-று) (௰௧)

நன்றிபுரியுமவர்தம்பானன்மைமறையின்றுறைவிளங்க ....*
என்றுமறையோர்குலம்பெருகவேழுபுவனங்களுமுய்ய ..*
மன்றினடஞ்செய்பவர்சைவவாய்மைவளரமாதவத்தோர் ..*
வென்றிவிளங்கவந்துதயஞ்செய்தார்விசாரசருமனார் .... *

(இதன்பொருள்)

நன்மைசெய்துகொண்டுவரும் எச்சதத்தன் பவித்திரையாளென்பவரிடமாக வேதங்களின் ஒழுக்கம் குறைவில்லாமல் விளங்க-என்றும் பிராமணருடையகுலம் விருத்தியடையவும்- ஏழுலகத்தாரும் கடைத்தேறவும்-பொன்னம்பலத்தில் நடனஞ்செய்தருளுகின்றசபாநாதர் கட்டளையிட்டருளிய ஆகமங்கள் வளர்ந்தேறவும்-மகத்தாகிய தவத்தையுடைய பெரியோர்களின்தபோமகிமை குறைவின்றி விளங்கவும் உதயஞ்செய்தருளினார் விசாரசருமர்.—(எ-று) (௰௨)

ஐந்துவருடமவர்க்கணையவங்கமாறுமுடனிறைந்த .... ..*
சந்தமறைகளுட்படமுன்றலைவர்மொழிந்தவாகமங்கள் .. *
முந்தையறிவின்றொடர்ச்சியினான்முகைத்தமலரின்வாசம்போ
சிந்தைமலரவுடன்மலருஞ்செவ்வியுணர்வுசிறந்ததால் .... [ற்

(இதன்பொருள்.)

விசாரசருமர்க்கு ஐந்தாம்வயதுவந்தவுடன் வேதாங்கங்களா

ளும் நிறைந்தஸ்வாங்கங்களையுடைய வேதங்களும் உட்படச் சுவா மியருளிச்செய்த ஆகமங்களும் பூர்வசன்மத்திலுண்டாகிய அறிவின்சம்பந்தத்தினால் முறையாயிருக்குமலரில் மணம்பக்குவகாலத்திற்போல் புத்திவிகசித்தவுடனேதாமே அறிந்துகொள்ளுகின்ற உயர்ந்தஞானம் அவர்க்கு உண்டாயிற்று.—(எ-று)

நிகழுமுறைமையாண்டேழு நிரம்பும்பருவம்வந்தெய்தப் .. *
புகழும்பெருமையுபநயனப்பொருவில்சடங்குமுடித்ததிவி *
விகழுநெறியவல்லாதவெல்லாமியைந்தவெனினுந்தந் ... *
திகழுமாபிதோதுவிக்குஞ்செய்கைபயந்தார்செய்வித்தார் .. *

(இதன்பொருள்.)

விசாரசருமர்க்கு ஏழுவயதுநிரம்பியவுடனே பிராமண குலத்துக்குச் சொல்லியிருக்கிறபடி ஒப்பற்றசடங்காகிய பெருமை பொருந்திய உபநயனத்தைமுடித்து அவர்க்குள்ள தெய்வத்தன்மைபொருந்திய அறிவினால் தெரிப்பதற்கிடமில்லாத எல்லாக்கலைகளும் அறிந்திருந்தாலும் தமது குலாசாரப்படி வேத அத்தியயனம்பண்ணவேண்டியதை மாதாபிதாக்கள் செய்வித்தார்கள்.—(எ-று) மாபிதோதுவிக்குஞ்செய்கை - பூணூலிட்டபின்பு வேதமோதுவிக்கவேண்டுமென்பதாம். (௰௬)

குலவுமறையும்பலகலையுங் கொளுத்துவதன்முன்கொண்டமை
ந்து, நிலவுமுணர்வின்திறங்கண்டு திருவுமறையோ ரதிசயித்தா
ரலகில்கலையின்பொருட்கெல்லையாடுங்கழலேயெனக்கொண்ட
செலவுமிகுந்தசிந்தையினிற்றெளிந்தார்சிறியபெருந்தகையார்

(இதன்பொருள்)

விளக்குகின்ற வேதங்களையும் பலசாஸ்திரங்களையும் ஓதுவிக்கிறதற்குமுன்னமே அவர்க்கு தாமே அறிந்துகொள்ள அமைந்திருக்கின்ற புத்தியின் திறத்தைக்கண்டு பிராமணர்கள் அதிசயப்பட்டார்கள் - எல்லாநூல்களிலுமிருக்கிற முக்கிய தாத்பரியம் பரமசிவனது திருவடியின் துணையேயென்று - விரிந்திருக்கும் தமதுசித்தத்தில் தெளிந்துகொண்டார் - பாலிய தசையின்கண்ணே பெரியோர்களுக்குள்ள குணத்தை யடைந்திருக்கும் விசாரசருமனார்.—(எ-று) (௰௭)

நடமேபுரியுஞ்சேவடியார்தம்மையுடையாரெனுமெய்ம்மை. *
யுடனேதோன்றுமுணர்வின்கணொழியாதூறும்வழியன்பின் *
கடனேயியல்பாய்முயற்சிவருங்காதன்மேன்மேலெழுங்கருத்
திடனேர்நிற்குஞ்செம்மலார்திகழுநாளிலாங்கொருநாள்.[இ-ள்,

(இதன்பொருள்.)

விசாரசருமனார் திருக்கூத்தாகச்செய்தருளுகின்ற திருவடியையுடைய பரமசிவன் நம்மையாள்கிறவனென்று அறிவினிடமாக ஒழியாமல் வளர்கின்ற உண்மையாகிய அன்பினால் செய்யவேண்டிய அடிமைத்திறமுதலாகிய கடமைகளை இயல்பாகத்தானே செய்துகொண்டு மேன்மேலும் ஆசையோடுகூடியகருத்தை உறுதிப்படுத்திக்கொண்டு நடக்கின்றநாளில் அங்கொருதினத்தில்.—(எ-று) (௰௬)

ஓதுகிடையினுடன்போவா ரூரார்நிரையினுடன்புக்க, போது
மற்றங்கொருபுனிதர்போற்றுமவன்மேன் மருப்போச்ச, யா
துமொன்றுங்கூசாதேயெடுத்தகோல்கொண்டவன்புடைப்ப,
மீதுசென்றுமிகும்பரியால்வெகுண்டுவிலக்கிமெய்யுணர்ந்து:

(இதன்பொருள்)

வேதமோதுகின்ற பிராமணப்பிள்ளைகளினுடனே போகின்ற விசாரசருமனார் ஊரிலுள்ளவர்களின் மாட்டுமந்தையோடுகூடப்போயினபோது மேய்க்கின்ற இடையன்மேல் ஒருகன்று போட்டபசுவானது தனதுகொம்பினைப்பாய்வதுபோலச்செலுத்த-பசுவையடிக்கக்கூடாதென்கிற பயம் எவ்வளவும் இல்லாமல் கையில்வைத்திருக்குங்கோலால் அந்தப்பசுவையடிப்ப அப்போது விசாரசருமனார் அவனிடத்திற்குச்சென்று அதன்மேலுள்ள ஆசையால்கோபங்கொண்டு அடியைவிலக்கிப்பசுவிற்குள்ளமகிமையை அறிந்து.—(எ-று) (௰௭)

பாவுங்கலைகளாகமநூல்பரப்பின்றொகுதிப்பான்மையினால். *
மேவும்பெருமையருமறைகள்மூலமாகவிளங்குலகில் .... *
யாவுந்தெளிந்தபொருணிலைமையெய்தவுணர்ந்தவுள்ளத்தா. *
லாவின்பெருமையுள்ளபடியறிந்தாரயர்ந்தருள்செய்வார் .... *

(இதன்பொருள்.)

பரந்துகிடக்கின்ற அனேகசாஸ்திரங்களும் கூட்டமாக விரிந்திருக்கின்ற ஆகமங்களும் பகுதிப்பட்டுப்பெருமைபொருந்திய அரியவேதங்களும் காரணமாகநிலைபெற்றிருக்குமுலகத்திலெல்லாப்பொருள்களையுமுண்மையாயிருக்கின்றபடியேயறிந்திருக்குமனத்தினால் விசாரசருமரானவர் பசுவிற்கு உள்ளபெருமையை உள்ளவாறுதெரிந்தவராய் நிரையைமேய்க்கின்ற இடையனுக்கு அருள்செய்கின்றார்.—(எ-று) (௰௮)

தங்குமகிலயோனிகட்குமேலாம்பெருமைத்தகைமையன...*
பொங்குபுனிததீர்த்தங்களெல்லாமென்றும்பொருந்துவன *
துங்கவமரர்திருமுனிவர்கணங்கள்சூழ்ந்துபிரியாத ... ...*
அங்கமனைத்துந்தாமுடையவல்லவோநல்லானினங்கள் ....*

(இதன்பொருள்)

உலகத்திற்றங்கியிருக்கின்ற எல்லாயோனிகளுக்கும் சிறந்ததாகிய குணத்தையுடையனவும்-நீர்பெருகுகின்ற சுத்தமாகிய தீர்த்தங்களெல்லாம் என்றும் அடைவனவும்-உயர்ந்த தேவர்கள் முனிவர்கூட்டங்கள் சூழ்ந்து பிரியாமலிருக்கும், எல்லாவுறுப்புக்களையும் உடையனவாயிருக்கின்றனவும் அல்லவோ நல்லபசுக்கூட்டங்கள்.—(எ-று) பசுவின் உறுப்புகளில் தேவர்களும் தீர்த்தங்களும் இருப்பதற்கு மேற்கோள். சிவதர்மோத்தரத்தில்-பிர்மாவும் விஷ்ணுவும் சராசரமும் பசுவின் கொம்பினடியில் வாசஞ்செய்வார்கள். கோதாவிரிமுதலிய தீர்த்தங்கள் கொம்பினுனியில் இருக்கும் பரமசிவன் சிரசிலிருப்பர். பார்வதி நடுநெற்றியிலும் முருகக்கடவுள் நாசியிலும், நாகேசர் உண்ணாசியிலும், அசுவினிதேவர் காதுகளிலும்; சந்திரனும் சூரியனும் கண்களிலும்; வாயு பல்லிலும், வருணன் நாவிலும், சரஸ்வதி உங்காரத்திலும், யமன் இருதயத்திலும், கந்தருவர் மார்பிலும்இருப்பார்கள். உதயம், மத்தியானம், சாயம் இம்மூன்றுகாலங்களின் அதிதேவதைகளும் உதட்டில் வசிக்கும். இந்திரன் கழுத்திலும்; சூரியன் திமிலிலும், சாத்தியர் மார்பிலும், வாயு நான்குகால்களிலும், மருத்துக்கள் முழங்காலிலும், நாகலோகத்தார் குரத்தினுனியிலும், கந்தருவர் குரத்தினடுவிலும், தேவமாதர்கள் மேற்குரத்திலும், ருத்திரர் முதுகிலும், வசுக்கள்சந்திகளிலும், பிதிர்தேவர்கள் அரைப்பலகையிலும், சித்தமாதர்கள் பகத்திலும், லட்சுமி குதத்திலும், நாகேசர் அடிவாலிலும், சூரியனொளி வால்மயிரிலும், கங்கை மூத்திரத்திலும், யமுனை சாணத்திலும், பூதேவி வயிற்றிலும், மாதவத்தோர் உரோமத்திலும் வாசஞ்செய்வார்கள். சமுத்திரம் முலையில் குடியிருக்கும் மூன்றுவகையான அக்கினியும், வயிறு-இருதயம்-முகம்-இவைகளில் இருக்கும் யாகத்தொழில் முழுதும் எலும்பிலும், சுக்கிலத்திலும் இருக்கும் அவயவங்கள்தோறுங் கற்புடையமாதர்கள் வசிப்பார்கள். (௰௯)

ஆயசிறப்பினாற்பெற்றவன்றேமன்றனடம்புரியு .... *
நாயனார்க்குவளர்மதியுநதியுநகுவெண்டலைத்தொடையு .. *
மேயவேணித்திருமுடிமேல்விரும்பியாடியருளுதற்குத் .. *
தூயதிருமஞ்சனமைத்தமளிக்குமுரிமைசுரபிகடாம் .... *

(இதன்பொருள்)

அப்படிப்பட்ட சிறப்பினாலேயே சபையில் நடனஞ்செய்தருளுகின்ற நடேசர்க்கு வளர்கின்ற பிறையும் கங்கையும் பிரகாசத்தையுடைய தலைமாலையும்பொருந்திய சடையையுடையதிருமுடியில் அபிஷேகஞ்செய்வதற்குப் பரிசுத்தமாகிய ஐந்துவகைத்திருமஞ்சனமும் கொடுக்கும்- உரிமையைப்பசுக்கள்பெற்றனவல்லவோ (எ-று) பிரமனும்விஷ்ணுவுமாகிய இவர்கள்தலைகளைத் திருகி மாலையாகக்கோத்துத் தரித்திருக்கின்றார்- பின்கற்பத்தில் அவர்களுடைய கர்வத்தை அடக்கும்பொருட்டு என்று ஸ்காந்தத்திலும் சைவபுராணத்திலும் சொல்லியிருக்கிறபடி வெண்டலைத்தொடையென்றார். (௨௰)

சீலமுடையகோக்குலங்கள்சிறக்குந்தகைமைத்தேவருடன். *
காலமுழுதுமுலகனைத்துங்காக்குமுதற்காரணராகு .... .. *
நீலகண்டர்செய்யசடைநிருத்தர்சாத்துநீறுதரு .... *
மூலவவதாரஞ்செய்யுமூர்த்தமென்றான்முடிவென்றோ. .. *

(இதன்பொருள்)

எக்காலமும் பரிசுத்தமாகிய பசுக்கூட்டங்கள் உயர்வுபெற்ற தேவர்களோடு உலகமுழுதுங்காக்கின்ற முதற்காரணராயிருக்கும் நீலநிறமான கழுத்தினையுஞ்சிவந்த சடையையும்உடையபரமசிவன் சாத்தியருளுதற்குரிய திருநீற்றிற்கு மூலமாயிருக்குந்திருச்சாணம் உண்டாவதற்குக்காரணமாயிருக்கின்றன வென்றால் இதைவிட வேறுயர்வென்ன விருக்கின்றது. (எ-று) (௨௧)

உள்ளுந்தகைமையினிப்பிறவேறுளவேயுமைமான்மறிக்கன்று
துள்ளுங்கரத்தாரணிபணியின்சுடர்கொண்மணிகள்சுரர்த்ததி .. *
தெள்ளுஞ்சடையார்தேவர்கடம்பிராட்டியுடனே சேரமினைக்;
கொள்ளுஞ்சினமால்விடைத்தேவர்குலமன்றோவிச்சுரபிகுலம்

(இதன்பொருள்)

மான்கன்று துள்ளிக்கொண்டிருக்குங் கரத்தினையும், தரித்திருக்கும்பாம்புகளின் ஒளிவிசும்-ரத்னங்களைப் பெருக்காயிருக்குங்கங்கையினீரானதுகொழிக்கின்றசடையையும் உடையபவலா தபதிபார்வதியாரோடு ஆரோகணஞ்செய்கின்ற விஷ்ணுவாகி

யரிஷபத்தின்குலமன்றே இந்தப்பசுக்கூட்டங்கள் ஆதலால் இ
வற்றைக்குறித்துச்சொல்லவேண்டியஉயர்ந்தசிறப்புகள் வே
றுளவோ.—(எ-று) மிசைக்கொள்ளல்-ஏறுதல், விஷ்ணுவேரி
ஷபவுருவங்கொண்டு சுவாமியைத்தாங்குகிறபடியால், மால்வி
டைத்தேவர்என்றார். சினம்-விடைக்கு இயற்கையுடையாய்
நிற்றது. தகைமையன - தகைமை யெனக்குறிக்கின்றது.

என்றின்னனவேபலவுநினைந்திவற்றின்வழியேமேய்த்திந்தக் *
கன்றுபயிலாநிரைகாக்குமிதன்மேலில்லைகடனிதுவே .... *
மன்றுளாடுஞ்சேவடிகள்வழுத்துநெறியாவதுமென்று .... *
நின்றவாயன்றனைநோக்கிநிரைமேய்ப்பொழிகநீயென்பார் *

(இதன்பொருள்.)

இவ்விதமாகப் பசுக்களுக்கு இருக்கும் பல உயர்வுகளையும் நி
னைத்து அவைகளின் கருத்தின்படியே மேய்த்து இந்தக்கன்று
களையுடையபசுக்களைக்காப்பதைக் காட்டிலும்மேலாகியதொ
ன்றுமில்லை இதுவேகடமை சபையில் ஆடுகின்றசுவாமியின் தி
ருப்பாதங்களை வணங்குவதற்கு மார்க்கமும் இதுவேயென்று ப
சுக்களைமேய்க்கும் இடையனைப்பார்த்து நீயினி மேய்க்கவே
ண்டியதில்லையென்றார்.—(எ-று) (௨௩)

யானேயினியிந்நிரைமேய்ப்பனென்றாரஞ்சியிடைமகனுந் *
தானேயிறைஞ்சிவிட்டகன்றான்றூமறையோரிசைவினா .. *
லானேநெருங்கும்பேராயமளிப்பாராகிப்பைங்கூழ்க்கு .. *
வானேயென்னநிரைகாக்கவந்தார்தெய்வமறைச்சிறுவர் .. *

(இதன்பொருள்)

நானேயினிமேல் இந்தப்பசுக்கூட்டங்களை மேய்ப்பேனென்
றார்-இடையனும் தான்செய்தகுற்றத்துக்குப்பயந்து அவர்க்
கெதிராகவந்துவணங்கி நிரையைவிட்டுப்போயினன்-பசுவிற்
குரிய பிராமணர்களின் சம்மதியின்மேல்பசுக்கள் நெருங்கிய
பெரியமந்தையைக்காப்பாராகிப்பயிர்களுக்கு மேகம்
போல் நிரையைக்காக்கவந்தார் தெய்வத்தன்மை பொருந்திய
விசாரசருமர்.—(எ-று) (௨௪)

கோலுங்கயிறுங்கொண்டுகுழைக்குடுமியலையக்குலவுமான். *
றோலுநூலுஞ்சிறுமார்பிற்றுவளவரைக்கோவணஞ்சாத்தி. *
பாலும்பயனும்பெருகவரும்பசுக்கண்மேய்க்கும் பான்மையி
சாலும்புல்லினவைவேண்டுந்தனையுமிசையுந்தவச்சென்று[றுத்

(இதன்பொருள்.)

கோலையுங் கயிற்றையுங் கையில் எடுத்துக்கொண்டு குடுமிமுடியானது அலையவும் - மான்தோலோடு பூணூல் திருமார்பினிடத்தில் துவளவும் - அரையிலிருக்குங் கோவணம்பிரகாசிக்கவும் - பாலும் அதனால் உண்டான பிரயோசனமும் வளரும்பொருட்டு வரும் பசுக்களை மேய்க்கவேண்டுமென்னும் விருப்பம் தமக்கிருக்கிறபடியால் புல்நிறைந்திருக்கும் இடத்திற்சென்று பசுக்களை வேண்டியவளவு மேயும்படிசெய்து.—(எ-று) (௨௫)

பதவுகாலங்களின் மேய்த்துப்பறித்துமளித்தும்பரிவகற்றி . *
யிதமுண்டுறையுநற்றண்ணீரூட்டியச்சமெதிர்நீக்கி .... .. *
யதர்நல்லனமுன்செலநீழலமர்வித்தமுதமதுரப்பா, லுதவும் *
பொழுதிலுடையோரில்லந்தொறுமுய்த்தார். .*

(இதன்பொருள்.)

பசுக்களை மேய்க்கவேண்டியகாலத்தில் மேய்த்தும், மேயக்கூடாத இடத்திலிருக்கிற புல்லினைப்பறித்து உண்ணக்கொடுத்தும் மாடுகள் ஒன்றிற்கொன்று பகையில்லாமல் மேய்ந்து தங்கும்படி வருத்தம் நீக்கியும், குளிர்ச்சிபொருந்திய நீர்குடிப்பித்தும், வேறொருவகையால் அவைகளுக்கு உண்டான பயத்தை நீக்கியும், நல்வழியிலேயே போகும்படிசெய்து மிகுந்த வெயிலில்நிழலிருக்குமிடத்தில் ஓட்டியும், தித்திப்பாகியபாலைக் கறக்கிற தாம் ஒருவிதத்தாலும் தவறுண்டாகாமல் அதற்குரியவர்கள் வீடுகள்தோறும் ஓட்டிக்கொண்டுபோய்விடுகிறவராயிருந்தார்.—(எ-று) பதவு-வினைத்தொகை. (௨௬)

மண்ணிக்கரையின்வளர்புறவின்மாடும்படுகைமருங்கினிலுந் *
தண்ணித்திலநீர்மருதத்தண்டலைசூழ்குலையின்சார்பினிலு ..*
மெண்ணிற்பெருகுநிரைமேய்த்துச்சமிதையுடன்மேலெரிகொ
நண்ணிக்கன்றும்முன்புகுந்துநன்னாள்பலவாமந்நாளில் [ண்டு

(இதன்பொருள்)

மண்ணியாற்றின் கரைப்புறத்திலிருக்குங் குறுங்காட்டிலும் படுகைக்கரையிலும் குளிர்ச்சிபொருந்திய முத்துக்களையுடைய நீர்சூழ்ந்த வயல்களின் சோலைசூழ்ந்த கரையோரங்களிலும் அளவில்லாத மாடுகளைமேய்த்து சமித்துக்களும் அரணிக்கோல்களுங்கொண்டு அஸ்தமித்தவுடன் வீட்டிற்குச்சென்று தமது வேலையை முடித்து அநேகநாள்களை நல்லதினங்களாகப்போக்கிக்கொண்டுவரும் அப்படிப்பட்டநாள்களில்—(எ-று) எரி-ஆகுபெயர். (௨௭)

ஆயநிரையின்குலமெல்லாமழகின்விளங்கிமிகப்பல்கி .... *
மேயவினியபுல்லுணவும்விரும்புபுனலுமார்தலினா.. .... *
லேயமனங்கொள்பெருமகிழ்ச்சியெய்தியிரவுநண்பகலுந். *
தூயதீம்பான்மடிபெருகிச்சொரியமுலைகள்சொரிந்தனவால் *

(இதன்பொருள்.)

இப்படிப்பட்ட பசுக்கூட்டங்களெல்லாம் அழகிட்டு மிகவும் பெருக்கத்தை யடைந்து இனிமையாகியபுல்லுண்டு நல்லநீராயுங்குடித்ததினால் மனதில் மிகுந்தசந்தோஷத்தை அடைந்து இராவிலும் பகலிலுமடிசுரந்துமுலைகள்மிகுதியாகப் பாலைச் சொரிந்தன.—(எ-று) (உஅ)

பூணுந்தொழில்வேள்விச்சடங்குபுரியவோமதேனுக்கள் .. *
காணும்பொலிவின்முன்னையினுமனேகமடங்குகறப்பனவாய்
பேணுந்தகுதியன்பாலிப்பிரமசாரிமேய்த்ததற்பின் .. .. [ப்
மாணுந்திறத்தவானவெனமறையோரெல்லாமனமகிழ்ந்தார் *

(இதன்பொருள்.)

தொடங்கிநடக்கின்ற நித்திய யாகச்சடங்குகள் நிறைவேறும் படி ஓமவிதிக்காக விடப்பட்டிருக்கும் பசுக்கள் விசாரசருமர்மேய்ப்பதற்கு உடன்பட்டகாலத்துக்குமுன் கறப்பதைப் பார்க்கிலும் இப்போது அனேகம்பங்கு கறக்கின்றனவாய்த் தோன்றுகின்றபடியால் மிகுந்த அன்போடு இந்தப்பிரமசாரிப்பிள்ளை மேய்ப்பதற்குடன்பட்டபிற்பாடு செழித்திருக்கின்றனவென்று பிராமணர்களெல்லாம் சந்தோஷமுற்றார்கள்.—(எ-று) (உகூ)

அனைத்துத்திறத்துமானினங்களணைந்தமகிழ்ச்சியளவின்றி. *
மனைக்கட்கன்றுபிரிந்தாலுமருவுஞ்சிறியமறைக்கன்று.. ... *
தனைக்கண்டருகுசார்ந்தருகித்தாயார்தன்மைநிலைமையவாய்க்
கனைத்துச்சுரந்துமுலைக்கண்கள்கறவாமேபால்பொழிந்தனவால்.

(இதன்பொருள்.)

எல்லாவகை உபசரிப்பிலும் பசுக்கள் அடைந்தகளிப்பிற்கு ஓரளவில்லாமல் வீட்டிற்கட்டியிருக்கும் கன்றுகள் ஒருவேளை பிரிந்தாலும் வருந்தமுறாமல் அன்போடு தங்களை மேய்த்துக்கொண்டிருக்கும் பிராமணப்பிள்ளையைச் சற்றே பிரிந்துபார்த்தபோது உருகித்தாய்க்கு உண்டாகிய அன்புபோல்கனைத்து மடிசுரப்புற்று முலைக்கண்களிலிருந்து ஒருவர் கறக்காமல் தாமே பால்பொழிந்தன.—(எ-று) (௩௰)

தம்மையணைந்தவான்முலைப்பால் தாமேபொழியக்கண்டுவந்
து, செம்மைநெறியேயுறுமனத்திற்றிருமஞ்சனமாங்குறிப்புண
ர்ந்தே, யெம்மையுடையவள்ளலாரெய்தநினைந்து தெளிந்தத
னின், மெய்ம்மைச்சிவனார்பூசனையைவிரும்பும்வேட்கை விளைந்
தெழலும்.. ... . *

(இதன்பொருள்)

விசாரசருமர் தம்மை அடைந்தபசுக்கள்முலையில்நின்று தாமே பாலைச்சொரிய-அதைப்பார்த்துக் களிப்படைந்து செவ்விதாகியசிவபத்தியின்மார்க்கமுற்ற தமது மனதில்சுவாமிக்குத் திருமஞ்சனமாட இந்தப்பால்தகுதியாயிருக்கிறதென்று கருதி-எம்மை ஆட்கொண்டபரமசிவன் வரும்படிநினைந்து தெளிவுற்று மெய்மையாகிய சிவபூசையை விரும்புகின்ற ஆசையொன்று உண்டாகவும்.—(எ-று) (௩௧)

அங்கண்முன்னையர்ச்சனையினளவின்றொடர்ச்சி விளையாட்டா
ப், பொங்குமன்பான்மண்ணிமணற்புளினக்குறையிலாத்தியி
ன்கீழ்ச், செங்கண்விடையார்திருமேனிமணலாலாக்கிச் சிவால
யமுந், துங்கநீடுகோபுரமுஞ்சுற்றாலயமும்வகுத்தமைத்தார் *

(இதன்பொருள்)

மிகுந்த அன்போடு முற்பிறப்பிற்செய்த பூசாபலத்தின்தொடர்ச்சியால் நிறைந்த ஆசையோடு விளையாட்டுப்போல் மண்ணியாற்றின் நடுவிலிருக்கு மணற்குன்றுகளையுடைய ஒருதிட்டில் ஆத்திமரத்தின்கீழாகச் சிவந்தகண்களுற்ற ரிஷபத்தை வாகனமாகக்கொண்ட பரமசிவனுக்கு ஒருதிருமேனியை மணலால் உருக்கொள்வித்துக் கோவிலும் - உயர்வாகித் தோற்றம்படி கோபுரமும் மதிலும்வகுத்தார்.—(எ-று) பாலர்களுக்குஇளமையில் விளையாடுவ தியல்பாயினுந்தாம் அங்ஙனஞ் செய்யாமல் அதனைச் சிவபூசைசெய்தலாகத் திருப்பினமையால் விளையாட்டாகவென்று கூறப்பட்டது. (௩௨)

ஆத்திமலருஞ்செழுந்தளிருமுதலாயலரும்வளர்புறவிற் .... *
பூத்தமலர்கடாந்தெரிந்துபுனிதர்சடிலத்திருமுடிமேற் .... *
சாத்தலாகுந்திருப்பள்ளித்தாமம்பலவுந்தாங்கொய்து[த்தார்
கோத்துவிலைப்பூங்கூடையினிற்கொணர்ந்துமணற்றங்கிடவை

(இதன்பொருள்)

ஆத்திப்பூவும், செழுமைபொருந்திய தளிர்களு முதலாகக்காட்டிடத்திற்பூத்த பலவகைமலர்களையும்நோக்கிப் பரமசிவன்

திருமுடியில் தரிக்கிறதற்குப் பாங்காயிருக்கின்ற பலபுஷ்பங்களும் பறித்து இலையாற்செய்யப்பட்ட குடலையிற்கொண்டுவந்து மணம் வீசும்படிவைத்தார்.—(எ-று) (௯௯)

நல்லநவகும்பங்கள்பெறநாடிக்கொண்டுநாணற்பூங், கொல்லையிடத்துங்குறைமறைவுமேவுங் கோக்களுடன்கூட, வொல்லையணைந்துபாலேற்கவொன்றுக்கொருகாலாகவெதிர், செல்லவவையுங்கனைத்துமுலைதீண்டச்செழும்பால்பொழிந்தனவால்: *

(இதன்பொருள்)

உறுதியாயிருக்கும் புதியகுடங்களைத்தேடி வாங்கிக்கொண்டுவந்து நாணற்செடிகள் முளைத்திருக்குங் கொல்லைகளிலும், செடிகளாலமறைவாயிருக்கின்ற ஆற்றிடைக்குறைகளிலும், மேய்கிறதற்குப்போகின்ற பசுக்களோடு கூட விரைவிற்போய் ஒவ்வொரு பசுவினிடத்திலும் ஒவ்வோர் தரம் நெருங்கிப்போய்த் தொட்டபோதே அவைகள் கனைத்து உருசியாயுள்ள பாலைப் பொழிந்தன.—(எ-று) (௱)

கொண்டுமடுத்தகுடநிறையக்கொணர்ந்துவிருப்புங்கொள்கையின், அண்டர்பெருமான்வெண்மணலாலயத்துளாமை முன்றுவித்து, வண்டுமருவுந்திருப்பள்ளித் தாமங்கொண்டு வரன்முறையே, பண்டைப்பரிவாலருச்சித்துப்பாலின்றிருமஞ்சனமாட்டி

(இதன்பொருள்)

பாலைத்தன்னகத்திற்பெற்றுக்கொள்ளுதலால் குடங்கள் நிறைவுற எடுத்துக்கொண்டுவந்த தகுதியோடு தேவர்களுக்குப் பிரானாகிய பரமசிவனைஸ்தாபித்திருக்கும் வெண்மணலாற் செய்யப்பட்ட ஆலயத்தி லொருபுறத்தில்வைத்து வண்டுகள் மொய்க்கின்ற மலர்களைக்கொண்டு பழகிவந்த அன்புடனே அர்ச்சனைசெய்து முறைப்படியே பாலாகிய திருமஞ்சனத்தை ஆட்டி.—(எ-று) (௱௧)

மீளமீளவிவ்வண்ணம்வெண்பால்சொரிமஞ்சனமாட்ட... *
வாளவுடையார்தம்முடையவன்பரன்பின்பாலுளதாய் .... *
மூளவயர்ந்தநயப்பாடுமுதிர்ந்தபற்றுமுற்றச்சூழ் .... ..*
கோளமதனிலுள்ளநிறைந்துகுறித்தபூசைகொள்கின்றார் .. *

(இதன்பொருள்)

அடிக்கடி இவ்வகையாக வெண்பாலாகிய மஞ்சனத்தைச் சொரிந்தாட்ட ஆண்டவராகிய கைலாசபதிதம்முடைய அப்பாலிய விசாரசருமருர் பக்தியினால் உண்டாகிய மிகுந்த உருக்க

மானது முற்றி அதனுடைய பலமானது கைகூரும்படி லிங்காகாரமாகச்செய்யப்பட்ட உருவத்தில் எழுந்தருளிச்செய்கிற பூசையைப்பெற்றுக்கொண்டார்.—(எ-று) ருங்கோளம் - இலிங்கவுருவம். (௫௬)

பெருமைபிறங்குஞ்சேய்ஞலூர்ப்பிள்ளையார்தாமுள்ளத்தி *
லொருமைநினைவாலும்பர்பிரானுவக்கும்பூசையுறுப்பான. *
திருமஞ்சனமேமுதலவற்றிற்றேடாதனவன்பினிரப்பி .. *
வருமந்நெறியேயர்ச்சனைசெய்தருளிவணங்கிமகிழ்கின்றார் *

(இதன்பொருள்)

மகத்துவம்பொருந்தியதிருச்சேய்ஞலூர் விசாரசருமனார் உள்ளத்தில்வேறொன்றியபத்தியால்-தேவர்பிரானாகிய சுவாமிவிரும்பத்தக்க பூசையினங்கமாயிருக்கின்ற-திருமஞ்சனமுதலாகிய பண்டங்களில் கிடைக்காதவைகளை பாவனமாகக் கிடைத்தவைகளாக எண்ணி நிறைவுசெய்து விதிப்படியேபூசைசெய்து வந்தனஞ்செய்து மகிழ்ச்சியுற்றார்.— எ-று) (௫௭)

இறையோனடிக்கீழ்மறையவனாரெடுத்துத் திருமஞ்சனமாட்டு
நிறைபூசனைக்குக்குடங்கள்பாலினிரம்பச்சொரிந்து நிரைக்குல
ங்கள், குறைபாடின்றிமடிபெருகக்குவிந்தமுலைப்பால்குறை
வின்றி, மறையோர்மனையின்முன்புநிரும் வளங்கள்பொலிய
வருமால் .... *

(இதன்பொருள்.)

கடவுளின் திருவடிகளின் கீழ்நின்று பூசையை நிறைவேற்றும் பொருட்டு விசாரசருமர் கையால் எடுத்து அபிஷேகஞ்செய்வதற்குக் குடங்களில் பசுக்கூட்டங்கள் குறைவில்லாமல் மடிகள்பெருக்கெடுத்துப் பாலை நிறையச்சொரிந்தும் குவிந்திருக்கு முலைகளினின்றும் பாலைக்குறையாமல் பிராமணர்கள் வீட்டுக்கு முன்புகொடுக்குந்தன்மையில் உயர்ந்து விளங்கும்.—(எ-று) வளங்கள்-ஒருமையினின்றது. (௫௮)

செயலிப்படியேபலநாளுஞ்சிறந்தபூசைசெய்வதற்கு .... *
முயல்வுற்றதற்கேதிருவிளையாட்டாகமுந்நூலணிமார்ப .... *
ரியல்பிற்புரியுமற்றிதனைக்கண்டத்திறத்தையறியாத .. .. *
வயன்மற்றொருவனப்பதியிலந்தணாளர்க்கறிவித்தான் .... *

(இதன்பொருள்.)

பூணூலைத்தரித்த மார்பினையுடைய விசாரசருமர் அனேகநாளாக இவ்விதமானதொழிலையே உடையவராய்ச் சிறப்பாகிய

பூசையைச்செய்யப் பிரயத்தினப்பட்டு அதுவே விளையாட்டுப்போல நடப்பிப்பதைப்பார்த்து இதனுண்மையை அறியாத ஒரு அயலான் பிராமணர்களுக்குக் கோபமுண்டாகவிரோதவழியில்தெரிவித்தான்.—(எ-று) (௫௯)

அச்சொற்கேட்டவருமறையோராயனறியாவென்றவற்றி .. *
லிச்சைப்படியேயான்மெய்ப்பேனென்றெம்பசுக்க டமைக்
கறந்து, பொச்சமொழுகுமாணவகன் பொல்லாங்குரைக்கவவ
ன்றாதை; யெச்சதத்தன்றனையழைமினென்றாரவையிலிருந்தா
ர்கள் .. .. *

(இதன்பொருள்.)

அவன் சொன்னமொழியைக்கேட்ட சபையிலிருந்தபிராமணர்கள்-இடையனுக்கு மாடுகள் மேய்த்தல் தெரியாதென்றும் அந்தக் கோக்களின்கருத்தின்படியே யான்மேய்ப்பேனென்றும் எம்மைவஞ்சித்து அவற்றைத் தன்வசமாக்கிப் பாலைக்கறந்துதன்விஷயத்தில் உபயோகப்படுத்தி அப்படிச் செய்யாதவன்போல் பொய்வேடங்கொண்டு நடிக்கின்ற இந்தப்பிராமணப்பிள்ளையினுடைய பொல்லாங்கைத்தெரிவிக்க அவன் தகப்பனாகிய எச்சதத்தனை அழையுமென்று சொன்னார்கள்.—(எ-று) (௬௰)

ஆங்குமருங்குநின்றார்களவ்வந்தணன்றன்திருமனையின் .. *
பாங்குசென்றுமற்றவனையழைத்துக்கொண்டுவரப்பரந்த ..*
வோங்குசபையோரவனைப்பார்த்தாசாரிமைமேய்த்துன் மக
தீங்குதன்னைக்கேளென்றுபுகுந்தபரிசுசெப்புவார் .. [ன்செய்

(இதன்பொருள்.)

அப்படிச்சொன்னபோது அவ்விடத்தில் அருகில்நின்ற பிராமணர்கள் எச்சதத்தன் வீட்டிற்குப்போய் அவனை அழைத்துக்கொண்டு சபைக்குவந்தார்கள் - கூட்டமாயிருக்கின்ற அச்சபையிலுள்ளவர்கள் எச்சதத்தனைப்பார்த்து ஊராருடைய மாடுகளை உன்மகன்மேய்க்கிறேனென்று தன்வயப்படுத்திக்கொண்டு அவன்செய்கிற தீங்கினைக்கேளென்று நடந்தசெய்கையைச்சொல்வார்கள்.—(எ-று) (௬௧)

அந்தணாளராகுதிக்குக் கறக்கும்பசுக்களானவெல்லாஞ் .. *
சிந்தைமகிழ்ந்துபரிவுற்றுத் திரளக்கொடுபோய் மேய்ப்பான்
போற், கந்தமலிபூம்புனன்மண்ணிமணலிற்கறந்து பாலுகுத்
து,வந்தபரிசேசெய்கின்றானென்றென்றுவாய்மொழிந்தார்.

(இதன்பொருள்.)

பிராமணர்கள் ஓமத்திற்குறிகளுக்குப் பால்கறக்கின்ற பசுக்களையெல்லாம் மனங்களித்து அன்புடனே மேய்க்கிறவன்போல் ஒருங்கேசாய்த்துக்கொண்டுபோய் மணநிறைந்த மலர்களை உடையநீர்வருகின்றமண்ணியாற்றின் மணலிலேபாலைக்கறந்து விணாகச்சொரிந்து மனதுவந்தபடியே செய்கின்றானென்று தங்களுடைய கருத்தைச்சொல்லினார்கள். (எ-று.) (௪௨)

மறையோர்மொழியக்கேட்டஞ்சிச்சிறுமாணவகன்செய்தவிதஞ்
சிறிதுநான்முன்பறிந்திலேனிதற்குமுன்புபுகுந்ததனை, நிறை
யும்பெருமையந்தணர்காள்பொறுக்கவேண்டு நீங்களெனக்,கு
றைகொண்டிறைஞ்சியினிப்புகுதிற்குற்றமெனதேயாமென்றான்.

(இதன்பொருள்)

எச்சதத்தன் தன்பிள்ளையைக்குறித்துப் பிராமணர்கள் சொல்லியமொழியைக்கேள்விப்பட்டுப் பயங்கொண்டவனாகிச் சிறியபையனாகிய என்குமாரன் செய்துகொண்டுவரும் இந்நடத்தையை இதற்குமுன் எவ்வளவும் அறிந்திலேன்-நடந்த சங்கதியைப் பற்றிப் பொறுமையால் நிறைவுற்ற மறையோர்களே-பொறுக்கவேண்டுமென்றுகுறையிரந்துவணங்கி இனியவன் அங்ஙனம் செய்வானாகின் அக்குற்றம் என்மேலதாகுமென்றான். (எ-று.) (௪௩)

அந்தணாளர்தமைவிடைகொண் டந்திதொழுதுமனைபுகுந்து*
வந்தபழியொன்றெனநினைந்தேமகனார்தமக்குவாய்நேரா.*
னிந்தநிலைமையறிவேனென்றிரவுகழிந்துநிரைமேய்க்க[யோன்
மைந்தனார்தாம்போயின்பின் மறைந்துசென்றான் மறைமுதி

(இதன்பொருள்.)

கிழவனாகிய எச்சதத்தன் இவ்வாறாகச்சொல்லிப்பிராமணர்களிடத்தில் நின்றும் விடைபெற்றுக்கொண்டு மாலைப்பொழுதில் செய்யவேண்டிய அனுஷ்டானத்தைமுடித்து வீட்டுக்குவந்து தன்மகன்செய்ததை ஒருகுற்றமாகவே நினைத்து அவர்க்கு இச்செய்தியைத்தெரிவிக்காமல் பிராமணர்கள்சொல்லிய இந்த நிலையைச் சோதிக்கவேண்டுமென்றிருந்து இராக்காலம் விடிந்து-மாடுகளைமேய்க்க விசாரசருமர்போனபின்பு அவர் அறிந்துகொள்ளாக்கூடாமல் மறைவாக அவர்பின்போயினான்.— (எ-று.) (௪௪)

சென்றமறையோன்திருமகனார்சிறந்தஆசார் நிரைகொடுபோ
ய், மன்றல்மருவும்புறவின்கண்மேய்ப்பார்மண்ணி மணற்கு
றையி, லன்றுநிரைக்கொடுசென்றவதனையறிந்துமறைந்தப்பா
னின்றகுரவின்மிசையேறிநிகழ்வதறியவொளித்திருந்தான் - *

(இதன்பொருள்.)

பின்னாகப்போயின எச்சதத்தன் தன் மகனாராகிய விசாரசரு
மர்-ஊரார்மாடுகளை ஓட்டிக்கொண்டுபோய் மலர்களால்வாச
னைநிறைந்த சிறுகாட்டில் மேய்க்கும்படி மண்ணியாற்றி னடு
வினுள்ள மணலுருவமாகிய திட்டில் அன்றைத்தினத்தில் மே.சே
ரக்கொண்டுபோனதைப்பார்த்து-மறைவாக அருகிலிருந்த ஓ
ர்குராமரத்திலேறி இனிநடக்கின்றதை அறிந்துகொள்ள ஒளி
த்துக்கொண்டிருந்தான்.—(எ-று) (௬௫)

அன்புபுரியும்பிரமசாரிகளுமூழ்கியாளர்க்கு, முன்புபோலம
ணற்கோயிலாகமுகைமென்மலர்கொய்து, பின்புவருமான்
முலைபொழிபால்பெருகுங்குடங்கள் பேணுமிடற், தன்பாற்
கொணர்ந்துதாபித்துப்பிறவும்வேண்டுவனசமைத்தார் .. *

(இதன்பொருள்.)

சிவபத்தியைத்தானே விருப்பமாகவுடைய விசாரசருமரும்.
ஸ்நானஞ்செய்து பரமசிவனுக்கு முன்போல் மணலால் கோ
யிலும் திருவுருவும்செய்து அப்பொழுதே மலர்கின்றபுஷ்பங்
களைக்கொய்து- பின்பு பசுவின்முலையில் நின்றும் பொழிந்த
பாலால்நிரம்பியகுடங்களைவைக்கவேண்டியவிடத்தில்கொண்
டுவந்து ஸ்தாபித்து மற்றைவேண்டுவனவற்றையும் சித்தப்படு
த்தினார்.—(எ-று) திருவுரு-வருவிக்கப்பட்டது. நற்பிரமசா
ரியென்று பாடமுமுண்டு. (௬௬)

நின்றவிதியின்விளையாட்டா நிறைந்தவரும்பூசனைதொடங்கி.*
யொன்றுமுள்ளத்தன்மையினாலுடையநாதன்திருமுடிமேன்
மன்றல்விரவுந்திருப்பள்ளித்தாமஞ்சாத்திமஞ்சனமா.... *
நன்றுநிறைதீம்பாற்குடங்களெடுத்துநயப்புற்றாட்டுதலும். *

(இதன்பொருள்)

ஆகமத்திற்கண்டவிதிப்படியே விளையாட்டாக நிறைவாகிய பூ
சையைச் செய்யத்தொடங்கி-மனதில் அழுந்திய உண்மையா
ன அன்போடு தம்மையாட்கொண்ட கைலாசபதியின் திருமு
டியில் வாசனைபொருந்திய மலர்களைச் சாத்தி நன்றாக இனிய
பால்நிறைந்த குடங்களை யெடுத்து விருப்பங்கொண்டு அபி
ஷேகஞ்செய்த அளவில்.—(எ-று) (௬௭)

பரவுமன்மேலெழும்பரிவுட்பழையபான்மைமிகும்பண்பும்
விரவுமேதக்கவர்தம்பான்மேவும்பெருமைவெளிப்படுப்பா *
னரவமேவுஞ்சடைமுடியாரருளாமென்னவழிவழிந்து ....*
குரவமேவுமுதுமறையோன்கோபமேவும்படிகண்டான்.. *

(இதன்பொருள்)

வணங்குதலால் வரவர அதிகப்படும் பத்தியும், தொன்றுதொட்டுச் சுவாமிக்கு அன்பினராயிருந்தபடியால் உண்டாகிய உறுதியும், பற்றியிருக்கின்ற மேன்மையுற்ற விசாரசருமருடைய பெருமையை வெளிப்படுத்தும்பொருட்டு- பாம்பினைத்தரித்த சடைமுடியை உடைய பரமசிவனது கிருபைவெளிப்பட்டதுபோல் குராமரத்திலேயிருந்த விருத்தனாகிய எச்சதத்தன் புத்தியால் ஆலோசியாதவனாகிக் கோபங்கொண்டான். (எ-று) எச்சதத்தனுடைய கோபமானது விசாரசருமருடைய பெருமையை வெளிப்படுத்தியதுபற்றி அதைச்சுவாமியின்கிருபையாக உருவகப்படுத்தினார். (௪௮)

கண்டபோதேவிரைந்திழிந்துகடிதுசென்றுகைத்தண்டு, கொ
ண்டுமகனார் திருமுதுகிற் புடைத்துக்கொடிதாமொழிகூறத்,
தொண்டுபுரியுஞ்சிறியபெருந்தோன்றலார்தம்பெருமான்மே
ன்,மண்டுகாதலருச்சனையின் வைத்தார்மற்றொன்றறிந்திலரால்

(இதன்பொருள்.)

எச்சதத்தன் இச்செய்கையைப்பார்த்தபோதே விரைவாயிறங்கி ஓடிக் கையிலிருக்குந் தண்டத்தைக்கொண்டு தன்மகனுடைய முதுகில் அடித்துக் கொடிதாகிய தூஷணைஞ்செய்ய- அடிமைத்திறஞ்செய்யும் சிறியவயதிலேயே பெருமைகொண்ட விசாரசருமர் தம்முடைய ஆண்டவர் விஷயமாகத்திருமஞ்சனமாட்டுவதில் பேராசைகொண்ட தம்முடைய மனத்தை அழுத்தியிருக்கின்றபடியால்-வேறொன்றையும் அறியாதவராயிருந்தார்.—(எ-று) மனம்-வருவிக்கப்பட்டது. (௪௯)

மேலாம்பெரியோர்பலகாலும்வெகுண்டோனடிக்க வேறுணை
ரார்,பாலார்திருமஞ்சனமாட்டும்பணியிற்சலியாததுகண்டு,மா
லாமறையோன்மிகச்செயிர்த்துவைத்ததிருமஞ்சனக் குடப்
பால், காலாலிடறிச்சிந்தினான்கையாற்கடைமைத்தலையினின்றான்

(இதன்பொருள்.)

அஞ்ஞானநிறைந்த எச்சதத்தன் பின்னுங்கோபமுற்றவனாகிப் பலதரம் அடிக்கவும்-பெரியோராகிய விசாரசருமர் அடிபடு

தலால்-உண்டாகிய வருத்தந்தோன்றாதவராகித் திருமஞ்சனமாகிய பாலையெடுத்து அபிஷேகஞ்செய்யும் திருத்தொண்டில் நின்றும் தவறாமலிருப்பதுகண்டு அஞ்ஞானமுற்ற அம்மறையோன் மிகுந்த சினங்கொண்டு திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலால்தள்ளிச் சிந்தும்படிசெய்தான்.—(எ-று) கைஒழுக்கம். கடைமைத்தலை-தாழ்ந்தவிடம். இதில்நின்றனையே தாழ்வாகிய ஒழுக்கத்தைப்பெற்றிருக்கிறவனென்றாயிற்று: ஆதலால் பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்யும்படியிருந்தபாலைச்சிந்தினனென்றறிக. (௫௰)

சிந்தும்பொழுதிலதுநோக்குஞ்சிறுவரிறையிற்றீயோனைத், தந்
தையெனவேயறிந்தவன்றன்றாள்கள்சிந்துந்தகுதியினான், முந்
தைமருங்குகிடந்தகோலெடுத்தார்க்கதுவேமுறைமையினால்.
வந்தமழுவாயிடவெறிந்தார்மண்மேல்வீழ்ந்தான் மறையோ
னும் .... *

(இதன்பொருள்)

பால்சிந்தியபோதில் அதைப்பார்த்தவிசாரசருமர் அந்நிமிஷமே அந்த எச்சதத்தனாகியகொடியோனைத் தகப்பனென்றறிந்துகொண்டு இவன்காலால் பாற்குடத்தைத் தள்ளியபடியால் பிராயச்சித்தம் அதனளவாகவே யிருக்கிறதென்று கால்களைத் துணிக்கவேண்டுமென்னும் எண்ணமுற்றவராய்த் தமக்கு முன்னாகக்கிடந்த ஒருதடியை எடுத்தார்-அவர்க்கப்பொழுது அது கருத்தின்படி மழுவாய்த்தோன்றிக்கிடக்க-அதனால் கால்களைவெட்டினார் அவனும் பூமியில்விழுந்தான்.—(எ-று) மற்றொருவன் திருமஞ்சனப்பாலைச் சிந்துவானாயின்-தலையை இழப்பன். தகப்பன் அங்ஙனஞ்செய்தபடியால், குற்றஞ்செய்த காலின் அளவே கருதினாராதலில்-தந்தையெனவேயறிந்தென்றும், தாள்கள்சிந்துந்தகுதியென்றுங் கூறப்பட்டது. குற்றஞ்செய்த காலொன்றையாத்திரந்துணித்தால் மற்றொருகாலால் ஒருவேளை குதித்துநடந்து பாற்குடத்தை யிடறுவானென்று பயங்கொண்டு இரண்டினையும் வெட்டத்துணிந்தாரொன்பார் தாள்களென்றுகூறினார். (௫௧)

எறிந்தவதுவேயர்ச்சனையிலிடையூறகற்றும்படையாக .... *
மறிந்ததாதையிருதாளுந்துணித்தமைந்தர்பூசனையி... ... *
லறிந்தவிடையூறகற்றினராய்முன்போலர்ச்சித்திடப்புகலுஞ் *
செறிந்தசடைநீண்முடியாருந்தேவியோடும்விடையேறி ... *

(இதன்பொருள்.)

லைத எதிர்ந்தாரோ அதுவே பூசாகாலத்தில் உண்டாகிய விக்கினத்தையொழிக்கும் ஆயுதமாகத் தடைசெய்த தகப்பனுடைய இரண்டுபாதங்களையும் வெட்டியவிசாரசருமர்தமக்குச்சம்பவித்த வியாகுலத்தை நீக்கினவராய் முன்போலவே பூசைசெய்துகொண்டிருக்க-நெருங்கியசடையால் நீண்டிருக்குமுடியை உடைய பரமசிவனும் பார்வதிதேவியோடு ரிஷபவாகனத்திலெழுந்தருளி—(எ-று) (௫௨)

பூதகணங்கள்புடைசூழப்புராணமுனிவர்புத்தேளிர் .. ....*
வேதமொழிகளெடுத்தேத்தவிமலமூர்த்திதிருவுள்ளங் ....*
காதல்கூரவெளிப்படலுங்கண்டுதொழுதுமனங்களித்துப். .*
பாதமலர்கண்மேல்விழுந்தார்பத்திமுதிர்ந்தபாலகனார் ....*

(இதன்பொருள்.)

பூதக்கூட்டங்கள் பக்கத்திற்சூழவும்-பழையோராகிய முனிவர்களும் தேவர்களும் வேதங்களால் புகழ்ச்சிசெய்யவும், இயல்பாகவேபாசமில்லாத கைலாசபதியின் திருவுள்ளத்தில் அன்புமிகுந்து காட்சியுற்றவுடனே பத்தியிற்பழுத்தபாலகராகிய விசாரசருமர் தரிசித்துக் கைகூப்பி மனதுகளிப்புற்றுச் செந்தாமரைமலர்போன்ற திருவடிகளின்மேலவணங்கினார்.(எ-று)

தொடுத்தவிதழிசூழ்சடையார் துணைத்தாணிழற்கீழ் விழுந்தவ
ரை, யெடுத்துநோக்கிநம்பொருட்டாலீன்றதாதை விழவெறி
ந்தா, யடுத்ததாதையினியுனக்குநாமென்றருள்செய் தணைத்த
ருளி, மடுத்தகருணையாற்றடவியுச்சிமோந்துமகிழ்ந்தருள .*

(இதன்பொருள்)

கொன்றைமாலையைத்தரித்த சடையினையுடையபரமசிவன் விளங்குகின்ற தமது இரண்டுபாதங்களிலும் வணங்கின விசாரசருமனை திருக்கைகளால் எடுத்து எமக்காகவே பெற்றதகப்பன் இறக்கும்படி கால்களைவெட்டினை ஆதலின்-நாமேயுனக்கு உரிய பிதாவாயினோமென்று திருவாய்மலர்ந்து அணைத்து நிறையுற்றகிருபையோடு உடலைத்தடவி யுச்சியைமோந்து அருள்செய்ய—(எ-று) ஒருவனுக்குப்பிதாக்கள் பலராதலின்-விசேடந்தோன்ற ஈன்றதாதையென்றார். விழவென்பது- இங்கு மரணத்திலிருந்தது. தாதையென்றதற்கேற்ப-அணைத்தலும்,தடவலும், உச்சிமோத்தலுங்கூறப்பட்டது. (௫௪)

செங்கண்விடையார்திருமலர்க்கைதீண்டப்பெற்றசிறுவனா.*
ரங்கண்மாயையாக்கையின்மேலளவின்றுயர்ந்தசிவமயமாய்ப்

பொங்கியெழுந்ததிருவருளின் மூழ்கிப்பூமேலயன்முதலாத் *
துங்கவமரர் துதிசெய்யச்சூழ்ந்தவொளியிற்றோன்றினார் .. *

(இதன்பொருள்.)

சிவந்த கண்கள்பொருந்திய ரிஷபத்தையுடைய பரமசிவனார் திருக்கைகளால் தீண்டும்படி பேறுபெற்ற விசாரசருமரானவர் அவ்விடத்தில் மாயாசம்பந்தமாயிருக்குந்தேகத்தின்மேல் ஒப்பின்றி உயர்ந்த சிவசொரூபமாய் மேற்பட்டுண்டாகிய திருக்கருணையில் மூழ்கினவராகிப்பிரமன்முதலாகிய உயர்ந்த தேவர்கள் வணங்கத் திவ்வியப்பிரகாசத்தோடு தோன்றினார்.
(எ-று) (௫௫)

அண்டர்பிரானுந்தொண்டர்தமக்கதிபனாக்கியனைத்துநா.. *
முண்டகலமுமுடுப்பனவுஞ்சூடுவனவுமுனக்காகச் .... .. *
சண்டீசனுமாம்பதந்தந்தோமென்றங்கவர்பொற்றடமுடிக்கு
துண்டமதிசேர்சடைக்கொன்றைமாலைவாங்கிச்சூட்டினார். [த்

(இதன்பொருள்)

தேவர்களுக்குநாதராகிய பரமசிவனும் விசாரசருமனாரைப்பார்த்து அடியார்களுக்கெல்லாம் உன்னைத்தலைவனாக்கி நாம் எற்றுக்கொண்ட அமுதும், பரிவட்டமும், புஷ்பங்களும், உனக்கு உண்டாகும்படி சண்டேசுரனாகுகிற பதத்தையுங் கொடுத்தோம் என்று அவருடையஅழகியசிரசிற்கு மூன்றாம்பிறைசேர்ந்த சடையில்தரித்திருக்குங் கொன்றைமாலையைவாங்கிச் சூட்டினார்.—(எ-று) கலம் என்பது-ஆகுபெயராய்நான்குவகை உணவின்மேலும் நின்றது. உண்பன-உடுப்பன-சூடுவன-சொல்லியதனால்- பூசுவனவும் தாம்பூலமும் வருவிக்கப்பட்டன. இது சண்டேசுரருக்குப்பூசைசெய்யும்போது லேகியம், சோஷியம், அன்னம், பானமுதலானவைகளும் தாம்பூல மாலை சந்தனமுமாகிய நிர்மாலியம் உமக்குப்பரமசிவனுடையகட்டளையால் கொடுக்கப்பட்டதென்று சொல்லுகிற ஆகமவசனப்படியாம். (௫௬)

எல்லாவுலகுமார்ப்பெடுப்பவெங்குமலர்மாரிகள்பொழியப் *
பல்லாயிரவர்கணநாதர்பாடியாடிக்களிபயிலச் .... *
சொல்லார்மறைகடுதிசெய்யச்சூழ்பல்லியங்களெழச்சைவ . *
நல்லாறோங்கநாயகமாநங்கள்பெருமான்றொழுதணைந்தார் *

(இதன்பொருள்.)

எல்லாவுலகத்தாரும் ஆரவாரிக்கவும்,நான்குபுறமும்புஷ்பவருஷங்களைப்பொழிந்து-பல்லாயிரஞ் சிவகணங்கள் மங்களம்பாடி மகிழ்ச்சிபெறவும், வேதங்கள் துதிக்கவும், பலவாத்தியங்க

ளீழுமங்கவும், யதார்த்தமான சைவசமயம் நிலைபெறவும், நமதுபிரானாகிய சண்டேசுரர் சுவாமியை வந்தித்து அணைந்தார். (எ-று) (௫௭)

ஞாலமறியப்பிழைபுரிந்துநம்பரருளாலன்மறையின் .... ※
சீலந்திகழுஞ்சேய்ஞலூர்ப்பிள்ளையார்தந்திருக்கையில் .. .. ※
கோலமழுவாலேறுண்டுகுற்றநீங்கிச்சுற்றமுடன் .... .. ※
மூலமுதல்வர்சிவலோகமெய்தப்பெற்றான்முதுமறையோன் ※

(இதன்பொருள்)

எச்சதத்தன் சாதினியோரறியும்படி ஆண்டவர்க்கு அபராதஞ்செய்துஞ்சுவாமியின் கிருபையால் நான்குவேதங்களினுஞ்சொல்லப்பட்டிருக்கும் சிவஞானத்தை அடைந்த சண்டேசுரநாயனாருடைய கையிலிருந்த-கோலாகியமழுவால்வெட்டுப்பட்டு மூன்குற்றத்தில் நின்று நீங்கி உரிய சுற்றத்தோடு ஆதிகாரணராகிய பரமசிவன் வீற்றிருக்குங் கைலாசத்தை அடைந்தான்.—(எ-று) சுற்றம்-மனைவிமுதலியோர். கோலமழு-முன்கோலாகவிருந்து பின்புதிரிந்தமழு. (௫௮)

வந்துமிகைசெய்தாதைதாள்மழுவாற்றுணித்தமறைச்சிறுவ ※
ரந்தவுடம்புதன்னுடனேயரனார்மகனாராயினா .... ※
ரிந்தநிலைமையறிந்தாராரீறிலாதார்தமக்கன்பு .... ※
தந்தவடியார்செய்தனவேதமாமன்றேசாற்றுங்கால் .... ※

(இதன்பொருள்)

முன்னமே வஞ்சங்கொண்டவனாய்வந்து சுவாமியின்பூசைக்கு இடையூறுசெய்த தகப்பனுடைய கால்களை மழுவாயுதத்தால் அறுத்த சிறுவராகிய விசாரசருமர் பௌதிகமாகிய வுடலத்துடனே பரமசிவனுக்கு மகனானார்-இப்படிப்பட்ட தன்மையை அறிந்தவர்களார்-நாசமில்லாதபரமசிவனுக்கு அன்புசெய்கின்ற அடியவர்கள் ஆண்டவர்பணியின்பொருட்டு ஒருதீங்குசெய்தாலும் அதுவும்மேன்மையாகும்-நூல்களையாராய்ந்துசொல்லும்போது.—(எ-று) இந்தநிலைமையென்றது-தகப்பன்றாளைத்துணித்தல் கொடியபாவமாயினும், சுவாமிபூசையின்பொருட்டுச்செய்ததாதலின்-புண்ணியமாயிற்றென்னுந்தன்மை. (௫௯)

நேசநிறைந்தவுள்ளத்தானீலநிறைந்தமணிகண்டத் .... ※
தேசனடியார்பெருமையினையெல்லாவுயிருந்தொழவெடுத்துத்

தேசமுய்யத்திருத்தொண்டத்தொகைமுன்பணித்த திருவாள
ன், வாசமலர்மென்கழல்வணங்கவந்தபிறப்பைவணங்குவாம்*

(இதன்பொருள்)

அன்பேமுழுதும் நிறைந்த உள்ளத்தோடு நீலமாகிய விஷக்க
றையானது பரவியிருக்கின்ற அழகிய கழுத்தினையுடைய பர
மசிவனுக்கு அடியவரா யிருக்கின்றவர்களுடைய பெருமை
யைத்தேசத்திலிருக்கும் எல்லாச் சீவராசிகளும் பிழைக்கும்
பொருட்டுத் தொழும்படி திருத்தொண்டத்தொகையை மு
ன்னேசெய்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமியின் வாசனைபொரு
ந்திய மலர்போன்ற மெல்லியபாதங்களை வணங்கும்படியாக
நமக்குக்கிடைத்த பிறப்பினைக்குறித்து வணங்குவாம்.(எ-று)
சருக்கத்துக்கொருதரம் சுந்தரமூர்த்திசுவாமியை ஸ்துதிசெய்
வது இந்நூலாசிரியர்கருத்தாதலின் - இதன்முடிவிற்சொல்
ப்பட்டது. (கூ௰)

சண்டேசுரநாயனார்புராணம்-முற்றிற்று.

மும்மையாலுலகாண்டசருக்கமுற்றிற்று.

ஆ-திருவிருத்தம்- ௩௨௱௭௰,

திருநாவுக்கரசுநாயனார்புராணம்.

திருநாவுக்கரசுவளர்திருத்தொண்டினெறிவாழ .. .. *
வருஞானத்தவமுனிவர்வாகீசர்வாய்மைதிகழ் .. .. *
பெருநாமச்சீர்பரவலுறுகின்றேன்பேருலகில் ... . *
லொருநாவுக்குரைசெய்யவொண்ணாமையுணராதேன். .. *

(இதன்பொருள்.)

ஞானம்வளர்ந்தேறிய தவமுனிவராகியவாகீசருடைய அவதாரமாகிய திருநாவுக்கரசு சுவாமிகளின் திருப்பணிவிடையினால் உலகத்துக்குண்டாகிய பத்திமின்மார்க்கமானது-வரை அச்சுவாமிகளின் உண்மைபொருந்திய கீர்த்தியைக்குறித்துப் புகழத்தொடங்கினேன் இந்த அகன்றவுலகத்தில் ஒரு நாவினாலேயே புகழ்ந்து முடியாதென்பதை அறியாதேனாகியயான்.—
(எ-று) (க)

தொன்மைமுறைவருமண்ணிற்றுகளன்றித்துகளில்லா . .. *
நன்மைநிலையொழுக்கத்தினலஞ்சிறந்தகுடிமல்கிச் .. .. *
சென்னிமதிபுனையவளர்மணிமாடச்செழும்பதிகண் .. .. *
மன்னிநிறைந்துளதுதிருமுனைப்பாடிவளநாடு .... *

(இதன்பொருள்.)

தொன்றுதொட்டுவருகின்ற இந்தவுலகத்தில் மண்துகளிருப்பதேயன்றி யாதொரு துகளுமில்லாமல் குலஒழுக்கத்தின்படி நன்மைபொருந்திய குடிகள்நிறைந்து சிகரத்தில்தரிக்கப்பட்டதுபோற் பிரகாசிக்குஞ் சந்திரனையுடைய மணிகளிழைத்த உப்பரிகைகள் நிறைந்த அனேகநகரங்கள் நிலைபெற்று நிறையப்பெற்றுள்ளது வளம்பொருந்திய திருமுனைப்பாடிநாடு.—
(எ-று) துகள்-குற்றமுமாம். (உ)

புனப்பண்ணைமணியினொடும்புறவினறும்புதுமலரும் . .. *
கனைப்பெண்ணிநிரைசுமந்துகரைமருங்குபெரும்பகட்டே *
றினப்பண்ணையுழும்பண்ணையெறிந்துலவியெவ்வுலகும் .. *
வனப்பெண்ணவரும்பெண்ணைமாநதிபாய்வளம்பெருகும். *

(இதன்பொருள்)

குறிஞ்சிநிலத்திலிருக்கும் மூங்கில்களிலுண்டாகிய முத்துக்களோடு முல்லைநிலத்தில் பூத்த புதிய மலர்களையும்-ஆரவாரத்தையுடைய அனேகஅலைகள்தாங்கிக் கரையோரத்தில் பெரியகடாக்கள் பூட்டிய ஏர்க்கூட்டங்களால் உழப்பட்டவயல்களில் வீசியெறிந்து உலாவி எல்லாவுலகமும் அழகைநோக்கியிருக்க

யப்படவருகின்ற பெண்ணையாற்றினது வளத்தால் அந்தநாடு பெருமையை அடையும்.—(எ-று) பணைமூங்கில்- அதற்கு விரித்தல் விகாரம்வந்தது. (௩)

காலெல்லாந்தகட்டுவாரல்கரும்பெல்லாங்கண்பொழிதேன் *
பாலெல்லாங்கதிர்ச்சாலிபரப்பெல்லாங்குலைக்கமுகு .. .. *
சாலெல்லாந்தரளநிரை தடமெல்லாஞ்செங்கழுநீர் .... *
மேலெல்லாமகிற்றூபம்விருந்தெல்லாந்திருந்துமனை. . . .*

(இதன்பொருள்)

வயல்களின் கால்களிலெல்லாம் தகட்டு உருவமாயிருக்கின்ற வரால்மீன்களும், கரும்புகளிலெல்லாம் கணுக்களிலிருந்து பொழிகின்ற தேனும், பக்கங்களிலெல்லாம் கதிர்களையுடைய நெற்பயிர்களும், பரந்திருக்கின்ற இடங்களிலெல்லாம் குலைகளையுடைய கமுகமரங்களும், படைச்சாலெல்லாம் வரிசையாய்க்கிடக்கின்ற முத்துக்களும், குளங்களிலெல்லாம் செங்கழுநீர்மலர்களும், மேல்வீடுகளிலெல்லாம் அகிற்கட்டைகளின் புகையும், திருந்தமாகிய எல்லாவீடுகளிலும் பலவகைவிருந்துகளும் உண்டாயிருக்கின்றன.—(எ-று) விருந்து - புதியராய்வந்தவர்கள். உறவினரும், பழகினவரும், அறிமுகமில்லாதவரும், என் மூவகைப்பட்டபடியால்-விருந்தெல்லாமென்றார். (௪)

கடைஞர்மிடைவயற்குறைத்தகரும்புகுறைபொழிகொழுஞ்சா
றிடைதொடுத்ததேன்கிழியவிழிந்தொழுகுநீத்தமுடன் ... *
புடைபரந்துஞிமிறொலிப்பப்புதுப்புனல்போமடையுடைப்ப
வுடைமடையக்கரும்படுகட்டியினடைப்பவூர்கடோறும் . *

(இதன்பொருள்)

பள்ளர்கள் வயல்களில்நெருங்கியிருக்கின்ற கரும்புகளைவெட்டியபோது அடிக்குறையானது பொழிந்த கொழுமையுற்ற சாறு அந்த அடிக்குறைக்கரும்பின் நடுவில் கட்டியிருந்த தேன்கூடுகள்கிழிந்து ஒழுகிய மதுவெள்ளத்தோடு பக்கங்களில்நிரம்பி வண்டுகள் மொய்த்துக்கொண் டொலிக்கும்படி புதிதாகவந்த நீர் ஓடுகின்றமடைகளை உடைத்துவிட-அங்ஙனம்உடைபட்டமடைகளைக்கருப்பஞ்சாற்றைக் காய்ச்சியுண்டாக்கியவெல்லக்கட்டிகளைக்கொண்டு அடைப்பார்கள் அந்தஊர்கடோறும்.—(எ-று) (௫)

கருங்கதலிப்பெருங்குலைகள்களிற்றுக்கைமுகங்காட்ட.... *
பருக்குவளர்கதிர்ச்செந்நெல்வயப்புரவிமுகங்காட்டப்... *

பெருஞ்சகடுதேர்காட்டவினைஞரார்ப்பொலிபிறங்க .... *
நெருங்கியசதுரங்கபலநிகர்ப்பனவாநிறைமருதம். .. .. *

(இதன்பொருள்)

கருவாழைமரங்களின் பெரியகுலைகள் யானைகளின் தும்பிக்கையோடுபொருந்திய ரூபவுருவத்தைக்காண்பிக்கவும், பக்கங்களில்வளர்கின்ற செந்நெல்களின் கதிர்க்குலைகள் பலம்பொருந்திய குதிரையின்முகத்தைக்காண்பிக்கவும், பெரிய பண்டிகள் தேர்களையொப்பவும், வேலைசெய்கின்றவர்கள் முழங்குகின்ற ஒலியால் காலாள்களையொத்திருக்கவும் தோன்றுதலால்-சதுரங்கசேனையை உடைத்தாயிருக்கின்ற இடம்போலிருக்கின்றது நிறைவுற்ற மருதநிலமானது.—(எ-று) (௬)

நறையாற்றுங்கமுகுநவமணிக்கழுத்தினுடன்கூந்தற்... .. *
பொறையாற்றாமகளிரெனப்புறப்பணைதண்டலைவேலி.. .. *
துறையாற்றமணிசொரியச்சுரும்பிரைக்கும்பெரும்பண்ணை *
நிறையாற்றுநீர்க்கொழுந்துபடர்ந்தேறுநிலைமையதால் .. *

(இதன்பொருள்.)

வாசனைவீசுகின்ற கமுகமரங்கள் கழுத்திடத்து மணிபோலத் தோன்றுகின்ற பழுக்காய்களையும், நீண்ட இலைகளையும்உடையனவாயிருத்தலால் கழுத்தில்மணிகளிழைத்தஆபரணங்களோடு கூந்தலின்பாரத்தையுந்தாங்கமாட்டாத மங்கையர்கள்போன்றுவளர்கின்றசோலைகளின்வேலியில் - துறைகளில்முத்துக்களைக்கொழிக்கவண்டுகள்முழங்கும்பெரியவயல்களில்நிறைந்து பெருகுகின்ற பிரவாகத்தினீர்க்கொழுந்தானது படர்ந்துசெல்கின்ற நிலைமையை உடையது.—(எ-று) (எ)

மருமேவுமலர்மேயவான்மாகடலினுட்படியு ... . *
முருமேகமெனமண்டியுகைத்தகருங்கன்றுபோற் .. .. *
பருமேனிச்செங்கண்வரான்மடிமுட்டப்பால்சொரியுங்..... *
கருமேதிதனைக்கொண்டுகனைபுரள்வதிவாவி ,. .. .. *

(இதன்பொருள்.)

மணம்வீசுகின்ற பூக்களைமேயும்படிபெரியகடலில் நீரையுண்ணும்பொருட்டுப்படிகின்ற மேகம்போல வீழ்ந்து துள்ளுகின்ற கரியகன்றுகள்போல பரியவுடலையும் சிவந்தகண்களையும் உடையவரால் மீன்கள் மடிகளைமுட்டப் பாலைச்சொரிகின்ற கரிய எருமைகளால் அலைகளையுடைய குளங்கள் கனைபுரள்கின்றன.—(எ-று) மேகம்போல் எருமைகளும் அம்மேகங்கள்ப

டியும் கடல்போல் குளங்களும், கன்றுகள்போல் வரால்மீன்களும், அணியுறுத்தப்பட்டன. எருமைகள் குளங்களில் திடீலென்று விழுதலாலும், வாளைமீன்கள் அதுபற்றித் துள்ளி மடியிற் பாய்தலாலும், அதுபற்றி அவைகள் பாலைச் சொரிதலாலும், நீர் கரைபுரண்டதென்பது கருத்தாயிற்று. (௮)

மொய்யளிசூழ்ந்திரை நீல முழுவலயங்களினலையச் .... .. *
செய்யதளிர் நறுவிரலிற் செழுமுகையினகஞ்சிறப்ப .... *
மெய்யொளியினிழற்காணு மாடியெனவெண்மதியை .... *
வையமகள் கையமைத்தாற்போலுமுயர்மலர்ச்சோலை .... *

(இதன்பொருள்.)

அந்தநாட்டிலுள்ள உயர்ந்த மலர்ச்சோலைகளின் மரக்கொம்புகளினிடமாகச் சுற்றி மொய்த்துக்கொண்டிருக்கும் வண்டுகளின்பற்றிப் பூமிதேவியாகிய மங்கைக்குக் கையில் வரிசையாகத் தரிக்கப்பட்ட நீலவளையல்கள்போல அசையவும், சிவப்புற்ற தளிர்கள் விரல்கள்போலவும் செழுமைபொருந்திய அரும்புகள் அவ்விரல்களின் நகம்போலவும் தோன்றவும், அக்கிரபாகத்தில் போகின்ற சந்திரனையெண்ணும்போது தேகத்தின் பிரதிபலனந்தோன்றுகின்ற கண்ணாடியென்று அந்தப் பூமிதேவிகையாற் பிடித்திருத்தல்போலும். — (எ-று) முழுவலயம் - உருவத்திற் பெரிதாகத்தோன்றும்வலயம். (௯)

எயிற்குலவும்வளம்பதிகளெங்குமணந்தங்கும்வயற் .. .... *
பயிர்கள்வியலகலிடங்கள்பரந்துயர்நெற்கூடுகளும் .... *
வெயிற்கதிர்மென்குழைமகளிர்விரவியமாடமுமேவி ... *
மயிற்குலமுமுகிற்குலமுமாறாடமருங்காடும் .. .. *

(இதன்பொருள்)

மதில்வளைந்திருக்கும் செழிப்புள்ள நகரங்களிலெல்லாம் வாசனைவீசுகின்ற-பயிரை அகத்திலுடைய விசாலமாகிய இடமுள்ள வயல்களினோரங்களிலுயர்வாகக்கட்டியிருக்கின்ற நெற்குதிர்களிலும் ஒளிதங்கிய கிரணங்களைவீசும் குண்டலங்களைத் தரித்த மாதர்கள் இருக்கும் மேல்வீடுகளிலும் மயிற்கூட்டங்களும் மேகக்கூட்டங்களும் அடைந்து வேற்றுமைதோன்றாமல் மருங்காடும். — (எ-று) மருங்காடும்என்பது-மேகத்தினிடமாகச்செல்லும்போது பக்கத்திற் சஞ்சரித்துக்கொண்டிருக்குமெனவும், மயிலினிடத்தில் ஆடுமெனவுங்கொள்க. (௰)

மறந்தருதீநெறிமாறமணிகண்டர்வாய்மைநெறி .... .. *
யறந்தருநாவுக்கரசுமாலாலசுந்தரரும் .. .. *

பிறந்தருளவுளதானானம்மளவோ பேருலகில் .... *
சிறந்ததிருமுனைப்பாடித்திறம்பாடுஞ்சீர்ப்பாடு .... *

(இதன்பொருள்)

பாவத்தைக்கொடுக்கின்ற தீயவழியின்மாறிப்போய்ப் பரமசிவனருளிச்செய்த ஆகமமார்க்கமானது வழங்கும்படி செய்கின்ற திருநாவுக்கரசுசுவாமிகளார், ஆலாலசுந்தரரும் அவதாரஞ்செய்யும்படி பெருமைபெற்றிருக்கின்றதானால் அப்படிப்பட்ட சிறப்புற்ற திருமுனைப்பாடிநாட்டின் சீர்ப்பாட்டைக் குறித்துப்புகழ்வது நம்மளவாயிருக்கின்றதோ. (எ-று) (௰௧)

இவ்வகையதிருநாட்டிலெனைப்பலவூர்களுமென்று. .. .. *
மெய்வளங்களோங்கவருமேன்மையனவாங்கவற்றுள்..... *
சைவநெறியேழுலகும்பாலிக்குந்தன்மையினாற்... .. .. *
றெய்வநெறிச்சிவம்பெருக்குந் திருவாமூர்திருவாமூர்.... *

(இதன்பொருள்.)

இத்தன்மைபெற்ற நாட்டில் எந்தவூர்களும் எந்நாளும் மெய்மைபொருந்திய வளங்களோங்கும்படிதங்கியபெருமையை உடையன - அவைகளுள் சைவசமயமார்க்கத்தை ஏழுலகத்திற்குந் தெரிவிக்குந்தன்மையை உடைத்தாயிருக்கின்றமையால் தெய்விகமாகிய நன்மையுற்ற சுபங்களைப் பெருக்கிக்கொண்டிருக்கும் திருவாமூர்.—(எ-று) இவ்வகையதிருநாடு-காலகுருகுபோல்நிற்பது. (௰௨)

ஆங்குவனமுலைகள்சுமந்தணங்குவனமகளிரிடை ....*
யேங்குவனநூபுரங்களிரங்குவனமணிக்காஞ்சி .... *
யோங்குவனமாடநிரையொழுகுவனவழுவிலற.... .... *
நீங்குவனதீங்குநெறிநெருங்குவனபெருங்குடிகள் .... ..*

(இதன்பொருள்.)

அந்நாட்டில்ஸ்திரீகளுடைய இடைகளானவை அழகியஸ்தனங்களைச்சுமப்பதனால் வருந்துகின்றன - காலில்தரிக்கப்பட்டசிலம்புகள்அவ்விடைகளுக்குச்சுமப்பதுபற்றி ஒருஇடையூறுண்டாகுமேயென்று அலறுவன்போல்ஒலிக்கின்றன - மணிகளாலமைந்தகாஞ்சியென்னும்இடையணியானது அச்சிலம்பின்அலறுதலைநோக்கித் தனக்கும் அபாயஞ்சம்பவிக்குமென்று விசனப்படுவன்போல் ஒலிக்கின்றன-உயர்ந்திருக்கின்ற வரிசையாகிய வீடுகளில் குற்றமற்ற இல்லறத்துக்குரிய செய்கைகள் தவறாமல் நடக்கின்றன-தீங்கானசெய்கைகள் கெடுகின்றன- ஆதலால் பெரியகுடிகள் பெருக்கமடைந்து நிறைகின்றன.(எ-று) (௰௩)

மலர்நீலம்வயல்காட்டுமைஞ்ஞீலமதிகாட்டு ....*
மலர்நீர்மறுகாட்டுமணியூசல்பலகாட்டும் .... *
புலர்நீலமிருள்காட்டும்பொழுதுழவரொலிகாட்டுங்
கலநீர்மனைகாட்டுங்களைக்காட்டாப்பெருவளங்கள்

(இதன்பொருள்)

வயல்கள் நீலோற்பலபுஷ்பங்களைக்காட்டுகின்றன-மாதர்களது முகமாகியமதிகள்- கண்களாகிய நீலோற்பலத்தைக் காட்டுகின்றன விசாலமாயிருக்கின்றவீதிகள்- மனிதர்களால் ஆட்டப்பட்டமணிகளிழைத்த ஊஞ்சல்களைக்காட்டுகின்றன குமரியிருளுண்டாகின்றவிடியற்காலப்பொழுதானது உழவர்களுடைய ஒலியைக்காட்டுகின்றது பண்டங்கள்மிகுந்தவீடுகள் அவாவில்லாதவளங்களைக்காட்டுகின்றன.—(எ-று) நீலம்போலவிருள்காட்டும் புலர்பொழுதென்று இயைபுசெய்க. நீலம்- ஞீலமெனப்போலியாயிற்று. (௰௪)

தலத்தின்கண்விளங்கியவத்தனிப்பதியிலனைத்துவிதம் .... *
நலத்தின்கண்வழுவாதநடைமரபிற்குடிநாப்பண் ...... *
விலக்கின்மனையொழுக்கத்தின்மேதக்கநிலைவேளாண் ... *
குலத்தின்கண்வரும்பெருமைக்குறுக்கையர்தங்குடிவிளங்கும்

(இதன்பொருள்)

பூவுலகத்தில் முக்கியமாக விளங்குகின்ற அந்த ஒப்பற்றநகரத்தில் எல்லாவிதநன்மைகளிலும் தவறாத நற்குடிகளினிடையில் நிந்தையில்லாத இல்லறத்தைநடத்துவதில் மேன்மைபொருந்திய வேளாளருடைய குலத்தில் ஒருபிரிவாகிய குறுக்கையரென்பவரைமூலபுருஷராகவுடையகுடியானதுவிளங்கும் (எ-று)

அக்குடியின்மேற்றோன்றலாயபெருந்தன்மையினார். .... *
மிக்கமனையறம்புரிந்தளிக்குமேன்மையினா .. . *
ரொக்கல்வளர்பெருஞ்சிறப்பினுளரானாருளரானார் ... .. *
திக்குநிலவும்பெருமைதிகழவரும்புகழனார். .. .. *

(இதன்பொருள்)

மேற்சொல்லிய கொறுக்கையர்குடியில் உற்பத்தியாகிய எல்லாரைக்காட்டிலும் மேலாகிய பெருமையை உடையவர்- இல்வாழ்க்கையைச் செம்மையாகநடத்திப்புதிதாகவந்தவர்களுக்கு அன்னமிடுகின்றவர் - இதுவன்றி உறவினராயிருப்பவரும் செழிப்படையும்படிச்செய்கின்றவர்-இவர்யாரெனின் திக்குகளிற்சென்று விளங்குங் கீர்த்தியை உடையபுகழனாரென்பவராயிருந்தார்.(எ-று) உளரானார்-அடுக்கிவந்தது வலியுறுத்தற்கு.

புகழனார்தமக்குரிமைப்பொருவில்குலக்குடியின்கண் .... *
மகிழவருமணம்புணர்ந்தமாதினியார்மணிவயிற்றி .... .. *
னிகழ்மலர்ச்செங்கமலத்திருவாயிதழ்நடுவினிற் .. .. *
றிகழவருந்திருவனையத்திலகவதியார்பிறந்தார். .... *

(இதன்பொருள்.)

புகழனாரென்பவர் தமக்குரிய தம் ஒப்பில்லாததுமாகியசிரேஷ்டமுற்ற ஜாதியின்கண்ணே-விருப்பமாகக் கலியாணஞ்செய்துகொண்ட மாதினியார் அழகியவயிற்றில் பொற்றாமரைப் பூவினது வரிசையாயிருக்கின்ற இதழ்களினடுவில் பிரகாசித்து விளங்குகின்ற திருமகளுக்கு ஒப்பாகத் திலகவதியார் பிறந்தார்.—(எ-று) (௰எ)

திலகவதியார்பிறந்துசின்முறையாண்டகன்றதற்பி .... .. *
னலகில்கலைத்துறைதழைப்பவருந்தவத்தோர்நெறிவாழ .. *
வுலகின்வருமிருணீக்கியொளிவிளங்குகதிர்போல ...... *
மலருமருணீக்கியார்வந்தவதாரஞ்செய்தார் .... *

(இதன்பொருள்.)

திலகவதியாரென்னும் பெயர்பெற்றமகளார்பிறந்து சில ஆண்டுகள்போயினபின்பு எண்ணிறந்த நூல்களின் துறைதழைக்கவும், அரியதவஞ்செய்வோரது மார்க்கமானது கேடில்லாமல்விளங்கவும், உலகத்தில்நிறைந்த அந்தகாரத்தையொழித்துப் பிரகாசிக்குஞ் சூரியன்போல் மருள்நீக்கியார் அவதாரஞ்செய்தருளினார்.—(எ-று) அப்பர்சுவாமிகளுக்குத்தாய் தந்தைகள் பாலியத்தில் மருள்நீக்கியாரென்று பெயரிட்டபடியால் அதனையே இங்கு இயற்பெயராக்கினார். (௰அ)

மாதினியார்திருவயிற்றின்மன்னியசீர்ப்புகழனார் .... *
காதலனுதித்ததன்பின்கடன்முறைமைமங்கலங்கள் .... *
மேதகுநல்வினைசிறப்பவிரும்பியபாராட்டுட .... *
னேதமில்பல்கிளைபோற்றவிளங்குழவிப்பதங்கடந்தார். .. *

(இதன்பொருள்.)

என்றும் அழிவில்லாதபுகழினையுடையபுகழனார்-தமது மனைவியாராகிய மாதினியார்வயிற்றினிடத்தில் பிள்ளைபிறந்தவுடனே செய்யவேண்டியகடனாகியமங்கலகாரியங்களை-மேன்மைபெறச்செய்தபின்புகுற்றமற்றசுற்றத்தார்யாவரும்மருள்நீக்கியார்க்குவரிசைஎடுத்துப்பாராட்டிவளர்க்க அவர்குழந்தைப்பருவம்நீக்கினார். எ-று கிளையென்றது-உதிரக்கலப்பாகியசுற்றத்தை

மருணீக்கியார் சென்னிமயிர் நீக்குமணவினையுந் .... *
தெருணீர்ப்பன்மாந்தரெலாமகிழ்சிறப்பச்செய்ததற்பின் .. *
பொருணீத்தங்கொளவீசிப்புலன்கொளுவமனமுகிழ்த்த .. *
அருணீக்கிமலர்விக்குங்கலைப்பயிலத்தொடங்குவித்தார் .... *

(இதன்பொருள்)

புகழனார் மருள்நீக்கியார்க்குச் சவுளகலியாணத்தைத் தெளிவுள்ளபெரியோர்களெல்லாம் களிப்படையச்செய்தபின்பு வெள்ளம்போலிரண்டபொருளை யாசகர்களுக்குத்தானஞ்செய்து ஞானமுண்டாகும்பொருட்டிச் சுருள்போல் அடங்கியிருக்கின்றமனதை விரியும்படிசெய்யுங் கருவியாகிய வித்தையைப்பயிற்றிசெய்யத் தொடங்கும்படி நடத்தினார் —(எ-று) சென்னிமயிர் நீக்குமணவினை - சிரசின்நின்று முதலில்மயிர்களை நீக்குச்செய்யுமங்களதொழில் அது வழக்கத்தில் குடுமிக்கலியாணம், சௌளமென்பது முதலிய இவ்வாறுகப்பதிப்பித்தால் படிப்போர்க்கு வாசிப்பதுவருத்தமாதலால் சவுளமெனப்போலியாக்கினும். (உ௰)

தந்தையார்களிமகிழச்சிந்தைசிறக்குமுறைமையினாற் .... *
சிந்தைமகிழ்ந்தெழுமுணர்விற்செழுங்கலையின்றிறங்களெல்லா
முந்தைமுறைமையிற்பயின்றுமுதிரவறிவெதிரும்வகை ... *
மைந்தனார்மறுவொழிந்தவிளம்பிறைபோல்வளர்கின்றார் .. *

(இதன்பொருள்)

தகப்பனாராகிய புகழனார்க்கு அதிகப்பட்டபெருங்களிப்பாண்டு படிப்படியாக உயரச் சிந்தையிலிருந்து உவகையோடுஎழும்பிய புத்தியினுட்பத்தால் அருமையாகிய நூல்களில் புலதயுண்டுகிடக்குங் கவிகளின் கருத்துக்களையெல்லாம் சம்பிரதாயப்படிகற்று அறிவுமுதிர்ந்து மருள்நீக்கியார் களங்கமில்லாதவளர்பிறைபோல் நாளுக்குநாள்வளர்கின்றார்.—(எ-று)(உக)

அந்நாளிற்றிலகவதியாருக்காண்டாறிரண்டின் ....*
முன்னாகவொத்தகுலமுதல்வேளாண்குடித்தலைவர் ....*
பின்னார்செஞ்சடையண்ணன்மெய்யடிமைவிருப்புடையார் *
பொன்னாருருமணிமௌலிப்புரவலன்பாலருளுடையார் ....*

(இதன்பொருள்)

அப்படிப்பட்டகாலத்தில் திலகவதியாராகிய மகளார்க்குப் பன்னிரண்டுவயதுநிரம்பப்புகழனார்மரபிற்கு ஒத்தவேளாளர்குடியிற்பிறந்த தலைவர் மின்போல் ஒளிவீசும் சிவந்த சடையையுடைய பரமசிவனுக்கு மெய்மையாகிய அடிமைத்திறஞ்செ-

யவதில் மிகுந்தவிருப்பம் உள்ளவர் - பொன்னாற்செய்யப்பட்டு மணிகளழுத்திய கிரீடத்தைத் தலையில்தரித்த ஒரு வேந்தனிடத்தில் உத்தியோகஞ்செய்கின்றவர்.—(எ-று) (௨௨)

ஆண்டகைமைத்தொழிலின் கண்டலரியேற்றனையுள்ளார் .... *
காண்டகையபெருவனப்பிற்கலிப்பகையாரொனும்பெயரார் *
பூண்டகொடைப்புகழனார்பாற்பொருவின்மகட்கொள்ள... *
வேண்டியெழுங்காதலினான்மேலோரைச்செலவிட்டார் ... *

(இதன்பொருள்)

ஆண்மைதீதன்மாகிய போர்செய்வதில் எதிர்தாக்குகின்ற ஆண்சிங்கம்போன்றவர்-அழகுள்ள புருஷர்களும்பார்த்து மயங்கத்தக்க பேரழகுள்ள கலிப்பகையாரென்னும் பெயரையுடையவர்-உதாரத்துவமே ஒரு ஆபரணமாகக்கொண்ட புகழனாரிடத்துகு ஒப்பற்ற அவர்மகளைக் கலியாணஞ்செய்யும் அதிக ஆசைகொண்டு பெரியோர்களை அனுப்புவித்தார்.(எ-று)

அணங்கனையதிலகவதியார்தம்மையாங்கவர்க்கு .. .. *
மணம்பேசிவந்தவரும்வந்தபடியறிவிப்பக் .... *
குணம்பேசிக்குலம்பேசிக்கோதில்சீர்ப்புகழனார் .. ..*
பணங்கொளரவகலல்குற்பைந்தொடியைமணநேர்ந்தார் .. *

(இதன்பொருள்.)

தெய்வப்பெண்போல் அழகுள்ள திலகவதியாரை மணம்பேசுவதற்கு வந்தபெரியவர்களும் தாங்கள்வந்தகாரணத்தைத் தெரிவிப்பக்குற்றமற்றபேர்பெற்ற புகழனார்பிள்ளையின்மரபின்தன்மையையும், குணங்களையும் விசாரித்தறிந்து பாம்பின்படம்போன்ற அகலமாகிய அரையின் முன்பக்கத்தையுடைய பெண்ணைக்கொடுப்பதற்குச்சம்மதப்பட்டார்.—(எ-று) (௨௪)

கன்னிதிருத்தாதையார்மணமிசைவுகலிப்பகையார்க் ..... *
முன்னணைந்தாரறிவிப்பவஃதுவைவினைமுடிப்பதன்முன் .... *
மன்னவற்குவடபுலத்தோர்மாறேற்கமற்றவர்மே .... *
லன்னவர்க்குவிடைகொடுத்தானவ்வினைமேலவரகன்றார் .. *

(இதன்பொருள்.)

புகழனார்-தம்முடையமகளைக் கலியாணஞ்செய்துகொடுக்க ஒப்புக்கொண்டதைப் பெண்கேட்கப்போனவர்கள்வந்து கலிப்பகையார்க்குத்தெரிவிக்க- அவரும் விவாகத்தைச் செய்துகொள்வதற்குமுன் தம்முடைய அரசன்மேல் வடதேசத்தாதி

ராசாக்கள்பகைகொண்டபடியால்அவர்கள்மேல்யுத்தஞ்செய்யும்பொருட்டு அரசன் இவரையனுப்புவிக்க- அத்தொழில்மேல் போயினார்.—(எ-று) (உரு)

வேந்தற்குற்றுழிவினைமேல்வெஞ்சமத்தில்விடைகொண்டு. *
போந்தவரும்பொருபடையுமுடன்கொண்டுசிலநாளிற் ..... *
காய்ந்தசினப்பகைப்புலத்தைக்கலந்துகடுஞ்சமர்க்கடலை.....*
நீந்துவார்நெடுநாள்கணிறைவெம்போர்த்துறைவிளைத்தார்:*

(இதன்பொருள்)

கலிப்பகையாரும் தம்முடைய அரசனுக்குப் பகைவரால் துன்பம் உண்டானகாலத்தில் அதையொழிக்கும்பொருட்டுவெவ்விதாகிய போரைவிளைக்க விடைபெற்றுச்சண்டைபண்ணத்தக்க சேனைகளையும் கூட அழைத்துக்கொண்டுபோய்ச் சிலதினத்துள்ளே மிகுந்தகோபமுள்ள பகைவர் இருக்குமிடத்தைச் சேர்ந்து கடுமைபொருந்தியயுத்தமாகிய கடலைத்தாண்டுவாராகி நெடுநாள்வரைக்கும் அவர்களையெதிர்த்து உக்கிரமாகிய நிறைந்த பலவகைச்சண்டைகளையும் செய்தார்.—(எ-று) நிறைப்போர்-ஆயுதப்பயிற்சியில்தேர்ந்து சண்டைசெய்தல். துறை-விஷயம். அது பன்மையில் நின்றது. வில்வித்தை வாள்வித்தைமுதலாகப் பலவாமாதலில் என்க. (உசா)

ஆயநாளிடையிப்பாலணங்கனையாடனைப்பயந்த.. .. .. *
தூயகுலப்புகழனார்தொன்றுதொடுநிலையாமை..... .... *
மேயவினைப்பயத்தாலேயிவ்வுலகைவிட்டகலத் ....*
தீயவருப்பிணியுழந்துவின்னுலகிற்சென்றடைந்தார் .. .. *

(இதன்பொருள்)

இப்படிக் கலிப்பகையார் சண்டைசெய்துகொண் டிருக்குங்காலத்தில் இங்கேயோவென்றால் தெய்வப்பெண்போன்றதிலகவதியாரைப்பெற்ற நற்குலத்திற்பிறந்த புகழனார் தேகம் நிலையாயிராதென்கிற தொன்றுதொட்டு வரும் வழக்கப்படி முற்பிறப்பிற்செய்திருந்த வினையின்முடிவாகிய பயனால் இந்தவுலகத்தை விட்டுவிடக்கொடியவியாதியை அனுபவித்துச்சொர்க்கலோகத்தை அடைந்தார்.(எ-று) புகழனார்- அப்பர்சுவாமிதம்மிடமாகப் பிறப்பதற்குப் புண்ணியஞ்செய்திருந்தாராயினும், முற்பிறப்பிற்செய்ததீவினையையுந்தாமேயனுபவிக்கவேண்டியபடியால் கொடியவியாதியை அனுபவித்தாரென்க.

மற்றவர் தாமுயிர்நீப்பமனைவியார்மாதினியார் .... *
சுற்றமுடன்மக்களையுந்துகளாகவேநீத்துப் .... *
பெற்றிமையாலுடனென்றும்பிரியாதவுலகெய்துங் . .... *
கற்புநெறிவழுவாமற்கணவனாருடன்சென்றார் .... *

(இதன்பொருள்)

புகழனார் உடலைவிட்டுநீங்கவும், அவர்க்கு மனைவியாராகியமாதினியாரும் தம்முடைய உறவினரோடு மக்களையும் அலட்சியமாக எண்ணி நீக்கிவிட்டு ஒத்ததன்மையை உடையராய் நாயகரோடு என்றும் பிரியாமலிருக்கும் உலகத்தை அடையும்படி ஸ்திரீகளுக்குவிதித்திருக்கும் கற்புநூலிற் சொல்லியிருக்கும் விதிக்குத் தவறுவராமல் கணவரோடுசககமனஞ்செய்தார்.—(எ-று) கணவனாருடன்செல்லல்-புருஷனிறந்தவுடனேதானும் இறத்தல். அது-சககமனம், அனுமரணம் என இருவகைப்படும். அவற்றுள்-இது சககமனமாம். கற்புடையமாதர்கள் கணவனைப்பார்க்கினும் மக்களையும் சுற்றத்தையும் செல்வத்தையும் உயர்பொருளாக நினையாராதலின்-துகளாகவேநீத்தென்றார்.

தாதையாரும்பயந்த தாயாருமிறந்ததற்பின் .... *
மாதரார்திலகவதியாருமவர்பின்வந்த .... *
காதலனார்மருணீக்கியாருமனக்கவலையினாற் .... *
பேதுறுநற்சுற்றமொடும்பெருந்துயரிலழுந்தினார் .. .. *

(இதன்பொருள்)

திலகவதியாரும் அவர்க்குப்பின்பிறந்த மருள்நீக்கியாருந்தம்மைப்பெற்ற தாயார் தகப்பனாரிருவரும் இறந்தபின்பு மனத்திலுண்டாகிய கவலையினால் புலம்புகின்ற நல்ல உறவினரோடு மிகுந்த துக்கத்தில் முழுகினவர்களானார்கள்.—(எ-று)(உகூ)

ஒருவாறுபெருங்கிளைஞர்மனந்தேற்றந்துயரொழிந்து, பெருவானமடைந்தவர்க்குச்செய்கடன்கள்பெருக்கினார், மருவார்மேன்மன்னவர்க்காமலையப் போங்கலிப்பகையார், பொருவாரும்போர்க்களத்திலுயிர்கொடுத்துப்புகழ்கொண்டார் .. *

(இதன்பொருள்)

சுற்றத்தாரில்பெரியவர்களாயிருப்போர் திலகவதியாரையும் மருள்நீக்கியரையும் மனந்தேற்ற - ஒருவகையாகத் துக்கம்நீங்கி-பெருமைபொருந்திய சொர்க்கத்தை அடைந்த தாய் தந்தைகளுக்குச்செய்யவேண்டிய கருமங்களைச்செய்தார்கள்- இப்படியிருக்கும்போது தம்முடைய அரசனுக்காகச் சத்துருக்

ளாகிய மன்னவர்மேல் யுத்தஞ்செய்யப்போயின கலிப்பகையார் சண்டைசெய்யும் அமர்க்களத்தில் பூதவுடலைக்கொடுத்துவிட்டுப் புகழுடம்பைப் பெற்றுக்கொண்டார்.—(எ-று) பொருதல்-ஈறுகுறைந்துநின்றது. உயிர் - ஆகுபெயர்.(௬௰)

வெம்முனைமேற்கலிப்பகையார்வேல்வேந்தனேவப்போ.. *
யம்முனையிற்பகைமுருக்கியமருலகமாள்வதற்குந் .... *
தம்முடையகடன்கழித்தபெருவார்த்தைதலஞ்சாற்றச் .... *
செம்மலர்மேற்றிருவனையதிலகவதியார்கேட்டார் .... *

(இதன்பொருள்.)

கலிப்பகையார் வேலைக் கையிற்பிடித்த தம்முடைய அரசனிட்டகட்டளையால் சத்துருக்கள் படையைக்கூட்டி அந்தப்படைவகுப்பிலுள்ள தலைவராயிருந்த பகைவரைக்கொன்று வீரசொர்க்கத்தை அடைந்து அங்குள்ள பயன்களைத்துய்க்கும்படியாக இறந்தாரென்கிற கீர்த்திபொருந்திய வார்த்தையை உலகத்தார்சொல்ல - செந்தாமரைமேலிருக்குஞ் ஸ்ரீதேவியையொத்த திலகவதியார் கேள்விப்பட்டார்.—(எ-று) தம்முடைய கடன்கழித்தலாவது-வில் லுழவராக அமர்ந்து அரசனிடத்திற்பட்ட சோற்றுக்கடனைத் தீர்க்க அமர்க்களத்தில் உயிரைவிடுதல். பகை-ஆகுபெயர். (௬௰௧)

எந்தையுமெம்மனையுமவர்க்கெனைக்கொடுக்கவிசைந்தார்கள் *
அந்தமுறையாலவர்க்கேயுரியதுதானிதவிது ... .*
விந்தவுயிரவருயிரோடிசைவிப்பனெனத்துணிய .... *
வந்தவர்தம்மடியிணைமேன்மருணீக்கியார்விழுந்தார் .... *

(இதன்பொருள்.)

என்தகப்பனாரும் தாயாரும் அவர்க்கு என்னைமணஞ்செய்துகொடுக்கச் சம்மதித்திருந்தார்கள்-அவர்களுடைய கோட்பாட்டின் முறைப்படி இந்தவுயிரானது அவருக்கேசொந்தமாயிருக்கிறபடியால் இதைக்கலிப்பகையார் உயிரோடு சேர்த்துவிடுகிறேனென்று சாகத்துணிந்தார்-அப்போது மருள்நீக்கியார்வந்து திலகவதியார் இரண்டுபாதங்களின்மேலும் விழுந்து விநயமுற்றார்.—(எ-று) மாதர்களுக்குக் கணவருடைய பெயரை வெளியிட்டுச்சொல்வது மரியாதை அன்றென்பதுதோன்ற- கலிப்பகையாரென்னுமல் இப்பாட்டில் மூன்றிடத்தும் அவர் என்றார். தாய்தந்தைகள் நியாமகப்படிசெய்வதே தெ

யிவமணமாதலாலும், ஒருவனைப்புருஷனாகநினைத்து அவன்கிடையாதபோது மற்றொருவனைக் கலியாணஞ்செய்துகொள்ளுதல்-காந்தருவவிவாகத்திலும் தகுதியல்லாமையாலும், இத்தவுயிரவர்க்கேயுரியதென்றார். .(௩௨)

அந்நிலையின் மிகப்புலம்பியன்னையுமத்தனுமகன்ற .... .. *
பின்னையநானுமைவணங்கப்பெறுதலினுலுயிர்தரித்தே .... *
னென்னையினித்தனிக்கைவிட்டேகுவீராணில்யானு .... .. *
முன்னமுயிர்நீப்பனெனமொழிந்திடரினழுந்தினார். .... *

(இதன்பொருள்.)

மருள்நீக்கியார் திலகவதியார்காலிலே விழுந்துகிடக்கும் நிலையிலேமிகவும்புலம்பித்தாய்தகப்பன்மாரிறந்தும் அவர்களாக உம்மைப்பாவித்துப் பூசிக்கலாமென்றன்றோ பிராணனைவைத்துக்கொண்டிருக்கிறேன் - என்னை ஒன்றியாகக் கைவிட்டு இறப்பீராயின் - நான் உமக்குமுன்னமே உயிரைவிடுகிறேனென்றுசொல்லித் துக்கத்தையடைந்தார்.—(எ-று) (௩௩)

தம்பியாருளராகவேண்டுமெனவைத்ததயா .... *
வும்பருலகணையவுறாநிலைவிலக்கவுயிர்தாங்கி .... *
யம்பொன்மணிநூலுங்காதனைத்துயிர்க்குமருடாங்கி .... *
யிம்பர்மனைத்தவம்புரிந்துதிலகவதியாரிருந்தார் ... . *

(இதன்பொருள்)

மருள்நீக்கியார்சொன்னவுடனே திலகவதியாரானவர் தம்முடைய தம்பியார் உயிரோடிருக்கவேண்டுமென்று அவர்மேல் வைத்திருக்கும் அன்பானது ஆவியைத்துறந்து சொர்க்கத்துக்குப்போக எண்ணங்கொண்ட உறுதிப்பாட்டை விலக்கியபடியால்-உயிரைத்தாங்கி வேறொருவரையுங் கல்யாணஞ் செய்துகொள்ளாமல் எல்லாவுயிர்களிடத்தும் அன்புவைத்து வீட்டிலேயே யிருந்து தவஞ்செய்துகொண்டு இருந்தார். (எ-று) அம்பொன்மணிநூல்-மாங்கிலியசூத்திரம். மணி- இவ்விடத்தில்தாலியை உணர்த்திற்று. எல்லாவுயிரிடத்தும் அன்புவைத்தல் துறவறத்திற்கு உரியதாதலாற் சொல்லப்பட்டது. இம்பர்- இவ்விடம். உயிரடையவேண்டிய பயன்களை வெறுத்தமைபற்றி- உயிர்தாங்கியென்றார். (௩௪)

மாசின்மனத்துயரொழியமருணீக்கியார்நிரம்பித் .... *
தேசநெறிநிலையாமைகண்டறங்கள்செய்வாராய்க் .... *

காசினிமேற்புகழ்விளங்கநிதியளித்துக்கருணையினு .. .... *
லாசிலறச்சாலைகளுந்தண்ணீர்ப்பந்தருமமைப்பார் ..... *

(இதன்பொருள்)

மருள்நீக்கியார் தமது சகோதரியார் உயிரோடிருக்கிறு ரென்கிற காரணத்தால் களங்கமில்லாத மனதில்நின்றும் துக்கமொழியக் களிப்புற்றவராய் இவ்வுலகத்தில் தேகம் நிலையாமை சுபாவமென்று அறிந்துதருமத்தைச்செய்ய விரும்பி உலகத்தில்மேன்மையாகிய புகழுண்டாக அன்புடனே திரவியங்களைச் செலவழித்து வழுவில்லாத தர்மசாலைகளையும் தண்ணீர்பந்தலையும் ஏற்படுத்தினார்.—(எ-று) அறச்சாலை-அன்னசத்திர முதலானவை. (௩௫)

காவளர்த்துங்குளந்தொட்டுங்கடப்பாடுவழுவாமன் .. .... *
மேவினர்க்குவேண்டுவனமகிழ்ந்தளித்தும்விருந்தளித்து . *
நாவலர்க்குவளம்பெருகநல்கியுநானிலத்துள்ளோர் ..... *
யாவருக்குந்தவிராதவீகைவினைத்துறைநின்றார் .... .. *

(இதன்பொருள்.)

வெயிலில் அடிபட்டுவருவோர் விடாயாற நிழல்கொடுக்கும் தோப்புக்களைவைத்தும், நீர்குடித்தற்கும்முழுகுகிறதற்கும்தகுதியாகக்குளங்களைவெட்டியும், முறைதவறாமல் தம்மை அடைந்தவர்களுக்கு அவர்கள் விரும்பினவைகளை அன்போடு கொடுத்தும், வந்தவிருந்தினரை ஆதரித்தும், புலவர்களுக்கு வளமுண்டாகப் பொருளை மிகுதியாகக்கொடுத்தும், நால்வகைப்பட்ட பூமியிலுள்ள யாவர்க்கும் இல்லையென்றுசொல்லாமற் கொடுக்கிற கொடைத்தொழிலையே தமக்குரியதாகப்பெற்றிருந்தார்.—(எ-று) நால்வகைநிலம்-குறிஞ்சி-முல்லை-மருதம்-நெய்தல் ஆம். கடப்பாடுவழுவாமலிருத்தல்- கட்குடித்தல் உயிர்களைவதைத்தல் முதலியவைகளாம். (௩௬)

நில்லாதவுலகியல்புகண்டுநிலையாவாழ்க்கை... .... *
யல்லேனென்றறத்துறந்துசமயங்களானவற்றி ....*
னல்லாறுதெரிந்துணரநம்பாருளாமையினுற் ... . *
கொல்லாமைமறைந்துறையுமமண்சமயங்குறுகினார் .. ... *

(இதன்பொருள்.)

இவ்வுலகத்தில் ஒருபொருளும் நிலையாயிராதென்கிற இயல்பை அறிந்து ஸ்திரமாகாத இல்வாழ்க்கைக்கு நான் உரியேன்,

அல்லவென்று எல்லாவற்றையும் ஒழித்துவிட்டுப் பலவகைப் பட்ட சமயங்களில் நல்லசமயமிதுதானென்று அறிந்துகொள்ளும்படி பரமசிவன் அனுக்கிரகஞ்செய்யாமையால்- தாங்கள் செய்கின்ற பலதீமைகளையும் மறைக்கும்பொருட்டுக் கொல்லாவிரதமென்கிற ஒரு நல்லதொழிலையே மேற்போட்டுக் கொண்டு அதனிடமாகமறைந்து வாழ்கின்ற சைனசமயத்தில் பிரவேசித்தார்.—(எ-று) (௩௭)

பாடலிபுத்திரமென் னும்பதிபுகுந்துசமண்பள்ளி .. ..*
மாடணைந்தார்வல்லமணர்மருங்கணைந்துமற்றவர்க்கு .... *
வீடறியுநெறியிதுவேயெனமெய்போற்றங்களுடன் .... *
கூடவருமுணர்வுகொளக்குறிபலவுங்கொளுவினார். .. ... *

(இதன்பொருள்.)

மருள்நீக்கியார் பாடலிபுத்திரமென்கிற நகரத்திற்சென்று சைனர்களுடைய கோயிலை அடைந்தார்-வலியசமணர்கள் அவரிடத்துக்குவந்து மோட்சத்தை அடைகிறதற்குத் தகுந்தவழி தங்கள்சமயமேயென்று தங்களோடுசேரும்படி எண்ணங்கொள்ள-அவர்கள் நூலில்சொல்லியிருக்கின்ற வஞ்சனையானசில வுத்திகளைக்காண்பித்தார்கள்.—(எ-று) குறி-இங்கு உள் நுழைந்து நோக்கும்போது வீணாய் வெளிக்குமாத்திரம் உயர்வாகித் தோன்றுகின்ற வுத்திகளென்றுகொள்க. (௩௮)

அங்கவருமமண்சமயத்தருங்கலைநூலானவெலாம். .... *
பொங்குமுணர்வுறப்பயின்றேயந்நெறியிற்புலன்சிறப்பத். .*
துங்கமுழுவுடற்சமணர்சூழ்ந்துவருவாரவர்க்குத் ... . *
தங்களின்மேலாந்தருமசேனரெனும்பேர்கொடுத்தார் ....*

(இதன்பொருள்)

மருள்நீக்கியாரும் சைனமதத்திலுள்ள அரிய நூல்களையெல்லாம் அதிக ஊக்கத்தோடு கற்று-அந்தவிஷயத்தில் சிறந்தவராகத்தோன்ற-பரியதேகத்தையுடைய சமணர்கள் இவரை எப்பொழுதுஞ் சூழ்ந்துகொண்டவர்களாகித் தங்களுக்கெல்லாம் பெரியவராயிருக்கும்படி தருமசேனரென்கிற நாமதேயத்தையுங் கொடுத்தார்கள்.—(எ-று) துங்கமுழுவுடற்சமணர்கள்-ஞானத்தாலன்றித் தேகத்தால்மாத்திரம் உயர்வை அடைந்த சமணர்கள். சூழ்ந்துவருவாரென்றது-அப்பர்சுவாமிகளைத் தங்கள்மதாசாரியராக எண்ணிமதநூல்களைப்படிக்கஎண்ணிச் சூழ்ந்தவரா. (௩௯)

அத்துறையின்மீக்கூருமமைதியினுலகவிடத்தித் .. .. ..*
திகதநெறிபறியாததேரரையும்வாதின்க . ...*
ளுப்த்தவுணர்விலில்வெல்றேயுலகின்கணுளியுடைய ....*
வித்தகராயமண்சமயத்தலைமையினின்மேம்பட்டார் . ... .*

(இதன்பொருள்)

அந்தச்சைனநூல்களை மிகவும் படித்திருக்குந்திறத்தால் இவ்வுலகத்தில் உண்மையானவழியை யறிந்துகொள்ளமாட்டாத பவுத்தர்களையும் வாதுகொண்டு தம்முடைய திறப்பட்ட வுணர்ச்சியினுலே'ஜயித்துக்கீர்த்திபொருந்தினவராய்ச்சைனமதத்தில்மிகவுமேன்மையை அடைந்தார்.—(எ-று) (சஙி)

அந்நெறியின்மிக்கர்ரவவொர்ழுகவான்றதவச் .....*
செந்நெறியின்வைகுந்திலகவதியார்தாமுந் .. ..*
தொன்னெறியின்சுற்றத்தொடர்பொழியத்தூயசி
நன்னெறியேசேர்வதற்குநாதனருணண்ணுவார்(வ

(இதன்பொருள்)

மருள்நீக்கியார் அந்தமார்க்கத்தில் சிறந்தவராய் அந்நடையில் ஒழுகுகிறவராயிருக்க-உயர்வுபெற்றதவத்தையுடையசைவசமயததில் இருக்கின்ற திலகவதியாரானவர் தொன்றுதொட்டுச் சம்பந்தங்கொண்டிருக்கின்ற பந்துக்களுடைய தொடர்ச்சியானதுநீங்க-சிவபதத்தை அடையும்படி பரமசிவனுடைய அனுக்கிரகத்தையடைய விரும்பினூர்.—(எ-று) (சஎ)

போாதபரசமயப்பிணிப்பொழியப்பிஞ்சகன்பா .... . .*
லாராதவன்புபெறவாதரித்தவம்மடவார் . .. . *
நீரார்கெடிலவடநீள்கரையினீடுபெருஞ் .. .. *
சீரார்திருவதிகைவீரட்டானஞ்சேர்ந்தார் .... *

(இதன்பொருள்.)

பரசமயங்களினிடத்தில் நம்பிக்கையில்லாமல் சுவாமியினிடத்தில் குறைவில்லாததும் எப்போதும் நீங்காததுமாக அன்பினைவைக்க விரும்பிய அந்தத்திலகவதியார் நீர் ஓடிவருகின்ற கெடிலமென்னும் நதியின் நீளமாகிய வடபுறக்கரையில் நாட்பட்ட பெரும்புகழ்பெற்ற திருவதிகைவீரட்டானத்தைச்சேர்ந்தார்.—(எ-று) திருவதிகை-கைலாசபதி திரிபுரத்தையெரித்த இடமாதலால்-வீரட்டானமாயிற்று. (சஅ)

சென்றுதிருவீரட்டானத்திருந்தசெம்பவளக் .. .. *
குன்றையடிபணிந்துகோதில்சிவசின்ன .... *
மன்றுமுதற்றாங்கிப்பார்வழுத்தத்தங்கையாற் .... *
றுன்றுதிருப்பணிகள்செய்யத்தொடங்கினார் .. .. *

(இதன்பொருள்)

திருவீரட்டானமென்னும் ஸ்தலத்தை அடைந்து அங்குவீற்றிருந்த செவ்விய பவளமலைபோல் தோன்றுகின்ற பரமசிவனை வந்தனஞ்செய்து குற்றமற்ற சிவசின்னங்களை அன்றுமுதலாகத்தாங்கி அன்புபெருகத் தம்முடையகையாலேயே அலங்காரமாகத் திருப்பணிகளைச்செய்கிறதற்கு ஆரம்பித்தார். (எ-று)

(வேறு.)

புலர்வதன்முன்றிருவலகுபணிமாறிப்புனிறகன்ற .. .... *
நலமலியான்சாணத்தா னன்குதிருமெழுக்கிட்டு .... *
மலர்கொய்துகொடுவந்துமாலைகளுந்தொடுத்தமைத்துப் .. *
பலர்புகழும்பண்பினாற்றிருப்பணிகள்பலசெய்தார் .... .. *

(இதன்பொருள்)

பொழுதுவிடிகிறதற்குமுன்னே கோயிலினுள்ளிடமும் புறமும் திருவலகிட்டு- இளமைபோய்ப் பருவம்வந்த பசுவினுடைய நல்ல சாணத்தால் நன்றாக மெழுகி- நல்லபுஷ்பங்களைப் பறித்துக்கொண்டுவந்து மாலைகள்தொடுத்துச்சாத்திப் பலரும் புகழத்தக்க பண்பினையுடைய பலவகைப்பட்ட திருப்பணிகளையுஞ்செய்தார் திலகவதியார்.—(எ-று) திருவலகு-குப்பையைச்சீக்கிறதற்குக் கருவியாகியசீழ்கம்புல்லினதுகற்றை(சச)

நாளுமிகும்பணிசெய்துகுறைத்தடையுநன்னாளிற் .. .. *
கேளுறுமன்புறவொழுகுங்கேண்மையினார்பின்பிறந்தார் .. *
கோளுறுதீவினைமுந்தப்பரசமயக்குறித்ததற்கு ..... *
மூளுமனக்கவலையினான்முற்றவருந்தயருழந்து. .... .. *

(இதன்பொருள்.)

உரியவர்கள் சுகமுற்றிருக்க விருப்பங்கொண்ட திலகவதியார் நாள்தோறும் இவ்வாறாக மிகுந்தபணிவிடைகளைச்செய்து நம்முடைய பாவங்கள் ஒழியவேண்டுமென்கிற குறைசொல்லிக் கொண்டுவரும்நாளிலே உறவினரைக்குறித்துப்பார்க்கும்போது தம்பியாராயிருக்கின்ற மருள்நீக்கியார் வலிபெற்ற தமது தீவினையை அனுபவிக்கக் காலம் நேரிட்டபடியினாலே சைனமதத்திற்புகுந்ததைக்குறித்து மனோதுக்கம் அதிகப்பட்டுரு

வரும் இதுவரைக்கும் அநுபவியாத துக்கத்தில் மூழ்கினவர் கி.—(எ-று) (சஉ)

தூண்டுதவவிளக்கனையார்சுடரொளியைத்தொழுதெழுதலனை..*
யாண்டருணீராகிலடியேன்பின்வந்தவனை .. ..*
யீண்டுவினைப்பரசமயக்குழிநின்றுமெடுத்தருள . ....*
வேண்டுமெனப்பலமுறையும்விண்ணப்பஞ்செய்தனரால்.*

(இதன்பொருள்.)

இடைவிடாமல் முயல்கின்ற தவத்தினையுடையவிளக்கினையொத்த திலகவதியார் பரமசிவனை வணங்கி அடியேனை நீரோ ஆட்கொள்பவரொன்பது உண்மையாயின்-என்தம்பியைத் தீவினையேமிகுதியாகச்செய்கின்ற சைனசமயமாகிய படுகுழியினின்றும்எடுத்துக்காப்பாற்றியருளவேண்டும் என்று அநேகமுறை விண்ணப்பஞ்செய்துகொண்டார்.—(எ-று) விண்ணப்பம்-அறிவித்தல். (சங)

தவமென்றுபாயிடுக்கித்தலைபறித்துநின்றுண்ணு .... ..*
மவமொன்றுநெறிவீழ்வான்விழாமையருளுமெனச் ....*
சிவமொன்றுநெறிநின்றதிலகவதியார்பரவப் ....*
பவமொன்றும்வினைதீர்ப்பார்திருவுள்ளம்பற்றினார் ....*.

(இதன்பொருள்)

தவமென்றுசொல்லிப் பாயையிடுக்கித் தலைமயிரையெல்லாம் பறித்தெறிந்துவிட்டு நின்றுகொண்டே சோற்றையுண்கின்ற கெட்ட மார்க்கத்தில் ஆசையோடு இன்னும் விழுந்துகிடக்காமல் தேவரீரது சமயத்துக்குவரும்படி யருள்செய்யுமென்று சிவத்தையடையத்தக்க ஞானநெறியில் நிற்கின்ற திலகவதியாரானவர் பரவினபடியால பிறப்பினையுண்டாக்கும் தீவினையை நீக்கியருளும் பரமசிவன் இதனைத்திருவுள்ளங்கொண்டார்.—(எ-று) திருவுள்ளங்கொள்ளல்-நினைத்தல். (சஎ)

மன்னுதபோதனியார்க்குக்கனவின்கண்மழவிடையா .. .*
ருன்னுடையமனக்கவலையொழிநீயுன்னுடன்பிறந்தான் ..*
முன்னமேமுனியாகியெனையடையத்தவமுயன்று .. ....*
ளன்னவனையினிச்சூலைமடுத்தாள்வனெனவருளி ... .*

(இதன்பொருள்.)

இளமைபொருந்திய ரிஷபவாகனத்தையுடைய சுவாமி நிலைபெற்ற தவமே தனமாகப்பெற்ற திலகவதியார்க்குச் சொப்பனத்தில்வந்து உன்னுடைய மனத்திலிருக்குந் துன்பத்தை

யொழிப்பாயாக-உன்னோடுபிறந்தவன் முற்பிறப்பிலேயே ஒருமுனியாயிருந்து நம்மையடையும்படி தவஞ்செய்துகொண்டிருந்தான் ஆகையால் யினிமேல் சூலைவியாதியை உண்டாக்கி அவனை ஆட்கொள்வோமென்று கட்டளையிட்டு.—(எ-று) தபோதனையென்னும் வடமொழி-தபோதனியென்றாயிற்று. சூலம்-குசாதிகணத்தாற் சூலையென்றுவந்தது. (௪௮)

பண்டுதவம்புரிதவத்துப்பழுதினளவிறைவழுவுந் .... .. *
தொண்டரையாளத்தொடங்குஞ்சூலைவேதனைதன்னைக் .. *
கண்டருநெற்றியாரருளக்கடுங்கனல்போலடுங்கொடிய .... *
மண்டுபெருஞ்சூலையவர்வயிற்றினிடைப்புக்கதால் .... .. *

(இதன்பொருள்.)

நெற்றியிற்கண்ணையுடைய பரமசிவன் பண்டைக்காலத்திற்செய்ததவத்தில் கொஞ்சம் பழுதுண்டாயிருந்தபடியால் அன்னியமதத்தில் சிலநாள்வரைக்கும் பிரவேசித்திருக்கின்ற அடியாரை மறுபடியும் ஆளத்தொடங்கிச் சூலைவியாதியைக்கொடுக்கக்கொடியநெருப்புப்போலவெதுப்புந்தன்மையை உடையதாய்க்கொடுமையில் நிறைவுற்ற அந்தநோயானது மருள்நீக்கியாருடைய வயிற்றிற்போய்ப் புகுந்தது.— எ-று) வயிற்றினீபுக்கது-இலட்சணை. இறையளவுபழுதின் எனக்கூட்டிக் கொஞ்சம்பழுதாகவென் றுரைசெய்க. (௪௯)

அடைவிலமண்புரிதருமசேனர்வயிற்றடையுமது .... .. *
வடவனலுங்கொடுவிடமும்வச்சிரமும்பிறவுமாம் .... .. *
கொடியவெலாமொன்றாகுமெனக்குடரினகங்குடையப் .. *
படருழந்துநடுங்கியமண்பாழியறையிடைவிழுந்தார். .. *

(இதன்பொருள்.)

பெருமையில்லாத சைனசமயத்தை விரும்பிய தருமசேனருடையவயிற்றில் அடைந்த அந்தவியாதியானது வடவாமுகாக்கினியும் கொடியவிடமும் வச்சிராயுதமும் இன்னுமுள்ளகொடியபொருள்களெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்ததுஎன்றுசொல்லும்படிகுடலினுள்ளிடமெல்லாங் குடைந்துவிட்டாற்போலும் உபத்திரவத்தைச்செய்ய வருத்தமிகுதியும்பட்டுநடுக்கமுற்று அமணருடையமடத்தின் அறையில் விழுந்துவிட்டார்.—(எ-று) அமணர்-ஈறுகுறைந்துநின்றது. (௫௰)

அச்சமயத்திடைத்தாமுன்னதிகரித்தமைத்துவரும் ... *
விச்சைகளாற்றடுத்திடவுமேன்மேலுமிகமுடுகி. .. .... *

யுச்சமுறவேதனைநோயோங்கியெழலாங்கவர்தா .... *
நச்சரவின்விடந்தலைக்கொண்டெனமயங்கிநிலையுற்றார் .. *

(இதன்பொருள்)

அந்தச்சமயத்தில் தாம் அனேகமாக அடைந்திருக்கும் மந்திர
வித்தைகளால் தடுக்கவும்போகாமல் வரவர அதிகப்பட்டுத் து
ன்பத்துக்குக்காரணமாகிய சூலைவியாதியேமேற்கொண்டு எ
ழும்பத் தருமசேனர் கொடிய பாம்பின்விஷந் தலைமண்டைக்
கொண்டாற்போல மயக்கங்கொண்டு மயங்கி மூர்ச்சையடை
ந்தார்.—(எ-று) நஞ்சு-கொடுமை. (௫௧)

அவர்நிலைமைகண்டதற்பினமண்கையர்பலரீண்டிக் .... *
கவர்கின்றவிடம்போன்முன்கண்டறியாக்கொடுஞ்சூலை .. *
யிவர்தமக்குவந்ததினியாதுசெயலென்றழிந்தார் .... .. *
தவமென்றுவினைபெருக்கிச்சார்பல்லாநெறிசார்வார் . .. *

(இதன்பொருள்.)

தருமசேனர்க்குஇப்படிப்பட்ட நிலையுண்டானதைப்பார்த்து
த்தவமென்றுபாவத்தைப்பெருகச்செய்து உறுதியல்லாத மா
ர்க்கத்தை உறுதியாகநினைத்துச் சேரும் சிறிய ஒழுக்கத்தையு
டைய சமணர்கள் பல்லோராகக்கூடிவந்து உயிரைவாங்குகின்
றவிஷம்போன்ற எப்போதும்பார்த்தறியாத கொடுமைபொ
ருந்திய இச்சூலைவியாதியானது இவருக்குவந்தது இதனைப்ப
ரிகரிக்கிறதற்கு என்னசெய்யவேண்டியதென்று துன்பங்கொ
ண்டார்கள்.—(எ-று) (௫௨)

புண்டலைவன்முருட்டமணர்புலர்ந்துசெயலறியாது .... *
குண்டிகைநீர்மந்திரித்துக்குடிப்பித்துந்தணியாமை .... *
கண்டுமிகப்பீலிகொடுகாலளவுந்தடவிடவும் ... ...*
பண்டையினும்நோவுமிகப்பரிபவத்தாலிடருழந்தார் ....*

(இதன்பொருள்)

காயங்கொண்ட தலையையும், வலியமுருட்டுத்தனத்தையும் உ
டைய சமணர்கள் தீர்க்குந்திறத்தைத் தெரிந்துகொள்ள மாட்
டாமல்வாடிக் கமண்டலத்திலுள்ள நீரைமந்திரித்துக் குடிக்கச்
செய்தும், தணியாமலிருக்கப்பார்த்து மயிற்பீலிகொண்டு கா
ல்வரைக்குந்தடவவும்-அதற்கு முற்பொழுதிலிருந்ததைப்பார்
க்கிலும்நோயானது அதிகப்பட-அதைப் பொறுக்கமாட்டா
மையால்துன்பப்பட்டார்.—(எ-று) (௫௩)

நாவரதபுகழ்த்தருமசேனர்க்குவந்தபிணி .... *
யோவாதுநின்றிடலுமொழியாமையுணர்ந்தாரா .. .... *
யாவாநாமென்செய்கோமென்றழிந்தமனத்தினராய்ப் ..... *
போவார்களிதுநம்மாற்போக்கரிதாமெனப்புகன்று .... *

(இதன்பொருள்.)

குறைவில்லாத புகழையுடைய தருமசேனர்க்குவந்த வியாதியானது ஒழியாமல் நின்று வருத்தவும், போகாமலிருப்பதை உணர்ந்துஐயோ-நாமென்னசெய்வோம் என்று மனதுகலங்கினவர்களாகி நம்மாற்போக்கடிக்கக் கூடாததா யிருக்கிறதென்று இவனைவிட்டுப் போவார்களாயினார்கள் (எ-று)(௫௪)

குண்டர்களுங்கைவிட்டார்கொடுஞ்சூலைக்கொண்டு. . . *
மண்டிமிகமேன்மேலுமுடுகுதலால்மதிமயங்கிப் .... . *
பண்டையுறவுணர்ந்தார்க்குத்திலகவதியாரருளாக் .... *
கொண்டவர்பாலாட்டுவான்றனைவிட்டார்குறிப்புணர்த்த .. *

(இதன்பொருள்)

சமணர்களும் இந்தநோய்க்குப் பரிகாரம் ஒன்றுமில்லையென்று கைவிட்டார்கள்-சூலைவியாதியானது வரவர அதிகப்பட்டு உயர்தலால்- மதியானது மயங்கித் திலகவதியார் சகோதரியாராயிருக்கிறாரென்கிற உறவையும் அப்போது தான் நினைத்தவராய்த் தமக்கு உதவிசெய்யவேண்டுமென்று சோறுசமைத்திடுகின்ற ஒருவனை அவரிடத்துக்குத்தாம்அடைந்திருக்கிறவியாதியைத் தெரிவிக்க அனுப்புவித்தார்.—(எ-று) (௫௫)

ஆங்கவன்போய்த்திருவதிகைதனையடையவருந்தவத்தார். . *
பூங்கமழ்நந்தனவனத்தின்புறம்பணையக்கண்டிறைஞ்சி .... *
யோங்கியநுமக்கிளையாரேவலினால்வந்ததெனத் .... *
தீங்குளவோவெனவினவமற்றவனுஞ்செப்புவான் .. .. *

(இதன்பொருள்)

தருமசேனரால் அனுப்பப்பட்டவன் திருவதிகைக்குப்போய் அரியதவத்தையுடைய திலகவதியார் மலர்கள்மணக்கின்ற நந்தனவனத்தின் புறத்திற்போகையில் அவரைக்கண்டு வணங்கி-உமது சகோதரர்கட்டளையால் இவ்விடத்துக்குவந்தேனென்று சொல்ல-திலகவதியார் தம்பியார்க்கு ஏதாவது தீங்குண்டாயிருக்கிறதோவென்று கேட்க அவன்சொல்லத்தொடங்குவான். (எ-று) (௫௬)

சொல்லாதசூலைநோய்குடர்முடக்கித்தீராமை .... *
யெல்லாருங்கைவிட்டாரிதுசெயலென்முன்பிறந்த .. .. *
நல்லாள்பாற்சென்றியம்பிநானுய்யும்படிகேட்டிங் .... *
கல்லாகும்பொழுதணைவாயென்றொன்றறிவித்தான் .... *

(இதன்பொருள்)

மனிதரைக் கொல்லாமற்கொல்கின்ற சூலைவியாதியானது ஔ ஷதபரிகாரஞ் செய்தாலும் குடல்களையெல்லாம் இடமாறச் செய்து வருத்தித் தீராதபடியால் சமணர் எல்லாருங் கைவிட் டார்கள்-இதுதான் அவர்க்குண்டாயிருக்கின்ற தீங்கு-ஆதலால் அவர் எனக்கு முன்பிறந்த சகோதரியாரிடத்துக்குப் போய் நான் பிழைக்கும்படிசெய்யவேண்டிய உபாயத்தைக் கேட்டு க்கொண்டு இராப்பொழுதில் இவ்விடத்துக்கு வந்துசேரொன் று எனக்குப் பணியிட்டாரென்றுசொன்னான்.—(எ-று)(௬எ)

என்றவன்முன்கூறுதலும்யானங்குன்னுடன்போந்து .... *
நன்றறியாவமண்பள்ளிநண்ணுகிலெனெனுமாற்றஞ் .... *
சென்றவனுக்குரையென்றுதிலகவதியார்மொழிய .... *
வன்றவனுமீண்டுபோய்ப்புகுந்தபடியவர்க்குரைத்தான் .. *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் அவன்சொன்னதும், திலகவதியார் நான் உ ன்னோடு அவ்விடத்துக்குவந்து நல்லமார்க்கத்தை யறிந்து கொள்ளாத சமணர்களுடைய இருப்பிடத்தை அடையமாட் டேன் ஆதலால் இவ்வார்த்தையை என் தம்பியினிடத்திற்சென் றுசொல்லென்றுகூற-அவனுந்திரும்பிப்போய்நடந்தவர்த்த மானத்தைத் தருமசேனர்க்கு அறிவித்தான்.—(எ-று)(௬அ)

அவ்வார்த்தைகேட்டலுமேயயர்வெய்தியிதற்கினியா .... *
னெவ்வாறுசெய்வனெனவீசரருள்கூடுதலா .... *
லெவ்வாவிப்புன்சமயத்தொழியாவித்துயரொழியச் .... *
செவ்வாறுசேர்திலகவதியார்தாள்சேர்வனென . ... *

(இதன்பொருள்)

சகோதரியார்சொல்லிய அவ்வார்த்தையைக் கேட்டதும் து ன்பம் அடைந்து இதற்கு இனிமேல் நான் என்னசெய்வேன் என்று விசனப்பட்டுக்கொண்டிருக்கும்போது பரமசிவனரு டைய கிருபையானது அவர்க்குக்கைகூடியபடியால்-தீயவத் தில் ஒன்றுந்தனக்கு ஒப்பாயிராத இந்த அற்பமான சமயத்தி லிருந்தும் நீங்காத இந்தநோய்போகும்படி செம்மையுற்ற

சைவசமயவழியில் நடக்கின்ற திலகவதியாரது பாதங்களை யடையவேயென்று எண்ணங்கொண்டவராய்.— எ-று) (௫௯)

எடுத்தமனக்கருத்துய்யவெழுந்தலாலெழுமுயர்சி .... *
மடுத்தலுமேயயர்வொழிந்ததிருவதிகையணைவதனுக் .. *
கடுத்தழவுட்பாயொழியவுறியுறுகுண்டிகையொழியத் .. *
தொடுத்தபீலியுமொழியப்போவதற்குத்துணிந்தெழுந்தார் *

(இதன்பொருள்.)

தாம் மனதில்நினைந்த கருத்தானது நிறைவேறும்பொருட்டு தூண்டியபடியால் அவ்விடத்தில்நின்றும் புறப்படுவதற்குப் பிரயத்தினம் உண்டானவுடனே தமக்கு உண்டாயிருந்த துன்பம் ஒருவாறு நீங்கத் திருவதிகையை அடைவதற்கு பிராயாசந் தோடு உடுத்துக்கொண்டிருக்கிறபாயும், கயிற்றினாற்செய்யப்பட்ட உறியில்வைத்திருக்கிற கமண்டலமும்; சேர்த்துக்கட்டியிருக்கிற மயிற்பீலியும் நீக்கிவிட்டுப் போவதற்குத் துணிவு கொண்டு எழுந்தார்.—(எ-று) (௬௰)

பொய்தருமாறுள்ளத்துப்புன்சமணரிடங்கழிந்து .. .... *
மெய்தருவானெறியடைவார்வெண்புடைவைமெய்சூழ்ந்து .. *
கைதருவார்தமையூன்றிக்காணுமேயிரவின்கட் .... .. *
செய்தவமாதவர்வாழுந்திருவதிகைசென்றடைவார். ..... *

(இதன்பொருள்.)

பொய்யான்நடத்தையைக்கொண்ட மயக்கமுள்ளமனதையுடைய சமணர்களிடத்தில் நின்றும்நீங்கி மெய்மையாய் உயர்ந்தசைவ சமயவழியை அடையவிரும்பினவராய் வெண்மையாகிய வஸ்திரத்தால் மறைத்துக்கொண்டு தமக்குப் பற்றுக்கோடாகக் கை கொடுத்துக்கொண்டு வருகின்றவர்களை ஆதாரவாகப்பற்றி ஒருவர்க்கும் புலப்படாமல் இராவில் ஒழுங்காகிய தவத்தையுடையமாதவர்கள் வாழ்கின்ற திருவதிகையை அடைந்தார்.— (எ-று) கைகொடுப்போர் மிகவும் அன்பினராயிருந்தபடியால்-தருமசேனருடைய செய்கையைப் புறத்தில் வெளியிடாதிருந்தாரென்க. (௬௧)

சூலவியிற்றகங்கனலுஞ்சூலைநோயுடன்றொடரக் .... *
சூலவியெழும்பெருவிருப்புக்கொண்டணையக்குலவரைபோன் *
றிலகுமணிமதிற்சோதியெதிர்கொடிருவதிகையினித் .... *
திலகவதியாரிருந்ததிருமடத்தைச்சென்றணைந்தார் ... .. *

(இதன்பொருள்)

தருமசேனர் வயிற்றினுள்ளேயிருந்து அவ்விடமுழுமையுங் குத்திநெருப்புப்போற்சுடுகின்ற சூலைவியாதியும் ஒழியாமல்தொடர-உள்ளத்திற் பொங்கியெழுந்த மிகுந்தவிருப்பத்தோடுபுறப்பட்டுச்சிரேஷ்டம்பொருந்தியமலைகளையொத்துவிளங்குகின்ற மணிகளையிழைத்த மதில்களின் பிரகாசமானது எதிரொதிராக வீசுகின்ற திருவதிகையில் திலகவதியார் இருந்தமடத்தை அடைந்தார்.—(எ-று) (சஉ)

வந்தணைந்து திலகவதியா ரடிமே லுறவணங்கி .... *
நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயனனையீ .... *
ரிந்தவுடல் கொடுஞ்சூலைக் கிடைந்தடைந்தே னினிமயங்கா ...*
துய்ந்துகரை யேறுநெறி யுரைத்தருளு மெனவுரைத்து .... *

(இதன்பொருள்.)

வந்துசேர்ந்தவுடனே திலகவதியாருடைய பாதங்களின்மேல் சிரசுதாழவணங்கி-நமது குலத்தார்செய்த நல்லதவத்தின்பயனேவந்து உருக்கொண்டதுபோலுஞ் சகோதரியாரே எனது வயிற்றில் தங்கிய கொடியசூலைவியாதியைச்சகிக்கமாட்டாமல் உம்மிடத்துக்குவந்தேன் இனிநான்வருத்தப்படாமல் பிழைத்துக்கடைத்தேறும்வழியைக்கட்டளையிட்டருளுமென்றுசொல்லி —(எ-று) (சங)

தாளிணைமேல் விழுந்தயருந் தம்பியார் தமைநோக்கி .... *
யாளுடைய தம்பெருமா னருணினைந்து கைதொழுது .... *
கோளில்பர சமயநெறிக் குழியில்விழுந் தறியாது .... .. *
மூளுமருந் துயருழந்தீ ரொழுந்திரீ ரெனமொழிந்தார் .... *

(இதன்பொருள்)

திலகவதியார் தமது இரண்டுபாதங்களிலும் விழுந்துவருந்துகின்ற தம்பியாரைப்பார்த்துத்தம்மையாட்கொண்ட பரமசிவனதுகிருபையை நினைத்துச்சுவாமியைக் கைகூப்பி வணங்கி அறியாமையால் உறுதியில்லாத பரசமயமாகிய படுகுழியில் விழுந்து யாரும் அடையாதபெருந்துன்பத்தை அனுபவிக்கின்ற சகோதரரே எழுந்திருமென்று கட்டளையிட்டார்.-(எ-று) பரமசிவனது அருளாவது-திலகவதியார் தமது தம்பியாரைக் குறித்துச் சுவாமியினிடத்தில் முறையிட்டபோது அவர்க்குச் சொப்பனத்தில் எழுந்தருளிச் சூலைவியாதியைக்கொடுத்துஉன்தம்பியை ஆட்கொள்வோமென்று கட்டளையிட்டருளியபிரகாரஞ் செய்ததாம். (சச)

மற்றவுரைகேட்டலுமேமருணீக்கியார்தாமு .... *
முற்றபிணியுடனடுங்கியெழுந்துதொழுவுயர்தவத்தோர் .. *
கற்றைவேணியரருளேகாரணமீதுகழலடைந்தோர் .... *
பற்றறுப்பார்தமைப்பணிந்துபணிசெய்வீரெனப்பணிந்தார் *

(இதன்பொருள்.)

அந்தமொழியைக்கேட்டவுடனே மருணீக்கியாரும் அப்போதும்வருத்தப்படுத்துகிற சூலைவியாதியுடனே நடுக்கங்கொண்டு எழுந்திருந்து கைகூப்பிவணங்க உயர்ந்த தவத்தையுடைய திலகவதியார்தம்பியாரே,அந்தச்சமயத்தைவிட்டு இங்கேவரஉமக்குப்புத்திகொடுத்தது பரமசிவனுடைய கிருபையேயாகும் ஆதலால் பாதத்தையடைந்தவர்களுடைய தீங்குகளைப் போக்குகின்ற சுவாமியையவணங்கித் திருத்தொண்டுசெய்வீரென்று கட்டளையிட்டார்.—(எ-று) (௬௫)

என்றபொழுதவரருளையெதிரேற்றுக்கொண்டிறைஞ்ச .... *
நின்றதபோதனியாருநின்மலன்பேரருணினைந்து .... .. *
சென்றுதிருவீரட்டம்புகுவதற்குத்திருக்கயிலை. .... *
குன்றுடையார்திருநீற்றையஞ்செழுத்தோதிக்கொடுத்தார். *

(இதன்பொருள்)

இங்ஙனம் சொன்னபோது அப்படிப்பட்ட அனுக்கிரகமான மொழியை ஏற்றுக்கொண்டு மருணீக்கியார்வணங்கிநிற்கத்திலகவதியாரும் பரமசிவனுடைய பெருமையாகிய கிருபையைத் தியானித்துப்போய்த்திருவீரட்டத்துள்பிரவேசிப்பதற்குத்திருக்கயிலையென்னுமலையை உடையசுவாமியின் விபூதியைப் பஞ்சாட்சரமந்திரத்தையோதிக்கொடுத்தார்.—(எ-று) (௬௬)

திருவாளன்றிருநீறுதிலகவதியாரளிப்பப் .... *
பெருவாழ்வுவந்ததெனப்பெருந்தகையார்பணிந்தேற்றங் .. *
குருவாரவணிந்துதமக்குற்றவிடத்துய்யுநெறி. .... *
தருவாராய்த்தம்முன்புவந்தாரைப்பின்வந்தார் .... *

(இதன்பொருள்.)

சகல சம்பத்துக்களுக்குங்காரணமாயிருக்கின்றபரமசிவனது திருநீற்றைத்திலகவதியார்கொடுக்கப் பெருமைபொருந்தியமருணீக்கியார் பெருவாழ்வு தமக்கு உண்டானதாக எண்ணி-வந்தனஞ்செய்து அதனைவாங்கி உடல்முழுதும் பிரகாசிக்கத்தரித்து ஆபத்துநேரிட்டபோது அதனிடத்துநின்றும் நீங்கிப் பி

ழைக்கும்வழியைக் கொடுக்கும்பொருட்டுத் தமக்கு முன்பிறந்திருக்கையிற திலகவதியார் முன்செல்ல அவர்பின்னாகத் தொடர்ந்தார்.—(எ-று) (௬௭)

நீறணிந்தா ரகத்திருளு நிறைகங்குற் புறத்திருளு .... *
மாறவருந் திருப்பள்ளி யெழுச்சியினின் மாதவஞ்செய் .... *
சேடியார் திருவலகுந் திருமெழுக்குந் தோண்டியுங்கொண் .. *
டாறணிந்தார் கோயிலினு ளடைந்தவரைக் கொடுபுக்கார் .. *

(இதன்பொருள்)

நீறுபூசிக்கொண்டவரது அகத்திலுள்ள அஞ்ஞானமென்னும் இருளும், நிறைந்த இராக்காலத்திருளும் மாறிப்போக - சுவாமியின் திருப்பள்ளியெழுச்சியில் பெருமைபொருந்திய தவஞ் செய்கின்ற பணிவுள்ள திலகவதியார் திருவலகையும் திருமெழுக்கிடுதற்குக்கருவியாகிய தோண்டியையும் எடுத்துக்கொண்டுகங்கையைத்தரித்த பரமசிவனது கோயிலினுள் மருள்நீக்கியாரை அழைத்துக்கொண்டுபோனார்.—(எ-று) (௬அ)

திரைக்கெடில்வீரட்டானத் திருந்தசெங்கனக, வரைச்சிலையார்
பெருங்கோயிறொழுது வலங்கொண்டிறைஞ்சித் .... *
தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து தம்பிரான்றிருவருளா, லுரைத்
தமிழ்மாலைகள்சாத்து முணர்வுபெறவுணர்ந்துரைப்பார் .. *

(இதன்பொருள்)

அலைகளையுடைய கெடிலநதியின் வடபுறத்திலிருக்கும் வீரட்டானமென்னும் ஸ்தலத்தில் வீற்றிருந்தருளிய மகாமேருவாகிய மலையை வில்லாகவுடையபரமசிவனது ஆலயத்தைத்தொழுது வலமாகவந்து வணங்கிப் பூமியில்விழுந்து ஆண்டவருடைய அநுக்கிரகத்தால்சீர்த்திபெற்ற தமிழ்ப்பாடல்களைப்பாடும்படி தெளிவுண்டாய்ச் சொல்லத்தொடங்கினார் —(எ-று)

(வேறு.)

நீற்றானிறைவாகியமேனியுடனிறையன்புறுசிந்தையினேசமிக,
மாற்றார்புரமாற்றியவேதியனைமருளும்பிணி மாயையறுத்திடு
வான், கூற்றாயினவாறுவிலக்ககிலீரெனநீடியகோதிறிருப்பதி
கம்; போற்றாலுலகேழின்வருந்துயரும்போமாறெதிர்நின்று
புகன்றனரால் .. .. *

(இதன்பொருள்)

திருநீற்றினால் நிறைவுபெற்ற வுடலத்தோடு நிறைந்த அன்புற்றமேன்மைபெற்றிருந்த நெஞ்சினிடமாக அவ்வன்புவளர உல

த்தார்க்குப் பகைசெய்கின்ற முப்புரத்தையும் எரித்த பரமசிவனைக்குறித்து- மயங்குகிறதற்கேதுவாயிருக்கின்ற மாயையின்வலியை அறுக்கும்பொருட்டும் பிற்காலத்தில் எழுலகிலுள்ளோரும் ஓதுதலால் அவர்களுக்குண்டாயிருந்த துன்பமும் போகும்பொருட்டும் (கூற்றாயினவாறு விலக்குகிலீர்) என்பதை முதலில் உடைய குற்றமற்ற பதிகத்தை அருளிச்செய்தார்.—(எ-று) மாயை-பிரபஞ்சத்தை உண்டாகுவது. (௭௰)

மன்னும்பதிகமதுபாடியபின் வயிறுற்றடுசூலைமறப்பிணிதான், ஒந்நின்றநிலைக்க ணகன்றிடலு மடியேனுயிரோடருடந்தனெனச், செந்நின்றபரம்பொருளானவர் தந்திருவாரருள்பெற்றசிறப்புடையோர், முன்னின்றதெருட்சிமருட்சியினுன்முதல்வன் கருணைக்கடல்மூழ்கினரே .. .. *

(இதன்பொருள்.)

நிலைபெற்ற அத்திருப்பதிகத்தைப் பாடியபின்பு வயிற்றினிடமாக அடைந்து வருத்துகின்ற கொடிதாகிய சூலைவியாதியானது அப்பொழுதே ஒருங்கேகெடுதலும் நோக்கநின்றமேற்பட்ட பொருளாகிய பரமசிவனுடைய அனுக்கிரகத்தைப் பெற்ற சிறந்த மருள்நீக்கியார் அடியேனுக்குத் தேவரீர் உயிரைக் கொடுத்ததன்றி-கடைத்தேறும்வழிக் கேதுவாகிய அருளையும் கொடுத்தீரென்று தமக்கு அப்போதே ஞானத்தின் அதிசயத்தால் பரமசிவனது கிருபைக்கடலில் மூழ்கினார்.(எ-று) தெருட்சி மருட்சி-ஆனந்தத்தாற் பரவசமாகுதல். (௭௧)

அங்கங்களடங்கவுரோமமெலாமடையப்புளகங்கண் முகிழ்த்தலரப், பொங்குப்புனல்கண்கள்பொழிந்திழியப்புவிமீது விழுந்துபுரண்டயர்வா, ரிங்கெஞ்செயலுற்றபிழைப்பதனாலேறரு பெருந்திடரேறிடநின், றங்குங்கருணைப்பெருவெள்ளமிடத் தகுமோவெனவின்னனதாமொழிவார் ....*

(இதன்பொருள்.)

அவயவங்கள்முழுதும் உள்ள உரோமங்களெல்லாம் ஒருங்கே புளகமுண்டாக- கண்கள்பொழிதலால் நிறைந்துபொங்குகின்ற நீரானது தாரையாக இறங்கப் பூமியில் விழுந்து புரண்டு மூர்ச்சை அடைந்தவராய் அடியேன்செய்த பிழையானசெய்கைக்குத் தாழ்ந்தவிடத்தினின்றும் ஒருக்காலும் ஏறக்கூடாத பெரியமேட்டில் ஏறும்படி தேவரீரது கருணையாகிய வெள்ளத்

தைப் பெருக்கக்கூடுமோவென்று இப்படிப்பட்ட பலவாகிய தாழ்ந்தமொழிகளைக் கூறத் தொடங்கினார்.—(எ-று) ஏறுத பெருந்திடர் அடைதற்கு அரிய சமயம். இதைக்கூறவே சமணசமயம் ஒரு படுகுழியென்பதுதானே பெறப்பட்டது. வெள்ளப்பெருக்கால்-பள்ளத்தில்நின்று மேட்டிற்கு ஏறக்கூடுமாதலின் அங்ஙனங்கூறினர். புறச்சமயத்திலிருப்பவரொருவர் புண்ணியவசத்தால் இப்படியாயிருக்கு மதங்களை ஒவ்வொன்றாக அடைந்து பின்பு சைவசமயத்துக்கு வரவேண்டியதாயிருக்கச் சைவசமயத்தின்கண்ணேயிருந்து மிகவுந்தாழ்வாகிய புறமதத்திற்சேர்ந்த அடியேனை இவ்வளவுசீக்கிரத்திலேயே மறுபடியும் மீட்டு ஆட்கொண்டது ஆச்சரியமென்பார்- தங்குங்கருணைப் பெருவெள்ளமிடத்தகுமோவென்றார். (எஉ)

பொய்வாய்மைபெருக்கிய புன்சமயப் பொறையில்சமணீசர்
புறத்துறையா, மவ்வாழ்குழியின்கண்விழுந்தெழுமாறறியாது
மயங்கியவம்புரிவேன், மைவாசநறுங்குழன்மாமலையாள் மண
வாளன்மலர்க்கழல்வந்தடையு, மிவ்வாழ்வுபெறத்தருசூலையினு
க்கெதிர்செய்குறையென்கொலெனத்தருவார் .. .. ஃ

(இதன்பொருள்)

பொய்யைத்தானே நிசமாகக்கட்டியிருக்கும்அற்பமாகிய அந்தச்சைனசமயத்திலுள்ள தாழ்ந்த சமணர்களது குறைவாகிய போதனையினுள்ளே விழுந்து அதைவிடுவதற்குத் தெரியாமல் வருந்திப் பாவத்தைச்செய்கின்ற அடியேன் மேகம்போன்று வாசனைபொருந்திய நல்ல கூந்தலையுடைய இமாசலராசன் மகளாரது மணவாளராகிய பரமசிவனது தாமரைமலர்போன்ற பாதத்தைவந்து சேரும்படியான இவ்வாழ்வைஉண்டாக்கிய சூலைவியாதிக்கு என்னகைம்மாறு செய்வேனென்று வணங்கினார்.—(எ-று) எதிர்செய்குறை-கைம்மாறு. சூலைவியாதி பரமசிவனை அடைதற்குக்காரணமாயிருந்தமையால்-அதனைப் புகழ்ந்தாரென்க. ஆழ்-ஆழ்ந்த — புறத்துறையாம். தாழ்வாகிய-ஆழ்குழி-அபாயத்துட்படுத்தும் போதனையென்று உரைகொள்க. (எங)

மேவுற்றவிவ்வேலையில்நீடியசீர்வீரட்டமமர்ந்த பிரானருளப்
பாவுற்றலர்செந்தமிழின்சொல்வளம்பதிகத்தொடைபாடியபா
ன்மையினால், நாவுக்கரசென்றுலகேழினுநின் னாமங்கள் நயப்

புறநன்றாகவென், றியாவர்க்கும்பிறப்புறமஞ்சுறைவானிடை
யேயொருவாய்மையெழுந்ததுவே .... *

(இதன்பொருள்)

இவ்வாறு ஸ்துதிபண்ணும்வேளையில் நிலைபெற்றபுகழினையுடை
ய திருவீரட்டத்தில் எழுந்தருளிய பரமசிவனுடைய கட்டளை
யால் செவ்வியதமிழில் இருக்கும் இனிய சொற்களை மணம்ப
ரவிய மலர்களாகத்தொடுத்த வளம்பொருந்திய பதிகமாகிய
பாமாலையைப் பாடிச் சாத்தியபடியால் நாவுக்கரசென்று எ
ழுலகத்திலும் உன்னுடைய பெயர் பிரசித்தமாகக்கடவதென்
று கேட்போர்யாவர்க்கும் ஓர்வியப்புத்தோன்றும்படி மே
கங்கள்சஞ்சரிக்கும் ஆகாயத்தில் ஒரு அசரீரிவாக்கியம் பிறந்த
து.—(எ-று) நாவுக்கரசு-அன்பான பாடல்களைப் பாடுவதில்
வல்லவர். நாவுக்கரசு-இருமொழியாகுபெயர். (௭௪)

இத்தன்மைநிகழ்ந்துழிநாவின்மொழிக்கிறையாகிய வன்பரு
மிந்நெடுநாட், சித்தந்திகழ்தீவினையேனடையுந்திருவோவிது
வென்றுதெருண்டறியா, வத்தன்மையனாயவிராவணனுக் கரு
ளுங்கருணைத்திறமானவதன், மெய்த்தன்மையறிந்துதுதிப்ப
துவேமேல்கொண்டுவணங்கினர் மெய்யுறவே .... *

(இதன்பொருள்.)

இப்படிப்பட்ட அசரீரிமொழியானது கேள்வியுற்றபோது அ
டியவராகிய திருநாவுக்கரசுசுவாமி இத்தனைநெடுங்காலமாகம
னதிற்குடிகொண்ட தீவினையை உடைய அடியேன் அடைந்த
பாக்கியம் இப்படிப்பட்டதாவென்று களித்து ஞானமிருந்து
ம் சுவாமியின்பெருமையை அறியாதவனாகிய இராவணனுக்கு
அனுக்கிரகஞ்செய்த ஒருதிறமுள்ள மெய்மையாகிய தன்மை
யை அறிந்து துதிக்கிறதே மேலதாமென்று வணங்கினார் உட
லம்பூமியிற்பட.—(எ-று) (௭௫)

பரசுங்கருணைப்பெரியோனருளப்பதிபுன்றலையோர் நெறிவா
ழ்படவந், தரசிங்கருள்பெற்றுலகுய்ந்ததெனவடியார்புடைசூ
ழ்திகைப்பதிதான், முரசம்படகந்துடிதண்ணுமையாழ்முழவ
ங்கிளைதுந்துமிகண்டையுட, னிரைசங்கொலியெங்குமுழங்கு
தலால்நெடுமாகடலென்னநிறைந்துளதே . .. . *

(இதன்பொருள்.)

எல்லாராலும் வணங்கப்பட்ட கிருபைபொருந்திய பரமசிவ
ன் அனுக்கிரகஞ்செய்ததும், உரோமங்களைப்பறிக்கின்ற புல்

விய தலையை உடைய சமணர்களது மதமானது பாழாய்ப் போகத் திருநாவுக்கரசுசுவாமிகள் சைவசமயத்திற் பிரவேசித்துச் சுவாமியின் அனுக்கிரகத்தைப்பெற்றபடியால் உலகம்பிழைத்ததென்று சொல்லிச் சிவநேசர்கள் நெருங்கிய திருவதிகையென்னும் ஸ்தலமானது முரசு-படகம்-உடுக்கை-மத்தளம்-வீணை-மற்றைவாத்தியங்கள் புள்ளாங்குழல்-துந்துமி-பெரியமணி இவைகளோடு பல சங்கங்களினுடைய ஒலியும் எவ்விடத்துமுழங்குதலால்-நீண்டு பெரிதாயிருக்கின்ற சமுத்திரம் போல் ஒலியால் நிறைவை யடைந்திருக்கின்றது.(எ-று)(எ௬)

மையற்றுறை மேவிமகிழ்ந்தலர்சீர் வாகீசர் மனத்தொடுவாய்
மையுடன், மெய்யுற்றதிருப்பணிசெய்பவராய்விரவுஞ்சிவசின்
னம்விளங்கிடவே, மெய்துற்றதியானமருவுணர்வுமீறின்றியெ
ழுந்திருவாசகமுங், கையிற்றிகழும்முழவாரமுடன்கைத்தொ
ண்டுகலந்துகசிந்தனரே .... - ....*

(இதன்பொருள்.)

மயக்கம்பொருந்திய சமணமதத்தில்நின்றும் நாண்டிச் சைவசமயத்துக்குவந்து மகிழ்ச்சிகொண்டவராகிய திருநாவுக்கரசுசுவாமி மனமும் வாக்கும் ஒருமைப்பட்டு மெய்மைபொருந்திய திருப்பணிசெய்ய விருப்பங்கொண்டவராகி விபூதி ருத்திராட்சமுதலிய சைவமதத்திற்குரிய அடையாளங்கள் சேர்ந்து பிரகாசிக்கஎப்போதுமறவாத உணர்ச்சியோடுகூடியதியானமும்தடையின்றி உண்டாகின்ற ஸ்துதிரூபமாகியவாக்கும்,கையில்விளங்கும் உழவாரம் கருவியாகச்செய்யுங் கைத்தொண்டும்ஒருங்கே நடந்துகொண்டிருக்க உள்ளம் உருகினார் (எ-று) கைத்தொண்டு-கையால்உழவாரங்கொண்டுசுவாமியின்கோயிலின்பிராகாரத்தும்திருவீதியிலும் புல்லினைச்செதுக்குதல். மானசம்-வாசிகம்-காயிகம்-ஆகிய மூவகைத்தொண்டுஞ்செய்தார்என்பது-இப்பாட்டால்விளங்கிற்று. அவையாவன- தியானமருவுணர்வு மானசமாம். ஸ்துதிரூபமான வாசகம் - வாசிகம். கைத்தொண்டு-காயிகமாம். (எஎ)

மெய்ம்மைப்பணிசெய்தவிருப்பதனால்விண்ணோர்தனிநாயகனா
ர்கழலில், நம்மிச்சைநிரப்பவரம்பெறுமத் தன்மைப்பதிமே
வியதாபதியார், பொய்ம்மைச்சமயப் பிணிவிட்டவர் முன்
போதும் பிணிவிட்டருளிப்பொருளா, வெம்மைப்பணிகொள்
கருணைத்திறமிங்கியார் பெற்றனரென்னவிறைஞ்சினரே .. *

(இதன்பொருள்.)

உண்மையான பத்திசெய்கின்ற விருப்பத்தால் தேவர்களுக்கு ஒப்பற்றநாதராகிய பரமசிவனுடைய பாதத்தினிடமாகத் தமக்குஓர் திர்ப்திஉண்டாக அனுக்கிரகத்தைப்பெற்றுக்கொண்ட உயர்வுபொருந்திய அந்தத்திருவதிகையென்னும் தலத்தில் வாசஞ்செய்கின்ற திலகவதியார் உடன்பிறந்தவர்- பொய்மையாகிய சைனசமயத்தின் பிணிப்பைவிட்டுத் தம்மிடத்துக்குவரும்படி சூலைவியாதியைப்போகவிட்டு ஒருபொருவாக எங்களை ஆட்கொள்ளுங் கிருபாவிசேஷத்தை இவ்வுலகத்தில் யார்பெற்றார்களென்று வணங்கினார்.—(எ-று) பொய்மைச்சமயப்பிணியுற்றவர் முன்போதும் பிணியென்று பாடஞ்சொல்லி நல்லசமயத்தினின்றுந் தீயசமயத்தில் புகுந்தவர்களுக் குண்டாகுஞ் சூலைவியாதியை என்று பாடஞ்சொல்வதும் உண்டு

(வேறு.)

இன்னதன்மையிலிவர்சிவநெறியினையெய்தி ... *
மன்னுபேரருள்பெற்றிடர்நீங்கியவண்ணம் .... *
பன்னுதொன்மையிற்பாடலிபுத்திரநகரிற் .... *
புன்மையேபுரியமணர்தாங்கேட்டதும்பொறாராய் *

(இதன்பொருள்.)

இப்படிப்பட்ட தன்மையாகத் திருநாவுக்கரசுசுவாமி சைவசமயத்தை அடைந்து நிலைபெற்ற பெருமையுற்றகிருபையைச்சுவாமியினிடத்தில் பெற்றுத் தமக்குண்டாயிருந்த துன்பமும்ஒழிந்த சமாசாரத்தைப் பழமையதாகப் பேர்பெற்றிருக்கும் பாடலிபுத்திரமென்கிற நகரத்தில் அற்பமாகிய செய்கைச்செய்கின்ற சமணர்கள்கேள்விப்பட்டுச்சகிக்காதவர்களாய்(எ-று)

தருமசேனர்க்குவந்தவத்தடுப்பருஞ்சூலை .... *
யொருவராலுமிங்கொழிந்திடாமையிலவருயப்போய்ப் .. *
பெருகுசைவராப்பெயர்ந்துதம்பிணி யொழிந்துயர்ந்தார் *
மருவுநம்பெருஞ்சமயம்வீழ்ந்ததென்மருள்வார் .. .. *

(இதன்பொருள்.)

தருமசேனர்க்குவந்த எவ்வகையாலுந் தடுப்பதற்கரிதாகியசூலைநோயானது இவ்விடத்திலுள்ள ஒருவராலும்நீங்காதபடியால் பிழைக்க விரும்பினவராகப்போய்முன்போல் களிப்புள்ள சைவராகித் தம்முடைய பிணிநீங்கிப் பிழைத்தார் ஆகையால் நிலையாயிருந்த நம்முடைய மதமானது அழிந்துபோயிற்றெ

ன்று மயங்கினார்கள் —(எ-று) தெளிவுபற்றி எதிர்காலத்தை இறந்தகாலமாகக்கூறினார். (௮௰)

மலையும்பல்சமயங்களும்வென்றுமற்றவரால் . ... *
நிலையும்பெற்றவித்நெறியினியழிந்ததென்றழுங்கிக் . .... *
கொலையும்பொய்ம்மையுமிலமென்றுகொடுந்தொழில்புரிவோர்
தலையும்பீலியுந்தாழவந்தொருசிறைதாழ்ந்தார் ....*

(இதன்பொருள்)

மாறுபட்டிருக்கும் பலசமயங்களையும் வாதித்து வென்று அவரால் அழியாமையைப்பெற்றிருந்த இந்தச்சமயமானது அழிந்துபோயிற்றென்று விசனப்பட்டுக்-கொல்லுதலும் பொய்சொல்லுதலும் செய்யமாட்டோமென்று கொடிய தொழிலைச்செய்கின்ற சமணர்கள் தலைகளும் பீலிக்கற்றைகளும் தாழும்படியாக ஓரிடத்தில்வந்து சேர்ந்தார்கள்.—(எ-று) தலைதாழ்வது-விசனத்தால் தலையிறங்கியிருத்தல். பீலிக்கற்றை-மயிலிறகின்கட்டு. (௮௧)

இவ்வகைப்பல்லமணர்கள்துயருடனீண்டி .. .. *
மெய்வகைத்திறமறிந்திடில்வேந்தனும்வெகுண்டு .. .... *
சைவனாகிறம்விருத்தியுந்தவிர்க்குமற்றினிநாஞ் .... *
செய்வதென்னெனவஞ்சனைதெரிந்துசிந்திப்பார் ... .. *

(இதன்பொருள்)

இவ்வாறாக விதனத்தோடு பலசமணர்கள்கூட்டங்கொண்டு நம்முடைய சமயத்திலுள்ள மந்திரங்களால் தருமசேனர்க்குவந்த சூலைநோய் நீங்காமல் சைவசமயத்திற்புக்கபோதே தீர்ந்துவிட்டதென்கிற உண்மையாகிய பேச்சைத் தெரிந்துகொண்டால் நம்முடைய அரசனும் சைவமதஸ்தனாகிக் கோபங்கொண்டு நமக்கு ஏற்பட்டிருக்கிற ஊதியத்தையும் நிறுத்துவான் ஆதலால் செய்யவேண்டியதென்னவென்று சூதுசெய்யமுபங்குறார்கள்.—(எ-று) விருத்தி-மானியமாக விட்டிருக்கும் நிலங்களும் * வேதனமுமாம். (௮௨)

தவ்வைசைவத்துநிற்றலிற்றருமசேனருந்தாம் .. .. *
பொய்வகுத்ததோர்சூலைதீர்ந்திலதெனப்போயின் ... . *
வெவ்வமாயற்றெய்திறஞ்சமயலங்கனமுந் . .. . *
தெய்வநிந்தையுஞ்செய்தனனெனச்சொலத்தெளிந்தார். .. *

---

* வேதனம்-சம்பளம்.

(இதன்பொருள்.)

முன்பிறந்த சகோதரியாராகிய திலகவதியார் சைவசமயத்தில் நிற்கின்றபடியால் தருமசேனரும் சூதடியாக நம்முடையமதத்துக்குவந்து எல்லாவிஷயங்களையுங்கற்றுத்தமக்கு ஒருசூலைவியாதி உண்டாயிருக்கிறதாகப் பொய்சொல்லி அது தீரவில்லையென்று இந்தச்சமயத்தை விட்டுவிட்டதுமல்லாமல் நம்முடையதெய்வத்தையும் நிந்திக்கிறாரென்றுசொல்லச் சூழ்ச்சிசெய்தார்கள்.—(எ-று) எவ்வம் - இங்கேசூது. லங்கனம் - தாண்டுதல். பொய்வகுத்ததோர்சூலை-பொய்யாகவகுக்கப்பட்டதோர்சூலை. (௮௩)

சொன்னவண்ணமேசெய்வதுதுணிந்ததுன்மதியோர் .. .. *
முன்னநாஞ்சென்றுமுறைப்படுவோமெனமுயன்றே .... *
யின்னதன்மையிலிருட்குழாஞ்செல்வதுபோல .... *
மன்னனாகியபல்லவனகரில்வந்தணைந்தார் .... *

(இதன்பொருள்.)

சொல்லியபிரகாரமே செய்யும்படி உறுதிகொண்ட அற்பபுத்தியை உடைய சைனர்கள் அரசனிடத்தில்போய் இப்படியே முறையிடுவோமென்று எண்ணங்கொண்டு இருளினது கூட்டமானது நடந்துசென்றாற்போலப்பல்லவராசனுடைய நகரத்திற்குவந்துசேர்ந்தார்கள்.—(எ-று) (௮௪)

உடையொழிந்தொருபேச்சிடையின்றிநின்றுண்போர் ....*
கடையணைந்தவன்வாயில்காவலருக்குநாங்க .... *
ளடையவந்தமையரசனுக்கறிவியுமென்ன .. .. *
விடையறிந்துபுக்கருந்தமிறைவனுக்கிசைத்தார் .. .... *

(இதன்பொருள்.)

வஸ்திரம் உடாமல்போசனவேளையில் ஒருபேச்சும் இடையில் நிகழாமல்நின்றுகொண்டு உண்கின்றசமணர்களினாசாரியர்கள் அரண்மனை வாசலுக்குவந்து வாயில்காப்பவருக்குநாங்கள் ஒருசேரவந்ததை இராசனுக்குத் தெரிவியுங்களென்றுசொல்ல அவர்களும் சமயம் அறிந்துகொண்டுபோய்த் தங்களுடைய அரசனுக்குத்தெரிவித்தார்கள்.—(எ-று) (௮௫)

(வேறு.)

அடிகண்மாரெல்லாருமாகுலமாய்மிகவழிந்து.. .... .. *
கொடிநுடங்குதிருவாயிற்புறத்தணைந்தாரெனக்கூற .... .. *

வடிநெடுவேன்மன்னவனுமற்றவர்சார்பாதலினாற் .... .. *
கடிதணைவாரவர்க்குற்றதென்கொலெனக்கவன்றானாத்தான் *

(இதன்பொருள்)

நம்முடைய ஆசாரியர்களெல்லாம் துக்கத்தோடு மிகவும் மனம் அழிந்து கொடியாடுகின்ற அரண்மனை வாசற்புறத்தை அடைந்திருக்கின்றார்களென்று சொல்லக் கூர்மைபொருந்தி நீண்டிருக்கும் வேலையேந்திய அரசனும் அவர்களுடைய பட்சத்தில் சேர்ந்திருக்கிறபடியால் விரைவாக அவர்கள் இவ்விடம் வருகிறதற்கு என்ன துன்பம் நேரிட்டிருக்கலாமென்று வருத்தமுற்றுச்சொன்னான் —(எ-று) (அசு)

கடைக்காவலுடையார்கள்புகுதவிடக்காவலன்பால் .. ....*
நடையாடுந்தொழிலுடையார் நண்ணித்தாமெண்ணியவா. *
றுடையாராகியதருமசேனர்பிணியுற்றாராய்ச். .... *
சடையானுக்காளாய்நின்சமயமழித்தாரென்றார் .... .. *

(இதன்பொருள்.)

வாசல்காப்பவர்கள் உள்ளேபோகும்படி செய்த அளவில் நடக்கிற தொழில் ஒன்றையே உடையவர்களாய் மற்றைச்செய்கைகளெல்லாவற்றையுமிழந்த சமணர்கள் தாங்கள்சொல்லும்படி முன்னமேநினைத்தபிரகாரம் நமக்குத்தலைவராயிருந்த தருமசேனரானவர் வியாதியை அடைந்தவராக மோசஞ்செய்து உம்முடையசமயத்தைவிட்டுச்சிவனுக்கு ஆளாகப்புகுந்தார் என்று சொன்னார்கள் —(எ-று) சடையானுக் காளாய்நின் சமயமொழித்தார் என்றது-வாயைத்திறந்து தூங்கினானென்பதுபோலவந்தது. நடையாடுந்தொழிலார்- நடைப்பிணங்களென்று விளங்கிற்று. (அஎ)

விலையலங்கற்பல்லவனுமதுகேட்டுவெகுண்டெழுந்து .. *
புலையுடையமனத்தினராய்ப்போவதற்குப்பொய்ப்பிணிகொ
டுலைசிறந்தசமயத்தையழித்தொழியப்பெறுவதெவன் . [ண்
கலையிறையத்தீரதனுக்கென்செய்வதெனக்கனன்றான். . ...*

(இதன்பொருள்.)

பரிமளமுற்ற மாலையைத்தரித்த பல்லவராசனும் அந்தவார்த்தையைக்கேட்டுக் கோபங்கொண்டு எழுந்திருந்து குற்றம் பொருந்திய மனதை உடையவராகப் போகும்பொருட்டுப்

பொய்யாகச்செய்துகொண்ட ஒருவியாதியை அடைந்துஉண்
மையாகிய மதத்தை ஒழித்துவிட்டு நீங்க என்ன ஏதுவுண்டா
யிருந்தது அளவில்லாத தவத்தையுடைய பெரியோர்களே இ
தற்கென்னசெய்யலாமென்று கோபங்கொண்டான்.(எ-று)

தலைநெறியாகியசமயந்தன்னையழித்துன்னுடைய .. .... *
நிலைநின்றதொல்வரம்பினெறியழித்தபொறியிலியை .... *
யலைபுரிவாயெனப்பரவிவாயாலஞ்சாதுரைத்தார் .... *
கொலைபுரியாநிலைகொண்டுபொய்யொழுகுமமண்குண்டர்.*

(இதன்பொருள்)

கொல்லாவிரதமொன்றையே மேற்போட்டுக்கொண்டு அசத்தியச்செய்கைகளைச் செய்கின்ற சமணர்கள் அரசனைக்குறித்துப் புகழ்ந்து பின்பு உத்தமமார்க்கமாகிய நம்முடையசமயத்தின்பெருமையைக்கெடுத்து உம்முடைய நிலைபொருந்திநாட்பட்டுவருகின்ற அரசாட்சியின் ஆக்கினையையுங்கடந்த அஞ்ஞானத்தை உடையதருமசேனரைத் துன்பப்படுத்துவாயென்று அரசனுக்குப்புகழ்ச்சியாக வாய்கூசாம லுரைத்தார்கள். (எ-று) வரம்பினெறியழித்தல்-சைனமதத்திலிருந்து சைவமதத்திற்பிரவேசித்தால் அரசனால் தண்டனைகிடைக்குமென்பதை அலட்சியஞ்செய்தலாம். அப்பர்சுவாமியி னிடத்துள்ள தெய்வத்தன்மையை நோக்காவிட்டாலும் தங்களுக்குக்குருவாயிருந்ததையும் நினையாது-இவ்வார்த்தையைச்சொன்னாதலின் (அஞ்சாதுரைத்தாரென்றார்.) (௮௯)

அருள்கொண்டவுணர்வின்றிநெறிகோடியறிவென்று .... *
மருள்கொண்டமன்னவனு மந்திரிகடமைநோக்கித், தெருள்
கொண்டோரிவர்சொன்னதீயோனைச்சேறுவதற்குப், பொரு
ள்கொண்டுவிடாதென்பாற்கொடுவாருமெனப்புகன்றான் .. *

(இதன்பொருள்.)

இரக்கமூற்றிருக்கும் மனமில்லாமல் தன்னுடையசமயத்திலுள்ள நற்செய்கைக்கும்பிசகி-அறியாமையை ஞானமென்றுநினைத்துநடக்கின்ற அரசனும் மந்திரிகளைப்பார்த்துத் தெளிவுடையவர்களாகிய நம்முடைய ஆசாரியர்கள் தெரிவித்த தீயவனைத் துன்பப்படுத்துகிறதற்குச்செலவிற்குவேண்டியபொருள்பெற்றுக்கொண்டு தப்பிப்போகாமல் அவனைப்பிடித்துக்கொண்டு என்னிடத்திற்கு வாருமென்று சொன்னான்.(எ-று)

அரசனதுபணிதலைநின்றமைச்சர்களுமந்நிலையே .... .. *
முரசதிருந்தானையொடுமுன்சென்றுமுகில்சூழ்ந்து. .... *
விரைசெறியுஞ்சோலைசூழ்திருவதிகைநகர்மேவிப் .. .. .. *
பரசமயப்பற்றறுத்தபான்மையினார்பாற்சென்றார் .... *

(இதன்பொருள்)

மந்திரிகள் அரசனுடையகட்டளையைத் தலைமேற்கொண்டு அப்பொழுதே முரசவாத்தியமுழங்குகின்ற சேனைகளோடுபுறப்பட்டு மேகங்களால் கவியப்பட்டு வாசனைபொருந்திய சோலைசூழ்ந்திருக்கும் திருவதிகையை அடைந்து பிறமதத்திலுண்டாயிருந்த ஆசையை ஒழித்துவிட்ட அப்பர்சுவாமியினிடத்திற்குப்போனார்கள்.—(எ-று) (சுக)

சென்றணைந்தவமைச்சருடன்சேனைவீரருஞ்சூழ்ந்து .... *
மின்றயங்குபுரிவேணிவேதியனாரடியவரை ....*
யின்றுநுமையரசனழைக்கவிடுத்தான்போதுமென ..*
நின்றவரைநேர்நோக்கிநிறைதவத்தோருரைசெய்தார் .... *

(இதன்பொருள்.)

போயடைந்த மந்திரிகளோடு சேனையிலுள்ள வீரர்களுஞ் சூழ்ந்துகொண்டு மின்னல்போற்பிரகாசிக்கின்ற சடையை உடைய பரமசிவனது அடியவராகிய திருநாவுக்கரசு சுவாமியைப்பார்த்து உம்மை இன்று எங்கள் அரசன் அழைத்துக்கொண்டுவரும்படியெங்களை அனுப்புவித்தான் ஆதலால்வாருமென்றுசொல்லக்கேட்டுநிறைந்ததவத்தினை உடைய நாயனார்கூறுகின்றார்.—(எ-று) (சுஉ)

நாமார்க்குங்குடியல்லோமென்றெடுத்துநான்மறையின்..*
கோமானைநதியினுடன்குளிர்மதிவாழ்சடையானைத். .... *
தேமாலைச்செந்தமிழின்செழுந்திருத்தாண்டகம்பாடி .... *
யாமாறுநீரழைக்குமடைவிலமென்றருள்செய்தார் ..... *

(இதன்பொருள்)

(நாமார்க்குங்குடியல்லோ)மென்பதை முதலிலெடுத்துநான்குவேதங்களையும் அருளியிட்டசுவாமியை-கங்கையோடுகுளிர்ச்சிபொருந்தியசந்திரன்வாழ்கின்றசடையை உடையவனாக்குறித்து-தேன்பொருந்தியமாலையாகச்செவ்விய தமிழினால் திருத்தாண்டகம்பாடி-நீங்களழைத்தபடியேவருகிறதற்கு ஒருசம்பந்தமும் நமக்கில்லையென்று அருள்செய்தார் —(எ-று) நாமார்க்குங்குடியல்லோமென்பதனால் - பரமசிவனுக்கடிமை

ப்பட்டவொன்றும் அதனால் சைனராசனிடத்துக்குப் போக வேண்டியதில்லையெனவும் விளங்கிற்று. (௯௩)

ஆண்டவரசருள்செய்யக்கேட்டவருமடிவணங்கி .. .... *
வேண்டியவர்க்கொண்டேகவிடையுகைத்தார் திருதொண்ட,
நீண்டுவரும்வினைகளுக்கெம்பிரானுளனென்றிசைந்திருந்தார்.
மூண்டசினப்போர்மன்னன்முன்னணைந்தங்கறிவித்தார் .. *

(இதன்பொருள்)

திருநாவுக்கரசுசுவாமி இங்ஙனம் அருளிச்செய்யக்கேட்ட மந்திரிமுதலானவர்களும் திருவடிகளைத்தொழுது பிரார்த்தித்து அழைத்துக்கொண்டுபோக பரமசிவனுடைய அடியாரும் இங்கு எனக்கு நேரிடப்போகிற அபாயங்களுக்கெல்லாம் ஆண்டவரிருக்கிறாரென்று சம்மதித்திருந்தார் சமணர்கள் மிகுந்த கோபங்கொண்டு போர்செய்யவல்லோனாகிய பல்லவராசனிடத்திற்குப்போய்த்தெரிவித்தார்.(எ-று)வேண்டியவா என்றும்பாடம். (௯௪)

பல்லவனுமதுகேட்டுப்பாங்கிருந்தபாயுடுக்கை .. .. .. *
வல்லமணர்தமைநோக்கிமற்றவனைச்செய்வதினிச்.... .. *
சொல்லுமெனவறந்துறந்துதமக்குறுதியறியாத .... *
புல்லறிவோராஞ்சாதுநீற்றறையில்விடப்புகன்றார் .... *

(இதன்பொருள்.)

பல்லவராசனும் அவ்வார்த்தையைக்கேட்டுச்சமீபத்திலிருந்த பாயைத்தானே வஸ்திரமாகவுடைய வலியசமணர்களைப்பார்த்துத் தருமசேனனை இனி என்னசெய்யவேண்டியது சொல்லுமென்றுகேட்கத் தர்மத்தைவிட்டுத் தமக்கு உறுதியைத் தரும்வழியை அறிந்துகொள்ளாத சமணர்கள் துணிவோடு நீற்றறையில்விடும்படிசொன்னார்கள்.—(எ-று) நீற்றறையாவது * சுக்கான்கல்லினீறு அடங்கிய அறை. (௯௫)

அருகணைந்தார்தமைநோக்கியவ்வண்ணஞ்செய்கவெனப்...*
பெருகுசினக்கொடுங்கோலான்மொழிந்திடலும்பெருந்தகை
யுருகுபெருந்தழல்வெம்மைநீற்றறையினுள்ளிருத்தித் .. [யை
திருகுகருந்தாட்கொளுவிச்சேமங்கள்செய்தமைத்தார். ..*

(இதன்பொருள்.)

மிகுந்த சினத்தையுடைய கொடுங்கோல்மன்னனாகிய பல்லவராசன் தன்னருகிலிருந்த வேலையாளரைப்பார்த்து ஆசாரியர்

---

* சுக்கான்கல்-கரமியம்.

கள் சொன்னபடியே செய்வீர்களாகவென்று சொன்னதும் பெருந்தன்மையை உடைய அப்பர்சுவாமியைத்தன்னையடைந்தபொருள் வேகிறதற்குக்காரணமாகிய சூட்டினையுடையநீற்று அறையினுள்ளேவைத்து வாசலை அடைத்துச் சுழலுந்தன்மையை உடையஇரும்பினுற்செய்ததாளிட்டார்கள்.—(எ-று)

ஆண்டவரசதனகத்துளணைந்தபொழுதம்பலத்துத் ... . *
தாண்டவமுன்புரிந்தருளுந்தாளிழலைத் தலைக்கொண்டே .. *
யீண்டுவருந் துயருளதோவீசனடியார்க்கென்று .... *
மூண்டமனநேர்நோக்கிமுதல்வனையேதொழுதிருந்தார் .. *

(இதன்பொருள்.)

தம்மையாட்கொண்ட திருநாவுக்கரசுசுவாமிகள் அந்த நீற்றறையினுள்ளே போனபொழுது பொன்னம்பலத்தில் ஆனந்ததாண்டவத்தை முன்புசெய்தருளிய சுவாமியின் திருப்பாதங்களினிழலைத் தலைமேல்வைத்துக்கொண்டு பரமசிவனது அடியார்களுக்கு இவ்வுலகத்தில் யாதொருதுன்பமும் உண்டோவென்றுமனதில் சுவாமியை உண்மையாகத்தியானித்துத்தொழுதுகொண்டு இருந்தார்.—(எ-று) (கூஎ)

வெய்யநீற்றறையதுதான்வீங்கிளவேனிற்பருவந் .... .. *
தைவருதண்டென்றலணைந்தண்கழுநீர்த்தடம்போன்று .... *
மொய்யொளிவெண்ணிலவலர்ந்துமுரன்றயாழொலியினதாய் *
யையர்திருவடிநிழலருளாகிக்குளிர்ந்ததே .... *

(இதன்பொருள்)

அப்பர்சுவாமி பரமசிவனுடைய திருவடியாகப்பாவனைகொள்ளப்பட்ட வெப்பம்பொருந்திய நீறுகொட்டியிருக்கும் அறையானது வரவர அதிகமாகின்ற இளவேனிற்காலமும், மெள்ள வருகின்ற குளிர்ச்சியாகிய தென்றலும், அலைகளை உடையசெங்கழுநீர்மலர்களையுடைய குளமும், மிகுந்தகாந்தியைஉடைய வெண்மையாகிய சந்திரனும் வாசித்தலால் பிரகாசிக்கின்ற வீணையின்கானமும் ஒத்துக் குளிர்ச்சியை அடைந்தது. (எ-று)

வசந்தகாலம் மணமுள்ள பலமலர்களும் உண்டாவதற்குக்காரணமாயிருத்தலின்-அது காரணகாரிய ஒற்றுமைபற்றிக் கிராணேந்திரியத்துக்கும், தென்றல் உடலத்திற்கும், தடம்-நாவிற்கும், நிலவு-கண்ணிற்கும், வீணையின் ஒலி-காதிற்கும் இன்பத்தையுண்டாக்குகிறபடியால்-அவ்வைந்தினையும் நீற்றறைக்கு உவமைசெய்தார். எங்ஙனமெனின்- அப்பர்சுவாமித்தன்னைத்தினுடையதேகநாசிக்கும், அதன் ஸ்பரிசம் - திருமேனி

க்கும், அதனுடையகொதிக்கலிக்கைமசை - காதிற்கும், அதன் துகள்-உள்ளேசெல்லுதல் நாவிற்கும், அதன்தோற்றம்-கண்க ளுக்கும் துன்பத்தை உண்டாக்காமல் சுகத்தைக் கொடுத்த மையாலெனக. (௯௮)

(வேறு.)

மாசின்மதிநீடுபுனல்மன்னிவளர்செஞ்சடையனைப் .... *
பேசவினியானையுலகாளுடையபிஞ்சகனை .... *
யீசனையெம்பெருமானையெவ்வுயிருந்தருவானை .... *
யாசையிலாராவமுதையடிவணங்கியினிதிருந்தார். .. *

(இதன்பொருள்.)

களங்கமில்லாத சந்திரனும் கங்காப்பிரவாகமும் நிலைபெற்று வளர்கின்ற சிரத்தினையுடையவரைப்பேசப்பேச இனிப்பைக் கொடுக்கின்றவரை உலகத்தை யாள்கின்றவரைச்சகல ஐசுவரிய த்தையும் உடையவரை எமக்குப்பிரானாயிருக்கின்றவரை எல் லாவுயிர்களையும் பிறப்பிக்கின்றவரை-ஆசையோடு உண்டு தி ருப்தி உண்டாகாத அமிர்தம்போன்ற சுவாமியையவணங்கி இன் பம் உடையவராக இருந்தார்.—(எ-று) அடிவணங்கல்- ஒரு சொல்லாய்ப் பொருளில் நின்றது. (௯௯)

ஒரேழுநாள்கழிந்ததற்பினுணர்விலமணரையழைத்துப்.. *
பாருமினிநீற்றறையையெனவுரைத்தான்பல்லவனும் .... *
காரிருண்டகுழாம்போலுமுருவுடையகாரமணர் .... .. *
தேருநிலையில்லாதார்நீற்றறையைத்திறந்தார்கள். .... ..*

(இதன்பொருள்)

திருநாவுக்கரசுசுவாமியை நீற்றறையில்வைத்து எழுநாள் ஆயி னபின்பு பல்லவராசன் விவேகமில்லாதசமணர்களை அழைப்பி த்துச் சுண்ணாம்பின் அறையைத்திறந்து பாருமென்றுசொன் னான்-இருட்சியுற்ற கருமையின் கூட்டம்போல உருவத்தி னையுடைய மூடர்களாகியசமணர்கள் ஆராய்ந்தறியும்உணர்ச்சி யில்லாதவர்களாய்நீற்றறையைத்திறந்தார்கள்.—(எ-று) (௱)

ஆனந்தவெள்ளத்தினிடைமூழ்கியம்பலவர் .. .. *
தேனுந்துமலர்ப்பாதத்தமுதுண்டுதெளிவெய்தி .. .. .. *
யூனந்தானிலராகியுவந்திருந்தார்தம்மைக்கண் .... *
டீனந்தங்கியநிலதாமென்னவதிசயமென்றார் .. .. *

(இதன்பொருள்)

சிவானந்தமாகிய வெள்ளத்தில் முழுகிச் சபாநாதருடையதே ன் துளிக்கின்ற தாமரைமலர்போன்ற பாதங்களின் தியானமா

கிய அமிர்தத்தைப் பானஞ்செய்து தெளிவையடைந்து யா தொருகுறைவுமில்லாமல் களிப்புற்றிருந்த திருநாவுக்கரசுசுவாமியைப்பார்த்து இவர்க்கு யாதொருதுன்பமுமில்லாமலிருக்கிறது இதென்ன அதிசயமென்றார்கள்.—(எ-று) (௱௧)

அதிசயமன்றிதுமுன்னையமண்சமயச்சாதகத்தா . . . . *
லிதுசெய்துபிழைத்திருந்தானெனவேந்தற்குரைசெய்து. *
மதிசெய்வதினிக்கொடியவல்விடமூட்டுவதென்று . . . . . . *
முதிரவரும்பாதகத்தோர்மொழிந்தார்கள். . . *

(இதன்பொருள்)

அப்போது முற்றியிருக்கின்ற பாவத்தை உடைய ஆசாரியர்களாயிருக்கிறசைனர்கள் இதொரு ஆச்சரியமன்றுமுன்னே நம்முடைய சமயத்திலிருந்துசெய்த மந்திரசாதகத்தால்இப்படிச்செய்ததற்குப் பிழைத்திருந்தானென்று அரசனுக்குச்சொல்லி இனிநாம்ஆலோசித்துச்செய்யவேண்டியது விஷாவிற்கொல்லத்தக்க கொடியவிஷத்தையூட்டுவதேயாமென்று தீயநாத்தம்பொருந்தியவாயால் சொன்னார்கள்.(எ-று) (௱௨)

ஆங்கதுகேட்டலுங்கொடியவமண்சார்பாற்கெடுமன்ன . . *
னோங்குபெருமையவினுல்நஞ்சூட்டுமெனவுரைப்பத் . . . . *
தேங்காதார்திருநாவுக்கரசரையத்தீயவிடப் . . . . *
பாங்குடையபால்அடிசில்அமுதுசெயப்பண்ணினார் . . . . *

(இதன்பொருள்)

அம்மொழியைக்கேட்டதும் கொடுமையுள்ள சைனர்களுடைய சார்பினாலேகெட்ட பல்லவராசன் தலைக்கொண்டிருக்கும் அறிவின் திரிபினால் விஷமூட்டிக்கொல்லுமென்று சொல்லக் கொலைசெய்ய கொஞ்சமேனும்தாமதியாதசமணர்கள்திருநாவுக்கரசுசுவாமியைவிஷாவிற்கொல்லத்தக்க வலியுள்ள நஞ்சுகலந்த தித்திப்பாகியபாலோடுசேர்ந்த சோற்றை உண்ணும்படி செய்தார்கள் — எ-று) அமண்சார்பாற்கெடுமன்னன்-சமணர்களுடையபோதனையால் பொய்யைமெய்யாக எண்ணிய அரசன்-(அதாவது நீற்றறையில்நின்றும் பிழைத்ததற்குச் சைனருடையமந்திரமே யேதுவென்றுசொல்லியதை நம்புதலால் சைவமதத்தில் நின்றும் பிரஷ்டனாகிய அரசனென்றுகூறலும் ஆம். வேறுவிஷத்தையிட்டால் அவர்கள்கொடுமை மிகவும் விளங்குமாதலின்-விடப்பால்அடிசிலமுதுசெயவென்றார். (௱௩)

நஞ்சமமுதாமெங்களுதாரடியார்க்கென்று .... *
வஞ்சமிகுநெஞ்சுடையார்வஞ்சனையாம்படியறிந்தே .. .. *
செஞ்சடையார்சீர்விளக்குந்திறலுடையார்தீவிடத்தால். .. *
வெஞ்சமணரிடுவித்தபாலடிசின்மிசைந்திருந்தார் .... *

(இதன்பொருள்.)

முன்னமே கபடமாகிய தொழில்கள்செய்வதில் ஒருப்பட்ட மனதையுடைய கொடியசமணர்கள்-அறியாதிருக்கும்படிசெய்த வஞ்சனையை அறிந்துகொண்டு சிவந்தசடையை உடையப்ரமசிவனது கீர்த்தியை விளங்கச்செய்கின்ற வல்லமையை உடைய அப்பர்சுவாமிகள் எங்களாண்டவருடைய அடியவர்களுக்கு விஷமும் அமிர்தமாகுமென்று சொல்லி அக்கொடியவர்களிட்ட தீயவிஷத்தோடு கலந்த பாற்சோற்றைச்சாப்பிட்டிருந்தார்.—(எ-று) (௱௪)

பொடியார்க்குந்திருமேனிப்புனிதர்க்குப்புவனங்கள் .. .. *
முடிவாக்குந்துயர்நீங்கமுன்னைவிடமமுதானாற் .... *
படியார்க்குமறிவரியபசுபதியார்தம்முடைய .... *
வடியார்க்குநஞ்சமுதமாவதுதானற்புதமோ .... *

(இதன்பொருள்-)

திருநீற்றைத்தரிக்கும் திருமேனியை உடைய பரிசுத்தராகியஆண்டவர்க்குப்புவனங்களெல்லாம் இறுதியுண்டாக்கத்தக்கதுன்பத்தில் நின்றும் ஒழிய முற்காலத்தில உண்ட விஷமானதுஅமுதமாயிருந்ததென்றால் பூமியிலுள்ள யாவர்க்கும் அறிவதற்கு அருமையாகிய பரமசிவனது அடியவர்களுக்கு விஷம் அமுதமாவது ஒருவியப்போ.—(எ-று) இங்கு அமுதமென்றது-கொல்லாதிருத்தலை. (௱௫)

அவ்விடத்தையாண்டவரமுதுசெய்துமுன்னிருப்ப .... *
வெவ்விடமுமமுதாயிற்றெனவமணர்வெருக்கொண்டே .. *
யிவ்விடத்திலிவன்பிழைக்கிலெமக்கெல்லாமிறுதியெனத் .. *
தெவ்விடத்துச்செயல்புரியுங்காவலற்குச்செப்புவார் .... *

(இதன்பொருள்)

அவர்களிட்ட நஞ்சுகலந்த உணவை நம்மையாட்கொண்ட திருநாவுக்கரசுசுவாமி புசித்தருளி அவர்களுக்குமுன் யாதொரு வருத்தமுமில்லாமலிருக்கையில் வெவ்விதாகிய விஷமானது அமிர்தமாய்விட்டதென்று சமணர்கள்பயங்கொண்டு இத்தேசத்தில் இவர்பிழைத்திருந்தால் நமக்கெல்லாம் அழிவுண்டாகு

மென்று பகைவரிடத்துக்கொடுந்தொழிலைச்செய்கின்ற அரசனுக்குச் சொல்லலுற்றார்கள்.—(எ-று) தெவ்விடத்துச் செய்ல்-கொலைத்தொழில் என்றுங்கூறுவர். (௱௬)

நஞ்சுகலந்தூட்டிடவும்நஞ்சமயத்தினில்விடந்தீர் .... *
தஞ்சமுடைமந்திரத்தாற்சாதியாவகைதடுத்தா .... *
னெஞ்சும்வகையவற்கிலதேலெம்முயிருநின்முறையந் .... *
துஞ்சுவதுதிடமென்றார்சூழ்வினையின்றுறைநின்றார். .. .. *

(இதன்பொருள்)

தருமசேனர்க்கு விஷத்தைச் சோற்றில்கலந்து உண்பிக்கவும் நம்முடைய சமயநூல்களிற் சொல்லப்பட்டிருக்கும் விஷத்தைத்தீர்க்கு மந்திரவலியினாலே தமக்கு அந்தநஞ்சினால் உபத்திரவம் உண்டாகாமலிருக்கும்படி தடுத்தார்-எந்தவகையாலாயினும் அவர்க்கு இறுதியுண்டாகாவிட்டால் எங்களுடைய் உயிரும் உம்முடைய அரசாட்சியும் நிச்சயமாக நாசமாய்விடுமென்றுசொன்னார்கள் துராலோசனைக் கட்டுப்பாட்டில்நின்ற சமணர்கள்.—(எ-று). (௱௭)

மற்றவர்தமொழிகேட்டுமதிகெட்டமன்னவனுங் .... *
செற்றவனையினிக்கடியுந்திறமெவ்வாறெனச்செப்ப .. ... *
வுற்றவருமந்திரசாதகநாங்களொழிந்திடநின் .... *
கொற்றவயக்களிற்றெறிரோவிடுவதெனக்கூறினார் .... *

(இதன்பொருள்)

புத்திகெட்டிருக்கின்ற அரசனும் அவர்களுடையவார்த்தையைக்கேட்டு நமக்குப்பகைவராயிருக்கின்ற அந்தத்தருமசேனரை இனிக்கொல்வதற்கு வேண்டிய உபாயம் என்னவென்றுகேட்க-சமயத்தால் அவனுக்கு உரியவர்களாயிருக்கின்ற சமணர்கள் மந்திரங்களை உச்சரித்து அவனைக்கொல்லாமல் உம்முடைய வெற்றியும்பலமும்பொருந்திய யானையை அவருக்கெதிரே கொல்லும்படி விடுவதே தகுதியென்று சொன்னார்கள்.—(எ-று) (௱௮)

மாபாவிக்கடையமணர்வாகீசத்திருவடியாங் .... *
காபாலியடியவர்பாற்கடக்களிற்றைவிடுகென்னப் .... .. *
பூபாலர்செயன்மேற்கொள்புலைத்தொழிலோனவர்தம்மேற் *
கோபாதிசயமானகொலைக்களிற்றைவிடச்சொன்னான் ....*

(இதன்பொருள்.)

மகாபாவிகளாகியசமணர்கள் பரமசிவனுக்கு அடியவராயிருக்கின்ற வாகீசரிடத்தில் மதங்கொண்டிருக்கின்ற யானையைவி

டுகவென்றுசொன்ன அளவில் அரசருடைய செய்கையைமேற்கொண்டு நீசத்தொழிலைச்செய்கின்ற பல்லவராசன் அந்தத்திருநாவுக்கரசுசுவாமியின்மேல்மிகுந்தகோபத்தை உடையகொலைபுரிகின்ற யானையைவிடச்சொல்லினான்.—(எ-று) வாகீசர், திருநாவுக்கரசு, அப்பர், ஒருபொருட்கிளவி, வாகீசத்திருவடி ஆகுபெயர். (௱௯)

கூடத்தைக்குத்தியொருகுன்றமெனப்புறப்பட்டு ....*
மாடத்தைமறித்திட்டுமண்டபங்களெடுத்தெற்றித் .. .. *
தாடத்தேர்ப்பரிக்காரர்தலையிடறிக்கடக்களிற்றின் ....*
வேடத்தால்வருங்கூற்றின்மிக்கதொருவிறல்வேழம் .. .. ..*

(இதன்பொருள்.)

ஒப்பற்றவலிபொருந்திய ஒருயானை தனக்குஇருப்பிடமாகிய கூடத்தைப்பிடுங்கி ஒருமலைபோலப் புறப்பட்டு வீடுகளை அழித்து மண்டபங்களின் கற்களைப்பேர்த்து ஒன்றோடொன்று எற்றி, கால்களினுடைய எற்றுதலால் குதிரைக்காரர்களுடைய தலைகளை இடறி யானையாகவேஷங்கொண்டு வருகின்ற ஒருயமன்போலத் தனதுவலிமையைக்காண்பித்தது.—(எ-று) தாடத்தில் என்பது-எதுகைநோக்கி மெலிந்துநின்றது. (௱௰)

(வேறு.)

பாசத்தொடைநிகளத்தொடர்பறியத்தறிமுறியா.. ... ..*
மீசுற்றியபறவைக்குலம்வெருவத்துணிவிலகா... .. .. ..*
ஊசற்கரமெதிர்சுற்றிடவுரறிப்பரியுமறு .... *
வாசகடமழைமுற்படமதவெற்பெதிர்வருமால் .. ..*

(இதன்பொருள்.)

கழுத்திற்கட்டியிருக்கின்றகயிறும் காலிற்பூட்டியிருக்கும் சங்கிலியும் அறுந்துபோகத் தறியைமுறித்துக்கொண்டு மேலேபறக்கின்ற பட்சிசாதிகளும்பயப்படும்படி துணிவுகொண்டுநேரே தடையாயிருக்கும் மரம்-கல்-முதலானவைகளுக்குவிலகிப்போகாமல் ஊஞ்சல்போலுந் துதிக்கையை எதிராகச்சுற்றிவீசி கோபங்கொண்டுகுதிரைகளையொன்றோடொன்றுமோதும்படிதள்ளி வாசனைபொருந்திய மதமானது பிரவாகம்போல் முற்பட்டோட யானைவந்துகொண்டிருக்கிறது.(எ-று) மதவெற்பு-பின்மொழி உவமையாகுபெயர், உருவகமுமாம். ௱௰௧

இடியுற்றெழுமொலியிற்றிசையிபமுட்கிடவடியிற் .. .. *
படியுக்கறநெளியப்படர்பவனக்கதிவிசையிற் .. .. *

உரறல்-கோபித்தல்.

கடிதுற்றடுசெயலிற்கிளர்கடலிற்படுகடையின் .... *
முடிவிற்கனலெனமுற்சினமூட்டிக்கடுகியதே .... *

(இதன்பொருள்.)

மேற்சொன்னயானை இடிபோல் வீரிட்டமுழக்கத்தால் திக்கு
களிலிருக்கின்ற யானைகள்பயத்தையடையவும், அதன் அடிக
ளால் பூமியானது குழிந்துநெளியவும், அது போகும்விசையா
ல் சண்டமாருதத்தின் விரைவையொப்பவும், விலாத்துகொல்
லுஞ்செய்கையில் விளங்குங்கடலில்தங்கிய வடவாமுகாக்கினி
போலவும் கோபம் - மேற்கொண்டு விரைவிற்சென்றது.—
(எ-று) (௱௰௨)

மாடுற்றணையிவுளிக்குலமறியச்செறிவயிரக் .... *
கோடுற்றிருபிளவிட்டறுகுறைகைக்கொடுமுறியச் .... *
சாடுற்றிடுமதில்தெற்றிகள்சரியப்புடையணிசெற் .... *
றோடுற்றகல்வெளியுற்றதவ்வடர்கைக்குலவரைமேய .... *

(இதன்பொருள்)

சமீபத்தில்வருகின்ற குதிரைக்கூட்டங்களைக் கிட்டி-அழுந்தமா
கிய வச்சிரத்தாற்செய்ததுபோன்ற கொம்பினால் இருதுண்டா
க்கி அதிலொருகுறையைத் துதிக்கையில் எடுத்துக்கொண்டும
தில்கள் இடியவும், திண்ணைகள்சரியவும் மோதி இருபுறத்திலுந்
தொங்குகின்ற மணிகளைத்தள்ளி ஆடுதல்செய்து வெளிப்புறத்
தில்போயிற்று-போர்செய்யுங்கையையுடையசிரேஷ்டம்பொ
ருந்திய மலைபோன்ற யானை.—(எ-று) (௱௰௩)

பாவக்கொடுவினைமுற்றியபடிறுற்றடுகொடியோர் .. .. *
நாவுக்கரசெதிர்முற்கொடுநணுகிக்கருவரைபோ .... *
லேவிச்செறுபொருகைக்கரியினையுய்த்திடவெருளார் .... .. *
சேவிற்றிகழ்பவர்பொற்கழல்தெளிவுற்றனர்பெரியோர். .. *

(இதன்பொருள்.)

கொடிதாகிய பாவமானசெய்கையில் முதிர்ந்திருக்கின்ற பொ
ய்யை உடைய துஷ்டர்களாகிய சைனர்கள் பெரியோராகியதி
ருநாவுக்கரசுஸ்வாமிக்கு எதிரே கரியமலையொன்றை கொண்டு
வந்து ஏவினதுபோல யானையையேவ - அதற்குப் பயப்ப
டாமல் ரிஷபவாகனத்தில் எழுந்தருளுகின்றபரமசிவனது அழ
கியபாதங்களைத் தியானஞ்செய்தார்.—(எ-று) செறுபொரு
கைக்கரி - கோபித்துத்தாக்குகின்ற கையை உடைய யானை.
சே-ரிஷபம். (௱௰௪)

(வேறு.)

அண்ணலருந்தவவேந்தானைதம்மேல்வரக்கண்டு .. .. .. *
விண்ணவர்தம்பெருமானைவிடையுகந்தேறும்பிரானைச் .. *
சுண்ணவெண்சந்தனச்சாந்துதொடுத்ததிருப்பதிகத்தை .. *
மண்ணுலகுய்யவெடுத்துமகிழ்ச்சியுடன்பாடுகின்றார் .... *

(இதன்பொருள்)

பெருமைபொருந்திய அரியதவத்தையுடைய திருநாவுக்கரசு சுவாமி யானையானது தம்மேல்வரப்பார்த்துத் தேவர்களுக் குநாதராய் ரிஷபத்திலவிரும்பியெழுந்தருளுகின்ற பரமசிவ னைக்குறித்துச் சுண்ணவெண்சந்தனச்சாந்தென்றுமுதலில்எடு த்துச்செய்யப்பட்ட ஒரு திருப்பதிகத்தைநிலைபெற்ற உலகத் தார்பிழைக்கும்படியாகமகிழ்ச்சியோடுபாடுகின்றார்.(எ-று)சு ண்ணம்-நீறு சந்தனச்சாந்து-மீமிசையாய்நின்றுபூச்சு என்னு ம்பொருளைக் கொடுத்தது. ஆதலின் நீறுதிய வெண்பூச்சு என் றுகொள்க. (௱௰௫)

வஞ்சகர்விட்டசினப்போர்மதவெங்களிற்றினைநோக்கிச் .. *
செஞ்சடைநீண்முடிக்கூத்தர்தேவர்க்குந்தேவர்பிரானார் .. *
வெஞ்சுடர்மூவிலைச்சூலவீரட்டர்தம்மடியோநா .. .. *
மஞ்சுவதில்லையென்றென்றேயருந்தமிழ்பாடியறைந்தார் .. *

(இதன்பொருள்)

வஞ்சகராகிய சமணரால் அனுப்பப்பட்ட கோபத்தையும் போர்செய்தலையும் மதத்தையும் உடைய வெவ்விதாகியயானை யைப் பார்த்துச் சிவந்தசடைகளை நீண்டமுடியாகச்செய்து கொண்ட கூத்தராகியும் மேலான தேவர்களுக்கெல்லாந்தேவ ராகியும், வெப்பமாகிய கிரணத்தையுடைய மூன்றுகவருள்ள தாயிருக்கின்ற சூலத்தைஉடையவருமாகியவீரட்டேசுரர்க்கு நாம் அடியோமாயிருக்கின்றோம் ஆதலால் எதற்கும் நாம்பய ப்படவேண்டியதில்லையென்று அரிய தமிழ்ப்பதிகம்பாடி ய ருளினார்.—(எ-று) (௱௰௬)

தண்டமிழ்மாலைகள்பாடித்தம்பெருமான்சரணாகக் .... *
கொண்டகருத்திலிருந்துகுலாவியவன்புறுகொள்கைத் .. *
தொண்டரைமுன்வலமாகச்சூழ்ந்தெதிர்தாழ்ந்துநிலத்தி .. *
லெண்டிசையோர்களுங்காணவிறைஞ்சியெழுந்ததுவேழம். *

(இதன்பொருள்.)

யானையானது-இன்பத்தைக்கொடுக்கின்ற தமிழ்ப்பதிகத்தை ப்பாடித் தமக்கு ஆண்டவராகியபரமசிவனே கதியென்றுகரு த்திலெண்ணி அன்புபெருகிய திருநாவுக்கரசுசுவாமியை தே

ராகவந்து வலமாகச்சுற்றி எதிராகப் பூமியில்தாழ்ந்து வணங்கி எட்டுத்திசையிலுள்ளவர்களுங் காணும்படிபோயிற்று. (எ-று)

ஆண்டவரசைவணங்கியஞ்சியவ்வேழம்பெயர்த் .... *
தூண்டியமேன்மறப்பாகர்தொடங்கியடர்த்துத்திரித்து.....*
மீண்டுமதனையவர்மேன்மிறைசெய்துகாட்டிடவீசி ... *
யீண்டவர்தங்களையேகொன்றமணர்மேலோடிற்றெதிர்ந்தே.

(இதன்பொருள்)

அந்தயானையானது திருநாவுக்கரசுசுவாமியைக்கண்டுபயந்து வணக்கஞ்செய்து அப்புறம்போக அதன்மேல் இருந்து நடத்துகின்ற வலியபாகர்கள் திரும்பவும் அந்த யானையை அவர்மேலாக அங்குசத்தால்குத்தித்திருப்பிக்கொல்லவேண்டியகுறிப்பைக்காட்ட அது அப்படிசெய்யாமல் அவர்களைத் துதிக்கையால் எடுத்துவீசிக்கொன்றுவிட்டுச் சமணர்கள்மேல் எதிர்க்க ஓடியது.—(எ-று) (௫௰௮)

ஓடியருகர்கடம்மையுழறிமிதித்துப்பிளந்து .. ..*
நாடிப்பலரையுங்கொன்றுநகரங்கலங்கியழுக...... ....*
நீடியவேலைகலக்குநெடுமந்தரகிரிபோல .... *
வாடியவியானையம்மன்னற்காகுலமாக்கியதன்றே ....*

(இதன்பொருள்.)

ஓட்டங்கொண்டு சைனர்களை ஒருவர்மேலொருவராகத்தள்ளி மிதித்துக் காலைக்கிழித்தெறிந்து தேடித்தேடி இவ்வாறுகப்பலமனிதரையுங்கொன்று அந்தப்பட்டணத்திலுள்ள மற்றையோர்கள் கலக்கத்தை அடைந்து வருந்த நீண்டிருக்குங்கடலை முற்காலத்தில் மதித்திட்ட நெடிய மந்தரகிரிபோலத் திரிகின்ற தன்மையை உடைய அந்தயானையானது அப்பல்லவராசனுக்குத் துன்பத்தை உண்டாக்கியது.—(எ-று) (௫௰௯)

யானையின்கையிற்பிழைத்தவவ்வமண்கையர்களெல்லா ....*
மானமழிந்துமயங்கிவருந்தியசிந்தையராகித் .. ..*
தானைநிலமன்னன்முன்பிற்றனித்தனிவீழ்ந்துபுலம்ப, மேன்மை
நெறிவிட்டவேந்தன்வெகுண்டினிச்செய்வதெனென்றான். *

(இதன்பொருள்)

யானையின்கையில்நின்றும் பிழைத்த வஞ்சனைபொருந்தியசமணர்களெல்லாரும் மானமழிந்து பயத்தையடைந்து வருந்துகின்றமனதை உடையவர்களாகிச்சேனைகளுக்கும்பூமிக்கும் தலைவனாகிய பல்லவனுடைய பாதத்தில் ஒவ்வொருவராக விழு

ந்து புலம்ப-உயர்ந்ததருமவழியைவிட்ட அவ்வரசன் மிகவுங் கோபங்கொண்டு இனிச்செய்யவேண்டியதென்னவென் றுகேட்டான்.—(எ-று)(பாதத்தில்விழுந்து) என்பதற்கு-ஆசாரியர்களொழிந்த சமணர்களென்று பொருள்பெற்றும். இவ்வமண்கையர்களென்றும்பாடம்- கொடுஞ்செய்கையில் ஓரியமாயிருக்கின்ற சைனர்களென்று பொருள்கொள்க. (௱௨௰)

தங்கள்சமயத்தினின்றேறதாடியமுட்டிநில்லார்.. .... *
லெங்களைஜிறோழியயானையாலிவ்வண்ணநின்சீர்ப் .. .. *
பங்கப்படுத்தவன்போகப்பரிபவற்றிருமனைக்குப் .... .. *
பொங்கழல்போக்வதன்பின்புகையகன்றுலெனவென்றார் .. *

(இதன்பொருள்.)

நம்முடையசமயத்தில்நின்றும் ஆராய்ந்துகொண்டமந்திரோச்சாரணபலத்தால்-எங்களுடைய வல்லமைகெடயானையினால் இந்தப்பிரகாரம் உம்முடைய கீர்த்தியைக்குலைத்த தருமசேனர் இறந்தால் பற்றுகின்ற அக்கினி அவித்தால் அதன்பின்புபுகையானது ஒழிவது எப்படியோ அப்படி உமக்குத்துக்கம் ஒழியும் என்றார்.—(எ-று) எதிரேறு-வலி. (௱௨௧)

அல்லிருள்ளன்னவர்கூறவரும்பெரும்பாவத்தவன்றான் .... *
றொல்லைச்சமயமழித்துத்துயரம்விளைத்தவன்றன்னைச் [லோர்
சொல்லுமினிச் செய்வதென்னச் சூழ்ச்சிமுடிக்குந் தொழி
கல்லுடன்பாசம்பிணித்துக்கடலிடைப்பாய்ச்சுகவென்றார்... *

(இதன்பொருள்.)

இராக்காலத்தின் சம்பந்தமான இருள்போன்ற உடலையுடைய சமணர்கள்சொல்லியதும், மகாபாதகஞ்செய்கிறதற்கு ஏற்பட்ட பல்லவராசன் அநுதியாயிருக்கின்ற நம்முடையமதத்தை அழித்துநமக்கெல்லாந்துன்பத்தை உண்டாக்கிய தருமசேனனை இனிச்செய்யவேண்டியதென்ன. அதைச்சொல்லுமென்று கேட்கக் கொடியசெய்கையைச்செய்கிறதற்கு வேண்டியதந்திரத்தை முன்னமேமுடித்திருக்கின்றசமணர்கள் தருமசேனனைக் கல்லோடுசேர்த்துக் கயிறுகொண்டு கட்டிக் கடலில்தள்ளவேண்டுமென்றுசொன்னார்கள்.—(எ-று) (௱௨௨)

ஆங்கதுகேட்டவரசனவ்வினைமாக்களைநோக்கித் .... *
தீங்குபுரிந்தவன்றன்னைச்சேமமுறக்கொண்டுபோகிப் .. .. *
வாங்கொருகல்லிலணைத்துப்பாசம்பிணைத்தோர்படகில் .. *
வீங்கொலிவேலையிலேற்றிவீழ்த்துமினென்றுவிடுத்தான் .. *

(இதன்பொருள்)

அந்தவார்த்தையைக்கேட்ட பல்லவராசன் கொலைத்தொழில் செய்வோரைப்பார்த்து நம்முடையமதத்தினின்றும் நீங்குதலாகிய கொடியசெய்கையை உடையதருமசேனரைக் காவலோடுகொண்டுபோய் ஒப்பற்றகனமாகிய ஒருகல்லோடுசேர்த்துக் கயிறுகொண்டுகட்டி ஒருபடகிலேற்றியொலிமிகுந்தசமுத்திரத்தில் அழுத்தும்படிவிடுங்களென்றுசொல்லி அனுப்பினான்.—(எ-று) (௱௨௩)

அவ்வினைசெய்திடப்போகுமவருடன்போயருகந்த் .... *
வெவ்வினையாளருஞ்சென்றுமேயவிடநாவுக்கரசர் .... .. *
செவ்வியதாந்திருவுள்ளஞ்சிறப்பவவருடன்சென்றார் .... *
பவ்வத்தின்மன்னவன்சொன்னபடியேமுடித்தார்பதகர் ..*

(இதன்பொருள்.)

மேற்சொல்லியபிரகாரங் கொடுந்தொழிலைச் செய்யப்போகின்ற கொலைக்காரரோடு கொடியசூத்திரர்களாகிய சமணர்களும் போய்க்கொண்டிருக்கத் திருநாவுக்கரசு சுவாமி முன்னேதானே செம்மையை உடையதாயிருக்கின்ற தமது திருவுள்ளமானது பின்னுமகிழ்ச்சியை அடைய அவர்களோடு எழுந்தருளினார்-பாவியாகியபல்லவன்சொன்னபடியே கொலைக்காரப்பாதகர் கடலில்தள்ளினார்கள்.—(எ-று) (௱௨௪)

அப்பரிசவ்வினைமுற்றியபாதகர்நீங்கியபின்ன ....*
வொப்பருமாக்கடல்புக்கவுறைப்புடை மெய்த்தொண்டர்தாமு
மெப்பரிசாயினுமாகவேத்துவனெந்தையையென்று ....*
செப்பியவண்டமிழ்ந்தன்னுற்சிவனஞ்செழுத்துந்துதிப்பார். *

(இதன்பொருள்)

அரசன்சொல்லியபடி கொலைக்காரர்கள் அத்தொழிலைச்செய்துவிட்டுப்போனபின்பு-ஒப்பில்லாத பெரியகடலிலே இடப்பட்ட உறுதியோடுமெய்மைபொருந்திய திருநாவுக்கரசுசுவாமி எனக்கு என்னசெய்வதாலும் வரட்டும் என்றுண்டவனைஸ்தோத்திரஞ்செய்வேனென்று வளம்பொருந்தியதமிழால் பரமசிவனுடைய ஐந்தெழுத்தையும் துதிப்பாராயினார்.—(எ-று)

(வேறு.)

சொற்றுணைவேதியனென்னுந்தூய்மொழி.... .... *
நற்றமிழ்மாலையாநமச்சிவாயவென் .... *

றற்றமுன்காக்குமைந்தெழுத்தையன்பொடு .... *
பற்றியவுணர்வினாற்பதிகம்பாடினார் .... *

(இதன்பொருள்.)

சொற்றுணைவேதியனென்னும் பரிசுத்தமாகியமொழியைமுத லிலெடுத்து நல்லதமிழ்மாலையாக ஆபத்துவேளையில்நம்போ ல்வாரைக்காக்கின்ற நமச்சிவாயவென்னும் பஞ்சாட்சரிமந்திர த்தைப்பாடல்களின் அந்தந்தோறும்வைத்துப் பிடிப்பாகிய வுணர்ச்சியும் அன்பும்பொருந்தப்பதிகம்பாடி யருளினார்.—(எ-று) (௱௨௬)

பெருகியவன்பினர்பிடித்தபெற்றியா .... *
லருமலரோன்முதலமரர்வாழ்த்துதற் .. .. *
கரியவஞ்செழுத்தையுமரசுபோற்றிடக் .... .. *
கருநெடுங்கடலினுட்கன்மிதந்ததே .. .. *

(இதன்பொருள்)

அன்புநிறைந்த திருநாவுக்கரசுசுவாமி உறுதியாகப்பெற்றுக் கொண்டபத்தியின்தன்மையால்-அரியபிரமன்முதலாகியதே வர்கள்வாழ்த்துகிறதற்கு அருமையாகிய பஞ்சாட்சரிமந்திரத் தைத்திருநாவுக்கரசுசுவாமிஉச்சரிக்கக்கருமையாகியநீண்டகட லிலே கல்லானதுமிதந்தது.—(எ-று) (௱௨௭)

அப்பெருங்கல்லுமங்கரசுமேல்கொளத் .... *
தெப்பமாய்மிதத்தலிற்செறிந்தபாசமுந் . .... *
தப்பியததன்மிசையிருந்ததாவில்சீர் ....*
மெய்ப்பெருந்தொண்டனார்விளங்கித்தோன்றினார்

(இதன்பொருள்)

அந்தக்கல்லும் திருநாவுக்கரசுசுவாமிமேற்புறத்திலிருக்கத்தெ ப்பமாகமிதந்தபடியால் கட்டப்பட்டிருக்குங்கயிறும் அற்று ப்போக-அதன்மேலாகக் குற்றமற்றசிறப்பினை உடையமெய் மையாகிய பெருமைபொருந்திய திருநாவுக்கரசுசுவாமி விள ங்கிக்காட்சியுற்றார்.—(எ-று) (௱௨௮)

இருவினைப்பாசமுமலக்கலார்த்தலின் .... *
வருபவக்கடலில்வீழ்மாக்களேறிட....... .... *
வருளுமெய்யஞ்செழுத்தரசையிக்கட .. .. *
லொருகன்மேலேற்றிடலுரைக்கவேண்டுமோ .. *

[௨௨]

(இதன்பொருள்.)

நல்வினைதீவினையென்னுங் கயிறுகொண்டு மும்மலமாகிய கல்லிலேகட்டியபடியால் பிறப்பாகிய கடலிலேவிழுந்திருக்கின்ற மனிதர்கள் அதில்நின்றும் ஏறும்படிசெய்கின்ற உண்மையாகிய பஞ்சாக்ஷரமானது திருநாவுக்கரசுசுவாமியை இந்தநீர்வடிவமாகிய கடலில்நின்றும் ஒருகல்லிலே யேற்றியதைக்குறித்துச் சொல்லவேண்டுமோ. (௱௨௯)

அருணயந்தஞ்செழுத்தேத்தப்பெற்றவக் .... *
கருணைநாவரசினைத்திரைக்கரங்களாற் .... *
றெருளுணர்நீர்மையிற்சிரத்திற்றாங்கிட.... .. .... *
வருணனுஞ்செய்தனன்முன்புமாதவம் .... *

(இதன்பொருள்.)

அன்பினாலே கசிந்த பஞ்சாட்சரமந்திரத்தை யேத்தும்படியாகப்பெற்ற-உயிர்கள்மேல் கிருபையை உடைய அந்தத்திருநாவுக்கரசுசுவாமியை அலைகளாகிய கைகளால் உணர்ச்சியுள்ள மார்க்கத்தின் தன்மையோடு சிரசிலேதாங்க-வருணனும் முற்காலத்தில்மகத்தாகிய தவத்தைச்செய்தான்போலும்.(எ-று)

வாய்ந்தசீர்வருணனே வாக்கின்மன்னனைச்... .....*
சேர்ந்தடைகருங்கலே சிவிகையாயிட...... ..*
வேந்தியேகொண்டெழுந்தருளுவித்தனன் ... *
பூந்திருப்பாதிரிப்புலியூர்ப்பாங்கரில்..... ...*

(இதன்பொருள்)

சீர்பொருந்திய வருணராசன்தானே திருநாவுக்கரசுசுவாமியை அவர்சேர்ந்திருந்த கருங்கல்லே ஏறுஞ்சிவிகையாகத் தாங்கிக்கொண்டு எழுந்தருளும்படிசெய்தான்-அழகிய திருப்பாதிரிப்புலியூரென்னும் ஸ்தலத்தின்புறத்தில்.(எ-று, (௱௩௧)

அத்திருப்பதியினிலணைந்தவன்பரை .:.... ... .. *
மெய்த்தவக்குழாமெலாமேவியார்த்தெழ ... *
வெத்திசையினுமரவென்றுமோசைபோற்.. ..*
றத்துதிர்ப்பெருங்கடல்தானுமார்த்ததே .. .. *

(இதன்பொருள்.)

அந்தத்திவ்வியதேசத்தில் வந்தடைந்த திருநாவுக்கரசுசுவாமியை மெய்மைபொருந்திய தவத்தையுடைய சைவக்கூட்டமெ

ல்லாம் சந்தோஷித்தால் முழங்கிச்சூழ்ந்துகொள்ள- நாலுதிக்குகளிலும் அர அரவென்னும் ஓசையை அவ்வடியார்கள்முழக்குவதுபோல் நீர்களாயிற்புரள்கின்ற பெரியசமுத்திரமும் முழங்கியது (எ-று) அருள்வழி உண்டாகவென்றுமுனா. (௱௩௨)

தொழுந்தகைநாவுக்கரசுதொண்டர்முன் . ... *
செழுந்திருப்பாதிரிப்புலியூர்த்திங்கள்வெண் .. .. *
கொழுந்தணிசடையனைக்கும்பிட்டன்புற .... *
விழுந்தெழுந்தருள்நெறிவிளங்கப்பாடுவார் .... *

(இதன்பொருள்)

யாவராலுந் தொழப்படுந்தன்மையை உடைய திருநாவுக்கரசுசுவாமியும் அடியார்களோடு செழுமைபொருந்திய திருப்பாதிரிப்புலியூரில் வெண்மையுற்ற மூன்றாம்பிறையைத்தரித்த சடையை உடைய பரமசிவனைக்கும்பிட்டு அன்போடுபூமியில் படிந்துவணங்கி எழுந்தும், சுவாமியின்கிருபையோடுசெய்யப்பட்ட ஆகமவழியானது எப்போதும் விளங்கும்படியாகப் பாடினார்.—(எ-று) அருள்வழிஉண்டாகவென்றமுனா.(௱௩௩)

(வேறு.)

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாகியெனையெடுத்து .. .. *
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்கட்கென்று *
வான்றாழ்புனற்கங்கைவாழ்சடையானைமற்றெவ்வுயிர்க்குஞ் . *
சான்றாமொருவனைத்தண்டமிழ்மாலைகள்சாற்றினனே .... *

(இதன் பொருள்.)

(ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாய்) என்றுமுதலில் எடுத்து (தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்கட்கென்று) முடித்து ஆகாயத்தினின்றும் இறங்குவதற்கு ஏதுவாயிருந்த கங்காதேவிதங்கிய சடையை உடைய பரமசிவனை மற்றை எல்லாவுயிர்களுக்கும் சாட்சியாயிருந்து அவைகள்செய்யும் எல்லாத்தொழில்களையும் பார்த்துக்கொண்டிருக்கின்ற சுவாமியைக்குறித்து இதமாயிருக்கின்ற தமிழ்ப்பதிகத்தைச்சாற்றினார் —(எ-று) (௱௩௪)

மற்றுமின்னையவண்டமிழ்மாலைகள்பாடிவைகி ... . *
வெற்றிமழவிடைவீரட்டர்பாதமிகநினைவி ... . *
உற்றதொர்காதலினங்குநின்றேகியொன்னார்புரங்கள் .... *
செற்றவர்வாழுந்திருவதிகைப்பதிசென்றடைவார் .... .. *

(இதன்பொருள்)

பின்னும் இப்படிப்பட்ட வளம்பொருந்திய தமிழ்ப்பதிகங்களைப்பாடிச் சிலநாள் அவ்விடத்தில்வாசஞ்செய்து வெற்றிகொண்ட இளமையாகிய ரிஷபத்தை வாகனமாகவுடைய வீரட்டேசருடையபாதத்தை வணங்குவதற்கு மிகவும்மனதில் ஆசைகொண்டிருக்கிறபடியால் அவ்விடத்தில் நின்றும் புறப்பட்டு அடையார்களுடைய திரிபுரங்களை எரித்துவென்ற பரமசிவன் வீற்றிருக்கின்ற திருவதிகையென்னும்ஸ்தலத்தை அடைந்தார். (எ-று) (௩௭௫)

தேவர்பிரான்றிருமாணிக்குழியுந்தினைநகரு .... *
மேவினர்சென்றவிரும்பியசொன்மலர்கொண்டிறைஞ்சிப் *
பூவலர்சோலைமணமடிப்லைப்பொருண்மொழியின் ...... *
காவலர்செல்வத்திருக்கெடிலத்தைக்கடந்தணைந்தார் .... *

(இதன்பொருள்.)

திருநாவுக்கரசுசுவாமி தேவர்களுக்கு இறைவராகிய கைலாசபதிவீற்றிருக்கும் திருமாணிக்குழியென்னும்ஸ்தலத்தையும், தினைநகரென்னும் ஸ்தலத்தையும் விருப்பங்கொண்டு அடைந்து யாரும்விரும்பத்தக்கபாவாகியமாலையைச்சாத்திவணங்கி-சோலையில்மலர்ந்திருக்கின்ற புஷ்பங்களின் வாசனையானது தமது பாதங்களை மணமுள்ளவைகளாகச்செய்ய - ஸம்பத்தை உடைய திருக்கெடிலமென்னும் நதியைத் தாண்டிச்சென்றார். (எ-று)

வெஞ்சமண்குண்டர்கள்செய்வித்ததீயவிறைகளெலா ....*
மெஞ்சவென்றேறியவின்றமிழீசரொழுந்தருள ....*
மஞ்சிவர்மாடதிருவதிகைப்பதிவாணரெல்லாந் ....*
தஞ்செயல்பொங்கத்தழங்கொலிமங்கலஞ்சாற்றலுற்றார் .. *

(இதன்பொருள்)

கொடியசமணர்கள்செய்வித்த குரூரமாகிய பொல்லாங்குகளெல்லாம் குறையும்படியாக அவைகளைவென்று சைவமதத்திற்பிரவேசித்த திருநாவுக்கரசுசுவாமி எழுந்தருளிவர-மேகங்கள்தவழ்கின்ற மேல்வீடுகளை உடைய திருவதிகையில் வாழ்ந்திருக்கின்றவர்களெல்லாரும் தங்களுடைய மங்களகரமான செய்கைகளெல்லாம் விர்த்தியாக மிகவுமுழங்குகின்ற மங்களவாத்தியஞ்செய்தார்கள்.—(எ-று) (௩௭௭)

மணிநெடுந்தோரணம்வண்குலைப்பூகமடற்கதலி .. .... *
யிணையுறநாட்டியெழுநிலைக்கோபுரந்தெற்றியெங்குந் .. ..*
தணிவில்பெருகொளித்தாமங்களூற்றிச்செஞ்சாந்துநீவி ... *
யணிநகர்முன்னையணிமேலணிசெய்தலங்கரித்தார் ....*

(இதன்பொருள்.)

நவரத்தினமயமாகிய நெடியதோரணங்களையும், வளமாகிய குலைகளையுடைய கமுகமரங்களையும், மடல்களையுடைய வாழைமரங்களையும் வரிசைபொருந்தநாட்டி-எழுநிலையை உடைய கோபுரங்களிலும், திண்ணைகளிலெங்கும் குறைவில்லாமற் பரவுகின்றபிரகாசத்தை உடையமணிமாலைகளைத்தொங்கவிட்டுப் பூமியைச்சந்தனத்தால் மெழுக்கிட்டு-அழகுபொருந்திய அந்தநகரத்தை முன்னுள்ள அலங்காரங்களுக்கும் அதிகமாக அலங்கரித்தார்கள் —(எ-று). (௱௬௮)

மன்னியவன்பின்வளநகர்மாந்தர்வயங்கிழையா ... . *
ரின்னியனாதமுமேழிசையோசையுமெங்கும்விம்மப், பொன்னியல்சுண்ணமும்பூவும்பொரிகளுந் தூவியெங்குந், தொன்னகரின்புறஞ்சூழ்ந்தெதிர்கொண்டனர்தொண்டரையே ..,*

(இதன்பொருள்)

நிலைபெற்ற அன்பினையுடைய வளமுள்ள அந்தநகரத்திலிருக்கும் மனிதர்களும் விளங்குகின்ற ஆபரணங்களைத்தரித்தமாதர்களும், இனிமையாகியதன்மையை உடைய வாத்தியங்களின் முழக்கமும், ஏழுசுரங்களையுடைய இசையும், எல்லாப்பக்கங்களிலும் மிகுதியுமுண்டாகப்பொன்மயமாகியபொடிகளையும் புஷ்பங்களையும் பொரிகளையுமெவ்விடத்திலும் இறைத்துப் பழமையாகிய அந்நகரத்தின்புறத்திலேவந்து கூட்டமாய்த்திருநாவுக்கரசுஸ்வாமியையெதிர்கொண்டார்கள். (எ-று)(௱௬௯)

தூயவெண்ணீறுதுதைந்தபொன்மேனியுந்தாழ்வடமும் .. *
நாயகன்சேவடிதைவருஞ்சிந்தையுநைந்துருகிப் .... .. *
பாய்வருங்கண்ணீர்பொழிகண்ணுமம்பதிகச்செஞ்சொன் *
மேயசெவ்வாயுமுடையார்புகுந்தனர்வீதியுள்ளே .... .. *

(இதன்பொருள்.)

பரிசுத்தமாகிய வெள்ளியவிபூதியால் புதையுண்டபொன்போலுந்திருமேனியையும், தாழ்வடத்தையும் பரமசிவனுடைய சிவந்திருக்கின்றதிருப்பாதங்களை நினைத்துக்கொண் டிருக்கின்ற

மனதையும், கனிவாய்உருக்கத்தை அடைந்து அன்பென்றும் பொருள்பாய்ந்தோடுகிறதுபோல் நீரைப்பொழிகின்ற கண்களையும் இலக்கணம் அமைந்தசொற்களாற் செய்யப்பட்டுள்ள பதிகங்களை உச்சரிக்கும்சிவந்தவாயையும் உடைய திருநாவுக்கரசுசுவாமி வீதியினுள்ளேபோயினார் — எ-று) (௱௪௰)

கண்டார்கள்கைதலைமேற்குவித்திந்தக்கருணைகண்டால் . . . *
மிண்டாயசெய்கையமண்கையர்தீங்குவிளைக்கச்செற்ற . . . . *
முண்டாயினவண்ணமெவ்வண்ணமென்றுரைப்பார்கள்பின்னு
தொண்டாண்டுகொண்டபிரானைத்தொழுதுதுதித்தனரே [ந்

(இதன்பொருள்.)

திருநாவுக்கரசுசுவாமியின்பக்கல்கண்டவர்கள் கைகளைத்தலைமேலாகக் குவித்துக்கொண்டு இவருடைய அன்பினை நோக்கியபோது கொடியதொழிலையுடைய கபடமுற்ற சமணர்கள் கொல்லும்படி அவர்களுக்குத்துவேஷமெப்படி உண்டாயிற்று என்று வருந்தியதுமல்லாமல் பரமசிவனால் தொண்டராக ஆட்கொள்ளப்பட்ட அவ்வடியவரைவணங்கித்துதியுஞ்செய்தார்கள்.(எ-று)

இவ்வண்ணம்போலவெனைப்பலமாக்களியம்பியேத்த . . . . *
மெய்வண்ணநீற்றொளிமேவுங்குழாங்கள்விரவிச்செல்ல ..... *
அவ்வண்ணநண்ணியவன்பரும்வந்தெய்தியம்பவரச் . . . . *
செவ்வண்ணர்கோயிற்றிருவீரட்டானத்தைச்சேர்ந்தனரே *

(இதன்பொருள்)

அடியார்கள்புகழ்ந்த இந்தப்பிரகாரம்போல் மற்றையோராகியபலரும் புகழ்ந்துவணங்க விபூதிப்பூச்சின்பிரகாசத்தால் உடலுக்குத்திவ்வியமான நிறத்தைப்பெற்றுக்கொண்ட சைவருடையகூட்டங்கள் பிரிவுபடாமற்கலந்துபோக முன்சொன்னபடியேதோன்றுகின்ற அன்பின்குறிகளோடுபொருந்திய திருநாவுக்கரசுசுவாமியும் வந்தடைந்து அழகிய பவளம்போலச் சிவந்த நிறத்தையுடைய பரமசிவனது திருவீரட்டானமென்னுங்கோயிலை அடைந்தார்.—(எ-று) (௱௪௨)

உம்பர்தங்கோனையுடையபிரானையுள்புக்கிறைஞ்சி .... .. *
நம்புறுமன்பினையப்பறுகாதலினூற்றிலோத்தே .... *
எம்பெருமான்றனையேழையெனுன்பண்டிகழ்ந்ததென்று *
தம்பரிவாற்றிருத்தாண்டகச்செந்தமிழ்சாற்றியாழ்ந்தார் ... *

(இதன்பொருள்)

தேவர்களுக்கு இறைவராகியும் நம்மை ஆட்கொண்டவராகியு

மிருக்கின்றகைலாசபதியைக்கோயிலுக்குள்புகுந்துவணங்கி அன்பினிளகுதலால் உண்டாகிய ஆசையானது அகத்திலடங்கிலற வுற எம்பெருமான் தன்னையேழையேன் நாள் பண்டிகழ்ந்த தென்று எடுத்துத்தமக்கிருக்கும் அன்பினால் திருத்தாண்டகத் தமிழைச் சுவாமியின்விஷயமாகச் சொல்லிக்களிகூர்ந்தார்.— (எ-று) தாண்டகம்-எண்சீரோரடியாசிரியவிருத்தம். (௱௪௩)

(வேறு.)

அரியயனுக்கரியானையடியவருக்கெளியானை ....*
விரிபுனல்சூழ்திருவதிகைவீரட்டானத்தமுதைத் .. .... *
தெரிவரியபெருந்தன்மைத்திருநாவுக்கரசுமனம் . .... *
பரிவுறுசெந்தமிழ்ப்பாட்டுப்பலபாடிப்பணிசெய்நாள் ....*

(இதன்பொருள்.)

விஷ்ணு பிர்மா இவர்களுக்கு அரியவரை அடியவர்களுக்கு எளியவராயிருக்கின்றவரை விரிந்தநீரையுடைய கெடிலநதியானது பக்கத்தில்வருகின்ற வீரட்டானமென்னுங்கோயிலில் வீற்றிருக்கின்ற அமிர்தம்போன்றவரைக்குறித்து யாவராலும் அறியக்கூடாதமகிமையை உடையதிருநாவுக்கரசுசுவாமிமனதிலன்புண்டாய்ச் செவ்வியதமிழ்ப்பாடல்களை அனேகமாகப்பாடிவழிபட்டுக்கொண்டிருக்கும்நாளையில்.—(எ-று) (௱௪௪)

புல்லறிவிற்சமணர்க்காப்பொல்லாங்குபுரிந்தொழுகும் ... *
பல்லவனுந்தன்னுடையபழவினைப்பாசம்பறிய .... *
வல்லலொழிந்தங்கெய்தியாண்டவரசினைப்பணிந்து .. ....*
வல்லமணர்தமைநீத்துமழவிடையோன்றாளடைந்தான் .....*

(இதன்பொருள்.)

அற்பமாகிய அறிவினையுடைய சைனர்களுக்காகப் பொல்லாங்கானசெய்கைகளைச் செய்துகொண்டிருந்த பல்லவராசனும் தன்னுடைய பழவினையாகிய கட்டுகள்விடுகிறதற்குக் காலம்வந்தபடியால் வலியசமணர்களைவிட்டு அவர்களுடைய போதனையால் உண்டாகிய துன்பம்நீங்கி-அவ்விடத்திற்குவந்து ஆட்கொள்பவராகியதிருநாவுக்கரசுசுவாமியைவந்தனஞ்செய்து பரமசிவனுடையபாதத்தைஅடையவேண்டிய முயற்சியைச்செய்தார்.—(எ-று) (௱௪௫)

வீடறியாச்சமணர்மொழிபொய்யென்றுமெய்யுணர்ந்த ..*
காடவனுந்திருவதிகைநகரின்கட்கண்ணுதற்குப் ....*

பாடலிபுத்திரத்திலமண்பள்ளியொடுபாழிகளுங் .... *
கூடவிடித்துக்கொணர்ந்துகுணதரவீச்சரமெடுத்தான் ... *

(இதன்பொருள்)

மோட்சமானது இப்படிப்பட்டதென்று அறிந்துகொள்ளாத சமணர்களுடையபோதனையைப்பொய்யென்று உண்மையான மார்க்கத்தை அறிந்துகொண்ட காடவனென்கிற அரசனும் திருவதிகையில் பரமசிவனுக்காகப் பாடலிபுத்திரநகரத்தில் கட்டப்பட்டு இருந்த சமணர்களுடைய கோயில்களையும் மடங்களையும் சேர இடித்துக் கற்களைக்கொண்டுவந்து (குணதரவீச்சரமென்னும்) கோயிலைத்திருவதிகையில்கட்டினான். (எ-று) அமண் - ஆகுபெயர். (௱சசு)

இந்நாளித்திருப்பணிகள்செய்கின்றவின்றமிழ்க்கு .... .. *
மன்னுனவாகீசத்திருமுனியுமதிச்சடைமேற் .... *
பன்னகமணிந்தவர்தம்பதிபலவுஞ்சென்றிறைஞ்சிச், சொன்ன
மத்தமிழ்புனைந்துதொண்டுசெய்வான்றொடர்ந்தெழுவார். *

(இதன்பொருள்.)

அப்படிப்பட்டநாளில் சுவாமிக்குத் திருத்தொண்டுசெய்கின்ற திருநாவுக்கரசுசுவாமியும், சந்திரனுலாவுகின்ற சடையின்மேல் பாம்பினைத்தரித்த பரமசிவன்வீற்றிருக்கின்ற எல்லாஸ்தலங்களுக்கும்போய் வழிபாடுசெய்து பிரசித்தமாகியதமிழ்ப்பாடல்களை ஸ்திரூபமாகச்செய்து தொண்டுசெய்யும் ஆசைகொண்டு எழுவதற்கு யத்தனப்பட்டார். — (எ-று) பன்னகமென்பது - தொடைநோக்கிப் பன்னகமென விகாரப்பட்டது. (௱சஎ)

திருவதிகைப்பதிமருங்குதிருவெண்ணெய்நல்லூரு .... *
மருளுதிருவாமாத்தூர்திருக்கோவலூர்முதலா .... *
மருவுதிருப்பதிபிறவும்வணங்கிவளத்தமிழ்பாடிப் .... *
பெருகுவிருப்புடன்விடையார்மகிழ்பெண்ணாடகமணைந்தார். *

(இதன்பொருள்.)

திருவதிகைக்குச் சமீபத்தில் இருக்கின்ற திருவெண்ணெய்நல்லூர் - திருவாமாத்தூர் - திருக்கோவலூர் முதலாகிய திருப்பதிகளையும், மற்றைத்திருப்பதிகளையும் போற்றுதல்செய்து வளம்பொருந்திய தமிழ்ப்பதிகம்பாடி - மிகுந்த விருப்பத்தோடு சுவாமிவீற்றிருக்கின்ற பெண்ணாடகமென்னும் ஸ்தலத்துக்குப்போயருளினார். — (எ-று) (௱சஅ)

கார்வளருமாடங்கள்கலந்தமறையொலிவளர்க்குஞ்.. .. .. .. *
சீருடையயந்தணர்வாழூஞ்செழும்பதியினகத்தெய்தி.... .. *
வார்சடையார்மன்னுதிருத்தூங்கானைமாடத்தைப் .... *
பார்பரவுந்திருமுனிவர்பணிந்தேத்திப்பரவினார்.... .....*

(இதன்பொருள்)

மேகங்கள்சஞ்சரிக்கின்ற மேல்வீடுகளில் வேதங்களின் ஓசையை உண்டாக்குகின்ற சிறப்புப்பொருந்திய பிராமணர்கள் வாழ்ந்திருக்கும் அந்தப்பெண்ணாடகமென்னும் ஸ்தலத்திற்கு வந்து நீண்டசடையினையுடைய பரமசிவன் எழுந்தருளியிருக்கும் திருத்தூங்கானை மாடமென்னும் ஆலயத்தை உலகத்தாரிவணங்கத்தக்க திருநாவுக்கரசுசுவாமி தொழுது ஸ்துதிசெய்தார்.—(எ-று) (௱௪௯)

புன்னெறியர்மமண்சமயத்தொடக்குண்டுபோந்தவுடல் ,. *
தன்னுடனேயுயிர்வாழத்தரியேனுஞ்தரிப்பதனுக்.. ......*
கென்னுடையநாயகநின்னிலச்சினையிட்டருளென்று. ..... *
பன்னுசெழுந்தமிழ்மாலைமுன்னின்றுபாடுவார்.... .... *

(இதன்பொருள்.)

இழிவாகிய நெறியை உடைய சமணருடைய சமயமாகிய கயிற்றால் கட்டுப்பட்டு-வருத்தமூற்றதேகத்துடனே உயிர்சீவித்திருக்கும்படியாகப் பொறுக்கமாட்டேன் ஆதலால் அடியேன் அவ்வுடலோடுகூடியிருப்பதற்கு எனக்குநாயகராகிய சுவாமியே உம்முடைய முத்திரையை எனக்கு இட்டு அருளிச்செய்யும் என்று குற்றமற்ற அழகிய தமிழ்ச்சொற்களால்செய்த தமிழ்ப்பதிகமாகிய மாலையைச் சந்நிதிக்குமுன்னே நின்று பாடுவாராயினார்.—(எ-று) (௱௫௰)

பொன்னார்ந்ததிருவடிக்கென்விண்ணப்பமென்றெடுத்து.. *
முன்னாகியெப்பொருட்குமுடிவாகிநின்றவனைத் .... *
தன்னாகத்துமைபாகங்கொண்டவனைச்சங்கரனை .... .. *
நன்னாமத்திருவிருத்தநலஞ்சிறக்கப்பாடுதலும் .... *

(இதன்பொருள்-)

பொன்னார்ந்த திருவடிக்கென் விண்ணப்பம் என்று முதலில் எடுத்து எல்லாப்பொருளுக்கு முதலுமுடிவுமாகி நின்ற சுவாமியைத் தம்முடைய திருமேனியில் உமாதேவியாருடைய ஒருபாகத்தைவைத்துக்கொண்டிருக்கிறவனா- நன்மையுடைய

பெயர்பெற்ற திருவிருத்தத்தை நலம்பொருந்தப்பாடுதலும்.
(எ-று) (௩௫௧)

நீடுதிருத்தூங்கானைமாடத்துநிலவுகின்ற .... *
வாடகமேருச்சிலையானருளாலோர்சிவபூத .... *
மாடொருவரறியாமேவாகீசர்திருத்தோளிற் ..... *
சேடுயர்மூவிலைச்சூலஞ்சினவிடையினுடன்சாத்த*

(இதன்பொருள்)

நிலைபெற்ற திருத்தூங்கானைமாடமென்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பொன்மலையை வில்லாகப்பிடித்த பரமசிவனுடைய கட்டளையால் பக்கத்தில் ஒருவர்க்குந்தெரியாமல் சிரேஷ்டமாகிய ஒரு பூதமானது திருநாவுக்கரசுசுவாமிகளினது அழகியதோளில் திரட்சியோடு உயர்வாகிய மூக்கவராகிய சூலாயுதத்தினது குறியையும், ரிஷபத்தினது குறியையும்சாத்த.—
(எ-று) (௩௫௨)

ஆங்கவர்தந்திருத்தோளிலார்ந்ததிருவிலச்சினையைத் .... *
தாங்கண்டுமனங்களித்துத்தம்பெருமானருணினைந்து ....*
தூங்கருவிகண்பொழியத்தொழுதுவிழுந்தார்வத்தா ..... *
லோங்கியசிந்தையராகியுய்ந்தெழுந்தேனெனவெழுந்தார். *

(இதன்பொருள்.)

திருநாவுக்கரசுசுவாமி தம்முடைய அழகியபுயத்தில் இடப்பட்ட சூலமுத்திரையைத் தாமேபார்த்து மனம்பூரித்து இப்படிச்செய்ததற்காகப் பரமசிவனுடையகிருபையைத்தியானித்து நீரைப்பெரியஅருவிபோலக்கண்கள்பொழியச்சாஷ்டாங்கமாகவந்தனஞ்செய்து உயர்வுற்றவுள்ளத்தைஉடையவராகிப்பாவத்தில்நின்றும்பிழைத்துக்கட்டைத்தேறினேனென்று எழுந்தார்.
(எ-று) (௩௫௩)

தூங்கானைமாடத்துச்சுடர்க்கொழுந்தினடிபரவிப் .... .. *
பாங்காகத்திருத்தொண்டுசெய்துபயின்றமருநாட் .. .. *
பூங்காமணங்கமழும்பொருவில்திருவரத்துறையும் .... *
தேங்காவின்முகிலுறங்குந்திருமுதுகுன்றமும்பணிந்தார் ..*

(இதன்பொருள்.)

திருத்தூங்கானைமாடமென்னும் ஆலயத்தில்பரமசிவனுடைய பாதத்தைவணங்கி நன்றாகத்திருப்பணிவிடையைச்செய்து தங்கியிருக்கும்நாளில் மலர்களையுடைய சோலையினிடத்துமண

ம்விசுபிறதற்கு ஆதாரமாகிய திருவரத்துறையையும், தேனையுடைய சோலையில் மேகங்கள்நித்திரைசெய்யும் திருமுதுகுன்றத்தையும் சென்று தரிசனஞ்செய்தார்.—(எ-று) திருமுதுகுன்றம்-விருத்தாசலம். (௱௫௪)

வண்டமிழ்மென்மலர்மாலைபுனைந்தருளிமருங்குள்ள .... *
தண்டுறைநீர்ப்பதிகளிலுந்தனிவிடையார்மேவியிடங் .. .... *
கொண்டருளுந்தானங்கள்கும்பிட்டுக்குணதிசைமேற் .. .. *
புண்டரிகத்தடஞ்சூழ்ந்தநிவாக்கரையேபோதுவார் .. .. *

(இதன்பொருள்)

வளமாகிய தமிழ்ச்சொற்களேமலர்களாகத்தொடுத்தபதிகமாகியமாலையைச்சாத்தி-அதைச்சூழ்ந்திருக்கும் குளிர்ச்சிபொருந்திய நீர்த்துறைகளையுடைய குளங்களையுடைய ஸ்தலங்களிலும் சென்று ஒப்பற்றரிஷபத்தை உடைய பரமசிவன் வீற்றிருக்கும் கோயில்களைக்கும்பிட்டுக் கிழக்குத்திசையில் தாமரைமலர்களையுடைய தடாகங்கள்சூழ்ந்த நிவாவென்னும் நதிக்கரையின்வழியாகவெழுந்தருளத்திருவுள்ளங்கொண்டார்.—(எ-று)

ஆனாதசீர்த்தில்லையம்பலத்தேயாடுகின்ற ...... *
வானாறொருபுடைபரக்குமலர்சடையாரடிவணங்கி .. *
ஊனாலுமுயிராலுமுள்ளபயன்கொளநினைந்து .. *
தேனாருமலர்ச்சோலைத்திருத்தில்லைமருங்கணைந்தார் *

(இதன்பொருள்)

குறைவில்லாத சிறப்பினையுடைய தில்லையில் பொன்னம்பலத்தில் நடனஞ்செய்கின்ற-ஆகாயகங்கையானது ஒருபக்கத்தில்தங்கியிருக்கும் விரிந்த சடையை உடைய பரமசிவனது பாதத்தைவணங்கித் தேகத்தாலும் உயிரினாலும் பெறவேண்டிய பயனைப் பெறும்படி நினைத்துத் தேன்நிறைந்த மலர்ச்சோலையை உடைய சிதம்பரத்தின் அருகாகிய இடத்தை அடைந்தார்.—(எ-று) (௱௫௫)

(வேறு)

நாவுக்கரசருமிருவர்க் கரியவர்நடமாடிய திருவெல்லைப்பால், மேவித்தலமுற மெய்யிற்றொழுதபின் மேன்மேலெழுகளிவரவோடுங், காவிற்களிமயில்மகிழ்வுற்றெதிரெதிராடக்கடிகமழ்கமலஞ்சூழ், வாவித்தடமலர்வதனம்பொலியுறுமருதத்தண்பணைவழிவந்தார்..... .... *

(இதன்பொருள்.)

திருநாவுக்கரசுசுவாமியும் பிரமன் விஷ்ணுவுக்கு அரியவராகிய நடேசர் திருக்கூத்துச்செய்தருளிய தில்லைத்தலத்தின் எல்லையை அடைந்து-தேகம்பூமியிற்பட வணங்கினபின்பு அன்பானதுவரவர அதிகப்பட விரைவுடனே சோலைகளில் களிப்பை உடைய மயில்கள் ஒன்றினோடொன்று எதிரெதிராக நர்த்தனஞ்செய்ய வாசனைபொருந்திய தாமரைமலர்சூழ்ந்த குளங்கள்அப்புஷ்பமாகிய முகத்தால் மகிழ்ச்சியை அடைகின்ற மருதநிலத்தின் குளிர்ச்சிபொருந்திய வயல்களின்வழியாக வந்தார்.—(எ-று) (௱௫௭)

முருகிற்செறியிதழ்முளரிப்படுகரின் முதுமேதிகள் புதுமலர்
மேயு, மருகிற்செறி வனமெனமிக்குயர்கழை யளவிற்பெருகி
ட வரிக்குப், பெருகிப்புடைமுதிர்தாளஞ் சொரிவன பெரி
யோரவர்திருவடிவைக்கண், டுருகிப்பரிவுறுபுனல்கண் பொழி
வனவெனமுன்புளவுளவயலெங்கும் .... *

(இதன்பொருள்)

வயதுமுதிர்ந்த எருமைகள் அன்றுமலர்ந்தமலர்களை மேய்கிறதற்கிடமாய்த் தேனையும், நெருங்கியிருக்கும் இதழையுமுடைய தாமரைப்புஷ்பங்களை உள்ளனவாகிய தடாகங்களின் அருகில் காடுபோல்மிகவும் உயர்ந்த மூங்கில்களின் அளவாகச் செழுமையோடு வளர்கின்ற கரும்புகள் கணுக்களில்நின்று உண்டாகித் தேறியமுத்துக்களைச்சொரிகின்றன-அவை திருநாவுக்கரசுசுவாமியின் திருவடியைப்பார்த்து உருக்கத்தை அடைந்து அப்போதுகண்ணில்நின்றும்நீர்த்துளிகள்பொழிவனபோலிருந்தன-வயல்களினருகெங்கும் இங்ஙனமே இருக்கின்றன. (எ-று) முதிர்தாளம்-ஆணிமுத்து. (௱௫௮)

அறிவிற்பெரியவரயல்நெற்பணை வயலவைபிற்படும் வகையணை
கின்றார், பிறவிப்பவநெறிவிடுவிரிருவினைபெருகித்தொடர் பி
ணியுறுபாசம், பறிவுற்றிடவிணையுமினென்றிருபுடைபயில்சூழ்சி
லைமிசைகுயில்கூவுஞ், செறிவிற்பலதருநிலையிற்பொலிவுறுதிரு
நந்தனவனமெதிர்கண்டார் .... *

(இதன்பொருள்.)

அறிவிற்சிறந்தோராகிய திருநாவுக்கரசுசுவாமி பக்கத்திலுள்ள நெல்விளைகின்ற வயல்கள் பின்னிட்டுப்போம்படிவருகின்றார்; அப்படிவரும்போது பிறவிக்குக்காரணமாயிருக்கின்ற தியய

ழியைவிட்ட பெரியவரோ அதிகப்பட்டு நெடுநாளாகத்தொடர்ந்து கட்டாயிருக்கின்ற பாசமானது எங்களுக்கும் போகும்படியாக வாருமென்று இருபுறத்திலும் கிளைகளின்மேல் இருந்து கூவுதல்போல் குயில்கூவுகின்ற நெருங்கியிருக்கிற பலமரங்கள் நிலையாகநின்று அதனாலே பிரகாசத்தை அடைந்திருக்கின்ற நந்தனவனத்தை எதிராகக்கண்டார்.—(எ-று) அலவ-பகுதிப்பொருள்விகுதி. (௱௫௧)

அவர்முன்பணிவொடுதொழுதக்கணைவுற வளிகொம்பரின் மிசையருகெங்குந், தவமுன்புரிதலில்வருந்தொண்டெனு நிலைதலைநின்றுயர் தமிழ்நிறையோரா, மிவர்தந்திருவடிவதுகண்டதிசயமெனவந்தெதிராரகரவென்றே, சிலமுன்பயின்மொழி பகர்கின்றனவளர்சிறைமென்கிளியெமடுசிறுபூவை ....*

(இதன்பொருள்.)

திருநாவுக்கரசுசுவாமி சோலைக்கு எதிர்ப்பட்டவுடனே வணங்கி நெருங்கிவர-மரக்கொப்புகளிலெவ்விடத்தும் முற்பிறப்பில் தவஞ்செய்திருந்தபடியால் கிடைத்திருக்கும் நிலையானதிருத்தொண்டினை முக்கியமாகநின்று நடத்துகிற உயர்வாகிய தமிழினை ஆண்டவர்விஷயமாகப் பாடுகின்ற இவ்வடியாருடைய அழகியவடிவைப்பார்த்து இத்தன்மைமிகவும் அற்புதமாயிருக்கிறதென்றெதிராகவந்து அரகரவென்று அவர்பொருட்டு மங்களமான வாழ்த்துமொழியினைக்கூறுகின்றன-வளருந்தன்மையை உடைய சிறையையும், மெல்லியதன்மையும் உடைய கிளிகளோடு சிறிய நாகணவாய்ப்புட்களும்.—(எ-று) (௱௫௨)

அஞ்சொற்றிருமறையவர்முன்பகர்தலு மவருந் தொழுதுமுனருள்கூரு, நெஞ்சிற்பெருகியமகிழ்வுங்காதலுநெறியம்பொடுமூளாதயமாறச், செஞ்சொற்றிருமறைமொழியந்தணர் பயில்தில்லைத்திருநகரொல்லைப்பான், மஞ்சிற்பொலிநெடு மதில்சூழ்குடதிசைமணிவாயிற்புறம்வந்துற்றார்..... .... *

(இதன்பொருள்.)

அழகாகியசொற்களால் தொடுக்கப்பட்ட வேதவாக்கியங்களை அச்சோலையிலிருக்கிற பட்சிகள் திருநாவுக்கரசுசுவாமிகேட்கும்படிசொன்ன அளவில் அவரும்வணக்கஞ்செய்து அருள்மிகுந்தநெஞ்சினிடமாகச் சந்தோஷமும் ஆசையும் பத்தியோடு கூடியபடியால் சொல்லும்வார்த்தைகள் நிலையில்நின்று மீறு

மாறச்செவ்விய சொற்களையுடைய அழகிய வேதவாக்கியங்களைக்கற்ற பிராமணர்கள் வாசஞ்செய்கின்ற தில்லைநகரத்தினெல்லையினுட்புறத்தில் தன்னிடத்தில்மேகங்கள் தவழ்தலால் அழகுபொருந்திய நெடியமதிலால் சூழப்பட்ட மேலைத்திசைக்கோபுரத்தின் அழகியவாசலை அடைந்தார்.—(எ-று) (௱௬௧)

அல்லற்பவமறவருளுந்தவ முதலடியாரெதிர்கொள வவரோடு,
மல்லற்புனல்கமழ்மாடேவாயலின் வழிபுக்கெதிர் தொழுதணை
வுற்றார், கல்வித்துறைபலவருமாமறைமுதல்கணகண்டுடையவ.
ர்கழலபேணுஞ், செல்வக்குடிநிறைநல்லவைப்பிடைவளர்சிவமே
தில்வியதிருவீதி.... ....*

(இதன்பொருள்)

துன்பத்தை உண்டாக்குகின்ற பிறப்பு ஒழிய அருள்செய்யும் தவத்தையுடையதிருநாவுக்கரசுசுவாமி அடியார்கள் எதிர்கொண்டுவந்துகாண-அவர்களோடுவளம்பொருந்தும்நீர்தங்கிய அகழியையருகிலுடைய வாசலின்வழியாகப்போய்க் கண்டவுடனேதொழுது பின்பு அடைந்தார்-அனேகந்துறைகளையுடைய பலகல்விகளையும்அரியமுதன்மையாயிருக்கின்றவேதங்களையும்நன்றாகஅறிந்துபரமசிவனுடையபாதத்தைவிரும்புகின்றசெல்வம்பொருந்திய குடிகள் நிறைந்திருக்கின்ற நலல இடங்களையுடைய மங்களம்பொருந்தியதிருவீதியில்.—(எ-று) (௱௬௨)

நவமின்சுடர்மணிநெடுமாலையுநறுமலர்மாலையுநிறைதிருவீதிப்
புவனங்களின்முதலிமையோர் நடமுடிபொருதுந்திய மணி
போகட்டிப், பவனன்பணிசெயவருணன்புனல்கொடுபணிமா
றவுமவைபழுதாமென், றெவருற்றொழுதெழுமடியார்திருவல
கிடுவார்குளிர்புனல்விடுவார்கள் . ... *

(இதன்பொருள்)

மின்னுகின்றகிரணங்களையுடைய ஒன்பதுவகைமணிகளாலுஞ்செய்யப்பட்ட மாலைகளும், வாசனைபொருந்திய புஷ்பமாலைகளும், நிறைந்துகிடப்பதற்கு இடமாகிய அழகிய வீதியில-பல புவனங்களிலு மிருக்கின்ற தேவர்கள் முதலாகிய பலவகையாருடைய ரத்னமிழைத்தகிரீடங்கள் ஒன்றோடொன்றுதாக்கிச்சிதறிஇறைந்துகிடக்கின்றமணிகளைவாயுபகவான் சேர்த்துக்குவித்துச்செப்பஞ்செய்யவும், வருணராசன் நீராக்கொண்டுதெளித்துப்பணிசெய்யவும், அவைகள் தகுதியுள்ளனவாயிருக்

த்வில்லையென்றுயாவராலுந்தொழப்படுந்தன்மையை உடைய
அடியவர்கள் திருவலகிட்டு நீர்கொண்டுவந்து தெளிப்பார்கள்.
—(எ-று) (௫௬௬)

மேலம்பரதலநிறையுங்கொடிகளில்விரிவெங்கதிர் நுழைவரிதா
குங், கோலம்பெருகியதிருவீதியைமுறை சூலவும்பெருமைய
ர்பணிவுற்றே, ஞாலந்திகழ்திருமறையின்பெருகொலி தலமார்
முனிவர்கடுதியோடு, மோலம்பெருகியநிலையேழ்கோபுர மு
ன்றயேகொடுதொழுதுள்புக்கார் ....*

(இதன்பொருள்.)

மேற்புறமாகிய ஆகாயப்பரப்புமுழுதும் நிறைந்துவிளங்குகி
ன்றகொடிகளால் விரிந்தவெப்பமாகிய சூரியனுடையகிரண
ங்கள் உட்புறத்தில் நுழையக்கூடாமையால் வெளிச்சம் அரி
தாய் அதனால்சீதளம்பொருந்திய திருவீதியை மிகுந்த பெரு
மையை உடைய திருநாவுக்கரசுசுவாமி முறைப்படிபணிந்து
உலகத்தில் பிரசித்தமாயிருக்கின்ற வேதங்களின்பெருகியகோ
ஷமும் ஞானத்தில்வல்ல முனிவர்கள் துதிசெய்தலோடு மற்
றைவகையாகிய முழக்கமும் நிறைந்த எழுநிலைக்கோபுரத்தை
முறையாகத்தொழுதுகொண்டு உள்ளேபுகுந்தார்.— (எ-று)

வளர்பொற்கனமணி திருமாளிகையினை வலம்வந்தல மருவரை
நில்லா, வளவிற்பெருகியவார்வத்திடையெழுமன்பின்கடனிறை
யுடலெங்கும், புளகச்செறிநிரைவிரவித்திருமலிபொற்கோபுர
மதுபுகுவார்முன், கவனிற்பொலிவிடமுடையார்நட்நவில்கன
கப்பொதுவெதிர்கண்ணுற்றார் ....*

(இதன்பொருள்.)

மலைபோன்ற விலையுயர்ந்த ரத்தினமிழைத்தபொன்மயமாகிய
திருமாளிகைப்பத்தியை வலமாகச்சுற்றிவந்து பிரதட்சிணைவ
ருவதற்குள்ளே சுவாமியைத்தரிசிக்க வேண்டுமென்கிற ஆசை
அடங்காதவராய் அதனால் அன்பாகியகடலானது உள்ளேநிறை
ந்து தேகத்தின்புறத்தில்நெருங்கிநிறைந்தமயிர்க்குச்செங்கிற
பெயனாக்கொண்டுதோற்றப்பொன்மயமாகிய கோபுரத்தை
அடைகிறதற்குமுன் கண்டத்தில் விஷக்கறைவிளங்குகின்ற ப
ரமசிவன் நடனஞ்செய்கின்ற கனகசபையைக்கண்டார். (எ-று)

நீடுந்திருவுடனிகழும்பெருகொளி நிறையம்பலநினைவுறநேரே.
கூடும்படிவருமன்பாலின்புறுகுணமும்பெறவருநிலைகூடத்.*

தேடும்பிரமனுமாலுந்தேவருமுதலாம்யோனிகடெளிவொன்று*
யாடுங்கழல்புரியமுதத்திருநடமாரர்வகைதொழுதார்கின்றார்.*

(இதன்பொருள்)

ஞானசம்பந்தருடனே திவ்வியமானதேயசும்பொருந்தியபொன்னம்பலத்தைத்தியானித்து நேராகப்போய்-அதை அடையும்படியாக உண்டாகிய அன்பினாலே சிவானந்தத்தின் தன்மையைப்பெறுகின்றநிலையுங்கூட-தேடிக்காணுதபிர்மா விஷ்ணுதேவர்கள்முதலாகியமற்றைச்சீவராளும்வேறொருநினைப்பில் நியறிவு ஒன்றுபடத்திருப்பாதங்களாற்செய்கின்ற அமிர்தம்போல் இனிமையைக்கொடுக்கின்றநடனத்தைத்தொழுது தரிசனஞ்செய்தும் திர்ப்தியில்லாதவராயிருக்கின்றார்.—(எ-று)

கையுந்தலைமிசைபுனையஞ்சலியனகண்ணும்பொழிமழையொ
ழிபாதே, பெய்யுந்தகையனகரணங்களுமுடனுருகும்பரிவின
பேறெய்த, மெய்யுந்தலமிசைவிழுமுன்பெழுதருமின்றாழ்ச
டையொடுநின்றாடு, மையல்திருநடமெதிர்கும்பிடுமவரார்வப்
பெருகுதலளவின்றால்: .. .. *

(இதன்பொருள்)

இரண்டுகைகளும் தலைமேல் அஞ்சலியாக் குவிக்கப்பட்டிருக்கின்றன கண்களும் ஒழியாமல் மழைபோல் நீர்பொழியுந்தன்மையை உடையன-அந்தக்கரணமாகிய மனம்-புத்தி-சித்த அகங்காரங்களும் ஒருங்கே உருகும்படியான அன்பினையுடையன-தேகமும் பூமியில் விழுவதும் உடனே யெழுவதுமாயிருக்கும்-மின்னல்போன்று தாழ்ந்தசடையுடனே நின்று திருக்கூத்தப்புரிகின்ற பரமசிவனுடைய திருநடனத்தை எதிராகநின்று கும்பிடுகின்ற திருநாவுக்கரசுசுவாமியின் ஆசையின்பெருக்கத்திற்கு ஓரளவில்லை.—(எ-று) (௱கூஎ)

இத்தன்மையர்பலமுறையுந்தொழுதெழவெய்த்தெய்தினை பெ
மைன்றுடு, மத்தன்திருவருள்பொழியுங்கடைவிழியருள்பெற்
றிடவருமானந்த, மெய்த்தன்மையினிலணிவிருத்தத்திருமொழி
பாடிப்பின்னையுமேன்மேலுந், சித்தம்பெருகியபரிவாலின்பு
றுதிருநேரிசைமொழிபகர்கின்றார் .... *

(இதன்பொருள்.)

மேற்சொன்னசெய்கையை உடையவராய்ப் பலதரமுந்தொழுதுதொழுது எழுந்திருக்கும்பொருட்டே இவ்விடத்திற்குவந்த

னையென்று சபையில் நடனஞ்செய்தருளுகின்ற பரமசிவனுடைய அருளினைப்பொழிகின்ற கடைக்கண்ணின் கருணையைப்பெறுதலால் உண்மையாகத்தோன்றிய ஆனந்தத்தால் குறுவிருத்தம் அடங்கியபதிகத்தைப்பாடி பின்னும்வரவர இருதயத்தில்தோன்றிய அன்பினால் இன்பமூற்றுத்திருநேரிசைத்தேவாரத்தைப்பாடுகின்றார்.—(எ-று) (௱௬௮)

(வேறு.)

பத்தனாய்ப்பாடமாட்டேனென்றுமுன்னெடுத்துப்பண்ணா *
லத்தவுன்னுடல்காண்பானடியனேன்வந்தவாறென் ...... *
றித்திறம்போற்றிநின்றேயின்றமிழ்மாலைபாடிக் .. .. *
கைத்திருத்தொண்டுசெய்யுங்காதலிற்பணிந்துபோந்தார் .. *

(இதன்பொருள்.)

(பத்தனாய்ப்பாடமாட்டேனென்று) முதலில் எடுத்து அத்தாவுன்னுடல்காண்பா னடியனேன்வந்தவாறேயென்று பாட்டின் நான்காமடியைச்சொல்லி இனிய தமிழ்ப்பதிகத்தைச்செய்து பண்ணோடுபாடி மிகுந்த அடிமைத்திறத்தோடு வணங்கிகைத்தொண்டுசெய்யும் விருப்பம் உண்டாக அன்போடுபணிந்து புறப்பட்டார்.—(எ-று) (௱௬௯)

நீடியமணியின்சோதிநிறைதிருமுன்றின்மாடு .. .. *
மாடுயர்கொடிசூழ்பொற்றேரணிதிருவீதியுள்ளும் .. .. *
கூடியபணிகள்செய்துகும்பிடுந்தொழிலாராகிப் .... *
பாடியபுனிதர்வாகீசன்பணிகளும்பயிலச்செய்வார் ....*

(இதன்பொருள்)

சுவாமியைப்பாடுதலால் பரிசுத்தராயிருக்கின்ற திருநாவுக்கரசுசுவாமி வெகுதூரமட்டும் வீசுகின்ற மணிகளின்பிரகாசத்தால் நிறைவுற்ற கனகசபையின்முற்றத்தின்புறத்திலும் பக்கத்தில் உயர்வாக எடுத்துக் கட்டப்பட்ட உலாவுகின்ற கொடிகளையுடைய பொன்மயமாகிய தேர்களால் அழகுபெற்ற வீதிகளிலும் தம்மாற்கூடிய அளவு-திருப்பணிகள்செய்து அடிக்கடிக்குத்தொழுகின்ற தொழிலையே உடையவராகித் தேவாரம்பாடுதலாகிய தொண்டினையும் இடைவிடாமற்செய்துகொண்டுவருவார்.—(எ-று) (௱௭௰)

அருட்பெருமகிழ்ச்சிபொங்கவன்னம்பாலிக்குமென்னுந் .. *
திருக்குறுந்தொகைகள்பாடித்திருவுழைவாரங்கொண்டு .... *

பெருத்தெழுகாதலோடும்பெருந்திருத்தொண்டுசெய்து...*
விருப்புறுமேனிகண்ணீர்வெண்ணீற்றுவண்டலாட.. .. ..*

(இதன்பொருள்.)

அன்பால் பெரிய களிப்புண்டாக அன்னம் பாலிக்குமென்று சொல்கின்ற திருக்குறுந்தொகைகளென்னும்பதிகங்களைப்பாடி உழவாரத்தைக் கையிற்கொண்டு விருத்தியாகியெழுந்த பெரிய ஆசையோடும் புல்செதுக்குதலாகிய ஒப்பற்ற பணிவிடையைச்செய்து எல்லாரும்விரும்பத்தக்க திருமேனியில் கண்ணிலிருந்து விழுகின்றநீரால் பூசியவிபூதியானது குழைபட்ட வண்டல்போற்பிரகாசிக்க.—(எ-று) (௱எக)

மேவியபணிகள்செய்துவிளங்குநாள்வேட்களத்துச் .....*
சேவுயர்கொடியார்தம்மைச்சென்றுமுன்வணங்கிப்பாடிக். *
காவியங்கண்டர்மன்னுந்திருக்கழிப்பாலைதன்னில்.. .. .... *
நாவினுக்கரசர்சென்றுநண்ணினார்மண்ணோர்வாழ ....*

(இதன்பொருள்.)

திருநாவுக்கரசுசுவாமி தாம்விரும்பிய திருப்பணிகளைச் சுவாமியின்விஷயமாகச் செய்துகொண்டிருக்குநாளில் திருவேட்களமென்னும் ஸ்தலத்திற்குப்போய் ரிஷபக்கொடியை உடைய பரமசிவனைத்தொழுது பதிகம்பாடி நீலோற்பலமலர்போல் கரியநிறத்தை உடைய கண்டத்தினராகிய பரமசிவன்வீற்றிருக்கும் திருக்கழிப்பாலைக்கு உலகத்தார் ஈடேறும்பொருட்டுப்போய்ச்சேர்ந்தார்.—(எ-று) (௱எஉ)

(வேறு.)

சினவிடையேறுகைத்தேறு மணவாளநம்பிகழல் சென்றுதாழ்ந்து, வனபவளவாய்திறந்துவானவர்க்குத்தானவனேயென்கின்றுளென், றனையதிருப்பதிகமுடனன்புறுவண்டமிழ்பாடியங்குலவகி, நினைவரியார் தமைப்போற்றி நீடுதிருப்புலியூரணைந்துமீள்வார் ....*

(இதன்பொருள்)

பகைவரைக்கோபிக்கின்றரிஷபத்தை வாகனமாகக்கொண்டருளிய மணவாளநம்பியின் சந்நிதிக்குப்போய்த் தொழுது (வனபவளவாய்திறந்து வானவர்க்குத்தானவனேயென்கின்றுளென்று) எடுத்த ஒப்பற்ற திருப்பதிகத்தைப்பாடி இதுவன்றி மற்றுஞ் சிலதமிழ்ப்பதிகங்களைப்பாடி அவ்விடத்தில் சிலநா

ளி இருந்து நினைப்பதற்கும் அரியாராகிய ஆண்டவனாயனை ங்கே-நிலைபெற்றசிதம்பரத்தைநினைத்துத்திரும்பிவரத்தொடங் கினார்.—(எ-று) (மணவாளநம்பி) திருக்கழிப்பாலையின் எழு ந்தருளியிருக்கும் பரமசிவனது திருநாமம். (௱௭௫)

மனைப்படப்பிற்கடற்கொழுந்துவளைசொரியுங்கழிப்பாலை ம ருங்குநீங்கி, நனைச்சினைமென்குளிர்ஞாழற்பொழிலூடு வழிக் கொண்டுநண்ணும்போது ,நினைப்பவர்தம்மனக்கோயில்கொ ண்டருளுமம்பலத்துநிருத்தனைத், தினைத்தனையாம் பொழு துமறந்துய்வனோவெனப்பாடித்தில்லைசார்ந்தார்.........*

(இதன்பொருள்)

குடிகளின்வீடுகளின் பின்புறத்தோட்டத்தில்சமுத்திரத்தினது அலைகள்சங்குகளைச்சொரிவதற்கு இடமாகிய திருக்கழிப்பா லையென்னும் ஸ்தலத்தில்நின்றும்நீங்கிக் கிளைகளில் மெல்லிய அரும்புகளையுடைய குளிர்ச்சிக்குக்காரணமாகிய ஞாழற்சோ லையின்வழியாகச்சென்று நெருங்கும்போது தியானிப்பவர்க ளுடைய மனதையே கோயிலாகத திருவுள்ளங்கொண்டு எழு ந்தருளுகின்ற நடேசனைத் தினைத்தனைப்பொழுதும் மறந்து ய்வனோவென்று பாடித் தில்லையை அடைந்தார். (எ-று)

அரியானையென்றெடுத்தேயடியவருக்கெளியானை யவர்தஞ்சி ந்தை, பிரியாதபெரியதிருத்தாண்டகச்செந்தமிழ்பாடிப்பிறங் குசோதி; விரியானென்றெவ்வுலகும்விளங்கியபொன் னம்பல த்துமேவியாடல், புரியாநின்றவர்தம்மைப் பணிந்துதமிழாற் பின்னும்போற்றல்செய்தார்..... ....*

(இதன்பொருள்)

(அரியானையென்று) முதலில் எடுத்து அடியார்க்கெளியனாகி அவர்கள்மனதில்நின்றும்பிரியாதவனெனவும்ஸ்வாமியைக்குறித்து ஒப்பற்ற செந்தமிழாகிய திருத்தாண்டகப்பதிகத்தைப்பாடி ஒளிர்கின்றகாந்தியால்நிறைந்திருந்து எல்லாவுலகங்களிலுமே லாகவிளங்குகின்றகனகசபையில்விரும்பித்திருக்கூத்துப்புரிகி ன்ற பரமசிவனைத்தொழுது தமிழினால் பின்னும் பதிகங்கள்பா டிப் போற்றுதல்செய்தார்.—(எ-று) (௱௭௬)

செஞ்சடைக்கற்றைமுற்றத் திளநிலா வெறிக்குமென்னுஞ் சிற ந்தவாய்மை, பஞ்சொல்வளத்தமிழ்மாலையதிசயமாம் படிபா டியன் புருழ்ந்த,நெஞ்சுருகப்பொழிபுனல்வார் கண்ணிணையும்

பாவியசொன்னிறைந்தவாயுந், தஞ்செயலினொழியாததிருப்
பணியுமாறுஞ் சாருநாளில் ....*

(இதன்பொருள்.)

(செஞ்சடைக்கற்றைமுற்றத் திளநிலாவெறிக்குமென்று) முதலெடுக்கப்பட்டிருக்கிற தமிழ்ப்பதிகத்தைப்பாடி அன்புநிறைந்த உள்ளமானது உருக நீரை ஒழுகும்படி பொழிகின்ற இரண்டுகண்களும் ஸ்துதிப்பதற்குத் தகுதியான சொற்கள் நிறைந்திருக்கின்றவாயும் ஒழியாமற்செய்யுந்தமது தொழிலாகியதிருப்பணியும் கெடாமல் நடக்கச் சார்ந்திருக்குநாளில்.— (எ-று) (சிறந்தவாய்மையஞ்சொல்வளத்தமிழ்மாலை) உயர்ந்த உண்மையாகிய அழகியசொற்களால் தொடுக்கப்பட்ட வளம்பொருந்திய தமிழ்ப்பாட்டின் கூட்டம் என்றுணா செய்க,

கடையுகத்திலாழியின்மேன்மிதந்ததிருக்கழுமலத்தினிருந்தசெ
ங்கண்,விடையுகைத்தார்திருவருளால்வெற்பரையன் பாவைதி
ருமுலைப்பாலோடு,.மடையநிறைசிவம்பெருகிவளர்ஞானங் கு
ழைத்தூட்டவமுதுசெய்த, வுடையமறைப்பிள்ளையார் திருவா
ர்த்தையடியார்களுரைப்பகேட்டார் ....*

(இதன்பொருள்)

யுகத்தின்முடிவில் சமுத்திரத்தின்வெள்ளத்தின்மேல் முழுகாமல் மிதந்துகொண்டிருந்த சீர்காழியென்னும்ஸ்தலத்தில் எழுந்தருளியிருந்து சிவந்தகண்களையுடைய ரிஷபத்தை நடத்துகின்ற பரமசிவனது கிருபையால் இமவத்பர்வதராசன்மகளாராகிய உமாதேவியார்தம்முடைய திருமுலைப்பாலுடனேமுழுதுஞ்சிவசம்பந்தமாயிருக்கின்றஞானத்தைக் குழைத்துக்கொண்டூட்ட உண்டருளி வேதார்த்தங்களைத் தமிழில்தேவாரமாகப்பாடிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியினுடைய மகிமையானசெய்கைகளைப் பத்தசனங்கள்சொல்லக் கேள்விப்பட்டார் திருநாவுக்கரசுசுவாமி.—(எ-று) (௱௭௭)

ஆழிவிடமுண்டவரையம்மைதிருமுலையமுதமுண்டபோதே,
யேழிசைவண்டமிழ்மாலை யிவனெம்மானெனக்காட்டி யியம்
பவல்ல, காழிவரும்பெருந்தகைசீர்கேட்டலுமே யதிசயமாங்
காதல்கூர, வாழியவர்மலர்க்கழல்கள் வணங்குதற்கு மனத்தெ
ழுந்தவிருப்புவாய்ப்ப .... *

(இதன்பொருள்.)

கடலிற்பிறந்த விஷத்தை உண்டருளிய கைலாசபதியைப்பார்வதித்தாயார் திருமுலைப்பாலினை உண்ட பொழுதே ஏழிசையின் சம்பந்தமான பண்ணோடுபாடுகிறதற்கு ஏதுவாகிய வளம்பொருந்திய தமிழ்ப்பதிகத்தில் இவனெம்மானென்று. தோணியப்பனைச் சுட்டிக்காட்டிச் சொல்லும்படி வல்லமையைப் பெற்ற சீர்காழியில் உதயஞ்செய்தருளிய ஒப்பற்ற பெருமையினையுடைய திருஞானசம்பந்தசுவாமியின் தெய்வத்தன்மையுள்ள செய்கைகளைக்கேட்டபோதே ஆசையானது மேற்பட்டுண்டாக அந்தச்சுவாமியின் தாமரைமலர்போன்ற பாதங்களைவணங்குகிறதற்கு மனதில் எழும்பிய ஆசை தூண்டுதலால்-
(எ-று) (௱௭௮)

அப்பொழுதேயம்பலத்துளாடுகின்றகழல்வணங்கியருண்முன் பெற்றுப், பொய்ப்பிறவிப்பிணியோட்டுந்திருவீதிபுரண்டு வலங்கொண்டுபோந்தே,யெப்புவனங்களுநிறைந்ததிருப்பதியி னெல்லையினையிறைஞ்சியேத்திச், செப்பரியபெருமையினார் திருநாரையூர்பணிந்துபாடிச்செல்வார் ....*

(இதன்பொருள்)

அந்தக்காலத்திலேயே-பொன்னம்பலத்தில்கூத்துச்செய்தருளிய சுவாமியினது திருப்பாதங்களைவணங்கிக் கிருபையைப் பெற்றுப் பொய்முதலிய தீயவைகளுக்குக்காரணமாயிருக்கின்ற பிறப்பாகியவியாதியைத் துரத்துவதற்குக் கருவியாயிருக்கும் திருவீதியிற்புரண்டுகொண்டே பிரதட்சிணமாகவந்து எல்லாப்புவனங்களிலுமுள்ள யாவரும் நிறைந்திருக்கின்ற அந்தத்தில்லைத்திருப்பதியின் எல்லையை வணங்கி ஸ்தோத்திரம்பண்ணிச் சொல்லுதற்கரிய பெருமையினையுடைய திருநாவுக்கரசுசுவாமி திருநாரையூர் என்னும் ஸ்தலத்தைப்பணிந்து திருப்பதிகம்பாடி எழுந்தருள்வாராயினார்.—(எ-று) (௱௭௯)

தொண்டர்குழாம்புடைசூழத்தொழுதகரத்தொடுநீறுதுதைந்த தங்கோலங், கண்டவர்தம்மனங்கசிந்துகரைந்துருகுங் கருணைபுறம்பொழிந்துகாட்டத், தெண்டிரைவாய்க்கன்மிதப்பிலுகைத்தேறுந்திருநாவுக் கரசர்தாமும், வண்டமிழா லெழுதுமறைமொழிந்தபிரான்திருப்புகலிமருங்குசார்ந்தார் ....*

(இதன்பொருள்)

அடியார்கூட்டமானது சூழ்ந்துவரக் குவித்துக்கொண்டிருக்

ரும் திருக்கையோடு விபூதியை நன்றாகத் தரித்ததனால் உண்டாகிய திருக்கோலத்தைக்கண்டவர்கள் மனதுகசிந்து-கலைந்து உருகும்பொருள்போல் நைந்த அன்பானது - புறத்தில்கண்ணீர்பொழிதலால் தன்னைக்காட்டத் தெளிவாகிய அலைகளையுடைய கடலில்தாம்பாடியதேவாரத்தால் ஆழுந்தன்மையைவிட்டுமிதக்குங்குணத்தைப்பெற்றகல்லில் எறிநடத்திய திருநாவுக்கரசுசுவாமி வளம்பொருந்திய தமிழினால் எழுதும் வேதமாகிய தேவாரத்தைப் பாடியருளிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியின் ஜன்மதேசமாகிய சீர்காழியின் சமீபத்தை அடைந்தார்.—(எ-று) (௱அய)

நீண்டவரை வில்லியார் வென்றுகுலமடுத்தருளி நேரேமுன்னு-ஆண்டவரசெழுந்தருளக்கேட்டருளியாளுடையபிள்ளையாரும் - காண்டகையபெருவிருப்புக் கைமிகத்திருவுள்ளக்கருத்தினொடு-பூண்டவருமனத்தன்பர்புடைசூழவெழுந்தருளி முன்னணைந்தார் ....*

(இதன்பொருள்.)

உயர்ந்திருக்கும் மகாமேருவைவில்லாகவுடைய பரமசிவன் முன்னாளில் வெவ்விதாகிய சூலைநோயைக் கொடுத்துத் தாமே ஆட்கொண்ட திருநாவுக்கரசுசுவாமி யெழுந்தருளிவரக் கேள்வியுற்று நம்மையாட்கொள்பவராகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியும்காணவேண்டுமென்கிற பெரிய ஆசையானது அதிகப்பட்டதிருவுள்ளக்கோட்பாட்டோடு- அன்புமிகுந்த மனத்தினையுடைய தொண்டர்கள் பக்கஞ்சூழ எழுந்தருளி எதிராகவந்தார்.—(எ-று) (௱அக)

தொழுதணைவுற்றாண்டவரசன்புருகத்தொண்டர்குழாத் திடையேசென்று-பழுதில்பெருங்காதலுடனடிபணியப் பணித்தவர்தங்காங்கள்பற்றி-யெழுதரியமலர்க்கையாலெடுத்திறைஞ்சிவிடையின்மேல்வருவார்தம்மை-யழுதழைத்துக் கொண்டவர்தாமப்பரோயெனவருமடியேனென்றார் ....*

(இதன்பொருள்.)

கும்பிட்டுக்கொண்டேவருகின்ற திருநாவுக்கரசுசுவாமி அன்பினால் இளகி அடியாருடைய கூட்டத்திற்போயருளிக் குற்றமற்ற பெரியகாதலோடு திருவடியில் வந்தனஞ்செய்யவும்-ரிஷப

த்தில்எழுந்தருளிவருகின்ற பரமசிவனை யழுதலாலே அழைத்
தருள்செய்யப்பெற்றுக்கொண்ட திருஞான சம்பந்தமூர்த்தி
சுவாமி தாமும் அவர்க்குவந்தனஞ்செய்து எழுதவதற்கு அரு
மையாகிய தாமரைமலர்போன்ற கைகளால் கூப்பிக் கும்பிட்
டு அப்பரேயென்று திருவாய்மலரத் திருநாவுக்கரசுசுவாமியும்
அடியேனென்று சொல்லியருளினார்.—(எ-று) (௱அ௨)

அம்பிகைசெம்பொற்கிண்ணத்தமுதஞானக்கொடுப்பவழுகை
தீர்ந்த-செம்பவளவாய்ப்பிள்ளைதிருநாவுக்கரசரெனச்சிறந்தசீ
ர்த்தி, யெம்பெருமக்களுமியைந்தகூட்டத்திலரனடியாரின்ப
மெய்தி- யும்பர்களும்போற்றிசைப்பச்சிவம்பெருகுமொழிதி
றைத்தாருலகமெல்லாம் .... *

(இதன்பொருள்)

பார்வதித்தாயார் மாற்றுயர்ந்த பொற்கிண்ணத்தில் ஞானத்
தோடுகலந்த அமிர்தத்தை ஊட்டுதலால் அழுகை ஓய்ந்தசெ
வ்வியபவளம்போல் வாயை உடைய திருஞான சம்பந்தமூர்த்
திசுவாமியும் சிறந்தபுகழினையுடைய திருநாவுக்கரசுசுவாமியாகி
ய எம்பெருமானும் சேர்ந்திருந்த திருக்கூட்டத்தில் சிவபக்த
ர்கள் ஆனந்தத்தையடைந்து தேவர்களுங்கொண்டாட மங்க
ளகரமான கோஷத்தை மிகவும் உண்டாக்கினார்கள் இடங்க
ளெங்கும்.—(எ-று) உயர்வுபற்றிக்கூறும் எம்பெருமான்களெ
ன்பது-எம்பெருமக்களாயிற்று. (௱அ௩)

பிள்ளையார்கழல்வணங்கப்பெற்றேனென் றரசுவப்பப்பெருகு
ஞான-வள்ளலார்வாகீசர்தமைக்காணப்பெற்றதற்கு மகிழ்ச்சி
பொங்க-வுள்ளநிறைகாதலினுலொருவரொருவரிற்கலந்த வுண்
மையோடும்-வெள்ளநீர்த்திருத்தோணி வீற்றிருந்தார் கழல்வ
ணங்கும்விருப்பின்மிக்கார் .... *

(இதன்பொருள்)

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியின் திருவடிகளை வணங்கும்
படி பேறுபெற்றேனென்று திருநாவுக்கரசுசுவாமி மகிழ்ச்சிய
டையவும் ஞானத்திற்மிகுந்த பிள்ளையார்திருநாவுக்கரசுசுவா
மியைக் கண்டு சந்தோஷத்தையடையவும் மனதில்நிறைந்த ஆ
சையால் ஒருவரோடொருவர்உண்மையாய்க்கலந்தநட்போடும்
பிரளயகாலத்தில் நீரில்மிதந்துகொண்டிருந்த சீர்காழியில் வீ
ற்றிருக்கும் பரமசிவனதுபாதத்தை வணங்கும் விருப்பத்தை
மிகவுங்கொண்டார்.—(எ-று) (௱அ௪)

அருட்பெருகுதனிக்கடலு முலகுக்கெல்லாமன்பு செறிகடலு
மாமெனவும்பொங்கும் - பொருட்சமய முதற்சைவ நெறிதா
ன்பெற்றபுண்ணியக்கண் ணிரண்டெனவும்புவனமுய்ய - விருட்
கடுவுண்டவருளுமகிலமெல்லா மீன்றுடன்றிருவருளு மெனவு
ங்கூடித் - தெருட்கலை ஞானக்கன்று மரசுஞ்சென்று செஞ்ச
டைவானவர்கோயில்சேர்ந்தாரன்றே.... ....*

(இதன்பொருள்)

உலகத்திற்கெல்லாம் உதவுகின்ற ஒப்பற்ற கருணைக்கடலும்பத்தியாகிய கடலும்போலவும் உண்மைப்பொருளையுடைய சமயமாகிய முதன்மைபொருந்திய சைவமார்க்கத்தை அறிந்துகொள்வதற்கு ஏதுவாகிய இரண்டு ஞானக்கண்போலவும். புவனங்கள் பிழைக்கும்பொருட்டுக் கரியவிஷத்தை யுண்டருளிய பரமசிவனது கிருபையும் சமஸ்தலோகங்களையும் பெற்றருளிய பார்வதியாருடையகிருபையும் போலவும் சேர்ந்து சாஸ்திரங்களை இயற்கையாகவே அறிந்ததிருஞானசம்பந்தமூர்த்திசுவாமியும் திருநாவுக்கரசுசுவாமியும் எழுந்தருளிச் செவ்விய சடையை உடைய சுவாமியின் திருக்கோயிலுக்குச் சென்றார்கள்.—(எ-று) (௱அ௫)

பண்பயில்வண்டறைசோலைசூழுங்காழிப்பாமர்திருக்கோபுரத்
தைப்பணிந்துள்புக்கு - விண்பணியவோங்குதிரு விமானந்தன்
னைவலங்கொண்டுதொழுதுவிழுந்தெழுந்தவெல்லை - சண்பையவ
ருபிள்ளையாரப்பருங்கடம்பிரானைநீர்பாடிரென்னக் - கண்ப
யிலும்புனல்பொழிந்தவரசும்வாய்மைக்கலையிலுமொழிபொ
ழியக்கசிந்துபாடி.. ....*

(இதன்பொருள்)

இராகங்களை வண்டுகள்பாடிமுழங்காநின்ற சோலைசூழ்ந்திருக்கும் சீர்காழியில் சுவாமியின்கோயிற்கோபுரத்தைவணங்கிஉள்ளேபோய் ஆகாயமூர்த்தாழும்படி உயர்ந்திருக்கும் விமானத்தைவலமாகச்சுற்றிவந்து சாஷ்டாங்கமாகப்பணிந்து எழுந்தபோது திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்திருநாவுக்கரசுசுவாமிகளைப்பார்த்து அப்பரே உங்கள் ஆண்டவனைப் பாடுவீராகவென்று அருள்செய்ய - அவர்கண்களினிடத்தில் நின்றும் நீரைப்பொழிந்து உண்மையாகிய சாஸ்திரவுணர்ச்சியால்சிறந்த மொழிகளைச் சுவாமியின்விஷயமாக அன்போடுகசிந்துபாடி.
(எ-று) (௱அ௬)

பெரியபெருமாட்டியுடன்ரேணிமீது பேணிவீற்றிருந்தருளு
ம்பிரான்முன்னின்று, பரிவுறுசெந்தமிழ்மாலை பத்தியொடும்
பார்கொண்டுமூடியெனும் பதிகம்போற்றி, யரியவகைபுறம்
போந்துபிள்ளையார்தந்திருமடத்திலெழுந்தருளி யமுதுசெய்
து; மருவியநண்புறுகேண்மையத்தைநாள்போல்வளர்த்தே
ர்க்கவுடன்பலநாள்வைகுநாளில் .... *

(இதன்பொருள்)

பெருமைபொருந்திய பார்வதியாரோடு தோணிபோல்மிதந்
துகொண்டிருந்த ஆலயத்தில் விரும்பிவீற்றிருக்குந்தோணிய
ப்பர்முன்னேநின்றுகொண்டு- பத்தியுடனே எல்லாரும் விரு
ம்பத்தக்கபார்கொண்டுமூடியென்கிறசெந்தமிழ்ப்பதிகமாலை
யைப்பாடிவணங்கி-அன்பின்மிகுதியால் அவ்விடத்தில் நின்று
ம்வெளியில்வருகிறதற்குக்கூடாமையாய்ப்பின்புவெளிப்பட்டு
த் திருஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமியின்மடத்திலெழுந்தருளி
த் திருவமுதுசெய்து அளவளாவிப்பெற்ற பிரியாச்சினேகமா
னது இருவர்க்குங்கண்டமுதல்நாள்போலவேமற்றைநாள்களு
ம்வளர்ந்தேறவெகுநாள்மட்டும் இரண்டுஸ்வாமிகளுங்கூடவே
வாசஞ்செய்துகொண்டிருக்குங் காலத்தில்.—(எ-று) (௱அஎ)

அத்தன்மையினில்ரசும்பிள்ளையாருமளவளாவியமகிழ்ச்சியள
விலாத; சித்தநெகிழ்ச்சியினோடு செல்லுநாளித் திருநாவுக்க
ரசர்திருவுள்ளந்தன்னில்,மைநிறைமிடற்றார்பொன்னி
நாட்டுமன்னியதானங்களெல்லாம் வணங்கிப்போற்ற; மெய்த்
தெழுந்தபெருங்காதல்பிள்ளையார்க்குவிளம்புதலு மவருமது
மேவிநேர்வார்... ... .*

(இதன்பொருள்.)

மேற்சொன்ன தன்மையோடு திருநாவுக்கரசுஸ்வாமியும் திரு
ஞானசம்பந்தமூர்த்திசுவாமியும் ஒருமைப்பட்டு நட்புக்கொ
ள்ளுதலால் அளவில்லாத சந்தோஷமும் மனவுருக்கமும்பெற்
று வாழுநாளில்-திருநாவுக்கரசுசுவாமி விஷக்கறை தங்குதலா
ல் அழகுபொருந்திய கரியகண்டத்தை உடைய கைலாசபதி
வீற்றிருக்கின்ற சோழநாட்டிலுள்ள திவ்வியஸ்தலங்களையெல்
லாம் தரிசனஞ்செய்து தொழும்படியாகத் திருவுள்ளத்தில் உ
ண்மையாய் தோன்றியிருக்கின்றஆசையைத் திருஞானசம்பந்
தமூர்த்திசுவாமிக்கு அருளிச்செய்த உடனே அவரும் அதற்கு
உடன்பட்டார்.—(எ-று) (௱அஅ)

ஆண்டவரசெழுந்தருளக் கோலக்காவை யவரோடுஞ்சென்றி
றைஞ்சியன்புகொண்டு; மீண்டருளினாரவரும்விடைகொண்டி
ப்பால்வேதநாயகர்விரும்புமபதிகளான; நீண்டகருப்பறியலூ
ர்புன்கூர் நீடூர் நீடுதிருக்குறுக்கைதிருநின்றியூருங், காண்டகை
யநனிப்பள்ளிமுதலாநண்ணிக் கண்ணுதலார்கழல்தொழுதுக
லந்துசெல்வார்.... ... ... *

(இதன்பொருள்.)

திருநாவுக்கரசுசுவாமி யெழுந்தருள அவரோடு திருக்கோலக்
காவிற்குப்போய் வழிபாடுசெய்து அன்புடனே திருஞானச
ம்பந்தமூர்த்திசுவாமி திரும்பியருளினார்-அப்பர்சுவாமியும் வி
டைபெற்றுக்கொண்டு இப்புறம் வேதங்களை யருளிச்செய்த
நாயகராகிய கைலாசபதிவீற்றிருக்கும் ஸ்தலங்களாகிய கருப்
பறியலூர்-புன்கூர்-நீடூர் - திருக்குறுக்கை-நின்றியூர்-காண
த்தக்க திருநனிப்பள்ளிமுதலாகிய ஸ்தலங்களை அடைந்து நெ
ற்றியிற்கண்ணையுடைய பரமசிவனுடைய திருவடியைத்தொழு
து அன்புமுதிர்ந்து எழுந்தருளினார்.—(எ-று) (௱௮௯)

மேவுபுனற்பொன்னியிருகரையுஞ்சார்ந்து விடையுயர்த்தார்தி
ருச்செம்பொன்பள்ளிபாடி, காவுயருமயிலாடு துறைநீள்பொ
ன்னிக்கரைத்துருத்திதிருவேள்விக்குடியெதிர்கொள்பாடி,பர
வுறுசெந்தமிழ்மாலைபாடிப்போற்றிப் பரமர்திருப்பதிபலவும்
பணிந்துபோந்தே, யாவுறுமஞ்சாடுவார்கோடிகாவிலணைந்து
பணிந்தாவடுதண்டுறையைச்சார்ந்தார்.... ... . *

(இதன்பொருள்)

நீர்வருகின்ற காவேரியாற்றினிரண்டுபக்கமும்போய்ப்பரமசி
வனுடைய திருப்பதியாகிய திருச்செம்பொன்பள்ளியும் சோ
லைசூழ்ந்த மாயூரமும்,திருத்துருத்தியும்,திருவேள்விக்குடியும்
எதிர்கொள்பாடியுமாகிய இவைகளிற்சென்று சுவாமியைக்குறி
த்துப் பாட்டாக அமைந்த செந்தமிழ்ப் பதிகமாலையைப்பா
டிவணங்கி மற்றைத்திருப்பதிகளையும்வணங்கிப்போய்ப்பஞ்ச
கவ்வியத்தால் அபிஷேகஞ் செய்யப்பட்ட சுவாமியின்திருக்
கோடிகாவிற்குப்போய்ச் சுவாமியைப்பணிந்து திருவாவடுது
றையைச்சேர்ந்தருளினார்.—(எ-று) நீள்பொன்னிக்கரையெ
ன்பது-திருத்துருத்திக்குவிசேஷணமாய்நின்றது. (௱௯௰)

ஆவடுதண்டுறையானை யடைந்துயந்தேனென்றளவி றிருத்தா
ண்டகமுன்னருளிச்செய்து, மேவுதிருக்குறுந்தொகையுநேரி
சையுஞ்சந்தவிருத்தங்களானவையும்வேறுவேறு, பாவலர்செ
ந்தமிழ்த்தொடையாற்பள்ளித்தாமம்பலசாத்திமிக்கெழுந்தப
ரிவினோடும், பூவலயத்தவர்பரவப்பலநாடங்கிப்புரிவுறுகைத்
திருத்தொண்டுபோற்றிச்செய்வார் ....*

(இதன்பொருள்.)

ஆவடுதண்டுறையானை அடைந்து உய்ந்தேனென்று ஒப்பற்ற தி
ருத்தாண்டகப்பதிகத்தைப்பாடியருளி இதுவன்றிதிருக்குறு
ந்தொகையும் திருநேரிசையும் சந்தவிருத்தமுதலானவைகளை
யும்,வேறுவேறாகத்தொகுத்த அனேகமாகிய செந்தமிழ்ப்பா
ட்டின் பதிகத்தைத் திருப்பள்ளித்தாமமாகச்சாத்தி மிகுந்தெ
ழுந்த அன்போடும் பூமியிலுள்ளவர்கள் பரவும்படி பலநாள்
அவ்விடத்திலேயேயிருந்து உழைவாரப்பணியாகிய கைத்தொ
ண்டினைச்செய்வாராயினார்.—(எ-று) (௬௧)

ஏறிபுனல்பொன்மணிசிதறுங்கரைநீர்ப்பொன்னியிடைமருதை
ச்சென்றெய்தியன்பினோடு, மறிவிரவுகரத்தாரைவணங்கிவைகி
வண்டமிழ்ப்பாமாலைபலமகிழச்சாத்திப், பொறியரவம்புனை
ந்தாரைத்திருநாகீச் சரத்துப்போற்றியருந்தமிழ்மாலை புனைந்
துபோந்து, செறிவிரைநன்மலர்ச்சோலைப்பழையாறெய்தித்
திருச்சத்திமுற்றத்திற்சென்றுசேர்ந்தார் .... *

(இதன்பொருள்.)

வீசாநின்ற அலைநீரானது பொன்னையும் மணிகளையும் ஒதுக்
காநின்ற கரையினையுடைய காவேரியை வடபுறத்திலுடைய தி
ருவிடைமருதூரை அடைந்து அன்புடனே மானைத்தரித்த தி
ருக்கையினையுடைய பரமசிவனைத்தொழுது சிலநாள் அங்கே
வாசஞ்செய்து வளம்பொருந்தியதமிழ்ப்பதிகங்கள் பலபாடி
மாலையாகச்சாத்திப் படத்தினையுடைய பாம்பையணிந்த ஆண்
டவரைத் திருநாகீச்சரத்துக்குப்போய்வணங்கி-அரியதமிழ்பா
டி மாலையாகச்சாத்தி-அவ்விடத்தில் நின்றும் வாசனையுற்ற சோ
லைசூழ்ந்த பழையாற்றுக்குவந்துதிருச்சத்திமுற்றத்தை அடை
ந்தார் அப்பர்சுவாமி.—(எ-று) (௱௬௨)

(வேறு.)

சென்றுசேர்ந்துதிருச்சத்திமுற்றத்திருந்தசிவக்கொழுந்தைக்.
குன்றமெயடன்மடமயில்காதல்குலவும்பூசைகொண்டருளு ......*

மென்றமினியபெருமானையிறைஞ்சியியல்பிற்றிருப்பணிகள் *
முன்றிலணைந்துசெய்துதமிழ்மொழிமாலைகளுஞ்சாற்றுவார் *

(இதன்பொருள்)

அப்பர்சுவாமி திருச்சத்திமுற்றத்தை அடைந்தவுடன் அந்தஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற பரமசிவனை - பார்வதிதேவியார் உள்ளத்திலுண்டாகிய ஆசையோடு செய்யாநின்ற பூசையை ஏற்றுக்கொண்டருளிய - என்றும்யாவர்க்கும் இனிய ஆண்டவரைத்தொழுது ஆலயத்தில் தாம் இயல்பாகச்செய்கின்ற திருப்பணிகளைச்செய்து தமிழ்ப்பதிகங்களும் பாடிச் சாத்துவாராயினர்.— எ-று) (௱௯௩)

கோவாய்முடுகியென்றெடுத்துக் கூற்றம்வந்து குமைப்பதன்
முன், பூவாரடிகளென்றலைமேற்பொறித்துவைப்பாயெனப்புகன்று, நாவார்பதிகம்பாடுதலும் நாதன்றானும்நல்லூரில் .. *
வாவாவென்றேயருள்செய்யவணங்கிமகிழ்ந்துவாகீசர்... ...*

(இதன்பொருள்)

(கோவாய்முடுகியென்று) முதலில் எடுத்து (கூற்றம்வந்து குமைப்பதன்முன் பூவாரடிகளென்றலைமேல் பொறித்துவைப்பாயெனச்சொல்லி) நாவானது மகிழ்ச்சியடையப்பாடுதலும் பரமசிவனும் திருநல்லூரில் வாவாவென்று அசரீரிவாக்கால் கட்டளையிடத்தொழுது மகிழ்ச்சியோடு திருநாவுக்கரசுசுவாமி. (எ-று) (அடுதிறற்கூற்றங்குமைப்பதன் பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவை) என்று தேவாரத்திலிருப்பதை இவ்விடத்திற்பாட்டிற்கேற்ப இசைத்துக்கொண்டார் - இப்படியே பலவிடங்களிலும்வரும் அவைகளை அடங்கல்முறையைப்பார்த்துத் தெரிந்துகொள்ளவும். (௱௯௪)

(வேறு.)

நன்மைபெருகருணைநெறியேவந்தணைந்துநல்லூரின் ....*
மன்னுதிருத்தொண்டனார்வணங்கிமகிழ்ந்தெழும்போது ...*
உன்னுடையநினைப்பதனைமுடிக்கின்றோமென்றவர்தஞ் ... *
சென்னிமிசைப்பாதமலர்சூட்டினான்சிவபெருமான் .... ..*

(இதன்பொருள்.)

நிலையாகிய திருத்தொண்டினையுடைய அப்பர்சுவாமி நன்மையைப்பெறுவதற்குக் கருவியாயிருக்கும் பத்திமார்க்கத்தோடே திருநல்லூர்க்குவந்து சுவாமியைத்தொழுது எழுந்திருந்

ணும்போது உன்னுடையமனதிலுள்ள குறையைமுடிக்கின்றோ மென்று அவருடைய சிரசில் தாமரைமலர்போன்றபாதத்தை வைத்தருளினார் பரமசிவன்.—(எ-று) (௱௬௫)

நனைந்தனையதிருவடியென்றலைமேல்வைத்தாரென்று. ... *
புனைந்ததிருத்தாண்டகத்தாற்போற்றிசைத்துப்புனிதனரு.. *
ணினைந்துருகிவிழுந்தெழுந்து நிறைந்துமலர்ந்தொழியாத, த
னம்பெரிதும்பெற்றுவந்தவறியோன் போன்மனந்தழைத்தார்.

(இதன்பொருள்)

(நனைந்தனையதிருவடியென்றலைமேலவைத்தா) ரென்று அழகு பெறச்செய்த திருத்தாண்டகப்பதிகத்தினாற்போற்றிப் பரமசிவன் தம்முடைய் விஷயத்தில்செய்த கிருபையைக்குறித்துநினைந்து உருகிப் பூமியில்விழுந்து நிறைவாய்விளங்கியொழியாத திரவியத்தை மிகவும்பெற்ற ஒருதரித்திரன்போல்மனது தழைந்தார்.—(எ-று) நனைந்தனையதிருவடி-திரவமாயிருக்கிறபுதார்த்தத்தால் நனைந்தாலொத்தபாதங்கள். (௱௬௬)

நாவுக்குமன்னர்திருநல்லூரினம்பர்பான் .... *
மேவுற்றதிருப்பணிகள்மேவுறநாளுஞ்செய்து .... *
பாவுற்றதமிழ்மாலைபலபாடிப்பணிந்தேத்தித் .... *
தேவுற்றதிருத்தொண்டுசெய்தொழுகிச்செல்லுநாள். .... *

(இதன்பொருள்)

அப்பர்சுவாமி திருநல்லூரில் பரமசிவனிடத்தில் விரும்பிச்செய்யவேண்டிய திருப்பணிகளை அனேகநாள்வரைக்குஞ் செய்து பாடலாயமைந்த தமிழ்ப்பதிகங்களைப்பலவாகப்பாடிப்பணிந்து ஸ்தோத்திரஞ்செய்து மகிமைபொருந்திய திருத்தொண்டுசெய்து கிரமமாகவருகின்றநாளில்.—(எ-று) (௱௬௭)

கருகாவூர்முதலாகக்கண்ணுதலோனமர்ந்தருளுந் ...... *
திருவாரூர்திருப்பாலைத்துறைபிறவுஞ்சென்றிறைஞ்சிப் .... *
பெருகார்வத்திருத்தொண்டுசெய்துபெருந்திருநல்லூ .... *
ரொருகாலும்பிரியாதேயுள்ளுருகிப்பணிகின்றார் .... *

(இதன்பொருள்.)

நெற்றியிற் கண்ணையுடைய பரமசிவன் எழுந்தருளி யிருக்கும் கருகாவூர்முதலாகத்திருவாரூர் திருப்பாலைத்துறையையும் மற்றஸ்தலங்களையும்,போய்வந்தனஞ்செய்து மிகுந்த பத்தியோடு

திரவபதார்த்தம்-எண்ணெய் முதலானவை.

திருப்பணிசெய்து பெருமைபொருந்திய திருநல்லூரை யொ ருபொழுதும் பிரியாதவராய் உள்ளமுருகித் தொழுபவராயி னார்.—(எ-று) (௱௯௮)

ஆளுடையநாயகன்றனருள்பெற்றங்ககன்றுபோய்... ....*
வாளைபாய்புனற்பழனத்திருப்பழனமருங்கணைந்து ....*
காளவிடமுண்டிருண்டகண்டர்பணிக்கலன்பூண்டு........ ..*
நீளிரவிலாடுவார்கழல்வணங்கநேர்பெற்றார் ....*

(இதன்பொருள்.)

ஜீவகோடிகளை ஆளப்பட்ட பொருள்களாகவுடைய பரமசிவ னுடைய அருளைப்பெற்று அவ்விடத்தில் இருந்துநீங்கி வாளை மீன்தாவி விளையாடுகின்ற நீர்தங்கும்வயல்கள்சூழ்ந்த திருப்ப ழனத்திற்குப்போய் கரியவிடத்தை உண்டு அதனால்கரியநிறத் தை அடைந்த கழுத்தினை உடையவராய்ச்சர்ப்பங்களைத்தரித் து நீண்டஇராக்காலத்தில் ஆடுகின்ற ஆண்டவருடைய பாதங் களை வணங்கச் சமயம்பெற்றார்.—(எ-று) (௱௯௯)

அப்பதியைச்சூழ்ந்ததிருப்பதியிலரனார்மகிழு .. ..*
மொப்பரியதானங்களுள்ளுருகிப்பணிந்தணைவார் ....*
மெய்ப்பொருடேர்நாவினுக்குவேந்தர்தாமேவினார்..... *
செப்பருஞ்சீரப்பூதியடிகளார்திங்களூர் .... *

(இதன்பொருள்)

அந்தஸ்தலத்தைச்சூழ்ந்திருக்கும் பலஸ்தலங்களிலும் பரமசிவ ன்வீற்றிருக்கும் ஒப்பில்லாத ஆலயங்களைமனது உருகித்தொ ழுதுபோகின்ற உண்மையாகியபொருளை அறிந்துகொண்டஅ ப்பர்சுவாமிகள் சொல்வதற்கு அரியசிறப்பினை உடைய அப்பூ தியடிகள்வாழ்ந்திருக்கும்திங்களூர்க்குப்போயருளினார்.(எ-று)

அந்தணரின்மேம்பட்டவப்பூதியடிகளார்.... .. ..*
தந்தனையருடன்சாலைகூவலகுளந்தருதண்ணீர்ப் ....*
பந்தர்பலவாண்டவரசெனும்பெயராற்பண்ணின்மை.... .....*
வந்தணைந்தவாகீசர்கேட்டவர்தமனைநண்ண ....*

(இதன்பொருள்)

பிராமணர்களில்மேம்பாடுபெற்ற அப்பூதிநாயனார் தம்முடை ய பிள்ளைகளுக்குத் திருநாவுக்கரசுசுவாமியின் நாமத்தைத்தரி த்து-அன்னசத்திரம்-கிணறு-தடாகங்கள்-தண்ணீர்ப்பந்தல் மு

தலானவைகளுக்குத் திருநாவுக்கரசுசுவாமியினுடையவைகளைக் கப்பெயரிட்டிருப்பதை அவ்விடத்துக்கு எழுந்தருளியஅப்பர்சுவாமி கேட்டருளி அவருடையமனைக்குப்போயருள.(எ-று) அப்பூதியடிகளுக்கு அப்பர்சுவாமியின் மேலுள்ள பத்தியின் பெருக்கத்தால் அவர்பெயரைத் தம்முடைய பொருள்களுக் கெல்லாம் இட்டாரென்க. (உ௱௧)

மற்றவருமனமகிழ்ந்துமனைவியார்மைந்தர்பெருஞ் .... ..*
சுற்றமுடன்களிகூரத்தொழுதெழுந்துசூழ்ந்துமொழிக் ... *
கொற்றவனாரமுதுசெயக்குறைகொள்வாரிறைகொள்ளப்..*
பெற்றபெருந்தவத்தொண்டர்திருவுள்ளம்பெறப்பெற்றார். *

(இதன்பொருள்)

அப்பூதிநாயனாருமனங்களிர்ந்துதம்முடைய மனைவியாரும் பிள்ளைகளும் சுற்றத்தோடு மகிழ்ச்சிபொங்கத் தொழுது எழுந்திருந்து திருநாவுக்கரசுசுவாமியை அமுதுசெய்யும்படி வேண்டிக்கொண்டு பரமசிவன் அனுக்கிரகஞ்செய்யும்படி அன்பினைப்பெற்ற பெருமைபொருந்தியதவத்தினையும் தொண்டினையும் உடைய அங்கதும் அதற்கு அங்கீகரித்ததனால் திருப்தியை அடைந்தார்.—(எ-று) (உ௱௨)

காண்டகைமையின்றியுமுன்கலந்தபெருங்கேண்மையினாற் .*
பூண்டபெருங்காதலுடன்போனகமுங்கறியமுதும்... ....*
வேண்டுவனவெவ்வேறுவிதங்கள்பெறவிருப்பினொ ....*
டாண்டவரமுதுசெயத்திருவமுதாம்படியமைத்து ..... ---*

(இதன்பொருள்)

அப்பூதிநாயனார் முன்பு அப்பர்சுவாமியைக் காணுமலேயே இருந்தாலும் அவருடைய மகிமையைக்கேட்டு உண்டாகிய ஒப்பற்றசம்பந்தத்தால் மிகுந்த ஆசையோடுவேறுவேறுவகையாகச்சோறும் கறிகளும் விருப்பத்தோடு உண்ணும் தன்மையிற் றகுந்தனவாக அங்கது உண்டருளும்படி சமைத்து.—(எ-று)

திருநாவுக்கரசமுதுசெய்தருளமற்றவர்தம்...............*
பெருநாமஞ்சாற்றியவப்பிள்ளைதனையழைத்தன்பு ....*
தருஞானத்திருமறையோர்தண்டலையின்வண்கதலிக்.. ....*
குருநாளக்குருத்தரிந்துகொண்டுவரத்தனிவிட்டார்......*

(இதன்பொருள்)

அன்பினையும் சிவஞானத்தையும் உடைய அப்பூதிநாயனார்திரு

நாவுக்கரசுசுவாமி திருவமுதுசெய்தருளும்பொருட்டு அங்கு நாமதேயத்தைத் தரித்திருக்கின்ற திருநாவுக்கரசென்னுங் குமாரனை அழைத்துத் தோட்டத்திற்சென்று வாழைமரத்தில் அப்போது தான் விரிதற்கு இருந்த பெரிதாகிய குருத்தை அரிந்துகொண்டுவரும்படி அனுப்புவித்தார்.—(எ-று) இலையாயிருக்கின் அசுசியாயிருக்குமென்று குருத்தைக் கொண்டுவரச் சொன்னாரென்க. குரு-வென்பதற்கு நிறம்பொருந்திய வென்றும், நாளம் என்றுபிரித்து அதற்குள்ளே துவாரத்தை உடையவென்றும் உரைகூறுவாருமுளர். (௨௱௪)

ஆங்கவனும்விரைந்தெய்தியம்மருங்குதாழாதே.... ....*
பூங்கதலிக்குருத்தரியப்புகுமளவிலொருநாகந் .... *
தீங்கிழைக்கவதுபேணுந்திருவமுதுசெய்தருள .... *
வோங்குகதலிக்குருத்துக்கொண்டொல்லைவந்தணைந்தார் .. *

(இதன்பொருள்.)

அந்தத் திருநாவுக்கரசென்னும் பிள்ளையும் காலவிளம்பஞ்செய்யாமல் அவ்விடத்துக்குவிரைவாகப்போய் அழகியவாழைக்குருத்தை அரியப்போனபோது ஒருபாம்பானது தீண்ட அதனை லக்ஷியஞ்செய்யாமல் அப்பர்சுவாமிதிருவமுதுகொள்ளவாழைக்குருத்தை அரிந்துகொண்டு விரைவில்வந்துசேர்ந்தான் (எ-று) (௨௱௫)

தீயவிடந்தலைக்கொள்ளத்தெருமந்துசெழுங்குருத்தைத் .. *
தாயர்கரத்தினில்நீட்டித்தளர்ந்துதனைத்தழலுக .... *
மேயபடியுரைசெய்துவிழக்கண்டுகெட்டொழிந்தேம் .... *
தூயவரிங்கமுதுசெயத்தொடங்காரென்றதுவொளித்தார் . *

(இதன்பொருள்)

கொடுமையாகியவிஷமானது தலையிலேறுதலால் மயக்கத்தை அடைந்து செழுமையாகிய வாழைக்குருத்தைத் தன் தாயாருடையகையில்கொடுத்துத் தடுமாற்றத்தை அடைந்து நீயதன்கு ... சினையுடையநாகமானது தீண்டினதைச்சொல்லிக்கீழேவிழ-அதைப்பார்த்து அப்பூதிநாயனாரும் அவர் மனைவியாரும் நாம் பாவிகளாமேயும் பரிசுத்தராகிய அப்பர்சுவாமி இனி அமுது செய்யார் என்று விதனமுற்று அந்தப்பிள்ளையிறந்ததைத்தெரிவிக்காமல் மறைத்தார்கள் — எ-று) அப்பர்சுவாமியுண்ணுவொன்பதுபற்றிக் கெட்டொழிந்தேமென்றார். (௨௱௬)

தம்புதல்வன்சவமறைத்துத்தடுமாற்றமிலராகி ....*
யெம்பெருமானமுதுசெயவேண்டுமெனவந்திறைஞ்ச.. ..*
வும்பர்பிரான்றிருத்தொண்டருள்ளத்திற்றடுமாற்ற .... .. *
நம்பர்திருவருளாலேயறிந்தருளிநவைதீர்ப்பார் ....*

(இதன்பொருள்)

அப்பூதிராயனார் தம்முடைய பிள்ளையின் சவத்தைத் மறைத்து வைத்து அதனால் யாதொருதுக்கமுமில்லாதவராய் எமது ஆண்டவரோ திருவமுது உட்கொள்ளவேண்டுமென்றுவணங்கினவுடனே பரமசிவனுடைய ஒப்பற்றதொண்டராகிய திருநாவுக்காசுஸ்வாமி அடியாருடைய மனதில் பற்றியிருக்கும் புத்திரசோகத்தைச்சுவாமியின்கிருபையால் அறிந்துகொண்டு அதைத்தீர்க்க விருப்பங்கொண்டவராய்.—(எ-று) (௨௱௭)

அன்றவர்கண்மறைத்ததனுக்களவிறந்தகருணையராய்; கொன்றைநறுஞ்சடையார்தங் கோயிலின்முன் கொணர்வித்தே; யொன்றுகொலாமெனப்பதிக மெடுத்துடையான்சீர்பாடப்; பின்னறவிடம்போய்நீங்கிப்பிள்ளையுணர்ந்தெழுந்திருந்தான்;

(இதன்பொருள்)

அப்பொழுதுதமக்காக அப்பூதிநாயனாரும் அவர்மனைவியாரும் பிள்ளையிறந்ததைச்சொல்லாமல் மறைத்ததற்கு அளவற்றகிருபையை உடையவராய் வாசனையுற்ற கொன்றைமாலையைத்தரித்த கைலாசபதியின் கோயிலின்முன் அச்சவத்தைக்கொண்டுவரும்படி கட்டளையிட்டு (ஒன்றுகொலாமென) ஒருபதிகத்தையெடுத்துப் பரமசிவனுடைய புகழினைக்குறித்துப்பாடிய பின்பு தலைக்கொண்டவிஷம் இறங்கி திருநாவுக்கரசென்னும் பிள்ளை உணர்வுபெற்று எழுந்திருந்தான்.—(எ-று) (௨௱௮)

அருந்தனயனுயிர்பெற்றவதுகண்டுமமுதுசெய்யா .... ..*
திருந்ததற்குத்தளர்வெய்தியிடருழந்தார்துயர்நீங்க .. ... *
வருந்துமவர்மனைபுகுந்துவாகீசதிருமுனிவர் .... .. *
விருந்தமுதுசெய்தருளிவிருப்பினுடன்மேவுநாள் .. .. *

(இதன்பொருள்.)

இறந்துபோன அருமையாகியகுமாரன் மறுபடிபிழைத்ததைக்கண்டபோதும் அதற்குச்சந்தோஷிப்படாமல் வாகீசரென்னும் தவமுனிவருடைய அவதாரமாகிய திருநாவுக்கரசுசுவாமி அமுதுசெய்யாமலிருந்ததற்காக விசனப்பட்டு வருந்துகின்ற அப்பூதிநாயனாருக்குள்ள மனக்குறைநீங்கும்படி அந்தச்சுவாமி

மி அவர்திருமனையிற்போய் விருந்தாகப்படைத்ததிருவமுதை உண்டருளி மகிழ்ச்சியோடு அங்கிருக்கும்நாள்களில்—(எ-று)

திங்களூர்தனினின்றுந்திருமறையோர்பின்செல்லப் ..... *
பைங்கண்விடைத்தனிப்பாகர்திருப்பழனப்பதிபுகுந்து .. *
தங்குபெருங்காதலொடுந்தம்பெருமான்கழல்சார்ந்து .... *
பொங்கியவன்புறவணங்கிமுன்னின்றுபோற்றிசைப்பார் ... *

(இதன்பொருள்)

அப்பர்சுவாமி திங்களூரிலிருந்து அப்பூதிநாயனார்முதலாகிய பிராமணர்கள் பின்னாகவர அழகியகண்களையுடைய ரிஷபத்தைத்தமக்குவாகனமாகவுடைய பரமசிவன் வீற்றிருக்கின்ற திருப்பழனமென்னும் ஸ்தலத்திற்கு எழுந்தருளி மிகுந்தபத்தியோடு தம்முடைய ஆண்டவருடைய திருவடிகளை அடைந்து மேற்பட்ட அன்புதளும்பவந்தனஞ்செய்து சன்னிதியின்முன்னேநின்று பாடுவாராயினார்.—(எ-று) (௨௱௰)

புடைமாலைமதிக்கண்ணிப்புரிசடையார்பொற்கழற்கீ ..... *
ழடைமாலைச்சீலமுடையப்பூதியடிகடமை .... *
நடைமாணச்சிறப்பித்துநன்மைபுரிதீந்தமிழின் .... *
றொடைமாலைத்திருப்பதிகச்சொன்மாலைபாடினார் ... . *

(இதன்பொருள்)

கண்டத்தினிடமாகத் தலைமாலையையும் புரியாயிருக்கின்றசடையில் சந்திரனாகிய கொண்டைமாலையையுந்தரித்தசுவாமி அழகிய திருவடிகளில் அடையத்தக்க ஒழுக்காகிய அன்பினை உடைய அப்பூதிநாயனாரை அவருடையநடத்தையின் மேம்பாட்டை எடுத்துப் புகழ்தலால் சிறப்பித்துத் தொடுக்கப்பட்ட மாலையாக நன்மையைச்செய்கின்ற சொல்லினிடத்தி லினிமைபொருந்திய தமிழ்ப்பதிகங்களின் கூட்டத்தைப்பாடிச் சாத்தினார். (எ-று) (தொடைமாலைநன்மைபுரி தீஞ்சொலின்தமிழ்த்திருப்பதிகமாலை), என்று இயைபுசெய்துகொள்க. நான்காமடிக் கடையிலிருக்கின்ற மாலையென்பது - கூட்டம். இரண்டாமடியிலுள்ளமாலை - ஒழுங்கு. முதலடியில்மாலைக்கு - மாலைக்காலமென்றுபொருள்கொண்டு அதனிடத்தில்தோன்றிய பிறையைச்சடையினிடத்தில் கண்ணியாலையாகத் தரித்தவரென்று கூறினும்பொருந்தும். (௨௱௰௧)

எழும்பணியுமிளம்பிறையுமணிந்தவரையெம்மருங்குந், தொழும்பணிமேற்கொண்டருளுந்திருச்சோற்றுத்துறைமுதலாத்-த

ழும்புறுகேண்மையினண்ணித்தானங்கள்பலபாடிச்-செழும்ப
ழனத்திருக்கோயிற்றிருத்தொண்டுசெய்திருந்தார் .... ..*

(இதன்பொருள்.)

எழுந்துதாவுகின்ற சர்ப்பத்தையும் இளமையாகிய மூன்றாம் பிறையையுந்தரித்தசுவாமியையெவ்விடத்துமுள்ளஸ்தலங்களைத் தொழவேண்டிய திருப்பணியையே தலைமையதாகக்கொண்டு அருள்செய்தற்கிடமாகிய திருச்சோற்றுத்துறையென்னும் ஸ்தலமுதலாக அனேகந்திருப்பதிகளை தழும்புபட்ட அன்போடு அடைந்து தேவாரம்பாடிச் செழுமைபொருந்திய திருப்பழனத்தின் திருக்கோயிலில் திருத்தொண்டுசெய்துகொண்டிருந்தார்.—(எ-று) தழும்புறுகேண்மை-நாட்பட்டுமுதிர்ந்த அன்பு. (௨௱௰௪)

சாலநாளங்கமர்ந்துதந்தலைமேற்றாள்வைத்த ....*
வாலமார்மணிமிடற்றாரணிமலர்ச்சேவடிநினைந்து ....*
சேலுலாம்புனற்பொன்னித்தென்கரையேறிச்சென்று.. ..*
கோலநீண்மணிமாடத்திருநல்லூர்குறுகினார் .. ..*

(இதன்பொருள்.)

வெகுநாளளவும் அவ்விடத்தேவாசஞ்செய்து தம்முடைய சிரசின்மேல் திருவடியைவைத்த விஷத்தங்குதலால் கருமையுற்ற கழுத்தினையுடைய பரமசிவனது அழகுபொருந்திய தாமரைபோலுஞ்சிவப்பாகிய பாதங்களை நினைத்து மீன்கள் உலாவுகின்ற நீலையுடைய காவேரியாற்றின் தென்கரையின்வழியாக நடந்துசென்று பதிக்கப்பட்டிருக்கும் ரத்நங்களால் அழகுபெற்றிருக்கும் மேல்வீடுகளையுடைய திருநல்லூர்க்குஎழுந்தருளினார் (எ-று) (௨௱௰௫)

அங்கணைந்துதம்பெருமானடிவணங்கியாராது.. .. ..*
பொங்கியவன்பொடுநிலைத்துப் போற்றிசைத்துப் பணிசெய்யு
நாட்,டங்குபெருங்காதலினாற்றாமரைமேல்விரிஞ்சனொடு ..*
செங்கண்மாலறிவரியார்திருவாரூர்தொழநினைந்தார் .. .. *

(இதன்பொருள்)

அவ்விடத்திற்குப்போய்த் தம்முடைய ஆண்டவராகிய சுவாமியினது பாதங்களைப் பணிந்து அடக்கக்கூடாமல் மேற்பட்ட அன்பினால் நிறைவுற்று ஸ்தோத்திரஞ்செய்த திருப்பணிசெய்துகொண்டுவருநாளில் மிகுந்த ஆசைகொண்டு தாமரை

மலரில் இருக்கும் பிர்மாவோடு சிவந்தகண்களையுடைய விஷ்ணுவும் அறியக்கூடாத பரமசிவன்வீற்றிருக்கும் திருவாரூரைத்தொழும்படி திருவுள்ளங்கொண்டார்.—(எ-று) (௨௱௰௪)

நல்லூரினம்பரருள்பெற்றுப்போய்ப்பழையாறைப் .. .. *
பல்லூர்வெண்டலைக்கரத்தார்பயிலுமிடம்பலபணிந்து .... *
சொல்லூர்வண்டமிழ்பாடிவலஞ்சுழியைத்தொழுதேத்தி .. *
யல்லூர்வெண்பிறையணிந்தார்திருக்குடமூக்கணைந்திறைஞ்சி *

(இதன்பொருள்)

திருநல்லூரில் எழுந்தருளியிருக்கும் பரமசிவனுடைய கிருபையைப்பெற்றுப்பழையாறென்னும் ஸ்தலத்துக்கும் பத்களோடுகூடியவெண்மையாகிய தலையைக்கையிலுடைய சுவாமி எழுந்தருளிய மற்றைஸ்தலங்களுக்கும் போய் வந்தனஞ்செய்து சொற்களமைந்திருக்கும் வளம்பொருந்திய தமிழ்ப்பதிகங்களைப்பாடித் தொழுது புகழ்ச்சிசெய்து இராக்காலத்தில் உதயமாகின்ற வெள்ளிய மூன்றாம்பிறையைத்தரித்த சுவாமி வீற்றிருக்குங் கும்பகோணத்துக்குவந்து தொழுது.—(எ-று) குடமூக்கு-கும்பகோணம். அல்-இராத்திரி, பிர்மதேவன் செருக்குற்றுப் பரமசிவனைத்தூஷித்தபோது அவன்தலையில் ஒன்றைப்பிடுங்கித் திருக்கரத்தில் ஏந்திப் பங்கமுண்டாகச் செய்தமையையாவர்க்குந் தெரிவிக்க (வெண்டலைக்கரத்தா) ரென்றார்.

நாலூர்தென்றிருச்சேறைகுடவாயினறையூர்சேர்... --- .. *
பாலூருமின்மொழியாள்பாகனார்கழல்பரவி.. .. .. *
மேலூர்தீவிடைக்கொடியார்மேவுமிடம்பலபாடி... .... *
சேலூர்தண்பணைசூழ்ந்ததென்றிருவாஞ்சியமணைந்தார் ... *

(இதன்பொருள்.)

நாலூர் திருச்சேறை குடவாயில் நறையூர்-பால்போலும் இனியவார்த்தையையுடைய பார்வதியார் இடப்பாகத்திற்கொண்ட பரமசிவனாருடையதிருவடிகளைத்தொழுது துஷ்டர்களிடத்தில் கோபமுறுத்துகின்ற ரிஷபத்தைவாகனமாகவும் கொடியாகவும் உடைய ஆண்டவரதுபலதிருப்பதிகளையும்பாடிக் கயல்கள் விளையாடுகின்ற குளிர்ச்சியுற்ற வயல்கள்சூழ்ந்ததிருவாஞ்சியமென்னும் ஸ்தலத்திற்கு எழுந்தருளினார்.—(எ-று) (௨௱௰௫)

பெருவாசமலர்ச்சோலைப்பெருவேளூர்பணிந்தேத்தி ...... *
முருகாருமலர்க்கொன்றைமுதல்வனூர்பதிபிறவுந் .... .. *

திருவாரும்விளமருடன்சென்றிறைஞ்சிவாகீசர் .. .. .. *
மருவாரூரெரித்தவர்தந்திருவாரூர்வந்தடைந்தார் .. .... *

(இதன்பொருள்)

அப்பர்சுவாமி மணத்தை மிகவும்வீசுகின்ற புஷ்பங்களை உடைய சோலைசூழ்ந்த பெருவேளூரைவணங்கிப்புகழ்ந்து- தேன்நிறைந்திருக்கின்ற கொன்றைமலர்மாலையைத்தரித்த பரமசிவனுடைய மறைத் திருப்பதிகங்களையும் செல்வமோங்கிய திருவிளமரொன்றும் ஸ்தலத்தையும்போய்வணங்கி அடைந்தன்புசெய்யாமலிருந்த அசுரர்கள்தங்கிய திரிபுரத்தை யெரித்துவிட்டசுவாமி வீற்றிருக்கும் திருவாரூர்க்கு வந்தடைந்தார்.— (எ-று) பரமசிவனுக்கேற்றப்பட்டிருக்கும்விசேடணங்கள் சிலவற்றில் ஒன்றொன்று ஒவ்வொரு ஸ்தலத்தில் நடந்திருக்கின்றமையால் அந்தஸ்தலத்தின் சுவாமிக்கே சொல்லவேண்டியதாயினும் அப்படியின்றிப் பிறழ்ந்தும் வந்திருக்கின்றது அதனை அவ்வஸ்தலபுராணங்களைப் பார்த்தறிந்துகொள்க. மாறிவந்திருப்பதில் ஒன்றுசொல்கிறோம் திரிபுராதிகளைத் திருவதிகையில் எரித்தபடியால்அவ்விசேஷணம் அந்தஸ்தலத்துச்சுவாமிக்குவந்திருப்பதுமன்றி-மருவாரூர் எரித்தவர்தந்திருவாரூர் என்பதனால் - தியாகேசர்க்கும்வந்தது. இந்தத் திருப்பதிகளில் அன்றிச்செய்தருளிய மகிமைகளெல்லாம் பொதுவென்க.

ஆண்டவரசெழுந்தருளவாரூரிலன்பர்கடா .... *
நீண்டசடையார்தம்பானிறைந்தவருள்பெற்றுடையார் .. *
காண்டகுமாளிகைமாடங்களின்சிறந்தோங்கிடவெங்குஞ் .. *
சேண்டிகழ்வீதிகள்பொலிய திருமலிமங்கலஞ்செய்தார் .. *

(இதன்பொருள்.)

திருநாவுக்கரசுசுவாமி திருவாரூருக்கு எழுந்தருளியவுடனே அந்தஸ்தலத்தில் வாசஞ்செய்கின்றவர்களாகியும் - நீளமாகிய சடையை உடைய பரமசிவனிடத்தில் அன்புசெய்கின்றவர்களாகியுமிருக்கின்ற அடியார்கள் பார்க்கத்தக்கவையாயிருக்கின்ற பெரியவீடுகளும் மேல்வீடுகளும் அழகினால் சிறப்பினை அடைய நீண்டிருக்கின்ற வீதிகளிலெங்கும் பிரகாசிப்பதற்கேதுவாகிய மங்களகரமான அலங்காரங்கள்செய்தார்.—(எ-று)

(வேறு.)

வல்லமண்குண்டர்தம்மாயைகடந்துமறிகடலிற் .... *
கல்லெமிதப்பாகப்போந்தவர்வந்தாரெனுங்களிப்பா .... *

றொல்லையிறொண்டரெயிற்புறஞ்சென்றெதிர்கொண்டபோது*
சொல்லினரசர்வணங்கித்தொழுதணைசெய்தணைவார் .... *

(இதன்பொருள்)

துஷ்டர்களாகிய வலியசமணர்கள்செய்த தந்திரங்களில் நின்றும் தப்பித் தன்னிடத்தி லடைந்தபொருளை அலைகளாகிய கைகளால் மறித்துத்தள்ளுகின்ற சமுத்திரத்தில் தம்மைச்சேர்த்துக்கட்டிய கல்லானது மிதக்கும்பொருளாய் விடக்கரையேறினவர் எழுந்தருளினாரென்கிற சந்தோஷத்தால் எண்ணிறந்த தொண்டர்கள் கோட்டைவாயிலின் புறத்தில்வந்து எதிர்கொண்டு கண்டபோது திருநாவுக்கரசுசுவாமி அடியார்களைக்கண்டு வணக்கமாய்க்கும்பிட்டுப்புகழ்ந்து அவர்களோடு சேர்ந்து வருவாராயினார்.—(எ-று) (௨௱௰௯)

பற்றொன்றி லாவரும் பாதகராகு மமணர்தம்பா, லுற்றபிணி
யொழிந்துய்யப்போந்தேன் பெறலாவதொன்றே, புற்றிடங்
கொண்டார்தந்தொண்டர்க்குத்தொண்டாம்புண்ணியமென்
றற்றவுணர்வொடுமாரூர்த்திருவீதியுள்ளணைந்தார் .... *

(இதன்பொருள்)

பிறமதத்தாரிடத்தில் எவ்வளவும் அன்பில்லாத அரிய பாவிகளாகிய சமணர்களிடத்தி லகப்பட்டு அடைந்தவருத்தத்தில்நின்று ஒழிந்து நல்வழியை அடையும்படிவந்தேன் புற்றிடங்கொண்டவராகிய சுவாமியின் அடியவர்களுக்குத்தொண்டராகவேண்டிய பேறு ஒன்றே இனிப்பெறவேண்டியதென்று ஆனந்தமிகுதியால் பரவசமாயத் திருவாரூரின் வீதியினுள்ளேயெழுந்தருளினார்.—(எ-று) (௨௱௨௰)

சூழ்ந்திருத்தொண்டர்தம்முடன்றோரணவாயினண்ணி ...*
வாழிதிருநெடுந்தேவாசிரியன்முன்வந்திறைஞ்சி ... .*
பாழியவரைத்திருமாளிகைவாயிலவைபுகுந்து ... .*
நீள்சுடர்மாமணிப்புற்றுகந்தாரைநேர்கண்டுகொண்டார் ..*

(இதன்பொருள்)

திருநாவுக்கரசுசுவாமி தம்மைச்சூழ்ந்துகொண்டுவரும் தொண்டர்களோடு தோரணங்கட்டியிருக்கும் திருவாசலை யடைந்து ஞானச்செல்வத்துக்கு இருப்பிடமாகிய தேவாசிரிய மண்டபத்துக்குமுன்னேவந்து அதைவணங்கிச்சக்கிரவாளகிரிபோல் வ

யார்த்திருக்கின்ற திருமாளிகைவாசலினுள்ளே புகுந்து வெகு தூரவரையில் கிரணங்களைவீசுகின்ற நாகமணிகள்தங்கிய புற்றில் எழுந்தருளியிருக்கின்றவரை நேரேவந்து தரிசனஞ்செய்தார்.—(எ-று) (௨௱௨௧)

கண்டுதொழுதுகரசரணாதியங்கங்களெல்லாங் ....*
கொண்டபுளகங்களாகவெழுந்தன்புகூரக்கண்க... .. ..*
டண்டுளிமாரிபொழியத்திருமூலட்டானர்தம்மைப் ....*
புண்டரிகக்கழல்போற்றித்திருத்தாண்டகம்புனைந்து .... ..*

(இதன்பொருள்.)

தரிசனஞ்செய்து நமஸ்கரித்துக்கைகால்முதலிய அவயவங்களிலெல்லாம் மயிர்க்குச்செறிய அன்பினது மிகுந்த எழுச்சியால் இரண்டுகண்களும் குளிர்ச்சிபொருந்திய துளிகளினுருவமாகியமழையைப்பொழியத்திருமூலட்டானராகியபுற்றிடங்கொண்டவரது தாமரைமலர்போன்ற பாதத்தைவணங்கி-திருத்தாண்டகப்பதிகம் பாடிச்சாத்தி—(எ-று) (௨௱௨௨)

காண்டலேகருத்தாயினென்னுங்கலைப்பதிகந்... ....*
தூண்டாவிளக்கன்னசோதிமுன்னின்றுதுதித்தருளி .... *
யீண்டுமணிக்கோயில்சூழ்வலஞ்செய்திறைஞ்சியன்பு .... *
பூண்டமனத்தொடுநீடிருவாயிற்புறத்தணைந்தார்--- .. ....*

(இதன்பொருள்.)

(காண்டலேகருத்தாயின) வென்னும் பெருமையுள்ள பதிகத்தைத் தூண்டாவிளக்குப்போலும் ஒளிமழுங்காத சோதிசொருபமாகிய சுவாமியின்முன்னேநின்று ஸ்தோத்திரஞ்செய்து மங்கசிந்து மணிகளை மிகுதியும் பதித்திருக்கும் கோயிலை வலமாகவந்து தொழுது அன்புநிறைந்தமனத்தோடு உயர்ந்த திருவாயிலினின்றும் புறத்தில்வந்தடைந்தார்.—(எ-று) (௨௨௩)

(வேறு)

செய்யமாமணியொளிசூழ்திருமுன்றின்முன்றேவா சிரியன்சார்ந்து, கொய்யுலாமலர்ச்சோலைக் குயில்கூவமயிலாலுமாரூரரைக்;கையிலுற்றெருடாதேமுன்கனியிருக்கக்காய்கவர்ந்தகள்வனேனென்,றெய்தரியகையறவாத் திருப்பதிகமருள்செய்தங்கிருந்தாரன்றே................................*

(இதன்பொருள்)

செய்யநிறத்தை உடைய விலையுயர்ந்த குருவிந்தமணிகளின்

பிரகாசஞ்சூழ்ந்த திருவாசலுக்குமுன் தேவாசிரியமண்டபத்தைச்சார்ந்து (கொய்யுலாமலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலுமாரூராரைக்-கையினாற்றொழாதேமுன் கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனென்று) அடைதற்கரிய் ஆராமையோடுதிருப்பதிகத்தைப் பாடி அந்தஸ்தலத்தில் வாசஞ்செய்தார்.—(எ-று) கொய்யத்தகுந்தபுஷ்பங்களையுடைய சோலைகளில்குயில்கள்கூவ- மயில்கள் ஆடுகின்ற திருவாரூரில் எழுந்தருளியிருக்கிற சுவாமியைக் கைகளாலே தொழாமல் எதிராகத் தித்திப்பாகிய பழமிருக்க-அதைவிட்டுக் கசப்பாகிய காயைத்தின்ற அபாக்கியவந்தனாயிருக்கின்றேனென்று இந்தத் தேவாரத்திற்குப்பொருளாம். (உஉ௪)

மார்பாரப்பொழிகண்ணீர்மழைவாருந்திருவடிவுமதுரவாக்கிற்சேர்வாகுந்திருவாயிற் றீந்தமிழின்மாலைகளுஞ் செம்பொற்றாளே,சார்வானதிருமனமுமுழவாரத்தனிப்படையுந்தாமுமாகிப், பார்வாழத்திருவீதிப்பணிசெய்துபணிந்தேத்திப் பரவிச்செல்வார்... ....*

(இதன்பொருள்)

மார்பினிடத்தில் வழிந்தோடும்படிபொழிகின்ற மழைபோன்றகண்ணீரால் நனைந்ததிருமேனியும் அழகியவாயினின்றும் மதுரமாகிய சொற்களால் தொடுக்கப்பட்ட தமிழ்ப்பதிகமாகிய மாலைகளும் சிவந்தபொன்போன்ற பாதமே துணையாகப்பற்றிய உள்ளமும் ஒப்பற்ற உழவாரக்கருவியும் தாமுமாகத் தோன்றி உலகத்தார்வாழத் திருவீதிகளில் திருப்பணிசெய்து வந்தனஞ்செய்துபுகழ்ந்து எழுந்தருள்வாராயினார்.—(எ-று) இங்கு எத்திப்பரவல்-ஒருசொல். (உஉ௫)

நீடுபுகழ்த்திருவாரூர் நிலவுமணிப் புற்றிடங்கொண்டிருந்தார் தம்மைக், கூடியவன்பொடுகாலங்களிலணைந்துகும்பிட்டுக்'கோதில்வாய்மைப், பாடிளம்பூதத்தினா னெனும்பதிக முதலான பலவும்பாடி, நாடியவார்வம்பெருக நைந்துமனங் கரைந்துருகி நயந்துசெல்வார் .... *

(இதன்பொருள்.)

புகழோங்கிய திருவாரூரினிடத்தில் விளங்குகின்ற புற்றை யிடமாகக்கொண்டருளிய சுவாமியை அன்பினையுடையவராய்ப் பூசாகாலங்களில் தவறாமற்போய் வணங்கி-(பாடிளம்பூதத்தினா)னென்கிற குற்றமற்ற வாக்கினையுடைய பதிகமுதலான பலபதி

ங்களைப்பாடி-ஆசையானது பெருக்கத்தை அடைய மனமானது கரைந்து நைந்து உருகுதலால் ஒன்றுந்தோன்றாதவராய்ப் போய்க்கொண்டிருப்பார்.—(எ-று) மனங் கரைந் துருகி நைதல்-எவ்வளவும் புலன்களில் இந்திரியங்கள் செல்லாமல்மனமடங்குதல். நைந்துசெல்வாரொன்றது-முற்றப் பயித்தியங்கொண்டவன் வழிப்போகுதல்போல் ஒருவகையாயன்றிப் பலவகையாய்த்தடுமாறிநடப்பதைச்சொல்லியபடியாம்.(௨௨௬)

நான்மறைநூற்பெருவாய்மை நமிநந்தியடிகடிருத் தொண்டி
னுண்மைப், பான்மைநிலையாலவரைப்பரமர்திருவிருத்தத்துள்
வைத்துப்பாடித், தேன்மருவுங்கொன்றையார்திருவாரூரானெ
றியிற்றிகழுந்தன்மை, யானதிறமும்போற்றி யணிவீதிப்பணி
செய்தங்கமருநாளில் .... *

(இதன் பொருள்.)

நான்குவேதங்களையும் தருமநூல்களையும் உணர்ந்து அவைகளில்சொல்லிய விதிப்படி நடக்கின்ற நமிநந்திநாயனார்செய்யும் நன்மைபொருந்திய திருப்பணிவிடையானது சிறந்ததாகத்தோன்றினபடியால் அவர்தன்மையை- சுவாமியைப்பாடும் பதிகத்தின் திருவிருத்தத்துள் ஏற்றிப் பாடித் தேன்தங்கிய கொன்றைமாலையைத் தரித்த சுவாமியின் திருவாரூரில்விளங்கிய அரநெறியென்னும் ஸ்தலத்தில் நடந்த மகிமையையும்போற்றி அழகியவீதிகளில் திருப்பணிவிடைசெய்துகொண்டு வரும்நாளில் —(எ-று) அரநெறியென்னும் ஸ்தலத்தில் நமிநந்திநாயனார்க்குச் சுவாமி அசரீரியாய்நின்று கட்டளையிட்டபடியே அந்த அடியார் தண்ணீர்விட்டு விளக்கேற்ற நெய்விளக்குப்போல் அதுஎரிந்ததை-திகழுந்தன்மையானதிறமென்றார்.

நீராருஞ்சடைமுடியார்நிலவுதிருவலிவலமுநினைந்துசென்று *
வாராருமுலைமங்கையுமைபங்கர்கழல்பணிந்துமகிழ்ந்துபாடிக்
காராருங்கறைக்கண்டர்கீழ்வேளூர்கன்றாப்பூர்கலந்துபாடி. *
யாராதகாதலினாற்றிருவாரூர்தனின்மீண்டுமணைந்தாரன்றே. *

(இதன் பொருள்)

கங்கையைத்தரித்த சடைமுடியை உடையசுவாமி வீற்றிருக்கும் வலிவலத்தைநினைந்து அவ்விடத்துக்குப்போய்-கச்சு அணிந்தஸ்தனங்களையுடைய பார்வதியாரைப்பாகத்திலுடையவரது திருவடியைப்பணிந்து விருப்பத்துடனே பதிகம்பாடி-மேகம்போல்கருமையுற்றகண்டத்தினை உடையவரது கீழ்வேளூரை

யும்-திருக்கன்றாப்பூரையும் அடைந்து திருப்பதிகம்பாடி-திருப்தியில்லாத ஆசையோடு திருவாரூர்க்கு மறுபடியும் வந்தடைந்தார் — எ-று) (உஉஅ)

மேவுதிருவாதிரைநாள் வீதிவிடங்கப்பெருமாள்பவனிதன்னிற் றேவருடன்முனிவர்கண்முன் சேவிக்குமடியார்களுடன்சேவித்து, மூவுலகுங்களிகூரவரும்பெருமைமுறைமையெல்லாங் கண்டுபோற்றி, நாவினுக்குத்தனியரசர்நயக்குநாள் நம்பர்திருவருளினாலே.......................... *

(இதன்பொருள்)

பொருந்தமாகிய திருவாதிரைநட்சத்திரத்தில் தியாகராசர்பவனிவருங்காலத்தில்-தேவர்களுமுனிவர்களுமாகிய இவர்கள் முன் சேவிக்காநின்ற அடியார்களோடு வணங்கி மூவுலகத்தாரும் களிப்பை அடையவருகின்ற திருவிழாவின் சிறப்புகளெல்லாங்கண்டு தொழுது ஒப்பற்ற அப்பர்சுவாமிகள் மகிழ்ந்திருக்கும்நாள்களில் சுவாமியினது கிருபையால்.—(எ-று)

திருப்புகலூரமர்ந்தருளுஞ் சிவபெருமான்சேவடிகள் கும்பிட்டேத்தும், விருப்புடையவுள்ளத்துமேவியெழுங்காதல்புரிவேட்கைகூர, வொருப்படுவார்திருவாரூரொருவாறுதொழுதகன்றக்குள்ளம்வைத்துப், பொருப்பரையன்மடப்பாவையிடப்பாகர்பதிபிறவும்பணிந்துபோந்தார்.................. *

(இதன்பொருள்.)

திருப்புகலூரில் வீற்றிருக்கின்ற பரமசிவனுடையதிருப்பாதங்களைக்கும்பிட்டு ஸ்தோத்திரஞ் செய்யவேண்டுமென்கிற அன்பினை உடைய உள்ளத்தில் அதைப்பற்றி விருப்பமானது மூண்டதலால் நிச்சயங்கொண்டவராய்த்திருவாரூரைத்தொழுது ஒருவகையாக அந்தவூரைவிட்டுநீங்கினாலும்அதைமனதில் நினைத்துக்கொண்டே இமாசலராசன் மகளாராகிய அழகியபாவைபோன்ற பார்வதியாரை இடப்பாகத்திலுடையசுவாமி எழுந்தருளிய பலஸ்தலங்களையும் பணிந்தெழுந்தருளினார் அப்பர்சுவாமி.—(எ-று) (உ௱கய)

அந்நாளிலாரூடையபிள்ளையார்திருப்புகலியதன்கணின்றும் * பன்னாகப்பூணணிவார் பயின்றதிருப்பதிபலவும்பணிந்துசெல்வார், புன்னாகமணங்கமழும்பூம்புகலூர்வந்திறைஞ்சிப்பொருவில்சீர்த்தி, மின்னாரும் புரிமுந்நூன் முருகனார் திருமடத்தின் மேவுங்காலை................................ *

(இதன்பொருள்)

அந்நாளில் நம்மை ஆட்கொள்பவராகிய சம்பந்தமூர்த்திசு
வாமி சீர்காழியில்நின்றும் பாம்பை ஆபரணமாகத்தரித்தகை
லாசபதிவீற்றிருக்கும் பலதிருப்பதிகளையும் தொழுதுவருகின்
றவராயிப் புன்னைமரங்களின் புஷ்பங்களால் வாசனைகொண்ட
திருப்புகலூர்க்குவந்து பலிந்து ஒப்பில்லாதகீர்த்தியையு
டைய மின்போலும்விளங்கிருப்புரியாகியபூணூல்தரித்தமு
ருகநாயனாருடைய அழகியமடத்தில் வந்தபோது —(எ-று)

ஆண்டவரசெழுந்தருளியணியாரூர்மணிப்புற்றிலமர்ந்தவாழு
நீண்டசுடர்மாமணியைக்கும்பிட்டுநீடுதிருப்புகலூர்நோக்கி,மீ
ண்டருளினாரென்றுகேட்டருளியெதிர்கொள்ளும்விருப்பினோ
டு, மீளாப்பெருந்தொண்டர்குழாம்புடைசூழ வெழுந்தருளி
யெதிரேசென்றார். .... *

(இதன்பொருள்)

அப்பர்சுவாமி எழுந்தருளி அழகுபொருந்திய திருவாரூரினி
டமாகிய திறமுற்றபுற்றில் விரும்பிவீற்றிருக்கும் காந்தியைவெ
குதூரம்வரைக்கும் வீசுகின்ற விலையுயர்ந்த மாணிக்கமாகிய
சுவாமியை வழிபாடுசெய்து பழையதாகிய திருப்புகலூரை
நோக்கித் திரும்பிவருகின்றாரென்றுகேட்டு எதிர்கொள்ளவே
ண்டுமென்னும் ஆசையோடு பெருமைபொருந்திய எண்ணிக்
கையில்லாத அடியார்கூட்டங்கள் சூழ்ந்துவர எழுந்து எதிர்
கொண்டார்.—(எ-று) (உ௱௫௰௨)

ஈண்டமலிதடம்பொய்கைக்காழியர்கோனெதிரணையுங்காத
ல்கேட்டு, வரன்றுமணிப்புனற்புகலூர்நோக்கிவரும்வாகீசர்ம
கிழ்ந்துவந்தார், திரண்டுவருந்திருநீற்றுத்தொண்டர்குழாமிரு
திறமுஞ்சேர்ந்தபோது, இரண்டுநிலவின்கடல்களொன்றாகிய
ணைந்தனபோலிசைந்தவன்றே.... .... *

(இதன்பொருள்)

நீர்க்காக்கைகள் கூட்டமாகித்தங்கிய அகலமாகிய பொய்கைக
ள்சூழ்ந்த சீர்காழியிலுள்ளவர்க்குத் தலைவராகிய திருஞானசம்
பந்தமூர்த்திசுவாமி எதிர்கொண்டு வருகிறார் என்கிற அன்பா
கியவார்த்தையைக்கேட்டு மணிகள்வரன்றிக்கொண்டு வருகின்
றநீரையுடைய திருப்புகலூரைநோக்கிவருகின்ற அப்பர்சுவா
மி மிகவுங்களிப்புக்கொண்டார்- திருநீறுதரித்துத் திரளாகவரு

கின்ற இருபுறத்து அடியார்கூட்டங்களுஞ் சேர்ந்தபொழுதி ல் இரண்டுபாற்கடல்கள் ஒன்றாகச்சேர்ந்ததுபோல் ஒத்தமை ப்பட்டது.—(எ-று) வான்று-இனவெதுலகம். (௨௱௬௰௫)

திருநாவுக்கரசெதிர்சென்றிறைஞ்சிச்சிரபுரத்துத்தெய்வவாய்
மைப்,பெருஞானசம்பந்தப்பிள்ளையாரெதிர்வணங்கியப்பரே
நீர், வருநாளிற்றிருவாரூர்நிகழ்பெருமை வகுத்துரைப்பீரெ
ன்றுகூற, வருநாமத்தஞ்செழுத்தும்பயில்வாய்மை யவருமெ
திரருளிச்செய்வார் ....*

(இதன்பொருள்)

அப்பர்சுவாமிகள் எதிராகப்போய் வணங்கச் சீர்காழியில் அவதாரஞ்செய்தருளிய தெய்வத்தன்மையாகிய வாக்கினை உடைய மிருந்த ஞானத்தைப்பெற்ற திருஞான சம்பந்தமூர்த்திசுவாமியும் எதிராகவணங்கி-அப்பரே நீர்திருவாரூரில் நடக்கின்ற பெருமையை விசதமாகச்சொல்லுமென்றுகேட்க-ஐந்தெழுத்தையும் எப்போதும் உச்சரித்துக்கொண்டு அதனால் பரிசுத்தமாகிய வாக்கை உடைய அப்பர்சுவாமியும் உத்தரஞ்சொல்லுகின்றார்.—(எ-று) (௨௱௬௰௬)

(வேறு.)

சித்தநிலாவுந்தென்றிருவாரூர் நகராளு ....*
மைத்தழைகண்டராதிரைநாளின்மகிழ்செல்வ. ....*
மித்தமைமைத்தென்றென்மொழிகேனென்றுரைசெய்தார்*
முத்துவிதானமணிப்பொற்கவரிமொழிமாலை ....*

(இதன்பொருள்.)

அடியார்களுடைய மனதிற் குடிகொண்டிருக்கும் தெற்கின்கண்ணுள்ளதாகிய திருவாரூர் நகரத்தையாள்கின்ற விஷமானது தங்கியகழுத்தினை உடைய பரமசிவனது திருவாதிரை நட்சத்திரத்தில்நடக்கின்ற சந்தோஷித்திற்கிடமாகிய திருவிழாவின்சிறப்பை இப்படிப்பட்டதென்று எந்தவகையால் சொல்வேனென்று (முத்துவிதானமணிப்பொற்கவரியென்று முதலில் எடுத்துச்சொல்லப்பட்ட பதிகத்தை அருளிச் செய்தார்.—(எ-று)

அம்மொழிமாலைச்செந்தமிழ்கேளாவணிசண்பை .... .. *
மைம்மலர்கண்டத்தண்டர்பிரானார்மகனாருங் .... *
கொய்மலர்வாவித்தென்றிருவாரூர்கும்பிட்டே.... ....*
யும்முடன்வந்திங்குடனமர்வேனென்றருள்செய்தார்.. ...*

(இதன்பொருள்.)

செந்தமிழாற்செய்யப்பட்ட அத்தன்மையை உடையபதிகமாலையைக்கேட்டு அழகாகிய சீர்காழியில் உதித்த நீலோத்பலபுஷ்பம்போலும் கரியநிறத்தையுடைய கழுத்தினராகிய பரமசிவனுக்குக் குமாரராகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியும் கொய்வதற்குத் தகுதியாயிருக்கின்ற புஷ்பங்களை உடைய தடாகங்கள்சூழ்ந்ததெற்குத்திசையிலுள்ள திருவாரூரைக்கும்பிட்டு உம்மோடுகூடவந்து இவ்விடத்திலேயே வாசஞ்செய்வேனென்று அருள்செய்தார்.—(எ-று) (உ௱௯௰௬)

மாமதிலாரூர்மன்னனையங்குவணங்கச்செந் ....*
தாமரையோடைச்சண்பையர்நாதன்றானேக .. *
நாமருசொல்லினாதருமார்வத்தொடுபுக்கார் ....*
பூமலர்வாசத்தண்பணைசூழும்புகலூரில் .....---*

(இதன்பொருள்)

பெரியமதில்சூழ்ந்த திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற தியாகேசரை அவ்விடத்திற்போய் வணங்கும்படி செந்தாமரை படர்ந்த ஓடைகள்சூழ்ந்த சீர்காழிக்குத்தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி போயருள - அப்பர்சுவாமியும் அன்போடு பொலிவையுடையமலர்களின் வாசனைவீசும் குளிர்ச்சி பொருந்திய வயல்சூழ்ந்த திருப்புகலூரில் எழுந்தருளினார். (எ-று, நாமருவு-நாமரு என நின்றது. நாவில்மருவியசொல்லிற்கரசென்று பொருள்செய்க. (உ௱௯௰௭)

அத்திருமூதூர்மேவியநாவுக்கரசுந்தஞ் ....*
சித்தநிறைந்தேயன்புதெவிட்டுந்தெளிவுள்ளம். ....*
மொய்த்திகழ்தாரைக்கண்பொழிநீர்மெய்முழுதாரப்......*
பைத்தலைநாகப்பூணணிவாரைப்பணிவுற்றார் ....*

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட பழமையாகிய ஸ்தலத்தை அடைந்த திருநாவுக்கரசுசுவாமியும் அன்பானது உள்ளத்தில்நிறைந்து மனதில் தோன்றியதெளிவானது தெவிட்ட-கண்ணிலிருந்துபொழியாநின்ற நீர்த்தாரையானது தேகமுழுதும் பரவி நிறைய - தலையைத்தானே படமாகவுடைய சர்ப்பத்தை ஆபரணமாகத்தரிக்கின்ற பரமசிவனைப்பணிந்தார்.—(எ-று) (உ௱௯௰௮)

தேவர்பிரானைத்தென்புகலூர்மன்னியதேனைப் ... . *
பாவின்மாலைச்செந்தமிழ்பாடிப்பரிவோடு .. .. *
மேவியகாலந்தோறும்விருப்பிற்கும்பிட்டே........ ..... *
யோவுதலோவுதிருப்பணிசெய்தங்குறைகின்றார்........ ..*

(இதன்பொருள்.)

தேவர்களுக்குப் பிரானாகியவரை அழகியபுலியூரில் நிலைபெற்றிருக்கின்ற தேன்போன்றவரைக்குறித்துப் பாட்டுகளால்தொடுக்கப்பட்ட செந்தமிழ்ப்பாமாலையைப் பாடிச் சாத்தி அன்போடுபொருந்தியகாலங்கள்தோறும் விருப்பத்தோடுகும்பிட்டுக் குறைவில்லாத திருப்பணிகளைச்செய்து அங்கேதானே சிலநாள் வாசஞ்செய்துகொண்டிருந்தார்.—(எ-று) (உ௩௯)

சீர்தருசெங்காட்டங்குடிநீடுதிருநள்ளா.. .. .. *
றூர்தருசோலைசூழ்தருசாத்தையயவந்தி .... .. *
வார்தருமென்முலையாளொருபாகன்திருமருக. *
லேர்தருயன்பாற்சென்றுவணங்கியின்புற்றார் ... *

(இதன்பொருள்)

சிறப்புப்பொருந்திய திருச்செங்காட்டங்குடியும் - பெருமைபெற்றதிருநள்ளாறும் நிறைந்தசோலைசூழ்ந்த சாத்தமங்கையென்னும் ஸ்தலத்தில் அயவந்தி என்னும் ஆலயத்தையும் கச்சுத்தரித்த அழகாகிய ஸ்தனங்களையுடைய பார்வதியை ஒருபாகத்திலுடையபரமசிவன்வீற்றிருக்கின்றதிருமருகலென்னும் ஸ்தலத்தையும் மிகுந்த அன்போடுபோய் வந்தனஞ்செய்து இன்பினை உடையவரானார்.—(எ-று) (உ௱௪௰)

அப்படிசின்னாள்சென்றபினாரூர்நகராளுந் .... *
துப்புறழ்வேணிக்கண்ணுதலாரைத்தொழுதிப்பால் .... .. *
மெய்ப்பொருண்ஞானம்பெற்றவர்வேணுபுரத்தெங்கள் .. *
பொற்புரிமுந்நூன்மார்பரும்வந்தார்புகலூரில்.... .... *

(இதன்பொருள்)

அந்தப்பிரகாரம் சிலநாள்போனபின்பு திருவாரூர் ஸ்தலத்தை ஆளுகின்ற பவளத்தையொத்தசடையையும் நெற்றியினிடமாகவுள்ளகண்ணையும் உடைய பரமசிவனைவணங்கி இப்பால் மெய்மைபொருந்தியபொருள் தங்கியஞானத்தைப் பெற்றுக்கொண்டவராகியும், சீர்காழியில் உதயமாகியபொன்போல்நிறத்தை உடைய முன்றுபுரியாகிய பூணூலைத்தரித்தமார்பினை உடையு

அருமாகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியும் திருப்புகலூரிக்கு எழுந்தருளினார்.—(எ-று) (உசக)

(வேறு)

பிள்ளையாரெழுந்தருளப்பெருவிருப்பால்வாகீச.........*
ருள்ளமகிழ்ந்தெதிர்கொண்டங்குடனுறையுநாளின்கண்....*
வள்ளலார்சிறுத்தொண்டர்மற்றவர்பாலெழுந்தருள.....*
வெள்ளருஞ்சீர்நீலநக்கர்தாமுமெழுந்தருளினார்.......*

(இதன்பொருள்)

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளெழுந்தருளினவுடனே மிகுந்த விருப்பத்தால் அப்பர்சுவாமிமனமகிழ்ச்சியை அடைந்து எதிர்கொண்டுவந்தழைத்து அந்தஸ்தலத்தில்வாசஞ்செய்து கொண்டு இருக்கும்நாளில் பெருமைபொருந்தியவராகிய சிறுத்தொண்டநாயனாரும் குறைவில்லாத கீர்த்தியை உடைய நீலநக்கநாயனாரும் அவரிடத்தில் எழுந்தருளினார். (எ-று (உசஉ)

ஆங்கணையுமவர்களுடனப்பதியிலந்தணரா..........*
யோங்குபுகழ்முருகனார்திருமடத்திலுடனுகப்.........*
பாங்கில்வருஞ்சீரடியார்பலருமுடன்பயில்கேண்மை.... *
நீங்கரியதிருத்தொண்டினிலையுணர்ந்துதிகழ்கின்றார்.....*

(இதன்பொருள்.)

அவ்விடத்தில் அடைந்த அவர்களோடு அந்தஸ்தலத்தில் பிராமணத்திருமேனியாய்ச்சிறந்தபுகழைப்பெற்ற முருகநாயனாருடைய் மடத்தில்சேரப் பாங்காகவருகின்றசிறப்புப்பொருந்திய அடியவர்கள் பலரும் மிகுந்த உரிமையோடுகூட இருந்து அடியார்களுடைய கெடுதலில்லாத திருத்தொண்டினதுநிலைமையை ஆராய்ந்துபேசிக்கொண்டிருந்தார்கள்.(எ-று) (உசங)

திருப்பதிச்செந்தமிழின்திறம்போற்றிமகிழ்வுற்றுப்.... *
பொருப்பரையன்மடப்பாவையிடப்பாகர்பொற்குளில்.. *
விருப்புடையதிருத்தொண்டர்பெருமையினைவிரித்துரைத்தங்
கொருப்படுசிந்தையினார்களுடனுறைவின்பயன்பெற்றார்.. *

(இதன்பொருள்)

செந்தமிழாற்செய்யப்பட்ட உயர்வுபொருந்திய திருப்பதிகங்களை எடுத்துச்சொல்லி மகிழ்ச்சி அடைந்து இமாசலராசன் புத்திரியாராகிய பார்வதியாரை இடப்பாகத்தில்வைத்தருளியபரமசிவனது அழகாகிய திருவடிகளில் அன்புவைத்த அடியார்களு

டையபெருமையை விசேஷமாக எடுத்துப்புகழ்ந்து அவ்விடத்தில் மனதொருமைப்பட்டிருக்கும் சிவநேசர்கள்-ஒருமித்து வாசஞ்செய்தலால் உள்ளபயனைப்பெற்றார்கள்.(எ-று)(உசச)

அந்நாளிற்றமக்கேற்றிருத்தொண்டினெறியாற்ற .... .. *
மின்னார்செஞ்சடையண்ணன்மேவுபதியெனைப்பலவு .... *
முன்னாகச்சென்றேத்திமுதல்வன்றாடொழுவதற்குப் .... *
பொன்னாருமணிமாடப்பூம்புகலூர்தொழுதகன்றார் ....*

(இதன்பொருள்)

அந்தநாளில் தங்களுக்கு ஏற்றனவாகியபணிவிடைகளில் குறையில்லாமல் செய்து மின்னல்போலும் விளங்குகின்ற சிவந்த சடையை உடைய பரமசிவன்வீற்றிருக்குந் திருப்பதிகளையெல்லாம் முன்னதாகப்போய்த்தொழுது பரமசிவனுடைய திருவடிகளைத் தொழுகிறதற்குப் பொன்னாலு மணிகளாலும் அழகுசெய்யப்பட்டமேல்வீடுகளை உடையதிருப்புகலூரைத்தொழுது அவ்விடத்தைவிட்டு அகன்றார்.—(எ-று) (உசரு)

திருநீலநக்கடிகள்சிறுத்தொண்டர்முருகனார் ....*
பெருநீர்மையடியார்கள்பிறரும்விடைகொண்டேக .... ..*
வொருநீர்மைமனத்துடையபிள்ளையாருடனரசும் ....*
வருநீர்செஞ்சடைக்கரந்தார்திருவம்பர்வணங்கினார் .... ..*

(இதன்பொருள்.)

திருநீலநக்கநாயனாரும், சிறுத்தொண்டநாயனாரும்; முருகநாயனாரும், பெருமைபொருந்தியகுணத்தை உடைய மற்றை அடியார்களும் விடைபெற்றுக்கொண்டுபோக ஒருமைப்பட்ட குணம்பொருந்திய மனத்தைஉடைய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியோடு திருநாவுக்கரசுசுவாமியும் ஓடுகின்ற நீரைத்தரித்த சிவந்தசடையை உடையசுவாமிவீற்றிருக்கின்ற திருவம்பர் என்னுந்தலத்தைவணங்கினார்கள்.—(எ-று) (உசசு)

செங்குமுதமலர்வாவித்திருக்கடவூரணைந்தருளிப் ....*
பொங்கியவெங்கூற்றடர்த்தபொன்னடிகடொழுதேத்திக் .*
குங்கிலியக்கலயனார்திருமடத்திற்குறைவறப்ப ....*
வங்கவர்பாற்சிவனடியாருடனமுதுசெய்தார்கள் ....*

(இதன்பொருள்.)

செவ்வல்லிப் புஷ்பங்களை உடைய தடாகங்கள்சூழ்ந்த திருக்கடவூரை அடைந்து சினங்கொண்டுவந்தகொடிய எமனை உதை

த்தருளிய அழகுபொருந்திய பாதங்களைத்தொழுது புகழ்ச்சி செய்து குங்கிலியக்கலயநாயனாருடைய மடத்திலே குறைநீங்க அவரிடத்தில் உள்ள சிவனடியார்களோடு போசனஞ்செய்தார்கள்.—(எ-று) (உ௪௭)

சீர்மன்னுந்திருக்கடவூர்த்திருமயானமும்வணங்கி... .. .. *
யேர்மன்னுமின்னிசைப்பாபலபாடியினிதமர்ந்து.. ... .. *
கார்மன்னுங்கறைக்கண்டர்கழலிணைதொழுதகன்று.. .. *
தேர்மன்னுமணிவீதித்திருவாக்கூர்சென்றடைந்தார் ... .. *

(இதன்பொருள்.)

சிறப்புநிலைபெற்ற திருக்கடவூர்மயானத்தைத்தொழுது புகழ்பெற்ற இனிதாகிய இசைப்பினை உடையபாட்டுகளைப் பலவாகப்பாடி மிகவும் விரும்பிக் கரியநிறம்பொருந்திய விஷத்தைக் கழுத்திலுடையபரமசிவனுடைய இரண்டுபாதங்களையுந்தொழுது அவ்விடத்தினின்றும்நீங்கித்தேர்களால் அழகுபெற்றமங்களத்தொழிலை உடைய வீதியுற்ற திருவாக்கூருக்குவந்தடைந்தார்.—(எ-று) (உ௪௮)

சார்ந்தார்தம்புகலிடத்தைத்தான்றோன்றிமாடத்துக்.. ... *
கூர்ந்தார்வமுறப்பணிந்துகோதிறமிழ்த்தொடைபுனைந்து.. *
வார்ந்தாழுஞ்சடையார்தம்பதிபலவும்வணங்கியுடன் .... .. *
சேர்ந்தார்கடம்பெருமான்றிருவீழிமிழலையினை .... *

(இதன்பொருள்.)

தான்றோன்றிமாடமென்னுங்கோயிலில் அடைந்தவர்களுக்கு ஆதாரமானசுவாமியை மிகுந்த ஆசையோடுபணிந்து குற்றமில்லாததமிழ்ப்பதிகத்தைப்பாடி நீண்டு ஆடுகின்றவர்ந்தசடையை உடைய கைலாசபதிவீற்றிருக்கும் பல க்ஷேத்திரங்களையும்வணங்கி உடனே தமக்கு ஆண்டவராகியசுவாமி யெழுந்தருளியிருக்கும் திருவீழிமிழலையை அடைந்தார்.—(எ-று) வீழ்- வீழியெனச்செய்யுள் விகாரத்தால்நின்றது. (உ௪௯)

(வேறு.)

வீழிமிழலைவந்தணையமேவுநாவுக்கரசினையுங் ....*
காழிஞானப்பிள்ளையையுங்கலந்தவுள்ளக்காதலினால் ....*
ஆழிவலவனறியாதவடிபாரடியாரவர்களுடன் ....*
வாழிமறையோரெதிர்கொண்டுவணங்கவணங்கியுட்புக்கார்.. *

(இதன்பொருள்)

திருவீழிமிழலையை அடைந்தவுடனே திருநாவுக்கரசுசுவாமியையும், சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியையும் மனதில்நிறைந்த விருப்பத்தோடு சக்கரத்தைத்தரித்த விஷ்ணுவாலறியப்படாத திருவடியை உடைய பரமசிவனுடைய அடியார்களோடு பிராமணர்களும் எதிர்கொண்டுவந்து வணங்க இவ்விருவரும் அவர்களைவணங்கி நகரத்தின் உள்ளேசென்றார்கள்.—(எ-று) (௨௱௫௰)

மாடவீதியலங்கரித்துமறையோர்வாயில்மணிவிளக்கு.. ..*
நீடுகதலிதழைப்பூகநிரைத்துநிறைபொற்குடமெடுத்துப்..*
பீடுபெருகும்வாகீசர்பிள்ளையாருந்தொண்டர்களுங் ....*
கூடமகிழ்ந்துவிண்ணிழிந்தகோயில்வாயில்சென்றணைந்தார்.*

(இதன்பொருள்.)

மாடவீதியை அலங்காரஞ்செய்து பிராமணர்களுடைய மனை வாசல்களில் ரத்னவிளக்குகளேற்றி-இலைகள்நீண்ட வாழைமரங்களையும் தழைத்தகமுகமரங்களையும் வரிசையாகநாட்டிப்பொற்குடங்களில்நீரைநிறைத்துவைத்துப்பெருமைபொருந்திய அப்பர்சுவாமியும் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியும் அடியார்களும் சேர்ந்து களிப்புற்று ஆகாயத்தினின்றும் இறங்கிய மகிமையை உடைய கோயிலின்வாசலுக்குவந்து அடைந்தார் (எ-று) (௨௫௧)

சென்றுபுகுந்துதிருவீழிமிழலையமர்ந்தசெங்கட்......*
குன்றவில்லியார்மகிழ்ந்தகோயில்வலமாய்வந்துதிரு... ..*
முன்றில்வணங்கிமுன்னெய்திமுக்கட்செக்கர்ச்சடைமவுலி..*
வென்றிவிடையார்சேவடிக்கீழ்விழுந்தாரெழுந்தார்விம்மினார்.

(இதன்பொருள்)

கோயிலுக்குள்ளேபுகுந்து திருவீழிமிழலையில் வீற்றிருக்கின்ற செய்யபொன்மலையை வில்லாகவுடையவரது கோயிலின்பிராகாரத்தை வலமாகவந்து சன்னிதியின்முன்னேவந்துவணங்கி மூன்றுகண்களையுடையவராய்ச்செவ்வானநிறத்தைஉடையசடையைத்தானே முடியாகவுடைய வெற்றிபொருந்திய ரிஷபவாகனராகிய பரமசிவனது சிவந்ததிருவடிகளின் கீழேவிழுந்துவணங்கினார்கள்-எழுந்து ஆராமைப்பட்டார்கள்.—(எ-று)

கைகள்குவித்துக்கழல்போற்றிக்கலந்தவன்புகரைந்துருக,மெ
ய்யில்வழியுங்கண்ணருவிவிரவப்பரவுஞ்சொன்மாலை,செய்யச்

ணடையார்தமைச்சேரார்தீங்குநெறிசேர்கின்றொன், றுய்யுமொ
ழித்தாண்டகமொழிந்தங்கொழியாக்காதல்சிறந்தோங்க.. *

(இதன்பொருள்)

இரண்டுகைகளையுங்குவித்துக்கொண்டு திருவடியையவணங்கி அ
ன்பின்மிகுதியால் உள்ளம்நெக்குவிட்டு உருகவும் கண்களிலிரு
ந்துவழிபாதின்ற அருவியானது தேகங்களில்நிறையவும் (செ
ய்யசடையார் தமைச்சேரார் தீங்குநெறிசேர்கின்றொன்று)
சொற்களால் அமைந்து மனிதர்கள் பிழைப்பதற்குக்காரண
மாயிருக்கின்ற திருத்தாண்டகமாலையை ஓதி அவ்விடத்தைவி
ட்டுப்போகாமைக்குக்காரணமாகிய ஒழியாத ஆசைமேலிட்டு
ஓங்கவும் —(எ-று) (உ௱)

மூன்றுளயனுந்திருமாலு முடிவுமுதலுங்காணாத், பொன்னார்
மேனிமணிவெற்றைப் பூநீர்மிழலையினிற்போற்றிப், பன்னாள்
பிரியாதிலைமையினாற்பயிலக்குப்பிட்டிருப்பாரா, யந்நான்ம
றையோர்திருப்பதியிலிருந்தார்மெய்மையருந்தவர்கள் .. *

(இதன்பொருள்.)

முற்காலத்தில் பிரமனும் விஷ்ணுவும் முடியும் அடியும் அறி
யாத பொன்போலும் ஒளிவிடுகின்ற திருமேனியையுடைய அ
ழகியமலைபோன்றவனை மலர்கள்பொருந்தியநீரையுடைய திரு
விழிமிழலையில் வந்தனஞ்செய்து அனேகநாளாய்ப் பிரியாதநி
லைமையோடுகூடினமையால் இன்னும் தொழுதுகொண்டு அவ்
விடத்திலேயேவாசஞ்செய்துகொண்டிருக்கவிருப்பங்கொண்
டவர்களாய் அந்தநாள் பிராமணர்களுடைய வாசஸ்தலத்தில்
இருந்தருளினார் அருமைபொருந்தியமெய்மையானதவத்தை
உடைய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியும் அப்பர்சுவாமியு
ம் —(எ-று) (உ௱௪)

சீரின்விளங்குந்திருத்தொண்டரிருந்துசிலநாட்சென்றதற்பின்
மாரிசுருங்கவளம்பொன்னிநதியும்பருவமாறுதலும்.... ..*
நீரினியன்றவுணவருகிநிலவும்பலமன்னுயிர்களெல்லாம்.... *
பாரின்மலிந்தவிலம்பாட்டிற்படர்கூர்வறுமைபரந்ததால்.. *

(இதன்பொருள்.)

சிறப்புப்பெற்ற அடியார்கள் அவ்விடத்திலேயே வாசஞ்செய்
துகொண்டிருக்கச்சிலநாள்போனபின்பு மழைக்காலத்தில்பெ

ய்யாமல் கோடைக்காலத்திலும் வெள்ளம்வருகின்ற காவேரி யாறும் அம்மூன்றைத்தவிர்வதற்காகவும் நீரினால்விளைகின்றனவும் உணவுக்குக்காரணமாயிருக்கின்றனவுமாகிய தானியங்கள் கொள்ளக்கிடையாமல் பூமியில் வாசஞ்செய்யும் நிலைபெற்ற பலவுயிர்களெல்லாம் அதிகப்பட்டிருக்கும் பஞ்சத்தினால் துன்பப்படுத்துகின்றதாரித்திரமானது எங்கும்பரவியது.—(எ-று) இலம்பாடு-தாரித்திரம் இவ்விடத்தில் க்ஷாமத்தை உணர்த்துகின்றது. (௨௫௫)

வையமெங்கும்வற்கடமாய்ச்செல்லவுலகோர்வருத்தமுற .. *
நையுநாளிற்பிள்ளையார்தமக்குநாவுக்கரசினுக்குங் .... *
கையின்மானுமழுவுமுடன்காணக்கனவிலெழுந்தருளிச் .. *
செய்யசடையார்திருவீழிமிழலையுடையாரருள்செய்வார் .. *

(இதன்பொருள்.)

உலகமெங்கும் பஞ்சம் உண்டாகிப்பரவ உலகத்தார் அதனால் வருந்தப்பட்டு உடலிளைத்துப்போகுங்காலத்தில் சம்பந்தமூர்த்திநாயனார்க்கும்திருநாவுக்கரசுசுவாமிக்கும்கையில் மானும் மழுவும் தோன்றும்படிசொப்பனத்தில் எழுந்தருளிச்சிவந்தசடையையுடைய திருவீழிமிழலையில்வீற்றிருக்கும் சுவாமியானவர் அருளிச்செய்வார்.—(எ-று) (௨௫௬)

காலநிலைமையாலுங்கள்கருத்தில்வாட்ட முறீரெனினும். ... *
ஏலவும்மைவழிபடுவார்க்களிக்கவளிக்கின்றோமென்று .. *
கோலங்காணவெழுந்தருளிக்குலவும்பெருமையிருவருக்கும் *
ஞாலமறியப்படிக்காசுவைத்தார்மிழலைநாயகனார் .... *

(இதன்பொருள்)

காலத்தின் வித்தியாசத்தால் உங்கள் மனதில் வாட்டத்தை அடையாதிருப்பீர்களானாலும் பொருந்தும்படி உங்களைவழிபடுகின்ற அடியார்களுக்குக்கொடுக்கிறதற்காக உங்களுக்குக்கொடுக்கின்றோமென்று திருக்கோலத்தோடுகாண எழுந்தருளிப்பெருமைபொருந்திய இரண்டு அடியார்களுக்கும் உலகத்தார் அறியும்படி படிக்காசுவைத்தருளினார்-திருவீழிமிழலையில் வீற்றிருக்கும்சுவாமி.—(எ-று) படிக்காசு-படிச்செலவுக்காகக் கொடுக்கப்பட்டபொற்காசு. (௨௫௭)

விண்ணின்றிழிந்தவிமானத்திற்கிழக்குமேற்குப்பீடத்தி..... *
லண்ணல்புகலியாண்டகையார்தமக்குமாண்டவரசினுக்கு.. *

நண்ணுநாள்தொறுங்காசுபடிவைத்தருளினாநிலத்தி . . . . *
லெண்ணிலடியாருடனமுதுசெய்தங்கிருந்தாரிருவர்களும். *

(இதன்பொருள்)

ஆகாயத்தினின்றும் இறங்கியவிமானத்திலுடைய கிழக்குவாசற்படியிலும் மேற்குவாசற்படியிலும் பெருமைபொருந்திய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிக்கும் அப்பர்சுவாமிக்கும்வருகின்றநாள்தோறும் பொற்காசுகளைப்படிக்காசுவைத்தருளினால்வகைப்பட்டநிலங்களிலுமுள்ள எண்ணிறந்த அடியார்களோடு அமுதுசெய்து அங்கேதானேவாசஞ்செய்தார்கள் அவ்விருவரும்.—(எ-று) நானிலம்- குறிஞ்சி- முல்லை-மருதம்- நெய்தலாம். (௨௫௮)

அல்லார்கண்டத்தண்டர்பிரானருளாற்பெற்ற படிக்காசு, பல்
லாரியன்றவளம்பெருகப்பரமனடியாரானார்க, ளெல்லாமெய்
தியுண்கவெனவிரண்டுபொழுதும் பறைநிகழ்த்திச், சொல்லா
ற்சாற்றிச்சோறிட்டார் துயர்கூர்வறுமைதொலைத்திட்டார் . . *

(இதன்பொருள்)

கறைபொருந்திய கண்டத்தையுடைய தேவர்களுக்கு நாயகராகிய பரமசிவனுடைய கிருபையால்பெற்ற படிக்காசானது உணவுக்குவேண்டிய பலபண்டங்களும் வாங்கும்படி தகுதியுள்ள விலையை உடையதாகச் சிவனடியாராயிருப்பவர்களெல்லாரும்வந்து உண்ணவேண்டியதென்று இரண்டுகாலங்களிலும் பறைசாற்றித்தெரிவித்தும், கூப்பிட்டுத்தெரிவித்தும் அன்னமிட்டார்கள்- அவ்வடியவர்கள் துன்பமிகுந்த தரித்திரத்தைப் போக்கினார்கள். எ-று) (௨௫௯)

ஈசர்மிழலையிறையவர்பாலிமையப்பாவைதிருமுலைப்பால் . . . . . *
தேசமுய்யவுண்டவர்தந்திருமாமகனாராதலினாற் . . . . *
காசுவாசியுடன்பெற்றார்கைத்தொண்டாகுமடிமையினால் . . . . *
வாசியில்லாக்காசுபடிபெற்றுவந்தார்வாகீசர் . . . . *

(இதன்பொருள்.)

திருவீழிமிழலையில் வீற்றிருக்கின்ற இறைவராகியும், பாக்கியத்தைவேண்டியவர்களுக்குக் கொடுப்பவராகியுமிருக்கின்ற பரமசிவனுடைய பாகத்தில் அமர்ந்த பார்வதியாருடைய திருமுலைப்பாலை உலகத்தார்பிழைக்கும்படி உண்டருளிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியானவர் சுவாமிக்கு திருக்குமாரர் ஆனபடியால் படிக்காசுக்கு வட்டத்தோடு விலையைப்பெற்றார்-

கைத்தொண்டுசெய்கின்ற அடிமைத்தனத்தை உடையவராதலால் அப்பர்சுவாமி வட்டமில்லாமல் மாறுதலைப்படிக்காசைக்குப்பெற்றார்.—(எ-று) சம்பந்தமூர்த்திசுவாமி சுவாமிக்குப்பிள்ளையாயிருத்தலாலும் வருத்தமோடு ஒருதிருத்தொண்டும் செய்யாமையாலும் நடுவுநிலைமையாக வட்டங்கொடுத்துப் பெற்றார் - அப்பர்சுவாமி பரமசிவனுக்கு மகன்முறைமை உடையவரல்லாமையாலும் உழைவாரப் பணிசெய்துகொண்டிருத்தலாலும் வட்டமில்லாமல்பெற்றாரென்க. (௨௱௯௰)

ஆறுசடைமேலணிந்தருளுமண்ணல்வைத்தபடிக்காசால் .. .. *
ஈறிலாதபொருளுடையவிருவருடையதிருமடங்கள்....... *
சோறுநாளுந்தொண்டர்மகிழ்ந்துண்ணவுண்ணத் தொலையாதே
யேறுபெருமைபுவிபோற்றவின்புற்றிருக்குமந்நாளில்... .. *

(இதன்பொருள்)

சடையின்மேல் கங்கையைத்தரித்த பரமசிவன்வைத்தருளியபடிக்காசினால் குறைவில்லாத பொருளை உடைய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி அப்பர்சுவாமியாகிய இவ்விருவருடைய மடங்களிற் எப்பொழுதும் அடியார்கள் விரும்பிப்புசிக்கப்புசித்துத்தொலையாமல் யேற்பட்டகீர்த்தியினால் உலகத்தார் போற்றும்படி இன்பத்தை அடைந்திருக்கும் அந்தநாளில்.(எ-று)

காலந்தவறுதீர்த்தெங்குங்கலிவான்பொழிந்தபுனல்கலந்து. *
ஞாலமெல்லாங்குளிர்தூங்கியுணவுபெருகிநலஞ்சிறப்ப ... *
மூலவன்பர்களுமொழிமாலைகளும்பலசாத்தி .. .... *
நீலகண்டருறைபதிகள்பிறவும்வணங்கநினைவுற்றார்.......... *

(இதன்பொருள்.)

பஞ்சமாகியகாலம்போய் எல்லாவிடத்திலும் மேகங்கள்பொழிதலால் ஒலியையுடைய நீர்பரவியோடிப்பூமியெல்லாங்குளிர்ந்து உணவுக்குவேண்டிய தானியங்கள்முதலானவைகள்விளைந்து மனிதர்கள் சவுக்கியத்தை அடைந்தபடியால் உயர்ந்தஅடியார்களாகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியும் அப்பர்சுவாமியும் அனேகம்பதிகங்களைப்பாடி ஸ்தோத்திரஞ்செய்துபரமசிவனுடைய மற்றைஸ்தலங்களையும் வணங்கித்தியானஞ்செய்தார்கள்.—(எ-று) (௨௯௨)

வாய்த்தமிழலைமாமணியைவணங்கிப்பிரியாவிடைகொண்டு. *
பூந்தண்புனல்சூழ்வாஞ்சியத்தைப்போற்றிப்புனிதர்வாழ்பதிக

ளேய்ந்தவன்பிறனிலைறஞ்சியிசைவண்டமிழ்கள்புனைந்துபோ
யச்,சேர்ந்தார்செல்வத்திருமறைக்கா டெல்லையில்லாச் சீர்த்தி
யினார்.............................. *

(இதன்பொருள்.)

திருவீழிமிழலையில் வீற்றிருக்கின்ற சுவாமியைவணங்கிப் பிரி யாமலிருக்கும் விடையைப்பெற்றுக்கொண்டு பொலிவுங்குளிர்ச்சியும் உள்ள நீர்பொருந்திய திருவாஞ்சியமென்னும் ஸ்தலத்தை வணங்கி சுவாமி யெழுந்தருளியிருக்கும் மற்றை ஸ்தலங்களையும் பொருந்திய அன்போடுவணங்கி-வளம்பொருந்திய இசையை உடைய தமிழ்ப்பதிகங்களைப்பாடி-வேதாரணியத்தை அடைந்தார்கள் அளவில்லாத கீர்த்தியை உடைய இருவர்களும்:—(எ-று) (உ௬௫)

மன்றல்விரவுமலர்ப்புன்னைமணஞ்சூழ்சோலைப்பள்ளத்தில் .. *
முன்றில்தோறுஞ்சிறுமடவார்முத்தம்கொழிக்குமறைக்காட்டி
ன்,குன்றவில்லியார்மகிழ்ந்தகோயில்புகுந்துவலங்கொண்டு .. *
சென்றுசேர்ந்தார்தென்புகலிக்கோவுமரசுந்திருமுன்பு... *

(இதன்பொருள்)

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமியும் அப்பர்சுவாமியும் வாசனைவீசுகின்ற புஷ்பங்களை உடைய புன்னைமரங்களின் நல்ல சோலைசூழ்ந்த உப்பளமாகிய முற்றங்களிலெல்லாம் செம்படவருடைய பெண்கள் முத்துக்களைக்கொழிக்கின்ற வேதாரணியத்தில் மகாமேருவை வில்லாகவுடைய பரமசிவன் வீற்றிருக்கும் கோயிலிற்புகுந்து வலமாகவந்து சந்நிதிக்குமுன் சேர்ந்தார்கள்:—(எ-று) மன்றல்-விரவு - என்பதும்-மணஞ்சூழ்-என்பதும் ஒருபொருளையேகொடுத்தது. (உ௬௬)

பரவையோதத்தழிக்கானற்பாங்குநெருங்குமப்பதியி .... *
ல்ரவச்சடையர்தனைஞானாயகிலமறைகளர்ச்சனைசெய் .... *
துரவக்கதவந்திருக்காப்புச்செய்தவந்நாண்முதலிந்நாள் .. *
வரையுமடைத்தேநிற்கின்றமணிநீள்வாயில்வணங்குவார் .... *

(இதன்பொருள்.)

கடலினுடையபெருக்காகிய நீர்வருகின்றகழியை உடைய உப்பளங்கள் அருகில்நெருங்கிய அந்தவேதாரணியமென்னுமஸ்தலத்தில் பாம்பினைத்தரித்த சடையையுடைய பரமசிவனை அநு

வில்லாதவேதங்கள் வழிபாடுசெய்து வலிமைபொருந்திய கதவைத்திருக்காப்புச்செய்த அந்தநாள்முத லிந்தநாள்வரைக்கும் அடைக்கப்பட்டேயிருக்கின்ற மணிகளிழைத்தநீண்டவாசலை வணங்குவதற்கு முயன்றார்கள்.—(எ-று) திருக்காப்புச்செய்தல்-கதவை அடைத்துப்பூட்டிடுதல். (௨௬௫)

தொல்லைவேதந்திருக்காப்புச்செய்தவாயிற்றொடர்வகற்ற.. *
வல்லவன்பரனையாமைமருங்கோர்வாயில்வழியெய்தி .... *
யல்லல்தீர்ப்பார்தமையருச்சிப்பார்தொழுவாராம்படிகண்.
டெல்லையிலாப்பெரும்புகழாரிதனையங்குக்கேட்டறிந்தார்.*

(இதன்பொருள்.)

பழமையாகியவேதங்கள் திருக்காப்புச்செய்துவைத்தவாசலின்கதவைத்திறக்க வலியில்லாமல் அன்பின் அழுத்தத்தையுடைய அடியார்கள் சமீபத்திலுள்ள வேறொருவாசலின் வழியாகவந்து துன்பத்தைநீக்குகின்றசுவாமியை அர்ச்சனைசெய்துதொழுகிறார்களென்பதை அறிந்து அளவில்லாதபுகழையுடைய இவ்விரண்டு அடியார்களும் இந்தச்செய்தியை அங்கே சிலர்சொல்லக்கேட்டார்கள்.—(எ-று) (௨௬௬)

ஆங்கப்பரிசையறிந்தருளியாழித்தோணிபுரத்தரசு ....*
ஓங்கும்வேதமருச்சனைசெயும்பர்பிரானையுள்புக்குத் .... *
தேங்காதிருவோர்நேரிறைஞ்சத்திருமுன்கதவந்திருக்காப்பு.*
நீங்கப்பாடியப்பவெனநீத்திருநாவுக்கரசர் .... *

(இதன்பொருள்.)

அவ்விடத்தில் மகிமையாயுள்ள அந்தச்செய்தியைக்கேட்டறிந்து பிரளயகாலத்தில் பொங்கியசமுத்திரத்தில் தோணிபோல்மிதந்தசீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி கோயிலுக்குள்ளேபுகுந்து பரமசிவனைத் தடையில்லாமல் இருவோரும்நேராகக்கண்டுவணங்கச் சந்நிதிக்கு முன்னாகவிருக்கின்றகதவுக்கு இடப்பட்டிருக்கும் தாளநீங்கும்படிபாடும் அப்பரேயென்றுகட்டளையிட அப்பர்சுவாமி—(எ-று) (௨௬௭)

உண்ணீர்மையிறைப் பிள்ளையா ருரைசெய்தருளவதனாலே,பண்
ணின்மேவருமொழியாளென்றெடுத்துப்பாடப்பயன்றுய்ப்பான்
றெண்ணீரணிந்தார் திருக்காப்புநீக்கத்தாழ்க்கத் திருக்கடைக்
காப், பெண்ணிரக்கமில்லீரென்றெடுத்துப்பாடி யிறைஞ்சி
நதிய் .... *

(இதன்பொருள்.)

உள்ளேயிருக்கின்ற அன்பினாலே திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி யருளிச்செய்தபடியால் பண்ணினேர்மொழியாளென்று எடுத்துப்பயனை அடையும்படியாகத்தெளிந்த நீலாத்தரித்த பரமசிவனுடையகோயிலுக்கு இட்டிருக்கின்ற திருக்காப்பை நீக்கும்படிபாட-அதுதிறவாமல் சற்றுநேரந்தாழ்ந்தது ஆதலால் எண்ணீரிரக்கமில்லீரொன்று திருக்கடைக்காப்பிலே எடுத்துப்பாடிவணங்கினவுடனே.—(எ-று) திருக்கடைக்காப்பு-பதிகத்தின் முடிவில் இருக்கும் பாட்டு. (உருஅ)

வேதவனத்தின்மெய்ப்பொருளினருளால்விளங்குமணிக்கதவந்
காதலன்பர்முன்புதிருககாப்புநீங்கக்கலைமொழிக்கு.... ..*
நாதர்ஞானமுனிவருடன்றொழுதுவிழுந்தார்ஞாலத்து....*
ளோதவொலியின்மிக்கெழுந்ததும்பரார்ப்புமறையொலியும்

(இதன்பொருள்.)

வேதாரணியத்தில்வீற்றிருக்கும் மெய்மையாகிய பொருளென்றுசொல்லப்பட்ட சுவாமியினதுகிருபையால் அன்பர்களுக்குமுன்பாகத்திருக்காப்புநீங்கினவுடனே அப்பர்சுவாமி-திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியோடு அப்பொழுதே கீழேபடிந்துதண்டம்பண்ணினார்-பூமியில்தேவர்களால் உண்டானகோஷமும் வேதங்களின்முழக்கமும்சமுத்திரமுழக்கத்தைப்பார்க்கிலும் அதிகமாய்முழங்கின.—(எ-று) (உருகூ)

அன்பரீட்டங்களிசிறப்பவாண்டவரசுஞ்சிவக்கன்று .... [ன்
மிகபவெள்ளத்திடைமூழ்கியெழுந்துள்புகுந்து தம்பெருமா
முன்புபணிந்துபோற்றிசைத்துப்பரவிமொழிமாலைகள்பாடி*
யென்புகலாயவுள்ளுருகியிறைஞ்சியரிதிற்புறத்தணைந்தார்...*

(இதன்பொருள்.)

அடியார்குழாங்கள் மகிழ்ச்சியடையத்திருநாவுக்கரசுசுவாமியும் சம்பந்தமூர்த்திசுவாமியும் பேரின்பமாகிய வெள்ளத்திலமூழ்கி உள்ளேபுகுந்து தங்கள்பிரானாகிய பரமசிவனுடைய சந்நிதியில்போய் வந்தனஞ்செய்து ஸ்தோத்திரம்பண்ணித் திருப்பதிகங்கள்பாடி- எலும்புகளையும்படி உள்ளமானது உருகிவணங்கி வரக்கூடாமையாய் வெளியில்வந்தார்கள்.—(எ-று)(உஎ0)

புறம்புநிற்பவாசேர்புனிதரருளாலிக்கதவந் .... *
திறந்துமடைத்துஞ்செல்லுநெறிதிருந்தமலையாள்திருமலையிற்

கறந்தஞானங்குழைத்தமுதுசெய்தபுகலிக்கவுணியரை ....*
நிறைத்தகதவமடைக்கும்வகைநீரும்பாடியருளுமென ......*

(இதன்பொருள்.)
புறத்தில்நின்றருளிய அப்பர்சுவாமிகள் பரமசிவனுடைய கிருபையால் இந்தக்கதவைத்திறந்தும் அடைத்தும் நாம்போயினோமென்கிற ஒருவிசேஷமானது உலகத்தார்க்குந் தெரியும்படி பார்வதியாருடைய ஸ்தனங்களில்நின்றும் கறந்தபாலொடு ஞானத்தையுங்குழைத்து உண்டருளிய சீர்காழித்திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமியைநோக்கித் திறந்திருக்கிறகதவை அடைக்கும்படி நீரும்தேவாரம்பாடியருளவேண்டுமென்றுசொல்ல.—(எ-று) (௨௭௧)

சண்பையாளுந்தமிழ்விரகர்தாமுந்திருநாவுக்கரசர் .... ..*
பண்பின்மொழிந்தவுரைகொண்டுபதிகம்பாடமெய்வளவிற் .. *
கண்பொற்பமைந்தநுதற்காளகண்டாருளாற்கடிதடனே ..*
திண்பொற்கதவந்திருக்காப்புச்செய்ததெடுத்ததிருப்பாட்டில்

(இதன்பொருள்.)
சீர்காழிக்குத்தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், அப்பர்சுவாமிகள் அன்போடுகதவுமூடச்சொல்லியமொழியைக்கேட்டுச் சம்மதித்துத் திருப்பதிகம்பாடும்போது நெற்றியில் அழகாகிய கண்ணையும் விஷத்தைக்கழுத்திலும் உடைய பரமசிவனுடையகிருபையால் வலியபொன்மயமாகிய கதவானது முதலிலெடுத்துப்பாடிய பாட்டாலேயே அடைபட்டது.—(எ-று) (௨௭௨)

அதுகண்டுடையபிள்ளையார்தாமுமாண்டவரசுமகிழ்ந், திருநம்பெருமானருள்செய்யப்பெற்றோமென்றக்கிறைஞ்சியபின்
பதிகநிரம்பப்பிள்ளையார் பாடித்தொழுது பணிவுற்று, ரொதிர்
பொற்றிருவாயிலின்வழக்கமென்றுநிகழ்ச்சியெய்தியதால். -*

(இதன்பொருள்.)
அப்படி அடைபட்டதைக்கண்டு நம்மையாட்கொள்ளும் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியும் ஆள்பவராகிய அப்பர்சுவாமியும் சந்தோஷத்தை அடைந்து நம்முடையபெருமானாகிய பரமசிவன் இப்படி திறக்கவும் அடைக்கவும் அனுக்கிரகம்செய்ய நாம்பெற்றுக்கொண்டோமென்று வணங்கினபின்பு பதிக

ம் பூர்வமாகப் பிள்ளையார் பாடியருளித்தொழுதார்- அதுமு தல் அக்கோயில்வாசற்கதவுதிறத்தலும் அடைத்தலுமாகியவழ க்கம்உண்டாகியென்றும்நடந்துகொண்டேயிருந்தது(எ-று)

அங்குநிகழ்ந்த வச்செயல்கண் டடியாரெல்லா மதிசயித்துப்,
பொங்குபுளகமெய்நிடமெய் பொழியுங்கண்ணீர் பரந்திழிய,
வெங்குநிகரொன்றில்லாதவிருவர்பாதமிறைஞ்சினர்- - - ....*
நங்கள்புகலிப்பெருந்தகையுமரசுமடத்தில் நண்ணியபின் ...*

(இதன்பொருள்.)

அவ்விடத்தில் உண்டான அப்படிப்பட்ட செய்கையைக்கண் டு அடியார்களெல்லா மாச்சரியப்பட்டு உடலமெல்லாம் மயி ர்க்குச்சுநிறைந்து உண்டாகப்பொழியாநின்ற கண்ணீரானது தேகமெங்கும் பரவிக்கீழேவிழ-எத்தேசங்களிலும் யாவரும் நிகரில்லாத இவ்விருவருடைய பாதத்தையும் வணங்கினார்கள்- நம்முடைய காழித்திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியும் அப் பர்சுவாமியும் மடத்துக்குவந்தபின்பு.—(எ-று) (உஎச)

அரிதித்திறக்கத்தாம்பாடவடைக்கவவர்பாடியவெளிமை .. *
கருதிநம்பர்திருவுள்ளமறியாதயர்ந்தேனெனக்கவன்று. .. *
பெரிதுமஞ்சிததிருமடத்திலொருபாலடைந்துபேழ்கணித்து*
மருவுமுணர்விற்றுயில்கொண்டார்வாய்மைதிறம்பாவாசீர் .*

(இதன்பொருள்)

பேச்சுத்தவறாத அப்பர்சுவாமிகள் தாம்பதிகம்பாடி முடிக்கிற வரைக்கும்கோயிற்கதவுதாழ்த்துப் பின்பு திறந்ததும் திருஞா னசம்பந்தமூர்த்திசுவாமி முதற்பாட்டைப் பாடினவுடனே எ ளிமையாகத்திறந்ததும் நினைத்து இப்படியாகச் சுவாமி திரு வுள்ளங்கொண்டதை யறிந்துகொள்ளமாட்டாமல் கலங்கினே ன் என்று வருத்தப்பட்டு மிகவும்பயமுற்றுத்திருமடத்தில் ஒரு பக்கமாகப்போய்ப் படுத்துக் கண்ணைத்தாமே மூடிக்கொண் டு அருநித்திரைகொண்டார்.—(எ-று) பேழ்கணித்தல்-நித்தி ரையில்லாமலேயேகண்ணைமூடுதல். (உஎரு)

மன்னுஞ்செல்வமறைக்காட்டுமணியின்பாதமனத்தின்க,ணுன் னித்துயிலும்பொழுதின்கணுமையோர்பாகமுடையவர்தாம்*
பொன்னின்மேனிவெண்ணீறுபுனைந்தகோலப்பொலிவினொடு
ந், துன்னியவர்க்குவாய்மூரிலிருப்போந்தொடரவாவென்றார்

(இதன்பொருள்)

நிலைபெற்ற செல்வத்தை உடைய வேதாரணியத்தில் எழுந்தருளியிருக்கிற சுவாமியின்பாதத்தை மனத்தினிடமாக நினைந்து நித்திரைசெய்யும் சமயத்தில் பார்வதியை ஒருபாகத்திலுடைய ஆண்டவர் தம்முடைய பொன்போலுந்திருமேனியில வெள்ளியவிபூதியையதரித்த அழகியபொலிவோடும் அப்பர்சுவாமியினிடத்திற்கு எழுந்தருளிநாம்வாய்மூரில் இருப்போம்அவ்விடத்துக்குத்தொடர்ந்துவாவென் றருளிச்செய்தார்.(எ-று)

போதநிகழவாவென்றுபோனானொல்கொலெனப்பாடி .... *
யாதெம்பெருமானருளாகில்யானும்போவேனென்றெழுந்து,
வேதவனத்திற்புறப்பட்டுவிரைந்துபோகவவர்முன்னே.. *
யாதிமூர்த்திமுன்காட்டுமவ்வேடத்தாலெழுந்தருள ....*

(இதன்பொருள்-)

(போதநிகழவாவென்று போனானொன்கொல் என்று) தேவாரம்பாடி இப்படிநம்முடைய ஆண்டவர்கட்டளை யிருக்குமாயின் அடியேனும் போவேனென்று வேதாரணியத்தில் நின்றும் புறப்பட்டுச சீக்கிரமாகப்போக அந்த அப்பர்சுவாமிக்கு முன்னாகப் பரமசிவன் அவர்க்கு முன்னேகாட்டியருளிய திருக்கோலத்தோடு எழுந்தருள.—(எ-று) (உஎஎ)

சீரார்பதியினின்றெழுந்துசெல்லுந்திருநாவுக்கரச .... *
ராராவன்பிலாரமுதமுண்ணவெய்தாவாறேபோல் ....*
நீரார்சடையாரொழுந்தருளநெடிதுமின்புசெல்லுமிவர்,போரா
ளாமுன்றொடர்ந்தணையப்பெறுவாறெய்தப்பெற்றிலரால்.*

(இதன்பொருள்)

சிறப்புப்பொருந்திய வேதாரணியத்தில் நின்றும் எழுந்தருளிப்போகின்ற அப்பர்சுவாமி குறைவில்லாத அன்போம் மதுரமாகிய அமுதம்கிடைத்தும் அது உண்பதற்குக்கிடைக்காதது போல் கங்கையைத்தரித்த சடையை உடைய பரமசிவன் எழுந்தருளவும் சமீபத்திற்போவதற்குக் கிடையாமல் நெடும்பொழுதுமின்னேபோகின்ற இந்த அப்பர்சுவாமிசுவாமியைத்தொடர்ந்து அடையவிருப்பங்கொண்டு விரைவாகப்போயும் எட்டாமற் போய்விட்டார்.—(எ-று) (உஎஅ)

அன்னவண்ண மெழுந்தருளி அணித்தேகாட்சி கொடுப்பார்
போத,பொன்னின்கோயிலொன்றெதிரேகாட்டியதனுட்புக்க

ருளத்;துன்னுற்தொண்டர்ம்மருங்குவிரைந்துதொடரப்போ
ந்தபடி,மன்னும்புகலிவள்ளலார்தாமுங்கேட்டுவந்தணைந்தார்.

(இதன்பொருள்)

அவ்விதமாகச்சுவாமி எழுந்தருளிச் சமீபத்திலேயே காட்சி
கொடுக்கின்றவர்போல் பொன்மயமாகிய கோயில் ஒன்றை
வெளிராகக்காண்பித்து அதனுள்ளேபுகுந்தருள-மிகுந்த அன்பு
ள்ளதொண்டராகிய அப்பர்சுவாமி அவ்விடத்தில் சீக்கிரமாய்
த்தொடர இங்ஙனம் நடந்த சமாசாரத்தை நிலைபெற்ற சீகா
ழித் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமியும் கேள்விப்பட்டுவந்து
சேர்ந்தார்.—(எ-று) (உஎகூ)

அழைத்துக்கொடுபோந்தணியார்போற்காட்டிமறைந்தா ரெ
னவயர்ந்து,பிழைத்துச்செவ்வியறியாதேதிறப்பித்தேனுக்கே
யல்லா, லுழைத்தாமொளித்தாற்கதவந்தொண் டுறைக்கப்பா
டியடைப்பித்த,தழைத்தமொழியாருப்பாலார்தாமிங்கெப்பா
ன்மறைவெனவ........ ....*

(இதன்பொருள்.)

அழைத்துக்கொண்டுவந்து நெருங்கினவர்போலக்காட்டி ம
றைந்தாரென்று வருந்தப்பட்டுச்சம்பந்தமூர்த்திசுவாமியேதி
றக்கவேண்டுமென்று நினையாமல் அடியார்களுடைய பெரு
மையை அலக்ஷியஞ்செய்து தவறித்திறந்தெனக்குத்தரிசனங்க
ட்டளையிடாமல் பக்கத்தில் ஒளித்தால் ஒளிக்கலாம்-கதவு அழு
ந்தும்படி அடைக்கச்செய்த நிலைபெற்ற பதிகத்தை உடைய ச
ம்பந்தமூர்த்திசுவாமி இதோவந்திருக்கின்றார் ஆதலால் இனிஎ
ங்கேமறைந்திருப்பதென்றுசொல்ல.—(எ-று) (உஅம)

மாடநீடுதிருப்புகலிமன்னரவர்க்குமாலயனு .... .. *
தேடியின்னங்காணுதார்நேரேகாட்சிகொடுத்தருள ..*
வாடல்கண்டுபணிந்தேத்தியரசுகாணக்காட்டுதலும் ..*
பாடவடியாரென்றெடுத்துப்பரமர்தம்மைப்பாடினார்.*

(இதன்பொருள்.)

மாடங்கள்விளங்கிய சீர்காழியில் அவதரித்த திருஞான சம்பந்
தமூர்த்திசுவாமிக்கு விஷ்ணுவும் பிரமனும் தேடி யின்னமுங்
கண்டு அறியாத பரமசிவன் நேராக எழுந்தருளிக் காட்சிகொ
டுக்கத் தரிசனஞ்செய்து ஆடிப்பணிந்து புகழ்ந்து திருநாவுக்

ரசுசுவாமியும் காணும்படியாகக்காட்டினவுடனே பாட வடி
யாவென்று எடுத்துப் பரமசிவனைப் பாடியருளினார்.—(எ-று)

பாடுந்தமிழ்மாலைகள்கொண்டு பரமர்தாமுமெழுந்தருள, நீடி
ந்திருவாய்மூரடைந்து நிலவுங்கோயில்வலஞ்செய்து, சூடும்பி
றையார்திருத்தொண்டர்தொழுதுபோற்றித் துதிசெய்து, நா
டுங்காதல்வளர்ந்தோங்கநயந்தந்நகரினுடனுறைந்தார்....*

(இதன்பொருள்)

பாடுகின்ற தமிழ்ப்பதிகமாலைகளை ஏற்றுக்கொண்டு பரமசிவ
னும் எழுந்தருள-நிலைபெற்ற திருவாய்மூரைச்சேர்ந்து பிரகா
சிக்கின்ற கோயிலைவலஞ்செய்து மூன்றாம்பிறையைத்தரித்த சு
வாமியின் அடியவர்வணங்கி ஸ்தோத்திரஞ்செய்து நிலைபெற்ற
ஆசையானது விருத்தியாக விருப்பங்கொண்டு அந்தக்ஷேத்தி
ரத்தில்கூட வாசஞ்செய்துகொண்டிருந்தார்.(எ-று) (உ௪உ)

ஆண்டவரசும்பிள்ளையாருடனேயங்கணினிதமர்ந்து.......*
பூண்டகாதல்பொங்கியெழவாய்மூரடிகளடிபோற்றி. .... *
மூண்டவன்பின்மொழிமாலைசாத்திஞானமுனிவனொடு ....*
மீண்டுவந்துதிருமறைக்காட்டெய்திவிமலர்தாள்பணிந்தார்.*

(இதன்பொருள்)

அப்பர்சுவாமியும்-திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமியுடனே அ
ந்தஸ்தலத்தில்விருப்பமாகத்தங்கித்தாங்கள்கொண்ட பத்தி ஒ
ரு அளவில்லாமல மேன்மேலும்வளரத் திருவாய்மூரில் எழுந்
தருளியிருக்கும் பரமசிவன் திருவடிகளைப்போற்றிசெய்து அ
ன்புண்டாவதற்குக்காரணமாகிய திருப்பதிகங்களைப்பாடத் தி
ருஞானசம்பந்தமூர்த்திசுவாமியோடு திரும்ப வேதாரணியத்
திற்குவந்து சுவாமியினுடைய திருவடிகளைவணங்கினார்(எ-று)

ஆதிமுதல்வர்தமைப்பணிந்தங்கானபணிசெய்தமருநாள்.. *
சீதமதிவெண்குடைவளவர்மகளார்தென்னன்றேவியாங் .. *
கோதில்குணத்துப்பாண்டிமாதேவியார்முன்குலச்சிறையார்
போதவிட்டார்சிலர்வந்தார்புகலிவேந்தர்தமைக்காண....*

(இதன்பொருள்.)

பரமசிவனைவந்தனஞ்செய்து தகுந்ததிருப்பணிகளைச்செய்து
அவ்விடத்தில் வாசஞ்செய்துகொண்டிருக்கும் நாளில் வெண்
மையாகிய சந்திரன்போன்றகுடையை உடையபாண்டியமகா

ராசாவின் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாருத்தரவின்படிமந்திரியாகியகுலச்சிறைநாயனார்சில தூதர்களை வேதாரணியத்துக்குவந்து திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைக்காணும்பொருட்டு அனுப்பிவித்தார் அவர்களும்வந்தார்கள்.(எ-று)

வந்துசிவனார்திருமறைக்காட்டெய்திமன்னுவேணுபுரி .... *
யந்தணாளர்தமக்கறிவித்தவர்பாலெய்தியடிவணங்கச் ..... *
சிந்தைமகிழ்ந்துநீநின்மைவினவத்தீங்குருளவாமோ .... *
யிந்தவுலகமுய்யவருவீரிருதாணினைவார்க்கென்றுரைப்பார். *

(இதன்பொருள்.)

குலச்சிறைநாயனார்விட்டதூதர்கள் வேதாரணியத்திற்குவந்து நிலைபெற்றசீர்காழிக்குத்தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்திக்குத் தாங்கள்வந்ததைத்தெரிவித்து அங்கதின்கட்டளைப்படியே முன்பாகப்போய்ப்பாதங்களைவணங்கமனமகிழ்ந்துக்ஷேமத்தைவிசாரிக்க இந்தவுலகம் கடைத்தேறும்பொருட்டு அவதாரஞ்செய்தருளிய தேவரீருடைய இரண்டு பாதங்களையும் நினைக்கிறவர்களுக்கு ஒருகுற்றமும் உண்டாமோவென்று சொல்வார்கள்.—(எ-று) (உஅ௫)

சைவநெறிவைதிகநிற்கச்சழக்குநெறியைத்தவமென்னும் ..... *
பொய்வல்லமணர்செயல்தன்னைப் பொறுக்கில்லோமெனக்
கேட்டே,யவ்வன்றொழிலோர்செயல்மாற்றியாதிசைவநெறிவி
ளங்கத்; தெய்வநீறுநினைந்தெழுந்தார்சீர்கொள்சண்பைத்திரு
மறையோர் .... *

(இதன்பொருள்)

வேதசம்பந்தமாகிய சைவசமயமானது உயர்ந்ததாகப்பூலோகத்தில் விளங்கக் குற்றம்பொருந்திய செய்கைகளையே தவம்பொருந்திய செய்கைகளென்றுகொண்ட பொய்சொல்வதில் சமர்த்தராகியசைனர்கள் செய்யுங் கொடுமையானதொழில்களைப் பொறுக்கமாட்டோமென்றுசொல்லக் கேள்விப்பட்டுச் சிறப்புப்பொருந்திய சீர்காழித் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி அப்படிப்பட்ட கொடுந்தொழிலோராகிய சமணர்கள் செய்யுந்தீமைகளைநீக்கித் தலைமையானசைவமார்க்கமானது விளங்கத் தெய்விகம்பொருந்தியதிருநீற்றைநினைத்தெழுந்தார். (எ-று) நீற்றைநினைந்தெழுந்ததனால்-அதைப் பாண்டிநாட்டார்தரித்துக்கொள்ளச்செய்யவேண்டுமென்று நினைத்து என்றாயிற்று. தெய்வநீறுநினைந்தெழுந்தாரென்றும்பாடம். (உஅ௬)

ஆயபொழுதுதிருநாவுக்கரசுபுகலியாண்டகைக்குக்.. .....*
காயமாசுபெருக்கியுழல்கலதியமணர்கடுவினைசெய்..... .. *
மாயைசாலமிகவல்லாரவர்மற்றென்னைமுன்செய்த ....[ர்
தீயதொழிலும்பலகேட்டேன் செல்லவிசையென்யானென்று

(இதன் பொருள்.)

அந்தவேளையில் அப்பர்சுவாமிகள் காழித் திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிக்கு-கழுவாமல் உடலத்திற்கு அழுக்கையுண்டாக்கக்கொண்டு உழலகின்ற துஷ்டர்களாகிய சயினர்கள் கடுமையாகியதொழிலைச்செய்யத்தக்க தந்திரங்களில் மிகவும்வல்லவர்கள் அவர்கள்எனக்குமுன்னேசெய்தகொடியசெய்கைகளோ பலவாயிருந்தன-ஐய்யா-நீவரீர்அவ்விடத்திற்குப்போகவிருப்பங்கொள்ளமாட்டேனென்றார்.—(எ-று) (உஅஎ)

என்றுகூறவெல்லையிலாநீறுபோற்றுமிருவரையுஞ் .... ---*
சென்றுகாணுங்கருத்துடையேனங்குநீங்குபுரியமணர் .... *
நின்றநிலைமையழிவித்துச்சைவநெறிபாரித்தன்றி.... --- ...*
யொன்றுஞ்செய்யேனுவிரயுமதென்றருடையபிள்ளையார் *

(இதன் பொருள்.)

இப்படி அப்பர்சுவாமி அருள்செய்ய ஒப்பில்லாத திருநீற்றில் அன்புகொண்டுதரித்துச்சைவசமயத்தில்விருப்பங்கொண்டிருக்கிறமங்கையர்க்கரசியாரையும் குலச்சிறைநாயனாரையும்போய்க்காணவேண்டுமென்கிற கருத்தைக்கொண்டிருக்கிறேன் அந்தப்பாண்டிநாட்டில் தீங்குசெய்கின்ற அமணர்களுடைய நிலைமையை அழியும்படிசெய்து சைவமார்க்கத்தைவிருத்திசெய்யுந் தொழிலைச்செய்வதேயல்லாமல் வேறொன்றையுஞ்செய்யமாட்டேன் உம்மாணைபின்படியென்று அருளிச்செய்தார் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்.—(எ-று) (உஅஅ)

போமாதுணிந்துநீரங்குப்போதப்போதாவவ்வமணர்.....*
தீமாயையினையானேபோய்ச்சிதைத்துவருகின்றேனென்ன *
வாமாறெல்லாமுரைத்தவரைமறுக்கமாட்டாதரசிருப்பத்.....*
தாமாதரவாற்றமிழ்நாட்டிற்போனார்ஞானத்தலைவனார்.. .. *

(இதன் பொருள்)

போகும்படியாகத்துணிவுகொண்டுநீர் அவ்விடத்திற்குப்போகக்கூடாது- அந்தச்சைனர்களுடைய தீமைபொருந்திய மாயமானசெய்கையை நானேபோய் நாசஞ்செய்து வருகின்றேனென்றுசொல்லி-அப்பர்சுவாமி அங்கேயக்குப்போகாமலிரு

க்க எவ்விதமானயுக்திகளைச்சொல்லியும் அவர்போவதைமறுக்கமாட்டாமல் இருந்துவிட ஞானத்திற்குத் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி மிகுந்த ஆசையோடு பாண்டிநாட்டிற்குப்போயருளினார்.(எ-று) (உ௮௯)

வேறுபுரக்கோனெழுந்தருளவிடைகொண்டிருந்தவாகீசர். *
மாறுமன்பான்மறைக்காட்டிற் புனிதர்தம்மைப் போற்றிசைத்
துப்பணியிருந்தங்குறையுநாட்பெயர்வார்வீழிமிழலைமேற்
தாணுவின்றன்செய்யகழல்மீண்டுஞ்சாரநினைகின்றார் .... *

(இதன்பொருள்.)

சீர்காழித்தலைவராகியதிருஞானசம்பந்தமூர்த்திசுவாமி வேதாரணியத்துக்கு எழுந்தருளியவுடனே அங்கதனிடத்தில் விடைபெற்றுக்கொண்டிருந்த அப்பர்சுவாமிகள் மிகுந்தபத்தியோடு வேதாரணியத்தில்வீற்றிருக்கும் பரமசிவனை ஸ்தோத்திரஞ்செய்து ஆசையுற்று அவ்விடத்தில்வாசஞ்செய்து சிலநாள் பின்ப்போகநினைவராகித் திருவீழிமிழலையிலிருக்கின்ற பரமசிவனுடைய சிவந்ததிருவடிகளை மறுபடியும் அடையநினைகின்றார், (எ-று) (உ௱௯௰)

சோலைமறைக்காட்டமர்ந்தருளுஞ் சோதியருள்பெற்றகன்று
போய், வேலைவிடமுண்டவர்வீழிமிழலைமீண்டுஞ்செல்வனெ
ன, ஞாலநிகழ்ந்தநாகைக்காரோணம்பிறவும்பணிந்தணைவார்,
சாலுமொழிவண்டமிழ்பாடித்தலைவர்மிழலைவந்தடைந்தார். *

(இதன்பொருள்.)

சோலைகள்சூழ்ந்த வேதாரணியத்தில்வீற்றிருக்கின்ற பரமசிவனுடையகிருபையைப்பெற்று அவ்விடத்தினின்றுநீங்கிக்கடலிலெழுந்தநஞ்சையுண்டசுவாமி வீற்றிருக்குந்திருவீழிமிழலைக்குப்பின்னும் போவேனென்று பூமியில்பெருமையுள்ளதாகவிளங்குகின்றநாகைக்காரோணமென்கிறஸ்தலத்தையும்மற்றவைகளையும்பணிந்துசெல்கின்றவராய்ப்பெருமைபொருந்தியசொற்களால் அமைந்த தமிழ்ப்பதிகங்களைப்பாடிச்சுவாமியின்திருவீழிமிழலைக்குவந்தார்.—(எ-று) நாகைக்காரோணம்- நாகபட்டணத்தில் இருக்கும்சிவஸ்தலம். (உ௯௧)

வீழிமிழலைதனைப்பணிந்துவேதமுதல்வர்தாம்விரும்பி .... *
யாழிவலமேத்தியவரியாலாகாசத்தினின்றிழிந்த .... *

வாழிமலர்ந்தகோயிறனின் மன்னும்பொருளைப் போற்றிசைத்துத், தாழுநாளிற்பிறபதியும்பணியுங்காதல்தலைநிற்பார். . . . ✻

(இதன்பொருள்.)

திருவிழிமிழலையைப்பணிந்து வேதத்தைச்செய்தருளிய முதல்வராகியபரமசிவன்விரும்பிச்சக்கரத்தை யலங்கையிற்றரித்த விஷ்ணுவின்பிரயத்தினத்தால்மேலுலகத்தில்நின்றும் இறங்கிய பெருமைபொருந்திய கோயிலில் வீற்றிருக்கும் ஒப்பற்ற ஆண்டவரை ஸ்தோத்திரஞ்செய்து வாசஞ்செய்துகொண்டிருக்கும் நாளில் ஒருநாள் பிறதலங்களையும் தரிசனஞ்செய்யவேண்டுமென்கிற ஆசையைமிகவும்கொண்டவராய் (எ-று) (௨௯௨)

பூவிற்பொலியும்புனற்பொன்னிக்கரைபோய்ப்பணிவார் பொற்பமைந்த; வாவுக்கருளுமாவடுதண்டுறையார்பாதமணைந்திறைஞ்சி; நாவுக்கரசர்ஞானபோனகர்க்குச்செம்பொனுயிரமும் ✻ பாவுக்களித்ததிறம்போற்றிப்போந்துபிறவும்பணிகின்றார். . ✻

(இதன்பொருள்)

புட்பங்கள் பொலிவுபெற்ற நீரையுடைய காவேரியின்கரைவழியாகச்சென்று தொழுது செல்பவராகிய அப்பர்சுவாமி அழகுபொருந்திய பசுவிற்கு அநுக்கிரகஞ்செய்தருளிய திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் பரமசிவனுடையதிருவடிகளை நெருங்கி வணங்குதல்செய்து திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிக்கு அங்கேதுபாடிய தேவாரத்திற்காக ஆயிரம்பொன் கட்டளையிட்டருளிய திறத்தைப்புகழ்ந்து அங்குநின்றும்புறப்பட்டு மற்றைஸ்தலங்களையும் பணிவாராயினார்.—(எ-று) ஞானபோனகர்-திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி-ஞானத்தையே உணவாகக்கொண்டமையால் அப்பெயர்வந்தது. போனகம்-உணவு.

செய்யசடையார்பழையாறையெய்தவதனிற்செல்பொழுதின் மையலமணர்மறைக்கவடதளியின்மன்னுஞ்சிவனாரைக், கைகள்கூப்பித்தொழுதருளக்கண்டவாற்றாலமணர்கடம், பொய்கொள்விமானமெனக்கேட்டுப்பொறாதவுள்ளமிகப்புழுங்கி. . . ✻

(இதன்பொருள்.)

சிவந்தசடையை உடைய பரமசிவன்வீற்றிருக்கின்ற பழையாறையென்னும் ஸ்தலத்தை அடையும்படி அதன்சமீபத்திற்போம்பொழுது மயக்கத்தைப்பெற்றிருக்கின்ற அமணர்கள் மறைத்தலால் வடதளியென்கிறகோயிலில் எழுந்தருளியிருக்

குஞ்சுவாமியை இரண்டுகைகளையுங்கூப்பித்தொழு-அதைப்பா
ர்த்தபடியால் அந்தசைனர்களுடைய பொய்யாகியகோயில்
விமானமென்று சொல்லக்கேட்டு உள்ளஞ்சகிக்காமல் மிகவும்
புழுக்கத்தை அடைந்து.—(எ-று) (௨௧௪)

அந்தவிமானந்தனக்கருகாவாங்கோரிடத்தில்பாங்கெய்திக்-*
கந்தமலருங்கடிக்கொன்றைமுடியார்செய்யகழலுன்னி....*
மந்தவமணர்வஞ்சனையால்மறைத்தவஞ்சமொழித்தருளிப். *
பந்தங்கொண்டகுண்டர்திறம்பாற்றுமென்றுபணிந்திருந்தார்

(இதன்பொருள்)

அந்தவிமானத்தின்சமீபமான ஓரிடத்தில்வந்து மணம்வீசுகி
ன்றபுதிதாகிய கொன்றைமலர் மாலையைத்தரித்த முடியை உ
டைய பரமசிவனுடையசெவ்வியபாதத்தை நினைத்துப் புத்தி
யீனராகிய சமணர்களுடைய வஞ்சனையால் மறைத்த ஓர்காவ
டத்தையொழித்துத்தீவினையை உடைய துஷ்டர்களாகியசைன
ர்களுடையசெய்கையைக்கெடுத்துவிடுமென்றுவந்தனஞ்செய்
திருந்தார்.—(எ-று) (௨௧௫)

வண்ணங்கண்டுநானும்மைவணங்கியன்றிப்போகேனென்...*
றெண்ணமுடிக்கும்வாகீசரிருந்தாரமுதுசெய்யாதே .... *
யண்ணலாருமதுவுணர்ந்தங்காசுதம்மைப்பணிவதற்குத் .. *
திண்ணமாகமன்னனுக்குக்கனவிலருளிச்செய்கின்றார் .... *

(இதன்பொருள்)

உமது திருவுருவைக்கண்டு அடியேன் உம்மை வணங்குதவல்
லாமல் போகமாட்டேனென்றுதமது எண்ணத்தை நிறைவே
ற்றவிருந்த அப்பர்சுவாமி அமுதுசெய்யாமலிருந்தார்- பரம
சிவனும் அதை அறிந்து தம்மை அப்பர்சுவாமி பணியும்படி
யாக அந்தநாட்டையாளுகின்ற சோழராசனுக்கு உறுதியாக
ச்சொப்பனத்தில் அருளிச்செய்கின்றார்.—(எ-று) (௨௧௬)

அறிவிலமணர்நமைமறைப்பவிருந்தோமென்றங்கடையாளக்,
குறிகளருளிச்செய்தருளிநம்மையரசுகும்பிடுவான், நெறியில
மணர்தமையழித்துநீக்கிப்போக்கென்றருள்புரியச், செறிவில
நியுற்றெழுந்தவனுஞ்செங்கைதலைமேற்குவித்திறைஞ்சி ...*

(இதன்பொருள்-)

விவேகமில்லாதசமணர்கள் நம்மைமறைக்கும்படியாக விருந்
தோமென்று அக்கோயிலில் தாமிருக்கிறவிடத்தில் சில அடை

யாளங்கள்சொல்லி-தம்மை அப்பர்கும்பிடும்பொருட்டு நல்வ
ழியிலலாத சமணரை அழித்து ஒழித்தவர்களை இவ்விடம்விட்
டுப்போகத் துரத்தென்று அனுக்கிரகஞ்செய்தார்- கனவில்நி
ன்றுவிழித்தசோழராசனும் சிவத்தலைகளைத் தலைமேலாகக்கு
வித்துக்கொண்டுவணங்கி.—(எ-று) (௨௯௭)

கண்டவியப்புமந்திரிகட்கியம்பிக்கூடக் கடிதெய்தி, யண்டர்
பெருமானருள்செய்தவடையாளத்தின் வழிகண்டு, குண்டர்செ
ய்தவஞ்சனையைக்குறித்துவேந்தன்குலவுபெருந், தொண்டர்
தம்மையடிவணங்கத்தொக்கவமணர் துரத்தான் ....*

(இதன்பொருள்.)

இராசனானவன் தான்சொப்பனத்திலகண்ட ஆச்சரியமான கா
ரியத்தை மந்திரிகளுக்குச்சொல்லி-ஒருமித்துக்கூடி விரைவி
ல் கோயிலுக்குவந்து தேவர்களுக்குநாதராகிய பரமசிவன்
செய்துவைத்தருளியஅடையாளத்தின் இடத்தைக்கண்டுகுண்ட
ர்கள்சுவாமியை மறைத்துவைத்த இவ்வஞ்சனையைக்கண்டறிந்
தவனாகி அப்பர்சுவாமியைவணங்கிக்கூட்டமாயிருந்த அமணர்
களை அழித்துவிட்டான்.—(எ-று) (௨௯௮)

ஆனையினத்திற்றுகைப்புண்டவமணர்பிறருமாய்ந்ததற்பின் ..*
மேன்மையரசனீசர்க்குவிமானமாக்கிவிளங்கியபின் ......*
ஒருமைவழிபாட்டர்ச்சனைக்குநிரம்பவெல்லாமமைத்திறைஞ்ச *
ஞாலவரசும்புக்கிறைஞ்சிநாதர்முன்புபோற்றுவார் .... *

(இதன்பொருள்.)

அரசன்விட்ட ஆனைகளால் துகைக்கப்பட்ட அனேகவாயிரம்
சமணர்களும் இறந்தபிற்பாடு மேன்மைபொருந்திய அவ்வர
சன் சுவாமிக்குவிமானஞ்செய்து விளங்கச்செய்தபின்பு அரு
ச்சனைநிவேதனமுதலாகிய வழிபாட்டுக்கு வேண்டியவைகளை
நிரம்பவரவழைத்து நிறைவேற்றிவணங்க அப்பர்சுவாமியும் பு
குந்துவணங்கிப் பரமசிவன் முன்னேபோற்றுவாராயினார்.—
(எ-று) (௨௯௯)

தலையின்மயிரைப்பறித்துண்ணுஞ்சாதியமணர் மறைத்தாலும்
நிலையிலாதார்நிலைமையினல்மறைக்கவொண்ணுமோவென்று
ம்,விலையில்வாய்மைக்குறுந்தொகைகள்விளம்பிப்புறம்போந்
தங்கமர்ந்தே,யிலைக்கொள்சூலப்படையார்சேரிடங்கள்பிறவு
ந்தொழுதணைவார் ....*

(இதன்பொருள்)

(தலையின்மயிரைப்பறித்துண்ணுஞ் சாதியமணர் மறைத்தாலும் நிலையிலாதார் நிலைமையினால் மறைக்கவொண்ணுமோ) என்கிற ஒப்பில்லாதவார்த்தைகளையுடைய திருக்குறுந்தொகைப்பாட்டுகளைச்சொல்லி-வெளியில்வந்து சிலநாள் அங்குவாசஞ்செய்து கலையையுடைய சூலாயுதத்தை உடைய பரமசிவன்வீற்றிருக்கும் பலவிடங்களையும் தொழுது செல்வாராயினார்.—
(எ-று) (௫௱)

பொங்குபுனலார்பொன்னியினிரண்டுகரையும் பொருவிடையார், தங்குமிடங்கள்புக்கிறைஞ்சித் தமிழ்மாலைகளுஞ்சாத்திப்போ,யெங்குநிறைத்தபுகழாளரீறிலதொண்டரெதிர்கொள்ளச் செங்கண்விடையார்திருவானைக் காவின்மருங்கு சென்றணைந்தார்.. *

(இதன்பொருள்)

வெள்ளமாகப் பொங்கிவருகின்ற நீரை உடைய காவேரியாற்றினிரண்டுகரையிலும்-போர்செய்யத்தக்க ரிஷபத்தைஉடையபரமசிவன்வாசஞ்செய்யுமிடங்களை அடைந்துவணங்கித்திருப்பதிகங்களாகிய மாலைகளையுஞ்சாத்தி உலகமெங்குநிறைந்தபுகழைஉடையநாசமில்லாத அடியார்கள் எதிர்கொண்டுவரச்சுவாமியீற்றிருக்கும் திருவானைக்காவின் சமீபத்தில்வந்தருளினார்.
(எ-று) (௫௱௧)

சிலந்திக்கருளுங்கழல்வணங்கிச்செஞ்சொன்மாலைபலபாடி. *
யிலங்குசடையாரெறும்பியூர்மலையுமிறைஞ்சிப்பாடியபின். *
மலர்ந்தசோதிதிரிச்சிராப்பள்ளிமலையுங்கற்குடியு ... [னினார்
நலங்கொள்செல்வத்திருப்பராய்த் துறையுந்தொழுவா னண்

(இதன்பொருள்.)

சிலந்திக்கு அருள்செய்த திருவடியை வணங்கி இலக்கணக்குற்றமற்றசொற்களால் தொடுக்கப்பட்டபதிகமாகியமாலைகளைப் பலவகையாகப்பாடிக்கைலாசபதிவீற்றிருக்குமெறும்பியூர்மலையென்னும்ஸ்தலத்தையும்வணங்கிவிளங்கியசோதிசுரூபமாயினவருடைய திரிசிரப்பள்ளிமலையும்கற்குடியையும்நன்மைபொருந்தியசெல்வத்தை உடைய திருப்பராய்த்துறையையும் தொழும்படிசென்றார்.—(எ-று) திரிசிரசு என்பது- திரிச்சிராவென்றதிரிந்தது, அவன்பூசைபண்ணினஸ்தலமாதலால் திரிச்சிராப்பள்ளியென்றாயிற்று திரிசிரசுமூன்றுதலையை உடையராக்ஷதன்,

மற்றப்பதிகண் முதலானமருங்குள்ளனவுங்கைதொழுது ... *
பொற்புற்றமைந்ததிருப்பணிகள்செய்துபதிகங்கொடுபோற்றி
யுற்றவருளாற்காவிரியையேறியொன்னார்புரமெரியச் .... *
செற்றசிலையார்திருப்பைஞ்ஞீலியினைச்சென்றுசேர்கின்றார். *

(இதன்பொருள்.)

சுற்றுப்பக்கத்திலுள்ள மற்றைஸ்தலங்களையும் வணங்கி அழகாகிய திருப்பணிகளைச்செய்து பதிகம்பாடிச்சாத்தி வந்தலஞ்செய்துமிருந்த அன்போடு காவேரியைத்தாண்டி அசுரர்கள் புரங்களெரியச்செய்த வில்லையுடைய ஆண்டவர் வீற்றிருக்கும் திருப்பைஞ்ஞீலியென்னும் ஸ்தலத்தை அடைந்தார்.—(எ-று)

வழிபோம்பொழுதுமிகவிளைத்துவருத்தமுறநீர்வேட்கையொ
டு, மழிவாம்பசிவந்தணைந்திடவுமதற்குச்சித்தமலையாதேமொ
ழிவேந்தருமுன்னெழுந்தருளமுருகார்சோலைப்பைஞ்ஞீலி,வி
ழியேந்தியநெற்றியினார்தந்தொண்டர்வருத்தமீட்பாராய்.- *

(இதன்பொருள்.)

வழியிலே போய்க்கொண்டிருக்கும்போது இளைப்பை மிகவும் அடைந்து வருத்தம் உண்டாகத் தாகங்கொண்டு குடிக்க நீர்விரும்பி எல்லாக்குணங்களையுங்கெடுத்துவிடுகின்ற பசியானது உண்டாகவும், அதற்குமனதுசலிக்காமல் அப்பர்சுவாமியும் வரவாப் போம் பொழுது மணம்வீசியசோலையை உடைய திருப்பைஞ்ஞீலியென்னும் ஸ்தலத்தில்வீற்றிருக்கும் நெற்றியில் கண்ணை உடைய பரமசிவன் தம்முடைய அடியாருடையவருத்தத்தைநீக்கவிரும்பினவராய்.—(எ-று) (௩௱௪)

காவுங்குளமுமுன்சமைத்துக்காட்டிவழிபோங்கருத்தினன் .*
மேவுந்திருநீற்றந்தணராய்விரும்புபொதிசோறுங்கொண்டு.*
நாவின்தனிமன்னவர்க்கெதிரே நண்ணியிருந்தார் விண்ணின்
மேற், றுவும்புள்ளுமண்கிழிக்குந்தனியேனமுங்காண் பரியவர்
தாம் .... *

(இதன்பொருள்.)

இளைப்பாறத்தக்க ஒருசோலையையும் குளத்தையும் முன்வழியில் உண்டாக்கி வழிபோகுங்கருத்தை உடையவர்போல் விபூதியைத்தரித்தஒருபிராமணராய்க் கட்டுசோறு எடுத்துக்கொண்டு அப்பர்சுவாமிக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்- ஆகாசத்

தில் பறந்துபோக அன்ன உருவங்கொண்ட பிர்மதேவனும்பூ மியைப்பிளந்து உள்ளேபோகப் பன்றியாக உருவங்கொண் டவிஷ்ணுவும்காணக்கூடாதவராகியபரமசிவன் எ-று) (௩௱௫)

அங்கணிருந்தமறையவர்பாலாண்டவரசுமெழுந்தருள, வெங்க ண்விடைவேதியர்நோக்கிமிகவும்வழிவந்திளைத்திருந்தீ, ரிங்கெ ன்பாலேபொதிசோறுண்டிதனையுண்டிதண்ணீரிப்,பொக்குளு ளத்திற்குடித்திளைப்புப்போக்கிப்போவீரெனப்புகன்றார்.. ✻

(இதன்பொருள்)

அப்பர்சுவாமியும் தமக்குமுன்னாக இருந்த பிராமணருடைய சமீபத்தில்போகக்கோபககண்ணை உடைய ரிஷபவாகனராகிய பிராமணவேஷங்கொண்டவர் அடியாரைப்பார்த்து வெகுதூ ரம்வழிநடந்து இளைப்படைந்திருக்கின்றீர் என்னி டத்தில் கட் டுசோறிருக்கின்றது-அதைநீர்சாப்பிட்டு இந்தக்குளத்தில் நீர்நி றைந்திருக்கின்றது குடித்து இளைப்பை ஒழித்துக்கொண்டு போமென்று சொன்னார்.—(எ-று) (௩௱௬)

நண்ணுந்திருநாவுக்கரசுநம்பாருளென்றறிந்தார்போ[லுமே லுண்ணுமென்றுதிருமறையோருரைத்துப்பொதிசோறளித்த வெண்ணநினையாதெதிர்வாங்கியினிதாவமுதுசெய்தினிய.. ✻ தண்ணீரமுதுசெய்தருளித்தூய்மைசெய்துதளர்வொழிந்தார்

(இதன்பொருள்.)

பிராமணர்-சாப்பிடுமென்று கட்டுசாதத்தையெடுத்துக்கொடு த்ததும் அப்பர்சுவாமி இதைப் பரமசிவனுடைய கிருபையெ ன்று அறிந்தவர்போல் சிறிதாவது ஆலோசியாமல்வாங்கி இனி தாகத் திருவமுது உண்டு தித்திப்பான நீரைக்குடித்து வாய்- கைகால் சுத்திசெய்துவிடாய்நீங்கினார்.—(எ-று) (௩௱௭)

எய்ப்புநீங்கிநின்றவரைநோக்கியிருந்தமறையவனு, ரப்பாலெ ங்குநீர்போவதென்றாரரசுமவர்க்கெதிரே, செப்புவார்யான்தி ருப்பைஞ்ஞீலிக்குப் போவதென்றுரைத்தா, ரொப்பிலாரும் யானங்குப்போகின்றேனென்றுடன்போந்தார்........ ✻

(இதன்பொருள்)

கட்டுசாதம் உண்ணுதலால் இளைப்புநீங்கியிருந்த அப்பர்சுவா மியை அவ்விடத்திலிருந்தபிராமணர்பார்த்து அதன்பின்புநீர் எங்கேபோகிறவரென்று கேட்டார்-அப்பர்சுவாமியும் அந்த ப்பிராமணர்க்கு எதிராகநின்று நான் திருப்பைஞ்ஞீலிக்குப்

போகவேண்டியதென்றுசொன்னார்-ஒப்பில்லாத பரமசிவனு டையபிராமணரும்நானும் அவ்விடத்துக்குத்தான்போகவேண் டியதென்று அவருடனேகூடப்போயினார்.—(எ-று) (௯௱௮)

கூடவந்துமறையவனார்திருப்பைஞ்ஞீலிகுறுகியிட.... .. *
வேடமவர்முன்மறைத்தலுமேமெய்மைத்தவத்துமேலவர்தா,
மாடல்புரிந்தாரடியேனைப்பொருளாவளித்தகருணையெனப்*
பாடல்புரிந்துவிழுந்தெழுந்துகண்ணீர்மாரிபயில்வித்தார்.*

(இதன்பொருள்.)

பிராமணரானவர் அப்பர்சுவாமியோடுகூடவந்து திருப்பைஞ் ஞீலியென்னும் ஸ்தலத்தை நெருங்கித் தாம்கொண்டவேஷத் தைமறைத்துக்கண்ணுக்குக்காணாகவாராத மெய்மைபொருந்தி யதவத்தை உடைய மேலோராகிய திருநாவுக்கரசுசுவாமியும் அடியேனைப்பொருளாவளித்த கருணையென்று பதிகம்பாடிப்- பூமியிற்படிந்துவணங்கி யெழுந்திருந்து கண்ணீரைமாரிபோ லச்சொரிந்தார்.—(எ-று) (௯௱௯)

பைஞ்ஞீலியினிலமர்ந்தருளும்பரமர்கோயில்சென்றெய்தி.*
மைஞ்ஞீலத்துமணிகண்டர்தம்மைவணங்கிமகிழ்ந்துசிறந்து.....*
மெய்ஞ்ஞீர்மையினிலன்புருகவிரும்புந்தமிழ்மாலைகள்பாடிக்.*
கைஞ்ஞீடியநற்றிருத்தொண்டுசெய்துகாதலுடனிருந்தார்.*

(இதன்பொருள்.)

திருப்பைஞ்ஞீலியென்னும் ஸ்தலத்தில் விரும்பிவீற்றிருக்கின் ற பரமசிவனுடையகோயிலை அடைந்து மிகவும் கரிய நீலநிறத் தை உடையகழுத்தினராகிய பரமசிவனைத்தொழுது களிகூர்ந் து உண்மையானதன்மையோடு அன்பால் உருக்கத்தை அடை ந்துவிரும்பத்தக்கதமிழ்மாலைகளைப்பாடிக்கையாற்செய்யவே ண்டிய திருத்தொண்டுகளைச்செய்து ஆசையோடிருந்தார்.— (எ-று) நீலம்-ஞீலமென்றதுபோலி. செய்ஞ்ஞின்றநீலமென் பதுபோல. (௯௱௰)

நாதர்மருவுந்திருமலைகளொடும்பதிகள்பலமிகவும்.. ....*
காதல்கூரச்சென்றிறைஞ்சிக்கலந்தவிசைவண்டமிழ்பாடி...*
மாதோர்பாகரருளாலேவடபால்நோக்கிவாகீச.... .....*
ராதிதேவரமர்ந்ததிருவண்ணாமலையைநண்ணினார்.... .. ---*

(இதன்பொருள்)

பரமசிவன் வீற்றிருக்கும் அனேகமாகிய மலைகளையும் அவை யொழிந்தமற்றைப்பலஸ்தலங்களையும் மிகுந்தஅன்போடுபோ

பிவணங்கிப் பல இசைகளோடுபாடவேண்டிய வளம்பொருந்திய தமிழ்ப்பதிகங்களைப்பாடிப் பார்வதியாளைப் பக்கத்திலுடைய பரமசிவன்கிருபையாலே வடதிசையைநோக்கிச்சுவாமியிற்றிருக்கும்திருவண்ணாமலையை அடைந்தார் அப்பர்சுவாமி.

செங்கண்விடையார்திருவண்ணாமலையைத் தொழுதுவலங்கொண்டு, துங்கவரையின்மிசையேறித்தொண்டர்தொழும்புக்கெதிர்நிற்கு, மங்கணரைத்தொழுதெழுந்துதிளைத்துத்திருநாவுக்கரசர், தங்குபிறப்பைவிட்டினுகருமேலாம்பெருமைசாதுத்தார் .... *

(இதன்பொருள்)

சிவந்தகண்களையுடைய ரிஷபவாகனத்தைக் கொண்டவருடைய திருவண்ணாமலையைத்தொழுது வலமாகவந்து உயர்ந்த அடிமலையின்மேலேறி அடியார்களுடைய அடிமைத்திறத்துக்கு எதிரேநின்றுகிருபைசெய்கின்ற பரமசிவனைத்தொழுது எழுந்திருந்துபாவசமாய்ப் பூமியிற்பிறப்பதேமோட்சம் அடைவதைக்காட்டிலும்மேலானபெருமையை உடையதென்று தெரிவித்தார்.—(எ-று) பூமியில்பிறந்தால் பரமசிவனை ஸ்தலங்கள்தோறும் போய்ப் பணியக்கூடுமென்பதுபற்றி மோட்சத்தைககாட்டிலும் சிறந்ததாகச்சொன்னார். (௩௱ உ)

அண்ணாமலைமேன்மணிமலையையாராவன்பையடியவர்தங் .. *
கண்ணாரமுதைவிண்ணோராக்காக்கக்கடலில்வந்தெழுந்த... *
வுண்ணாநஞ்சமுண்டானைக்கும்பிட்டுருகுஞ்சிந்தையுடன் .. *
பண்ணார்பதிகத்தமிழ்பாடிப்பணிந்துபரவிப்பணிசெய்தார் *

(இதன்பொருள்.)

அண்ணாமலையில் எழுந்தருளிய மாணிக்கமலைபோன்றவரை-தெவிட்டாத அன்பைப்புரிகின்றவரை-அடியார்களுடையகண்களுக்கு இன்பத்தைக்கொடுக்கின்ற அமுதமாகியவரை-தேவரைக்காப்பாற்றும்பொருட்டுக் கடலில்பிறந்து எழும்பிய ஒருவராலும்முண்ணக்கூடாத விஷத்தை உண்டருளியவரைத்தொழுது உருகியமனதோடு பண்ணோடுபாடத்தக்க தமிழ்ப்பதிகத்தைப்பாடி ஸ்தோத்திரஞ்செய்து அங்கேதிருப்பணிசெய்துகொண்டிருந்தார்.—(எ-று) (௩௱௩)

பணியார்வேணிச் சிவபெருமான் பாதம்போற்றிப்பணிசெயுநாள், மணியார்கண்டத்தெம்பெருமான்மண்மேல்மகிழுமிட

மெங்குந், தணியாக்காதலுடன்சென் றுவணங்கித்தக்கபணிசெய்வார்; அணியார்தொண்டத்திருநாட்டிலருளாலணைவாராயினார் *

(இதன்பொருள்.)

பாம்புகள்தங்கிய சடையை உடைய பரமசிவனது திருவடிகளைவணங்கித் திருப்பணிகளைச்செய்துகொண்டுவருநாளில் நீலநிறம்பொருந்திய கழுத்தினையுடைய எமது ஆண்டவர் பூமியில் மகிழ்ந்தருளியிருக்கும் ஸ்தலங்கள் எங்கும் ஒழியாத ஆசையோடுபோய்த்தொழுது தகுந்ததிருப்பணிகளைச்செய்து அழகுபொருந்திய தொண்டமண்டலத்திற்கு அன்போடு அடைதற்கு விருப்பங்கொண்டார்.—(எ-று) (௩௱௰௪)

காதல்செய்யுங்கருத்தினுடன் காடுமலையுங்கானயாறுந் .... *
சூதமலிதண்பணைப்பதிகள்பலவுங்கடந்துசொல்லினுக்கு... *
நாதர்போந்துபெருந்தொண்டைநன்னாடெய்தியுள்ளணைச் · *
சீதமலர்மென்சோலைசூழ்திருவோத்தூரிற்சென்றடைந்தார் - *

(இதன்பொருள்)

ஆசைபொருந்தியமனதோடு காடுகள்-மலைகள்-காட்டாறுகள் மாமரங்கள்நெருங்கிய குளிர்ச்சிபொருந்திய வயல்கள்சூழ்ந்த கிராமங்கள் முதலாகிய பலவற்றையுந்தாண்டி அப்பர்சுவாமி பெருமையும் நன்மையும்பொருந்திய தொண்டைநாட்டிற்குவந்து முதலில்குளிர்ச்சிபொருந்திய மென்மையாகிய மலர்களையுடைய சோலைசூழ்ந்திருக்கும் திருவோத்தூர் என்னுஸ்தலத்தை அடைந்தார்.—(எ-று) (௩௱௰௫)

செக்கர்ச்சடையார்திருவோத்தூர்த்தேவர்பிரானார்தங்கோயில், புக்குவலங்கொண்டெதிரிறைஞ்சிப்போற்றிக்கண்கள்புனல்பொழிய, முக்கட்பிரானைவிரும்புமொழித்திருத்தாண்டகங்கள்முதலாகத், தக்கமொழிமாலைகள்சாத்திச்சார்ந்துபணிசெய்தொழுகுவார் .... *

(இதன்பொருள்.)

செவ்வானம்போன்ற சடையை உடைய தேவர்களுக்கு நாதராகிய சுவாமி வீற்றிருக்கும் திருவோத்தூர்க் கோயிலுக்குள்ளேபுகுந்து வலமாகவந்து எதிராகநின்றுவணங்கி ஸ்தோத்திரஞ்செய்து இரண்டுகண்களும் நீரைப்பொழிய மூன்றுநேத்திரங்களையுடைய ஆண்டவரை விஷயமாகப்பெற்று மொழிகள் இலயத்திருக்கும் திருத்தாண்டகமுதலாகிய தகுந்தபதிகங்

களை மாலையாகச்சாத்தி-அக்கோயிலிலேதானே சார்ந்த திருப்பணிசெய்துகொண்டுவருகின்றநாளில்.—(எ-று) (௫௱௰௬)

செய்யவையர்திருவோத்தூரேத்திப்போந்துசெழும்புவன.*
முய்யநஞ்சுண்டருளுமவருறையும்பதிகள்பலவணங்கித் .... *
தையல்தழுவக்குழைந்தபிரான்றங்குந்தெய்வப்பதியென்று*
வையமுழுதுந்தொழுதேத்துமதில்சூழ்காஞ்சிமருங்கணைந்தார்

(இதன்பொருள்)

நல்லவழியிற்செல்கின்றவராகிய அப்பர்சுவாமி திருவோத்தூரைத்தொழுது அவ்விடத்தினின்றும்நீங்கிச்செழுமைபொருந்திய உலகத்திலுள்ளவர்கள் பிழைக்கும்பொருட்டு நஞ்சை உண்டவர் எழுந்தருளியிருக்கும் பலவாகிய க்ஷேத்திரங்களையும்வணங்கிப் பார்வதியார்தழுவுதலால் திருமேனிகுழைந்த ஏகம்பர்வீற்றிருக்கும் தெய்விகம்பொருந்திய ஸ்தலமென்று உலகமுழுதும்தொழுதுபுகழாநின்றமதிலாற்சூழப்பட்ட காஞ்சீநகரத்தினதுசமீபமாகியவிடத்தைஅடைந்தார்.(எ-று)(௫௱௰௭)

ஞாலமுய்யத்திருவதிகைநம்பர்தம்பேரருளினாற் ....*
சூலைமடுத்துமுன்னாண்டதொண்டர்வரப்பெற்றோமென்று.*
காலைமலருங்கமலம்போற்காஞ்சிவாணர்முகமெல்லாஞ் ...*
சாலமலர்ந்துகளிசிறப்பத்தழைத்தமனங்கடாங்குவார் ....*

(இதன்பொருள்)

உலகத்திலுள்ளவர்கள் பிழைக்கும்பொருட்டு திருவதிகையில் வீற்றிருக்கும்கைலாசபதியினுடைய பெருமைபொருந்திய கருணையாலே சூலைவியாதியையுண்டாக்கிப் பின்பு ஆண்டுகொண்ட அப்பர்சுவாமிஇவ்விடத்திற்கு வரப்பெற்றோமென்றுகாலைப்பொழுதில் சூரியனைக்கண்டு மலர்கின்ற தாமரைப்பூவைப்போல் காஞ்சியில் வாழ்கின்றவர்களுடைய முகங்களெல்லாம் மிகவு மலர்ச்சியை அடைந்து களிப்புண்டாகித்தழைத்தமனத்தை உடையவர்களாகி.—(எ-று) (௫௱௰௮)

மாடவீதிமருங்கெல்லாமணிவாயில்களிற்றோரணங்கள் ....*
நீடுகதலியுடன்கமுகுநெருங்குநிறைபொற்குடந்தீபந் ....*
தோடுகுலவுமலர்மாலைசூழ்ந்தவாசப்பந்தர்களு...... ....*
மாடுகொடியுமுடனெடுத்தங்கணிநீள்காஞ்சியலங்கரித்தார்.*

(இதன்பொருள்)

மாடவீதியிலும் மற்றை எல்லாவீதிகளிலும் அழகிய கோயில் வாசல்களிலும் தோரணங்களும், நீண்டவாழைமரங்களும், க

மூகமரங்களும்நாட்டி நீர்நிறைந்த பொற்குடங்களையும் தீபங்
களையும் நெருங்கவைத்து இதழ்கள்பொருந்திய புஷ்பமாலை
கள்சூழ்ந்த வாசனைபொருந்திய பந்தல்களும் இட்டு ஆங்கின்
றகொடிகள்கட்டி மிகுந்த அலங்காரமுள்ளதாகக்காஞ்சிநகரத்
தை அலங்கரித்தார்கள்.— எ-று) (௩௱௰௯)

தொண்டரீண்டியெதிர்கொள்ளவெழுந்துசொல்லுக் கரசர்பார்
த், கொண்டகேவட்கைப்பொலிவினொடுங்குலவும்வீதிபணிசெ
ய்யு,மண்டரறிதற்கரியதிருவலகுமுதலாமவையேந்தி,யிண்டை
புனைந்தசடைமுடியார்க்கன்பர்தம்மையெதிர்கொண்டார்...*

(இதன்பொருள்.)

அடியார்கள்கூட்டமாகக்கூடி யெதிர்கொள்ளஎழுந்திருந்து அ
ப்பர் சுவாமியினிடத்தில் தாங்கள்கொண்ட மிகுந்த ஆசைப்
பெருக்கத்தோடும் வீதிகளில் பணிகள்செய்ய உபயோகியாயி
ருந்த தேவர்கள் அறிதற்கருமையாகிய திருவலகுமுதலாகிய
பணிவிடைக்கருவிகளை எடுத்துக்கொண்டே கொண்டைமாலை
யைத்தரித்த சடைமுடியை உடைய பரமசிவனடியாரை எதிர்
கொண்டார்கள்.(எ-று) (௩௱௨௰)

எதிர்கொண்டிறைஞ்சுஞ்சீரடியார்தம்மையிறைஞ்சி யெழுந்த
ருளி, மதில்கொண்டணிந்தகாஞ்சிநகர் மறுகுபோந்துவானந
தி,குதிகொண்டிழிந்தசடைக்கம்பர்செம்பொற்கோயில்குறுகி
ஞர்,முதிர்கொண்டலைநேர்மணிமிடற்றாண்டதிருநாவுக்கரசர் *

(இதன்பொருள்.)

எதிராகவந்து தொழுகின்ற சிறப்புப்பொருந்திய அடியார்க
ளைவணங்கி யெழுந்து மதில் அலங்காரமாகச் சுற்றியிருக்கின்ற
காஞ்சீநகரத்தின்வீதியை அடைந்து ஆகாயகங்கையானது அ
திர்ச்சியோடு குதித்தலைகொண்டிறங்கிய சடையைஉடைய ஏக
ம்பருடையசிவந்தபொன்மயமாகியஆலயத்தைக்குறுகினார்- இ
ருளையொத்தகரியநிறம்பொருந்திய கண்டத்தைஉடையபரம
சிவனால் ஆட்கொள்ளப்பட்ட திருநாவுக்கரசசுவாமி.—(எ-று)

திருவாசலினைப்பணிந்தெழுந்துசெல்வத்திருமுன் றிலையணைந்
து,கருவார்கச்சிஏகம்பர்கனகமணிமாளிகைசூழ்ந்து, வருவா
ர்செம்பொன்மலைவல்லிதழுவக்குழைந்தமணிமேனிப், பெரு
வாழ்வினைமுன்கண்டிறைஞ்சிப்பேராயன்புபெருகினார்....*

(இதன்பொருள்.)

கோயிலினுடைய திருவாசலைப்பணிந்து எழுந்திருந்து செல்வ

ம்பொருந்திய திருமுற்றத்தை அடைந்து எல்லாப்பொருளிற்கும்காரணமாகியஏகாம்பரேசுரர்எழுந்தருளியிருக்கும்மணிகளிழைத்துப்பொன்னாற்செய்யப்பட்டுள்ளவிமானத்தை வலஞ்செய்து சிவந்தபொற்கட்டிகளையுடையஇமயமலையரசன்பெற்ற பார்வதியார் தழுவுதலால் குழைந்த அழகிய திருமேனியை உடைய ஒப்பற்ற வாழ்வாகிய சுவாமியைத் தரிசனஞ்செய்து தொழுது தவறாத அன்பை மிகுதியுங்கொண்டார்.— எ-று)

வார்ந்துசொரிந்தகண்ணருவிமயிர்க்கால்தோறும்வரும்புளக.*
மார்ந்தமேனிபுறம்பலையவன்புகலாற்றென்புள்ளலைப்பச்...*
சேர்ந்தநயனப்பயன்பெற்றுத்திளைப்பத்திருவேகம்பர்தமை*
நேர்ந்தமனத்தினுறவைத்துநீடும்பதிகம்பாடுவார்..... .... *

(இதன்பொருள்.)

கண்கள்சொரிந்த நீரருவியானதுவடிந்து மயிர்க்கால்கள்தோறும் புளகமுண்டாகி உடம்புபுறத்தில் தள்ளாட அன்பினாலே எம்புகரைந்து உட்புறமும் தழுதழுக்கக்கண்களையடைந்ததற்குப்பயனாகிய சுவாமி தரிசனத்தைப்பெற்று உறுதியாக ஏகம்பரைக்குடிலமில்லாதமனதில்தியானஞ்செய்து நிலைபெற்றபதிகத்தைப்பாடத்தொடங்கினார்.—(எ-று) (௫௨௫)

(வேறு.)

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானையென்றெடுத்துப்....... *
பரவாயசொன்மாலைத்திருப்பதிகம்பாடியபின் .... *
விரவார்தம்புரமெரித்தவிடையவனார்வெள்ளையெயிற் .... *
றரவாரம்புனைந்தவர்தந்திருமுன்றிற்புறத்தணைந்தார். .... *

(இதன்பொருள்.)

(கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானையென்று முதலிலெடுத்துஸ்தோத்திரஞ்செய்வதற்கு உபயோகியாய்ச் சொல்லாலமைந்த திருப்பதிகமாகியமாலையைப்பாடியபின்பு உலகவிரோதிகளாகிய அசுரர்களுடைய திரிபுரத்தை யெரித்தவரும் வெண்மை பொருந்திய பலவினை உடைய பாம்பை ஆரமாகப்பூண்டவருமாகியசுவாமியின்திருவாசலின்புறத்தில்வந்தார்(எ-று) (௫௨௪)

கையார்ந்ததிருத்தொண்டுகெழியமிகுங்காதலொடுஞ்..... ...*
செய்யாநின்றேயெல்லாச்செந்தமிழ்மாலையும்பாடி .... ..*
மையார்ந்தமிடற்றார்திருமயானத்தைவலங்கொண்டு .. .. *
மெய்யார்வமுறத்தொழுதுவிருப்பினுடன்மேவுவார்.. ..*

(இதன்பொருள்.)

கையினால்செய்யத்தக்க திருத்தொண்டாகிய உழைவாரப்பணிவிடையை மிகுந்த பேராசையோடு செய்துகொண்டு இது ஒழிந்த வாய்த்தொண்டாகிய செவ்விய தமிழின் திருப்பதிகங்களையும்பாடி-விஷக்கறையானது பொருந்திய கழுத்தினையுடைய பரமசிவனது கச்சித்திருமயானமென்னும் ஸ்தலத்தைவலஞ்செய்து உண்மையாகிய அன்போடு தொழுது விருப்பத்தோடும்பாவாராயினார்.—(எ-று) (௲௨௫)

சீர்வளருமதிற்கச்சிநகர்த்திருமேற்றளிமுதலா .... *
நீர்வளருஞ்சடையவர்தாம்நிலவியுறையாலயங்க.. .. ....*
ளார்வமுறப்பணிந்தேத்தியாய்ந்ததமிழ்ச்சொன்மலராற் ....*
சார்வுறுமாலைகள்சாத்தித்தகுந்தொண்டுசெய்திருந்தார் ....*

(இதன்பொருள்.)

சிறப்புப்பொருந்திய மதில்சூழ்ந்த கச்சியநகரத்தில் திருமேற்றளிமுதலாகக்கங்கையைத்தரித்தசடையை உடைய பரமசிவன் வாசஞ்செய்கின்ற ஆலயங்களையெல்லாம் அன்புண்டாகப்பணிந்து புகழ்ந்து ஆராய்ந்து எடுக்கப்பட்ட தமிழ்ச்சொற்களே மலராக அமைத்த பதிகமாலைகளைச்சாத்தி தகுந்த திருப்பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தார்.—(எ-று) (௲௨௬)

அந்நகரிலவ்வண்ணமமர்ந்துறையுநாளின்கண் ....*
மன்னுதிருமாற்பேறுவந்தணைந்துதமிழ்ப்பாடி ....*
சென்னிமதியணிவார்பதிபலவுஞ்சென்றிறைஞ்சித். .. *
துன்னினார்காஞ்சியினைத்தொடர்ந்தபெருங்காதலினால். .. *

(இதன்பொருள்.)

அந்நகரத்தில் அவ்விதமாக விரும்பி வாசஞ்செய்யுநாளில் நிலைபெற்ற திருமாற்பேறென்னும் ஸ்தலத்துக்குவந்து தொழுது தமிழ்ப்பதிகம்பாடிச் சிரசில் சந்திரனைத்தரிக்காநின்ற சுவாமிவீற்றிருக்கும் அநேகஸ்தலங்களையும் அடைந்து வணங்கிக்காஞ்சிநகரத்தை அடைந்தார்-தம்மைத்தொடர்ந்துபற்றிய மிகுந்த ஆசையால் அப்பர்சுவாமி.—(எ-று) (௲௨௭)

ஏகம்பன்காணவனென்னெண்ணத்தானெனப்போற்றிப் ---*
பாகம்பெண்ணுருவானைப்பைங்கண்விடையுயர்த்தானை. ... *
நாகம்பூணாகத்தானைநலம்பெருகுந்திருநீற்றி ....*
னாகந்தோயடியானையணைந்துபணிந்தின்புற்றார் ....*

(இதன்பொருள்.)

ஏகம்பன் காணவனெல்லெண்ணத்தானென்று வந்தனஞ்செய்து ஒருபாகம் பெண்ணுருவாயிருக்கின்றவரும் கரியகண்ணையுடைய ரிஷபத்தை உளர்ந்தவரும் பாம்பை ஆபரணமாக விரும்பித் தரித்தவரும் நன்மையை உண்டாக்கும் விபூதியை ஆபரணமாகத் திருமேனியில் தரித்தவருமாகிய சுவாமியை அடைந்து தொழுது இன்பத்தை அடைந்தார்.—(எ-று) (௩௨௮)

திருக்கச்சியேகம்பம் பணிந்தேத்தித்திங்களார், நெருக்கச்செஞ்சடைக்கணிந்தார் நீடுபதிதொழநினைவார், வருக்கைச்செஞ்சுளைபொழிதேன் வயல்விளைக்கு நாட்டிடைப்போய்ப், பருக்கைத்திண்களிற்றுரியார்கழுக்குன்றின்பாங்கணைந்தார்..... *

(இதன்பொருள்)

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேசுரர் வீற்றிருக்கும் ஆலயத்தைப்பணிந்து ஸ்தோத்திரஞ்செய்து சந்திரனையும் ஆத்திமாலையும் நெருக்கமாகிய சிவந்தசடையில் தரித்த சுவாமிவீற்றிருக்கும் ஸ்தலங்களைப்பணிய உள்ளங்கொண்டவராய்ப் பலாப்பழங்களின் சிவந்தசுளைகள் பொழியாநின்ற தேனானது வயல்களைவிளையச் செய்கின்ற நாட்டிற்போய் பரியகையினையுடைய வலிபொருந்திய யானையின்தோலைத்தரித்தவராகிய சுவாமிவீற்றிருக்குந்திருக்கழுக்குன்றின் பக்கத்தை அடைந்தார்.—(எ-று) வயல்விளைக்குமென்றதை-இடத்துநிகழ்பொருளிடத்தின்மேல்நின்றதாகவைத்துக்கொள்க- (௩௨௯)

நீடுதிருக்கழுக்குன்றினிருந்தனார்கழல்வணங்கிப் .... *
பாடுதமிழ்த்தொடைபுனைந்துபாங்குபலபதிகளிலுஞ் --- .. *
சூடுமிளம்பிறைமுடியார்தமைத்தொழுதுபோற்றிப்போய் .. *
மாடுபெருங்கடலுடுத்தவான்மியூர்மருங்கணைந்தார்..... ... *

(இதன்பொருள்)

நிலைபெற்ற திருக்கழுக்குன்றில் பரமசிவனுடைய திருப்பாதத்தை வணங்கித் தமிழ்ப்பதிகமாலைகளைச் சாத்தி அதன்புறத்தில் இருக்கும் பலஸ்தலங்களுக்கும்போய் இளமையாகிய மூன்றாம்பிறையைத்தரித்த முடியை உடைய ஆண்டவனைவணங்கிப்புகழ்ந்து கீழ்ப்புறத்திற் கடலையுடையதிருவான்மியூர்க்குவந்தார். (எ-று) (௩௩௰)

திருவான்மியூர்மருந்தைச்சேர்ந்துபணிந்தன்பினொடும் ... *
பெருவாய்மைத்தமிழ்பாடியம்மருங்குபிறப்பறுத்துத் .. *

(இதன்பொருள்-)

தருவார்தங்கோயில்பலசார்ந்திறைஞ்சித்தமிழ்வேந்தர் .. *
மருவாருமலர்ச்சோலைமயிலாப்பூர்வந்தடைந்தார் ...... *

திருவான்மியூரில் எழுந்தருளியிருக்கின்ற அமிர்தம்போன்ற சுவாமியை அடைந்து வந்தனஞ்செய்து அன்போடு பெருமை பொருந்திய உண்மையாகிய தமிழ்ப்பதிகங்களைப் பாடி அவ்விடத்தில் நின்றும் புறப்பட்டுப் பிறப்பை ஒழித்து மோட்சத்தைக்கொடுக்கின்ற பல திருப்பதிகங்களையும் அடைந்து வந்தனஞ்செய்து வாசனைபொருந்திய புஷ்பங்களைஉடையசோலை சூழ்ந்த மயிலாப்பூரில்வந்துசேர்ந்தார் அப்பர்சுவாமி.(எ-று)

வளைவளர்மாமயிலென்ன மாடமிசைமஞ்சாடுந் .... *
தளைவளர்சீர்த்திருமயிலைச்சங்கரனார்தாள்வணங்கி .. .... *
யுளைவளர்மாலைகளணிவித்துழைவார்ப்படையாளி .... *
திளைவளர்வேலைக்கரைபோய்த்திருவொற்றியூர்சேர்ந்தார் .. *

(இதன்பொருள்)

மலையினிடமாகச் சஞ்சரிக்கின்ற மயில்போல் உப்பரிகையில் மேகங்கள் தவழ்கின்றபூமியில் கீர்த்திபொருந்திய திருமயிலையென்னும் ஸ்தலத்தில்வீற்றிருக்கும் பரமசிவனுடைய பாதத்தைவணங்கித் திருப்பதிகமாகியமாலையைச்சாத்தி அப்பர்சுவாமி அலைகள்மோதுகின்ற சமுத்திரக்கரையின்வழியேபோய்த் திருவொற்றியூரைச்சேர்ந்தார்.—(எ-று) (கூரு௨)

ஒற்றியூர்வளநகரத்தொளிமணிவீதிகள்விளக்கி .... *
நற்கொடிமாலைகள்பூகநறுங்கதலிநிரைநாட்டிப் .. .. *
பொற்குடங்கள்தூபங்கள்தீபங்கள்பொலிவித்து .. .. *
மற்றவரையெதிர்கொண்டுகொடுபுக்கார்வழித்தொண்டர் ... *

(இதன்பொருள்)

வளம்பொருந்திய திருவொற்றியூரென்னும் நகரத்திலுள்ளபிரகாசிக்கின்ற அழகாகிய வீதிகளை விளக்கஞ்செய்து நல்லகொடிகள் - கமுகு நல்ல வாழைமரங்கள் இவைகளை நிரையாக நாட்டிமாலைகள்தொங்கவிட்டுப்பொன்மயமாகியகுடங்களையும் தூபங்களையும் விளக்குகளையும் பிரகாசிக்கவைத்துப் பரம்பரையாகச் சுவாமிக்குத் தொண்டு செய்துகொண்டிருக்கின்ற அடியார்கள் அப்பர்சுவாமியை யெதிர்கொண்டார்கள்.(எ-று)

திருநாவுக்கரசருமத்திருவொற்றியூரமர்ந்த .... *
பெருநாகத்தின்சிலையார்கோபுரத்தையிறைஞ்சிப்புக் ... ... *

கொருஞானத்தொண்டருடனுருகிவலங்கொண்டடியார் .. ,*
கருநாமந்தவிர்ப்பாரைக்கைதொழுதுமுன்வீழ்ந்தார் .... *

(இதன் பொருள்.)

அப்பர்சுவாமியும்அந்தத்திருவொற்றியூரில்எழுந்தருளியிருக்கின்ற பெரியமலையாகிய மகாமேருவை வில்லாகவுடையபரமசிவனுடையகோபுரத்தை நமஸ்கரித்து உள்ளேபோய் ஒப்பற்ற சிவஞானம்பொருந்திய தொண்டர்களோடு .பிறவியில்லாமல் செய்கின்ற ஆண்டவனைக் கையால்தொழுது சன்னிதியின்முன்னே சாஷ்டாங்கமாகவிழுந்தார்.—(எ-று) (௬௬௪)

எழுதாதமறையளித்தவெழுத்தறியும்பெருமானைத் .... ..*
தொழுதார்வமுறநிலத்திற்றோய்ந்தெழுந்தேயங்கமெலா ..*
முழுதாயபரவசத்தின்முகிழ்த்தமயிர்க்கான்மூழ்க .. ....*
விழுதாரைகண்பொழியவிதிர்ப்புற்றுவிம்மினார் . .. .*

(இதன்பொருள்.)

எழுதப்படாதவேதத்தை யருளிச்செய்த அவர் அவர்களுடைய விதியை அறிந்துகொண்டருளும் சுவாமியை ஆசையோடு பூமியில் படிந்து தொழுது எழுந்திருந்து உடம்பெல்லாம் பூர்ணமாகியபரவசத்தோடு குச்செறிந்த மயிர்க்கால்களெல்லாம் மூடும்படியாகக் கண்கள்தாரையாகவிழும்படி நீரைப்பொழியநடுக்கமுற்றுஆனந்தத்தை அடைந்தார்.—(எ-று)(௬௬௫)

வண்டோங்குஞ்செங்கமலமெனவெடுத்துமனமுருகப் ....*
பண்டோய்ந்தசொற்றிருத்தாண்டகம்பாடிப்பரவுவார் ....*
விண்டோய்ந்தபுனற்கங்கைவேணியார்திருவுருவங் ....*
கண்டோங்குகளிசிறப்பக்கைதொழுதுபுறத்தணைந்தார் .. *

(இதன்பொருள்)

(வண்டோங்குஞ்செங்கமலம் என்றெடுத்து) மனதானது உருகும்படி பண்ணோடுகூடியசொல்லால் திருத்தாண்டகப்பதிகத்தைப்பாடி வணங்குகின்றவராய் ஆகாயத்தில்தங்கிய கங்கையினது நீரையுடையசடையினரான பரமசிவனது திருவுருவைத்தரிசனஞ்செய்து சந்தோஷமிகுதியும் உண்டாகக் கையால் தொழுது புறத்தில்வந்தார்.—(எ-று) (௬௬௬)

விளங்குபெருந்திருமுன்றின்மேவுதிருப்பணிசெய்தே ....*
புளங்கொள்திருவிருத்தங்களோங்குதிருக்குறுந்தொகைகள் .*

களங்கொள்திருநேரிசைகள்பலபாடிக்கைதொழுது.. .....*
உளங்கொள்திருப்பதியதனிற்பலநாள்களுறைகின்ருர் .. ..*

(இதன்பொருள்.)

பிரகாசிக்கின்றபெருமைபொருந்திய கோயில்வாசலில் செய்யவேண்டிய திருப்பணிகளைச்செய்து மனங்களிப்புக்கொண்டுவருகின்ற திருவிருத்தங்களும் திருக்குறுந்தொகைகளும் திருநேரிசைகளுமாகிய தேவாரப்பதிகங்களைப்பாடிக் கையால் தொழுது வளமுற்ற அந்தக்ஷேத்திரத்தில் அனேகநாள்வரைக்கும் தங்கினுர்.—(எ-று) (௫௱௯)

அங்குறையுநாளின்கணருகுளவாஞ்சிவாலயங்க.. .. ..*
ளெங்குஞ்சென்றினிதிறைஞ்சியேத்துமவரிறையருளாற் .. *
பொங்குபுனற்றிருவொற்றியூர்தொழுதபோற்றுமையாள் .*
பங்குடையாரமர்ந்ததிருப்பாசூராம்பதியணைந்தார் .... ..*

(இதன்பொருள்)

அவ்விடத்தில்வாசஞ்செய்கின்றநாளில் பக்கத்திலுள்ள சிவாலயங்களுக்கெல்லாம் போய்வணங்கி இனிதாகஸ்தோத்திரஞ்செய்கின்ற அப்பர்சுவாமி சுவாமியின்கிருபையால் நிறைந்தபுனலையுடைய திருவொற்றியூரைத்தொழுது அங்குநின்றும்புறப்பட்டுப் பார்வதிதேவியாரைப்பக்கத்திலுடைய ஆண்டவர்வீற்றிருக்கும் திருப்பாசூரென்னும் ஸ்தலத்தை அடைந்தார்—(எ-று)பாசு-மூங்கில். அதைஉடைமையால்பாசூரென்ருயிற்று

திருப்பாசூர்நகரெய்திச்சிந்தையினில்வந்தூறும் ....*
விருப்பார்வமேற்கொள்ளவேயிடங்கொண்டுலகுய்ய .... *
விருப்பாரைப்புரமூன்றுமெரித்தருளவெடுத்ததனிப் .... *
பொருப்பார்வெஞ்சிலையாரைத்தொழுதெழுந்துபோற்றுவார்

(இதன்பொருள்)

திருப்பாசூரென்னும்ஸ்தலத்தை அடைந்து மனதில்மேற்பட்டுண்டாகிய ஆசையானது அதிகமாக மூங்கிலை ஸ்தானமாகக்கொண்டு உலகத்தார் பிழைக்கும்பொருட்டு வீற்றிருக்கின்றவரும்-மூன்றுபுரங்களையும் நாசஞ்செய்ய எடுத்த ஒப்பற்றமகாமேருவாகிய வெவ்விதாகிய வில்லையுடையவருமாகிய சுவாமியைவணங்கி எழுந்து புகழ்வாராயினுர்.—(எ-று) (௫௰௪)

முந்திமூவெயிலெய்தமுதல்வனாரெனவெடுத்துச் ....*
சிந்தைகரைந்துருகுதிருக்குறுந்தொகையுந்தாண்டகமுஞ்..*

சந்தநிறைநேரிசையுமுதலானதமிழ்பாடி ....*
யெந்தையார்திருவருள்பெற்றேகுவார்வாசீசர் ....*

(இதன்பொருள்.)

(முந்திமுவெயிலெய்தமுதல்வனார் என்று) மனதுகளார்ந்து உருக்கம்கொள்வதற்குக்காரணமாகிய திருக்குறுந்தொகை- திருத்தாண்டகம்-சந்தம்பொருந்திய-நேரிசை-இவைமுதலிய பலவகையான தமிழ்ப்பதிகங்களைப்பாடி- எமது ஆண்டவருடைய திருக்கருணையைப் பெற்றுக்கொண்டு செல்வாராயினார் அப்பர்சுவாமி.—(எ-று) (௫௱௪௰)

அம்மலர்சீர்ப்பதியையகன்றயலுளவாம்பதியனைத்தின் ....*
மைம்மருவுங்களத்தாரைவணங்கிமகிழ்வொடும்போற்றி. ., *
மெய்மைநிலைவழுவாதமேன்மைநெறிவிழுக்குடிமைச்....*
செம்மையினார்பழையனூர்திருவாலவனம்பணிந்தார் .... *

(இதன்பொருள்)

விளங்குகின்ற அப்பதியில் நின்றும் நீங்கி அயலிலுள்ள எல்லாஸ்தலங்களிலும்போய் நீலநிறம்பொருந்திய கண்டத்தைஉடையவரை வந்தனஞ்செய்து சந்தோஷத்தோடுபோற்றுதல்செய்து உரிமையாகிய தங்களுடைய நிலையில்நின்றும் தவறாத உண்மையாகிய ஒழுக்கத்தை உடைய சிறப்புப்பொருந்தியகுடியிற் சிறந்தோராகிய வேளாளர்தங்கிய பழையனூர்க்கு அருகிலிருக்கும் திருவாலங்காட்டைப்பணிந்தார்.—(எ-று) மெய்மைநிலைவழுவாமை-எழுபதின்மர் தங்கள் வாக்கின்படிதவறாமல் உயிரைக்கொடுத்ததாம். (௫௱௪௰௧)

திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமெனச்சிறப்பி.... ....*
னொருவாதபெருந்திருத்தாண்டகமுதலாவோங்குதமிழ்ப் ...*
பெருவாய்மைத்தொடைமாலைபலபாடிப்பிறபதியும் .... *
மருவார்வம்பெறவணங்கிவடதிசைமேல்வழிக்கொள்வார் ....*

(இதன்பொருள்.)

(திருவாலங்காடுறையுஞ் செல்வர்தாமென்று) சிறப்பில்நின்று தவறாத பெருமைபொருந்திய திருத்தாண்டகப்பதிகமுதலாக உயர்ந்த தமிழால்செய்யப்பட்ட சிறந்தனவாகிய பல பதிகமாலைகளைப்பாடி மற்றைஸ்தலங்களையும் அழுந்திய அன்போடுவணங்கி வடதிசையைநோக்கி நடப்பாராயினார்.—(எ-று)

பல்பதியுநெடுங்கிரியும்படர்வனமுஞ்சென்றடைவார் ....*
செல்கதிமுன்னளிப்பார்தந்திருக்காரிக்கரைபணிந்து .. ..*

தொல்கலையின்பெருவேந்தர்தொண்டர்கள்பின்னும்பர்சூழா-
மல்குதிருக்காளத்திமாமலைவந்தெய்தினார் ....*

(இதன்பொருள்.)

அனேகம் ஊர்களையும், நெடியமலைகளையும், நெருங்கியிருக்கி
ன்ற வனங்களையும்சென்று கடந்தவராய் மோக்ஷத்தை அடி
யார்களுக்கு விரைவில்கொடுக்கின்ற சுவாமி வீற்றிருக்கும் தி
ருக்காளத்தியென்னும் ஸ்தலத்தைப்பணிந்து அடியார்களு
ம் பின்புதேவர்கூட்டங்களும் நிறைந்திருக்கின்ற திருக்காளத்
திமலைக்குவந்தருளினார்.—(எ-று) தொல்கலையின்பெருவேந்
தர்-அப்பர்சுவாமி. (௱௪௩)

பொன்முகலித்திருநதியின்புனிதநெடுந்தீர்த்தத்தின் ... .. *
முன்மூழ்கிக்காளத்திமொய்வரையின்றாழ்வரையிற் ....*
சென்னியுறப்பணிந்தெழுந்துசெங்கண்விடைத்தனிப்பாகர்*
மன்னுமலைமிசையேறிவலங்கொண்டுவணங்குவார் .... *

(இதன்பொருள்)

பொன்முகலியென்னும் நதியின்பரிசுத்தமாகிய நீரில் முதலில்
மூழ்கி மரங்கள்மொய்த்துக்கொண்டிருக்கின்ற காளத்திமலையி
னது அடிமலையில் தலை பூமியில் அழுந்தும்படிதொழுது சிவந்
தகண்களையுடைய ரிஷபத்தைவாகனமாகக்கொண்ட பரமசிவ
ன்வீற்றிருக்கும் மலையின்மேல் ஏறிவலம்வந்து தெண்டஞ்செ
ய்வாராயினார்.—(எ-று) (௱௪௪)

காதணிவெண்குழையானைக்காளத்திமலைக்கொழுந்தை ....*
வேதமொழிமூலத்தைவிழுந்திறைஞ்சியெழுந்துபெரும் .. *
காதல்புரிமனங்களிப்பக்கண்களிப்பப்பரவசமாய் .... .. *
நாதனையென்கண்ணுள்ளானெனுந்திருத்தாண்டகநவின்றார்*

(இதன்பொருள்.)

காதில்தரித்தவெண்மையாகிய சங்கக்குழையை உடையவரைக்
காளத்தி மலையின் கொழுந்தா யிருக்கின்றவரை வேதங்களாற்
சொல்லப்பட்டமூலமாகியவரைக்கீழேவிழுந்துநமஸ்கரித்துஎ
ழுந்திருந்து பேராசைகொண்டமனமானது களிப்பை அடை
யவும் பார்த்தகண்கள் குளிரவும் பரவசமாய் நாதனையென்க
ண்ணுள்ளானென்கிற திருத்தாண்டகத்தைச்சொல்லத்தொடங்
கினார்.—(எ-று) (௱௪௫)

மலைச்சிகரச்சிகாமணியின்மருங்குறமுன்னேநிற்குஞ் .... *
சிலைத்தடக்கைக்கண்ணப்பர்திருப்பாதஞ்சேர்ந்திறைஞ்சி ..*

யலைத்துவிழுங்கண்ணருவியாகத்துப்பாய்த்திழியத்.... ...*
தலைக்குவித்தகையினராய்த்தாழ்ந்துபுறம்போந்தனைந்தார்*

(இதன்பொருள்)

மலையின் உச்சியில் வீற்றிருக்கும் குடுமித்தேவருடைய சமீபத்தில் எதிரேநின்று வில்லைப் பெரியகையில் தாங்கிக்கொண்டிருக்கின்ற கண்ணப்பசுவாமி திருவுருவின் அழகியபாதத்தைச் சேர்ந்துவணங்கி அலையாகப் பொங்கிவிழுகின்ற கண்ணீரருவியானது தேகத்தில்விசையாகப்பாய்ந்து இறங்கத் தலையிலகுவித்தகையை உடையவராய்ப்பின்பும் நமஸ்காரஞ்செய்து அவ்விடம்விட்டுப்புறத்தில்வந்தார்.—(எ-று) (௩௬௬)

சேணிலவுதிருமலையிற்றிருப்பணியாயினசெய்து.... .... *
தாணுவினையம்மலைமேற்றாள்பணிந்தகுறிப்பினாற் .... .. *
பேணுதிருக்கயிலைமலைவீற்றிருந்தபெருங்கோலங் .. . .. *
காணுமதுகாதலித்தார்கலைவாய்மைக்காவலனார் .... *

(இதன்பொருள்)

தூரத்தேதோன்றுகின்ற திருக்காளத்திமலையில்செய்யவேண்டிய திருப்பணிகளைச்செய்து பரமசிவனை அந்தமலையின்மேல் வந்தனஞ்செய்தபோது தோல்றிய திருக்கோலத்தோடு எல்லாராலும்விரும்பப்பட்ட திருக்கயிலாசகிரியில் வீற்றிருக்கின்றஒப்பற்றதிருக்கோலத்தை தக்காணவேண்டுமென்றுவிருப்பங்கொண்டார்அப்பர்சுவாமிகள்(எ-று) (௩௬௭)

(வேறு.)

அங்கண்மாமலைமேன்மருந்தைவணங்கியாரருளான்மிகப் .. *
பொங்குகாதலினுத்தரத்திசைமேல்விருப்பொடுபோதுவார்*
துங்கமால்வரைகானியாறுதொடர்ந்தநாடுகடந்தபின் .... *
செங்கண்மால்விடையண்ணல்மேவுதிருப்பருப்பதமெய்தினார்

(இதன்பொருள்)

அழகாகிய இடத்தை உடைய பெருமைபொருந்திய மலையின் மேல் அமிர்தமாயிருக்கின்றவரை வந்தனஞ்செய்து மிகுந்தகிருபையைப்பெற்று வடதிசைக்குப்போகவேண்டுமென்கிற மிக்க ஆசையால் களிகொண்டுபோகின்ற அப்பர்சுவாமி உயர்ந்தபெரியமலைகளும் காட்டாறுகளும் தொடர்ந்திருக்கின்ற நாடுகளைக்கடந்தபின்பு சிவந்தகண்ணையுடைய விஷ்ணுவாகியரிஷபத்தை உரிமையாகக்கொண்ட பரமசிவன் வீற்றிருக்கும் ஸ்ரீசைலத்தை அடைந்தார்.—(எ-று)திருப்பருப்பதம்-ஸ்ரீசைலம்

மானவிஞ்சையர்வானநாடர்கள்வானியக்கர்கள்சித்தர்கள் .. *
கானகின்னரர்பன்னகாதிபர்காமசாரிகளேமுதல் .... *
ஞானமோனிகள்நாளும்நம்பரைவந்திறைஞ்சிநலம்பெறுந் *
தானமானதிருச்சிலம்பைவணங்கிவண்டமிழ்சாற்றினார் ... *

(இதன்பொருள்)

வலிமையை உடைய வித்தியாதரர்களும், தேவர்களும், அழகு பொருந்திய யக்ஷர்களும், சித்தர்களும், இசைபாடுகின்ற கின்னரர்களும், நாகலோகத்தாரும், இவர்களன்றிஎதேச்சைஉடையவர்களாய் நினைத்தஇடங்களுக்கெல்லாம் விரைவிற்போகத்தக்க வல்லமையுள்ளோரும், ஞானத்தைப்பெற்று மவுனங்கொண்டவர்களும்வந்துஎந்நாளும் ஆண்டவனைப்பணிந்து வரங்களைப்பெறும் இடமாகிய ஸ்ரீசைலத்தைத்தொழுது வளம்பொருந்திய தமிழ்ப்பதிகத்தைப்பாடினார் — எ-று) (௩௪௯)

அம்மருங்குகடந்துபோமவரார்கொள்சூலவயிற்படைச்,செம்
மல்வெண்கயிலைப்பொருப்பைநினைந்தெழுந்ததொர் சிந்தை
யா, லெம்மருங்குமொர்காதலின்றியிரண்டுபாலும் வியந்து
ளோர், கைம்மருங்கணையுந்தெலுங்குகடந்துகன்னட மெய்தி
னார் .... *

(இதன்பொருள்)

அந்தஸ்தலத்தினின்றும் நீங்கிச்செல்கின்றவராகிய அப்பர்ஸ்வாமி கூர்மையாகிய மூன்றுகவர்கொண்ட சூலாயுதத்தையேந்திய பரமசிவன் எழுந்தருளியிருக்கும் வெள்ளிய கயிலாயமலையைநினைத்து உறுதிகொண்டமனதோடு அதுதவிர மற்றைஎந்தஸ்தலத்திலும் ஆசைவையாமல் இரண்டுபுறத்திலும் பார்த்து வியப்பை அடைந்தவர்கள் சமீபத்தில்வரும்படி தெலுங்கதேசத்தைத்தாண்டிக் கன்னடதேசத்தை அடைந்தார், (எ-று)

கருநடங்கழிவாகவெய்தியபின்கலந்தவனங்களுந் .... *
திருநதித்துறையாவையும்பயில்சேணெறிக்கிரிவட்டையும் .. *
பெருநலங்கிளர்நாடுமெண்ணிலகழிந்தடச்செறிபொற்பினால் *
வருதடங்கிரிகோடுசோலையமாளவத்தினைநண்ணினார் ... *

(இதன்பொருள்.)

கன்னடதேசம் நீங்கும்படி போனபிற்பாடு நெருங்கியிருக்கின்ற பலவனங்களையும் அனேகநதிகளையும் தூரத்தேதோன்றுகின்ற மலைகளின் ஏற்றத்தையும் இறக்கத்தையும் பெருமைபொருந்திய செழிப்பை உடைய பலதேசங்களையும் தாண்டி-

றெடுந்தூரம் உயரத்தில்வருகின்ற சூரியன் நேராகவரமாட்டாமல் கோலிவருகின்ற அழகுபொருந்திய சோலைசூழ்ந்தமாளவதேசத்தை அடைந்தார்.—(எ-று) (௩௫௧)

அங்குநூற்றியகன்றுபோகியருஞ்சுரங்கள்கடந்துசென் ... *
றெங்குமிக்கவறங்கணீடுமிலாடபூமிகடந்துபோய் .... *
மங்குல்சுற்றியவெற்பினோடுவனங்களாறுகடந்தயற் .... *
பங்கயப்பழனத்துமத்தியதேசத்தினையெய்தினார் .... . *

(இதன்பொருள்)

அந்தத்தேசத்தையுந்தாண்டி அதன்பின்பு வெகுதூரம்போய் அரியகாடுகளைக்கடந்து எவ்விடத்திலும் தருமங்கள் மிகுந்து நடக்கின்ற இலாடபூமியைத்தாண்டிப்போய் மேகங்கள் தவழ்கின்ற மலைகளோடு வனங்களையும் ஆறுகளையும்தொலைத்துப் பக்கத்தில் தாமரைபடர்ந்த வயல்சூழ்ந்த மத்தியதேசத்தை அடைந்தார்.—(எ-று) (௩௫௨)

அன்னநாடுகடந்துகங்கையணைந்துசென்றுவலங்கொளும் .. *
மின்னுவேணியர்வாரணாசிவிருப்பினோடுபணிந்துடன் .... *
பின்னணைந்தவர்தம்மையங்கொழிந்துகங்கைகடந்துபோய்,
மன்னுகாதல்செய்நாவின்மன்னவர்வந்துகற்சுரமுற்றினார் .. *

(இதன்பொருள்.)

அந்தநாட்டைக்கடந்து கங்காநதிவலமாகவந்துபோகின்ற-பிரகாசிக்கும் சடையை உடைய பரமசிவன் இருப்பிடமாகிய காசியை அன்போடுபணிந்து உடனே கூடவந்தவர்களை அவ்விடத்திலேயேவிட்டுக்கங்கையைத்தாண்டி நிலைபெற்ற ஆசையை உடைய அப்பர்சுவாமி கல்வழியை அடைந்தார்.—(எ-று)

மாகமீதுவளர்ந்தகானகமாகியெங்குமனித்தரார் ....*
போகலாநெறியன்றியும்புரிகின்றகாதல்பொலிந்தெழச் .... *
சாகமூலபலங்கள்துய்ப்பதுவுந்தவிர்ந்துதனித்துநே .... *
ரேகினாரிரவும்பெருங்கயிலைக்குலக்கிரியெய்துவார்... ....*

(இதன்பொருள்.)

ஆகாயவரையில் வளர்ந்திருக்கின்ற மரங்களையுடைய காடுகள் எங்கும் நிறைந்து மனிதர்களால்போகக்கூடாதவழியை உடைய இடங்களை அடைந்து தாங்கொண்ட ஆசையானது அதிகமாக இலை கிழங்கு பழங்கள் சாப்பிடுகிறதையும் ஒழித்து ஒன்,

தியாய் நேராகவே இராவும்பகலும் நடந்தார் பெருமைபொருந்திய கயிலாசகிரியை அடைய விருப்பங்கொண்ட அப்பர் சுவாமி.—(எ-று) (௩௫௪)

ஆயவாயிருளின்கணேகுமவ்வன்பர்தம்மையணைந்துமுன் ..*
தீயவாயவிலங்குவன்றொழில்செய்யவஞ்சினநஞ்சுகால.....*
வாயநாகமணிப்பணங்கொள்விளக்கெடுத்தனவந்துகா. ..*
ரேயவானவராயினுந்தனிதுன்னருஞ்சுரமுன்னினர்......*

(இதன்பொருள்.)

அந்தப்பிரகாரம் இராக்காலத்திலும் போய்க்கொண்டிருக்கும் அந்த அடியாரைக்கொடுமையைச்செய்கின்ற புலிமுதலான மிருகங்கள் சமீபத்தில்வந்தாலும் ஒரு இடையூறும்செய்யாமல் பயப்பட்டுப்போயின - விஷங்களேக்கக்குகின்ற வாயை உடைய பாம்புகள் படங்களில்பெற்றிருக்கின்ற ரத்நங்களால் விளக்குக்காட்டின - கால்கீழ்பட்டால் தேவர்களாயிருந்தாலும்சகிக்கக்கூடாமையாய்ப் போகிறதற் கரியக்கூடாத கானகத்தை அடைந்தார்.—(எ-று) (௩௫௫)

வெங்கதிர்ப்பகலக்கடத்திடைவெய்யவன்கதிர்கைபரந் ....*
தெங்குமிக்கபிளப்பில்நாகர்தமெல்லைபுக்கெரிகின்றன ... *
பொங்கழற்றெறுபாலைவெளிழல்புக்கசூழல்புகும்பகற்,செங்கதிர்க்கனல்போதுமத்திசை திண்மைமெய்த்தவர் நண்ணினர்*

(இதன்பொருள்.)

அந்தக்காட்டில் வெவ்விய உஷ்ணத்தைக்கொடுக்கின்ற பகற்காலத்தில் சூரியனுடைய கிரணங்கள் மிகுதியாகப்பரவுதலால் எவ்விடத்திலும் வெடித்தபிளப்பின்வழியாக நாகலோகத்திலும் அவைகள்போய்ச்சுடுகின்றன-அக்கினிமயமாகிய பாலைநிலத்தில் உள்ள வேலமரத்தினிழலைஉடைய இடமானது பகற்காலத்தில் சூரியனுடைய வெம்மையாகியகிரணங்கள்குடியிருந்தபோலும்-அப்படிப்பட்ட திசையில் வலிபொருந்திய மெய்மையாகியதவத்தை உடைய அப்பர்சுவாமிபோயினர். எ-று) வெற்றிழலெென்றும்பாடம். (௩௫௬)

இங்ஙனம்மிரவும்பகற்பொழுதும்மருஞ்சுரமெய்துவார் .... *
பங்கயம்புனைதாள்பரட்டளவும்பசைத்தசைதேயவு ... ..*
மங்கைபாகர்தம்வெள்ளிமால்வரைவைத்தசிந்தைமறப்பரோ.
தங்கரங்களிரண்டுமேகொடுதாவியேகுதன்மேவினர் ....*

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் இராக்காலமும் பகற்காலமும் அரிதாகிய கொடுவழியிற்செல்கின்றஅப்பர்சுவாமி தாமரைமலருக்கொப்பாகியபாதங்கள் பரடுவரைக்கும்பிளவுகொண்டு அதன்மாமிசந் தேய்ந்துபோயும் பார்வதிபாகராகியசுவாமிவீற்றிருக்கும் பெருமைபொருந்தியகயிலாசகிரியில்வைத்த எண்ணத்தைமறக்காதவராய்த்தம்முடையஇரண்டுகைகளையுமேஆதாரவாகக்கொண்டுதாவிப்போகவிரும்பினார் அப்பர்சுவாமி.—(எ-று) (ருடுஎ)

கைகளும்மணிபந்தசைந்துறவேகரைந்துசிதைந்தபின் .... *
மெய்கலந்தெழுசிந்தையன்பின்விருப்புமீமிசைபொங்கிட. *
மொய்கடுங்கனல்வெம்பரற்புகையெழுமத்தமுயங்கியே .. *
மைகொள்கண்டர்தமன்பர்செல்லவருந்தியுந்தினர்மார்பினால் *

(இதன்பொருள்.)

இரண்டுகைகளும் மணிக்கட்டு அசைந்துபோய் மிகவும் சிதைந்து சிறுகிப்போனபின்பு மனதில்தோன்றிய அன்பின் உறுதியானது வரவர அதிகப்பட்டு உடலமெல்லாம்பரவத்திரளாகிய கொடியநெருப்பையொப்ப வெவ்விதாகிய பருக்கைக்கற்கள் அழன்று புகையெழும்புகின்றமார்க்கத்தில் அடைந்து விஷம் பொருந்தியகண்டத்தையுடைய பரமசிவனுடைய அன்பரானவர் போவதற்குவருத்தப்பட்டு மார்பினால் நகர்ந்துபோயினார். (எ-று) (ருடுஅ)

மார்பமுந்தசைநைந்துசிந்திவரிந்தவென்புமுறிந்திட .... *
நேர்வருங்குறைநின்றசிந்தையில்நேசமீசனைநேருநீ .... *
டார்வமங்குயிர்கொண்டுகைக்குமுடம்படங்கவுமுன்கொடச் *
சேர்வரும்பழுவம்புரண்டுபுரண்டுசென்றனர்செம்மையோர். *

(இதன்பொருள்)

மார்பும் சதைநைந்துபோய் இற்றுவிழ வரிவரியாயிருக்கின்ற எலும்புகளும்முறியக் குறையுற்றுநின்றமனதில் அன்புண்டாகச் சுவாமியைத் தியானித்து உயிரைமாத்திரம் உடையவராய்ச் செலுத்துகின்ற தம்முடைய உடம்பு முழுவதையுங்கொண்டு சேர்வதற்கு அருமையாகிய காட்டில் புரண்டுபுரண்டு போயினார் செம்மையை உடைய அப்பர்சுவாமி.—(எ-று) (ருடுக)

அப்புறம்புரள்கின்றநீளிடையங்கமெங்குமறைந்திடச் .... *
செப்பருங்கயிலைச்சிலம்படிசிந்தைசென்றுறுமாற்றலால்... *

மெய்ப்புறத்திலுறுப்பழிந்தபின்மெல்லவுந்துமுயற்சியுந் ..*
தப்புறச்செயலின்றியந்நெறிதங்கினார்தமிழாளியார்.... ..*

(இதன்பொருள்)

அப்புறம்புரண்டுகொண்டு போகின்றமார்க்கத்தில் தேகமுழுதும் அரையச்சொல்வதற்கரிய கயிலாசமலையினிடத்தில்-காண வேண்டுமென்று மனம் ஊன்றியிருக்கும் உறுதியால் தேகத்திலுள்ள அவயவங்களெல்லாம் சிதைந்தபின்பு மெள்ளநகரும்படிப்பிரயத்தினப்பட்டுக்கூடாமற்போகவுந்தொழிலுமில்லாமல் அந்தவழியிலேதானே அப்பர்சுவாமி கிடந்தகிடையானார்.—(எ-று) (௫௱௬௰).

(வேறு.)

அன்னதன்மையாக்கயிலையணைவதற்கருளார் .... *
மன்னுதீந்தமிழ்புவியின்மேற்பின்னையும்வழுத்த.... ....*
தன்னெடும்புனற்றடமுமொன்றுடன்கொடுநடந்தார் .. ..*
பன்னகம்புனைபரமரோர்முனிவராம்படியால் ....*

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட தன்மையோடு கயிலாசத்தை அடைவதற்குக் கிருபைசெய்யாதவராய் நிலைபெற்ற தித்திப்பாகியதமிழால்பூமியின்மேல் பின்பும் தம்மையேஸ்தோத்திரம்பண்ண நல்லநீரை உடைய நெடிய ஒருதடாகத்தை அவ்விடத்தில் உண்டாக்கிப்பாம்பைத்தரித்தபரமசிவன் ஒருமுனிவருடைய உருவத்தைக்கொண்டு நடந்தருளினார்.—(எ-று) (௫௱௬௰௧)

வந்துமற்றவர்மருங்குறவணைந்துநேர்நின்று............*
நொந்துநோக்கிமற்றவரெதிர்நோக்கிடநுவல்வார் .... ..*
சிந்தையிவ்வுறுப்பழிந்திடவருந்தியதிறத்தா............*
லெந்தவெங்கடத்தெய்தியதென்னெனவிசைத்தார் .... .. *

(இதன்பொருள்.)

பிராமணவேஷங்கொண்ட பரமசிவனானவர் அப்பர்சுவாமியின் சமீபத்தில் வந்து எதிராகநின்றுகொண்டு இரக்கத்தோடு பார்த்து அவர் எதிராகப்பார்க்கும்போது சுவாமியானவர் இப்படிஉம்முடைய அங்கங்களெல்லாம் அழிந்துபோகமனவருத்தத்தோடு இந்தக்கொடியகாட்டில்என்னகாரியத்துக்குவந்தீரென்றுகேட்டார்—(எ-று) (௫௱௬௰௨).

மாசிலவற்கலையாடையமார்பின்முந்நூலுந்... ...*
தேசுடைச்சடைமவுலியுந்நீறுமெய்திகழ..... .. *

வாசின்மெய்த்தவராகிநின்றவர்தமைநோக்கிப்...*
பேசவுற்றதோருணர்வுறவிளம்புவார்பெரியோர் *

(இதன்பொருள்.)

குற்றமற்ற மாவுரியாகியவஸ்திரமும் மார்பினிடத்தில் பூணூலும் தேயசுபொருந்திய சடையை உடையசிரசும் திருமேனியில் விபூதியும்பிரகாசிக்க-குற்றமற்றமெய்ம்மைபொருந்தியதவவேடங்கொண்டவராய்நின்றசுவாமியைப்பார்த்துப்பேசும்படியாகத் தெளிவுகொண்டு சொல்கின்றார் அப்பர்சுவாமி.—(எ-று)

...வண்டுலாங்குழல்மலைமகளுடன்வடகயிலை ....*
..யண்டர்நாயகனிருக்குமப்பரிசவரடியேன் ....*
.. கண்டுகும்பிடவிருப்பொடுங்காதலினடைந்தேன்*
கொண்டவென்குறிப்பிதுமுனியேயெனக்கூற..*

(இதன்பொருள்)

வண்டுகள் உலாவுகின்ற கூந்தலை உடைய பார்வதியாரோடுவடக்கிலுள்ளகயிலாசத்தில் தேவர்களுக்கு நாயகராகிய பரமசிவன் வீற்றிருக்கும் திருக்கோலத்தை அவர்க்கு அடியேனாகியயான் தரிசனஞ்செய்து கும்பிடும்படி விருப்பத்தோடு அடைந்தேன் - முனிவரே அடியேன் கருதத்திற்கொண்ட குறிப்பு இதுதானென்றுசொல்ல.—(எ-று) (௩௬௪)

கயிலைமால்வரையாவதுகாசினிமருங்கு.. .. ..*
பயிலுமானிடப்பான்மையோரடைவதற்கெளிதோ .... ..*
யயில்கொள்வேற்படையமரருமணுகுதற்கரிதால்.........*
வெயில்கொள்வெஞ்சுரத்தென்செய்தீர்வந்தெனவிளம்பி...*

(இதன்பொருள்.)

பெருமைபொருந்திய கயிலாசகிரியானது பூமியில் வாழ்கின்ற மானிடத்தன்மையை உடையவர்கள் அடைகிறதற்கு எளிதாகுமோ-கூர்மைபொருந்திய வேலாயுதத்தை உடைய தேவர்களும் அடைகிறதற்கு அரிதாயிருக்கின்றது- உஷ்ணத்தை உடைய வெவ்விய பாலைவழியில்வந்து என்னகாரியஞ் செய்தீரென்றுசொல்லி.—(எ-று) (௩௬௫)

மீளுமத்தனையுமக்கினிக்கடனெனவிளங்குந் ..*
தோளுமாகமுந்துவளுமுந்நூல்முனிசொல்ல ---*
வாளுநாயகன்கயிலையிலிருக்கைகண்டல்லால் ..*
மாளுமிவ்வுடல்கொண்டுமீளேனெனமறுத்தார். *

(இதன்பொருள்.)

திரும்பிப்போவதே யுமக்குநல்லதென்று தோளிலும்தேகத்திலும்விளங்கித் துவள்கின்ற பூணூலத்தரித்த முனியானவர் சொல்ல அதற்கு அப்பர்சுவாமி ஆண்டவராகியபரமசிவன் கயிலையில் வீற்றிருக்கும் காட்சியைப்பார்த்தல்லாமல் வீணாக இறந்துபோகும் இந்த உடலத்தைக்கொண்டு திரும்பேனென்று மறுத்துவிட்டார்.—(எ-று) (ருசுய)

ஆங்குமற்றவர் துணிவறிந்தவர் தமையறிய.... .... *
நீங்குமாதவர் விசும்பிடைக்கரந்துநீண்மொழியா.... .... *
லோங்குநாவினுக்கரசனேயெழுந்திரொன்றுரைப்பத்.... *
தீங்குநீக்கியயாக்கைகொண்டெழுந்தொளிதிகழ்வார்.... *

(இதன்பொருள்.)

அவ்விடத்தில் அப்பர்சுவாமி கொண்ட துணிவைத் திருவுள்ளத்தில்கொண்டு அவர் தம்மைச்சுவாமியென்று அறிந்துகொள்ள அவ்விடம்விட்டுநீங்கிய மகத்தாகியதவவேடங்கொண்டவர் ஆகாயத்தில் ஒளித்து சிறந்த ஓசையோடுகூடியவார்த்தையால் உயர்ந்ததிருநாவுக்கரசேயெழுந்திரொன்றுசொல்லஅப்போதுஇருந்த உறுப்புகளழிந்த அங்கத்தோடில்லாமல் முன்னிருந்ததேகத்தோடே யெழுந்திருந்து பிரகாசித்தார்.—(எ-று) (ருசுஎ)

அண்ணலேயெனையாண்டுகொண்டருளியவமுதே.... .... *
விண்ணிலேமறைந்தருள்புரிவேதநாயகனே.... .... *
கண்ணினுற்றிருக்கயிலையிலிருந்தநின்கோலம்.... .... *
நண்ணிநான்றொழநயத்தருள்புரியெனப்பணிந்தார்.... *

(இதன்பொருள்.)

பெருமைபொருந்தியவரோ, அடியேனை ஆட்கொண்டருள்செய்த அமுதமாகியவரோ, ஆகாயத்தில்மறைந்துநின்றுகிருபைபுரிகின்ற வேதங்களைக் கட்டளையிட்டதலைவரோ, என்னிரண்டுகண்களாலேயும் திருக்கயிலாசத்தில் நீர்வீற்றிருக்கின்றநல்லதிருக்கோலத்தைப்பார்த்து அடியேன் தொழும்படியாக இரங்கியருள்செய்யவேண்டுமென்று பணிந்தார்.—(எ-று) (ருசுஅ)

தொழுதெழுந்தநற்றொண்டரைநோக்கிவிண்டலத்தி.... *
லெழுபெருந்திருவாக்கினாலிறைவரிப்பொய்கை.... .... *
முழுகிநம்மைநீகயிலையிலிருந்தவம்முறைமை.... .... *
பழுதில்சீர்த்திருவையாற்றிற்காணெனப்பணித்தார் .... *

(இதன்பொருள்)

இப்படி வந்தனஞ்செய்து எழுந்திருந்த நன்மைபொருந்திய அடியவரைப்பரமசிவன் ஆகாயத்தில்நின்று எழுந்தபெருமை பொருந்திய திருவாக்கினால் இத்தத்தடாகத்தில் நீமுழுகி நம் மைக் கயிலாசத்திலிவீற்றிருந்தபடி குற்றமற்றசிறப்பை உடை ய திருவையாற்றில் காணென்றுகட்டளையிட்டருளினார். (எ-று)

எற்றினாரருள்தலைமிசைக்கொண்டெழுந்திறைஞ்சி ... .*
வேற்றுமாகிவிண்ணாகிநின்றார்மொழிவிரும்பி ... . *
யாற்றல்பெற்றவரண்ணலாரஞ்செழுத்தோதிப் ... .*
பாற்றடம்புனற்பொய்கையின் மூழ்கினார்பணியால்..... ....*

(இதன்பொருள்.)

ரிஷபத்தை வாகனமாகவுடைய பரமசிவனுடைய கிருபையுற்ற திருவாக்கைச் சிரசின்மேலேற்றுக்கொண்டு ஆகாயமாகியும் அது ஒழிந்த மற்றப் பிரதிவு அப்பு தேயு வாயு வாகியும் நின்ற ஆண்டவருடைய கட்டளையின்படி செய்யவிரும்பி வலிபெற்ற வராகிய அப்பர்சுவாமி சுவாமியையவிஷயமாகஉடைய பஞ்சா ட்சரிமந்திரத்தை உச்சரித்துப் பக்கத்தில் இருக்கின்ற விசால மாகிய பொய்கையில் ஸ்நானஞ்செய்தார் அன்போடு. (எ-று)

ஆதிதேவர்தந்திருவருட்பெருமையாரறிந்தார்............*
போதமாதவர்பனிமலர்ப்பொய்கையின் மூழ்கி ....*
மாதொர்பாகனார்மகிழ்திருவையாற்றிலோர்வாவி........ ....*
மீதுதோன்றிவந்தெழுந்தனருலகெலாம்வியப்ப.... ....*

(இதன்பொருள்)

தேவர்களுக்கெல்லா முதல்வராகிய பரமசிவனுடைய திருவரு ளின்பெருமையை யாவர்தாம் அறிந்தவர்கள் ஞானத்தையுடை யமகத்தாகியதவமுற்ற அப்பர்சுவாமி குளிர்ச்சிபொருந்திய பு ஷ்பங்களையுடைய பொய்கையில் ஸ்தானஞ்செய்து பார்வதி யை இடப்பாகத்திலுடையவர் சந்தோஷமுற்று வீற்றிருக்கும் திருவையாற்றி லிருக்கின்ற ஒருகுளத்திலிருந்து எழுந்துமே லேவந்தார்உலகத்தாரெல்லாம்ஆச்சரியப்படும்படி.—(எ-று)

வம்புலாமலர்வாவியின்கரையின்வந்தேறி...... .. ....*
யும்பர்நாயகர்திருவருட்பெருமையையுணர்ந்தா ....*
ரெம்பிரான்றருங்கருணைபோலிதுவெனவிருகண் ....*
பம்புதாரைநீர்வாவியிற்படிந்தெழும்படியார்.......... ...*

(இதன்பொருள்.)

மணங்கொண்ட புட்பங்களையுடைய குளத்தின்கரையில்எறிந்து தேவர்பிரானாகிய பரமசிவனுடைய திருவருளின் பெருமையை அறிந்தவராகி இப்படி எனக்குநேரிட்டது எமது ஆண்டவருடைய திருவுள்ளம்போலும் என்று இரண்டு கண்களிலும் இருந்து விழுகின்ற தாரையாய்விழுகின்ற நீர்த்தடாகத்தில் மறுபடியுமுழுகின தன்மையையுடையவராய்.(எ-று) ௯௭௨

மிடையுநீள்கொடிவீதிகள்விளங்கியவையா .... *
றுடையநாயகர்சேவடிபணியவந்துறுவா .... *
ரடையவப்பதிநிற்பவுஞ்சரிப்பவுமான .... *
புடையமர்ந்ததந்துணையொடும்பொலிவனகண்டார் ..... *

(இதன்பொருள்.)

நீண்டகொடிகளை நெருக்கக்கட்டியிருக்கின்ற வீதிகளால் பிரகாசிக்கின்ற திருவையாற்றில் எழுந்தருளியிருக்கின்ற பரமசிவனது செவ்வியதிருப்பாதங்களைப் பணியும்பொருட்டு வருகின்றவர் அந்நகரில் உள்ளஸ்தாவரமாகிய மரங்கள்முதலானவைகளும் அசையும்பொருள்களாயின-பக்கத்தில்தங்கிய துணையாகிய பார்வதியாரோடுபரமசிவன் விளக்கமாகத் தோன்றுவதைப் பார்த்தார்.—(எ-று) (௯௭௩)

பொன்மலைக்கொடியுடனமர்வெள்ளியம்பொருப்பிற் .... *
றன்மையாம்படிசத்தியுஞ்சிவமுமாஞ்சரிதைப் .... *
பன்மையோனிகளாவையும்பயில்வனபணிந்தே .... *
மன்னுமாதவர்தம்பிரான்கோயில்முன்வந்தார் .... *

(இதன்பொருள்.)

பொன்மயமாகிய இமயமலையின் மகளாராகிய கொடிபோன்றபார்வதியாரோடு கைலாசகிரியில் பலவகைப்பட்ட சீவராசிகளையும் படைக்கும்பொருட்டுச் சத்தியுஞ்சிவமுமாயிருக்குந் திருக்காட்சியைத்தரிசித்துப் பணிந்து நிலைபெற்றமகத்தாகிய தவத்தை உடைய அப்பர்சுவாமி பரமசிவனுடைய கோயிலுக்கு முன்னேவந்தார்.—(எ-று) (௯௭௪)

காணுமப்பெருங்கோயிலுங்கயிலைமால்வரையாய்ப் ...... *
பேணு மாலயனிந்திரன்முதற்பெருந்தேவர் .... *
பூணுமன்பொடுபோற்றிசைத்தெழுமொலிபொங்கத் .... *
தாணுமாமறையாவையுந்தனித்தனிமுழங்க .... *

திருநாவுக்கரசுநாயனார்- உட்சரங்

(இதன்பொருள்)

திருவையாற்றில் காணப்பட்டிருக்குங் கோயிலும், பெருமை பொருந்திய கயிலாசகிரிபோலத்தோன்றித் தரிசனஞ்செய்ய விரும்புகின்றவிஷ்ணுபிரமன்தேவேந்திரன்முதலாகிய பெரிய தேவர்கள்நிறைந்த அன்புடனே தோத்திரஞ்செய்யுங் கோஷ மானது எவ்விடத்திலும் நிறைய-நிலையாயிருக்கின்ற மகிமை பொருந்திய வேதங்களெல்லாந்தனித்தனியாகமுழங்க.(எ-று)

தேவர்தானவர்சித்தர்விச்சாதரரியக்கர் ....*
மேவுமாதவர்முனிவர்கள்புடையெலாமிடையக் ....*
காவிவாள்விழியரம்பையர்கானமுமுழவுந் ....*
தாவிலேழ்கடன்முழக்கினும்பெருகொலிதழைப்ப ... ...*

(இதன்பொருள்.)

தேவர்கள்-அசுரர்கள்-சித்தர்கள்-வித்தியாதரர்கள்-யக்ஷர்கள்-நிலைபெற்ற தவத்தையுடையவர்கள் முனிவர்கள் பக்கங்களெங்கும் நெருங்கிச் சூழ்ந்துவர - நீலோற்பலமலர்போன்று ஒளி பொருந்தியகண்களையுடைய அரம்பையர்கள்பாடுகின்ற சங்கீதமும்மத்தளமுதலாகியவாத்தியங்களும் கெடுதலில்லாத எழு சமுத்திரங்களின் முழக்கத்தைப்பார்க்கிலும் அதிகமாய்முழங்கவும்.—(எ-று) (௩௭)

கங்கையேமுதற்றீர்த்தமாங்கடவுண்மாநதிகள் . ...*
மங்கலம்பொலிபுனற்பெருந்தடங்கொடுவணங்க.... .....*
வெங்குநீடியபெருங்கணநாதர்களிறைஞ்சப் ....*
பொங்கியங்களாற்பூதவேதாளங்கள்போற்ற ....*

(இதன்பொருள்)

தீர்த்தங்களென்று சொல்லப்பட்ட கங்கைமுதலாகிய தெய்வீகம்பொருந்திய பெரியநதிகளும், மங்களம்பொருந்திய ஜலத்தையுடையபெரியதடாகங்களுமுருவங்கொண்டு வணங்கவும், எங்குநிறைந்தபெரியகணநாதர்கள்தொழவும், மிகுந்தவாத்தியங்களோடுபூதவேதாளங்கள்ஸ்தோத்திரஞ்செய்யவும்.(எ-று)

அந்தண்வெள்ளிமால்வரையிரண்டாமெனவணைந்தோர் ....*
சிந்தைசெய்திடச்செங்கண்மால்விடையெதிர்நிற்ப .... ..*
முந்தைமாதவப்பயன்பெறுமுதன்மையான்மகிழ்ந்தே .. *
நந்தியெம்பிரானடுவிடையாடிமுன்னணுக ....*

(இதன்பொருள்-)

அழகும் குளிர்ச்சியும்பொருந்திய இரண்டுபெரியவெள்ளிமலைகள் நிற்கின்றனவென்றுபார்த்தவர்கள் நினைக்கச்சிவந்தகண்ணையுடைய விஷ்ணுவாகியரிஷபம் எதிரேநிற்கப்பூர்வத்தில்செய்த மகத்தாகியதவத்தின்பேறுகொண்டுபெற்றமுதன்மையினாலே களிகூர்ந்து எமது ஆண்டவராகிய நந்திகேசுரர் பொன்னம்பலத்தில்திருக்கூத்துப்புரிந்த சுவாமியின் முன்னேநிற்கவும்.—
(எ-று) (ருஎஅ)

வெள்ளிவெற்பின்மேன்மரகதக்கொடியுடன்விளங்குந் .....*
தெள்ளுபேரொளிப்பவளவெற்பெனவிடப்பாகங் .... *
கொள்ளுமாமலையாளுடன்கூடிவீற்றிருந்த ... .*
வள்ளலாரைமுன்கண்டனர்வாக்கின்மன்னவனார் ... .*

(இதன்பொருள்)

வெள்ளிமலையின் மேல் ஒருமரகதக்கொடியோடு பிரகாசிக்கின்ற தெள்ளிய பெருமைபொருந்திய ஒளியை உடைய பவளமலைபோல் இடப்பாகத்தில் இருக்கின்ற பார்வதியாரோடுகூடிவீற்றிருக்கின்ற பரமசிவனை நேரேகண்டார் அப்பர்சுவாமி.—
(எ-று) (ருஎகூ)

கண்டவானந்தக்கடலினைக்கண்களான்முகந்து ....*
கொண்டுகைகுவித்தெதிர்விழுந்தெழுந்துமெய்குலைய ... *
வண்டர்முன்புநின்றாடினார்பாடினாரழுதார் .. ..*
தொண்டனார்க்கங்குநிகழ்ந்தனயார்சொலவல்லார் .... ..*

(இதன்பொருள்)

காட்சிப்பட்ட ஆனந்தக்கடலாகிய சுவாமியைக் கண்களாகிய பாத்திரத்தால் முகந்து சாப்பிட்டு இரண்டுகைகளையும் குவித்து எதிராகவிழுந்து எழுந்திருந்து தேகம் நடுக்கத்தை அடையத் தேவர்களுக்குமுன்பாகநின்றுகூத்தாடினார்-பாடினார்-ஆனந்தபாஷ்பஞ்சொரிந்தார்-அடியவராகிய அப்பர்சுவாமிக்கு அவ்விடத்தில் உண்டாகிய தன்மையை யார்சொல்ல வல்லவர்கள்.—(எ-று) (ருஅய)

முன்புகண்டுகொண்டருளினாரமுதன்னமூவா .... *
வன்புபெற்றவரளவிலாவார்வமுன்பொங்கப் .... *
பொன்பிறங்கியசடையனைப்போற்றுந்தாண்டகங்க .. .. *
ளின்பமோங்கிடவேத்தினாரொல்லையில்தவத்தோர் ....*

(இதன்பொருள்)

சுவாமியை எதிரேகண்டுகொண்டவராய்ச்சுவாமியினால்கொண்டுவரப்பட்ட கட்டமுறை உண்ணும்படி கெடாத அன்பைப் பெற்றவரும் அளவில்லாத் தவத்தையுடையவருமாகிய அப்பர் சுவாமி மட்டில்லாத ஆசையை அப்போதேபெற்றுப் பொன்னைப்போல ஒளிவிடுகின்ற சடையை உடைய ஆண்டவரைச் சொல்லப்பட்ட தாண்டகவிருத்தங்களால் இன்பமுண்டாக ஸ்தோத்திரஞ்செய்தார்.—(எ-று) (ருஅக)

ஆயவாறுமற்றவர்மனங்களிப்புறக்கயிலை.............. ...*
மேயநாதர்தந்துணையொடும்வீற்றிருந்தருளித்.. .. ..*
தூயதொண்டருந்தொழுதெதிர்நிற்கவக்கோலஞ் .. .... *
சேயதாக்கினார்திருவையாறமர்ந்தமைதிகழ.... .. ..*

(இதன்பொருள்.)

அவ்விதமாக அப்பர்சுவாமிமனம்சந்தோஷித்தை அடையக்கயிலைமலையில் இருக்கின்ற சுவாமி பார்வதியாரோடு வீற்றிருந்து பரிசுத்தமாகிய அடியாரும்தொழுதுகொண்டு எதிரேநிற்க அப்படிப்பட்ட திருக்கோலமாகத் திருவையாற்றில்வீற்றிருப்பதை எல்லார்க்கும்விளக்கமாக எங்கும்பாவச்செய்தார்.(எ-று)

அய்யர்கோலமங்களித்தகன்றிடவடித்தொண்டர்.... ....*
மைய்யல்கொண்டுளமகிழ்ந்திடவருந்திமற்றங்குச் ....*
செய்யவேணியாருளிதுவோவெனத்தெளிந்து ....*
வையமுய்ந்திடக்கண்டமைபாடுவார்மகிழ்ந்து...........*

(இதன்பொருள்)

பரமசிவன் தமதுதிருக்கோலத்தைக்காண்பித்து அவ்விடத்து நின்றுநீங்கத் திருவடிக்குத்தொண்டராகிய அப்பர்சுவாமி மனமகிழ்ச்சியடைதலால் பரவசங்கொண்டுவருந்திப் பின்பு தெளிவுண்டாய்ச் சிவந்தசடையை உடைய சுவாமியின்கிருபைதானோ இதுவென்று உலகத்தார்பிழைக்கத் தாம் தரிசனஞ்செய்யுந்தோற்றத்தை க்களிப்புற்றுப் பாடுவாராயினார்.—(எ-று)

(வேறு.)

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளோடுமென்னும்.*
கோதறுதண்டமிழ்ச்சொல்லாற்குலவுதிருப்பதிகங்கள் .... *
வேதமுதல்வளையாற்றில்விரவுஞ்சராசரமெல்லாங் .. .... *
காதற்றுணையொடுங்கூடக்கண்டேனெனப்பாடிநின்றார் .. *

(மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான்மகளோடுமென்கிற) குற்றமற்ற இனியதமிழ்ச்சொற்களால் விளக்கமாகிய திருப்பதிகமுதலியவைகளைப்பாடி-வேதத்தை அருளிச்செய்த முதல்வராகிய பரமசிவனது திருவையாற்றில் நெருங்கியிருக்கின்ற சராசரங்களையெல்லாம் பார்வதியாரோடு கண்டேனென்று சிந்தித்துநின்றார்.—(எ-று) (ங-அச)

கண்டுதொழுதுவணங்கிக்கண்ணுதலார்தமைப்போற்றிக் ...*
கொண்டதிருத்தாண்டகங்கள்குறுந்தொகைநேரிசையன்பின்
மண்டுவிருத்தங்கள்பாடிவணங்கித்திருத்தொண்டுசெய்தே..*
யண்டர்பிரான்திருவையாறமர்ந்தனர்நாவுக்கரசர் ....*

(இதன்பொருள்.)

பரமசிவனைத்தரிசித்து வந்தனஞ்செய்து புகழ்ந்து திருத்தாண்டகப்பதிகங்கள்-திருக்குறுந்தொகைகள்-நேரிசைப்பதிகங்கள்-அன்புநிறைந்த விருத்தங்கள் இவைகளைப்பாடி வணங்கித் திருப்பணிவிடைசெய்து தேவர்களுக்குநாதராகிய சுவாமி வீற்றிருக்கும் திருவையாற்றில்தங்கினர் திருநாவுக்கரசுசுவாமி. (எ-று) (ங-அரு)

நீடியபவப்பதிநின்றுநெய்த்தான்மேமுதலாக ....*
மாடுயர்தானம்பணிந்துமழபாடியாரைவணங்கிப் ....*
பாடியசெந்தமிழ்மாலைபகர்ந்துபணிசெய்துபோற்றித் ...*
தேடியமாலுக்கரியார்திருப்பூந்துருத்தியைச்சேர்ந்தார் .. *

(இதன்பொருள்.)

சிறந்த அந்தஸ்தலத்தில் இருந்து திருநெய்த்தான் முதலாகப் பக்கங்களிலிருக்கும் ஸ்தானங்களைப்பணிந்து திருமழபாடியில் எழுந்தருளியிருக்குஞ் சுவாமியைவணங்கிச்செந்தமிழ்ச்சொற்களால் பதிகப்பாடல்களைச்செய்து திருப்பணிசெய்து புகழ்ந்து தேடிய விஷ்ணுவுக்கு அரியவராகிய சுவாமி வீற்றிருக்கும்திருப்பூந்துருத்தியென்னும்ஸ்தலத்தை அடைந்தார்.(எ-று)

சேர்ந்துவிருப்பொடும்புக்குத்திருநடமாளிகைமுன்னர் ... *
சார்ந்துவலங்கொண்டிறைஞ்சித்தம்பெருமான்திருமுன்பு...*
நேர்ந்தபரிவொடுந்தாழ்ந்துநிறைந்தொழியாவன்புபொங்க *
வார்ந்தகண்ணீர்மழைதூங்கவயர்வுறுந்தன்மையரானார்... *

(இதன்பொருள்.)

ஆசையோடுபோய் உள்ளேபுகுந்து திருநடமாளிகைக்குமுன்

றாக அடைந்து வலமாகவந்து கும்பிட்டுத் தமது ஆண்டவரு டைய சன்னிதியில் மிகுந்த அன்போடு கீழேதாழ்ந்து வந்தன ஞ்செய்து நிறைந்துநீங்காதபத்தி அதிகப்படுதலால் ஒழுகாநி ன்றகண்ணீராகிய மழைசொரியத்தம்மைமறக்குந்தன்மையை உடையவரானார்.— எ-று) (ரூஅஎ)

திருப்பூந் துருத்தியமர்ந்தசெஞ்சடையானையானேற்றுப் .. *
பொருப்பூர்ந்தருளும்பிரானைப்பொய்யிலியைக் கண்டேனெ
விருப்புறுதாண்டகத்தொண்டுமேவியகாதல்விளைப்ப [ன்று
விருப்போந்திருவடிக்கீழ்நாமென்னுங்குறுந்தொகைபாடி. *

(இதன்பொருள்.)

திருப்பூந்துருத்தியில் எழுந்தருளியிருக்கும் செவ்விய சடை யை உடையவரும், மலைபோன்றரிஷபத்தை நடத்துகின்றவரு மாகிய சுவாமியைக்குறித்து- பொய்யிலியை பூந்துருத்திகண் டேனென்று மிகுந்த ஆசையுண்டாகச் சேவடிக்கீழ்நாமிருப்ப தென்னுந் திருக்குறுந்தொகையும்பாடி.(எ-று) (ஙஅஅ)

அங்குறையுந்தன்மைவேண்டிநாமடிபோற்றுவதென்று .. *
பொங்குந்தமிழ்ச்சொல்விருத்தம்போற்றியபாடல்புரிந்து *
தங்கித்திருத்தொண்டுசெய்வார்தம்பிரானாருள்பெற்றுச்... *
திங்களுஞாயிறுந்தோயுந்திருமடமங்கொன்றுசெய்தார்.... *

(இதன்பொருள்)

அவ்விடத்தில் வாசஞ்செய்யவிரும்பி நாமடிபோற்றுவதென் று உயர்ந்த தமிழ்ச்சொற்களால் அமைந்தவிருத்தமாகியபாட் டுக்களைச்செய்து அவ்விடத்தில்சிலநாள் இருந்துதிருப்பணிவி டைசெய்வாராகிப் பரமசிவனுடை யகிருபையைப்பெற்றுச் ச ந்திரனும்சூரியனும்தவழ்கின்றதிருமடம் ஒன்றுஅவ்வூரிலகட்டி னார்.— எ-று) (ஙஅக)

பல்வகைத்தாண்டகத்தோடும்பரவுந்தனித்தாண்டகமும் ... *
மல்லலறு பவர்தானத்தடைவுதிருத்தாண்டகமுஞ் .... *
செல்கதிகாட்டிடப்போற்றுந்திருவங்கமாலையுமுள்ளிட் .. *
டெல்லையில்பன்மைத்தொகையுமியம்பினோதியிருந்தார். *

(இதன்பொருள்.)

பலவகையாகிய தாண்டகப்பதிகங்களும் புகழ்கின்ற தனித்தா ண்டகமும் நமக்கு உண்டாயிருக்கின்ற துன்பங்களையொழிப் பாராகிய சுவாமியின் திருப்பதிகளைச் சேர்த்துச்சொல்லியிரு க்கிறதாண்டகப்பதிகமும் மோக்ஷவழியைகாட்டும்படி போற்

றுநின்ற திருவங்கமாலையும் இவைமுதலாக அளவில்லாத பன்மைத்தொகையும்சொல்லி வணங்கி அவ்விடத்தில் இருந்தார். (எ-று) (௲௯௰)

(வேறு.)

பொன்னிவலங்கொண்டதிருப்பூந்துருத்தியிவரிருப்பக் .. *
கன்மனத்துவல்லமணர்தமைவாதிற்கட்டழித்துத் .... *
தென்னவன்கூனிமிர்த்தருளித்திருநீற்றினொளிகண்டு ..... *
மன்னியசீர்ச்சண்பைநகர்மறையவனார்வருகின்றார் .... .. *

(இதன்பொருள்)

காவேரி வலமாகவருகின்ற திருப்பூந்துருத்தியில் இவர்வாசஞ்செய்துகொண்டிருக்கக் கல்மனதைஉடைய வலியசமணர்களை வாதஞ்செய்து நாசமாக்கிப் பாண்டியராசனுடைய முதுகின்கூனை நிமிரச்செய்து அப்பாண்டி நாட்டாரையெல்லாம் திருநீறுதரித்துக்கொள்ளும்படிசெய்து நிலைபெற்றசிறப்பை உடைய சீர்காழித்தலைவராகிய சம்பந்தமூர்த்திசுவாமி வருவாராயினார்.—(எ-று) (௲௯௧)

தீந்தமிழ்நாட்டிடைநின்றுமெழுந்தருளிச்செம்பொன்னி .. *
வாய்த்தவளந்தருநாட்டுவந்தணைந்தார்வாக்கினுக்கு .... .. *
வேந்தரிருந்தமைகேட்டுவிரைந்தவர்பாற்செல்வனெனப் .. *
பூந்துருத்திவளம்பதியின்புறம்பணையில்வந்தணைந்தார் ... .. *

(இதன்பொருள்)

இனிப்பை உடைய தமிழ்வழங்கும் பாண்டிநாட்டில் இருந்து எழுந்தருளிச் செழுமைபொருந்திய காவேரியாற்றினால் வளம்பெற்ற சோழநாட்டில் வந்தடைந்தவராகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி அப்பர்சுவாமி யிருந்ததைக்கேட்டு விரைவாக அவரிடத்துக்குப்போவேனென்று வளம்பொருந்திய திருப்பூந்துருத்தியின் புறத்திற்சூழ்ந்த வயல்களின்சமீபமாகவந்தார்.—(எ-று) (௲௯௨)

சண்பைவருந்தமிழ்விரகரெழுந்தருளத்தாங்கேட்டு .... .. *
மண்பரவும்பெருஞ்சீர்த்திவாகீசர்மனமகிழ்ந்து .... *
கண்பெருகுங்களிகொள்ளக்கண்டிறைஞ்சுங்காதலினு .... *
லெண்பெருகும்விருப்பெய்தவெழுந்தருளியெதிர்சென்றார் *

(இதன்பொருள்)

சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி எழுந்தருளிவந்தாரென்பதைக் கேள்விப்பட்டு உலகத்தார்புகழ்கி

ன்ற பெருமைபொருந்திய கீர்த்தியை உடைய அப்பர்சுவாமி மனங்களிகூர்ந்து கண்கள்நிறைந்த ஆனந்தத்தை அடையக்க ண்டு வணங்கவேண்டுமென்கிற ஆசையினால் எண்ணத்தக்க மி குந்த ஆசையுண்டாகஎழுந்துஎதிர்கொண்டார்.(எ-று)(ருகூரு)

காழியர்கோன்வருமெல்லைகலந்தெய்திக்காதலித்தார் .... *
சூழுமிடைந்திடுநெருக்கிற்காணுமேதொழுதருளி .. .... *
வாழியவர்தமைத்தாங்குமணிமுத்தின்சிவிகையினைத் ......*
தாழ்முடலிதுகொண்டுதாங்குவன்யானெனத்தரித்தார். ...*

(இதன்பொருள்.)

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி வந்துகொண்டிருக்கும் இட த்தை அடைந்து தரிசனஞ்செய்யவிரும்பிய அடியார்கள் நா லுபுறமும் சூழ்ந்திருக்கும் நெருக்கத்தில் காணாமல் சம்பந்த மூர்த்திசுவாமியைத் தொழுது அங்கது ஏறி யெழுந்தருளிய முத்துச்சிவிகையைத் தாழ்வுபொருந்திய இந்தஉடலைக்கொண் டு தாங்குவேனென்று சுமந்தார்.—(எ-று) (ருகூச)

வந்தொருவரறியாமேமறைந்தவடிவொடும்புகலி ....*
யந்தணனாேறியெழுந்தருளிவருமணிமுத்தின் ....'......*
சந்தமணிச்சிவிகையினைத்தாங்குவாருடன்றாங்கிச்..... ..... *
சிந்தைகளிப்புறவருவார்தமையாருந்தெளிந்திலரால் .... *

(இதன்பொருள்.)

ஒருவரும் அறியாமல்வந்து மறைந்த உருவத்தோடும் சீர்கா ழியில் அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி எழுந்தரு ளிவருகின்ற அழகுபொருந்திய முத்துப்பல்லக்கினைச் சுமக்கி றவர்களோடு தாமும்கூடச்சுமந்து மனதுசந்தோஷத்தை அ டையவருகின்றார் அவரையின்னாரென்று யாவரும் அறியாதிரு ந்தார்கள்.—(எ-று) (ருகூரு)

திருஞானமாமுனிவராசிருந்தபூந்துருத்திக்... .. .. *
கருகாகவெழுந்தருளியெக்குற்றாரப்பரொ ... . *
வுருக்கா நின்றம்மடியேனும்மடிகடாங்கிவரும் .... *
பெருவாழ்வுவந்தெய்தப்பெற்றிங்குற்றேனென்றார். .... *

(இதன்பொருள்.)

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி அப்பர்சுவாமி வாசஞ்செய் துகொண்டிருக்கும் திருப்பூந்துருத்தியி னருகாகப்போய் அ ப்பர் எங்கேயிருக்கின்றாரென்றுகேட்க-அன்பினால் உருகினே

ஞானி உமக்கு அடியேனாகிய நான் உமது பாதத்தைத்தாங்கிவ ரும் பெரியவாழ்வுண்டாகப்பெற்று இங்கேதானே யிருக்கின் றேனென்றுசொன்னார்.— எ-று திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமி அப்பரெங்குற்றாரென்று கேட்டருளியதாகவும், அப்ப ர்சுவாமி அடியேன் இங்குற்றேனென்று அதற்கு விடை அருளி யதாகவும் பரம்பரையாக வழங்குகின்றது. (௫௱௬)

பிள்ளையாரதுகேளாப்பெருகுவிரைவுடனிழிந்தே..... ..... *
யுள்ளமிகுபதைப்பெய்தியுடையவரசினைவணங்க .... *
வள்ளலார்வாகீசரவர்வணங்காமுன்வணங்கத் .. .. *
தெள்ளுமான்மறிக்கரத்தார்தொண்டரெலாந்தொழுதார்த்தார்

(இதன்பொருள்.)

திருஞான சம்பந்தமூர்த்திசுவாமி அவ்வார்த்தையைக்கேட்டு மிகுந்தசீக்கிரத்தோடுபல்லக்கிலிருந்திறங்கித்தமக்குரியவராகி ய அப்பர்சுவாமியை வணங்கப் பெருமைபொருந்தியவராகிய அப்பர்சுவாமி காழிப்பிரான்தொழுவதற்குமுன்னேதொழத் துள்ளுகின்றமானேந்தியகையையுடையபரமசிவனது அடியா ர்களெல்லாம்தொழுது கோஷிஞ்செய்தார்கள். (எ-று) (௫௱௭)

கழுமலக்கோன்றிருநாவுக்கரசருடன்கலந்தருளிச் .... *
செழுமதியந்தவழ்சோலைப்பூந்துருத்தித்திருப்பதியின் .. *
மழுவிறெடுமானேந்துதிருக்கரத்தார்மலர்த்தாள்கள் .. ...*
தொழுதருகியின்புற்றுத்துதிசெய்தங்குடனிருந்தார் .. .. *

(இதன்பொருள்.)

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி அப்பர்சுவாமியோடு சேர்ந் து அழகாகிய சந்திரன்தவழ்கின்ற சோலைசூழ்ந்த திருப்பூந் துருத்தியென்னும் ஸ்தலத்தில் மழுவையுமானையும் கையிலேந்தி ய பரமசிவனது புஷ்பம்போன்ற பாதங்களைப்பணிந்து இள கிப் பேரானந்தத்தை அடைந்து ஸ்தோத்திரஞ்செய்து அவ்வி டத்தில் இருவரும்கூடவாசஞ்செய்தார் —(எ-று) (௫௱௮)

வல்லமணர்தமைவாதில்வென்றதுவும்வழுதிபாற் .... *
புல்லியகூனிமிர்த்ததுவுந்தண்பொருந்தப்புனனாட்டி.. .. *
லெல்லையில்லாத்திருநீறுவளர்த்ததுவுமிருந்தவத்தோர் .... *
சொல்லவதுகேட்டுவந்தார் தூயபுகழ்வாகீசர் .. .. *

(இதன்பொருள்.)

கொடியசமணர்களைவாதில் ஜயித்ததும் பாண்டியமகாராசனு

அடைந்திருந்த கூன் நிமிரும்படிசெய்ததும் குளிர்ச்சிபொரு
ந்திய தாமிரபர்ணியை உடையபாண்டிநாட்டில் அளவில்லாத
மகிமையை உடைய விபூதியை எல்லாருந்தரிசதுக்கொள்ளும்
படிசெய்ததவும் பெருமைபெருந்திய தவத்தை உடைய திரு
ஞானசம்பந்தமூர்த்திசுவாமிசொல்லியருளக் கேள்விப்பட்டு
க்களிப்பை அடைந்தார் அப்பர்சுவாமி — ஏ-று) (ஙஙு)

பண்புடையபாண்டிமாதேவியார்தம்பரிவும் .... *
நண்புடையகுலச்சிறையார்பெருமையுஞானத்தலைவ .. .. *
ஒண்பெருகவுரைத்தருளவெல்லையிலசீர்வாகீசர் .. .. .. *
மண்குலவுதமிழ்நாடுகாண்பதற்குமனங்கொண்டார் .. .. *

(இதன்பொருள்)

நல்லகுணத்தை உடைய பாண்டியராசன்மனைவியாராகிய மங்
கையர்க்கரசியாருடைய சிவநேசமும் எல்லாரிடத்திலும் விசு
வாசத்தை உடைய மந்திரியாகிய குலச்சிறைநாயனாருடைய
யோக்கியதையும் ஞானத்துக்கு முதல்வராகிய திருஞானசம்பந்
தமூர்த்திசுவாமி விரித்துச்சொல்ல ஒப்பற்றசிறப்பினையுடைய
அப்பர்சுவாமி பூமியில்சிறந்த செந்தமிழ்வழங்குநாடாகிய பா
ண்டிநாட்டைக்காண்கிறதற்குவிருப்பங்கொண்டார்— ஏ-று)

பிரம்புரத்திருமுனிவர்பெருந்தொண்டைநன்னாட்டி .. .. *
லானுறையுந்தானங்களணைந்திறைஞ்சிப்பாடுவதற் .. ..*
கானுடையதிருநாவுக்கரசருரைசெய்தருளப் .... *
புரமெரித்தார்திருமகனார்பூந்துருத்திதொழுதகன்றார் .... *

(இதன்பொருள்)

சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி பெ
ருமைபொருந்திய தொண்டைநாட்டில் பரமசிவன்வீற்றிருக்
கும் ஸ்தலங்களை அடைந்து வணங்கித் தேவாரம்பாடிச்சாத்து
ம்படி தேவரீர்போகவேண்டுமென்று ஞானவலியையுடைய அ
ப்பர்சுவாமி சொல்லியருள-புரத்தையெரித்த பரமசிவனுக்குக்
குமாரராகிய காழிப்பிரான் திருப்பூந்துருத்தியைத்தொழுது நீ
ங்கினார்.—(ஏ-று) (சாக)

ஆண்டவரசங்கணைர்சீருள்பெற்றப்பதிநின்றும் .. [போய்ச்
பாண்டிநாட் டெழுந்தருளும் பான்மையராய்த் தென்திசை
காண்டலையதிருப்புத்தூர்பணிந்தேத்திக்கதிர்மதியர் .. ... *
தீண்டுகொடிமதில்மதுரைத்திருவாலவாய்சேர்ந்தார் ... ... *

(இதன்பொருள்)

அப்பர்சுவாமி பரமசிவனுடைய கிருபையைப்பெற்றுக்கொண்டு அந்தஸ்தலத்தில்நின்றும்பாண்டிநாட்டுக்குஎழுந்தருளுந்தன்மையை உடையவராய்த் தென்திசையிலேபோய் காணத்தகுதியுள்ள திருப்புத்தூரை வணங்கி ஸ்தோத்திரஞ்செய்து கிரணங்களையுடைய சந்திரன் தீண்டுகின்ற கொடிகள் நாட்டிய மதில்சூழ்ந்த மதுரைக்குப்போயருளினர்.—(எ-று) (௬௨)

சென்றணைந்து மதுரையினிற்றிருந்தியநூற்சங்கத்து ... ... *
ளன்றிருந்துதமிழாராய்ந்தருளியவந்தணர்கோயில் .. .. *
முன்றிலினைவலங்கொண்டுமுன்னிறைஞ்சியுள்புக்கு .. .. *
வன்றனிமால்விடையாரைவணங்கிமகிழ்வொடுந்திளைத்தார். *

(இதன்பொருள்.)

மதுரைக்குப்போய்க் குற்றமற்றகல்வியையுடையசங்கத்தில்வித்துவான்களோடு தாமு மொருவராகவிருந்து தமிழைப் பரிசோதனைசெய்து சந்தேகமுற்றவர்களுக்கு அந்த ஐயத்தைநீக்குகின்ற சொக்கநாதருடையகோயிலின் திருமுற்றத்தை வலஞ்செய்து முன்நின்று வணங்கி உள்ளேபுகுந்து ஒப்பற்ற வலிமையை உடைய விஷ்ணுவாகிய ரிஷபத்தை உடையசுவாமி வந்தனஞ்செய்து ஆனந்தத்தை அடைந்தார்.—(எ-று) (௬௩)

எய்தியபேரானந்தவின்பத்தினிடையழுந்தி ... . *
மொய்திகழுஞ்சடையானைமுளைத்தானையென்றெடுத்துச் .. *
செய்தவத்தோர்தாண்டகச்செந்தமிழ்பாடிப்புறத்தணைவார் *
கைதொழுதுபணிந்தேத்தித்திருவுள்ளங்களிசிறந்தார் .. .. *

(இதன்பொருள்.)

தாம் அடைந்தபேரானந்தவெள்ளத்தில்அழுந்தி-நெருக்கமாய் விளங்குகின்ற சடையை உடைய பரமசிவனை (முளைத்தானை)என்று முதலில் எடுத்து ஒழுங்காகச்செய்கின்ற தவத்தை உடைய அப்பர்சுவாமி திருத்தாண்டகத்தமிழ்ப்பதிகம்பாடி புறத்தில்வருகின்றவராய்க்கையாற்கும்பிட்டுப் புகழ்ந்து மனதில் சந்தோஷநிறைந்தவராகினர் —(எ-று) (௬௪)

சீர்திகழும்பாண்டிமாதேவியார்திருமேனி .... *
சேரவருளுடையதனாற்கூனிமிர்ந்ததென்னவனார் .... *
பார்பரவுங்குலச்சிறையார்வாகீசர்தமைப்பணிவுற் ...... *
றாதிலாக்காதல்மிகவடிபோற்றவங்கிருந்தார் .... *

(இதன்பொருள்.)

சிறப்புப்பொருந்திய மங்கையர்க்கரசியாருடைய திருமேனியைச் சேரும்படி தவத்தைப்பெற்றிருந்தபடியால் கூனல் நிமிர்ந்த பாண்டியராசனும் உலகத்தார் வணங்குகின்றகுலச்சிறையாராகிய மந்திரியும் அப்பர்சுவாமியைப்பணிந்து குறையாத அன்புபெருகிப் பாதங்களைவணங்க அங்கேயேயிருந்தார் —(எ-று) (சாரு)

திருவாலவாயமர்ந்தசெஞ்சடைச்செழும்பொருளை .... *
மருவானேரிசையுந்தாண்டகமுமுதலான .... *
பெருவாய்மைத்தமிழ்பாடிப்பேணுதிருப்பணிசெய்து .. *
மருவார்தம்புரமெரித்தார்பூவணத்தைவந்தடைந்தார் .. ..*

(இதன்பொருள்.)

மதுரையில் வீற்றிருக்கின்றசோதிஸ்வரூபமாயிருக்கின்றவரை-குற்றமற்ற அகப்பொருளாகிய நூலை அருளிச்செய்தவரைக்துதித்து திருநேரிசையும் திருத்தாண்டகமுமுதலாகிய பெருமைபொருந்திய சொற்களையுடைய தமிழைப்பாடி-விருப்பம்பொருந்திய திருப்பணிசெய்து அசுரர்களுடைய திரிபுரத்தை எரித்த பரமசிவனுடைய திருப்பூவணமென்னும் ஸ்தலத்தை அடைந்தார்.—(எ-று) (சாசு)

கொடிமாடநிலவுதிருப்பூவணத்துக்கோயிலினுள் .... *
நெடியானுக்கறிவரியார்நேர்தோன்றக்கண்டிறைஞ்சி ....*
வடிவேறுதிரிசூலத்தாண்டகத்தால்வழுத்திப்போய்ப் .... *
பொடிநீடுதிருமேனிப்புனிதர்பதிபிறபணிவார் .... *

(இதன்பொருள்.)

கொடிகள்கட்டிய மாடங்கள்பிரகாசிக்கின்ற திருப்பூவணத்துக்கோயிலில் விஷ்ணுவுக்கு அரியவராகியபரமசிவன் நேராகக்காட்சிகொடுத்தருளப்பார்த்துவணங்கி (வடிவேறுதிரிசூலம்) என்றுமுதலிலுள்ள தாண்டகப்பதிகத்தால் ஸ்தோத்திரஞ்செய்துபோய்த் திருநீற்றால் விளங்காநின்ற சுவாமியினுடைய மற்றைத்திருப்பதிகளைத்தொழுவாராயினர்.—(எ-று) (சாஎ)

தென்னிலங்கையிராவணன்றன்சிரமீரைந்துந்துணித்த ....*
மன்னவனுமிராமனுக்குவரும்பெரும்பாதகந்தீர்க்கும்.... . *
பின்னுகரைத்தொழுவதற்குநினைந்துப்போய்ப்பெருமகிழ்ச்சி
துன்னிமனங்கரைந்துருகத்தொழுதெழுந்தார்சொல்லரசர்*

(இதன்பொருள்.)

தெற்கின்கண்ணுள்ளதாகிய இலங்கையில்இருந்த இராவணனுடைய பத்துத்தலைகளையும் அறுத்தபடியால் க்ஷத்திரியர்குலத்தில்பிறந்த இராமருக்குவந்த பெரியபாதகத்தைத் தீர்த்தருளியராமநாதனைத்தொழுகிறதற்குநினைவுகொண்டுபோய்ப்பெரிய மகிழ்ச்சியை அடைந்து மனதானது கரைந்துருக-வணங்கியெழுந்தார் அப்பர்சுவாமி.—(எ-று) (சாஅ)

தேவர்தொழுந்தனிமுதலைத்திருவிராமீச்சுரத்து ....*
மேவியசங்கரனையெதிர்நின்றுவிருப்புறுமொழியாற் ....*
பாவுதிருநேரிசைகள்முதலானதமிழ்பாடி ....*
நாவரசர்திருத்தொண்டுநலம்பெருகச்செய்தமர்ந்தார்.....*

(இதன்பொருள்.)

தேவர்களால்தொழப்பட்ட ஒப்பற்றகடவுளாய் இராமேசுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பரமசிவனை அவர்க்கெதிராகநின்று அன்பைக்கொடுக்கின்ற சொற்களால் அமைந்த திருநேரிசைகள்முதலான தமிழ்ப்பதிகங்களைப்பாடித்திருநாவுக்கரசுசுவாமிநன்மையுண்டாகும்பொருட்டுத்திருத்தொண்டுசெய்து அவ்விடத்தில்சிலநாள் வாசஞ்செய்தார்.—(எ-று) (சாகூ)

அங்குறைந்துகண்ணுதலாருள்சூடியகன்றுபோய்ப் .. ...*
பொங்குதமிழ்த்திருநாட்டுப்புறம்பணைசூழ்நெல்வேலி.....*
செங்கண்விடையார்மன்னுந்திருக்கானப்பேர்முதலா ....*
வெங்குநிகழ்தானங்களெல்லாம்புக்கிறைஞ்சுவார்..........*

(இதன்பொருள்.)

அங்கேசிலநாள்வாசஞ்செய்து பரமசிவனுடைய கிருபையைப்பெற்றுக்கொண்டுபுறப்பட்டுத்தமிழ்விளங்கும்பாண்டிநாட்டில்புறத்தில்வயல்கள்சூழ்ந்த திருநெல்வேலியும் சிவந்தகண்ணைப்பெற்றரிஷபத்தை உடைய சிவன்வீற்றிருக்கும் காளையார்கோயில் இவைமுதலாக அந்த நாடெங்குமுள்ள ஸ்தலங்களையெல்லாஞ் சேர்ந்துவணங்குவாராயினர்.—(எ-று) (சாய)

தொழுதுபலவகையாலுஞ்சொற்றொடைவண்டமிழ்பாடி ...*
வழுவில்திருப்பணிசெய்துமனங்கசிவுற்றெப்பொழுது ....*
மொழுகியகண்பொழிபுனலுமோவாதுசிவன்றாள்கள் ....*
தழுவியசிந்தையிலுணர்வுந்தங்கியநீர்மையிற்சரித்தார் ......*

(இதன்பொருள்)

பலவகைப்பட்ட வணக்கங்களையுஞ்செய்து சொற்களால்தொ

டுக்கப்பட்ட வளம்பொருந்திய தமிழைப்பாடிக் குற்றமற்றதி
ருப்பணிகளைச்செய்து மனங்கசிவுகொண்டு எப்பொழுதும் க
ண்களிலிருந்து நீர்ஓயாமல்பொழிந்துகொண்டிருக்கப் பரமசி
வனுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டிருக்கின்ற ம
னதிலுண்டாகிய உணர்ச்சியும் அந்தச்சுவாமியின் விஷயமாக
வே தங்குங்குணத்தோடிருந்தார்.—(எ-று) (௬௰௧)

தேம்பொழியுஞ்செந்தமிழ்நாட்டினிலெங்குஞ்சென்றிறைஞ்சி
ப்,பாம்பணிவார்தமைப்பணிவார்பொன்னிநாடதவணைந்து.*
வாம்புனல்சூழ்வளநகர்கள்பின்னும்போய்வணங்கியே ....*
பூம்புகலூர்வந்தடைந்தார்பொய்ப்பாசம்போக்குவார். .. *

(இதன்பொருள்)

மாதுரியம்பொருந்திய செந்தமிழ்வழங்கும் பாண்டிநாட்டி
லுள்ள ஸ்தலங்களெங்கும்போய்வணங்கிப் பாம்பைத்தரிக்கு
ம் சுவாமியை வணங்குவாராகிய அப்பர்சுவாமிசோழநாட்டை
அடைந்து தாவுகின்ற நீர்சூழ்ந்தவளமாகிய ஸ்தலங்களைப்பின்
னும்போய்த் தொழுது திருப்புகலூர்க்குவந்து சேர்ந்தார்-
பொய்முதலான தீமைகளை உண்டாக்கும் பாசங்களைப்போ
க்குகின்ற அப்பர்சுவாமி.—(எ-று) (௬௰௨)

பொய்கைசூழ்பூம்புகலூர்ப்புனிதர்மலர்த்தாள்வணங்கி .. *
தையுமனப்பரிவோடுநாடோறுந்திருமுன்றிற்..... ....*
கைகலந்ததிருத்தொண்டுசெய்துபெருங்காதலுடன். ....*
வைகுநாளெண்ணிறந்தவண்டமிழ்மாலைகள்மொழிவார் ..... *

(இதன்பொருள்)

பொய்கைகள்சூழ்ந்த திருப்பூம்புகலூர்க்குவந்து சுவாமியினு
டைய தாமரைமலர்போன்ற பாதங்களைவணங்கி-இளகியமன
தில்பதிந்த அன்புடனே நாள்தோறும்கோயில்வாசலில் கையி
னாற்செய்யப்பட்ட திருத்தொண்டுகளைச்செய்து பெரியஆசை
யோடு வாசம்பண்ணிக்கொண்டிருக்கும்நாளில் அளவில்லாத
வளம்பொருந்திய தமிழ்ப்பதிகங்களைப் பாடுவாராயினார்.—
(எ-று) (௬௰௩)

நின்றதிருத்தாண்டகமுநீடுதனித்தாண்டகமு ....*
மன்றுறைவார்வாழ்பதிகள்வழுத்துதிருத்தாண்டகமுங் ... *
கொன்றைமலர்ச்சடையார்பாற்குறைந்தடைந்த நேரிசையும்,
குன்றுதனிநேரிசையுமுதலானதொடுத்தமைத்தார் .....*

(இதன்பொருள்.)

நின்றதிருத்தாண்டகப்பதிகமும் தனித்தாண்டகப்பதிகமும் சுவாமியினுடைய க்ஷேத்திரங்களைக் கோவையாகஎடுத்துச்சொல்லும் தாண்டகமும் பரமசிவனிடத்தில் தமது குறையைச் சொல்லி அடைந்ததைக்காண்பிக்கும் திருநேரிசையும் பொதுவாகச்சொல்லிய நேரிசைப்பதிகமும் முதலான இவைகளைப்பாடியருளினார்.—(எ-று) (௬௱௰௪)

ஆருயிரின்றிருவிருத்தந்தசபுராணத்தடைவும் .. .. *
பார்பரவும்பாவநாசப்பதிகம்பன்முறையும் .... *
நேர்படநின்றறைகூவுந்திருப்பதிகமுதற்பிறவும்........ .. *
பேரருளின்கடலளிக்கும்பெருமானைப்பாடினார்.. .. .. ..*

(இதன்பொருள்.)

ஆருயிரின்றிருவிருத்தமும், சைவத்தைக்குறித்துச் சொல்லிய தசபுராணங்களைச்சுருக்கிச்சொல்லியிருக்கின்ற பதிகமும் உலகத்தார்பரவும்படி பாவத்தை நாசஞ்செய்யும் பதிகமும் பலதரமும் எதிர்நின்றுசொல்லிய சரக்கறையோவென்றனிநெஞ்சமேயென்று சொல்லும் பதிகமுமுதலாகியபிறவும் பெருமைபொருந்திய கிருபைக்கடலைக்கொடுக்கும்பரமசிவனைப் பாடியருளினார்.—(எ-று) (௬௱௰௫)

அந்நிலைமைதனிலாண்டவரசுபணிசெய்யவவர் .... *
நன்னிலைமைகாட்டுவார்நம்பர்திருமுன்றில் .... *
தன்னிலவருமுழவாரநுழைந்தவிடந்தானெங்கும் .. .. *
பொன்னினொடுநவமணிகள்பொலிந்திலங்கவருள்செய்தார். *

(இதன்பொருள்.)

அப்படிப்பட்டநிலையையோடுஎம்மையாட்கொண்டஅப்பர்சுவாமிதிருப்பணிவிடைசெய்துகொண்டிருக்க அவருக்குப்பொருளில ஆசையில்லாத ஒப்பற்ற தன்மையை எல்லார்க்குங்காட்டுவாராய்ச்சுவாமியானவர் அழகியகோயில் வாசலில் புற்களைச் செதுக்கும்போது உழைவாரம்நுழைந்தவிடங்களெங்கும் ஒன்பதுவகைரத்னங்களும் பொன்னும் பிரகாசித்துக்கிடக்கஅருளிச்செய்தார்.—(எ-று) (௬௱௰௬)

செம்பொன்னுநவமணியுஞ்சேண்விளங்கவாங்கலையு .... *
மும்பர்பிரான்றிருமுன்றிலுருள்பருக்கையுடனொக்க.... .. *
வெம்பெருமான்வாகீசருழவாரத்தினிலேந்தி .... *
வம்பலர்மென்பூங்கமலவாவியினிற்புகவெறிந்தார் .... .. *

(இதன்பொருள்.)

மாற்றுயர்ந்த பொன்னும் நவரத்னங்களும் வெகுதூரவளாயித் காந்திவீசிவிளங்க அவைகளைத்தேவர்களுக்குநாதராகியபரமசிவனது கோயில்முற்றத்தில் உருண்டுகிடக்கின்ற பருக்கைக்கற்களோடு ஒப்பாகவெண்ணி எமது தலைவராகிய அப்பர்சுவாமி உழைவாரத்தால் அவைகளைஎடுத்து வாசனைபொருந்திய தாமரைமலர்களை உடைய குளத்தில் விழும்படி எறிந்துவிட்டார்.—(எ-று) (சா௰௭)

புல்லோடுங்கல்லோடும்பொன்னோடுமணியோடும்...... ..*
சொல்லோடும்வேறுபாடிலாநிலைமைதுணிந்திருந்த.... ..*
நல்லோர்முன்றிருப்புகலூர்நாயகனார்திருவருளால்.... ..*
வில்லோடுநுதல்மடவார்விசும்பூடுவந்திழிந்தார்.... .... *

(இதன்பொருள்)

புல்லையும் கல்லையும் பொன்னையும் மணியையும் சொல்லால் வேறுபாடு அறிந்தாரோயன்றி அவைகளின்பொருளைவேறுபாடின்றி ஒன்றாகநினைத்திருந்த நல்லவராகிய அப்பர்சுவாமிக்குமுன் திருப்புகலூரில் அமர்ந்தருளிய பரமசிவனாருடைய கட்டளையால் வில்லைஒத்த நெற்றியையுடையஸ்திரீகள் தெய்வலோகத்தில் இருந்து இறங்கினார்கள் —(எ-று) (சா௰௮)

வானகமின்னுக்கொடிகள்வந்திழிந்தாலெனவந்து..... .. *
தானநிறைசுருதிகளிற்றகுமலங்காரத்தன்மை.... ....*
கானவமுதப்பாக்குங்கனிவாயிலொளிபரப்பப்.... ......*
பானல்நெடுங்கண்கள்வெளிபரப்பியிசைபாடுவார்.... ....*

(இதன்பொருள்.)

ஆகாயத்தில் தோன்றுகின்ற மின்னத்கொடிகள் பூமியில் வந்திறங்கினாற்போலவந்து தானங்களில் நிறைந்தசுருதிகளின் அழகியதன்மையோடு சங்கீதமாகிய அமிர்தம் எழுகின்றகனிபோன்றவாயில் தந்தங்களின்காந்தியைப்பரப்பி நீலோற்பலமலர்கள் போன்ற நெடியகண்களின் பார்வையை வெளியிற்பரப்பி இசையைப்பாடுவாராயினார்.—(எ-று) (சா௰௯)

கற்பகப்பூந்தளிரடிபோங்காமருசாரிகைசெய்ய ... .*
வுற்பலமென்முகிழ்விரல்வட்டணையோடுங்கைபெயரப் ... *
பொற்புறுமக்கையின்வழிபொருகயற்கண்புடைபெயர ... *
வற்புதப்பொற்கொடிநுடங்கியாடுவபோலாடினார்.... ... *

(இதன்பொருள்)

கற்பகவிருட்சத்தின்அழகியதளிர்போன்றகால்கள் அழகுபொருந்திய சுற்றுதல்செய்து ஆட மெல்லியசெங்குலவை யரும்பு போன்றவிரல்களின்அபிநயங்களோடுகைகள்அசைய அழகு பொருந்திய அக்கைகளின்வழியாகப் போர்செய்கின்ற கெண்டைமீன்போன்ற கண்கள்தாவ அற்புதமாகியபொற்கொடியான்று நவண்டு ஆடுவதுபோலாடினார்கள். —(எ-று) (சாஉ௰)

ஆடுவார்பாடுவாரலர்மாரிமேற்பொழிவார் .... *
கூடுவார்போன்றணைவார்குழலவிழவிடைநுடங்க..........*
வோடுவார்மாரவேளுடன்மீள்வதொளிபெருக ....*
நீடுவார்துகிலசையநிற்பாருமாயினார் ....*

(இதன்பொருள்)

ஆடுவாராகியும் சங்கீதம்பாடுவாராகியும் புஷ்பவருஷத்தை அப்பர்சுவாமியின்மேற்பொழிவாராகியும் அணைத்துகொள்கிறவர்கள்போல் சமீபத்தில் நெருங்குவார் கூந்தல்குலைந்து அசையவும்இடைதள்ளாடவும்ஓடுவார்கள்-மன்மதனோடுதிரும்புவார்கள்-காந்தியுண்டாகநெடுநாழிகை நிற்பார்கள்-வஸ்திரங்களசையநிற்கிறவர்களுமாயினார்கள்.—(எ-று) மாரவேளுடன்மீள்வதென்றது-அவர்களைப்பார்த்த ஆடவர்கள் மிகுந்தமயலை அடையவென்றபொருள். (சாஉ௰க)

இத்தன்மையரம்பையர்களெவ்விதமுஞ்செயல்புரிய. .....*
வத்தனார்திருவடிக்கீழ்நினைவகலாவன்புருகு ....*
மெய்த்தன்மையுணர்வுடையவிழுத்தவத்துமேலோர்தஞ் ..*
சித்தநிலைதிரியாதுசெய்பணியின்றலைநின்றார் .. ..*

(இதன்பொருள்.)

இவ்விதமாகத்தேவப்பெண்கள் பலவகையான ஆசையுண்டாக்குந்தொழில்களைச்செய்ய-பரமசிவனுடையதிருவடிகளில் மனதுநீங்காமல் அன்பினால் உருகுமெய்மைபொருந்திய உணர்ச்சியை உடைய பெருமைபொருந்தியதவத்தினராகிய அப்பர்சுவாமி தம்முடையமனவுறுதி வேறுபடாமல்தாம்செய்யவேண்டிய பணிவிடையில் குறைவில்லாதவரானார்.(எ-று)(சஉஉ)

இம்மாயப் பவத்தொடக்காமிருவினைகடமைநோக்கி .... *
யும்மாலிங்கென்னகுறையுடையேன்யானிருவாரூ.... ...*
ரம்மானுக்காளானேனலையேன்மினிரொன்று ....- [ரூர்
பொய்ம்மாயப்பெருங்கடலுளெனுந்திருத்தாண்டகம் புனை

(இதன்பொருள்.)

இப்படிப்பட்டமாயாசம்பந்தமாகியபிறப்பினை உண்டாக்கும் நல்வினை தீவினைகளைநோக்கி உங்களால் எனக்கு என்னகுறையுண்டாயிருக்கிறது நான் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பரமசிவனுக்கு ஆளாயிருக்கின்றேன் நீங்கள் என்னை வருத்தவேண்டாமென்று பொய்மாயப்பெருங்கடலுள் (என்பதை) பாட்டினடியிற்கொண்ட திருத்தாண்டகத்தைக் கட்டளையிட்டார் (எ-று) (சஉரு)

மாதரவர்மருங்கணையவந்தெய்திமதனவசக் .... *
காதலவர்புரிந்தொழுகுங்கைதவங்கள்செய்திடவும் ...... *
பேதமிலாவோருணர்விற்பெரியவரைப்பெயர்விக்க ...... *
யாதுமொருசெயலில்லாமையிலிறைஞ்சியெதிரகன்றார் ... *

(இதன்பொருள்.)

ஸ்திரீகள் அப்பர்சுவாமிகளின் சமீபத்தில்வந்து மன்மதன்வசத்திலகப்பட்ட காதலையுடைய அம்மாதர்கள் அனேகவஞ்சனைகளுற்றசெய்கைகளைச்செய்யவும் மாறுபடாத உறுதியான ஒரே யுணர்வையுடைய அப்பர்சுவாமியைத்தங்கள்வசப்படுத்தும்படியாதொருசெய்கையும் இல்லாதவர்களாய் வணங்கி யெதிரில் நின்றும் அகன்றார் —(எ-று) (சஉசு)

இந்நிலைமையுலகேழுமெய்தவறிந்தியல்பேத்த .... *
மன்னியவன்புறபத்திவடிவானவாகீசர் .... *
மின்னிலவுஞ்சடையார்தம்மெய்ப்பொருடானெய்தவரு .. *
மந்நிலைமையணித்தாகச்சிலநாளங்கமர்ந்திருந்தார் .... .. *

(இதன்பொருள்.)

இப்படிப்பட்டநிலைமையை எழுலகத்தாரும் நன்றாக அறிந்து ஸ்தோத்திரஞ்செய்ய அழியாத அன்பினையே ஒரு வடிவமாகவுடைய அப்பர்சுவாமி மின்னல்போல்விளங்குகின்ற சடையை உடைய பரமசிவனது திருவடியை அடையும் மோட்சமாகிய உண்மைப்பொருள்கிடைக்குங்காலம்சமீபமாயிருக்கச் சிலநாள் அங்கேவாசஞ்செய்துகொண்டிருந்தார்.—(எ-று) (சஉ௭)

மன்னியவந்தக்காணமருவுதலைப்பாட்டினாற் .... *
றன்னுடையசரணனைதமியேனைப்புகலூர *
னென்னையினிச்சேவடிக்கீழிருத்திடுமென்றெழுகின்ற .... *
முன்னுணர்வின்முயற்சியினாற்றிருவிருத்தம்பலமொழிந்தார் *

(இதன்பொருள்.)

நிலைபெற்ற அந்தக் கரணங்களெல்லாம் ஒன்றுபட்டுச் சுவாமி

யைத்தியானிக்கும் உறுதிப்பாட்டினால் தம்முடைய திருவடியி ன்கீழாகிய அடியேனைப்புகலூரிலெழுந்தருளியிருக்குஞ்சுவா மி என்னையினிச்சேவடிக்கீழிருத்திடுமென்று எழுந்த பூர்வஞா னத்தின்முயற்சியால் பலதிருவிருத்தங்களைக் கட்டளையிட்டரு ளினார்.— எ-று) (சஉரு)

மண்முதலாமுலகேத்தமன்னுதிருத்தாண்டகத்தைப் .... *
புண்ணியவாவுன்னடிக்கேபோதுகின்றேனெனப்புகன்று ..*
தண்ணாரியசிவானந்தஞானவடிவேயாகி ....*
யண்ணலார்சேவடிக்கீழாண்டவரசமர்ந்திருந்தார் ....*

(இ-ள்) பூலோகமுதலாகிய உலகங்கள்வணங்கநிலைபெற்ற தி ருத்தாண்டகப் பதிகத்தை புண்ணியாவுன்னடிக்கே போதுகி ன்றேனெனக் கடையில்புகன்று எட்டுதற்கரிதாகிய சிவானந்த த்தைஞானமே ஒரு உருவமாகிப் பரமசிவனுடையதிருவடியி ன்கீழ் அப்பர்சுவாமி அடைந்தார்.— எ-று) (சஉ௬)

வானவர்கள்மலர்மாரிமண்ணிறையவின்னாவகின் ....*
மேனிறைந்தவைந்துபேரியவொலியும்விரிஞ்சனமுதல் ....*
யோனிகளாயினவெல்லாமுண்ணிறைந்தபெருமகிழ்ச்சி ...*
தானிறைந்தசித்திரையிற்சதயமாந்திருநாளில் ....*

(இ-ள்) தேவர்கள்பொழியாநின்ற புஷ்பவருஷமானது பூ மியெங்கும்நிரம்ப ஆகாயவுலகத்தில் ஐவகைப்பட்ட பெருமை பொருந்தியவாத்திய ஒலிகளும் நிறைந்தன-பிரமன்முதலாகி ய எல்லாச்சீவராசிகளும் அதில்கொண்ட பெரியகளிப்பால் உ லகையை அடைந்த சித்திரைமாதத்தில் சதயநட்சத்திரத்தில். (எ-று) இவ்விரண்டுபாட்டுக்குளகம். (சஉ௭அ)

அடியேனைனுகரவாலாண்டவரசின்சரிதப் ....*
படியையானறிந்தபடிபகர்ந்தேனப்பாமுனிவன் .. .... *
கடிமலர்மென்சேவடிகள்கைதொழுதுகுலச்சிறையார் .. [ன்.
முடிவில்புகழ்த்திருத்தொண்டின்முயற்சியினை மொழிகின்றே

(இதன்பொருள்)

அடியேன் அன்போடு அப்பர்சுவாமியின் சரித்திரத்தின்தன் மையை யானறிந்த அளவில்சொல்லினேன் அந்த ஒப்பற்றவா கிசமுனிவரின் அவதாரமாகிய அங்கதின் வாசனைபொருந்தியபு ஷ்பம்போன்றமெல்லிய செவ்வியதிருவடிகளைக்கைதொழுது குலச்சிறைநாயனாருடைய அளவற்றபுகழை உடைய திருத்தொ ண்டின்முயற்சியைநான்சொல்லத்தொடங்குவேன்.— எ-று)

திருநாவுக்கரசுநாயனார் புராணம்-முற்றிற்று-ஆ-நகஉகயக.

குலச்சிறைநாயனார்புராணம்.

பன்னுதொல்புகழ்ப்பாண்டிநன்னாட்டிடைச் ....*
செந்நெலார்வயற்றீங்கரும்பின்னயற் ....*
றுன்னுபூகப்புறம்பணைசூழ்ந்தது ....*
மன்னுவண்மையினார்மணமேற்குடி ....*

(இதன்பொருள்.)

பன்னிச்சொல்கின்ற பழமைபொருந்திய புகழை உடைய நல்லபாண்டிநாட்டில் சிறந்த திறத்தை உடைய சம்பாநெற்பயிர்கள் நிறைந்துவளரும் வயலோரத்தில் கரும்புகளும், அதற்குப்பக்கத்தில் நெருங்கிய கமுகமரங்களும், வேலியாகச்சூழ்ந்திருக்கு மருதநிலத்தை உடையது நிலைபெற்ற கொடையாளர்கள்தங்கிய மணமேற்குடி.—(எ-று) (க)

அப்பதிக்குமுதல்வர்வன்றொண்டர்தா..........*
மொப்பரும்பெருநம்பியென்றோதிய........*
செப்பருஞ்சீர்க்குலச்சிறையார்திண்மை.... ..*
வைப்பினாற்றிருத்தொண்டின்வழாதவர் .... ..*

(இதன்பொருள்.)

அந்தநகரத்தில் தலைவராயிருக்கிறவர் சுந்தரமூர்த்திசுவாமியானவர் ஒப்பற்ற பெருநம்பியென்று திருத்தொண்டத்தொகையில் அருளிச்செய்த சொல்வதற்கருமையாகிய கீர்த்தியை உடைய குலச்சிறைநாயனார் உறுதியான பத்தியினால்திருத்தொண்டில்நின்றும் தவறாதவர்.—(எ-று) (உ)

காரணங்கண்ணுதற்கன்பரென்னவே.... ....*
வாரமாகிமகிழ்ந்தவர்தாண்மிசை..........*
யாருமன்பொடுவீழ்ந்தஞ்சலிமுகிழ்த்.........*
தீரநன்மொழியெய்தவிசைத்துளார்...... .. ...*

(இதன்பொருள்.)

பரமசிவனுக்கு அடியவர்களே நம்முடைய எல்லாக்காரியங்களையும் நிறைவேற்றுவதற்குக் காரணமென்று அன்பினையுடையவராய் விருப்பமுற்று அவர்களுடைய பாதத்தின்மேல் நிறைந்த அன்புடனே படிந்து இரண்டுகைகளையுங்கூப்பி குளிர்ச்சியாகிய நல்லவார்த்தைகளைப் பொருந்தும்படிசொல்லுகிறவர்.—(எ-று) (௩)

குறியினான்குகுலத்தினராயினு . . . . *
நெறியினக்குலநீங்கினராயினு . . . . *
மறிவுசங்கரற்கன்பரெனப்பெறித் . . . . *
செறிவுறப்பணிந்தேத்தியசெய்கையார் . . . . *

(இதன்பொருள்)

தங்கள்தங்கள் நெறியில்நின்றுந்தவறாத பிராமணர்-அரசர்-வைசியர்-சூத்திரர்களாயினும் அவர்கள் மேற்சொல்லிய ஒழுக்கத்தில்நின்றுந் தவறியவர்களாயினும் பரமசிவனுக்கு நாம் அடியோமென்கிற ஓர்விவேகத்தைப்பெறுவாராயின் - அவர்களை நெருங்கி வணங்கிப்புகழ்ந்த செய்கையை உடையவராயிருந்தார்.—(எ-று) (ச)

உலகர்கொள்ளுநலத்தினராயினு . . . . *
மலகில்தீமையராயினுமம்புலி . . . . *
யிலகுசெஞ்சடையாரடியாரெனித் . . . . *
தலமுறப்பணிந்தேத்துந்தகைமையார் . . . . *

(இதன்பொருள்.)

உலகத்தார்கள் ஒப்புக்கொள்ளும் நற்குணங்களை உடையவர்களாயிருந்தாலும் அளவில்லாத தீயகுணங்களை உடையவர்களாயினும்- சந்திரன்விளங்கும் சிவந்தசடையுடைய பரமசிவனடியார்களாகவிருந்தால் அவர்களை நன்மையுண்டாகத் தொழுது பணியுந்தகுதியை உள்ளவர்.—(எ-று) (ரு)

பண்பின்மிக்கார்பலராயணையினு . . . . *
முன்பவேண்டியொருவரணையினு . . . . *
மெயன்பெருக்கியவன்பாலெதிர்கொண்டு . . . . . *
நண்புகூர்ந்தமுதூட்டுநலத்தினார் . . . . *

(இதன்பொருள்.)

நற்குணங்களில் மிக்கபெரியோர்கள் கூட்டமாய்வந்தாலும் உண்ணும்படி யொருவராகவந்தாலும் யாவருமதிக்கத்தகுந்த பத்தியோடு எதிர்கொண்டு அன்புசிறந்து உணவிக்கும்தன்மையை உடையவர்.—(எ-று) (சா)

பூதிகோவணஞ்சாதனத்தாற்பொலிந் . . . . *
தாதிதேவர்தமஞ்செழுத்தாமவை . . . . *
யோதுநாவணக்கத்தாலுரைப்பவர் . . . . *
பாதநாளும்பரவியபண்பினார் . . . . *

(இதன்பொருள்)

திருநீறு-கோவணம்-சைவவேஷத்திற்குரிய மற்றைச்சாதனங்கள் இவைகளால்பிரகாசித்து ஆதிபகவாகிய பரமசிவனுடைய பஞ்சாட்சரிமந்திரத்தை வணக்கத்துடனே நாவினாலுச்சரிக்கிறவர் சுவாமிதிருவடிகளை நாள்தோறும் ஸ்தோத்திரஞ்செய்யும் அன்பை உடையவர்.—(எ-று) (எ)

இன்னநல்லொழுக்கத்தினாரீறில்சீர்த் .... *
தென்னவன்னெடுமாறற்குச்சீர்திகழ் .... *
மன்னுமந்திரிகட்குமேலாகியா .... *
ரொன்னலார்ச்செற்றுறுதிக்கணின்றுளார் ... ... *

(இதன்பொருள்.)

இத்தன்மைய நல்லொழுக்கங்களையுடையவர் கெடுதியடையாதகீர்த்தியை உடைய நெடுமாறர் என்னும்பாண்டியர்க்குவிளக்குஞ் சிறப்பை உடையவர்களாய் நிலைபெற்ற மந்திரிகளுக்கு மேலாகியவர்சத்துருக்களை அழித்துத் தாம்செய்யவேண்டியஉபாயங்களில் உறுதிபெறநின்றவர்.—(எ-று) (அ)

ஆயசெய்கையராயவராறணி .... *
நாயனார்திருப்பாதநவின்றுளார் .... *
பாயசீர்புனைபாண்டிமாதேவியார் .... *
மேயதொண்டுக்குமெய்த்தொண்டராயினர் ..., *

(இதன்பொருள்)

மேற்சொல்லிய அமைச்சின்றொழிலின் மனதை வைத்திருந்தவராயினும் கங்கையைத்தரித்த பரமசிவனுடையதிருவடிகளை மறவாது உச்சரிப்பவர் நான்குதிக்கும்பரவியகீர்த்தியை அணியாகக்கொண்ட பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாருடைய உண்மையாகிய தொண்டுக்கு உதவிசெய்யும் பொய்யில்லாத அடியவரானவர்.—(எ-று) (கூ)

புன்னயத்தருகந்தர்பொய்நீக்கவுந் .... *
தென்னர்நாடுதிருநீறுபோற்றவு .... *
மன்னுகாழியர்வள்ளலார்பொன்னடி .... *
சென்னிமேசேர்த்திமகிழ்ந்தசிறப்பினர் .... *

(இதன்பொருள்)

வாதஞ்செய்வதில் நிலைக்குறித்தாத அற்பமாகியநியாயத்தை உடைய ஆருகதர்களுடைய பொய்யாகிய சமயத்தை அழிக்கவும் பாண்டிநாட்டிலுள்ளவர்கள் திருநீறுதரித்துக்கொள்ளவும் நி

லைபெற்றசீர்காழியிலுள்ளவர்களுக்குத் தலைவராகிய திருஞான சம்பந்தமூர்த்திசுவாமியின் அழகியபாதங்களைத் தலையில்சேர்த்து மகிழ்ச்சியுற்ற சிறப்பினையுடையவர்.—(எ-று) (௰)

வாதிற்றோற்றவமணரைவன்கழுத் .... *
தீதுநீக்கிடவேற்றுவித்தார்திறம் .... *
யாதுபோற்றினன்மேலினியேத்துகேன் .... *
வேதநீதிமிழலைக்குறும்பர்தாள் .... *

(இதன்பொருள்)

வாதிலே சம்பந்தமூர்த்திசுவாமிக்குத் தோற்றுவிட்ட சமணர்களை அவர்களுடையசொற்படி வலிதாகநாட்டிய கழுவில்பாண்டிநாட்டிற்குள்ள தீமைகள்கெட ஏற்றிய குலச்சிறைநாயனாருடைய பெருமையைக்குறித்து எனக்குத்திறமில்லாமையால் சிறபான்மைசொல்லினேன் இனி வேதத்திலுள்ள விதிப்படி நடந்த பெருமிழலைக்குறும்பருடைய பாதத்தைவணங்கி-அவர்சரித்திரத்தைச சொல்லுவேன்.—(எ-று) (௰௧)

குலச்சிறைநாயனார்புராணம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-துஎ௱௰.

பெருமிழலைக் குறும்பநாயனார்புராணம்.

குதநெருங்குகுலைத்தெங்குபலவுபூகஞ்சூழ்புடைத்தாய். .. *
வீதிதோறுநீற்றினொளிவிரியமேவிவிளங்குபதி .... *
நீதிவழுவாநெறியினராய்நிலவுங்குடியாலுயர்நிலத்து .. .. *
மீதுவிளங்குந்தொன்மையதுமிழலைநாட்டுப்பெருமிழலை... *

(இதன்பொருள்.)

மாமரங்களும் நெருங்கியகுலையை உடைய தென்னமரங்களும், பலாமரங்களும், கமுகமரங்களும்சூழ்ந்திருக்கும்படித்தாய் வீதிகள்தோறும் திருநீற்றின்பிரகாசம் விரிதலால் விளங்குகின்ற நகரமாவது நீதிதவறாத மார்க்கத்தை உடையவர்களாய் வாசஞ்செய்யுங் குடிகளால் நீண்டவுலகத்தில் விளங்கும் பழமையது மிழலைநாட்டில்பெருமிழலையென்னுமூர்.(எ-று)

அன்னதொன்மைத்திருப்பதிக்கதிபர்மிழலைக்குறும்பனார் *
சென்னிமதியம்வைத்தவர்தமடியார்க்கானசெய்பணிக.. *
ளின்னவண்ணமென்றவர்தாமுரையாமுன்னமெதிரேற்று..*
முன்னமுவந்துசெய்வாராய்முழுதுமறிவின் பயன்கொள்வார்

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட பழையதாகிய க்ஷேத்திரத்தில் தலைவராகிய மிழலைக்குறும்பனாரென்பவர் முடியில்சந்திரனைத்தரித்த ஆண்டவருடைய அடியார்களுக்கு வேண்டியகாரியங்கள் இப்படிப்பட்டவைகளென்று அவர்கள்சொல்வதற்குமுன்னமே அதையொப்புக்கொண்டு விரைவாகவிரும்பிச்செய்பவராகி தேறிய அறிவின்பயனாகிய சிவபத்தியைக் கைக்கொள்வாராயினார்.—
(எ-று) (உ)

தொண்டர்பலரும்வந்தீண்டியுண்ணத்தொலையாவமுதூட்டிக்,
கொண்டுசெல்ல விருநிதிய முகந்துகொடுத்துக்குறைந்தடை
வார், வண்டுமருவுங்குழலுமையாள்கேள்வன்செய்ய தாளென்
னும்,புண்டரீகமகமலரில்வைத்துப்போற்றும்பொற்பினார்.*

(இதன்பொருள்.)

அடியார்கள் பலரும்வந்து கூட்டமாகக்கூடிப் போசனஞ்செய்யும்படி தொலைவில்லாமல் சமைத்திருக்கின்ற அமுதம்போன்ற சோறுகறிகள் முதலியவற்றை உண்பித்து அவர்களுக்கு உபசாரமாக எளியேன் நாவிடுவது கூழாயினும் அதனைப்பெரிதாக எண்ணி ஒப்புக்கொள்ளவேண்டுமென்று குறைசொல்லி வண்டுகள் தங்கிய கூந்தலை உடைய பார்வதியார் நாதராகிய பரமசிவனது சிவந்த பாதமாகிய தாமரைமலரை மனமாகியபுஷ்பத்தில் இருத்திப் போற்றுகின்ற உறுதியை உடையவர்(எ-று)

இத்தன்மையராய்நிகழுநாளெல்லையில்லாத்திருத்தொண்டின்,
மெய்த்தன்மையினையுலகறியவிதியால்வணங்கிமெய்யடியார் *
சித்தநிலவுந்திருத்தொண்டத்தொகைபாடியநம்பியைப்பணி
ந்து,நித்தனருள்பெற்றவர்பாதநினைக்குநியமத்தலைநின்றார். *

(இதன்பொருள்.)

இப்படிப்பட்ட தன்மையை உடையவராய் நடக்கும்போது அளவில்லாத திருத்தொண்டின் உண்மையை உலகத்தார் அறிய விதியோடு சுவாமியைப்பூசித்து உண்மை உள்ள அடியார்களுடைய சித்தத்தில் குடிகொண்ட திருத்தொண்டத் தொகையைப் பாடியருளிய சுந்தரமூர்த்திசுவாமியைத்தொழுது பரம

சிவனுடைய அருளைப்பெற்று அவர் திருவடிகளை எப்போதும் நினைக்கும் நியமத்தில் உறுதியாய் நின்றார்.—(எ-று) (௪)

மையார் தடங்கட் பரவையார் மணவாளன் றன்மலர்க்கழல்கள் *
கையாற்றொழுது வாய்வாழ்த்தி மனத்தானினைக்குங் கடப்பாட்டிற், செய்யாள் கோனு நான்முகனு மறியாச் செம்பொற்றாளிணைக்கே, யுய்வான் சேரவுற்றநெறியிதுவேயென் றன்பினுய்த்தார். .... *

(இதன்பொருள்.)

மையைத்தரித்த அகன்றகண்களை உடைய பரவைநாச்சியார்க்குக் கணவராகிய சுந்தரமூர்த்திசுவாமியின் தாமரைப்பூவையொத்தபாதங்களைக் கையால்கூப்பித்தொழுது வாயினால்வாழ்த்தி மனதினால் நினைக்குங்கடமையினால் லட்சுமிதேவியின் நாயகனாகிய விஷ்ணுவும் பிரமனும் அறியாத சிவந்தபொன்போன்ற இரண்டுபாதங்களினடியில் பிழைக்கும்பொருட்டுச் சேர்வதற்கு மார்க்கமிதுவேயென்று அன்போடு செய்துவந்தார்.
(எ-று) (௫)

நாளுநம்பியாரூரர் நாமநவின்றநலத்தாலே .... *
யாளும்படியா லணிமாதிசித்தியானவணைந்ததற்பின் .... .. *
மூளுங்காதலுடன்பெருகமுதல்வர் நாமத்தஞ்செழுத்துங். *
கேளும்பொருளுமுணர்வுமாம்பரிசுவாய்ப்பக்கெழுமினார். *

(இதன்பொருள்.)

நாடோறும் சுந்தரமூர்த்திசுவாமிகளின் திருநாமத்தை உச்சரிக்கும் நன்மையால் ஆளுந்தன்மையை உடைய அணிமாமுதலிய அட்டசித்திகளும் பலிதமாயினபின்பு மிகுந்தநேயமுண்டாகத் தலைவராகிய பரமசிவனது ஐந்தெழுத்தையும் சுற்றமும் பொருளும் விவேகமும் இதுவேயென்னுமோர் தன்மை தமக்கு உண்டாக அதை உச்சரித்துக்கொண்டிருந்தார்.—(எ-று)

இன்னவாறேயிவரொழுகவேறுகொடிமேலுயர்த்தவர்தாம். *
பொன்னின்கழல்கண் மண்ணின்மேற்பொருந்தவந்து வழக்குரைத்த, மன்னுமலையைவலங்கொண்டுபுகாட்டியாண்ட வன்றொண்டர், சென்னிமதிதோய்மாடமலிகொடுங்கோளூரைச் சேர்வுற்றார். .... *

(இதன்பொருள்.)

இவ்வழிபாக இவர்நடக்க ரிஷபத்தைத் துவசத்திலெழுதிப்பிடித்துக்கொண்டசுவாமி தம்முடைய பொன்போன்ற பாதங்கள்

பூமியில் படும்படி நடந்துவந்து வழக்காடிச் சபைக்குமுன்னே ஆளோலையைக் காட்டித் தடுத்தாட்கொண்ட சுந்தரமூர்த்திசுவாமி வாசஞ்செய்யும் சிகரத்தில்சந்திரன் உலாவுகின்ற மேல்வீடுகள்நெருங்கிய கொடுங்கோளூரையடைந்தார்.—(எ-று) (எ)

அஞ்சைக்களத்து நஞ்சுண்ட அமுதைப்பரவியணைவுறுவார் ... *
செஞ்சொற்றமிழ்மாலைகண்மொழியத்தேவர்பெருமானருளா
லே,மஞ்சிற்றிகழும்வடகயிலைப்பொருப்பிலெய்தவரும்வாழ்வு
நெஞ்சிற்றெளியவிங்குணர்ந்தார்நீடுமிழலைக்குறும்பனார் .. *

(இதன்பொருள்)

திருவஞ்சைக்களத்தில் வீற்றிருக்கும் விஷத்தை உண்டருளிய அமுதுபோன்றசுவாமியை வணங்கி யடைந்தவராய்ச் செவ்விய சொற்களால் தமிழ்ப்பதிகங்களைப்பாடப் பரமசிவனுடைய கிருபையால் மேகங்கள் தவழ்கின்ற வடதிசையிலுள்ள கைலாசகிரியை அடையும்படி சுந்தரமூர்த்திசுவாமிக்கு உண்டாகிய ஒருவாழ்வைமனதில்நன்றாக இங்கேயேயிருந்து அறிந்தவரானார் மிழலைக்குறும்பநாயனார்.—(எ-று) (அ)

மண்ணிற்றிகழுந்திருநாவலூரில்வந்தவன்றொண்டர் .... .. *
நண்ணற்கரியதிருக்கயிலைநாளையெய்தநான்பிரிந்து .... *
கண்ணிற்கரியமணிகழியவாழ்வார்போலவாழேனென், றெண்
ணிச்சிவன்றாளின்றேசென்றடைவன்யோகத்தாலென்பார்- *

(இதன்பொருள்)

பூமியில் உயர்ந்ததாகவிளங்கும் திருநாவலூரில்அவதாரஞ்செய்தருளிய சுந்தரமூர்த்திசுவாமிகள் ஒருவரும் அடைவதற்கருமையாகிய திருக்கயிலாசகிரியை நாளைப்பொழுதில் அடைவாராயிருக்க அவரைப்பிரிந்திருந்து கண்களிடத்தில் இருக்கும் அருமையாகிய பார்வைநீங்கவாழ்கிறவர்கள்போல்நான்வாழமாட்டேனென்றுநினைத்து யோகமுயற்சியால் இன்றைப்பொழுதே சிவனுடைய பாதத்தை அடைகின்றேனென்றார்.—(எ-று)

நாலுகரணங்களுமொன்றாய்நல்லவறிவுமேற்கொண்டு ..... *
காலும்பிரமநாடிவழிக்கருத்துச்செலுத்தக்கபாலநடு .. .. *
ஏலவேமுன்பயின்றநெறியெடுத்தமறைமூலந்திறப்ப .. *
மூலமுதல்வர்திருப்பாதமணைவார்கயிலைமுன்னடைந்தார் .. *

(இதன்பொருள்)

மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம்-என்கிற நான்கு அந்தக்கரணங்களும் ஒன்றுபட்டு நல்ல அறிவுமேற்பட்டு ஆதாரமாயி

ருக்கிற பிரமநாடியின்வழியாக கருத்தைப்போகவிட-கபாலத்துளையில் பொருந்தும்படி முன்செய்த அப்பியாசத்தால்வேதரகசியமான மூலமந்திரந்திறக்க எல்லார்க்குமூலமாகிய பரமசிவனுடைய திருப்பாதத்தை அணையும்பொருட்டுக் கயிலாசத்தை அடைந்தார்.—(எ-று) (௰)

பயிலச்செறிந்தயோகத்தாற்பாவைகேள்வன்பாதமுறக்.... *
கயிலைப்பொருப்பாடியடைந்தமிழலைக்குறும்பர் கழல்வணங்கி
மயிலைப்புறங்கொண்மென்சாயன்மகளிர்கிளவியாழினொடுங் *
குயிலைப்பொருவுங்காரைக்காலம்மைபெருமைகூறுவாம்... *

(இதன்பொருள்.)

அப்பியாசம்பண்ணுதலால் கிடைத்தயோகத்தால் சுந்தரமூர்த்திசுவாமியின் பாதத்தை உறுதியாக நம்பினமைபற்றிப் பரமசிவனுடைய பாதத்தை அடைந்ததிருமிழலைக்குறும்பருடைய திருவடியைவணங்கி மயிலைத்துரத்துகின்ற மெல்லிய சாயலையுடைய மங்கையர்களினுடைய சொல்லானது வீணையினிசையையும் குயிலினுடைய இசையையும் ஒத்திருக்கும் காரைக்காலம்மையின் பெருமையைச் சொல்லத்தொடங்குவோம். (எ-று) (௰௧)

பெருமிழலைக்குறும்பநாயனார்புராணம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௲௭௱௨௰௧.

காரைக்காலம்மைபுராணம்.

மானமிகுதருமத்தின்வழிநின்றவாய்மையினி.... ...... *
ஊனமில்சீர்ப்பெருவணிகர்குடிதுவன்றியோங்குபதி..... *
கூனல்வளைதிரைசுமந்துகொண்டேகமண்டுகழிக் .. .. *
கானன்மிசையுலவுவளம்பெருகுதிருக்காரைக்கால் .. .. *

(இதன்பொருள்.)

மானம்நிறைந்த தருமமார்க்கத்தில்நின்ற குற்றமில்லாத சிறப்பினையுடைய சத்தியவந்தர்களாகிய பெரியவணிகர்களுடைய குடிகள் நிறைந்துவிளங்குகின்ற நகரமானது கடலினலைகள் கூனையுடைய சங்குகளைவாரிக்கொண்டுவர அதனால்பெருகிய கழிகளையுடைய நெய்தல்நிலத்தில் அந்தச்சங்குகள் உலவுகின்றவளங்குறையாத காரைக்காலாம்.—(எ-று) (௧)

வங்கமலிகடற்காரைக்காலின்கண்வாழ்வணிகர் .... *
தங்கள்குலத்தலைவனார்தனதத்தனார்தவத்தா ....*
லங்கவர்பாற்றிருமடந்தையவதரித்தாளெனவந்து .. ..*
பொங்கியபேரழகுமிகப்புனிதவதியார்பிறந்தார்.... ......*

(இதன்பொருள்.)

கப்பற்கூட்டங்கள் விளங்குகின்ற கடல்சூழ்ந்த காரைக்காலி ல் வாழ்கின்ற செட்டிகள்குலத்துக்குத்தலைவராகிய தனதத்த னென்பவருடைய தவத்தால் அவரிடமாக லட்சுமிதேவியேவந் து அவதாரஞ்செய்தாளென்று சொல்லும்படிவிளங்கும் ஒப் பற்ற அழகோடு புனிதவதியாரென்பவர் பிறந்தார்.(எ-று) (உ)

வணிகர்பெருங்குலம்விளங்கவந்துபிறந்தருளியபின் .... *
மணிகிளர்மெல்லடிதளர்வுற்றசையுநடைப்பருவத்தே .... *
பணியணிவார்கழற்கடிமைபழகிவரும்பாங்குபெறத். .. .. *
தணிவில்பெருமனக்காதறதும்பவருமொழிபயின்றார் .... *

(இதன்பொருள்)

வணிகருடைய பெருமையுற்ற குலமானது கீர்த்தியை அடையு ம்படிவந்து பிறந்தபின்பு ஆபரணங்களால் விளங்கும் மெல்லி யகால்கள்தள்ளாடி அசைகின்றநடையை உடையபருவத்திலே யே பாம்பைத்தரித்த பரமசிவனுடைய பாதங்களுக்குத் திரு த்தொண்டுசெய்யும்பழக்கம் மிகுதியும் உண்டாய்க் குறைவில் லாமனத்தில் ஆசைததும்பப்பேசும்பருவத்தை அடைந்தார். (எ-று) (ந)

பல்பெருநற்கிளையுவப்பப்பயில்பருவச்சிறப்பெல்லாஞ் .. *
செல்வமிகுந்தாதையார்திருப்பெருகுஞ்செயல்புரிய .... *
மல்குபெரும்பாராட்டின்வளர்கின்றார்விடையவர்பா .... *
லல்கியவன்புடனழகின்கொழுந்தெழுவதெனவளர்வார் ....*

(இதன்பொருள்)

பெருமையும் நன்மையுமுள்ள சுற்றத்தார்பலரும் களிகூரப்ப ருவங்களிற்செய்யவேண்டிய சிறப்புகளையெல்லாம் பாக்கியத் தால் பெருமைபெற்ற தகப்பனாராகியதனதத்தர் மிகுந்ததிர வியச்செலவோடுநடத்த அருமைபாராட்டி வளர்ப்பதனால் வ ளர்கின்றவராய்ப் பரமசிவனிடத்தில் நிறைந்த அன்புண்டாக அ ழகின்கொழுந்து எழுந்ததுபோல் பருவம்நிறைந்தார்புனிதவ தியார்.—(எ-று) (ச)

வண்டல்பயில்வனமெல்லாம்வளர்மதியம்புனைந்தசடை.... *
யண்டர்பிரான் திருவார்த்தைடனையவருவனபயின்று .... *
தொண்டர்வரிற்றொழுதுதாதியர்போற்றத்துணைமுலைகள் .. *
கொண்டுநுசுப்பொதுங்குபதக்கொள்கையினிற்குறுகினார் .. *

(இதன்பொருள்.)

புனிதவதியார் விளையாட்டைப்புரிகின்ற சோலைகளிலெல்லாம் வளர்பிறையைத்தரித்தசடையை உடைய தேவர்களுக்கு நாதராகிய பரமசிவனுடைய நாமங்களினுச்சாரணத்தைச்செய்து அடியார்கள்வந்தால் அவர்களைத்தொழுது தாதியர்கள் போற்றிவளர்க்க இணையாயிருக்கின்றகொங்கைகளெழுந்து இடைது வளும்பருவத்தைப்பெற்றார்.—(எ-று) (௫)

நல்லவெனவுறுப்புநூல்வருமாக்குநலநிரம்பி.... .... *
மல்குபெருவனப்புமீக்கூரவருமாட்சியினு .. .. *
வில்லிகவாப்பருவத்திலிவர்கண்மரபினுக்கேற்குந் ....*
தொல்குலத்துவணிகர்மகட்பேசுதற்குத்தொடங்குவார் .. .*

(இதன்பொருள்)

தேகங்களினுறுப்புகள் இப்படியிருக்கவேண்டுமென்றுசொல்லும் நூலையுணர்ந்தவர்கள்கூறும் நலமெல்லாம்நிறைந்து மிகவுஞ்சிறந்த அழகானது விருத்தியாகுமாட்சிமையோடு தெருளாமலிருக்கும் பருவத்திலேதானே இவர்களுடைய கொள்வினைக்கேற்ற-நாட்பட்டுப்பழுதில்லாத குலத்தில்வந்தவைசியர்கள்இந்தப்பெண்ணைப்பேசுவதற்குமுயற்சியுற்றார்கள்.—(எ-று)

நீடியசீர்க்கடலுகைநிதிபதியென்றுலகின்கட் .... *
பாடுபெறுபுகழ்வணிகன்பயந்தகுலமைந்தனுக்குத் .... .. *
தேடவருந்திருமரபிற்சேயிழையைமகட்பேச ....-*
மாடமலிகாரைக்கால்வளநகரின்வரவிட்டார் ....*

(இதன்பொருள்.)

கீர்த்திபொங்கிய கடல்சூழ்ந்த நாகபட்டணத்தில் நிதிபதியெல்கிறபெயரைப்பெற்று உலகத்தில்பெருமைகொண்ட புகழை உடையஒருசெட்டிபெற்றகுலத்திற்பிறந்தபிள்ளைக்குத் தேடக்கிடையாதநல்லமரபிற்பிறந்தபுனிதவதியாரைக்கலியாணப்பெண்ணாகப்பேச மேல்விடுகள்நிறைந்த காரைக்காலென்னும் வளம்பொருந்திய நகரத்தில் மனிதர்களை அனுப்புவித்தார்கள். (எ-று) (அ)

வந்தமூதறிவோர்கண்மங்குறித்தமனைபுகுந்து .... *
தந்தையாந்தனதத்தன்றனைநோக்கிநீபயந்த ....*
பைந்தொடியைநிதிபதிமைந்தன்பரமதத்தனுக்கு ... .*
முந்தைமரபினுக்கேற்குமுறைமைமணம்புரிகென்றார் ....*

(இதன்பொருள்.)

பெண்பேசவந்த முதிய அறிவையுடையோர்கள் கலியாணத்
தைக்குறித்து அவர்வீட்டிற்போய்ப் பெண்ணுக்குத்தகப்பனு
கிய தனதத்தனைநோக்கி நீர்பெற்றபெண்ணை நிதிபதியின்பிள்
ளையாகிய பரமதத்தனுக்கு நம்முடைய பழைய சம்பந்தத்து
க்கு ஏற்ற முறைமைப்படி கலியாணஞ்செய்துகொடுமென்று
கேட்டார்கள்.—(எ-று) (௮)

மற்றவனுமுறைமையினான்மணமிசைந்துசெலவிடச்சென்.. *
றுற்றவர்களுரைகேட்டநிதிபதியுமுயர்சிறப்புப்....... ... ..*
பெற்றனன்போலுவந்துதனிப்பெருமகற்குத்திருமலியுஞ் *
சுற்றமுடன்களிகூர்ந்துவதுவைவினைத்தொழில்பூண்டான்..*

(இதன்பொருள்.)

தனதத்தனும் முறைமைப்படி தன்பெண்ணைக்கலியாணஞ்செ
ய்துகொடுக்க இசைந்து வந்தவர்களை யனுப்புவித்தான் அவர்
கள்போய் நடந்ததைச் சொல்லக் கேள்வியுற்ற நிதிபதியென்
போனும் உயர்ந்தசெல்வத்தைப்பெற்றவன்போல் மகிழ்ச்சிய
டைந்து ஒப்பற்ற தன்னுடையபெருமைபொருந்தியமகனுக்கு
ப்பாக்கியவந்தர்களாகியசுற்றத்தாரோடு ஆனந்தத்தை அடைந்
து மணத்தொழிலைநடத்த ஆரம்பஞ்செய்தான்.—(எ-று) (௯)

(இதன்பொருள்.)

மணமிசைந்தநாளோலைசெலவிட்டுமங்கலநா .... *
ளணையவதுவைத்தொழில்களானவெலாமமைவித்தே ......*
யிணையலங்கன்மைந்தனையுமணவணியினெழில்விளக்கிப் ....*
பணைமுரசமெழுந்தார்ப்பக்காரைக்காற்பதிபுகுந்தார் .....*

(இதன்பொருள்)

கலியாணஞ்செய்வதற்கு நிச்சயித்தநாளின்னதென்று ஓலை அ
னுப்பி முகூர்த்தநாள் வந்ததும் மணத்துக்கு வேண்டியவை
க ளெல்லாவற்றையும் சித்தப்படுத்திப் பூங்கொத்துக் களால்
அமைந்த மாலையைத் தரித்த பிள்ளையையும் மணக்கோலஞ்
செய்வதனால் அதிகவழகை அடையும்படிசெய்து புள்ளாங்கு

மூல்களும்-முரசவாத்தியங்களும்-எழுந்துமுழங்கக்காரைக்கா
லென்னும்நகரத்திற்குச்சென்றார்கள்.—(எ-று) (௰)

அளிமிடைதார்த்தனதத்தனணிமாடத்துட்புகுந்து .... ..*
தெளிதருநூல்விதிவழியேசெயன்முறைமைசெய்தமைத்துத்
தளிரடிமென்னகைமயிலைத்தாதவிழ்தார்க்காளைக்கு ....*
களிமகிழ்சுற்றம்போற்றக்கலியாணஞ்செய்தார்கள் .... ..*

(இதன்பொருள்.)

வண்டுகள்நெருங்கிய மாலையை உடைய தனதத்தனுடைய அழகுபொருந்திய மாளிகையினுள்ளேபுகுந்து தெளிவுபெற்றசாஸ்திரவிதிப்படி செய்யவேண்டிய சடங்குகளெல்லாம்செய்து தளிர்போன்றபாதத்தையும் மேன்மையாகிய நகையையும் உடைய புனிதவதியாரென்னும்பெண்ணை மகரந்தங்கள் சிந்துகின்ற பூமாலையை உடைய பரமதத்தனுக்குக் களிகூர்ந்திருக்கும் உறவினர்கள்வாழ்த்தக்கலியாணம்செய்வித்தார்கள்.—(எ-று)

தங்கண்மாமணவினைகண்முடித்தியல்பின்வைகுநா ....*
டங்கள்குடிக்கரும்புதல்வியாதலினாற்றனதத்தன் ....*
பொங்கொலிநீர் நாகையினிற்போகாமேகணவனுட......*
னங்கணமர்ந்துறைதிருப்பவணிமாடமருங்கமைத்தான் .... *

(இதன்பொருள்.)

மங்களகரமாகிய கலியாணச்சடங்குகளை முடித்து இயல்பாகச் சிலநாள் அவ்விடத்திலேவாசஞ்செய்துகொண்டிருக்கும்போது தனதத்தனானவன் தன்னுடைய குடிக்குப் புனிதவதியார் அருமையாகப்பிறந்த பெண்ணாதலால் கணவனாகியபரமதத்தனோடு நாகைக்குப் போகாமல் காரைக்காலிலேதானே அமர்ந்து இன்பத்தோடிருக்க அழகுபொருந்திய மாளிகையொன்று தன்வீட்டிற்கு அருகில்கட்டினான்.—(எ-று) (௰௨)

மகட்கொடையின்மகிழ்சிறக்கும்வரம்பிறனங்கொடுத்ததற்பி.
னிகர்ப்பரியபெருஞ்சிறப்பினிதிபதிதன்குலமகனுந் .... ..*
தகைப்பில்பெருங்காதலினாற்றங்குமனைவளம்பெருக்கி... ..*
மிகப்புரியுங்கொள்கையினின்மேம்படுதல்மேவினான் .. ..*

(இதன்பொருள்.)

தனதத்தன்மகளைக் கலியாணஞ்செய்விக்கும்போது கொடுக்குமுறைமைப்படி சீதனமாக மகிழ்ச்சியை உண்டாக்கும் அளவிலலாத திரவியத்தைக்கொடுத்தபடியினாலே நிதிபதியின்மக

னாகிய பரமதத்தனும் அடக்கக்கூடாத பெரிய ஆசையோடுவ திர்த்த இல்வாழ்க்கைக்குவேண்டிய இலாபத்தைப் பெருகச்செய்து சீதனமாககிடைத்தபணத்தை விருத்திசெய்யுந்தன்மையில பெருமுயற்சிகொண்டான்.—(எ-று) (௰௩)

ஆங்கவன்றனில்வாழ்க்கையருந்துணையாயமர்கின்ற... ....*
பூங்குழலாரவர்தாமும்பொருவிலடையார்திருவடிக்கீ ... ...*
ழோங்கியவன்புறுகாதலொழிவின்றிமிகப்பெருகப்......*
பாங்கில்வருமனையறத்தின்பண்புவழாமைப்பயில்வார்... .*

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட பரமதத்தனுடைய இல்வாழ்க்கைக்கு உதவியாயமர்ந்திருக்கும் பூங்கொடியை ஒத்தபுனிதவதியாரும்போர்செய்யும் ரிஷபத்தைவாகனமாகவுடையபரமசிவனுடையபாதங்களில்வைத்த பத்தியென்கிற ஒப்பற்ற காதலானது ஒழியாமல் மேன்மேலும்பெருக-பாங்காக நடந்துவரும் இல்லறத்திற்குச்செய்யவேண்டியநடத்தைகள்யாதும்தவறாமல்நடப்பார் (எ-று) (௰௪)

நம்பரடியாரணைந்தாலல்லமுதளித்துஞ் ....*
செம்பொன்னு நவமணியுஞ்செழுந்துகிலுமுதலான.. ....*
தம்பரிவினாலவர்க்குத்தகுதியின்வேண்டுவகொடுத்தும் .... *
வும்பர்பிரான்றிருவடிக்கீழுணர்வுமிகவொழுகுநாள் ....*

(இதன்பொருள்.)

பரமசிவனுடைய அடியார்கள்வந்தால் நல்ல அமுதுபடைத்தும் சிவந்தபொன்னும் நவரத்னங்களும் இழைபெற்றவஸ்திரங்களு முதலாகவுள்ளவற்றிற்றம்முடைய வேண்டுதலோடு அவர்களுக்குத்தகுதிப்படிவேண்டியவற்றைக்கொடுத்துச்சுவாமியினுடையபாதத்தில் அறிவுசென்றுகொண்டிருக்கும்படி நடக்குங்காலத்தில்.—(எ-று) (௰௫)

பாங்குடையநெறியின்கட்பயில்பரமதத்தனுக்கு.. .... ..*
மாங்கனிகளோரிரண்டுவந்தணைந்தார்சிலர்கொடுப்ப.......*
வாங்கவைதான்முன்வாங்கியவர்வேண்டுங்குறையளித்தே... *
யீங்கிவற்றையில்லத்துக்கொடுக்கவெனவியம்பினான்......*

(இதன்பொருள்)

நல்லமார்க்கத்தில்செல்லுகின்ற பரமதத்தனுக்கு-காரியமுலமாகஅவன்பால்வந்தவர்களிற்சிலர்ஒப்பற்ற இரண்டுமாம்பழங்

கனிகொடுக்க அவைகளைக்காணிக்கையாகப்பெற்றுக்கொண்டு அவர்கள்விரும்பினவற்றைக்கொடுத்துவிட்டுஇப்பழங்களைவீட்டில் கொடுத்துவிடுகவென்றுசொல்லியனுப்பினான்.(எ-று)

கணவன்றான்வரவிடுத்தகனியிரண்டுங்கைக்கொண்டு ....*
மணமலியுமலர்க்கூந்தன்மாதரார்வைத்ததற்பின் ....*
பணவரவம்புனைந்தருளும்பரமனார்திருத்தொண்ட ....*
ருணவின்மிகுவேட்கையினாலொருவர்மனையுட்புகுந்தார் .. *

(இதன்பொருள்)

கணவன் அனுப்பின இரண்டு மாம்பழங்களை கையிற்பற்றிக் கொண்டு வாசனைபொருந்திய புஷ்பங்களைத்தரித்த கூந்தலையுடைய புனிதவதியார்வீட்டில் வைத்தபின்பு படம்பொருந்திய பாம்பை அணிந்த பரமசிவனுருடைய தொண்டர் ஒருவர் உணவுவேண்டியவிருப்பத்தால் பரமதத்தன்வீட்டில்புகுந்தார் — (எ-று) (௰௭)

வேதங்கண்மொழிந்தபிரான்மெய்த்தொண்டர்நிலைகண்டு . *
நாதன்றனடியாரைப்பசிதீர்ப்பேனெனநண்ணிப் ....*
பாதங்கள்விளக்கநீர்முன்னளித்துப்பரிகலம்வைத் .... .. *
தேதந்தீர்நல்விருந்தாவின்னடிசிலூட்டுவார் .... *

(இதன்பொருள்-)

வேதங்களைக் கட்டளையிட்டருளிய பரமசிவனுடைய அடியவர் உணவுவேண்டிய நிலைமையைக்கண்டு சுவாமியின்தொண்டர்க்குப் பசிபோக்குவேன் என்று பாதங்களைக்கழுவுதற்கு நீரை முதலில்கொடுத்துக்கலம்வைத்துக்குற்றமற்றநல்லவிருந்தாக எண்ணிச்சுவையுள்ளசோற்றை உண்பிப்பாராயினார்(எ-று)(௰௮)

கறியமுதங்குதவாதேதிருவமுதுகைகூட .. ..*
வெறிமலர்மேற்றிருவனையார்விடையவன்றனடியாரோ ....*
பெறலரியவிருந்தானாற்பேறிதன்மேலில்லையெனு ....*
மறிவினாலவரமுதுசெய்வதனுக்காதரிப்பார் ....*

(இதன்பொருள்)

அந்தவேளையில் கறியமுது-பாகம்பண்ணுமையில் உதவாததாயிருந்து அன்னமாத்திரம் உதவ வாசனைபொருந்திய தாமரை மலரில் இருக்கும் ஸ்ரீதேவியை ஒத்த புனிதவதியார் பரமசிவனுடைய அடியவரோபெறுதற்கு அரியவிருந்தாளியாகக்கிடைத்த போது இதைவிடப்பெறவேண்டிய பேறு நமக்கு ஒன்றுமில்

லையென்றும் அறிவையுடையவராய் அவர்பசியோடிராமல்எப்படியாயினும் விரைவில் அமுதுகொள்ளவேண்டுமென்றுவெஞ்சனத்தைத் தேடுவாராயினார்.—(எ-று) (௰௯)

இல்லாளன் வைக்கவெனத்தம்பக்கன்முன்னிருந்த ....*
நல்லநறுமாங்கனிகளிரண்டினிலொன்றைக்கொண்டு .... *
வல்விரைந்துவந்தணைந்துபடைத்துமனமகிழ்ச்சியினா .....*
லல்லல்தீர்ப்பவரடியார்தமையமுதுசெய்வித்தார் ....*

(இதன்பொருள்.)

தம்முடைய புருஷின் பத்திரமாகவைத்து வைக்கும்படிசொல்லித் தம்மிடத்தில் முன்னதாகவேயிருந்த மாதுரியமுள்ள உயர்ந்த இரண்டுகனிகளில்ஒருகனியை எடுத்துக்கொண்டுசீக்கிரத்தில்வந்து படைத்து மகிழ்ச்சியோடு பாபத்தைப்போக்கும் ஆண்டவருடைய அடியாரை உண்ணும்படிசெய்தார்.—(எ-று)

மூப்புறுமத்தளர்வாலுமுதிர்ந்துமுடுகியவேட்கைத் .. ....*
தீப்பசியினிலையாலுமயர்ந்தணைந்ததிருத்தொண்டர் ......*
வாய்ப்புறுமென்சுவையடிசில்மாங்கனியோடினிதருந்திப்..*
பூப்பயின்மென்குழன்மடவார்செயலுவந்துபோயினார் ....*

(இதன்பொருள்.)

மூப்பினாலுண்டாகிய தளர்ச்சியாலும் உண்ணவேண்டுமென்று மேற்பட்டுமுடுகும் ஆசையோடுகூடியமிகுந்தபசியினுடையநிலையையாலும் இளைப்படைந்து வந்த திருவடியார் உருசியுள்ள மெல்லியசோற்றை மாம்பழத்தோடு இனிதாக உண்டுபுஷ்பங்கள்தங்கிய மென்மையாகிய கூந்தலையுடைய புனிதவதியாருடைய அன்பின்செய்கையை நோக்கிச் சந்தோஷமுற்றுப்போய்விட்டார்.—(எ-று) (௨௧)

மற்றவர்தாம்போயினபின்மனைப்பதியாகியவணிக ....*
னுற்றபெரும்பகலின்கணோங்கியபேரில்லெய்திப் .... .. *
பொற்புறமுன்னீராடிப்புகுந்தடிசில்புரிந்தயிலக் .... .. *
கற்புடையமடவாருக்கடப்பாட்டினூட்டுவார் .. ..*

(இதன்பொருள்.)

அந்த அடியார்போயினபின்பு அவ்வீட்டிற்குத்தலைவனாகிய பரமதத்தன் நடுப்பகலில் உயர்வாகிய தன்மாளிகைக்குவந்து முதலில் அழகாகநீரில்ஸ்நானஞ்செய்து உட்கார்ந்துவிரும்பிச்சோற்றுண்ணக் கற்பினையுடைய புனிதவதியாரும் உபசாரத்தோடுகணவனை உண்பிப்பாராயினார்.—(எ-று) (௨௨)

இன்னடிசில்கறிகளுடனெய்தமுறையிட்டதற்பின் .... *
மன்னியசீர்க்கணவன்றான்மனையிடமுண்வைப்பித்த... ....*
நன்மதுரமாங்கனியிலிருந்ததனைநறுங்கூந்த.... .. ....*
லன்னமனையார்தாமுன்கொடுவந்துகலத்தளித்தார்..... ......*

(இதன்பொருள்.)

இனிதாகிய அன்னத்தைக் கறிகளோடுமுறைப்படி படைத்தபின்பு நிலைபெற்றகீர்த்தியையுடைய கணவன் வீட்டிலுண்வைக்கும்படிசொல்லியிருந்த நல்லமாதுரியமுள்ள மாங்கனிகளின் மிகையாயிருந்த ஒருபழத்தைநடையில் அன்னம்போன்றவாசனையுள்ள கூந்தலையுடைய புனிதவதியார் கொண்டுவந்து கலத்தில்படைத்தார்.—(எ-று) (உங)

மனைவியார்தாம்படைத்தமதுரமிகவாய்த்தகனி .... *
தனைநுகர்ந்தவினியசுவையாராமைத்தார்வணிக ....*
னினையதொருபழமின்னுமுளதனையிடுகவென .... *
வனையதுதாங்கொண்டுவரவணைவார்போலங்ககன்றார் .... *

(இதன்பொருள்.)

மனைவியாராகிய புனிதவதியார் படைத்தமிகவும்மாதுரியமுள்ளபழத்தை உண்டு அதனுடைய இனியசுவையால் திர்ப்தி அடையாமல் மாலையைத்தரித்தபரமதத்தன் இப்படிப்பட்ட பழமொன்று இன்னும் உண்டாயிருக்கிறபடியால் அதனையும் இடுகவென்றுசொல்ல அதைக்கொண்டுவந்து கொடுக்கப்போகிறவர்போற்போயினார்.—(எ-று) (உச)

அம்மருங்குநின்றயர்வாரருங்கனிக்கங்கென்செய்வார்... ..*
மெய்மறந்துநினைந்துற்றவிடத்துதவும்விடையவர்தா ... ..*
டம்மனங்கொண்டுணர்தலுமேயவரருளால்வார்குழலார் .. *
கைமருங்குவந்திருந்ததிமதுரக்கனியொன்று ....*

(இதன்பொருள்)

போனவிடத்திலேயேநின்றுகொண்டுவருத்தப்பட்டார் அருமையானமற்றொருபழத்துக்கு என்னசெய்வார் - தேகமறந்தவராகி ஆபத்துநேரிட்டகாலத்தில் நினைந்தால் அப்போதேவந்து அநுக்கிரகஞ்செய்யும் பரமசிவனுடைய பாதங்களைத் தம்முடையமனதில் தியானஞ்செய்ய உடனே அவருடையகிருபையால் மாலையைத்தரித்த கூந்தலையுடைய புனிதவதியாருடைய கையில் அதிகத்தித்திப்புள்ள ஒருமாம்பழம் வந்திருந்தது.—(எ-று) (உரு)

மற்றதனைக்கொடுவேற்றுமகிழ்ந்திடலுமயின்றகனி .... *
யுற்றசுவையமுதினுமேற்படவுளதாலிடவிதுதான் .... *
முற்றருமாங்கனியன்றுமூவுலகிற்பெறற்கரிதால் .. .. *
பெற்றதுவேறெங்கென்றுபெய்வளையார்தமைக்கேட்டான். *

(இதன்பொருள்.)

அப்படிகையில்வந்திருந்த பழத்தைக்கொண்டுவந்து விருப்பத்தோடு இட்டதும் சாப்பிட்டமாத்திரத்தில்அப்பழத்தினுடைய உருசி தேவாமிர்தத்தைப்பார்க்கிலும் மேற்பட்டிருந்தபடியால் இப்போது இட்டபழம் முன்னேநான்கொடுத்தபழம்அன்று-இது மூன்றுலகங்களிலும் பெறுவதற்கு அருமையானது முன்னிருந்த வேறொருபழம் எங்கேபோயிற்றென்று வளையலைத்தரித்தமனைவியாரைக்கேட்டான்.—(எ-று) (உசா)

அவ்வுரைகேட்டலுமடவாரருளுடையாளித்தருளுஞ் .... *
செவ்வியபொருள்விளம்புந்திறமன்றென்றுரைசெய்யார் .. *
கைவருகற்புடைநெறியார்கணவனுரைகரவாமை .... *
மெய்வழியென்றெனவிளம்பல்விடமாட்டார்விதிர்ப்புறுவார்,

(இதன்பொருள்.)

அந்தவார்த்தையைக்கேட்டதும் புனிதவதியார் பத்தியுள்ளவர்கள்மேல் கருணைகூர்ந்தசுவாமி ஆபத்துவேளையில் பழங்கொடுக்கத்தக்க அன்பு தம்மேல்வைத்திருப்பதை வெளியிடுவதுதகுதியன்றென்று சொல்லமாட்டார் ஒழுக்கமுள்ள கற்புவழியில் நிற்கும் அந்தமாதானவர் புருஷனுக்கு ஒளித்துச்சொல்வதே நல்லதன்றென்றுஎண்ணுவார் இந்தப்பிரகாரம் வருந்துவாராயினர்.—(எ-று) (உஎ)

செய்தபடிசொல்லுவதேகடனென்னுஞ்சீலத்தார் .... *
மைதழையுங்கண்டர்சேவடிகண்மனத்துறவணங்கி .... .. *
யெய்தவருங்கனியளித்தாரியாரென்னுங்கணவனுக்கு ...... *
மொய்தருபூக்குழன்மடவார்புகுந்தபடிதனைமொழிந்தார். *

(இதன்பொருள்)

செய்தபிரகாரம்சொல்லுகிறதே தகுதியென்றெண்ணும் ஒழுக்கத்தை உடையவராய் விஷம்தங்கிய கழுத்தினையுடைய பரமசிவனது பாதங்கள்மனதில்பதிய வழிபாடுசெய்து கிடைப்பதற்கு அருமையாகிய பழத்தைக்கொடுத்தவர்கள் யாவரென்று கேட்கும் நாயகனுக்கு மொய்த்துக்கொண்டிருக்கும் புஷ்ப

ங்கள்தங்கிய கூந்தலையுடைய புனிதவதியார் சுவாமியின் அனுக்கிரகத்தால் கிடைத்ததைச்சொன்னார்.—(எ-று) (உஅ)

ஈசனருளெனக்கேட்டவில்லிறைவனதுதெளியான் ....*
வாசமலர்த்திருவனையார்தமைநோக்கிமற்றிதுதான் .. .. *
தேசுடையசடைப்பெருமான்றிருவருளேலின்னமுமோர். .*
ஆசில்கனியவனருளாலழைத்தளிப்பாயெனமொழிந்தான் .*

(இதன்பொருள்.)

பரமசிவனுடைய கிருபையால் கிடைத்ததென்பதைக்கேட்ட பரமதத்தன் அதுநிசமென்றுதேறாதவனாகி-மணமுற்ற தாமரைமலரில் இருக்கும் லட்சுமிதேவியை ஒத்த புனிதவதியாரைப்பார்த்து இப்போதுநீகொடுத்தபழம் விளக்கமுற்றசடையினராகிய சுவாமியின் திருவருளால் வந்திருக்குமாயின் இன்னும் இதுபோன்ற குற்றமற்றமாங்கனி அவருடையகிருபையால் வரவழைத்துக்கொடுவென்றுசொன்னான்.—(எ-று) (உகூ)

பாங்ககன்றுமனைவியார்பணியணிவார்தமைப்பரவி ....*
யீங்கிதளித்தருளீரேலென்னுரைபொய்யாமென்ன .... ..*
மாங்கனியொன்றருளால்வந்தெய்துதலுமற்றதனை ....*
யாங்கவன்கைக்கொடுத்தலுமேயதிசயித்துவாங்கினான் ....*

(இதன்பொருள்)

அவ்விடத்தில் நின்றும் நீங்கிப்புனிதவதியார் பாம்பைத்தரிக்கும் சுவாமியைவணங்கி இப்போது நான்விரும்பினபடி ஒரு பழங்கொடுக்காவிட்டால் என்வார்த்தை பொய்யாய்விடுமென்றுசொல்ல-பின்பு ஒருமாம்பழம் சுவாமியினுடைய கிருபையால் புனிதவதியார்கையில்வந்தவுடனே அதைப் பரமதத்தன் கையில்கொடுத்தாள் அவன் உடனே ஆச்சரியப்பட்டு வாங்கினான்.—(எ-று) (௩௰)

(வேறு.)

வணிகனுந்தன்கைப்புக்கமாங்கனிதன்னைக்காணான் .... *
றணிவரும்பயமேற்கொள்ளவுள்ளமுந்தடுமாறெய்தி ....*
யணிகுழலவளைவேறோரணங்கெனக்கருதிநீங்கும். [குநாளில்
துணிவுகொண்டெவர்க்குஞ்சொல்லான்றொடர்வின்றியொழு

(இதன்பொருள்.)

பரமதத்தனும் தன்கையிலிருந்த மாம்பழத்தை உடனேகாணாதவனாகி மிகுந்தபயம் உண்டாகி மனது தடுமாற்றங்கொண்டு மாலையை அணிந்த கூந்தலையுடைய புனிதவதியாரை ஒப்பற்ற

தெய்வப்பெண்களில் ஒருவராயிருக்கவேண்டுமென்று நினைத்து எப்படியாவது இவரைப்பிரிந்து வாழவேண்டுமென்கிற நம்பிக்கையை உடையவராகி இந்தச்செய்தியை ஆர்க்குஞ்சொல்லாமல்அவரோடுசம்பந்தமில்லாமல்வாழும்நாளில்.—(எ-று)

விடுவதேயெண்ணமாகமேவியமுயற்சிசெய்வான் .... *
படுதிரைப்பரவைமீதுபடர்கலங்கொண்டுபோகி .... *
நெடுநிதிகொணர்வேனென்னநிரந்தபல்கிளைஞராகும் .... *
வடுவில்சீர்வணிகமாக்கண்மரக்கலஞ்சமைப்பித்தார்கள் .. *

(இதன்பொருள்)

புனிதவதியாரைவிட்டுவிடுவதே எண்ணமாகக்கொண்டு அதற்குத்தகுந்த முயற்சிசெய்வோனாகிய பரமதத்தன் அலைகளையுடைய சமுத்திரத்தின்மேலாகச்செல்லும்கப்பலிலேறிப்போய்த் திரளானதிரவியத்தைக்கொண்டு வருகிறேனென்று சொல்ல இவனுடையமுயற்சியால் குற்றமற்றசீர்த்தியை உடைய நிறைந்திருக்கும் உறவினராகிய வணிகர்கள் ஒருகப்பல்செய்யத் தொடங்கினார்கள்.—(எ-று) (௬௨)

கலஞ்சமைத்ததற்குவேண்டுங்கம்மியருடனேசெல்லும் .... *
புலங்களில்விரும்புபண்டம்பொருந்துவநிரம்பவேற்றிச் .. *
சலந்தருகடவுட்போற்றித்தலைமையாநாய்கன்றானு ... . *
நலந்தருநாளிலேறிநளிர்திரைக்கடன்மேற்போனான். .... *

(இதன்பொருள்.)

கப்பல் ஒன்று அமைத்து அதையோட்டுதல்முதலாகிய தொழில்களுக்கு வேண்டிய மாலுமி முதலானவர்களோடு தான் போகவேண்டுமென்று நினைத்த தேசாந்தரங்களில் அருமையாயிருக்கின்றனவும், இந்நாட்டில் எளிமையிற் கிடைக்கின்றனவுமாகிய பண்டங்களைக்கொண்டு மரக்கலம்நிறையவேற்றிக்ஷேமமாகப்போய்ச் சேரவேண்டுமென்று வருணபகவானைத் தொழுது தலைமையான் வணிகனாகிய பரமதத்தனும் நல்லநாளிற்புறப்பட்டுக்கப்பலேறிக்குளிர்ந்த அலைகளையுடைய கடலின்மேற்போயினான்.—(எ-று) (௬௩)

கடன்மிசைவங்கமோட்டிக்கருதியதேயந்தன்னில் .... *
அடைவுறச்சென்றுசேர்ந்தங்களவில்பல்வளங்கண்முற்றி .. *
யிடைசிலநாட்கணீங்கமீண்டுமக்கலத்திலேறிப் .... *
படர்புனற்கன்னிநாட்டோர்பட்டினமருங்குசார்ந்தான் .. *

(இதன்பொருள்.)

சமுத்திரத்தின்மேலாகக் கப்பலைநடத்தித் தான்போகவேண்டுமென்று நினைத்ததேசத்தில் சீக்கிரத்தில்போய்ச் சேர்ந்து அவ்விடத்தில் தான்கொண்டுபோனசரக்குகளைக்கொடுத்துத்தன்னுடைய நாட்டில் அருமையாயிருக்கின்ற பலவளமுள்ள பண்டங்களைப்பெற்று நடுவில்சிலநாள்கள்கழிய மறுபடியும் அந்த மரக்கலத்திலேறி ஓடுகின்ற நீரினது வளத்தையுடைய பாண்டிநாட்டில் ஒருபட்டினத்தை அடைந்தான்.—(எ-று) (௫௪)

அப்பதிதன்னிலேறியலகில்பலபொருள்களாக்கும் .... ..*
மொப்பின்மாநிதியமெல்லாமொருவழிபெருகவுய்த்து.. *
மெய்ப்புகழ்விளங்குமவ்வூர்விரும்பவோர்வணிகன்பெற்ற. *
செப்பருங்கன்னிதன்னைத்திருமலிவதுவைசெய்தான் .... *

(இதன்பொருள்.)

அந்நகரில்வந்து தான்கொண்டுவந்த பலசரக்குகளையும் இத்தேசத்தாருக்கு விற்றுத் தேடிய ஒப்பற்ற திரவியத்தையெல்லாம் வட்டியினால் பெருகும்படிசெய்து ஓரிடத்தில் வைத்து மெய்ம்மையானபுகழால் விளங்குகின்ற அவ்வூரார் களிப்படைய ஒருசெட்டிபெற்ற ஒருபெண்ணை மிகுந்தசிறப்போடு கலியாணஞ்செய்துகொண்டான்.—எ-று) (௫௫)

பெறலருந்திருவினானைப்பெருமணம்புணர்ந்துமுன்னை .... *
யறலியனறுமென்கூந்தலணங்கனாடிறத்திலற்றம் .... *
புறமொருவெளியுறாமற்பொதிந்தசிந்தனையினோடு .... .. *
முறைமையின்வழாமைவைகிமுகமலர்ந்தொழுகுநாளில்.-- *

(இதன்பொருள்)

பெறுவதற்கரிய திருமகளையொத்தபெண்ணைப் பெருமையுறக் கலியாணஞ்செய்துகொண்டு முன்பு தான் விவாகஞ்செய்து கொண்ட கருமணல்போன்று வாசனைகொண்டகூந்தலையுடைய தெய்வப்பெண்போன்ற புனிதவதியாருடைய மகிமையுள்ள செய்கையை மறந்தும் வெளிப்படுத்தாமல் மனதின் கண்ணே அடக்கிக்கொண்டு இல்லறமுறைமையில் தவறாமல் இருந்து களிப்போடு வாழும்நாளில்.—(எ-று) (௫௬)

முருகலர்ச்சோலைமூதூரதன்முதல்வணிகரோடு .... *
பெருநிதிக்கிழவனென்னவெய்தியதிருவின்மிக்குப் ....*
பொருகடற்கலன்கள்போக்கும்புகழினான்மனைவிதன்பாற்.[ன்
பெருகொளிவிளக்குப்போலோர்பெண்கொடியரிதிற்பெற்றா

(இதன்பொருள்)

தேன்பொருந்திய புஷ்பங்களையுடைய சோலைசூழ்ந்த பழைமையாகிய அந்நகரில் இருக்கின்றவணிகர்களோடு குபேரன்போல் செல்வத்தால்பெருமைபெற்று இருந்து அலைகள்மோதும்கடலில் கப்பல்களை வியாபாரத்துக்குச்செலுத்துவதில் இவனே சிறந்தனவானென்று பேர்பெற்றவனாகிய பரமதத்தன் தன்மனைவியினிடமாக பரம்புகின்ற ஒளியையுடையவிளக்குப்போலும் ஒருகொடிபோன்ற பெண்குழந்தையை அருமையாகப்பெற்றான்.—(எ-று) (௩௭)

மடமகடன்னைப்பெற்றுமங்கலம்பேணித்தான்முன் .... *
புடனுறைவஞ்சிநீத்தவொருபெருமனைவியாரைத் .... *
தொடர்வறநினைந்துதெய்வத்தொழுகுலமென்றேகொண்டு *
கடனமைத்தவர்தந்நாமங்காதல்செய்மகவையிட்டான் .... *

(இதன்பொருள்.)

மடப்பத்தையுடைய பெண்ணைப்பெற்று அதற்குச்செய்யவேண்டிய மங்களகரமானகாரியத்தைச்செய்து தான்முன்பு கூடவிருந்துவாழ்கிறதற்கு அஞ்சி நீக்கிய ஒப்பற்றபெருமைபொருந்திய மனைவியாராகிய புனிதவதியாரை எல்லாராலும் தொழப்படும் தெய்வகுலத்தில் வந்தவரென்று நினைத்து அவர்க்கும் தனக்கும் ஒருசம்பந்தமும் இல்லாமல் இருக்கவேண்டுமென்றுநினைத்து நாமகரணம்செய்கிறகாலத்தில் வேண்டியசிறப்புச்செய்து தன் பெண்ணுக்கு புனிதவதியாரென்கிற பெயரையேதரித்தான்.—(எ-று) (௩௮)

இந்நிலையிவணிங்கெய்தியிருந்தனனிப்பானீடுங் .... *
கன்னிமாமதில்சூழ்மாடக்காரைக்கால்வணிகனான .... *
தன்னிகர்கடந்தசெல்வத்தனதத்தன்மகளார்தாமு .... .. *
மன்னியகற்பினோடுமனையறம்புரிந்துவைக .... *

(இதன்பொருள்)

இந்தப்பிரகாரம் இவனிங்கேயிருக்கும்நாளில் நீண்டு அழியாமையைப்பெற்ற பெரியமதில்சூழ்ந்தமாளிகைகளையுடைய காரைக்காலில்வாழும் வணிகனாகிய ஒப்பற்றசெல்வத்தை உடைய தனதத்தனுடைய மகளார்புனிதவதியாரும்உறுதியானகற்போடுஇல்லறத்தை வழுவாமற்செய்துகொண்டுவர.—(எ-று) (௩௯)

விளைவளம்பெருக்கவங்கமீதுபோம்பரமதத்தன் .... *
வளர்புகழ்பாண்டிநாட்டோர்மாநகர்தன்னின்மன்னி .... *

யளவின்மாநிதியமாக்கியமர்ந்தினிதிருந்தானென்று.... ...*
ளொளிமணிக்கொம்பன்னார்கிளைஞர்தாங்கேட்டாரன்றே*

(இதன்பொருள்)

மிகுந்த இலாபத்தைத்தேடும்படி கப்பலில்மேற்போன பரமதத்தன் புகழ்மேலோங்கிய பாண்டிநாட்டில் ஒருநகரத்தில் அடைந்து அளவில்லாத பணத்தைத்தேடி அவ்விடத்திலேதானேஇனிதாக வாசஞ்செய்கிறுனென்று பரவுகின்ற ஒளியையுடைய ரத்தினக்கொம்புபோன்ற புனிதவதியாருடைய சுற்றத்தார்கேட்டார்கள்.—(எ-று) (௪௰)

அம்மொழிகேட்டபோதேயணங்கனார்சுற்றத்தாரும் .... ..*
தம்முறுகிளைஞர்ப்போக்கியவர்நிலைதாமுங்கேட்டு .. ..*
மம்மர்கொண்மனத்தராகிமற்றவனிருந்தபாங்கர் .... [ர்
கொம்மைவெம்முலையினாளைக்கொண்டுபோய்விடுவதென்பா

(இதன்பொருள்.)

அந்தச் சொல்லைக்கேட்டவுடனே புனிதவதியாருடைய சுற்றத்தார்கள் தம்முடையமனிதர்களை அனுப்பி அந்தப்பரமதத்தன் முதல்மனைவியாளை வெறுத்திருக்கிறதாகச் சொல்லக்கேட்டுச்சஞ்சலமுற்ற மனதை உடையவராகி அவனிருக்குமிடத்துக்குப் புனிதவதியாரைத்தாமேகொண்டுபோய்விடவேண்டுமென்று நிச்சயித்தார்கள்.—(எ-று) (௪௧)

மாமணிச்சிவிகைதன்னின்மடநடைமயிலன்னாரைத் ......*
தாமரைத்தவிசில்வைகுந்தனித்திருவென்னவேற்றிக் .... ..*
காமருகவிகைவிழ்ந்துக்காதல்செய்சுற்றத்தாரும் .... .. *
தேமொழியவருஞ்சூழச்சேணிடைக்கழிந்துசென்றார் ....*

(இதன்பொருள்)

உயர்ந்த மணிகள்பதித்த பல்லக்கில் அழகியநடையை உடைய மயில்போன்ற புனிதவதியாரைத்தாமரைமலராகிய ஆசனத்திலிருக்கும் திருமகளைப்போலும் என்று கண்டோர்சொல்லும்படி ஏற்றி அழகுபொருந்திய குடைகள்பிடித்து ஆசையுற்ற பந்துக்களும் பின்னும்சிலமாதர்களும் பிரயாணத்தில் வெகுதூரந்தொலையப்போயினார்கள்.—(எ-று) (௪௨)

சிலபகல்கடந்துசென்றுசெந்தமிழ்த்திருநாடெய்தி .. ....*
மலர்புகழ்ப்பரமதத்தன்மாநகர்மருங்குவந்து ... ...*
குலமுதன்மனைவியாரைக்கொண்டுவந்தணைந்ததன்மை, ...*
தொலைவில்சீர்க்கணவனார்க்குச்சொல்லிமுன்செல்லவிட்டார்*

(இதன்பொருள்)

சிலநாள்கழியப்போய்ச் செம்மையாகிய தமிழ்வழங்கும் பாண்டிநாட்டிற்குவந்து பரவியபுகழைப்பெற்ற பரமதத்தன்வாழ்ந்திருக்கும் பெருமைபொருந்திய பட்டினத்துக்கு அருகில் வந்து சிரேஷ்டையாகியமுதல்காதலியாராகிய புனிதவதியாரை அழைத்துக்கொண்டுவந்த சமாசாரத்தை அவருடையகணவனாகிய பரமதத்தனுக்குச்சொல்லினார்கள்.—(எ-று) (௪௩)

வந்தணைவுரையுமாற்றங்கேட்டலும்வணிகன்றானுஞ் ... . *
சிந்தையிலச்சமெய்திச்செழுமணம்பின்புசெய்த .... *
பைந்தொடிதனையுங்கொண்டுபயந்தபெண்மகவினோடு. .. *
முந்துறச்செல்வேனென்றுமொய்குழலவர்பால்வந்தான் ... *

(இதன்பொருள்.)

பரமதத்தன் தன்மனைவியார் வந்தாரென்கிற செய்தியைக்கேட்டவுடனே வணிகனாகிய பரமதத்தனும் மனதிற்பயங்கொண்டு தான் இரண்டாவது கலியாணஞ்செய்துகொண்ட மங்கையையும் அவளிடமாகப்பெற்ற பெண்குழந்தையையும் அழைத்துக்கொண்டு சீக்கிரமாகப்போவேனென்று நெருங்கிய கூந்தலையுடைய புனிதவதியாரிடத்துக்குவந்தான்.— எ-று)(௪௪

தானுமம்மனைவியோடுந்தளர்நடைமகவினோடு .... *
மானிளம்பிணைபோனின்றமனைவியாரடியிற்றாழ்ந்தே .... *
யானுமதருளால்வாழ்வேனிவ்விளங்குழவிதானும் .... .. *
பான்மையாலுமதுநாமமென்றுமுன்பணிந்துவீழ்ந்தான் .. *

(இதன்பொருள்.)

பரமதத்தனாகிய தானும் தன்னுடைய இரண்டாங்காதலியோடும் தள்ளாடிநடக்கும் பெண்குழந்தையோடும் இளமைபொருந்திய பெண்மான்போல்நின்ற மனைவியாராகிய புனிதவதியாருடைய பாதத்தில்விழுந்து யான் உம்முடைய கிருபையால்வாழ்ந்துகொண்டிருக்கிறேன் இந்தப்பாலியமுள்ளகுழந்தைக்குந் தெய்வங்களின் பெயர்களை மனிதர்கள் பிள்ளைபெண்களுக்குப்பத்தியுடைமையால்இடுவதுபோல்உம்முடையநாமத்தையே தரித்திருக்கிறேனென்று பின்னும் சாஷ்டாங்கமாகநமஸ்கரித்தான்.—(எ-று) (௪௫)

கணவர்தாம்வணங்கக்கண்டகாமர்பூங்கொடியனாரு .... *
மனைவுறுஞ்சுற்றத்தார்பாலச்சமோடொதுங்கிநிற்ப ..... *

வுணர்வுறுகிளைஞர்வெள்கியுன்றிருமனைவிதன்னை.... .... *
மணமலிதாரினாய்நீவணங்குவதென்கொலென்றார்..... .... *

(இதன்பொருள்)

புருஷனாகிய பரமதத்தன் தம்மைத்தொழப்பார்த்த அழகிய பூங்கொடிபோன்ற புனிதவதியாரும் தம்மோடுகூடவந்த பந்துக்களிடமாக ஒதுங்கிப் பயத்தோடுநிற்க விவேகமுள்ளபந்துக்கள் வெட்கப்பட்டுப் பரமதத்தனைப்பார்த்துவாசனைபொருந்திய புஷ்பமாலையைத்தரித்த வணிகனே உன்னுடையமனைவியைத்தானேன் நீவணங்குகிறது என்ன ஆச்சரியமென்றார்கள். (எ-று) (௪௬)

மற்றவர்தம்மைநோக்கிமானிடமிவர்தாமல்லர்....... ....*
நற்பெருந்தெய்வமாதலறிந்தகன்றபின்பு .... *
பெற்றவிம்மகவுதன்னைப்பேரிட்டேனாதலாலே .... *
பொற்பதம்பணிந்தேனீநும்போற்றுதல்செய்மினென்றான்...*

(இதன்பொருள்)

பரமதத்தன் அவர்களைப்பார்த்து இவளை மானிடப்பெண்ணாகநினைக்கக்கூடாது ஒரு தெய்வத்தன்மையுள்ள காரியம் இவர் செய்தபடியால் நல்லதெய்வப்பெண்ணென்று நான் அறிந்துகொண்டு இவளைவிட்டபின்பு என் பெண்குழந்தைக்கு இவளைத்தேவதையாக நினைத்தபடியால்இவர்பேரைத்தரித்தேன் ஆனபடியால் பொன்போன்ற பாதத்தைப்பணிந்தேன்-நீங்களும் இவளைத்தெய்வமாகநினைத்துவணங்குங்களென்றுசொன்னான். (எ-று) மகவுதன்னை-வேற்றுமைமயக்கம். (௪௭)

என்றபின்சுற்றத்தாருமிதுவென்கொலென்றுநின்றார் ....*
மன்றலங்குழலினாரும்வணிகன்வாய்மாற்றங்கேளாக......*
கொன்றைவார்சடையினார்தங்குரைகழல்போற்றிச்சிந்தை ..*
யொன்றியநோக்கின்மிக்கவுணர்வுகொண்டுரைசெய்கின்றார் *

(இதன்பொருள்.)

என்றுசொன்னபின்பு உறவினரும் இது என்ன ஆச்சரியமென்று திகைத்துநின்றார்கள்-வாசனைபொருந்திய கூந்தலையுடைய புனிதவதியாரும் புருஷனுடையவாயினின்றும்வந்த வார்த்தையைக்கேட்டுக்கொன்றைப்பூமாலையைத்தரித்தசடையையுடைய பரமசிவனது சிலம்பால்சத்திக்கும் பாதத்தைவணங்கி-மனதைச்சுவாமியினிடமாகவைத்து மிகுந்த தெளிவுகொண்டு சொல்லத்தொடங்கினார்.—(எ-று) (௪௮)

ஈங்கிவன்குறித்தகொள்கையி தூவினியிவனுக்காகத் .... *
தாங்கியவனப்புநின்றதசைப்பொதிகழித்திங்குன்பா....... *
லாங்குநின்றார்கள்போற்றும்பேய்வடிவடியேனுக்குப் .... *
பாங்குறவேண்டுமென்றுபரமர்தாள்பரவிநின்றார் .... *

(இதன்பொருள்)

இவன் நினைத்த நினைப்பு இதுவாயிருக்கின்றது - இவன்பொருட்டாகவேதாங்கிக்கொண்டிருந்த அழகுள்ள மாமிசக்கூட்டத்தை உதறிவிடும்படிசெய்து உம்மிடத்தில் சூழ்ந்துகொண்டு போற்றும் பேயினுடைய உருவத்தை அடியேனுக்கு அன்பாகத்தந்தருளவேண்டுமென்று பரமசிவனுடைய பாதத்தை வணங்கிநின்றார் புனிதவதியார்.—(எ-று) (௬௧)

ஆனவப்பொழுதுமன்றுளாடுவாரருளினாலே .... *
மேனெறியுணர்வுகூரவேண்டிற்றேபெறுவார்மெய்யி ....*
லூனடைவனப்பையெல்லாமுதறியெற்புடம்பேயாக....... *
வானமுமண்ணுமெல்லாம்வணங்குபேய்வடிவமானார் ....*

(இதன்பொருள்)

அப்புனிதவதியார் துதிசெய்வதானஅக்காலத்திலே நடனசபையினுள்ளே நடனமாடும் நடேசருடையதிருவருளினாலேமேலாகிய நன்னெறியினிடத்திலே நல்லறிவுமிக வேண்டினதைப் பெறுவாராயினார்- அவர்சரீரத்தினிடத்திலே அடைந்திருந்த அழகுள்ளமாமிசம்யாவும் உதறிவிட்டு எலும்பே வுடம்பாயிருக்க விண்ணுலகமுமண்ணுலகமும்எல்லாம்வணங்கும் பேய்வடிவமாயினார்.—(எ-று) என்புடம்பு-எ-து-எற்புடம்பென விகாரமாயிற்று. மன்று-(எ-து) சிதம்பரம்-திருவாலங்காடு-திருவாலவாய்-இம்மூத்தலச்சபைக்கும் பொருந்தும். (௬௨)

மலர்மழைபொழிந்ததெங்கும்வானதுந்துபியினாதம் ....*
முலகெலாநிறைந்துவிம்மவும்பருமுனிவர்தாமுங் ....*
குலவினர்கணங்களெல்லாங்குணலையிட்டனமுன்னின்ற .. .. *
தொலைவில்பல்சுற்றத்தாருந்தொழுதஞ்சியகன்றுபோனார் .. *

(இதன்பொருள்)

எவ்விடத்திலும் பூமாரிபொழிந்தது-அந்தரதுந்துபியினது சத்தமானது உலகமெங்கும் நிறைந்து சத்திக்கத் தேவர்களுமுனிவர்களும் கொண்டாடினார்கள்-பூதகணங்களெல்லாம் வீரவேசத்தாற் கொக்கரித்தன-முன்பாகநின்ற அளவில்லாத பற்பலசு

ற்றத்தாரும் புனிதவதியாரைத் தொழுதுவணங்கிப் பயங்கொண்டு நீங்கிப்போனார்கள்.—(எ-று) குணலை-எ-து-ஓர்கூத்தெனினுமமையும். (௫௧)

உற்பவித்தெழுந்தஞானத்தொருமையினுமைகோன்றன்னை..*
யற்புதத்திருவந்தாதியப்பொழுதருளிச்செய்வார்........ ...*
பொற்புடைச்செய்யபாதப்புண்டரீகங்கள்போற்று... .. ...*
நற்கணத்தினிலொன்றானேனுமென்றுநயந்துபாடி....... ...*

(இதன்பொருள்)

மெய்ஞ்ஞானத்தோடும் உற்பவித்தெழுந்த ஒரேதன்மையினையுடைய பார்வதிதேவியாருக்கு நாயகராகிய பரமேச்சுரர் தம்மைப் (பாடும்படியாக) அற்புதமாகிய திருவந்தாதியை அப்பொழுதே திருவாய் மலர்ந்தருளிச் செய்வாராயினார்-(புனிதவதியார்)அழகுபொருந்தியசெம்மையாகிய(கடவுள்)பாதாம்புயங்களைப்போற்றுகின்றநல்லஅடியார்கள்கூட்டத்தில் நாமுமொருவ ரானேமென்று நயப்போடும் வியப்போடும்பாடிநின்று. (எ-று) (௫௨)

ஆய்ந்தசீரிரட்டைமாலையந்தாதியெடுத்துப்பாடி..........*
யேய்ந்தபேருணர்வுபொங்கவெயிலொருமூன்றுமுன்னாட்...*
காய்ந்தவரிருந்தவெள்ளிக்கைலைமால்வரையைநண்ண ......*
வாய்ந்தபேரருண்முன்கூரவழிப்படும்வழியால்வந்தார் ......*

(இதன்பொருள்)

பின்னும் ஆராய்ந்த சீர்களையுடைய இரட்டைமணிமாலையந்தாதியெடுத்துப்பாடி-(சீர்)பொருந்திய பேரறிவானதுபிரகாசிக்க-முற்காலத்திலே திரிபுரமூன்றையும் நகைத்தெரித்தபரமேச்சுரர் எழுந்தருளியிருந்த பெருமைபொருந்தியகைலாயமென்னும் வெள்ளிமலையினிடத்திலே சேரும்படியாகத் தமக்குச்சித்தித்தபெரிதாகிய கிருபையானதுமுன்னதாக மிக்கவழிப்படும் வழியினாலேவந்தார்புனிதவதியார்.—(எ-று) எயில்மூன்றாவன-இருப்புமதில்-வெள்ளிமதில்- பொன்மதில். இவ்விரண்டுபாடல்களுங்குளகம். (௫௩)

கண்டவர்வியப்புற்றஞ்சிக்கையகன்றோடுவார்கள்....... ......*
கொண்டதோர்வேடத்தன்மையுள்ளவர்கூறக்கேட்டே.........*
யண்டர்நாயகருமொன்னையறிவரோலறியாவாய்மை...... ......*
யெண்டிசைமாக்களுக்கியாதெனவ்வுருவாயேனென்பார்... .. *

(இதன்பொருள்)

பார்த்தவர்கள் அதிசயப்பட்டுப் பயமடைந்து கையகன்றோடு
வார்கள்- (புனிதவதியார்தாம்) கொண்டிரா நின்ற வேஷத்தின
து தன்மையை இருக்கிறவர்களாற் சொல்லக் கேள்விப்பட்டுத்
தேவர்களுக்கு நாயகராகிய பரமேச்சுரர் என்னையறிவார் - என்
னுண்மையறியாத எட்டுத்திசையிலுள்ள மனிதர்களுக்கு நான்
எந்தவடிவமா யிருக்கின்றேனென்று சொல்லுவார்(எ-று)(௫௪)

வடதிசைத்தேசமெல்லாமனத்தினுங்கடுகச்சென்று .... *
தொடையவிழிதழிமாலைச்சூலபாணியனார்மேவும் .... *
படரொளிக்கைலைவெற்பிற்பாங்கணைந்தாங்குக்காலி... .. ...*
னடையினைத்தவிர்த்துபார்மேற்றலையினானடந்துசென்றார்.. *

(இதன்பொருள்)

வடதிக்கென்னுந் தேசமெங்கும்மனதைப்பார்க்கிலுமதிகவேக
மாகச்சென்று பூங்கொத்துக்கள்விரிந்த கொன்றைமாலையைத்
தரித்த சூலமேந்திய கையினையுடைய பரமேச்சுரர் விற்றிராநி
ன்ற ஒளிபரவிய கைலாயமலையினது பக்கத்திற்சேர்ந்து அந்த
விடத்திற் காலினால் நடப்பதைவிட்டுப் பூமியின்மேலே தலையி
னால் நடந்துசென்றார் புனிதவதியார்.—(எ-று) (௫௫)

தலையினானடந்துசென்றுசங்கரனிருந்தவெள்ளி... .... .. *
மலையின்மேலேறும்போது மகிழ்ச்சியாலன்புபொங்க....... *
கலையிளந்திங்கட்கண்ணிக்கண்ணுதலொருபாகத்துச் ....*
சிலைநுதலிமயவல்லிதிருக்கணோக்குற்றதன்றே .. .. *

(இதன்பொருள்)

அந்தப்புனிதவதியார் சிரசினாலே நடந்துபோய்ப் பரமசிவனா
ர் எழுந்தருளியிருந்த கைலாயமென்னும் வெள்ளிமலையின்மே
ல் ஏறுகின்றபோது மனமகிழ்ச்சியினாலே அன்பானது பொங்
கிவழியத்தக்கதாக இளமையாகியமூன்றாம்பிறையினையும்(கொ
ன்றைமாலையினையும்)தரித்த நெற்றிக்கண்ணையுடைய பரமேச்
சுரரது ஒருபாகத்திலேவாழும் விற்போன்ற நெற்றியினையுடை
ய பரவதராசன்பெற்ற உமையவளது திருக்கண்பார்வைக்குப்
புனிதவதியா ரெறிவந்தது காணப்பட்டது.—(எ-று) திங்கட்
கண்ணி-என்றது-மூன்றாம்பிறைமாலையெனினும்பொருந்தும்.

அம்பிகைதிருவுள்ளத்தினதிசெயித்தருளித்தாழ்ந்து ....*
தம்பெருமானைநோக்கித்தலையினானடந்திங்கேறு...... .. ..*

மெய்பெருமானேறொற்பின்யாக்கையவள்பெண்ணேயென்னை...*
நம்பெருமாட்டிக்கங்குநாயகனருளிச்செய்வான் ....*

(இதன்பொருள்)
பார்ப்பதிதேவியாரானவர் திருவுள்ளத்திலே அதிசய மடைந்த ருளித் தமது நாயகராகிய பரமேச்சுரரைநோக்கித் தாழ்ந்துவ ணங்கி-எம்பெருமானுகிய சுவாமியே, இங்கேதலையினுலே நடந் து திருக்கைலாயத்தி லேயிவரும் ஒப்பற்ற எலும்பினையுடைய சரீரத்தைக்கொண்டவரது அன்பின்பெருமை யென்னவென்று கேட்கத்தேவர்க்கெல்லாம் நாயகராகிய பரமேச்சுரரானவர் ந மதுபிராட்டியாகிய பார்ப்பதிதேவியாருக்குத் திருவாய்மலர் ந்தருளிச் செய்வாராயினுர்.—(எ-று) (௬எ)

வருமிவணம்மைப்பேணுமம்மைகாணுமையேமற்றிப்... .. *
பெருமைசேர்வடிவும்வேண்டிப்பெற்றனளென்றுபின்னை ... *
யருகுவந்தணையநோக்கியம்மையேயென்னுஞ்செம்மை .. *
யொருமொழியுலகமெல்லாமுய்யவேயருளிச்செய்தார்.... *

(இதன்பொருள்)
உமையவளே(நமது வெள்ளியங்கிரிமேலேறி)வருகின்ற புனிதவ தியாரானவர் நம்மைத்துதிக்கும் அம்மையென்றறிவாயாக- இ ந்தப்பெருமைபொருந்திய வடிவமும் (இப்புனிதவதியார்)தம க்குவேண்டியேபெற்றுரொன்று சொல்லிப் பின்பு பரமேச்சுரர் தமக்குச்சமீபமாக வந்துநின்ற புனிதவதியாரைப்பார்த்து-அ ம்மையேயென்றுசொல்லுஞ் செம்மையாகிய ஒருதிருவாக்கிய ம் உலகமெல்லாம் கடைத்தேறும்படியாகக்கிருபைசெய்தருளி னுர்.—(எ-று) (௬அ)

அங்கணனம்மையேயென்றருள்செயவப்பாவென்று....... *
பங்கயச்செய்யபாதம்பணிந்துவீழ்ந்தெழுந்தார்தம்மைச்.. *
சங்கவெண்குழையிணுருந்தம்மைநேர்நோக்கிநம்பா ....*
லிங்குவேண்டுவதெனென்னவிறைஞ்சிநின்றியம்புகின்றுர்.... *

(இதன்பொருள்)
பரமேச்சுரரானவர் அம்மையேயென்றுதிருவாய்மலர்ந்தருளிச் செய்ய-புனிதவதியாரானவர் சுவாமியை அப்பாவென்றுசொல் லிச் செந்தாமரைக்கொப்பானபாதங்களில்விழுந்துபணிந்துஎ ழுந்துநின்றுர்-எழுந்தவர்தம்மைவெண்மையாகியசங்கக்குழை யினையுடைய பரமேச்சுரரும்நோக்கிப்பார்த்து நம்மிடத்தில்இ

திருஉமக்கு வேண்டுவதென்னென்றுகேட்கஅம்மையார்வணங்கி நின்றுசொல்லத்தொடங்கினார்.—(எ-று)தம்-ஐ-சாரியை.(௫௯)

இறவாதவின்பவன்புவேண்டிப்பின்வேண்டுகின்றார் .... *
பிறவாமைவேண்டுமீண்டும்பிறப்புண்டேலும்மையென்று... *
மறவாமைவேண்டுமின்னும்வேண்டுநான்மகிழ்ந்துபாடி .. *
யறவாநீயாடும்போதுன்னடியின்கீழிருக்கவென்றார்....... *

(இதன்பொருள்)

அழிவில்லாத பேரின்பத்தைத் தராநின்ற அன்பை விரும்பிப் பின்பு (தேவரீர்) திருவடியிற்செல்ல விரும்புகின்றவர்கள் பிறவாதிருத்தல்வேண்டும் மறுபடியும்(எனக்குப்) பிறப்புண்டாயிருப்பினும்உம்மை(நான்)எக்காலத்திலுமறவாதிருத்தல்வேண்டும் இன்னும்தருமக்கடலாகிய கடவுளே நீர்நடனமாடும்போது உம்முடையதிருவடியின்கீழே நான் மனமகிழ்ந்து பாடிக்கொண்டிருக்கவேண்டும் என்றார் புனிதவதியாரென்னும் அம்மையார்.—(எ-று) (௬0)

கூடுமாறருள்கொடுத்துக்குலவுதென்றிசையினின்று....... *
நீடுவாழ்பழனமூதூர்நிலவியவாலங்காட்டி.............. *
லாடுமாநடமுநீகண்டானந்தஞ்சேர்ந்தெப்போதும்.......... *
பாடுவாய்நம்மையென்றான்பரவுவார்பற்றாய்நின்றான் ... ... *

(இதன்பொருள்)

தம்மைத்துதிப்பவர்களிடத்தில் அன்பாய்நின்ற பரமேச்சுரரானவர் தம்மாற்கூடு மாறுகிருபைசெய்தருளிப் பிரகாசியாநின்ற தென்றிசையிலிருந்து நீடூழிவாழும் வயல்சூழ்ந்த பழமையாகிய ஊர்கள்விளங்கிய திருவாலங்காட்டிலே நாம் ஆடுகின்ற மகத்தாகிய திருநடனத்தையும் நீகண்களாற்கண்டு பேரானந்தமடைந்து எப்பொழுதும் நம்மைப் பாடுவாயாகவென்று திருவுளம்பற்றினார்.—(எ-று) (௬௧)

அப்பரிசருளப்பெற்றவம்மையுஞ்செம்மைவேத ... .*
மெய்ப்பொருளானார்தம்மை விடைகொண்டு வணங்கிப்போந் *
செப்பரும்பெருமையன்பாற்றிகழ்திருவாலங்காடா .. .. (து *
நற்பதிதலையினாலேநடந்துபுக்கடைந்தாரன்றே... .... *

(இதன்பொருள்)

சுவாமியானவர் அவ்வாறு திருவுளமகிழ்ந் தருளிச்செய்த வரத்தைப்பெற்ற புனிதவதியாரென்ற அம்மையாரும், செம்மையா

திப வேதத்தின்மெய்ப்பொருளான பரமசிவனார் தம்மிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு (அவருடைய திருவடிகளை) வணங்கிச் சொல்லுதற்கரிய பெருமைபொருந்திய அன்பினாலே பிரகாசியாநின்ற திருவாலங்காடென்னும் நன்மையாகிய திவ்வியதலத்திற்குத் தலையினால் நடந்துசேர்ந்தார்.—(எ-று) (௬௨)

ஆலங்காடதனினண்டமுறநிமிர்ந்தாடுகின்ற.... ....*
கோலங்காண்பொழுதுகொங்கைதிரங்கியென்றெடுத்துத்தங்கு
மூலங்காண்பரியார்தம்மைமுற்றநற்பதிகம்பாடி... . .. ...*
ஞாலங்காதலித்துப்போற்றுநடம்போற்றிநண்ணுநாளில்...*

(இதன்பொருள்)

திருவாலங்காட்டிலே அண்டத்தை யளாவும்படியாக நிமிர்ந்து சுவாமியானவர் நடனமாடுகின்ற திருக்கோலத்தைக் கண்டகாலத்துப்(புனிதவதியாரென்ற அம்மையாரானவர்)ஆதிமூலமென்னுந்திருமாலானவர்காணுதற்கரியபரமேச்சுரர்தம்மைக்- கொங்கைதிரங்கி - என்று அடிகளெடுத்து நற்பதிக முற்றுப்பெறத் திருவாக்கினாற்பாடி உலகமெல்லாம் விருப்பங்கொண்டுபோற்றும் திருநடனத்தைப் போற்றிசெய்திருக்கும் நாளிலே.(எ-று) கொங்கை-என்பதும், திரங்கி-என்பதும், புனிதவதியார் பாடின பாடலின் அடிமுதற்சொற்களாம். திரங்கி - என்பது- நகரம். திரைந்தெனினுமாம். (௬௩)

(வேறு.)

மட்டவிழ்கொன்றையினார்தந்திருக்கூத்துமுன்வணங்கு.... *
மிட்டமிகுபெருங்காதலெழுந்தோங்கவியப்பெய்தி ..... *
யெட்டியிலவம்மீகையெனவெடுத்துத்திருப்பதிகம்... .... *
கொட்டமுழவங்குழகனாடுமெனப்பாடினார்... ....*

(இதன்பொருள்)

தேன்விரிந்த கொன்றைப்பூமாலையினைத் தரித்த பரமசிவனார் தம்முடைய திருநடனத்துக்கு முன்னின்றுவணங்கும் இஷ்டமிகுந்த பெரிதாகிய ஆசையானது மனதின்கண் ணெழுந்து வளர்ந்தோங்க- அதிசயமடைந்து (புனிதவதியாரென்னும் அம்மையாரானவர்) குடமுழாவாத்தியமுழங்கப் பரமேச்சுரனார் நடனஞ்செய்தருளுமென்று சொல்லிப் பாடல்களுக்கு அடிமுதற்சொல்லாக-எட்டி-எனவும், இலவம்-எனவும், ஈகை-எனவும், எடுத்துத் திருப்பதிகம்பாடினார்.—(எ-று) குழகன்-எ-து, இவ்விடத்திற் சிவனுக்கேபொருள். (௬௪)

மடுத்தபுனல்வேணியனரம்மையெனமதுரமொழி.. ......✻
கொடுத்தருளப்பெற்றாரைக்குலவியதாண்டவத்தவ...... ✻
னெடுத்தருளுஞ்சேவடிக்கீழென்றுமிருக்கின்றாரை......... ✻
யடுத்தபெருஞ்சீர்ப்பரவவாரளவாயினதம்மா .. ..✻

(இதன்பொருள்)

சடையினிடத்திற் கங்கையைத்தரித்த பரமசிவனார் அம்மையெ ன்று மதுரம்பொருந்திய திருவாக்குக் கொடுத்தருளப் பெற்ற புனிதவதியாரை(மேலும்)கொண்டாடத்தக்க திருத்தாண்டவத் தையுடையவர் - தாண்டவமாட எடுத்தருளும் சிவந்த திருவடி க்கீழ் எக்காலத்து மிருக்கின்ற காரைக்காலம்மையாரை அடுத் த பெரிதாகிய சிறப்பினைச் சொல்ல-யார் புத்திக்களவாகினது. (எ-று) அம்மா-என்பது, வியப்புச்சொல். (௬௫)

(வேறு.)

ஆதியோடந்தமில்லானருணடமாடும்போது.............. ✻
சிதமுன்பாடுமம்மைசெரளிமலர்த்தாள்போற்றிச்........ ✻
சீதநீர்வயல்சூழ்திங்களூரினப்பூதியாராம்....... .... ✻
போதமாமுனிவர்செய்ததிருத்தொண்டுபுகலலுற்றேன் ..... ✻

(இதன்பொருள்)

ஆதியுமந்தமுமில்லாத பரமசிவனார் கிருபைபொருந்திய நடன மாடும்போது முன்பாகநின்று கீதம்பாடும் புனிதவதியாரெ ன்னும் காரைக்காலம்மையாரது பிரகாசம்பொருந்திய தாமரைக்கமலப்போன்ற திருவடிகளைத் துதிசெய்து குளிர்ச்சிபொருந்திய நீர்நிறைந்த வயல்கள்சூழ்ந்த திங்களூரிலேவாழும் அப்பூதியடிக ளாயனார் என் னும் மகத்தாகிய மெய்ஞ்ஞான முனிவர்செய் ததிருத்தொண்டின் சிறப்பைச்சொல்லத்தொ டங்கினேன்.—(எ-று) இஃது- புராணிகர்கூற்று. யான்-எழுவாய். திருத்தொண்டு-செயப்படுபொரு ள். புகலலுற்றேன்-பயனிலை. யான்-என்பதும் எழுவாய்- எஞ்சிநின்றது. (௬௬)

காரைக்காலம்மைபுராணம், முற்றிற்று-

ஆக திருவிருத்தம்-௬௬௮௯. ....✻

காலாச்சாலம்மைபுராணம் (௫௰) ம், பாடல்தொடங்கி-மதுரை
ச்சங்கத்திலும், புதுவைச்சங்கத்திலும், சென்னையிற் றமிழ்சங்
கத்திலும்தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய-
களத்தூர்-

வேதகிரிமுதலியாரவர்களால்

உரைசெய்யப்பட்டது.

சாலிவாகனசகாப்தம்-௲எ௱௬௰௯ .... ※

கலியுகாப்தம்-௪௲௯௱௪௰௮... .... ---※

பிரபவாதி-௵-௪௰-றில்-நிகழும் பிலவங்க ௵

தையீ ....※

இரண்டாம்புத்தகம்.

முற்றிற்று-முற்றும்.

திருவாய்மலர்ந்தருளிச்செய்த-தேவாரம்.

அம்மை மூத்ததிருப்பதிகம்.

(பண் நட்டபாடை.)

கொங்கைதிரங்கிநரம்பெழுந்து குண்டுகண்வெண்பற் குழிவயிற்றுப், பங்கிசிவந்திருபற்கணீண்டுபரடுயர்நீள் கணைக்காலோர் பெண்பேய், தங்கியலறியுலறுகாட்டிற்றாழ்சடையெட்டுத்திசையும் வீசி, யங்கங்குளிர்ந்தனலாடு மெங்க ளப்பனிடந்திருவாலங் காடே. - - - - - (௧)

கள்ளிக்கவட்டிடைக்காலைநீட்டிக் கடைக்கொள்ளிவாங்கி மசித்துமையை-விள்ளவெழுதிவெடுவெடென்ன நக்குவெருண்டுவிலங்குபார்த்துத், துள்ளித்துடித்துச்சுடுபிணத்தைச் சுட்டிடமுற்றுஞ்சுழிந்தழுந்தி, யள்ளியவிக்கநின்றாடுமெங்க ளப்பனிடந் திருவாலங்காடே. - - - - - (௨)

வாகைவிரிந்துவெண்ணெற்றொலிப்ப மயங்கிருள்கூர் நடுநாளையாங்கே, கூகையோடாண்டலைபாடவாந்தை கோடதன்மேற்குதித்தோடிவீசி, யீகைபடர்தொடர்கள்ளிநீழ லீமமிடுசுடுகாட்டகத்தே, யேகங்குளிர்ந்தனலாடுமெங்க ளப்பனிடந்திருவாலங் காடே. - - - - - (௩)

குண்டிலோமக்குழிச்சோற்றைவாங்கிக் குறுநரிதின்னவதனைமுன்னே, கண்டிலோமென்றுகனன்றுபேய்கள் கையடித்தோடிடுகாடரங்கா, மண்டலநின்றங்குளாளமிட்டு வாதித்துவீசியெடுத்தபாதம், யண்டமுறநிமிர்ந்தாடுமெங்க ளப்பனிடந் திருவாலங் காடே. - - - - (௪)

விழுதுநிணத்தைவிழுங்கியிட்டுவெண்டலைமாலைவிரவிப்பூட்டிக் கழுதுதன்பிள்ளையைக்காளியென்றுபேரிட்டுச்சீருடைத்தாய்வளர்த்துப், புழுதிதுடைத்துமுலைகொடுத்துப்போயினதாயைவரவுகாணாது, அழுதுறங்கும்புறங்காட்டிலாடு மப்ப னிடந்திருவாலங் காடே. - - - - - - (௫)

பட்டடிநெட்டுகிர்ப் பாறுகாற்பேய் பருந்தொடுகூகை பகண்டையாந்தை, குட்டியிடமுட்டைகூகைப்பேய்கள் குறுநரிசென்றிணங்காடுகாட்டிற், பிட்டடித்துப்புறங்காட்டிலிட்ட பிணத்தினைப்போகப்புரட்டியாங்கே, பட்டமேபாயநின்றாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே. - - - (௬)

கழலுமழல்விழிக்கொள்ளிவாய்ப்பேய் சூழ்ந்து துணங்கையிட்
டோடியாடித், தழலுளெரியும்பிணத்தைவாங்கித் தான்றடித்தி
ன்றிணங்காட்டிற், கழலொலியோசை சிலம்பொலிப்பக் காலு
யர்வட்டணையிட்டுநட்ட,மழலுமிழ்ந்தோரிகதிக்கவாடு மப்பனி
டந்திருவாலங்காடே. - - - - (௭)

நாடுநகருந்திரிந்துசென்று நன்னெறிநாடி நயந்தவரை, மூடி
முதுபிணத்திட்ட மாடே முன்னிபபேய்க் கணஞ்சூழச் சூழக்,
காடுங்கடலும்மலையுமண்ணும் விண்ணுஞ்சுழல வனல்கையேந்தி,
யாடுமமர்புயங்கனெங்களப்பனிடந்திருவாலங்காடே. (௮)

துத்தங்கைக்கிளைவிளரிதாரமுழையிளியோசை பண்கெழுமப்
பாடிச், சச்சரிகொக்கரைதக்கையொடுதண்ணுச்சந் துந்துபிதாள
ம்வீணை, மத்தளங்கரடிகைமுன்கைமென்றோற்ற மருகங்குடமு
ழாமொந்தைவாசித், தத்தனனைமைவிழியோடாடுமெங்களப்ப
னிடந் திருவாலங்காடே. - - - (௯)

புந்திகலங்கிமதிமயங்கியிறந்தவரைப்புறங்காட்டிலிட்டுச், சந்தி
யில்வைத்துக்கடமைசெய்து தக்கவரிட்டசெந்தீவிளக்கா, முந்
திய மரர்முழவினோசைதிசைகதுவச்சிலம்பார்க்கவார்க்க, வந்தி
யினமரநடமாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே. (௰)

ஒப்பினையில்லவன்பேய்கூடியொன்றினையொன்றடி தொக்கலி
த்துப், பப்பினையிட்டுப்பரண்டைபாடிப் பாடிருந்தநன் னரி
யாழமைப்ப, வப்பனையணிதிருவாலங்காட்டுளடிகளைச்செடிதலை
க்காரைக்காற்பேய், செப்பிய செந்தமிழ்ப்பத்தும்வல்லார் சிவ
கதிசேர்ந்தின்பமெய் துவாரே. - - - (௰௧)

அம்மைமூத்ததிருப்பதிகம்-முற்றிற்று.

☞ ௩௱௰-ம்-பக்கம்-௯௰௨-ம்-பாட்டு-௩-ம்-வரி-முற்ற-மூத்த;
எனப்பாடமோதலுந் துணிபு.

பெரியபுராணம்-படல அகராதிகள்.

மூன்றாவது,

மும்மையாலுலகாண்டசருக்கம்.

பக்கம்	புராண அட்டவணை.	கவிகள்.
க	மூர்த்திநாயனார்புராணம்	௪௰௯
௰௮	முருகநாயனார்புராணம்	௰௪
௨௩	உருத்திரபசுபதிநாயனார்புராணம்	௰
௨௭	திருநாளைப்போவார்நாயனார்புராணம்	௩௰௭
௪௰௧	திருக்குறிப்புத்தொண்டநாயனார்புராணம்	௱௨௮
௬௰௭	சண்டேசுரநாயனார்புராணம்	௬௰

மும்மையாலுலகாண்டசருக்கம்- முற்றிற்று.

நான்காவது- திருநின்றசருக்கம்.

பக்கம்	புராண அட்டவணை.	கவிகள்.
௱௨௰௧	திருநாவுக்கரசுநாயனார்புராணம்	௪௨௯
௨௮௰௧	குலச்சிறைநாயனார்புராணம்	௰௧
௨௮௪	பெருமிழலைக்குறும்பநாயனார்புராணம்	௰௧
௨௮௮	காரைக்காலம்மைபுராணம்	௬௬

ஆக-திருவிருத்தம்-௮௱௰௫.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
௮	௬	:டயங்க	யடங்க
௰௫	௮	மூர்த்திநாயனார்	மூர்த்திநாயனார்
௰௫	௰௫	செய்புமபிடேக	செய்யும்மபிடேக
௰௫	௨௮	யொன்றுமரசா	யொன்றும்மரசா
௰௬	௨௰	காந்தியபுடைய	சாந்தியைபுடைய
௨௰	௨௧	வருவாரக்காளான்	வருவார்க்காளான
௨௫	௨௧	பாவுமன்பா	பரவுமன்பர்
௨௭	௰௧	பொவாராஞ்	போவாராஞ்
௫௧	௫௧	கொளகையராயே	கொள்கையராயே
௫௫	௨௫	வெள்வியெழும்	வேள்வியெழும்
௪௭	௨௫	ரோனன்முன	ரோனன்முன்
௫௫	௰௫	டிருப்பன்	டிருப்பன
௫௫	௨௬	அக்கரும்புகளின்	அக்கமுக மரங்க
௫௫	௫௨	பாத்திரியர்	ப்ரத்திரியர் (
௬௫	௨௧	பதும்மாநாக	பதுமமாநாக
௬௪	௨௯	ரூழ்வணங்கி	ரூழவணங்கி

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
கூச	கூஉ	துாப்யர்ச்சனே	துாயவர்ச்சனே
கூரு	எ	கவர்தரமுறைத்த	கவர்தாமுறைத்த
எ௩	உஉ	லான்போகபீட	லானபோகபீட
எரு	கூக	யோகபீடம	போகபீடம
எஎ	௰அ	மதிலகழியயாதாந்	மதிலகழியமாதாந்
எகூ	௰கூ	வன்போன்திரு	வனபோன்திரு
அ௰	௰ச	வல்தில்லாத	வலதில்லாத
அஉ	௰எ	நிற்ரும்,யமரையு	நிற்ரு,யமரையும்
அகூ	கூ	உபரிகை	உப்பரிகை
அகூ	௰க	தோ[illegible]தி	தேர்க்காலி
கரு	௰சா	புன்மமழை	புனன்மழை
கூகூ	உகூ	பாயன	பாயன்,
௱க	கூ	மலைறயொன்	மறையோன்
௱உ	உரு	ரல்கில்	ரலகில்
௱ச	உ	பொருந்துவன்	பொருந்துவனை
௱ச	உகூ	மூத்திரத்தலும்	மூத்திரத்திலும்
௱௰அ	உ௰	பிறைசெறிந்த	பிறைசெறிந்த
௱உகூ	கூ	காலால்களே	காலாள்களே
௱உச	உகூ	ருதிர்கள்	கதிர்கள்
௱உரு	கூ௰	அலறுபன்போல்	அலறுவனபோல
௱கூகூ	௰எ	நீலைவிலக்க	நிலைவிலக்க
௱சரு	கூ	தாவாத	தாவாத
௱சசா	௰சா	சேங்கனக	செங்கனக
௱கூஉ	கூ௰	மரபாவி	மாபாவி
௱சாஅ	கூ	யருகதத்	யருகந்த
உ௱௰உ	௰ச	விசதமா	விசிதமாக
உஉஉ	௰	வீறிலாத	வீறிலாத
உஉச	உ௰	திருவோ	திருவோர்
உஉகூ	௰கூ	கதவங்தொண்டு	கதவந்தொண்டு
உகூ௰	உசா	ஆதிமுதலவர்	ஆதிமுதல்வர்
உசஅ	௰கூ	வார்ப்படையா	வாரப்படையர
உருகூ	உஉ	யபில்கொள்	யயில்கொள்
உசாஎ	கூ௰	மியம்பின்றோத்தி	மியம்பினறோத்தி
உஅ௰	௰சா	விரிஞ்சனமுதல்	விரிஞ்சன்முதல்
கூ௱	கூ	பல்பொருள்	பல்பொருள்